சிவமயம்

ஆறுமுகநாவலர் சரித்திரமும்

சைவசமயமும்,

கிறிஸ்தவமிஷனரிகள் செய்யத்தக்க தகுதிவாய்ந்தனவும்,

ஆகிய

ஸ்ரீ ல ஸ்ரீ

ஆறுமுகநாவலர் அவர்கள்

பரம்பரை

யாழ்ப்பாணம்-மேலைப்புலோலி

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

மாணாக்கர்

திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள்

இயற்றிய

சுவிஷேசாவலர் சரித்திரம், நியாயசிரோமணி, நிபவிசி, சரித்திரசுவிசாரம், சரித்திரசுருக்கவிளக்கம் முதலியனவும்.

அ. இரங்கசாமிமுதலியார் & சன்ஸ்

அவர்களது

பூரகஸ்திலாக அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை.

1915.

Registered Copy Right.

இதன் விலை ரூபா 1 4 0



2. கைலாசபதிக்குத் தொண்டுபூண்டொழுகும் நந்திம்கசுரா மர்க்கண்டே யமகா முனிவருக்கு அருணசலத்தினுற்பவ்மும், அதன்மகிமையையும், தரிசி க்கவேண்டிய விதிமுதலியவைகளையு முபதேசித்தல்.

அ. சைவவிஞ்ஞிடை, சிதம்பரமான்மியம், பெரியபுராணம்முத லாகிய புத்தகங்களே வாசித்தாவது கேட்டாவது அறிவது.

கூ. சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களை யும் சிவபெருமானே வழிபடுமுறைமையும் அறிவிக்கிற சைவபிர சங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

ம. சிவசிந்தை, சிவனடியார்சிந்தை இவைகளைக்கேளாது நீங் கிவிடுவது.

கக. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார் மாணிக்கவாசகசுவாமிகள் என்னுஞ்சைவசமயகுரவர்நால்வருடைய திருமுகத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங்கொடுத்து விரதத்துட னிருப்பது.

கஉ. செய்யத்தகாத பாவத்தைச்செய்தாலும் செய்யத்தக்கபுண் ணியத்தைச் செய்யாதுவிட்டாலும், மனம்பதைபதைத்து அஞ்சிநடு நடுங்கி குருவைஅடித்து அவர்சிலோகமப்பிரகாரம்விதித்த பிராயச்சி த்தத்தை விசுவாசத்துடன் செய்துக்கொள்வது.

அநாசாரம்.

க. மற்சம் மாமிசம் புசித்தல். உ கள்ளுஞ் சாராயங் குடித்தல் ங மற்சம்மாமிசம் புசிப்பவர். கள்ளுஞ்சாராயம்குடிப்பவர், தாழ்ந்த சாதியர், அன்னிய சமயிகள் என்கிற இவர்க ளிடத்தாவது, இவர்க ளுடன் இருந்தாவது, இவர்கள்காணவாவது போசனம்பண்ணுதல். ச. சனனு சௌசம் மரணுசௌசம் உடையவ ரிடத்தே போசனம் பண்ணுதல். ஞ. போசனஞ்செய்தவுடனே எச்சில் தெளியாது விடு தல். சு. எந்தப்பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல். எ. பலகாரம் பழம்முதலியவைகளே எச்சில் பண்ணிப் புசித்தல். அ. புகையிலைச்சு ருட்டிப்பிடித்தல். கூ. வெற்றிலைப்பாக்கு வாயிலிருக்கச் சயனித்தல்

ய காலையிலேதந்தசுத்தி பண்ணுமுன்னே வெற்றிலைப்பாக்குபோடு தல். கக. வாயோடுகையையுங்கையோடுபாத்திரத்தையும்அலம்பி எச்சில்பண்ணித் தண்ணீர்குடித்தல். கஉ. வீட்டுமுற்றத்திலும் கிணற்றங்கரையிலும் குளக்கரையிலும், ஆற்றங்கரையிலும் பூந்தோட்டத்திலும், திருவீதியிலும் எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல். கஙு. ஸ்நானத்துக்குஞ் சமையலுக்குமுபயோகப்படுகிறசலத்திலே சௌசம்பண்ணுதல். கச. கிணற்றங்கரையிலே சௌசம்பண்ணுதல் கஜ. சௌசத்தின் பொருட்டுப் பாத்திரத்திலே சலம்கொண்டுவைத்துக் கொள்ளாது மலசலங்கழித்தல். கசு. சௌசஞ் செய்தவுடனும்தந்த சுத்திசெய்தவுடனும்போசனஞ்செய்தவுடனும்வாய்கொப்பளித்துக் கால்கழுவாது விடுதல். கள. கூளரம் பண்ணுவித்துக்கொண்டாலும் துக்கவீட்டுக்குப்போனலும் உடுத்தவஸ்திரத்துடனே முழுகாதுவிடுதல். கஅ. முககூளரமாத்திரம் பண்ணுவித்துக்கொள்ளுதல் ககூ. மத்தியானத்துக்குப்பின் கூளரம்பண்ணுவித்தல். உ0. தைச் சங்கிராந்தியினும் ஆனி முடிவிலும் பழைய மட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல். உக. மட்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியில்வைத்தல். உஉ. பாண்டங்களை சாகம் நாய் முதலியவைகளால் தீண்டவிடுதல். உங. எச்சில்முதலியவைகளை ஓரத்திலேதுப்பாது வழியிலே துப்புதல் கஞ்சாபினிஉண்ணல் இந்தஅநாசாரங்களை எல்லாரும்விலக்கித் திருத்தம்உறுடக்கக் கடவார்கள்.

திருக்கோயிலிலும்
திருவீதியிலுஞ் செய்யத்தகாத
குற்றங்கள்.

க. ஸ்நானஞ் செய்யாதுபோதல். உ. தோய்த்துலராத வேட்டி தரித்துகொண்டு போதல். ங. கால்கழுவாது போதல். ச சௌசத்துடனே போதல் ஞ. தலையில்வஸ்திரந்தரித்துக் கொள்ளுதல். ரு. சட்டையிட்டுக் கொள்ளுதல். எ போர்த்துக் கொள்ளுதல்.

அ. மேல்வேட்டிபோட்டுக்கொள்ளுதல். கூ. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல். ஐ. வாகனமேறிச்கொள்ளுதல், கக. குடைபிடித்துக்கொள்ளுதல். கஉ. வெற்றிலைப்பாக்கு அருந்துதல் கஊ. துப்புதல். கச மலசலங்கழித்தல். கடி. மூக்குசீர்சிந்துதல். கசு. மயிர்கோதிமுடித்தல். கள. சூதாடுதல். கஅ சிரித்தல். கக. சண்டையிடுதல். உ0. வீண்வார்த்தை பேசுதல். உக. காமப்பற்றுவைத்தல். உஉ. காலைநீட்டிக்கொண்டிருத்தல். உஊ. சயனித்தல். உச. ஆசனத்திருத்தல். உடி. சுவாமிக்கும்பலிபீடத்துக்குங் குறுக்கேபோதுதல். உசு. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல். உள. சுவாமிக்குநேராகக்காலைநீட்டி நமஸ்காரம் பண்ணுதல். உஅ. சுவாமிக்குக் காலைநீட்டி அங்கப்பிரதக்ஷணம்பண்ணுதல். உக. திருமாலியத்தைக் கடத்தல். ஊ0. திருமாலியத்தைமிதித்தல். ஊச. தூபி, துஜத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் இவைகளின்நீழலைமிதித்தல். ஊஉ. விக்கிரகத்தைத்தொடுதல்.

இவைகளை அருணகிரிபுராணம் வலம்புரிச்சருக்கத்தில் கூ0-ஆவது செய்யுண் முதலியவற்றில் பரக்கக்காணலாம்.

இந்தக் குற்றங்களைச்செய்தவர்கள், நரகத்திலேதண்டிக்கப்படுவார்கள் என்றுஆகமங்களும் புராணங்களுஞ்சொல்லுகின்றனகுளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொள்வதுபோலச் சுவாமிதரிசனமாகியபுண்ணியஞ்செய்யப்போய்ப் பாவத்தைத்தேடிக்கொள்வதுபுத்தியன்று; எல்லாரும் இந்தக்குற்றங்களை விதிப்படிசுவாமி தரிசனஞ்செய்து, திருவருள்கடாக்ஷம்பெற்று உய்யக்கடவார்கள்.

இந்தியாவிலே, உத்தியோகஸ்தர்கள் அனேகர், சுவாமிசந்நிதானத்திலே, விதிக்குவிரோதமாக, சட்டைஇட்டுக்கொண்டும், போர்த்துக்கொண்டும், மேல்வேட்டிபோட்டுக்கொண்டும், தலையில்வஸ்திரந்தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும் குடைபிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள் தங்கள் சமயத்தில்விசுவாசம்

டையவர்களானால், இப்படிச்செய்வார்களா கிறிஸ்தவர்களுள்ளே கவர்னர்முதலிய பெரியஉத்தியோகஸ்தர்களுந் தங்கள்கோயில்களுக்குத் தங்கள்சமயக்கிரமப்படியே போவதை, அவர்கள்காணவில்லையா! தங்களிற்றாழ்ந்த மனுஷர்கள் தங்களெதிரே பாதரக்ஷையிட்டுக்கொண்டாயினுங்குடைபிடித்துக்கொண்டாயினும்நின்றால், அவர்களாக்கோபிக்கிறார்களே! இதுகுற்றம் என்றுகொண்டவர்கள் இந்தக்குற்றத்தை தாங்கள் சுவாமிசந்நிதானத்திலே செய்யத்துணிவது என்ன அறிவு!!

திருக்கோயிறன்னின் மலஞ்சலம்விடுதல் உமிழ்தல்திருவிளகுச்சாயையி லிங்கச்சாயை கடத்தல், ஒருக்காலாய் வலம் வருதல், ஓடிவலம்வருதல்.ஒண்டொடிவேசியாய்ப புணர்தலுற்றவரைநினைத்தல், மருக்கமழ் நின்மாலியத்தைச் சிவன்றனைக் கோமுகையைவழிகடத்தலாடையின்றி மருவுதல், கான்றுமுழ்தல், மெருக்கீறணியாமை,பெலிப்பற்றுமிதித்தல்,பெலிபீடங்குறுக்கிடுதல்,பெருமான்சந்நிதியில்.

ஏறுடனே தூபிசதண்டு பலிபீடம் இலிங்கமிவைசாரைபமிதித்தேகுதல் பொய்ம்மொழிதல், பேறிழவேபு சுசிபிறர்தாரத்தைவிரும்பல் பெரும்புனலாலிருபாதங் கழுவாதசயனம், தேய்துபாலிலினறம்பலமுமிழ்தறிருடல் திருக்கோயினியமத்தைச்செய்தவத்தோர்தங்கட், காறணியுஞ்சடைமுடியா ராகமத்திற்சொலுமிவ்வாறைந்தோ டிரண்டுதற்ற மாகாவன்றே.

இக்குற்றங்கள் அபுத்திபூர்வமாக நேரின் வேதத்திலுள்ள உருத்திரமந்திரத்தை ஆயிரமுருச்செபிக்கின்முற்றுமகலும்அவ்வேதவாக்கியமந்திரங்களேஉச்சரித்ததற்கு அருகரல்லாதவர்அகோரமந்திரத்தைஆயிரமுருச்செபிக்கக்கடவர் இக்குற்றங்களைப் புத்திபூர்வமாகவேயிதறின் தப்பாதுளரிவாய் நிரயத்தில் அழுந்துவதுதிண்ணம், இதற்குப் பரிகாரமு மில்லை என்பது வேதாகம புராணுதிகளின்துணிபாகலின் ஆலயத்திலேபுண்ணியத்தைதேடிப்போய இத்தகைய செயல்களால் பாவத்தைத்தேடிக்கொடல்முறையன்று. ஆகையால் இவற்றுள் ஒன்றனையு மியற்றுதுத் தமக்கு விதித்தவாறே அவ்வவ்வேல்லையினின்றுசுவாமிதரிசனஞ் செய்துதிருவருளைப்பெற்றுமீள்வதே கடமையாம்—சுபம்.

திருக்கோயிற் குற்றங்கள் முற்றிற்று.

சைவசமயம்.

சிவாலயதரிசனவிதி.

க. சைவசமயிகள் நாடோறும் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடுவிதிப்படிசிவதரிசனஞ் செய்துகொண்டுவீட்டுக்குத்திரும்பல் வேண்டும்.

உ. சிவதரிசனஞ்செய்யவிரும்புவோர் சிவலாயத்துக்குச்சமீபத்தில் உள்ள சிவதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, கரையிலேறி, சரீரத்துள்ள ஈரத்தை உலர்ந்த வஸ்திரத்தினாலே துவட்டி, நெற்றியில்விபூதிதரித்து, குடுமியைமுடித்து ஈரக்கௌபீனத்தைக்களைந்து, உலர்ந்தகௌபீனந்தரித்து, கைகளிரண்டையுஞ்சுத்திசெய்து தோய்ந்துலர்ந்தனவாய்க்கிழியாதனவாய்வெள்ளியனவாயுள்ள சுத்தவஸ்திரம் இரண்டுஅரையிலேதரித்து, அணுட்டானமும்சபமும்முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குப்போகக்கடவர், ஸ்நானம்முதலியநியமங்கள்இல்லாது திருக்கோயிலுக்குப்போவோர்சிவநிந்தகரை ஒப்பர்.

ஈ. திருக்கோயிலுக்குப்போம்பொழுது, ஒருபாத்திரத்திலே தேங்காய்பழம் பாக்குவெற்றிலை முதலியவைவைத்து, அரைக்குக்கீழ்ப்படாது மேலேஉயர்த்தப்பட்ட கையில்எந்திக்கொண்டு, திருக்கோயிலுக்குப்போகக்கடவர். சிவபெருமானையும்சிவாக்கினியையும் ஆசாரியரையும்சேவிக்கப்போமிடத்து, வெறுங்கையுட்னேபோகாது, தம்மாலேகொடுத்ததற்கியன்றபதார்த்தத்தைஅவர்சந்நிதியிலே வைத்து, வணங்குதலே தகுதி பொருளில்லாதவன் பத்திரபுட்பங்கள்கொடுத்து வணங்கல்வேண்டும், அதுவுங்கூடாதவன்சந்நிதியில் உள்ளசெத்தைமுதலியவற்றைப் போக்கி வணங்கல்வேண்டும்.

ச. திருக்கோயிலுக்குச்சமீபித்தவுடனே தூலலிங்கமாகியகோபுரத்தைவணங்கி, இரண்டுகைகளையும்சிரசிலேகுவித்துக்கொண்டு

உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணக்கடவர்.

ங. ஆடவர் அட்டாங்கநமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும், பண்ணல்வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

சு. அட்டாங்கநமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டென்னும் எட்டுறப்பும்நிலத்திலேதோயும்படிவணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு முழந்தாளிரண்டு, என்னும்ஐந்துறப்பும்நிலத்திலேதோயும்படிவணங்குதல், திரயாங்கநமஸ்காரமாவது சிரசிலேஇரண்டுகைகளோயுங்குவித்தல்.

ஏ. நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும், பண்ணல்வேண்டும் ஒருதரம் இருதரம்பண்ணுதல் குற்றம்.

அ. நமஸ்காரம்பண்ணுமிடத்து, மேற்கேயாயினும், தெற்கேயாயினும் கால்நீட்டல்வேண்டும். கிழக்கேயாயினும் வட்க்கேயாயினும் கால் நீட்டலாகாது.

கூ. கிழக்குநோக்கிய சந்நிதியிலே பலபீடத்துக்கு அக்கினிமூலையினும், தெற்கு நோக்கிய சந்நிதியிலும் மேற்குநோக்கிய சந்நிதியிலும் பலிபீடத்துக்கு நிருதிமூலையினும், வடக்குநோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு வாயுமூலையினும் சரசைவத்து மார்புபூமியிலே படும்படி வலக்கையைமுன்னும் இடக்கையைப் பின்னும்சேரே நீட்டிப்பின் அம்முறையேமடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரைபைநோக்கநீட்டி, வலக்காதைமுன்னும்இடக்காதைபின்னும்மண்ணிலேபொருத்தச்செய்து, நமஸ்காரம் பண்ணக்கடவர்.

டு. பின்பகலிலே, சூரிய கிரகணமாயினும் சங்கிராந்திபாயினும்வரின், அப்பொழுது தரிசனஞ்செய்யப்போனவர், மேற்கேகால்

நீட்டலாகாமையால், தெற்கே நோக்கிய சந்நிதியிலும் வடக்குநோக்கியசந்நிதியிலும் அட்டாங்கபஞ்சாங்க நமஸ்காரம் பண்ணுது திரியாங்கநமஸ்காரபாத்திரம் பண்ணல்வேண்டும்.

கக. மேற்சொல்லியபடி நமஸ்கரித்துஎழுந்து, கும்பிட்டு, சிவபெருமானேச்சிறிதும் மறவாதசிந்தையோடுசெபமாலையைக்கையில் வைத்துப் பஞ்சாட்சர செபஞ் செய்து கொண்டாயினும், இரண்டு கைகளாயும் இருகயத்திலேகுவித்துக்கொண்டாயினும், பூரணகர்ப் பிணியானவள் காலிலே விலங்குபூட்டப்பட்டவளாய் எண்ணெய்நிறைந்தகுடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு நடத்தல்போல், செந்துக்கள் வருந்துமேயென்று மனம்உருகிப் பூமியைப்பார்த்துக் கொண்டு கால்களேமெல்லவைத்துப் பிரதக்ஷிணம்பண்ணக்கடவர்.

கஉ. சிவபெருமானே மூன்றுதரமாயினும், ஐந்து தரமாயினும் ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும், இருபத்தொருதரமாயினும், பிரதக்ஷிணம்பண்ணல்வேண்டும்.

கங. விநாயகரை ஒருதரமும், சூரியனே இரண்டுதரமும், பார்வதிதேவியாரையும் விஷ்ணுவையும் நான்குதரமும் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

கச. பிரதக்ஷிணம்பண்ணும்அவரணத்திலேதாபிநிழலிலேனும் தூசத்தம்ப நிழலேனும் இருப்பின், அந்நிழலில் மூன்றுகூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லக்கடவர் கடவுள் உற்சவங் கொண்டருளுங் காலத்திலே உடன்செல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம்.

கடி. அபிஷேக காலத்தில் உட்பிராகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.

கஎ. பிரமசாரிகள் வலம்வரக்கடவர் இருகத்தரும் வானப்பிரத்தரும்வலமும் இடமுமாகவரக்கடவர். சந்நியாசிகள் இடம்வரக்கடவர். வலஞ்செய்தலினாலேபோகமும், இடஞ்செய்தலினாலேமோக்ஷமும், வலமுமிடமுஞ்செய்தலினாலேபோகமோக்ஷமும் உண்டாகும்.

கஎ. வலமுமிடமுஞ் செய்தல் கர்ப்பக்கிருகத்தில் என்று சுவாயம்புவத்திலே சொலலப்பட்டது. கர்ப்பக்கிருகத்துப் பிரதக்ஷிணம் பூசகராகிய சிவப்பிராமணருக்குமாத்திரம்விதிக்கப்பட்டது கர்ப்பக்கிருகத்திலே சிவலிங்கச்சாயையையும் நிருமாலியத்தையும்சோமசூத்திரத்தையும் கடவாது வலமிடஞ்செய்தல்வேண்டும், கர்ப்பக்கிருகத்தில் வலமிடமும், வெளிப்பிராகாரங்களில் வலமும்செய்தல்வேண்டுமென்று காலோத்தரத்தில் விதிக்கப்பட்டது.

கஅ. பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்தில்உள்ள பலிபீடத்தையும் இடபத்தையுஞ்சேர்த்துப் பிரதக்ஷிணம்பண்ணக்கடவர். தாம்பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்திலேபலிபீடமும் இடபமும் இல்லேயாயின் அதற்குவெளிப்பிராகாரத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையுஞ்சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணக் கடவர். சிவலிங்கத்துக்கும் அந்தஅந்தஆவரணத்தில் உள்ளபலிபீடஇடபங்களுக்கும் இடையே போகலாகாது. இப்படி காலோத்தராகமத்திலே சொல்லப்பட்டது.

கக. மேற்சொல்லியபடி பிரதக்ஷிணம் பண்ணிச் சந்நிதானத்திலேநமஸ்காரஞ்செய்து எழுந்து, கும்பிட்டு, துவாரபாலகரைவணங்கி, பின்புகணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "பகவானே உம்முடைய திருவடிகளே அடைந்தஅடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொறுட்டு அனுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளே போகக்கடவர்.

உ0. முன்னே விக்கினேசருடைய சந்நிதியைஅடைந்து, இருகைகளையுங்குவித்து அவரைத்தரிசித்து மனதிலே தியானித்து, மூட்டியாகப் பிடித்தஇரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறை குட்டி, வலக்காதைஇடக்கையினாலும் இடக்காதைவலக்கையினாலும்பிடித்துக்கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து தோத்திரம் பண்ணக்கடவர்.

உக. பின்பு இருகைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டுசிவ பெருமானுடைய சந்நிதியை அடைந்து, அவரைத்தரிசித்து மனசிலேதியானித்து சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலிசெய்து, மனங் களிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, ஆநந்தஅருவி சொரிய,மூப்பத்திரண்டிராகங்களுள் அவ்வக்காலத்துக்கு ஏற்றஇராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லக்கடவர்.

உஉ. உத்தமோத்தமமாகிய தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம்,திருவிசைப்பா,திருப்பல்லாண்டு, பெரியபுராணம்என்னும்அருட்பாக்களைந்துமாம்.

உங. சிவபெருமானைப்பூசகரைக்கொண்டு வில்வத்திலுலேஅருச்சனைசெய்வித்து, விதிப்படிசுத்திசெய்யப்பட்ட பழமுதலியவற்றைநிவேதிப்பித்து. கர்ப்பூரராராத்திரிகம் பண்ணிமாறப்பண்ணி, பூசகருக்குஇயன்ற தக்ஷனை கொடுக்கக்கடவர்.

உச. சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும் பிராமணர்கள், அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகாமண்டபத்திலும்புகுந்து,சிவமூலமந்திரத்திலுலே புஷ்பாஞ்சலிசெய்யக்கடவர். வைசியர்இடபத்துக்கு மூன்னும், சூத்திரர் இட்பத்துக்குப் பின்னும், கோமயத்திலுலேசதுரச்சிரமாக இடம்பண்ணி சிவமூலமந்திரத்திலுல்அருச்சிக்கக்கடவர். இப்படி அஞ்சுமான் என்னும் ஆகமத்திலே சொல்லப்பட்டது.

உஙி. பின்பு சபாபதி, தக்ஷணமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயாசாரியர்கள் நால்வரையும் தரிசித்து, வணங்கித் துதிக்கக்கடவர்.

உசு. அதன்பின்பார்வதிதேவியாருடையசந்நிதியைஅடைந்து சிரசிலும்இருதயத்திலும் அஞ்சலிசெய்து, அவரைத்தரிசித்துமனசிலேதியானித்து, அர்ச்சனை முதலியன செய்வித்து, தோத்திரங்களைச்சொல்லக்கடவர்.

உஎ. இறுதியில் விபூதிவாங்கித்தரித்துக்கொண்டு, பிரதக்ஷணஞ்செய்து, சண்டேசுரர் சந்நிதியைஅடைந்து, வணங்கித்தோத்திரஞ்செய்து, தாளத்திரம்பண்ணிச் சிவதரிசன பலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்திக்கக்கடவர்.

உஅ. அதன்பின்நந்திதேவரை அடைந்துவணங்கித்துதித்துப லிபீடத்துக்கு இப்பால் வந்து. மும்முறைநமஸ்கரித்து. எழுந்துவடக்குநோக்கி இருந்து, சிவபெருமானைத்தியானித்துக்கொண்டுபஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்து எழுந்து வீட்டுக்குப்போகக்கடவர்.

உக. தரிசனஞ்செய்துதிரும்பும்பொழுது. சிவபெருமானுக்கும்இடபதேவருக்கும் புறங்காட்டாது திரும்பல்வேண்டும்.

உ0. சிவதரிசனம்பிராதக்காலத்திலே செய்தால் இரவிலேசெய்தபாவம்போய். மத்தியானத்திலே செய்தால்பிறந்தகாட்டொடங்கிச்செய்தபாவம்போம். சாயங்காலத்திலேசெய்தால்எழுபிறவிகளிற்செய்தபாவம்போம், ஆதலால். சைவசமயிகள்யாவரும்எக்காலும் காலந்தோறும் தவறாமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யக்கடவர்.

உக. சோமவாரம், அட்டமி பிரதோஷம் பௌர்ணமை.அமாவாசை. திருவாதிரை, உத்தராயணம். தக்ஷிணாயணம். சித்திரைவிஷு ஐப்பசிவிஷு மாசப்பிறப்பு, சூரியகிரகணம். சந்திரகிரகணம் சிவராத்திரி, முதலியபுண்ணியகாலகளிலே சிவதரிசனஞ்செய்தல் மிகமேலாகிய சிவபுண்ணியம்.

உஉ. சிவபெருமானைமனதிலேதியானித்துக் கொண்டும்பஞ்சாக்ஷரத்தை வாக்கிலேலே உச்சரித்துக்கொண்டும் சூரியோதயந் தொடங்கிஅத்தமய பரியந்தமாயினும் ஒருயாமமாயினும் அங்கப்பிரதக்ஷணஞ்செய்தவர் தீவினைக ளெல்லாவற்றினின்றும் நீங்கி, முத்தியைஅடைவர்.

உங. இடபதேவரைத்தரிசித்து. அங்குநின்றும் இடமாகச்சென்றுசண்டேசுரரைத்தரிசித்து, சென்றவழியே திரும்பி வந்துமீண்டும்இடபதேவரைத்தரிசித்து, அங்குநின்றும் வலமாகச்சென்றுவடதிசையைச்சேர்ந்து, கோமுகையைக்கடவாது முன்சென்றவழியே திரும்பிவந்து இடபதேவரைத்தரிசித்து, அங்குநின்றும் இடமாகச் சென்றுசண்டேசுரரைத் தரிசித்து. அங்குநின்றும்திரும்பி, இடபதேவரைத்தரிசியாதுவலமாகச்சென்றுவடதிசையைச்சேர்ந்து,அங்குநின்றும்திரும்பிவந்து, இடபதேவரைத் தரிசியாது இடமாகச்செ

ன்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பிவந்து இடபதேவரைத்தரி சித்து. பின்பு சிவலிங்கப்பெருமானைத்தரிசித்து வணங்குதல்சோம சூத்திரப் பிரதக்ஷிணம் எனப்பெயர்பெறும். பிரிந்துவரும்பொழுது ஆண்மப்பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும். இப்படிஒருபிரதக்ஷிணஞ் செய்யின், அநந்தமடங்கு பயனுண்டு. இந்தப்பிரதக்ஷிணம் பிரதோ ஷகாலத்திலே செய்யின், மிகவிசேடமாம்.

கூ. சுக்லபக்ஷம் கிருஷ்ணபக்ஷம்என்னும் இரண்டுபக்ஷத்தும் வருகின்ற திரயோதசிதிதியிலேசூரியாஸ்தமயனத்துக்கு முன்மூன் றேமுக்கால் நாழிகையும் பின்மூன்றேமுக்கால் நாழிகையுமாய்உள் ளகாலமே பிரதோஷம் எனப்படும். விஷ்ணுமுதலியதேவர்கள் தா னகள்திருப்பாற்கடல் கடைந்தபோது ஆலகாலவிஷம் தோன்றக் ண்டு அஞ்சி ஓட்டெடுப்ப, அதுஅவர்களே வலமும்இடமுமாகமறித் துத்தொடர்ந்தது அவர்கள் திருக்கைலாயத்திற்சென்று. இடபதேவ ருடைய அண்டத்தில் ஒளித்தார்கள். அவர்களேஆலகாலவிஷம்பின் னுடர்ந்து வரும்போதுசிவபெருமான் இடபதேவருடையஇரண்டு கொம்பினடியே இருந்து அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்று உட் கொண்டு அவர்களைக் காத்து, அக்கொம்பினடியேயின்றுநிருத்தஞ் செய்தருளினர். இது சனிவாரத்திலே திரயோதசிதிதியிலேசாயங் காலத்திலே அர்த்தமண்டலசமயத்திலே நிகழ்ந்தது. ஆதலால்சனிப் பிரதோஷம் மிகச் சிறந்தது. இப்பிரதோஷவரலாறு சிவரகசிய காரமாகவுஞ் சொல்லப்படும். ஏகாதசியின் மாலைக்காலத்திலே சிவ பெருமான் ஆலகால விஷத்தைஉண்டு தேவர்களைக் காத்தருளினர் துவாதசியிலே அமிர்தந் தோன்ற, தேவர்கள்அதைஉண்டு, திரயோ தசியின்மாலைக்காலத்திலேசிவபெருமானைப்பூசித்துவணங்கினர்கள் அப்பொழுது சிவபெருமான் இடபத்தின்மேல்நின்றுஅருள்செய்தா ர். இப்பிரதோஷத்திலே இடபதேவருடையஅண்டத்தைப் பரிசித் து, அவருடைய இரண்டுகொம்பினடியேபிரணவத்தோடுகூட ஹர ஹர என்றுசொல்லி சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தல்வேண்டும்.

கூடு. பிரதோஷகாலத்திலேமெய்யன்போடுசிவதரிசனஞ்செய் யின், கடன்,வறுமை,நோய்,பயம், கிலேசம்,அவமிருத்து. மரணவே தனை,பாவம் என்னும் இவைகளெல்லாம்நீங்கும். முத்திசித்திக்கும்.

கிரிப்பிரதக்ஷிணவிதி.

திரு அருணாசலம் என்னுந் திருமலையை வலம் வருவோர் மார்கழிமாதத்தொடங்கிச் செய்தல்வேண்டும், செய்கையில் புண்யதீர்த்தங்களிலேமுழுகிச் சுத்தவஸ்திரந்தரித்துச் சந்தியாவந்தனமுதலிய நித்தியகர்மங்களேமுடித்துபோசனஞ்செய்யாமற்செய்கசிவபெருமானது திருவடிகளே யிடையருது தமதுமனத்தினிறுத்தித், திருவைந்தெழுத் தென்னப்படுஉம் ஸ்ரீபஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, விபூதி உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களேதரித்துத், தமதுகைகளேக்கூப்பிக்கொண்டாவது, அல்லது மார்பினிடத்தில் வைத்தாவது, செபமாலைதரித்தாவது, பூமியிலுள்ள உயிர்கள் சோவாவண்ணம் எண்ணெய்குடத்தைச் சிரசிலிட்டுக் காலிற்றளே பூட்டிய பூரணகர்ப்பவதிபோல் மெல்லெனப் பிரதக்ஷிணஞ் செய்க இம்மார்கழில் ஒருநாள் ஒருமுறை வலம் வந்தால் ஒருவருடம் இடையராதுசெய்த பலனையடைவார்கள். இப்பூமியில் என்னவேண்டுமோ, அவற்றை யநுபவித்து இருதியிற் சிவலோகத்தையும் அடைவார் என்க. ஒரு அடிக்கு ஆயிரம் அசுவமேதயாக பலனுண்டாம். வாசபேய யாகபலனைவிட நூறுபங்கு அதிகமுண்டாம். இம்மலே முழுவதையும் பிரதக்ஷிணஞ் செய்யும் பெரியோர் சிவனிடஞ் சென்று விளங்குவார்.

தைமாதத்திலே தேவரும்முனிவரும் மனங்குழைந்து இவ்வருணாசலமலையைத்தியானித்து, அரிட்டங்கெடவும், ஜீட்டம்பொருந்தவும பிரதக்ஷிணஞ்செய்பவர்கள்பண்டிதராயினும்மூர்க்கராயினும் பாதகராயிருந்தாலும், குலத்திலுயர்ந்தோராயினும், தாழ்ந்தோராயினும் தேவர்களும்வணங்காநின்ற அருணாசலத்தைப் பிரதக்ஷிணம்செய்வா

ஞயின் அளவில்லாதகோடிபாவங்களெல்லாமகன்றுசாயுச்சியமடை வார்களென்பதுசத்தியம் பிரதக்ஷிணஞ்செய்யும்போதுமிதியடி,செ ருப்பு, இவைதரித்தும், குதிரை, யானை,ஒட்டை, வண்டி, பல்லக்கு இவைகளிலேறிச் சென்றும், குடை பிடித்தும் செய்தல் பாவமாம். மாகிதன்னென்னும் அரசன் அவ்வாறேகுதிரையிலேறிப்பிரதக்ஷிணஞ் செய்தமையால் நகரத்தில் விழுந்தான். குதிரை சிவலோகஞ் சார்ந் தது அங்கே கணங்களுக்கெல்லாம் அதிபதியாக விளங்கிற்று. ஆத வால் அன்பர்கள் மிதியடி முதலானவற்றை விடுத்துச் சிவபெருமா னது திருவடிகளைத் தியானித்துச் செய்யின் புத்தி, சித்தி, முத்தி, கள் எளிதல் கைகூடும்.

பிரதக்ஷிணஞ் செய்யும்போது ஓரடிவைத்தலால் மனத்தினுற் செய்த பாவங்களெல்லா மகலும் இரண்டடி வைத்தலாற் சொற்க ளானேர்ந்த பாவங்களெல்லாந்தீரும். மூன்றுமடிவைத்தலால் உட லினுற்செய்த தீமைகள் யாவுமோடும் பிராதக்காலத்திலே (விடியற் காலம்) வலஞ்செய்யிற் குற்றங்கள் நீங்கும். உச்சிக்காலத்திற் செய் யின் இட்டசித்திகளை விரும்பும், மாலைக்காலம் வலம்வரின் மிகுதி யாகத் தழைத்துவளருந் தனம், தானிய முதலாயின பெற்று வாழ் வர். ஞாயிற்றுக்கிழமையில் வலம்வந்தோர் மெய்யிலும் நோய்கள் நீங்கிப் பூமியில் வாழ்ந்து சூரியலோகத்தையடைந்து மகா சங்கார காலத்திற் சிவபெருமான் திருவடியிற்கலப்பர். திங்கட்கிழமை சுற் றினோர் பாவங்களெல்லாம நீங்கிச் சந்திரலோக மடைந்து போகம னுபவித்து இறுதியின் முத்தியடைவார். மற்றைய வாரங்களிற் செய்தோரும் அவ்வாறே நினைத்தன பெற்று வாழ்ந்து அவ்வக்கோ ள்களி னுலகங்களை யடைந்து போகமுற்றுப் பின்னர் அரனடியே சேர்வர். சித்திரை மாதத்திலே அமரபக்கத்திலே சதுர்த்தசி திதி யிலே உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து, வெண்ணீறுசாத்தி, சிவ லிங்கப் பெருமானைத் துதித்துப் பணிந்து, இவ்வுலக போகத்தை

விரும்பாமலும், சுவர்க்கமுதலிய பதவிகளிலு மநுபவிக்கும் பலனே விரும்பாமலும்; அநாதி மலமுத்தராகிய சிவபெருமானுடைய அருளே சலத்தை வலஞ்செய்தோர், அசுத்த தத்துவமாகிய ஆண்மதத்துவங் களிலும், சுத்தாசுத்ததத்துவங்களாகிய வித்தியா ததுவங்களிலும், தங்காது சுத்ததத்துவமாகிய சிவதத்துவத்தி லெஞ்ஞான்றும் சிவ ரூபமுற்று வாழ்வர்.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை யுச்சரித்துச் சிவபிரான் றிருவடிகளே யுளத்திற்பதித்துச் சூரிய உதயமுதல் அத்தமயனம் வரையும் செய் தோர் சுத்த சிவதத்துவத்திற் கலந்து வாழ்வர். ஒருசாமம் ஜலம்புரி ந்தால் அட்டமாசித்திகளே யடைவர்.

மலைவலஞ்செய்வது ஒருமுறை செய்வதினும் மும்முறைசெய் வது விசேடம். நூறு, ஆயிரம், பதினாயிரம், இலக்கம், கோடி, என்னுங் கணக்காக ஆலயங்களே வலஞ்செய்த பலனே யளிக்கும்; சரீரப் பிரதக்ஷிணஞ் செய்தவர், தம் உடலிற்படிந்தமணலொவ்வொ ன்றற்கும் தேவவருடம் ஆயிரம்வரையும் புட்பத்தேரிலிருந்து போ கங்களே யநுபவித்து மகா சங்காரகாலத்திற் சிவன் றிருவடிப்பேரு கிய அத்துவித முத்தியையடைவார் என்க.

மலை சிவரூபமா யிருத்தலால் அதன்கண் ஏறுதல் மகாபாவம் ஆகும் அதற்குப் பிராயசித்தமில்லை. ஆதலால் ஒருவரும் ஏறற்க மலை அக்கினி வடிவென்பதற்குத்திருவண்டாகந்தம் இப்போதுங்காண லாம். என்னெனில் எவ்வளவுமழைபெய்யினும் அருவிசலம்வடியா மையேயாம். சுபமஸ்து.

பணிந்தவ ரவய வத்திற் பற்றிய மணலொவ் வொன்றிற்
கெணந்திக ழிமையோ ராண்டா யிரமல ரிரதந் தன்னி
லணைந்தமர்ந் திருப்பரின்புற் றமலன்றன் சிவலோகத்திற்
றணந்திடு மவர்மு னின்ற நநுவுனிற் சார்ந்த பாவம்.

1. தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலிய யாவர்களும் புடைசூழ உமாமகேஸ்வரி சமேதராய் பரமசிவன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகைலயங்கிரி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையில்

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகம்.

சுவாமிபெயர்—அருணாசலேசுரர்.

தேவிபெயர்—உண்ணாமுலையம்மை.

பண்-நட்டபாடை. (முதற்றிருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (க)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுதண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (உ)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரன்புகழே. (ங)

உதிரும்மயிரிடுவெண்டலைகலன்வுலகெல்லா
மெதிரும்பலியுணலாகவுமெருதேறுவதல்லான்

முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணுமலையதுவே (ச)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செயமுரவம்படுமண்ணுமலையண்ண
லுரவஞ்சடையுலவும்புனலுடனுவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழனுமைபுல்குதல்குணமே. (ஞ)

பெருகும்புனலண்ணுமலைபிறைசேர்கடநஞ்சைப்
பருகுந்தினைதுணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (சு)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டி
னரியாடியநகுவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணுளொடுமண்ணுமலையதுவே. (எ)

ஒளிறுபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறுகுரன்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறுபடவிலையாடியவிகிர்தன்னிராவணனை
யளறுபடவடர்த்தரனிடமண்ணுமலையதுவே. (அ)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாமணமழலாகியவண்ணுமலையண்ண
றளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (கூ)

வேர்வந்துரமாசூர்தரவெயினின்றுழல்வாரு
மார்பம்புதைமலிசீவரமறையாவருவாரு
மாரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணுமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானழகல்சேர்வதுகுணமே. (கo)

வெம்புக்கியகதிரோளிவிலகும்விரிசார
லம்புக்திமூவெயிலெய்தவனண்ணுமலையதனைக்
கொம்புக்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பக்தனதமிழ்வல்லவரடிபேணுதற்றவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண்-தக்கேசி (முதற்றிருமுறை)

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்க
ண், மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைகின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணுமலையாரே. (க)

மஞ்சைப்பேழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானர்
கஞ்சைக்கண்டத்தடக்குமதுவுகண்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி,
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணுமலையாரே. (உ)

ஞானத்திரளாய்கின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளேக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்சு
ணைதத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணுமலையாரே. (ங)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானர்,
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்
பிழைத்தபிடியைக்காணுமேதாடிப்பெருங்கைமதவேழ[தார்
மழைத்தத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணுமலையாரே. (ச)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானர்
செருவிலொருக்கால்வலையவுண்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்றிருவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணுமலையாரே. (ஞ)

எணைத்தோழுழியடியாரேத்தவிமையோர்பெருமானுர்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குமலருறைகோயில்
கணைத்தமேதிகாணுதாயன்கைமேற்குழலூத
வணைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணுமலையாரே (சு)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயின்
முந்தியெழுந்தமுழவினுசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணுமலையாரே. (எ)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறுயெடுத்தான்றே
ணிறந்தான்முறியநெரிய வூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணுமலையாரே. (அ)

தேடிக்காணர்திருமால்பிரமன்றேவர்பெருமானே
மூடியோங்கிமுதுமீனுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றூடிப்பாடியளக்குஞ்சாரலண்ணுமலையாரே. (கூ)

தட்டையிடுக்கித்தலையைப்பரித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டா பேணித்தொழுமின்க
வட்டமுலையாளுமையாள் பங்கர்மன்னியுறைகோயி [ள்
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணுமலையாரே. (கo)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணுமலையாரே
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரை. (கக)

திருச்சிற்றம்பலம்.

———•

திருவண்ணாமலையில்

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

திருகேரிசை. (சு-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கமியுமையவள்பங்காமிக்க
சோதியேதுலங்குமெண்டோட்சுடர்முழுப்படையினேன
யாதியேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
நீதியாநின்னையல்லானினையுமாநினைவிலேனே. (க)

பண்டனேவன்றவின்சொற்பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
வண்டனேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற் சொல்லுமாசொல்லிலேனே. (உ)

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைப்பிறப்புவீடாய்நின்றவெம்பெருமான்மிக்க
வருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லாண்மற்றொருமாடிலேனே. (ங)

பைம்பொனேபவளக்குன்றேபரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேயிக்க
வம்பொனேகொழித்துவீருமணியண்ணாமலையுளானே
யென்பொனேயுன்னையல்லாலேதுநானினைவிலேனே. (சு)

பிறையணிமுடியினேபிஞ்ஞகாபெண்ணேர்பாகா
மறைவலாவிறைவாவண்டர்கொன்றையாய்வாமதேவர்
வறைகழலமரர்ஏத்துமணியண்ணாமலையுளானே
யிறைவனேயுன்னையல்லாலியாதுநானினைவிலேனே. (ரு)

புரியசடைமுடியின்மேலோர்பொருபுனங்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா

••

வரிகுலமலிந்தவண்ணமலையுளாயலரின்மிக்க்
வரிமிகுவண்டுபண்செய்யாதநான்மறப்பிலேனே. (சு)
இரவியும்மதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்று
முராகமார்பவனமெட்டுந்திசையொளியுருவமாகி
யரவுமிழ்மணிகொள்சோதியணியணமலையுளானே
பரவுறின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. (எ)
பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தா
யார்த்தவந்தீண்டுகொண்டலணியணமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. (அ)
பாலுநெய்முதலாய்மிக்கபசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்ரு
யாலுநீர்கொண்டல்பூசுமணியணமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. (கூ)
இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடிந்தவெம்மா
னுரத்தினல்வரையையூக்கவொருவிரனுதியினூலே
யரக்கனைநெரித்தவண்ணமலையுளாரமரரேறே
சிரத்தினல்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இதுவுமது.

திருக்குறுந்தொகை (நி-ம்-திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வட்டனமதிசூடியைவானவர்
சிட்டனத்திருவண்ணமலையனை
யிட்டனியிகழ்ந்தார்புரமூன்றையு
மட்டனையடியேனமறந்துய்வனே. (க)

வானினம் திரூடியமைந்தினைத்
தேனினைத் திருவண்ணைமலையினை
யேனினையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வானினையடியேன்மறந்துய்வனே. (உ)

மத்தமதயானையுரித்தவெஞ்
சித்தினைத் திருவண்ணைமலையினை
மூத்தினை முனிந்தார்புரமூன்றெய்த
வத்தினையடியேன்மறந்துய்வனே (ங)

காற்றினைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றினைத்திருவண்ணைமலையினைக்
கூற்றினைக்கொடியார்புரமூன்றெய்த
வாற்றினையடியேன்மறந்துய்வனே. (ச)

மின்னினைவினைதீர்த்தெனையாட்கொண்ட
தென்னினைத்திருவண்ணைமலையினை
யென்னினையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வன்னினையடியேன்மறந்துய்வனே. (ஞ)

மன்றினை மதியாதவன்வேள்வியைமற்
சென்றினைத்திருவண்ணைமலையினை
வென்றினைவெகுண்டார்புரமூன்றையுங்
கொன்றினைக்கொடியேன்மறந்துய்வனே. (ட)

வீரினைவிடமுண்டினைவிண்ணவர்
தீரினைத்திருவண்ணைமலையினை
யூரினையுணரார்புரமூன்றெய்த
வாரினையடியேனமறந்துய்வனே. (ண)

கருவினைக்கடல்வாய்விடமுண்டவெங்
திருவினைத்திருவண்ணைமலையினை

யுருவினையுணராப்புரமூன்றெய்த
வருவினையடியேன்மறந்துய்வனே. (அ)
அருத்தனையரவைவந்தலைநாகத்தைத்
திருத்தனைதிருவண்ணமலையனைக்
கருத்தனைக்கடியார்புரமூன்றெய்த
வருத்தனையடியேன்மறந்துய்வனே. (கூ)
அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணமலையனை
யிரக்கமாயென்னுடலுறுநோய்களைந்
தருக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இதுவுமது.

திறுக்குறுந்தொகை. (நூ-ட்-திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பட்டிமேறுகந்தேதறிப்பலவில
மிட்டமாகவிரந்துண்டுழிதரு
மட்டமூர்த்தியண்ணமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. (க)
பெற்றமேறுவர்பெய்பலிக்கென்றவர்
சுற்றமாமிகுதொல்குழாளொடு
மற்றந்தீர்க்குமண்ணமலைகைதொழ
நற்றவத்தொடுஞானத்திருப்பரே. (உ)
பல்லிலோடுகையேந்திப்பலவில
மொல்லைசென்றுணங்கல்கவர்வாரவ
ரல்லதீர்க்குமண்ணமலைகைதொழ
நல்லவாயினநம்மையடையுமே. (ங)
பாடிச்சென்றுபலிக்கென்றுநின்றவ
ரோடிப்போயினர்செய்வதான்றென்கொலோ

வாடிப்பாடியண்ணாமலைதொழ
வோடிப்போகுமம்மேலவினைகளே. (சி)

தேடிச்சென்றுதிருந்தடியேத்தும்
ஞடிவந்தவர்நம்மையுமாட்கொள்வ
ராடிப்பாடியண்ணாமலைதொழ
வோடிப்போகுமதுள்ளவினைகளே. (நி)

கட்டியொக்குங்கரும்பினிடைத்துணி
வெட்டிவீணைகள்பாடும்விகிர்தனு
ரட்டமூர்த்தியண்ணாமலைமேவிய
நட்டமாடியைநண்ணாகாகுமே. (சு)

கோணிகொண்டையர்வேடமுன்கொண்டவர்
பாணிநட்டங்களாடும்பரமனு
ராணிப்பொன்னினண்ணாமலைதொழப்
பேணிநின்றபெருவினைபோகுமே. (ன)

கண்டந்தான்கறுத்தான்காலனுயிர்
பண்டுகால்கொடுபாய்ந்தபரமனு
ரண்டத்தேங்குமண்ணாமலைதொழ
விண்டுபோகுமம்மேலவினைகளே. (அ)

முந்திச்சென்றுமுப்போதும்வணங்குமி
னந்திவாயொனியரன்றணண்ணாமலை
சிந்தியாவெழுவார்வினைதீர்த்திடுங்
கந்தமாமலர்சூடுங்கருத்தனே. (கூ)

மறையினெனெடுமாலவன்காண்கிலா
நிறையுநீர்மையுணின்றருள்செய்தவ
னுறையுமாண்பினண்ணாமலைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

திருவாதவூர். மாணிக்கவாசகசுவாமிகள்

திருவண்ணுமலையில் அருளிச்செய்த

தமிழ்வேதமாகிய

திருவெம்பாவை.

சத்தியை வியந்தது.

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிடிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்ன
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (க)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகலும்
பேசும்போ தெப்போதிப் போதாரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிட மீதா விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனுக் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய். (உ)

முத்தன்ன வெண்ணகைகாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனு னந்த னமுதனென் றுள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையி ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த் தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தேதான் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாசோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். (கூ)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றே
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுக்கோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (சு)

மாலறியா நான்முகனுங் காணு மலையினனும்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூரு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றேல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (நி)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே

போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே யறிவரியான்
ஞானவக் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோணப் பாடேலோரெம்பாவாய். ()

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னெருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னு வெண்ணுமுன்னந் தீசர் மெழுகொப்பா
யெண்ணே யெண்ணரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னேங்கள் வெவ்வேரு யின்னந் துயினுதியோ
வன்னஞ்செப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (எ)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்புவெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் ஈழப்பொருள்கள் பாடினேங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா நன்புடமை யாமாறு மிவ்வாரே
ஆழி முதல்வனுய் நின்ற வொருவனே
யேழைபங் காளனேயே பாடேலோ ரெம்பாவாய். (அ)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மூங்கவர்க்கேபாங்காவோ

மன்னவரே யெங்களைவ ராவா ரவருகவந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்னவகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையுமி லோமேலோ ரெம்பாவாய். (கூ)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தானு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தான்றன் கோயிற் பிணப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்ற ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (கo)

மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே ரென்னத்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்கா ரைழல்போற்
செய்யாவெண் ணீறுடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண்டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முயந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (கக)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ்செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுணீ ராடேலோ ரெம்பாவாய் (கஉ)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னுமர வத்தாற்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினு
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துருஞ்
சங்குஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கஊ)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (கசு)

ஒருகா லொருபெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொரு காலோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந் தணையாள் விண்ணோரைத்தான் பணியா
பேரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு [ள்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். ()

முன்னிக் கடலிச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிறம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னண்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப்பொழியாய் மழையேலோரெம்பாவாய். (கசு)

செங்கண வன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனே
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய். (கஎ)

அண்ணு மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றுற்போற்
கண்ணு நிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணு ரொளிமழுங்கித் தாரகைக ளாமகலப்
பெண்ணுகி யாணு யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி யித்தனையும் வேறுகிக்
கண்ணு ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா

லெங்கள் பெருமா ணுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோன் சோற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ ணல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். ()

போற்றி யருளுகநின் ஞதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமா ணன்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடலோ ரெம்பாவாய். (உ०)

திருச்சிற்றம்பலம்.

இதுவுமது.

ஷை சுவாமிகள்

திருவண்ணுமலையிலருளிச்செய்த

திருவம்மானை.

ஆனந்தக்களிப்பு.

ஒப்புமைபற்றிவந்தவாரடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தாமு மாட்கொண்டு

தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையா
ணங்கண னந்தணனு யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (க)

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தா
ராராயுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய். (உ)

இந்திரனு மாலயனு மேமேலுரும் வானேரு
மந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
யெந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனைச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (ங)

வான்வந்த தேவர்களு மாலயனே டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டேன்வந்து சோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னெளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (ச)

கல்லா மனத்துக் கடைபட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லிப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்

தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (ஞ)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாரூருவன்
நீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவகாட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்யா நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காணம்மானாய் (ட)

ஓயாத யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தாளே யுகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய். (ண)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டுக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். (அ)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்டபுரி நூலான் கோலமா லூர்தியான்
கண்டங் கரியான் செம்மேனியான் வெண்ணீற்று
ணண்டமுத லாயினு னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளு
மண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய். (கூ)

விண்ணுளுந் தேவர்க்கு மேலாய வேதியனே
மண்ணுளு பன்னவர்க்கு மாண்பாகி நின்றனைத்
தண்ணுர் தமிழளிக்குந் தணபாண்டி நாட்டானைப்
பெண்ணுளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணுர் சுழல்காட்டி காயேனை யாட்கொண்ட
வண்ணு மலையானைப் பாடுதுங்கா ணம்மானுய். (கo)

செப்பார் முலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
றப்பாமே தாளடைந்தார் கெஞ்சுருக்குந் தன்மையினு
னப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
வப்பார் சடையப்ப ணைந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கு
மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானுய். (கக)

மைப்பொலியுங் கண்ணிகேண் மாலயனு டிந்திரனு
மெப்பிறவி யுந்தேட வெண்ணையுந்தன் னின்னருளா
லிப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேரு
மெய்ப்பொருட்குந் தானேயர் யாவைக்கும் வீடாகு
மப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானுய். (கஉ)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
யையா றவர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானுய். (கங)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவரா
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தேய்த்தேனை
யூனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து

தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய [ருளும்
கோனவன்போல் வந்தென்னைத் தன்னொழும்பிற்கொண்ட
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (கச)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினி.
லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்க்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களோ யோட்டுகந்த [ன்
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையா
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். (கரி)

ஊனு யிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனு யமுதமாய் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானே ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ராணு வறியா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனுமி னின்றவா கூறுதுங்கா ணம்மானாய். (கசு)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிடரோள்
கூடுவேன் கூடி மூயங்கி மயங்கிநின்
றாடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
யாடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். (கள)

கிளிவந்த மென்மொழியாள் கேள்கிளரும் பாதியனே
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந்த திருந்திரங்கி யெண்ணெரிய வின்னருளா
லொளிவந்தென் னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
வளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய். (கஅ)

முன்னினை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னினைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னினை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னினைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
யென்னினை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
யன்னினை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய். (க ம)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றிவிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (உ ம)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய்த்
திருவண்ணுமலையில் எழுந்தருளியிருந்த
அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்

தனனதனனத் தனனதனனத்
தனனதனனத் — தனதான.

அருமாமதனைப் பொருவாள்கயல்குத்
தயிலார்நயனக் கொடியார்த
மழகார்தனநற் புழுகார்சயிலத்
தணையாவலிகெட் டுடல்தாழ

விருமாகடைபுக் குரைபோயுணர்வற்
றிளையாவுளமுட் குயிர்சோர
எரிவாய்நரகிற் புகுதாதபடிக்
கிருபாதமெனக் கருள்வாயே
ஒருமால்வரைபட் டிருகூறிடவுற்
றிருவேறணிவிட் டெறிவோனே
வுறவான்மறவக் குறமாமகளுக்
குருகாவிருபொற் புயவீரா
திருமாலகமலப் பிரமாவிழியிற்
றெரியாவரனுக் கரியோனே
செழுநீர்வயல்சூற் றருணபுரியிற்
றிருவீதியினிற் பெருமாளே.

தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த—தனதான.

தோத கப்பெ ரும்ப யோத ரத்தி யெங்கு
தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே
சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று
சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாதே
பாத கச்ச மன்றன் மேதி யிற்பு குந்து
பாசம் விட்டெ றிந்து பிடியாதே
பாவ லர்க்கி ரங்கி நாவி னுக்கினைசந்த
பாடன் மிக்க செஞ்சொ றாவேணும்
வேத மிக்க விந்து நாத மெய்க்க டம்ப
வீர பத்ர கந்த மூருகோனே
மேரு வைப்பி ளந்து சூர னைக்க டிந்து
வேலை யிற்று ளைந்த கதிர்வேலா

கோதை பொற் குறிஞ்சி மாது கச்ச ணிந்த
கோ மளக்கு ரும்பை புணாவோனே
கோல முற்று யர்ந்த சோண வெற்பி லங்கு
கோபு ரத்த மர்ந்த பெருமாளே.

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித் தேனெனச் செயலொழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் பெறுமாது
கருதுபுத் தாவெனப் புதல்வரப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில்குலத் தாரழப் பழையநட் பாரழப்
பறைகள் கொட் டாவரச் சமனருமப்
பரியகைப் பாசம்விட் டெரியுமப் போதெனைப்
பரிகரித் தாடையைத் தரவேணும்
மயிலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே
யமரரத் தாசிறுக் குமரிநட் பாகனத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலிளப் பாலுபொற் சயிலமெய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே.

தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆலுமயில் போலொத்த தோகையர்க ளேமெத்த
வாரவட மேலிட்ட முலைமீதே
யானதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்கு
மாமைநடை யாரிக்கு மொழியார்பால்
மாலொடவர் போகத்தி லேகுலவி யேயித்தம்
வாடுமெனை நீசித்த மகிழ்வாகி
மாகமுக டாருக்ர வேகமயி லேயுற்று
வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுக வேதற்கு மாலிலையின் மாயற்கு
நாடவரி யார்பெற்ற வொருபாலா
நாகமுடி மீதுற்ற ஞானமதி லேபத்தர்
ஞானமுனி வோர்கட்கு மிறையோனே
வேலைவிழி வேடிச்சி யோடமரர் மாதொக்க
வீறருணை மால்வெற்பி லுறைவோனே
வீரமுட னேயுற்ற சூர்களை வீழ்விக்க
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

தானதனதானத் தானதனதானத்
தானதனதானத்—தந்தானா.

ஆலவிழிநீலத் தாலதரபானத்
தாலளகபாரக் கொண்டலாலே
யாரநகையால்விற் போலுநுதலால்வித்
தாரநடையால்வற் கொங்கையாலே
யாலமயலாகிக் காலதிரிசூலத்
தாலிறுகுபாசத் தும்பிணலே

தாழ்விலுயர்பாழ்பட் டேழ்வினைவிடாமற்
சாகுமுனினேவற் கொண்டிடாதோ
சோலைதருகானிற் கோலமறமானைத்
தோளிலுறவாகக் கொண்டவாழ்வே
சோதிமுருகாகித் தாபழயஞாலச்
சோணகிரிவீதிக் கந்தவேளே
பாலக்கலாபக் ஸ்காமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர்தூவிப்
பாடுமவர்தாழ்நற் றம்பிரானே.

தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகன லிலேபிறக்கு
முழுமதிநி லாவினிற்கும் வசையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி வேயிசைக்கு
முதியமத ராசனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியகு ராநிரைத்த
புதுமையினி லாறிரட்டி புயமீதே
புணருமவை தானினைத்த துணருமவை நீலசித்ர
பொருமயிலி லேறிநித்தம் வரவேணும்
எழுமகர வாழிசுற்று பொழிலருணை மாநகர்க்கு
ளெழுதரிய கோபுரத்தி லுறைவோனே
யிடைதுவள வேடுவிச்சி பவளவித ழேதுடிப்ப
விளமுலைவி டாதசித்ர மணிமார்பா
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த
சிவனுமுத லோதுவித்த குருநாதா

திசைமுகன்முராரிமற்று மரியபல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமாளே.

தனன தனதன தனதன தனதன
தனன தனதன—தனதான.

இறுகு மணிமுலை மருவு தாளமு
மெரியு மெழுமதி நிலவாலே
யிரவி லெனதுயிர் கவர வருகுயி
லிசையு முருகட லலையாலே
தருக ணதிபதி மதனன் விடுகொடு
சரமு மினியென்ன யணுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணும்
முறுகு திரிபுர மறுகு கனலெழ
முனிவ லுடையவர் குருநாதா
முடிய பொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா
குறவர் மடமக ளமிர்த கனதன
குவடு படுமொரு திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே.

தனனதத் தத்தத் தனத்தத் தனதன
தனனதத் தத்தத் தனத்தத் தனதன
தனனதத் தத்தத் தனத்தத் தனதன—தனதான.

கமலமொட் டைக்கட் டழித்துக் குமிழியை
நிலைகுலைத் துப்பொற் குடத்தைத் தமனிய
கலசவர்க் கத்தைத் தகர்த்துத் தலையற விளநீரை

கருவிவட் டைப்பிற் றுரத்திப் பொருதவ
சபம்விளைத் துச்செப் படிப்பித் துலவிய
கரிமருப் பைப்புக் கொடித்துத் திறன்மத னபிஷேகம்
அமலர்நெற் றிக்கட் டழற்குட் பொடிசெய்து
வதிகசக் ரப்புட் பறக்கக் கொடுமையி
னடனமிட் டச்சப் படுத்திச் சபதமொ டிருதாள
மறைதல்கற் பித்துப் பொருப்பைக் குலவிய
சிறுகறுப் பித்துக் கதித்தும் புடைபடு
மபிநவச் சித்ரத் தனத்துத் திருடிக ளுறவாமோ
தவரமிக் குற்றுக் கலக்கப் பலபறை
தொகுதொகுத் தொக்குத் தொகுக்கத் தொகுதொகு
தரிகிடதத் தத்தத் தரிக்கத் தரிகிட வெனமோதி
சடவுடற் பக்கப் பழுத்துப் புகையெழு
விழிகளுட் செக்கச் சிவத்துக் குறளிகள்
தசைகள்பட் சித்துக் களித்துக் கழுகொடு கழுகாட
அமரில்மெத் தககொக் கரித்துப் பொருதிடு
மசுரரத் தத்திற் குளித்துத் திமியென
வடிநடித் திட்டுக் கைகொட்டிச் சமர்செயு மயிலான
வழகுமிக் குச்சித் திரப்பொற் புரவியி
லுலவுநிர்த் தக்கொற் றசித்துக் குருபர
வருணையிற்சித்தத் தெனக்குத்தெளிவருள்பெருமாளே.

திருவண்ணுமலை கேஷத்திரவெண்பா.

வேதச் சிரத்தும் வியன் கயிலைத் தடத்து
மோதிரத் தெளிந்தார்த முள்ளத்தும்–நாதிக்கும்
தண்ணு ரமுதமழைத் தாழ்பொழில்சூழ் தென்ன ருணைக்
கண்ணு ரமுதன் கழல்.

சிவமயம்.

திருவண்ணுமலை

குகைநமச்சிவாயர் உபதேசம்பெற்றுச்

சிதம்பரத்திருப்பணி செய்த

குருநமச்சிவாயர் சரித்திரம்.

தலேச்சுரமென்னுந் திருநாமம்பெற்ற திருவண்ணுமலையில் நமச்சிவாயமூர்த்தியென்றொரு சித்தர் எழுந்தருளியிருந்தனர். அவர்மேற்படியூர் மலையின்மேற்குகைசெய்து நிஷ்டைபுரிந்து வந்தமையால், குகை நமச்சிவாய மூர்த்தியெனக் கூறப்பட்டனர் அவர் அக்குகையின் சமீபத்தில் வளர்ந்தோங்கிநின்ற ஓர் ஆலவிருட்சத்தின்மீது தூங்கும் ஊஞ்சலிட்டு, அதில் யோகநித்திரை கொள்வது வழக்கம் அவருக்கு நமச்சிவாயமூர்த்தி பென்றொருசீடனிருந்தனர் அவர் அருகேயிருந்து அதிபக்தியுடன் பணிவிடைசெய்து கொண்டிருக்கும்போது ஒருநாள் குருக்கென்றுநகைத்தார், நமச்சிவாயம்? என்னவதிசயங்கண்டு நகைத்தாயென்று கேட்டார் உடல், பொருள், ஆவிமூன்றுந் தத்தஞ்செய்ய அவைகளேயேற்றுக்கொண்டு அடிமையையாள விருப்புற்ற வெனதையனே!

திருவாரூரின்கண்தியாகராயசுவாமிகள் எழுந்தருளச் செய்து தெருவீதிவரும்போது அப்ஸரப்பெண்களுக்கொப்பற்ற நடனநாட்டியப்பெண்கள் ஆடிக்கொண்டுவர, அதிலொரு தேவதாசி கால்தடக்கி விழுந்தாள், அங்கு நின்றவர்களெல்லாம் நகைத்தார்கள். அடிமையும் நகைத்தேன். அஃதே தவிர மற்றொன்று மில்லையென்றார்.

இதுநிற்க, மற்றொருநாள் வஸ்திரத்தைப் பிடித்துத் தேய்த்தார் அஃதேதுக்காகத் தேய்த்தது என்றுகுகைநம

ச்சிவாய மூர்த்திகேட்க, சிதம்பரத்திலே கனகசபைக்குக் கறுப்புத்திரை யிட்டிருந்தது அதற்சருகே குத்துவிளக்கிலே நெய்விட்டுத் திரிபோட்டெரிய, அஃதை ஒரெலியிழுத்துக்கொண்டுபோக, அத்திரை பற்றிக் கொண்டது அங்கிருந்தபேர் அதைத்தேய்த்தார்கள், அடியேனும் மேன்மேலும் எரியாவண்ணம் தேய்த்தேன் சுவாமி யென்றார்.

பின்பொருநாள், குகைநமச்சிவாயமூர்த்தி சிலகாரணார்த்தசோதனை நிமித்தம் வாந்திசெய்து அதைத் திருவோட்டிற்பிடித்து இதை மனிதர் அடிபடாத இடத்திற் கொண்டுபோய்விடென்று கட்டளை யிட்டனர்; அதை நமச்சிவாயர் மனிதர்சஞ்சரிக்கப்படாத விடமெதுவெனவறிந்து தானேவாங்கி உட்கொண்டனர்.

ஆசாரியர் இவ்வற்புதச்செய்கையையறிந்துசிஷ்யரைப்பார்த்து அப்பா நமச்சிவாயர், அடிபடாத விடத்தில் வைத்தாயாவென்று கேட்டார். சிஷ்யர்வைக்குந் தானத்தில் வைத்தேனென்று தலைவணங்கிக்கூறினர். அதற்குமேல் இந்தமூன்றுஅதிசயமும்பார்த்து, நம்மினின்றுஞ்சிஷ்யனுக்குவரவர ஞான உதயம் அதிகமாகிறது. அவ்விடத்தில் வைத்திருக்கக்கூடாது இன்னும் ஓர் அதிசயம்பார்த்துச்சேனை அதற்கேற்ற இடத்திற் கனுப்ப வேண்டுமென்று ஆலோசனை செய்து, ஒருவெண்பாவி லரைவெண்பா எடுத்துக் குகைநமச்சிவாயமூர்த்தி கூறினர், அதுவருமாறு:—

நேரிசை வெண்பா.

ஆல்பழுத்துப் பக்கியினுக் காகார மானதென
வேல்பழுத்து நின்றநிலை வீணிலெனச்—

என்றனர்—அருகே இருந்தசீடர் ஏன்சுவாமி! குறை வெண்பாவையு மூடிக்கலாமே என்றுசொன்னர். ஆசாரியர்

அப்பா நமச்சிவாயம்! குறைவெண்பாவும் நீமுடிக்கலாமே என்றுசொன்னார். சிஷ்யர் சுவாமி! குருவாக்குக் கெதிர்வாக்கடியேன் சொல்லக்கூடாது, இது சிஷ்யனுக் கடுத்ததல்லவே என்றுசொன்னார் நீ ஞானப்பிள்ளையானபடியினாலே சொல்லுக வென்று குருவாக்கு வந்தது. நமச்சிவாயர் அதைச் சிரசில் வகித்து அக்குறை வெண்பாவையு முடித்தனர், அஃதெப்படியென்னில்--

—சாலவனச்

செய்யா வொருத்தருடன் சேர்ந்து மிருப்பீரோ
வையா நமச்சிவா யா.

என்றுமுடித்தார்—அதற்குமேல் குகைநமச்சிவாயமூர்த்தி யோக நித்திரை செய்யும் மஞ்சம் விட்டிறங்கி, அப்பா. என் இருகண்மணியே! இன்றன்றோ நீமெய்ஞ்ஞானத்தையடைந்தாய்! ஆச்சரியம்! ஆச்சரியம்! உன்னைப்போல சிஷ்யன் யாருச்குக் கிடைப்பான்! ஆகையால் இன்றுதொட்டு நீ குருநமச்சிவாயமூர்த்தி எனத்திருநாமம்பெறப்பட்டாய் என்று தழுவிக்கொண்டு, ஒருகம்பத்திலே இரண்டுயோனைக் கட்டக்கூடாது; இதுவோ போகஸ்தலம், அஞ்ஞானத்தைநீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தராநின்ற அம்பலவாணர் எழுந்தருளியிருக்கும் திவ்விய சேஷத்திரமாகிய சிதம்பரம் என்னுந்தலம் ஒன்றுளது அத்தலம் உம்மால் இன்னுந் திருப்பணி முதலிய காரூகிகள் நடக்க வேண்டியிருப்பதால், அங்கேபோய்ச்சேருமென்று கட்டளையிட்டனர் சிஷ்யர். சுவாமீ அடியேன் குருதரிசனம்செய்துகொண்டு, இவ்விடம் குருபாதம் சேர்வனே யல்லாமல், வேவறுருஸ்தலத்திற்குப் போவதில்லை என்றும், பின்னும் அடியேன் நித்தியம் குருதரிசன மில்லாமல் இருப்பதில்லை என்றுங் கூறினர் குகை நமச்சிவாயர் நீர் சிதம்பரஞ்போய் கனகச

பையை தரிசனம்செய், அங்கே நம்மைப்போல் தரிசனங் கொடுத்தாலிரும், அல்லாவிடில் இவ்விடம் வந்து விடும் என்றுசொல்ல; சிஷ்யர் நல்லபுத்திதந்தீர் என்று குருவுக் குத் தோத்திரஞ்செய்த விபரம்.

அறுசீர்டியாசிரியவிருத்தம்.

காக்காலே கியானத்தாலே மனமகிழ் கிருபையாலே
நோக்காலே பரிசத்தாலே நுண்ணிய பிதவி தீர்க்கு
தாக்கான நமசிவாய சலக்கமெய் யாடுகின்ற
நாற்காலி காலதாஞ ஞன்முத்தி பெறலுமாமே.

என் றிந்தப்பிரகாரம் அடிமைக் கிரமமாய்ப் பத்துபா டல் தோத்திரம் செய்தனர். "நடக்கலாம" என்று குரு வாக்கு வந்தது.

உடனே குருநமச்சிவாயர் தனியராய் சாயங்காலம் புறப்பட்டுக் கிழக்குநோக்கிக் காதவழிவந்தார். இருட்டிப் போயிற்று; அவ்விடத்தில் ஒரு இடம்பார்த்து ஓர்விருக்ஷத்தின்கீழ் கிஷ்டையி லிருந்தார். ஒரு ஜாமத்திற்குமேற் பசிப்பிணியால் நொந்து அப்போது உண்ணுமுலையம்மை யாரை நோக்கி வெண்பா இயற்றினர்.

நேரிசை வெண்பா.

அண்ணு மலையா ரகத்துக் கினியாளே
யுண்ணு முலையே யுமையாளே—நண்ணு
கினேதோறும் போற்றிசெய கின்னடிய ருண்ண
மனேதோறுஞ் சோறுகொண்டு வா.

இவ்வெண்பா இயற்றிய சமயத்தில், அண்ணுமலையா ருக்குச்சர்க்கரைப்பொங்கல்செய்து, பொற்றும்பாளத்தில் வைத்து வேதித்துக் கோவிலிலே வைத்துத் திருக்காப் பிட்டு அர்ச்சகர் முதலியோர் மறந்துபோய் அவரவர் வீடு வந்து சேர்ந்தார்கள் பின்பு அதையறிந்த உண்ணுமுலைத்

தாயார் கொண்டுவந்து குருநமச்சிவாய மூர்த்திக்குக் கொடுத்துவிட்டுக் கோயிலுக்குட் போய்விட்டார். விடிந்தபின் அர்ச்சகர் முதலானவர்கள் கோவிலுக்குவந்து சுதவைத்திறந்து பொற்றும்பாளத்தைப் பார்த்தார்கள் பொற்றும்பாளம் எங்குங்காணும்! யாரோ கள்வன்வந்துகொண்டுபோய்விட்டானென்று கோவிற்குருக்கள் முதலானோரும், பட்டினத்திலுள்ளவர்களும், இஃதென்ன அதிசயமோ! தெரியவில்லையென்று அவரவர் ஆலோசனை செய்ததில், இருபது நாழிகை மட்டும் பூசையில்லாமல் இருந்தது. அப்போது ஒரு பிராமணப்பிள்ளையின்மீது ஆவேசம்வந்து குருநமச்சிவாயமூர்த்தி சிதம்பர தலத்துக்குப்போகின்ற வழியிலே ஆலவிருக்ஷத்தின்கீழே இருக்கிறார். அவருக்கு அமுதுகொண்டுபோய் அம்மையார் கொடுத்தார் அங்கே தாம்பாளங் கிடக்கிறது. எடுத்துக்கொண்டு வாருங்களென்று சொன்னர். அதைக்கேட்டு ஆச்சரியமுற்று அணியண்ணுமலையாரையும் உண்ணுமுலையம்மையாரையுந்தோத்திரஞ் செய்து அதற்குமேல் குருக்கள் முதலிய யாவரும் அவ்விடஞ்சென்று தாம்பாளத்தைக்கண்டு எடுத்துக்கொண்டு அருணாசலம்பதிக்கு வந்துவிட்டார்கள்.

பிறகு மறுநாளருணோதயத்தில் குருநமச்சிவாயமூர்த்தியெழுந்து நித்தியகடனை முடித்துக்குருவைத்துதிசெய்து கிழக்குமேற்காகிவரும் வழியில் இருடிவந்தனம் என்றொரு திவ்யஸ்தலத்தைக் கண்டனர். அத்தலத்தில் அம்மையாரும் சுவாமியும் அர்த்தபாகம் பிரியாமலிருக்கிறது. முனிவர்களுக் கரசளுகிய அகத்தியமகாமுனிவரால் பூசிக்கப்பட்டது அங்கு ஐயாயிரங்கொண்டான் என்றோர் திவ்வியதீர்த்தமுமுண்டு அதில் ஸ்நானம்பண்ணிப் பூசைமுடித்துத் திரிகரண சுத்தியுடன் சுவாமியைத்துதித்துத் தரி

சனஞ்செய்து கொண்டபின்னர் தீர்த்தக்கரையில்நிஷ்டை யிலிருக்கும்போது பசிதோய்வந்தணுக, அப்போதியற்றிய

நேரிசை வெண்பா.

தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியி
னீயிருக்க யான்றளர னீதியோ—வேயிருக்குந்
தோளியே விண்ணோர் துதிக்குந் திருமுத்து
வாளியே சோறு கொண்டுவா.

இவ்வாறு சொன்னமாத்திரத்தில் அம்மையார் செவியில் அம்முறைகேட்ட வளவில்வந்து எண்ணப்பா? நான் அர்த்தபாகம் பிரியாமலிருக்கவும் நீ பிரித்துப்பாடினது சரியா? இப்போது உன்வாக்கிலேலே சேர்த்துப் பாடவேண்டுமென்றுகூற, அவ்வாறே குருநமச்சிவாய மூர்த்தி சேர்த்துப்பாடிய—

நேரிசை வெண்பா.

மின்னும் படிவந்த மேககளத் தீசருடன்
மன்னுந் திருமுத்து வாளியே—பொன்னின்
கலையாளே தாயேயென் கன்மனத்தே நின்ற
மலையாளே சோறு கொண்டு வா.

என்று இவ்வெண்பாவைச் சொன்னவுடனே, அம்மையார் அமுதுகொண்டுவந்து கொடுத்தாள். அதையுட்கொண்டு அங்குநின்று புறப்பட்டு விருத்தசைலம்வந்து மணிமுத்தாநதியிலே ஸ்நானஞ்செய்து பழமலை நாதரையும் பெரியநாயகியம்மையாரையும்தரிசித்துஒருகுளக்கரையில நிஷ்டையிலிருக்கும்போது பசிவந்தது, அப்போது சொல்லிய:—

நேரிசை வெண்பா.

நன்றிபுனை யும்பெரிய நாயகியை னுங்கிழத்தி
யென்றுஞ் சிவன்பா லிடக்கிழத்தி—நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறு கொண்டு வா.

இவ்வெண்பாவைச் சொன்னவுடனே அம்மையார் தண்டுன்றிக்கொண்டு விருத்தாம்பிகையாய் வந்து குருநமச்சிவாய மூர்த்தியைப்பார்த்து என்னப்பா! உன்னுடையவாக்கிலேலே என்னைக் கிழத்திகிழத்தி என்று பாடுதல் நலமாகிழவிக்கு நடக்கவியலுமா! ஜலமெடுக்கத்தள்ளுமா! அழுதுகொண்டுவரமுடியுமா! என்றுசொல்ல, குருநமச்சிவாய மூர்த்தி அம்மா! பாலகாயிற் பாலாம்பிகை, இதுவிருத்தகாசி, நீரும் பெரியராயகி, உம்முடைய சுவாமியும் பழமலைநாதர், அதற்காக நான் அப்படிச்சொன்னேனென்று சொன்னர். அம்மையார் உன்னுடைய வாக்கிலேலே இளமையாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க. குருநமசிவாயர் இரண்டு அம்மையார் ஆகிறதே என்றுசொல்ல, அம்மையார் ஆஹல் ஆகட்டும், இளமையாய்ச் சொல்லவேண்டுமென்று சொன்னர். அதற்குமேற்சொன்ன:—

நேரிசை வெண்பா.

மூத்தநதி சூழ்முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பசுத்தாளே—யத்த
ரிடத்தாளே மூவா முலேமே லேறுர
வடத்தாளே சோறு விகாண்டு வா.

இவ்வெண்பாவைச் சொன்னவுடனே, அம்மையார் வாலாம்பிகையாய்ச் சோறுகொண்டு வந்து கொடுத்தார். அதை உட்கொண்டு அதற்குமேல் நடந்து புவனகிரிக்குவந்து நாலுகோபுரமும் தரிசனைசெய்து சொல்லிய:—

நேரிசை வெண்பா.

கோபுரங்க ணான்கினையுங் கண்டமட்டிற் குற்றமெலாந்
தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே—நூபுரங்க
ளார்க்கின்ற செஞ்சரண வம்பலவா நின்பாதம்
பார்க்கின்றார்க் கென்றேனு பலன்.

இவ்வெண்பாக் கூறிக்கொண்டே சிதம்பரம் வந்து கோவிலிலேபோய்ச் சிவகங்காஸ்நானஞ்செய்துசொல்லியது:

நேரிசை வெண்பா.

கண்டமட்டிற் கண்டவினை காதம்போங் கையிலள்ளிக்
கொண்டமட்டிற் கொண்டவினைகொள்ளைபோம்—வண்டமிழ்சேர்
வாயார வேபுகழும் வண்ணச் சிவகாமித்
தாயார் திருமஞ்சனம்.

இவ்வெண்பா சொன்னவுடனே கனகசபைக்குப்போய் ஸ்வாமிதரிசனஞ் செய்யும்போது, சபாநாதர் மலையின் பேரிலிருந்த குகைநமச்சிவாயரைப்போலவேதரிசனங்கொடுத்தார்; அப்போது தோத்திரஞ்செய்தது:—

ஏழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவணு மலையிற் குகைநமச் சிவாய
தேசிக வடிவமா யிருந்து
கரவணு மடியேன் சென்னிமே லுனது
கழலினை வைத்தவா றுணரேன்
விரகனு ரியரைப் புதல்வரைப் பொருளே
வேண்டிய வேண்டிய தனைத்தும்
பரவினர்ப் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
பலவனே பரமராசியனே.

என்று இந்தப்படி நூறுபாடல் ஒருநாழிகையில் நின்றபடியேபாடித் தோத்திரஞ்செய்துகொண்டு அதற்குமேல் ஒரு அறையில் யோகநிஷ்டையி லிருந்தனர்; அப்போது தில்லைமூவாயிரவரிலே மூன்றுபேர் குருக்கள்மார் பல்லக்கு ஏறுகிறவர்கள். அவர்கள்பேர் சிவமுத்தர், ஜடாமுத்தர், மகாமுத்தர், அம்மூவரிடம் சபாநாயகர் சென்று திருவண்ணுமலையிலிருந்து, ஒருமகாபெரியவர் வந்திருக்கின்றனர். அவர் யோகத்திலே அதிகமாயிருப்பவர் அவருக்குத் தனி

த்து இடங்கொடுக்கவேணும். அவராலே நமக்கு அநேகதி ருப்பணிகளாகக் காத்திருக்கின்றன. அதற்கெங்கே இடம் என்றுல்நம்முடைய கோவிலுக்குவடபுறத்தின் எல்லைக்கப் புறம்இடமிருக்கிறது அங்கேநாம்போய் இரண்டுதரம் பா தம்வைத்திருக்கிறோம் அஃது எதற்காகவெனில், மாணி க்கவாசகருக்குத் திருவாசகம் எழுதுவதற்காகவும், உபம ன்னியருக்குத் திருப்பாற்கடல் அழைப்பித்துக் கொடுப்ப தற்காகவும் போயிருந்தோம். அவ்விடத்தில்இவரைக்கொ ண்டுபோய் விடுங்களென்று வாக்களித்தனர். அத்தப்படி யேகுருக்கள் மூவரும் குருநமச்சிவாய மூர்த்தியைக்கொ ண்டுபோய் அவ்விடத்திலிருக்கச்செய்து, கோவிலுக்குவந் துவிட்டார்கள். அதற்குமேல் நிஷ்டையிலிருக்கும்போது பசிவந்தது. அப்போது சொல்லிய:—

வெண்பா.

ஊன்பயினுங் காய மூலராம லுன்றனது
வான்பயிலும் பொன்னடியைவாழ்த்துவேன்—நேன்பயிலுஞ்
சொல்லிய னல்லார் துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறு கொண்டு வா.

இவ்வெண்பாவைச்சொன்னவுடனே, சிவகாமியம்மை யார் அமுதுகொண்டுவந்து சொன்ன:—

நேரிசை வெண்பா.

பிராட்டியார் திருவாக்கு.

கொண்டுவந்தேன் சோறு குசைநமச்சி வாயரது
தொண்டடியார் சுணிக்கவே—பண்டுகந்த
பேய்ச்சிமுலை யுண்ட பெருமா னுடன்பிதந்த
நாச்சி சிவகாமி நான்.

இவ்வாறு அம்மையார் சொல்லி நித்தியமும் அன்னங் கொண்டுவந்து கொடுக்கக் குருநமச்சிவாயமூர்த்தி யோக த்திலிருந்து வந்தனர்

இப்படி இருக்க, வருவார் போவார் அநேகர்பார்த்து மகாபெரியவரென்று பணங்களை எதிரில் வைத்துவிட்டுப் போவார்கள், அவை அதிகமாய் குவிந்துகிடக்க, அவைக ளைகுருநமச்சிவாயர் பார்த்து, இது ஆட்கொல்லி, இவ்வி டம்வருவானேனென்று அந்நேரம் யார்முன்னே நிற்கிறார்களோ அவர்களை வாரிக்கொண்டுபோகக்கட்டளையிட அவரவர்கள் வாரிக்கொண்டு போவார்கள். அபபடி நடத்து வதைத்தில்லை மூவாயிரவர் பார்த்து, இப்படி வீணாக அநேகதரவியம் போகிறதென்று யோசித்துக் குருநமச்சிவா யமூர்த்தியினிடத்திற்போய், தேவரீர் இவ்விடத்திலிருக் கிறபடியினால் கண்டபேர் திரவியங்களை வாரிக்கொண்டு போகிறார்கள், கோவிலுக்குள்ளே வந்தால், அநேகதிருப்ப ணிகள்நடக்கும், அநேககட்டளைகள் நடந்துவரும். உள் ளேவரவேண்டுமென்று சொன்னார்கள். நாம் சபாநாயகர் உத்தரவின்மேல் வந்துவிட்டோம், நமக்கங்கேவரவேண்டி யதென்ன விருக்கிறது என்றுசொல்ல இவர்நாம் அழைத் தால்வரமாட்டாரென்று இவர்களிற் சிறந்த மூவரும் சபா நாயகரிடஞ்சென்று குருநமச்சிவாயமூர்த்தி கோயிலுக்கு ள்ளேவந்தால், அநேகதிருப்பணிகள் அநேககட்டளைகள் நடந்துவருமென்று சொன்னார்கள் சபாநாதர் நல்லது உ ங்களுக்கு வரமாட்டார், நாமேபோய் அழைத்துவருகிறே மென்று ஜங்கமரூப விருத்தராய்த் தண்டுகமண்டலம பிடி த்துக்கொண்டு, திருப்பாற்கடலுக்கு வந்து. குருநமச்சிவா யமூர்த்தி நிஷ்டையிலிருக்க எதிரேநின்றார், குருநமச்சிவா யர் நிஷ்டைநீங்கிப் பார்த்தார், பெரியவராய் எதிரில் நிற்ப தைக்கண்ணுற்று சரணமூர்த்தியென்று சொன்னார், வந்த வரும்சரணாத்தியென்றார். ஐயா! நீங்களிருப்பது எந்தஊ ரென்றுகேட்டார். நாமே இருப்பது தில்லைவனமென்றார்,

உம்முடைய பெயரென்ன வென்றுகேட்டார். நம்முடைய பெயர் அம்பலத்தாடுவார் என்றுசொன்னார். இவ்விடத்தில்வந்தகாரியம் என்னவென்றுகேட்டார் அன்னந் தேவையாயிருக்கிறது. இவ்வூர் முழுதுஞ் சென்றோம். இங்குப் போனால் அகப்படுமென்று சொன்னார்கள் வந்தேனென்று சொன்னார். அதற்குக் குருநமச்சிவாயமூர்த்தி நமக்குதேவிகொணர்ந்து அன்னங்கொடுக்கிறது நம்மிடத்தில் பாத்திரங்கூட இல்லையென்று சொன்னார், சுவாமி? இதோ பாத்திரமிருக்கிறதென்று சந்திரகாந்தப்பாத்திரமாய்வைத்தார். குருநமச்சிவாயர் தேவியைநோக்கினார், அன்னம் வந்தது இதைக்கொள்ளுமென்றார். அம்பலதாடுவார் நாம்கொள்ளுகிறதில்லையென்று சொன்னார். குருநமச்சிவாயர் எதற்காகவென்றார், இந்தப்பிரகாரம் நித்தியம் அன்னங்கொடுத்தால் கொள்ளுவோம் இல்லாவிடில் கொள்ளுகிறதில்லையென்றார். நீரோமிகவும் பெரியவராய் விருத்தராய் இருக்கின்றீர். நாளைகாசியாராமேசுவரமோ, உமக்கெப்படி நித்தியம் அன்னங்கொடுக்கிறோமென்று நாம் சொல்லுகிறதுஎன்றார் உமக்கு முன்னே நடந்தால் அன்னங்கொடும் பின்னல்இருந்தால் அன்னம் வேண்டாமென்றுசொன்னார் நீர் முனனேநின்றால் அன்னங் கொடுக்கிறேன் அல்லாவிடிற் கூடாதெனறார் சுவாமி நாம் முன்னிற்கிறோமென்றார் அதற்குமேல் குருநமச்சிவாயர் சுவாமியை அழுது கொளளுமெனறார் விபூதிகோவிலும், உருத்திராக்கமும் தொட்டுகொடுத்தால் கொள்வோமென்றார், நீர் முன்னின்றால்கொடுக்கிறேனென்றார். நல்லது முன்னிற்கிறோம் என்றார் அப்படியே படைக்கிறோம் என்றார். அழுதைக்கொள்ளும்பாவனையாய்க் கொள்ளும்போது தாகத்துக்குத்தீர்த்தம்வேண்டுமென்றார். அதோ திருப்பாற்கடலிருக்கிறது

ஜலம் கொள்ளுமென்றார். அப்படியே கொள்ளப்போய்ம றைந்து கோவிலுக்குப்போய், தில்லைமூவாயிரவரை யழைத்துநாம்போய்த் திட்டஞ்செய்து வந்திருக்கிறோம். நீங்களனைவருங்கூடி நமக்குண்டான விருதுகளையும் நாம் ஏறுகிறசிவிகையையும் எடுத்துக்கொண்டுபோய், அவரை அச்சிவிகையிலேற்றி விருதுகளுடன் வீதிப்பிரகாரஞ்செய்து நம்மிடத்திற்குக் கொண்டுவந்து விடுங்களென்று சொன்னார். அப்படியே தில்லைமூவாயிரவர் எடுத்துக்கொண்டுபோய் இரண்டுமேலாவது வரலாமே? இந்தப்பல்லக்கின்பேரில்ஏறவேண்டுமென்று சொன்னார்கள் நமக்கேன்பல்லக்கு, தேவையில்லை யென்றுசொன்னார், இதுபல்லக்கு அல்ல சூன்யசிங்காசனம் என்றார்கள், கூடாதுயென்றார் அதற்கு மேல்நேற்று மத்தியானம் எங்கள் சுவாமி தங்களிடத்திற்குவந்தாரே, நீங்களென்ன சொன்னீர்கள் என்றார்கள், குருநமச்சிவாயர் நிஷ்டையிலே பார்த்தார் சபாபதிதரிசனமாயிற்று இவ்விடத்திற்கும் வந்து அங்கும்போய்ச்சொன்னாரென்று அப்போதுசொன்ன:—

நேரிசை வெண்பா.

சங்கமரா யம்பலவர் தாமே யெழுந்தருளி
யிக்கெமக்குப் பிச்சை யிடுவென்ன—வக்கமுது
திட்டமுட னமக்கு நீதினமு மேசார்வு
கட்டளையுண் டாக்குகென்றார் காண்.

இவ்விதமாய்ச் சொல்லிக்கொண்டே பல்லக்கிலேறி வீதிப்பிரகாரம் போகும்போது சொன்ன:—

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அல்லலாகிய வருவினை தனையறுத் தடியினை தருவாரோ
மல்லனீடிய புவியின்மே லின்னமுன் வரும்பிறப் பறுப்பாரோ
கல்லமாமுலை மாதுமை நாயகர் யாளித நவின் றேத்துந்
தில்லைநாயக ரம்பலத் தாடுவர் திருவுளந் தெரியாதே.

இவ்வாறுசொல்லிக்கொண்டுகோவிலிலேபோய்க்கொ டிக்கம்பத்தருகே பல்லக்கிறக்கி பஞ்சாக்கரமதில் மட்டும் பாதக்குறடு இட்டுக்கொண்டுபோய, அதற்குமேல் கனகச பையிற்சென்று சுவாமி தரிசனம்செய்து, தில்லை மூவாயிர வரைப்பார்த்து இப்போது நாம் என்ன கட்டளை கடப்பி விப்போமென்று யோசணைசெய்ய சபாநாயகர் அசரீரி வா க்கியமாய்ச் சர்வஜனத்துக்கும் சர்வகட்டளையென்றுதொ டும் என்று வாக்கியம் வந்தது நாம் சர்வகட்டளை யென்று தொடுவதற்கு இப்போது இவ்வளவு அன்பர்களும் பார்த் திருக்கும்போது சபாநாயகர்பிச்சைகொடுத்தால் எப்போ தும் நடக்குமென்று பொற்றும்பாளத்தை ஏந்திசொல்லிய

நேரிசை வெண்பா.

காதலுடன் சர்வ கட்டளையா யுன்னுடைய
பாதமலர்ப் பூசை பணணுவே—மேயாது
குருவீர யெனையாண்டு கொண்டவனே பிச்சை
தருவாய் சிதம்பர நாதா.

இந்தப்பிரகாரம் சொன்னவுடனே, சபாநாயகர் முன் ஆகாசமார்க்கமாய்ச் சகலஜனமும்பார்க்கத்தக்கதாக ஒரு தங்கக்காசு விழுந்தது. சுவாமியே பிசைஷகொடுத்தாரென்று சகலஜனமும் பொன் முத்து முதலியன அநேகமாய்ப் போட்டார்கள் குருநமச்சிவாயர் இதைத்தில்லை மூவாயிர வர் கையிற்கொடுத்துச்சிறிதுநடந்தார், சற்றுத்தாங்கிற்று ஏதுதாங்குகிறதென்றுமூவாயிரவரைக்கேட்டார், அது எ ங்களுக்குத தெரியுமாவென்று சொன்னார்கள் குருநமச்சி வாயர் தியானத்திலே பார்த்துச் சுவாமிக்கு ஆபரணங்களி ருந்ததுண்டா வென்று கேட்டார். ஆபரணம் ஏதென்று சொல்லி அதற்குமேல் ஆலோசணைசெய்து பதஞ்சலி வியா க்ரபாதர் நடனம்பார்க்க பாதச்சிலம்பும், கிண்கிணியும் இ

ருந்தாலுண்டென்பர், அதுநாங்களறிவோம்;மற்றப்படி ஆப
ரணங்களெல்லாம் நந்தகில்லையென்றுசொன்னார்கள் அதற்குமேல்
குருநமச்சிவாயர் சிற்பிகளையழைப்பித்துப் பாதச்சிலம்பும்
கிண்கிணியும்வீரகண்டாமணியும் செய்யவேண்டும் என்ன
வேண்டுமென்று கேட்க, சிற்பர் அதற்கு ஐம்பதினாயிரம்
பொன்செல்லுமென்று சொன்னர். வந்திருக்கிற திரவியத்
தையெடுத்துக் கொடுத்துத் திருவாபாணஞ் செய்யச்சொ
ல்லி யனுப்பிவைத்து அறைக்கு எழுந்தருளியிருக்க, தில்
லைமூவாயிரவர் கூடிக்கொண்டு நாமனைவரும் இவராலே பி
ழைக்கலாமென்றிருந்தோமே! திரவியத்தைக் கொடுத்துச்
சிலம்பும்கிண்கிணியும் இயற்றச்சொன்னீரே! அதுதரித்தா
ல்நடனம் செய்யவேண்டுமே ! இவருக்கு சுவாமி நடனம்
செய்யப்போகிறாரோ என்றுபரிகாசஞ் செய்யத் தலைபட்
டார்கள். அந்தச்சொல் இவர்செவியிலேவிழுந்துகொண்டி
ருந்தது இப்படியிருக்க, நாற்பதாம்நாள் சிலம்பும் கிண்கி
ணியும் செய்து வந்தன. மூவாயிரவரையும் மற்ற யாவரை
யும் அழைப்பித்து இப்போது சபாநாயகர் நடனம்பண்ணி
னால் அனைவரும் பார்ப்பீர்களாவென்றுகேட்டார். நாங்கள்
எத்தனை புண்ணியஞ்செய்தோமோ! எங்கள் மூவேழ்வமிசு
மும் கரையேறிப் போகுமென்று சொன்னர்கள். குருநமச்
சிவாயர் ஆனால் ஒருவேளை காற்றுவந்து அசைந்தாரென்று
சொல்வார்கள். பலகணி வாயில்களெல்லாம் அடைக்கவே
ண்டுமென்று திட்டஞ் செய்து. சிலம்பும்கிண்கிணியும் சபா
நாயகர் பாதத்திலே தரிக்கச்சொல்லித் தாம் நடனதரிச
னம் விரும்பிச்சொன்ன:—

நேரிசை வெண்பா.

அம்பலவா வோர்கா லாடினற் ரூழ்வாமோ
வும்பெரலாற் கண்டதெனக் கொப்பாமோ—சம்புவே

வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்குந் தித்தியென
வொத்துப் பதஞ்சலிக்கு மோ.

இந்தப்பிரகாரம் சொன்னவுடனே, கலகலென நடன மாயிற்று திருநடனமாக குருநமச்சிவாயமூர்த்திசொன்ன

விருத்தம்.

மிதித்தபொற் பதமு மெடுத்தபா தார
வித்தமுஞ் சந்தவெம் புலித்தோல்
விளங்கிய விடையு மூர்தியுஞ் சுழிய
மேனிவெண் ணீற்றின வொளியும்
கதித்தநற் கனக மேருநான் கூன்ய
கனச்சதுர்ப் புயங்களுங் காள
கண்டமு முகமுஞ் சென்னியும் சரியே
கண்டுகண் களிக்குநா ளுளதோ
துதித்துக் கீதங்கள் பலர்புகழ்ந் தேத்தத்
தும்புரு நாரதர் பாடத்
துங்கமா மாயன் மத்தள மிடைமேற்
சுமந்துதொந் தோமென மூழக்கத்
திதித்திதி தகுவென் றம்பிகை கௌரி
திகழ்திருக் தாளமொத் திசைப்பத்
தில்லைபம் பலத்தே திருநடனம் புரியுந்
தேவனே சிதம்பரனே சுரனே.

என்று குருநமச்சிவாயமூர்த்தி தோத்திரம்செய்யவே சபாபதியார் நடனஞ்செய்யத் தொடங்கினர். சர்வரும் கீழேவிழுந்து நமஸ்கரித்து அசைவற்றிருந்தார்கள், தில்லை மூவாயிரவரில் மூன்றுபேர் கீழேவிழுந்து கண்ணைவிழித்துக்கொண்டு வெகுநாழிகைநடனமாடுகிறதேஆடுகிறவர்குருநமச்சிவாயமூர்த்தியும் அசைவற்றுடுகிறவர் அம்பலவாணரும், உங்கள்மகத்துவம் தெரியவராது நடனத்தைநிறுத்தவேண்டுமென்று சொன்னார்கள் குருநமச்சிவாயர் ஆடச்

சொல்லுகிறதுநாமா!கிறுத்தச்சொல்லுகிறதுநாமா! என்று சொன்னர். சுவாமீ! தாளம் போடுகிறவர்கள் நிற்கவேண்டுமென்றுசொன்னர்கள் அப்போது குருநமச்சிவாயமூர்த்தி சொன்ன:—

நேரிசை வெண்பா.

தக்கியகா ஞேகாதோ துட்டன் மூயலகன்மேற்
ரூக்கியகா ரூனுஞ் சலியாதோ—வாக்கா
தனவரதா தில்லைத் திருத்தாண்டவா நீ
யனவரதங் கூத்தாடி ஞல்.

இவ்வெண்பாச் சொல்லியவுடனே, மிகவும் நடனமாயிற்று. ஆகவே தில்லைமூவாயிரவர்கூடிச் சபாபதியின்மீது குருநமச்சிவாயமூர்த்தி தோத்திரம் செய்கிறூரே நாம் அவர்மீதுதோத்திரஞ் செய்வோமென்று தோத்திரம்செய்த தில்லைமூவாயிரவர்.

டூ ட ல்.

வேடநேச்சியின் மிகவிரும்பும் வேளவன்றன் மேனிபொன்ற
வாடநித்தங் காளியொடா டம்பலவர் சந்நிதிக்குக்
கோடிலக்கங் கவிபாடுங் குருநமச்சி வாயரருட்
பாடன்மெச்சி யம்பலவர் பாதகச்சை யாடியதே.

இங்ஙனம் சொன்னவுடனே குருநமச்சிவாய மூர்த்தி நடனம் நிற்கும்படி சொல்லிய:—

நேரிசை வெண்பா.

நருகத்தா தாதகியென் ஞடகத்திற் கேற்ற
தருகித்தா ஞஞ்சிலம்புந் தாஞ—மருதப்பா
பாரே யினியமையும் பொன்னம் பலத்தாடி
வாரே திருத் தாண்டவம்.

இவ்விதமாய்ச் சொன்னவுடனே நடனம்நின்றது. அதற்குமேல்தில்லைமூவாயிரவர்கூடித் தேவர்பரிபூரணத்தையடைந் திலிங்காகாரமாஞல் நாங்கள் பூசிக்கிறோமென்று சொல்லிக்கொண்டார்கள் அப்படியே செய்யலாமென்று சொல்லி அநேகந்திருப்பணிகள்நடத்திவந்தனர். பின்னும் கட்டளைவிஸ்தாரமாய் நடக்கத்தக்கதாக எஉபேர் தம்பிராண்களுக்குப் பல்லக்குபிருதும் மற்றும் வேண்டியவைகளையுங்கொடுத்துத்தேசமெங்கும்சஞ்சாரஞ்செய்வித்தனர்

அதற்குமேல் குருநமசிவாயமூர்த்தி அநேககாலமிருந்து திருப்பெருந் துறையிலே இலிங்காகாரம் ஆயினர்.

வெண்பா.

வந்தீஸ் வரவருடம் வைகாசி தேதிநவம்
இந்துகா ஞழிகை யேழைரைமேல்—வந்தகுரு
தாளு மருணகிரி தாணுசிவ லிங்கத்துள்
ஆளுன் நமசிவா யன்.

இதற்குமேல் குருநமசிவாயமூர்த்தி மாபில் இத்தனைப்பட்டமென்றுசொல்லுவதற்குக் காலாந்தரங்களிலேஆதாரவுகள்கைசோர்ந்துபோயிருக்கின்றன. அதற்குமேல்குருநமசிவாயமூர்த்தி பட்டத்திற்கு வந்தவர்க் காலத்தில் சபாநாயகர் சர்வ கட்டளைக்கு ஸ்வஸ்தஸ்ரீசாலிவாகன சகாப்தம் கசுகூதி-ல் யுவஷ்ஷைமீ உஉ புவனேக வீரணபட்டணம் நாட்டாரனைவரும் காலாட்கள் தோழரும் சிதம்பரேஸ்வரர் சர்வகட்டளைக்குக் குருநமசிவாயமூர்த்திபணிவிடைக்கு அரசூர்ப்பத்தில் இளங்கம்பூர் நான்கெல்லையுட்படச்சேர்ந்தபடியிஞலே சந்திராதித்தர் உள்ளவரைக்கும் சிவார்ப்பிதமாகத் தந்தது.

சிலாசாசனத்துப்பாடல் விருத்தம்.

தென்னருணை மருவுகுரு நமச்சி வாய
தேவர்சிஷ்யன் குருநமச்சி வாயன் செய்யும்

மன்னுபணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்து வாழ்க
இன்னிலமெ லாந்தழைக்க வரசூர்ப்பத்து
இலிங்கபுர சாசனக்கல் லெழுதி நாட்டி
நன்னெறிசேர் காலாட்கள் தோழன் சின்ன
நல்லநய னுன்கொடுத்து நடத்தி னானே.

பின்னும் அரியலூர் சீமையில் ஒப்பில்லாத மழவ ராயர்கட்டளை உசகிராமம்விட்டு நடந்தது. அம்பலங்கட்டளை அரைக்கட்டளை என்றுபேர். அனந்தகிரி சீமையில் சொக்கம்பட்டு உடையார் சீமையில் பிச்சனூர், மாளூர் இரண்டுகிராமம் விட்டது வீரகநல்லூர் என்று இரண்டுகிராமம்நடப்பித்தது. கள்ளடகுருச்சி சீமையில் பாளையப்பட்டுசேலம் சேஷாதரப்பிள்ளை குருநமசிவாயபுரம் என்று ஒருகிராமம் நடப்பித்து மங்கலூர் சீமையிற் ஆதிபுரம்மாளிகைமேடு என்று இரண்டு கிராமம்நடந்தது வேட்டவலம் பண்டாரத்தார் கரடிபூமாரி என்று இரண்டுகிராமம்நடந்தது இவைகளெல்லாம் சபாபதிசர்வகட்டளைக்கும்குருநமசிவாயமூர்த்தி மடத்திற்கும்நடந்துவந்தன உடையார்பாளையம் பண்டாரத்தார் தென்னந் தோப்புக்கு ரூபாசுஂ கொடுத்துச் சிதம்பரத்தில் சுவாமி சர்வகட்டளைக்குவாங்கிவிட்டது இவைகளெல்லாம் அனேகமாய் முன்னிலைநடந்தது, கலிகாலக்கொடுமையால் வரவர நின்றுபோயிருக்கின்றன.

அந்தக்கிராமத்திலிருக்கிற விபரம் சகாப்தம்-சகசுஂடு ஹேமுதல் குருநமசிவாயமூர்த்தி பட்டம் கள-க்கு சகாப்தம் கள உள ஹேத்துக்குச்சரியான குரோதன ஹே வரை வந்த பட்டத்துக்குள்ளாக உடையார் பாளையத்திலிருக்கிறபண்டாரத்தார் அனேக வாகனமுதலானதும் தருமமும்நடப்பித்தார். இந்தப்பிரகாரம் குருநமசிவாயமூர்த்தி

தேசசஞ்சார யாத்திரைசெய்து சபாநாயகர்சர்வகட்டளை க்கும் மடதருமத்துக்கும் பிட்சை நடத்திவந்தது.

உடையார் பாளையம் சீமையில் ஜெயங்கொண்டசோ ழபுரத்தில் சிங்காரத்தோப்பு மடம்தீர்த்தம் உண்டாக்கிக் கொடுத்து, உடையார் பாளையம் கஸ்பாவில் பேரணி சுல் வரர்கோயிலும் திருக்குமடமும் தீர்த்தமும் உண்டாக்கியி ருக்கின்றன.

இளங்கம்பூர்முன்னுலே சர்வமானிய கிராமம், இப் போதுசர்க்காரிலேகழிந்துவருகிறதுசாலிவாகனசகாப்தம் ககஙூ-க்குமேல் செல்லும் யுவஸ்ரீதை மீ உ0உ இளங்கம் பூர்சபாநாயகர் சர்வகட்டளைக்குச் சாதனக்கல் எழுதின துகாஞ்சீபுரத்தி லிருந்துவந்துசின்ன நல்லகாளாக்கத்தோ ள்பட்டத்தார் உடையதனு.

உ-வது, பட்டம் நல்லநாயகர் பண்டாரத்தார்சபாநா தருக்கு வெள்ளியானே வெள்ளி ரிஷபம் பின்னுஞ்சிலதிரு ப்பணி செய்துவைத்தார்.

ங-வது, அவர்புத்திரர் நல்லநாயக பண்டாரத்தார் ச பாநாயகருக்கு பொன்குதிரையும் அநேக அம்மனகளும் உடையார் பாளையம் சீமையில் மானேரி என்னுங் கிராம மும் நடப்பித்தனர்.

சாலிவாகன சகாப்தம்-கஙகூடு-க்குச் செல்லாநின்ற ஜயஸ்ரீதை மீ உஉ சின்னநல்லநாயக பண்டாரத்தார் புத்திரர் நல்லநாயக பண்டாரத்தார் அவர்புத்திரர் சின்ன நாயக பண்டாரத்தார். பாளையமரண்மனையும் ஆலயமும் மடமும்மற்றுமுண்டான தருமங்களெல்லாஞ் செய்தனர். அவர்காலத்தில் சாலிவாகன சகாப்தம் சார்வரிஸ்ரீ மார் கழிமீ உஉ மானூர் பிச்சனூர் இந்த இரண்டு கிராம

மும்ஜயங்கொண்ட சோழபுரம் சிங்காரத்தோப்பும் செய்துவைத்தனர்.

சுவது, பெரிய நல்லநாயக பண்டாரத்தார் காலத்தி லேபூதவாகனம், மயில்வாகனம், அன்னவாகனம் செய்து உற்சவம்நடப்பித்து மடப்புரமென்னும் கிராமமும் எங்கு ம்வாங்கித் தருமங்களைச் செய்துவந்தனர்.

நுவது, சின்ன நல்லநாயக பண்டாரத்தார் காலத்தி லேசிவகாமி அம்மனுக்கு குருமங்கிலியஞ் செய்து, கட்ட ளைஅறை கட்டிவைத்து, மேல்கோபுரத்துக்கு மேற்கே பி ள்ளையார்கோயிலும் கட்டிவைத்து, திருப்பெருந்துறைகு ருநமச்சிவாயமூர்த்தி மடத்துக்கு தெற்கு சஂ0-பொன் கொடுத்துத் தென்னந்தோப்பு வாங்கிவிட்டனர்.

சுஂவது, சின்னஅம்பலநாயக பண்டாரத்தார்சிதம்பர வேலனுக்கு உ0-தளிகை நைவேத்தியஞ்செய்து குருநமசி வாயமூர்த்தி அடியார்களுக்குப் பிட்சை நடப்பித்துவந்த து. சகாப்தஹூ கருகo சர்வதாரிஹூ மார்கழிமீ உஉ

இந்த சகாப்தம் வரைக்கும் கோபுரத்தில் சாசனம் இருக்கிறது.

இவ்வாதீனம் வீரசைவமடம்.

குருநமசிவாயர் செய்த பாடல்

பரமராசியமாலை சிதம்பரவெண்பா அண்ணமலைவெண்பா.

குகைநமசிவாயர் செய்த பாடல்.

அருணகிரியந்தாதி-தனிவெண்பாமாலை.

இவ்வாதீனத்தார்க்கு நாளதுவரையில் சிதம்பர உற் சவகாலத்தில் சுவாமியுடன் பல்லக்கு பிருதுகள் நடந்து வருகின்றன.

குருநமச்சிவாயர் சரித்திரம் முற்றிற்று.

சிவமயம்

திருவண்ணாமலை

குகைநமசிவாய சுவாமிகளால் உபதேசம்பெற்ற

சிதம்பரம்-குருநமசிவாயசுவாமிகள்

அருளிச்செய்த

அண்ணாமலைவெண்பா.

காப்பு

மன்னுதிரு வண்ணாமலைமாலை நாயடியேன்
பன்னுதமிழ் வெண்பாவிற் பாடவே—துன்னுமலர்ப்
பாதனே மூடிகத்தின் பாலேறுந் தேவகண
நாதனே நீமுன் னட

நூல்.

ஆதிநடமாடுமலையன்றிருவர் தேடுமலை
சோதிமதி யாடரவஞ் சூடுமலை—நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (க)

அன்பர் பிறப்பை யகற்றுமலை யன்பரல்லா
லன்பர் பிறப்பை வளர்க்குமலை – யன்பை
வடிக்குமலை சிங்கத்தை வந்துசிம்பு ளாகி
யடிக்குமலை யண்ணா மலை. (உ)

கூற்றை யுதைத்தமலை கோமாறன் கூடல்வைகை
யாற்றை யடைத்தமலை யாரூரன்—போற்றச்
சிறந்தமலை தீவினையேன் செய்தகுறை யெல்லா
மறந்தமலை யண்ணா மலை. (ங)

ஏழைக் கிரங்குமலை யேதது கேட்டாலும்
கோழை படாமற் கொடுக்குமலை—வேழ

முரித்தமலை யம்மைக் கொருபாக மீந்த
மருத்துமலை யண்ணு மலை. (ச)

கண்டங் கரியமலை கண்மூன் றுடையமலை
யண்டரெல்லாம் போற்றற் கரியமலை—தொண்டருக்குத்
தோற்றுமலை காஞ்சி தொழுவோ ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணு மலை. (ஞ)

அன்னமுடன் சொன்ன மனிக்குமலை யாதரிப்போ
ருன்னுவர் மெல்ல முதவுமலை—துன்னுபுகழ்
கொண்டமலை யங்கிக் கொழுந்தாகி யண்டமுற
மண்டுமலை யண்ணு மலை. (ட)

மாமா தவநமச்சி வாயன் றினமொருவெண்
பாமாலை சாத்திப் பணியுமலை—காமாதி
யென்னுமலை தான்கடந்தோ ரின்பத் திருவுளத்தே
மன்னுமலை யண்ணு மலை. (ண)

அஞ்சக் கரமா யமர்ந்தமலை யாதரிப்போர்
வஞ்சக் கருவினையை மாற்றுமலை—நெஞ்சைத்
திருத்துமலை மெய்ஞ்ஞான சித்திதருந் தெய்வ
மருத்துமலை யண்ணு மலை. (அ)

தொண்டர் வலமாகச் சூழுமலை சூழுமவர்
பண்டைவினை யெல்லாம் பறிக்குமலை—யண்ட
முருவுமலை யெந்தைகுருவோ நமச்சி வாயன்
மருவுமலை யண்ணு மலை. (கூ)

கொம்பனைய பேதைக் குறைமகளிர் வானிலுறு
மம்புலியி னேதினிளை யாடுமலை—செம்பவள
மொத்தமலைசற்குருவா யொண்கழலென்சென்னியின்மேல்
வைத்தமலை யண்ணு மலை. (கஎ)

ஞான குருநாத னமச்சிவர் யன்கருணை
யானபர ஞகியெனை யாண்டமலை—வானவர்கள்
போற்றுமலை தினினையேன் புந்திக் கவலையெல்லாம்
மாற்றுமலை யண்ணு மலை. (கக)

சரண கமலந் தனைப்புகழுந் தொண்டர்
மரண பவத்துயரம் மாறக்—கருணை
பொழியுமலை தட்டுப் புழுகுபனி நீரே
வழியுமலை யண்ணு மலை. (கஉ)

அன்பர் கருத்தி லணவாத மேவுமலை
துன்ப மகலத் துரத்துமலை—யின்பம்
விளக்குமலை செம்பொன்மக மேருவினை வில்லா
வளைக்குமலை யண்ணு மலை. (கங)

நண்பர்க் குகையி னமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய் விளையுமலை—தெண்பா
ரளந்தமலை செஞ்சுடரா யன்றிருவர் தேட
வளர்ந்தமலை யண்ணு மலை. (கச)

சீதமல ரோனெடுமா றேடுமலை யன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலிக்குமலை —மரதவர்கண்
மொய்த்தமலை யுண்ணு முலையுமையைப் பாகத்தில்
வைத்தமலை யண்ணு மலை. (கஞ)

வைத்தநிதி யோகமச்சி வாயகுரு நாடோறு
மெய்த்தமிழி னுற்புகழ்ந்து மேவுமலை—யெத்திசையு
மின்னுமலை மாதுடனே வெள்ளிமலை வீடாக
மன்னுமலை யண்ணு மலை. (கசு)

முக்கோணமாக முளைத்தமலை முண்டகன்மா
லக்கோடு நாக மணிந்தமலை—திக்கோடு

தான்னுமலை தன்னைத் துதிக்குமடி யாருளத்தின்
மன்னுமலை யண்ணு மலை. (களை)

வண்டமிழா லோதமச்சி வாயகுரு வேத்துமலை
கண்டுதொழு வார்க்கினிய காட்சிமலை—யண்டமுத
நீளுமலை போற்றி நினைக்குமடி யாருளத்தே
வாழுமலை யண்ணு மலை. (களை)

அஞ்செழுத்தாய் வேதமா யாகமமாய் நின்றமலை
விஞ்செழுத்தா யொன்றுய் விளங்குமது—நெஞ்சகத்தே
தைத்தமலை நாயேனைத் தன்னடியார் கூட்டத்தில்
வைத்தமலை யண்ணு மலை. (ககூ)

மன்னுளு மோதமச்சி வாயகுரு செந்தமிழாற்
பன்னுளு மேத்திப் பணியுமலை—யெந்நாளு
மெய்க்குமலை பொல்லா வினையேனைத் தன்னடிக்கீழ்
வைக்குமலை யண்ணு மலை. (உ0)

எந்தை குருநாத னிருக்குமலை யென்பாச
பந்தமற நோக்கிப் பரித்தமலை—சந்திரனைத்
தேய்த்தமலை நாயடியேன் சிந்திக்குஞ் சிந்தனைக்கே
வாய்த்தமலை யண்ணு மலை. (உக)

அஞ்ஞானக் கங்கு லகற்றுமலை யன்பர்க்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலை—துஞ்ஞானச்
சந்தமலை நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலை யண்ணு மலை. (உஉ)

நீற்றையணிந்தமலை நீள்சுடராய் நின்றமலை
யேற்றைப் பரியாக வேறுமலை—கூற்றை
யுதைத்தமலை யன்றரிவை யோர்சிம்பு ளாகி
வதைத்தமலை யண்ணு மலை. (உங)

ஓலமிடுந் தேவர்குழா முய்யத் திருமிடற்றி
லாலவிடந் தன்னை யடக்குமலை—நாலுமறை
யந்தமலை நாயேனை யாளக் குருவாகி
வந்தமலை யண்ணா மலை. (உச)

ஆதி நெடுமா லயன்க ணவன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை—வேத
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை யண்ணா மலை. (உடு)

வந்துலகி லோநமச்சி வாயகுரு வாயடியேன்
சிந்தை குடிகொண்டிருக்குந் தெய்வமலை—முந்தைவினை
நீக்குமலை சொல்லரிய நீள்பிறவித் துன்பமெல்லா
மாய்க்குமலை யண்ணா மலை. (உசு)

சத்திக் கொருபாகந் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை—யெத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வா ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (உள)

வால மதியை மௌலியின்மேல் வைத்தமலை
சீலமுனி வோர்கள் செறியுமலை—காலங்
கடந்தமலை சீரிவருங் காலனைக்கா லாலே
யடர்ந்தமலை யண்ணா மலை. (உஅ)

சிட்ட ரிடருஞ் சிவநீதி யில்லாத
துட்டர் சுகமுந் துடைக்குமலை—நட்டம்
பயிலுமலை யெவ்வுலகும் பாழ்படுமென் றூழ்
மயிலுமலை யண்ணா மலை. (உக)

கண்டமிருளக் கடிவிடத்தை வானவர்க்கா
வுண்டபிரா ஞகி யுதவுமலை—தொண்ட

ரிணங்குமலை வாணெரு மேணெரும் போற்றி
வணங்குமலை யண்ணு மலை. (கo)

துன்பப் பசிதீர்க்குஞ் சுத்தசிவ ஞான
வின்பப் பசுந்தே னிருக்குமலை—யன்பர்க்
கிருளுமலை வாராம லெப்போதுங் காட்சி
யருளுமலை யண்ணு மலை. (கக)

செகமருவு மைம்புலனிற் சேராமன் ஞானச்
சுகமருவ மேன்மைபுனை தொண்ட—ரகமருவுந்
தூயமலை வஞ்சகர்க்குத் தோன்றுமை லெவொளிக்கு
மாயமலை யண்ணு மலை. (கஉ)

கரத்தி லினிய கனபொருளைத் தந்துஞ்
சிரத்தி லடியிணையைச் சேர்த்தும்—பரத்து
மிகத்துமலை வாராம லென்குருவா யாண்ட
மகத்துமலை யண்ணு மலை. (கங)

பற்றி யிமையோர் பகைதெறுவான் வந்தெதிர்த்த
வெற்றி மதராஜன் வேகவே—யுற்று
விழித்தமலை தக்கனார் வேள்விதனை முன்னு
ளழித்தமலை யண்ணு மலை. (கச)

பாட றனைவிரும்பிப் பாவலர்க்கா கப்பரவை
வீடுதனக் கிருகால் மேவியே—கூட
விணக்குமலை தன்புகழை யெண்டிசைக டோறு
மணக்குமலை யண்ணு மலை. (கஞ)

கந்திக்குந் தேமாங் கனிபறித்துக் கார்க்கடவென்
மந்திக்கு நல்கி மகிழுமலை—சிந்திக்கு
மெண்ணமலை வற்றேர்க் கினியமலை யோரஞ்சு
வண்ணமலை யண்ணு மலை. (கசு

உன்னு தவம்புரியு மோகமச்சி வாயகுரு
மன்னுங் கருணைமுகில் வாழுமலை—பெண்ணம்
பெரியமலை மாலும் பிரமனுந் தேடற்
கரியமலை யண்ணா மலை. (நஎ)

வேண்டு மயன்மால் விழிமனத்துக் கெட்டாம
னீண்டு தழற்பிழம்பாய் நின்றமலை—யாண்ட
கருணைமலை யொப்புரைத்துக் காணவரி தான
வருணைமலை யண்ணா மலை. (நஅ)

வீடு முதலா விரும்பும் பொருளனைத்தும்
பாடுமடி யார்க்குப் பலிக்குமலை—நீடுபுகழ்
பூண்டமலை சற்குருவாய்ப் பொல்லாச் சிறியேனை
யாண்டமலை யண்ணா மலை. (நக)

அனைத்துலகும் போற்றுதிரு வைங்தெழுத்தை யோதித்
தனைத்தொழுது பேணுந் தவத்தோர்—நினைத்தவர
நல்குமலை யெங்நாளு நல்லோரு நன்னெறியு
மல்குமலை யண்ணா மலை. (ச0)

மானனைய கண்ணார் வசமாகி நாயடியே
னானவினைக் காட்டி லுழலாமன்—ஞானநெறி
காட்டுமலை தன்னைக் கருதுமடி யாரிடரை
வாட்டுமலை யண்ணா மலை. (சக)

பிள்ளை யறுத்துதவும் பேரா னணையுவந்து
கொள்ள வயிரவமெய்க் கோலமாய்—மெள்ள
நடந்தமலை சிம்புளாய் நாரசிங்க ரூபை
யடர்ந்தமலை யண்ணா மலை. (சஉ)

உய்யவரந் தந்தருளு மோகமச்சி வாயகுரு
வையமுழு துந்துதிக்க வாழுமலை—துய்யவரன்

தேக்குமலை நல்லோர் செறியமலை பெண்ணையா
ணுக்குமலை யண்ணு மலை. (சஙு)

உண்ணு முலையா ளொருபாக மானமலை
கண்ணு ரமுதாய காட்சிமலை—விண்ணோர்
துதிக்குமலை யன்பர் தொழுதேத்தி நாளு
மதிக்குமலை யண்ணு மலை. (சச)

நாதனரு ளான நமச்சிவா யன்கனிவா
யோதுதமிழ் மாலை யுகந்தமலை—பாதிமதி
சூடுமலை பத்திசெயுந் தொண்டருடன் கூடிவினை
யாடுமலை யண்ணு மலை. (சஙி)

தேவரையுந் தேவருக்குத் தேவராச் செப்புமொரு
மூவரையு மண்ணோர் முனிவரையும்—யாவரையும்
பெற்றமலை தன்பெருமை பேசுங்காற் றுய்தந்தை
யற்றமலை யண்ணு மலை. (சசு)

நேசிக்கு மன்பர் நினைவுகொடு பாவித்துப்
பூசிக்கும் பூசை பொருந்துமலை—யாசைக்குள்
வீழுமலை பற்றெழிந்த மெய்யடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை யண்ணு மலை (சஎ)

நன்றிபுனை நண்ப நமச்சிவா யன்றினமுந்
தின்றுமலர் தூவித் துதிக்குமலை—யன்றிருவர்
தேடுமலை சந்ததமுந் தில்லைச்சிற் றம்பலத்தே
யாடுமலை யண்ணு மலை. (சஅ)

நெஞ்சகத்தி லொன்று நினைப்பார்க்கு மாலாகி
கஞ்சமொத்தபொன்னடியைக்காட்டுமலை—அஞ்செழுத்தி
ணமலை யம்பிகையுண் ணுமுலையும் மைக்குகந்த
வாமமலை யண்ணு மலை. (சகூ)

புன்றலையின் மாயன் புவியிடந்துங் காணரிய
நன்றிதரும் பொன்னடியை நாடியே—யென்றுமொரு
நாளுமலை வாராம னுயேனைச் சற்குருவா
யாளுமலை யண்ணா மலை. (நெ)

சண்ட விடத்தைச் சகமிறக்து போகாமற்
கொண்ட திறம்பாடிக் கொண்டாடித்—தொண்டர்
பணியுமலை மெய்ம்முழுதும் பால்வெள்ளை நீற்றை
யணியுமலை யண்ணா மலை. (நெக)

தில்லைவனங் காசி திருவாரூர் தென்மதுரை
நெல்லையினும் பேரொளியாய் நின்றமலை—தொல்லைமறை
பாடுமலை சந்ததமும் பத்தரக மேவிநட
மாடுமலை யண்ணா மலை (நெ2)

மூலமுத லண்ணா முலையென்று மன்பருக்குச்
சாலவர மீந்தருளுந் தாயென்று—நாலுமறை
பேசுமலை பாகம் பிரியாச் சிவஞான
வாசமலை யண்ணா மலை. (நெகூ)

தொன்மைதரைச் சுந்தரற்காத் தூதுபோய் வந்தமலை
நன்மைதரத் தொண்டருக்கு நல்குமலை—மன்மதனைக்
காய்ந்தமலை கூடலிற்சங் கத்தா ருடன்றமிழை
யாய்ந்தமலை யண்ணா மலை. (நெச)

புண்டரிகன் மாறேடிப் பொன்முடியும் பொன்னடியும்
கண்டறிய வொண்ணாத காட்சிமலை—தொண்டருடை
யூனமலை பற்றறுக்க வோஙமச்சி வாயகுரு
வானமலை யண்ணா மலை. (நெஞ)

தின்றுமலர் சோலைதொறுஞ் சூழுமலைச் சோணையென
மன்றல் கமழு மதுமாரி—யென்றும்

பொழியுமலை மாருமற் பூஞ்சுனீர் பொங்கி
வழியுமலை யண்ணு மலை. (நிசு)

வேடட வடியார் விளக்குஞ் சிவஞான
நாட்டம் பொழிபே ரானந்தநீ—ராட்டக்
குளிக்குமலை நாளுங் குறைவிலாச் செல்வ
மளிக்குமலை யண்ணு மலை. (நிள)

நீலமலை தேடரிதாய் நின்றமலை நின்றதழற்
கோலமலை மன்றிற் குனிக்குமலை—மூலமலை
யந்தமலை சுந்தரற்கா யன்றிறவிற் றூதுபோய்
வந்தமலை யண்ணு மலை. (நிஅ)

தரையெலா முய்யத் தணித்திருந்து செய்யுங்
கரையிலா மாதவத்தைக் கண்டு—விரவியொரு
பாகமலை மாதுபெறப் பாவித்து நின்றருளு
மாகமலை யண்ணு மலை. (நிசு)

கள்ளப் புலவேடர் கைவசமா கக்கனிந்து
தெள்ளித் தெளிந்தோர் செறிவாக—வள்ளக்
கருத்துமலை யாதிருக்கக் காட்சிதருந் தெய்வ
மருத்துமலை யண்ணு மலை. (சுo)

மூக்குணமு மைம்புலனு மூளா வகையடக்கி
யொக்குமுணர் வாயிருப்போ ருள்ளத்தே—புக்குலவும்
பாதமலை தாய்வயிற்றிற் பார்மீதில் வந்துபிற
வந்தமலை யண்ணு மலை. (சுக)

பண்ணடுத்த கூடற் பழம்பதியிற் பிட்டமுதை
யுண்ணடுத்து வைகை யுடையாமன்—மண்ணெடுத்துப்
போடுமலை சந்ததமும் பொன்னம் பலத்தினட
மாடுமலை யண்ணு மலை. (சுஉ)

அண்டமுழு தும்பறந்தே யன்னவுரு வாய்த்தேடி
மண்டலமெ லாங்கோல மாய்த்தேடிப்—புண்டரிகன்
சீர்க்கமலை கோனறியாத் தெய்வச் சிவஞான
மார்க்கமலை யண்ணா மலை. (கூந)

கூனற் பிறபிறையைக் கோளரவுக் கஞ்சாமல்
வானப் பணிசடைமேல் வைத்தமலை—ஞானச்
சரதமலை யானந்தத் தாண்டவத்துக் கேற்ற
வரதமலை யண்ணா மலை. (கூச)

பொருந்துதலைச் சங்கப் புலவர்தமைப் போலே
விரிந்தபுகழ்க் கூடலிலே மேவி—யருந்தமிழை
யாய்ந்தமலை பார்மீதி லெந்தெழுத்த ஞானிவந்து
வாய்ந்தமலை யண்ணா மலை. (கூஞ)

ஆதிமலை யாதி யநாதிமலை யம்மையொரு
பாதிமலை யோதிமறை பாடுமலை—நீதிமலை
தந்த்ரமலை யந்த்ரமலை சாற்றியபஞ் சாக்காமா
மந்த்ரமலை யண்ணா மலை. (கூசு)

அஞ்சு புலனு மடக்கி யறிவுடையோர்
வஞ்ச விகோபபிறவி மாயமே—நெஞ்சி
லழுத்துமலை யன்ப ரனவரதம் போற்றி
வழுத்துமலை யண்ணா மலை. (கூஎ)

கதித்தமுனி பாலகன்மார்க் கண்டனையே சீறிப்
பதைத்துவருங் காலன்படவே—யுதைத்ததொரு
வீரமலை சற்குருவாய் மேவியனை யாண்டபட்ச
வாரமலை யண்ணா மலை. (கூஅ)

இயலவரும் பத்தருமா கேசுரங் காணச்
சமயகுரு வாகந்தி தாங்க—வுமையொருபங்

கானமலை வாக்குமனங் காயந் தமக்கரிய
வானமலை யண்ணு மலை. (சுக)

ஆத்தி கடுக்கைமுத லானமல ரைந்தெழுத்தாற்
சாத்தி யடியவருந் தக்கோரு—மேத்திப்
புகழுமலை யாங்கவரைப் பொற்கொடியோ டெய்தி
மகிழுமலை யண்ணு மலை. (எ0)

மாலுான்றிச் செய்யு மணர்ந்தலைகந்து சுந்தரனைக்
காலுான்றி யாளக் கருணையாய்க்—கோலுான்றித்
தந்த விருத்த சதுர்வே தியர்நாக
வந்தமலை யண்ணு மலை. (எக)

அறுகு மதியு மணிமுடிமேற் கூடன்
மறுகு தனிலடியார் வாழ—விறகு
சுமந்தமலை போற்றிசெயுந் தொண்டரகந்தோறு
மமர்ந்தமலை யண்ணு மலை. (எஉ)

மட்டுலவு கஞ்ச மலரோனு மாயோனுந்
திட்டமுடன் றேடித் திகைத்தாலு—வெட்டரிய
ஞானமலை பார்மீது நாலுலகத்தி னுலவடி
வானமலை யண்ணு மலை. (எங)

மறைவடிவாஞ் சோமாசி மாறன்மக டன்னி
லுறைவடிவாம் பங்கிலுமை யோடு—நிறைவடிவாய்ச்
சென்றமலை யந்தணர்சூழ் தெய்வக் கனகமணி
மன்றமலை யண்ணு மலை. (எச)

எப்பொருளு மாகி யிருசுடர்பா ராக
மெய்ப்பொருளு மாகி விளங்குமலை—கைப்பொருளா
யொத்தமலை யென்றலேமே லோகமச்சிவாயனடி
வைத்தமலை யண்ணு மலை. (எரி)

பல்லுயிருங் கேட்டறியப் பார்த்தன்கை யாலடித்த
வில்லடியும் புத்தன் மிகவெறிந்த—கல்லெறியும்
பட்டமலை மன்மதனைப் பார்வையினல் வெந்துவிழ
வட்டமலை யண்ணு மலை. (எசு)

வானை யுருவ வளர்ந்தமலை வாம்பச்சைத்
தேனையொரு பாகத்திற் சேர்த்தமலை—யானை
யணித்திரள்சேர் சார லதில்வேய்க ளீன்ற
மணித்திரளே சேரண்ணு மலை. (எள)

அன்று கயிலை யரக்க னெடுத்தவப்போ
நின்றவனைக் காலா னெரித்தமலை—யென்று
மருத்துமலை யெவ்வுலகு மன்பரிடர் நோய்க்கு
மருத்துமலை யண்ணு மலை. (எஅ)

அன்றுபதி னறுவய தானமார்க் கண்டர்தமக்
கென்றுமீ ரெண்வயதே யென்றமலை—நின்று
சிறக்குமலை தன்னடியார் செய்தகுறை யெல்லா
மறக்குமலை யண்ணு மலை. (எக)

அன்றிருவர் தேட வனல்வடிவாய் நின்றமலை
நின்றுருகுந் தொண்டருக்கு நேயமலை—யென்று
நடிக்குமலை வேள்வியிலே நாரணனை யோட
வடிக்குமலை யண்ணு மலை. (அ0)

நஞ்சணியுங் கண்டமலை நாளு மடியவர்தம்
வஞ்சவினை தானறுக்க வந்தமலை—நெஞ்சை
யிளக்குமலை யன்பர்க் கினியபே ரின்பம்
வளர்க்குமலை யண்ணு மலை (அக)

பையரவஞ் சூடுமலை பத்தர்பணிந் தேத்துமலை
கையின்மழு மான்றரித்த காட்சிமலை—துய்ய

நதியணியும் வேணியின்மே னுறுமலர்க் கொன்றை
மதியணியு மண்ணு மலை. (அஉ)

மயிலரவஞ் சேருமலை மான்புலிகள் கூடிப்
பயிலுமலை வானோர் பரவுங்—கயிலை
பொருந்துமலை யெந்நாளும் போற்றுமன்பர் நாவா
லருந்துமலை யண்ணு மலை. (அங)

உற்றுப் புரத்தி லொருமூவர் தம்மைவைத்துப்
பற்றி யெறிந்துவிழப் பார்த்தமலை—நத்தியே
நாளுந் தினைத்தேடி நம்புமடி யார்தமையே
யாளுமலை யண்ணு மலை. (அச)

உள்ளும் புறம்பு மொருசெயலா மன்பருளங்
கொள்ளுமலை நாட்டங் குளிக்குமலை—துள்ளு
மெருதின்மே லேறுமலை யென்பிறவி நோய்க்கு
மருத்துமலை யண்ணு மலை. (அஞ)

துன்ப மகற்றுமலை தொல்வினையை நீக்குமலை
யன்பர்தமை வாவென் றழைக்குமலை—தன்பதத்தைக்
காட்டுமலை தன்னைக் கருத்திலுறு மன்பரிடர்
வாட்டுமலை யண்ணு மலை. (அசு)

போதமுற்ற மெய்யடியார் புந்தியிலே வேரோடிப்
பாதமுச்சி மாட்டாய்ப் படர்ந்தமலை—நாதந்
தழைக்குமலை யன்பர் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணு மலை. (அள)

மும்போதும் பூசித்து மோகித்துப் போற்றுமவர்க்
கப்போது முன்னின் றருளுமலை—யெப்போதுந்
தாய்க்குமினி தீனமலை சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை யண்ணு மலை. (அஅ)

காலை யுதைத்தமலை கையில்மான் சூலமலை
வேலை விடமருந்தும் வெற்றிமலை—மாலை
யணிசேரு நீண்முடிமே லங்கரவ மீன்ற
மணிசேரு மண்ணு மலை. (அக)

மாறுபட்ட தக்கனுயிர் மாய்த்தமலை மாலயர்க்கு
நீறுபட்ட செந்தழலாய் நின்றமலை—கூறுங்கா
லொப்பனைக ளில்லா துயர்ந்தமலை நீண்முடிமே
லப்பணியு மண்ணு மலை. (கூ0)

பச்சைநிறந் தாணுப் பாதிவடி வானமலை
கச்சையெனக் கட்செவியைக் கட்டுமலை—நிச்சயமாய்
மாளு மடியேனை மாளா வகையருளி
யாளுமலை யண்ணு மலை. (கூக)

மானெருகை வெற்றி மழுவொருகை யானமலை
ஞானமுனி வோர்கணித்த நாடுமலை—யானை
யுரித்தமலை யம்மை யுமைபாலே யார்க்கு
மருத்துமலை யண்ணு மலை. (கூஉ)

மூல்லைமலர்க் கொன்றை முடிமே லணிந்தமலை
யெல்லையிலா மாதவர்க ளேத்துமலை—தில்லையிலே
நட்டமலை முப்புரத்தை நாடுமன்பர் மூவரைவிட்
டட்டமலை யண்ணு மலை. (கூங)

எல்லாருங் காணற் கினியமலை யென்னுடைய
பொல்லா வினையறுக்கப் போந்தமலை—சொல்லாரும்
நல்லமலை பொல்லாரை நாசமுறப் பார்க்கைக்கு
வல்லமலை யண்ணு மலை. (கூச)

ஆழி நெடுமா லயர்க்குமரி தானமலை
பூழின்வினை யன்பர்க் கொழிக்குமலை—யாழியிலே
நஞ்சமுலைக் கண்டு நடுங்கினரைக் கர்க்குமலை
யஞ்சுமுகத் தண்ணு மலை. (கூடு)

எத்திசையுந் தோற்றுமலை யேறுகந்து நின்றமலை
சித்திவர மீந்தருளிச் செய்யுமலை—முத்தர்மனம்
பூணுமலை யண்டர் புகழுமலை மீண்டதொரு
மாணுமலை யண்ணு மலை. (கசு)

வண்மைக் குணத்தவரை மாதவரை வந்தடைந்தோர்
தம்மைத் தளராமற் ருங்குமலை—யுண்மை
பொருந்துமலை விண்ணவர்கள் போகாம லால
மருந்துமலை யண்ணு மலை. (கஎ)

வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி
யானைக்கு ஈட்டி யளையுமலை—ஞானத்த
ருன்னுமலை யெந்நாளு மோநமச்சி வாயகுரு
மன்னுமலை யண்ணு மலை. (கஅ)

அழியாத முத்தி யளிக்குமலை யன்பர்க்
கொழியா வினையை யொழித்துக்—கழியாத
வேற்றுப் பிறப்பை யினியமையு மென்றருளி
மாற்றுமலை யண்ணு மலை. (கஙு)

பெற்றந் தனிறரூன்றிப் பெய்வளையுந் தானுமென்றன்
குற்றங் களைந்தருளிக் கொண்டமலை—நித்தம்
புதியமலை கங்கையணி பொற்சடைமேல் வைத்த
மதியமலை யண்ணு மலை. (கoo)

அண்ணு மலைமாலை யானதமிழ் வெண்பாவாற்
றண்ணரு மைத்தெழுத்தைச் சாற்றியதூற்—பண்ணுகக்
கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியிற் பேரின்ப
முற்றுலகை யாள்வ ருவந்து. (க)

மன்னுதிருவண்ணு மலையைவல மாகவந்தன்
ருன்னுதிரு வைந்தெழுத்தை யோதினேன்—றென்னருணை
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன் பெற்றெடுத்த
தாயகத்தைக் கண்டவர்பெற் ருள். (உ)

அண்ணுமலைவெண்பா-முற்றிற்று.

சிவமயம்.

தெய்வீகம்விளங்கிய

தகைநமசிவாயதேவர் அருளிச்செய்த

அருணகிரியந்தாதி.

காப்பு.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச்சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும்—கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணைசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

நூல்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணாப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்—சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையாநீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால். (க)

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே—மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு. (உ)

திக்குவே றில்லை திருவுளமே யல்லாம
லிக்குவே னைக்காய்ந்த வீசனே—மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. (ங)

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா—மாசிலா
வண்ணை மலையரனே யண்ணைவயிற் றென்னையுருப்
பண்ணை மலையாகண் பார். (ச)

பாராம னீயிருந்தாற் பார்மீதி லுயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே—தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே சூழ்ந்த
விறப்பை யகற்றுதற்கு மின்று. (நி)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காம—னன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைந்தக் கால். (சு)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யால முகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (எ)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு. (அ)

மாறுகொண்ட தக்கன் மகிழ்தமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா—வாறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (கூ)

பரிந்தணிந்த வெண்ணீறு பாம்புந்தீக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினைபை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து. (கo)

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணுதை
கோலங் குருவடிவு கொண்டேதா—னலர்

தரித்தபிரான் சோணைசன் முன்முனிந்து வேளை
யெரித்தபிரான் வந்தா னிதென். (கக)

என்னதவப் பயனே வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணுத முக்கண்ணா—நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (கஉ)

பெற்றேறும் பலனைப் பிறந்ததனு நெஞ்சமே
யற்றே மனத்தி லனவரதம்—பற்றுவா
ருள்ளலிக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலிக்கொண் டாட வரம். (கங)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோணை சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணுர் கருத்தென் கருத்து. (கச)

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (கரு)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மென்புருக்கொள் பெண்ணை யிருக்குமே—யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (கசு)

பரம னருணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ—மருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையாகை யால். (களை)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சால வெருண்டோடுஞ் சமயத்தி—லோலமென
நின்ரு னுலகறிய நேசமடி யாரிடத்துக்
குன்ருத சோணகிரிக் கோ. (கஅ)

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னோடி வடவா லுறங்குமே—நாடுங்கா
லக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். (கக)

நகுமானே யேக்கருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி னுயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது. (உ0)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணசலனே
யோதக் கடனெஞ்சே யோதினுற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டுறலாங் கரையேற லாம். (உக)

ஆமென்று நம்பியனு தினமும் போற்றினு
ணமென்று பற்றி நலமாகக்—காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (உஉ)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரியிற் கண்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (உங)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்

தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட. (உச)

நடக்குங் குலங்கல்வி நம்மவெண்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம். (உடு)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ரானலு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் காளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (உசு)

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்—சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணு துறைக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (உள)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே—நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து. (உஅ)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தல்வருஞ் சோணகிரி யீசா—பருத்த
வலங்கார நால்வேத வானந்தலையு ளொன்றைக்
கலங்காம னீபலுத்தாய் கண்டு. (உக)

கண்டுமிணை யென்பார் கருத்துகா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே—விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சாணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம். (கo)

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
யருமா மறைதேடு மண்ணல்—வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேச
னினிக்கூட்டான் றுன்பத் தெமை. (கூக)

எமையாளுஞ் சோணகிரி யீசாவின் பாகத்
துமையாளு நீயு மூகந்த—சமயத்
திருக்குன்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று. (கூஉ)

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றிய வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில கால
மிருந்தே னிராமலிருந் தேன். (கூங)

ஏன் மனந்தேட வினையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணுர் கரு (கூச)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா—ஞெருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர். (கூஞ)

துயர்கொண்டு நாளுந்தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ—வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு. (கூசு)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே—யெப்பொழுதும்

பெண்ணைவிட்டு நீங்காதின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (கூஎ)

காணு ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணுமற் றுனகாண நாடியே—சேணுடை
ராயும் புகழருணை யண்ணு மலையானே
மாயுந் தமியேன் மனம். (கூஅ)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா—னனத்தனரு
டக்கன் தலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (கூகூ)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை—நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று. (கூO)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெருவ தெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரு
மேகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம் (கூக)

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுன் சோணகிரி
நாகா பரணன்ற ணடியே—யேகாந்த
நண்ணுமக்க மாலிகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடுத்து. (கூஉ)

எடுத்த பயனி யிருவினையை யெண்ணு
ரடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
யறியாத மானிடவ ரச்சு. (கூங)

அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையிலே
வாழ்ந்துகில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துகில பேரிருக்கத் தான். (சச)

தானே யுலகுடையோன் றன்னைசேவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதையாய்த்—தானே
யனைத்துயிருங் காக்கு மருணேச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு. (சடு)

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்தனக்கு வேண்டினை—லீண்டுலகில்
வீணேசர் சொல்லே விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்றெருக்காற் சொல். (சசு)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே மறவாழ னீ. (சஎ)

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்—றூயகமா
மண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது. (சஅ)

போதுமதி சூடும் புனிதர் புவியீன்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்—பாத
மிறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (சஆ)

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலி
லேற்றிருக்கு மாயவன்கீ ணைப்பொழுதுஞ்—சாற்றுகையி

லம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலைநாதர்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு. (நிஐ)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நண்ணு லறிந்தாலு—மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று. (நிக)

கற்றதனற் பெறுல்லவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனற் போமோ பிறவிநோ—யுற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி (நிஉ)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்—செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுன். (நிஙூ)

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—மூன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வெட்டாது பாவ முயர்ந்து. (நிச)

உயர்ந்தவர்க்கு லெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா—பயந்தமர
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவாரிதென். (நிடி)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார்—மூன்னமே
யொன்னர் புரமெரித்த வுண்ணு முலீபாகா
வென்னர் திருநீ றிடார். (நிசு)

நீறிடே னுந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிட னென்னையுமாட் கொள்வதனுக்—காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனர் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றே பரம். (நுஎ)

பரதத்திக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வெண்ணுத பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
விறப்பிற்கு மீடாயி னேன். (நுஅ)

ஏனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானுறுப்பாய் சோணகிரித் தானுவா—மானுகந்த
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல். (நுக)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணு நினைந்தாலும்—விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சுந்
தருமோநம் பேராசை தான். (கூO)

தானேயெனக்குத் தவமாய்த் தவப்பயனுய்த்
தானேயெனக்கன்னை தாதையாய்த்—தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயேறு மான். (கூக)

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றுடுகிலென்
னூனம் பதினுறுந் தான்செயினு—னனங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணாவே யெண்ணுத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று. (கூஉ)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்—வென்றிதரு

மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (கூகூ)

சும்மாகிடைக்குமோ சோணை சலன்பாத
மம்மால் விரிஞ்ச னரிகிலார்—நம்மா
லிருந்துகதை சொன்னக்கா லென்னுகு நெஞ்சே
பொருந்த நினையாத போது. (கூச)

போதையிரு பல்லுக்குத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்—றுதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று. (கூடு)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயர
மென்றைக்குப் போமருணே யீசனே—கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை. (கூசு)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிகோ வெல்லா—முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (கூஎ)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற்கென்று—மறைபுகுந்தோம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (கூஅ)

வேலேவிட முண்ட விமலரரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை-மேலமரர்
பண்ணினர் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினரு மெல்லா நலம். (கூகூ)

எல்லார் பிறப்பு மிறப்புமியாற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணைச—ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம். (எ0)

ஏமாந்த சோணகிரி யீசாடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார்—தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார். (எக)

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே—நெஞ்சறிய
வாண்டகுறு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண். (எஉ)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே—விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (எங)

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்ன—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து. (எச)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்—விடப்பானும்
பண்ணியனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது. (எடு)

இப்போது பின்னைக் கிலேயென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே—மூப்போதும்

பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து. (எசு)

நினையேன் நிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்—புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர். (எஎ)

பேரா பிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்—வாராது
தீது நலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு. (எஅ)

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
யெம்பிரா னைஞ் செழுத்து. (எகூ)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றுஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று. (அ○)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனுர்க்—கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (அக)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துநற்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு—முத்திதரும்
மாற்றறிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு. (அஉ)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (அக)

கங்கா தரனே கடையேனை யெந்தநா
ளங்கா தரவா வழைக்குநா—ணங்காதல்
பார்க்குநாள் சோணைச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு. (அச)

செப்பரிய வாணவத்தைச் சேதமுரு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே—னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு. (அஞ)

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே—தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல். (அசு)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னுடேன்யான்—சொல்லரிய
வண்ணு மலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
தண்ணு முலையாளை யும். (அள)

உம்மை நினைந்தே யுருகி யருணைசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லார்—லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புவிமீதி
னல்லார் துதிக்கு நடம். (அஅ)

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொறுத் தாலாவு துண்டோ—வடலைநூ

லோதிறற் பாச மொழியுமோ புற்றிலே
மோதிறற் பாம்புசா மோ. (அசு)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
ரூகமறே னின்பெருமை தானறியேன்—காகரய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி. (கூ0)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து கொர்தே
னரிக்கு மரிதா மறனே—தெரிக்குமறை
காணுத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணுத நாயேன் பிறந்து. (கூக)

பிறந்திருக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் ருன். (கூஉ)

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே—யேனம்
விருப்பா மலர்சூடி வேண்டிஞ ணீண்ட
கெருப்பா விருந்ததென்ன நீர். (கூங)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னேயனே—பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (கூச)

பின்னே யொருவரில்லே பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே—யென்னே
யெடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர். (கூரு)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறப்பை
யார்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற்—பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
யையர கருணை லயா. (கூசு)

கருணை யாநின் கழல்பணிய மாட்டே
னருணை சலாவென் றழையேன்—மாணந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணியுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து. (கூள)

குறியே னிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க் கொன்றுற்றேன்—சிறியேனின்
ரூயுமறை தேடரிய வண்ணு மலையாளே
மாயுமிருந் தையா மனம். (கூஅ)

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
யென்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கு
முன்னிச்சை யன்றே வுரை. (கூக)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றுரைக்குளா னந்தவெள்ளந் தன்னை—நிறைக்குமே
யெண்ணூர் புரமெரித்த யெந்தை யருணகிரிக்
கண்ணு ரமுதமெனுங் கார். (க00)

அருணகிரியந்தாதி முற்றிற்று.

இந்த அருணகிரியந்தாதியானது கன்னடசாமூர்த்தியாகிய குகைநமசிவாயதேவர் மல்லிகார்ச்சுனத்திலிருந்து "தெற்கே சிவஸ்தலயாத்திரை செய்துவருகிறேன்" என்று தன்குருவின் அனுமதிபெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தன்குருவுருவாக எழுந்தருளியஅண்ணுமலையார் அனுக்கிரகித்தபடி திருவண்ணுமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்து அண்ணுமலையார் வரப்பிரசாதத்தினுலே அவரைத் தோத்திரஞ்செய்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையின்கண் எழுந்தருளியிருந்த

தூகைநமச்சிவாயதேவர் அருளிச்செய்த

திருவருணைத் தனிவெண்பா.

சொன்னந் தருங்குருவே சோண சலத்தானே
இன்னம் பிறக்தாலு மிப்படிநின்—சன்னிதியை
நாடக் கிடைத்திடுமோ நன்னெஞ்சே நாமவரைக்
கூடக் கிடைத்திடுமோ கூறு. (க)

சம்பா வமுதும் சருக்கரைத்தே னெய்பாலும்
தென்பாகத் தந்தருளுந் தேசிகா—என்பார்க்கே
வந்தருள் சோணேச வயது நூறுங்கொடுத்துத்
தந்தருள்வாய் நின்பதமே தான். (உ)

ஆரிருக்க லாமே யருணேசரே யுலகில்
நீரொருத்த ரல்லாமல் நேடுங்கால்—நீரும்
பிறவா மலேயிருந்தீர் பின்பிறந்தா ரெல்லாம்
இறவாரோ மண்மீ தினில். (ங)

வானவரு மிந்திரனு மாலொடய னுஞ்சென்று
போனவிடம் புன்மூளைத்தும் போகாதே—தானமுதாய்
அத்த ரருணேச ரன்பாக நஞ்சுதனை
புத்தியுட னுண்ணுத போது. (ச)

சோணை சலனைத் துதியாமற் றொல்லுலகில்
வீணைசை கொண்டிருந்து விட்டோமே—பூணரம்
பெண்டிர்மக்கள் சுற்றம் பெருவாழ் வெனக்கருதி
உண்டி தனக்கா யுழன்று. (நி)

ஓதி யுரைத்தா லுமுண்படுக்கை யற்றாலும்
மாதரைத்தன் னெஞ்சின் மறந்தா லும்—நீதி
வழுவாமற் சோணகிரி வள்ளலே யன்பு
தழுவாம லாமோ தவம். (ஈ)

அங்கணையார் மேல்வைத்த வாசையிலே நூற்றிலொரு
பங்கருணை யீசன்மேற் பற்றினால்—சங்கையற
வத்தவின் பம்பெறலா மாராய்ந்து நெஞ்சமே
நித்தந் தவம்பெறலா நீ. (எ)

இந்தவரந் தானே யெமக்கமைய நீகுருவாய்
வந்துதிருக் கோலத்தை மாறுமல்—சிந்தைதனில்
வைச்சிருக்க வுச்சியிலே வைத்தபதத் தைக்கருத்தில்
தைச்சிருக்க சோணை சலா. (அ)

உண்ணவுடுக்க வொருகுடைக்கீழ் வையமெலாம்
பண்ணப் பணந்தேடப் பாவிக்க—எண்ணியிடும்
அந்தநாள் பின்னிட் டடியே னுணைத்துதிப்ப
தெந்தநாள் சோணைசனே. (கூ)

மண்ணும்பொன் ணுகாதோ மாற்றான் விலகாணை
பண்ணுந் தவங்கள் பலியாவோ—நண்ணுபுகழ்
விண்ணும் பரவும் விமல வருணகிரி
அண்ணல் புரிந்தா லருள். (கo)

மானமிலி பொய்யன் மனங்கனிவி லாதபுத்தி
யீனனிவ னென்று மிகழாதே—ஞான

உருவே யருணகிரி ஓமசி வாய
குருவே யெனை யாண்டு கொள். (ககஂ)

ஆதிமறை தேடரிய அண்ணு மலையாருக்
கேதமுடி யேதடியென் றேத்துவே—நீதி
ஒளியே திருமேனி யும்பருக்கு மெட்டா
வெளியே யவரிருக்கும் வீடு. (கஉ)

ஆயாசந் தீர்க்கு மருணேச ரேதமியேன்
மாயாம லொன்றுதர மாட்டீரோ—ஓயாமல்
ஊசலுக்கு நேரா யுழலுமனந் தானெருவர்
வாசலுக்குப் போகா வரம். (கஙஂ)

புல்லுயிரைக் கொன்ற பழிநீங்கு நீங்காத
புல்லறிவு நீங்கும் புலைநீங்கும்—கொல்லவந்த
கூற்றுவனு நீங்கும் குவலயத்திற் சோணகிரி
போற்றுந் தவத்தோர்க்கப் போது. (கச)

சிந்தையினல் வாக்கினல் செய்தொழிலால் பார்வையினல்
வந்தபிறப் பிறப்பும் வன்பிணியும்—எந்தைகுரு
நாதனெனச் சோணகிரி நம்பனென மால்தேடும்
பாதனெனப் போமே பறந்து. (கஞ)

பொல்லாத வென்பிறவிப் புண்ணுக் கொருமருந்து
சொல்லா யருணகிரிச் சோதியே—எல்லாரும்
போற்ற நடம்புரியும் புண்ணியா நான்மறைகள்
ஏற்றுஞ் சிவலோக னே. (கசு)

சூலங் கரத்திருக்கத் சோதிமழு மானிருக்க
ஆலமுண்ட கண்டத் தழகிருக்க—வேலை
விழித்த விழியிருக்க மெய்போக ஞாயா
தரித்ததென்ன தாமதமோ தான். (கஎ)

அடைக்கலமாச் சோணகிரி யப்பனடி சார்ந்தோம்
கடைப்பிறவி மூங்நீர் கடந்தோம்—படைக்குமந்த
முண்டகனே யும்மதியோம் மூரிக் கடாவெறும்
கண்டகனே யும்மதியோங் காண். (கஅ)

இந்தப் பிறப்பி லிரங்காத தேவரீர்
எந்தப் பிறப்பி லிறங்குவீர்—சிந்தைக்
கனியே யருணகிரிக் கண்ணுதலே பொல்லாத்
தனியே னிடர்திரத் தான். (கக)

ஆயபிணி மூங்நூற் றறுபதுக்குங் கூடாகி
மாயுமுட லச்சமக்க மாட்டேனே—தோயுமதி
அப்பணியும் வேணி யருணேச ரேதமியேற்
கிப்பிறவி மாற்றீ ரினி. (உo)

பொழுதுபிக்கச் சாமமெனும் போதே யெழுந்து
முழுகிவெண் ணீற்றினின் மூழ்கி—தொழுதுனது
பொன்னுன் சேவடியைப் போற்ற விறைஞ்சருணை
மன்னு தருவாய் வரம். (உக)

வையமுழு தும்படைத்து வாழு மருணகிரி
ஐய னமைத்தபடி யல்லாம—நொய்யமனம்
நூறு பிரமாக நோக்கிடினு மெள்ளளவு
மேறு தகிற்குறை யாது. (உஉ)

ஆகா வழியே யடியேன் பிறந்திருந்து
போகா வழியருளப் போகாதோ—வாகா
வருணையனே யன்பர்க் கனவரத மான
கருணையனே கண்பார்த் தருள். (உங)

கையிலே நீயிருக்கக் கன்னெஞ்ச னேனுலகப்
பொய்யிலே வீழ்ந்தழிந்து போவேனே—மெய்யிலே

நீரு வுணைத்தி திக்கு நேசருளத் திற்கருப்பஞ்
சாரு மருணை சலா. (உ)

நெற்றிவிழி கண்மூன்று நித்திரையோ சோணைசா
பற்றுமழு சூலம்பறிபோச்சோ—சற்றும்
அபிமான மின்றே வடியார்க ளெல்லாம்
சபிமாண்டு போவதே தான். (உரு)

ஆண்ட குருவை யறியாத மானிடர்கள்
தூண்டி விடவொருத்தி தோன்றிஞள்—நீண்டபுகழ்
திக்கெல்லாம் போற்றுதிரு வண்ணு மலைதனில்வாழ்
எக்கலா தேவி யிவள். (உசு)

குற்ற லரிசி குறைந்தநாட் போதாதோ
வெற்றிலைக்குங் கேடுவர வேண்டுமோ—நித்தநித்த
மண்ணு மூலைநாதா வைம்ப தரைக்காசுக்
கெண்ணிவிற்ற தற்குவந்த தென். (உஎ)

கோள நிருக்குமூர் கொன்றூலுங் கேளாவூர்
காலையரே நின்று கதறுமூர்—நாளும்
பழியே சுமக்குமூர் பாதகரே வாழுமூ
ரழியாவு ரண்ணு மலை. (உஅ)

வீடுதருஞ் சோணகிரி வித்தகனுர் சத்தியுடன்
நீடுதே ரேறியவர் நிற்கின்றூர்—ஓடி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தவர்க்கு முத்தி
யிடங்கிடைக்கும் பாருங்க ளின்று. (உக)

பூமாலை சாத்திப் புவிபுகழ்சோ ணைசலர்க்குப்
பாமாலை சூட்டிப் பலகாலு—நாமாலை
பண்ணு யிரம்பாடிப் பார்த்திருக்க நாயேற்குக்
கண்ணு யிரம்வேண்டுங் காண். (ஙo)

எனக்குத் தனக்கென் றிகலியைந்து பூதம்
தனக்குத் தனக்கே தலையாய்—மனக்குவசம்
ஆவதில்லை சோணகிரி யையா விதைநீக்கப்
போவதில்லை போகாப் பொறி. (கக)

போகாப் பொறியாய்ப் புலனைந்துங் கூடியவித்
தேகாதி தள்ளுகைக்குத் தேட்டமா—யோகா
விருக்கு மருணகிரி யீசா விதனை
யுருக்கும் வகையே துரை. (கஉ)

தாயினுநல் லாரினிய தாதையினுந் தானல்லார்
ஆயிலரு ணேச ரடியேற்கு—மாயவுடல்
நோகப் பொருந்துவரோ நூறு வயதிருந்தும்
சாகப் பொருந்துவரோ சாற்று. (கங)

பத்தர்களே வாவென்றும் பாவிகளைப் போவென்றும்
முத்திவழி யீதென்று மூதலிக்கும்—சத்தியமே
அன்னவயல் சூழருணை யண்ணலிலை நாதர்
சன்னிதியி லூதுதிருச் சங்கு (கச)

நச்சரவம் பூண்டானை நன்றுய்த் தொழுதவன்றன்
இச்சையிலே தானு மிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாசலிலே
தூங்குவதுந் தானே சுகம். (கடு)

திருவருணைத் தனிவெண்பா

மூற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணுமலைத்
தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்தபரிபூரண சுயம்பிரகாசப்பொருளாகவிளங்கும் ஸ்ரீகைலாசபதியானவர் இந்தவுலகின்கண் ஆங்காங்குவசிக்கும்ஆத்மகோடிகளொவ்வொன்றுமுய்யும்பொருட்டுத்திருவருட்கண்சுரந்து திருக்கோயில்கொண்டிருக்கின்றபலஸ்தலங்களுளொன்றுமியும், ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தசுவாமிகளாலும், ஆளுடையஅரசுகளாகியதிருநாவுக்கரசுசுவாமிகளாலும் பதிகம்பெற்றுள்ளதும், ஆளுடையஅடிகளாகியமாணிக்கவாசகசுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானை பாடியருளியதும், பட்டணத்துசுவாமிகளது வீரியத்தாற்றிருவவதாரஞ்செய்தருளிய அருணகிரியார் திருப்பரங்குன்றின் கண்ணேஎழுந்தருளியிருப்பவரும், திருச்செந்தூரின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும்திருவாவினன்குடியின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருவேரகத்தின்கண்ணேஎழுந்தருளியிருப்பவரும், இதுவன்றிமலைகடோறும்வீடாயுதலேகிலேபெற்ற குணத்தையுடையமுருகப்பிரானிடத்துஅன்புடையோராய் திருப்புகழ்முதலிய அநேகபிரபந்தங்கள்பாடியருளப்பெற்றதும், சோழதேசமுதலான தேசங்களில் இன்ன இன்னநாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோராகிய அறிவுடையோர்க ளேற்பகுத்தினக் கிரமப்படியே மகதநாடு அல்லது கடுநாட்டுக்குள்ளிருக்கும்ஸ்தலங்களுள் விசேஷமாகியதிருவண்ணுமலையென்னுந் திவ்வியகூத்திரமானது, கிரேதாயுகத்தில்அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில்தாம்,

பிரமலேயாகவும், கலியுகத்தில்கண்மலேயாகவும், திருவுருக்கொண்டு அருணசலம், சோணசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்று இவ்வாறுபல திருநாமங்களுடையதும், ஆண்மகோடிகளே இடைவிடாது இரகஷிக்குஞ்சிவபெருமானே திரிரூபமாயிருப்பதும், பார்வதிதேவியார் திருவவதாரமானது திருக்கண்புதைத்தும், மதிடாசுரமர்த்தனஞ்செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தலுதியவச்சிராங்கதபாண்டியன்பேறுபெற்றதும், கலாதரன், காந்திசாலி, தவஞ்செய்துபேறுபெற்றதும்அக்கினிவம்சத்தலுதிய வல்லாளராஜன் புத்திரசோகந்தீர்ந்ததும், இந்திரதீர்த்தமுதலாகிய அநேகதீர்த்தங்களும், அன்பர்கள்திருமலேவலம் புரிதலும், ஆதித்தனுக்குதரிசனங்கொடுத்ததும், சூரியவம்சத்தலுதிய பிரதத்தராஜனுல்அநேககாணிக்கைகள் தரப்பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன்முதலானவர்கள்பாவந்தீர்ந்ததும், புளகாதிபன்பேறுபெற்றதும், நினைக்க முத்திதரும்தலமென்பதும் ஆதிபுராணத்திற் சொல்லப்படுகின்றது.

பரமசிவம்மலேயுருவமானதற்குக் காரணமியாதெனின்:—ஒருகற்பத்தில்மகாவிஷ்ணுவும் பிரம்மதேவனும் தாம்தாம்பிரமமென்றுவாதித்துப்போரிட்டதைத்தீர்க்கும்பொருட்டுச்சிவபெருமான் அழற்றூணையவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத்தீர்த்து அறுக்கிரகித்து அவர்கள் வேண்டுதலினுல் ஒருசிறியமலேயா யுருக்கொள, அதைக்கண்டபிரமதேவனும் மகாவிஷ்ணுவும்; சுவாமியையேநோக்கி இம்மலேயினுச்சியில்ஒருஜோதிஎங்களுந்தெரியும்படிக்குகிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச்சிவபெருமானவர் வாரீர் பிரமவிஷ்ணுக்களே? கார்த்திகைமாதத்தில் வரும்கார்த்திகைநக்ஷத்திரத்தில் இம்மலேயினுச்சியின்கண் ஒருஜோதிகாண்பிப்போம்: அச்சோதியைத்தரிசித்தவர்கள் மிடியும்வியாதியும்நீங்கி இஷ்டகாமியம்

களைப்பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும், இதைத்தொழுதவர்களுக்கும்,தரிசித்தவர்களுக்கும்,அவர்மட்டில்லாமல்; அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொருதலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்து போல் இருப்பதினால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதினால் அருணசலமென்றும் பெயருள்ளது; இதை ஒருதரஞ்சொன்னவர்களுக்கு பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்தபலன் வருமென்பது அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமதேவனும், மகாவிஷ்ணுவும், ஆநந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத்தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியேங்கள் எப்படி பூசைசெய்யக்கூடும்! ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியாயெழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அப்படியேசிவலிங்கமூர்த்தமாகின்றேமென்று அந்தமலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக்கண்டுபரமானந்தமாய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயமுகட்டுவித்தார்கள் அப்போதவ்விடத்தில்வளப்பம்பொருந்தியகரமும், மூன்றுதீர்த்தங்களும் உண்டாயின,அல்லாமலும் ஆகாயகங்கைகிணறுகளாகவும்,கற்பகவிருக்ஷங்கள் மரங்களாகவும்வந்திருந்தன. தேவர்களும், இருஷிகளும், மனிதர்களாகவந்து பிறந்தார்கள். அரம்பாஸ்திரீகள் தாசிகளாகப்பிறந்தார்கள். ஆகையால் எல்லாஸ்தலங்களும்உடலென்றும், அருணசலஸ்தலம் முகமென்றும், அதில்சிவபெருமான்கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், ரமது பெருமானுகிய நந்திகேசுரர்மார்க்கண்டேயமுனி

வருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திரு வாய்மலர்ந்தருளியபிரகாரம்அம்மலையின்மேல்கார்த்திகைமாதத்தில் வருகின்றகார்த்திகைகூடத்திரத்தில் ஜோதிதரிசனமாகிக் கொண்டு வந்தபடியினாலே இப்போதும் அந்தமலையின்மேல் தீபதரிசனமாகின் றமையால், அத்தினத்தில் இந்திரதீர்த்தமுதலாகியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகிரியைவலம்வந்து தங்கடங்கள்சத்திக்குத்தகுந்தபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ்செய்து அருணாசலேசுரரைத்தொழுது தீபதரிசனஞ்செய்துஉள்ளன்போடுதுதிப்பவர்கள்அளவிலாச் சம்பத்தையும் மோகூத்தையும் அடைவார்கள்.

இதன்றியும், ஆதிவாரத்தில் திரிகரணசுத்தியுடன் தீர்த்தமாடி அந்தமலையை யாதொரு சிந்தனையில்லாமல் நிர்மலமாய் வலஞ்செய்து தம்மாலியன்றவளவில் தர்மங்கள்செய்தவர்கள்சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக்கொள்வார்கள்; சோமவாரத்தில் அருணோதயத்திற்குமுன் தீர்த்தமாடிசுரவஸ்திரத்துடன்வலம்வந்தவர்கள் தேவேந்திரனைப்போல்ஏழுலகத்தையும் ஆண்டுசிவசாரூப்பியத்தை அடைவார்கள்; மங்களவாரத்தில் தீர்த்தமாடி யாருடனும்வாய்பேசாமல் சித்தத்தைசிவன்பாலிருத்தி வலஞ்செய்பவர்கள் தங்கள்வறுமையும்சங்கிலித்தொடர்போல் வருகின்ற ஏழுபிறப்பையும் நீங்குவார்கள்; புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சணஞ்செய்வோர்கள் நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் தெளிந்து முத்திக்குரெருங்கினவராய்த் தேவர்களாவார்கள்; குருவாரத்தில் வலம்வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மேலாவார்கள்; சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்திற்சேர்வார்கள்; சனிவாரவுதயத்தில் வலம் வந்தவர்களுக்கு ஏழ்கிரகங்களும் பதினேராயிடத்தின் நற்பலனைக் கொடுக்கும், சிவ

ராத்திரியிலும் வருஷப்பிறப்பிலும், ஐப்பிசிமுதலாகிய மூன்றுமாதங்களிலும், வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை உள்ளன்புடன்வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சணஞ்செய்யும் போது வாகனத்தின்மே லேறிக்கொண்டு வராமலும், போர்வை போர்த்துக் கொள்ளாமலும், குடைபிடித்துக் கொள்ளாமலும், பாதரட்சைதொடுத்துக் கொள்ளாமலும், தாம்பூலந் தரியாமலும், வேறுருசிந்தனை யில்லாமலும், மனதினுல் வந்தனஞ்செய்து அருணசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருத்தல் வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ்செய்து ஆலயத்திற்குள்ளே போகின்றவர்களுன் அநுக்கரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதி சைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலானவைகளைச்செய்வித்தால் தங்கள்கையினுற் செய்தபேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகாரிஷிக்குச்சொன்னர்.

சர்வாலய

தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீகைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்போது, அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒருதீபம் அணையுந் தருணத்தில் ஒரெலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போனபோது, அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டிய மாத்திரத்தில், பிரகாசம் அதிகரித்ததனுல் சிவபெருமான் திருவைகூர்ந்து அவ்வெலிக்கு மானுடசரீரமும், அரசும், மற்றப்பேறுந்தந்து பூமியில் பிறக்

கும்படிக்கட்டளையிட்டனர் அவ்வெலியானது மாபலிச் சக்கிரவர்த்தியாகப்பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்குங்காலத்தில், ஒருநாள் சிவதரிசனத்திற்குப்போக எத்தனித்துத் தன் இராசசின்னமுதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட்பிரவேசித்துப் பிரதட்சணம் வருகையில்; அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர் துளி இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன், அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணக்கண்டி வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது, ஒருநாள் சிவபெருமான் திருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே! நீ மிகவும்அகங்காரியாகையால் கும்மாலுனக்கு இத்துன்ப முண்டாயிற்று. நீஇன்றுமுதல் நல்லுணர்வுடன், நெய்முதலிய பொருள்களால் சிவாலயங்களுக்குத் தீபமேற்றுவையேயானால் உமக்கு இத்தவிரணந்தீர்ந்து சாயுச்சியபதவி கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம்பற்றியதைக் கேள்வியுற்ற அச்சக்கிரவர்த்தியானவர் ஆனந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும், மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும், தீபம் ஏற்றிக்கொண்டுவருங்காலங்களில், ஒருநாள் ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கி கார்த்திகைமாதப் பூர்வபக்ஷக் கார்த்திகை நக்ஷத்திரத்தில், தேஜோமயமா யெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச்சாயுச்சியபத மளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாரும் அச்சோதியைக் கண்டு பயந்து, துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரி அவல் நிவேதனஞ்செய்தார்கள் இவ்வாறு கைலாசபதியான சிவபெருமான் மாபலிச்சக்கிரவர்த்திக்குச்சோதி சொரூபமாய் தரிசனங்கொடுத்தகாரணமாகஇன்றும் சிவாலயங்களோறும் கார்த்திகைமாதப் பூர்வபக்ஷக் கா

ர்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் * சுட்கப்பனே கட்டவும் ஆயிற்று.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னுள் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலையில். அதிவாச தீபத்தில் அக்னிகாரிய முதலியவைக ளின்மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனஞ்செய்து அந்தத்தீப த்தைச் சுவாமிசந்நிதானத்திற்முனே பூசித்துவைக்கவேண்டும்.

மறுநாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னை பனை, கமுகு, வாழை, மூங்கில் என்னும் இந்தமரங்களில் ஓர்விதம ரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிக்கிற்கும் மத்தியஸ்தானமாகிய பிர மஸ்தானத்தில்நாட்டவேண்டும். இந்தமரத்துக்குத்தீபதண்டம்என்று பெயராம்.

தண்டவுன்னதப் பிரமாணம்.

சுவாமி கர்ப்பக்கிருகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வ ளவு உயரமாவது, அந்தவிமானத்தின் கழுத்தினளவாவது இருக்க வேண்டும், இவ்விதமான தீபதண்டத்துடன்உலர்ந்தென்னேலையா வது பனையோலையாவதுபாக்கோலையாவது வாழைச்சருகாவதுதா ழஞ்சருகாவது அசோகச்சருகாவதுசேர்த்து விமானம்போல்கட்ட வேண்டும்.

மேற்கொன்ன பரணிநக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நட் சத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி ஷிதீபம் சுவாமிக்கு முன்னேவரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத் திக்கொண்டுஅத்தீபத்தைஅந்தத்தண்டத்தின்மேல்வைத்துச்சருகுக ளைக் கொளுத்திவிட்டு அந்தச்சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்

* சுட்கப்பனே யென்பது-சொக்கப்பானே எனமருவியது.

டத்தைச் சேதித்து விடவேண்டும் அச்சோதியைச் சிவபெருமானு கப்பாவனைசெய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில்செல்வமும்,மறு மையில்மோக்ஷமும் கிடைக்குமென்று ஆகமங்களில்சொல்லப்பட்டி ருக்கின்றன.

தண்டவிருட்சம்.

உத்தமம்தென்னமரம், மத்திமம் பனைமரம், அதமம் பாக்குமரம் அதமாதமம் வாழையும் மூங்கிலுமாம்.

தண்ட உன்னதப் பிரமாணம்.

உத்தமம் விமானமுயர்வு, மத்திமம் அதன்கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் ஸ்கந்தரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச்சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமிதிதி பிரதானமா கவும்,தீபம்வைக்கவேண்டியதென்றுஆகமங்களில்சொல்லுகின்றன

தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணைசலபுராணம்.

மூலமும் — உரையும்.

பாயிரம்.

விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

மிக்க வேத வியாசர் விளம்பிய
விக்க தைக்கியை பின்றருள செய்திட
மூக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ளிற்றினைக் கைதொழு தேத்துவாம்.

(இ-ள்.) அநேகவேதங்களும் இயல்பாகவே உணர்ந்தவியாசரால் அருளிச்செய்யப்பட்ட (ஸ்காந்தபுராணத்தில் உருத்திர சங்கிதையிலிருக்கும்) இந்த அருணாசலமான்மியத்தை யிக்காலத்தில் தமிழிலுற்செய்ய (இதற்கு இணையில்லையென்று சொல்லும்படி) அநுக்கிரகஞ் செய்வதற்கு மூன்றுகண்களையுடைய மலைபோன்றவரும் சமுத்திரம்போன்ற * மும்மதத்தையுடையவரும் தும்பிக்கையாய்ந்தவருமாகிய யானை முகம் பொருந்திய விநாயகரைக் கையினற் றொழுது (எடுத்தநூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுத் தோத்திரஞ்செய்வாம். எ-று. (க)

நடேசர் துதி.

வேறு.

முதிருஞ்சுவை மதுரம்பெற
மொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர்
பவபஞ்சன னமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு
முடையும்படி யிலகும்படி
யதிரும்படி நடனம்புரி
யதிருங்கழ லதிருங்கழல்.

(இ-ள்.) மிகுந்த மதுரச்சுவையுண்டாகப்பாடுகின்ற திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் தோத்திரம் பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைத் தரிக்கின்றவராகியும், தம்மை யடைந்தவர்களது பிறவிநோய்க்கெடுப்பவராகியும், மலரகிதராகியும்விளங்கி, சூரியனுதிரவும், பகிரண்டமுடையவும், விளங்குகின்ற பூமியதிரவும் நடனத்

* மும்மதமாவன-கன்னமதம், கபோலமதம், மூலமதம்.

தைச் செய்யாநின்ற மிகவுஞ் சப்திக்கின்ற வீரகண்டாமணியைத் தரித்துள்ளதாகிய நடேசரதுசிறந்தபாதத்தை வணங்குவோம்.எ-று. இச்செய்யுளுக்குப் பயனிலை வருவிக்கப்பட்டது. (உ)

தலமகிமை.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய
ரிமையவ ரெண்டிசையோ
ருரக ருருத்தவர் முனிவரர் பங்கய
ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலி லுலக நிறைந்தவர்
பணியு மிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய
தருணை வலம்பதியே.

(இ-ள்.) சூரியர்களும், சந்திரரும், வயிரவரும்,வித்தியாதரரும தேவரும், அட்டதிக்குப்பாலகரும், நாகலோகத்தாரும், அரிய தபசிகளும், முனிவர்களும், பத்மாசனத்தில் வசிக்கும் பிரமர்களும், பெருமைமிக்க கருடக்கொடியையுடைய விட்டுணுக்களும் பரந்து நெருங்குதலினல் உலகநிறைந்து அவர்கள்வணங்குதற்கு இடங்கிடையாததாய் (அவர்களாலே சொல்லப்பட்ட) அரகரவென்கிற சப்தமான துசமுத்திரத்திலும் அதிகமாகமுழங்கும் (வளப்பத்தையுடைய) அருணசலமென்னுந் தலமாம். எ-று. (ங)

இளமுலை மங்கையர் முகமு நெருங்கிய
விருகுழை யும்பகலே
யொளிரொரு சந்திர னுடனிரு செங்கதி
ருதயமெ னுந்தனியூர்

தளையவி ழுந்தொடை மகபதி தன்பதி
தன்பதி தன்பதியா .
மளகை வளம்பதி தனிலும் வளம்பதி
யருணை வளம்பதியே.

(இ-ள்.) இளமையாகிய தனங்களையுடைய பெண்கள் முகங்களும், அவர்களணிந்த இரண்டு, இரத்தினக்குண்டலங்களும், பகலிலே பிரகாசிக்கின்ற ஒருசந்திரனுடனே இரண்டு சூரியர்கள் உதயமானார்களென்று சொல்லும்படியாகிய ஒப்பற்ற ஊர், முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத் தரித்த தேவேந்திரனுடைய பட்டினமாகிய அமராவதியையும், குபேரனுடைய நகரமாகிய வளப்பமுள்ள அளகாபுரியையும் பார்க்கிலும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னுஞ் சிறந்த தலம். எ-று. (சு)

கால னெதிர்த்திட மார்பி லுதைத்தவர்
காம னுருப்பொடியா
ரால மிடற்றினர் மாலை மதிக்குறை
யாடர வப்பணியார்
நாலு முகத்தவன் ஞால மளிப்பவ
னுடு மதற்கரியார்
சூல மெடுப்பவர் மேவு திருப்பதி
சோணகி ரிப்பதியே.

(இ-ள்.) இயமனெதிர்க்க மார்பில் உதைத்தவரும், மன்மதனுடைய தேகத்தைப் பொடியாகச் செய்தவரும்; விடத்தைக்கண்டத்தில் தரித்தவரும், இளம்பிறையை யணிந்தவரும், ஆடுகின்ற சர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்டவரும், பிரமனும், விஷ்ணுவும் தேடுதற்கரியவரும் சூலத்தைக் கையிலெடுத்தவருமாய் விளங்குகின்ற பரமசிவன் வாசஞ்செய்கின்ற அழகாகியபதி அருணாசலமென்னும் தலம். எ-று. (கி)

பரசிவதோத்திரம்.

சந்தக் கலிவிருத்தம்.

உறவொடு பகையறு மொருமுத லவனெவ
னிறுதியி லுலகரு ளிறையவ னவனெவன்
மறைமுடி வினிடம் வளர்பவ னெவனெவ
னறிவினி லறிபவ னடியிணை தொழுதனம்.

(இ-ள்.) உறவும் பகையுமில்லாத ஒப்பற்ற முதன்மையானவ னெவன்? சருவசங்காரமான பின்பு உலகத்தை உண்டாக்குகிற தலைவனெவன்? வேதஸ்திரசிலே நடனஞ் செய்கின்றவ னெவன்? தன்னியற்கையறிவினுலேசகலத்தையறிகிறவனெவன்?(பரமசிவம்) அப்படிப்பட்ட தன்மையையுடைய பரமசிவனது திருவடிகளையாம் வணங்கினேம். எ-று. (கூ)

அருணாசலேசுரர் துதி.

கலிநிலைத்துறை.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவலருந்
திருமாலு மறையினனும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து
மீதலத்தும் பரிந்து தேட
வணிகொண்ட பிரமாண்ட கோளகைபொற்
கோளகையா யழகுகாட்டக்
கணிகொண்ட வொருவரையா மொருவரையா
மகலாது கருத்துட் சேர்ப்பாம்.

(இ-ள்.) இரத்தினங்களுக் கிருப்பிடமாகிய பரந்த கடலிலே யோகநித்திரைசெய்கின்ற விட்டுணுமூர்த்தியும், வேதங்களை வெளி யிட்டபிரமதேவரும், நாகங்கள் வாசஞ் செய்கின்ற பாதாளத்திலும்

பூமியிலும், மேலுலகத்திலும் வருந்தித்தேட (அவர்களால் எட்டப் படாமல்) அழகாகிய பிரமாண்ட * கோளகையான து பொன்னுற் செய்யப்பட்ட கோளகைபோலாகி அழகுகாண்பிக்க எண்ணங்கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை யாங்கள் ‡ நீங்காது இருதயகமலத்திற் சேர்த்துக்கொள்வோம். எ-று. (எ)

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில்வைத் துலக மேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானம்
பெருமானை மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம். !

(இ-ள்.) தாருகவன முனிவர்கள் வரவிட்டமானைக் கையிலே வைத்தும், ஒருமான்போன்ற விழியினையுடைய கங்கையை முடியில்வைத்தும், எழுலகத்தையும் பெற்றருளிய உமாதேவியை வாமபாகத்தில் வைத்தும். (அடியார்க்கு) அருள்செய்கின்றவரும், உன்னதமாகிய பவளமலையைப்போல் வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவரும், போர்செய்கிற இடபவாகனத்திலெழுந்தருளுகின்ற ஆண்டவருமாகிய அருணைசலத்தலத்தில் வீற்றிருக்கின்ற) பரமசிவனுடைய திருவடிகளைவணங்கி இனிவரும்பிறப்பைத்தீர்த்துக்கொள்ளுவோம். எ-று. (அ)

உண்ணாமுலையம்மை துதி.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
வழகொழுகு முகத்தி னாளை

* கோளகை-உருண்டை, ‡ அருணைசலேஸ்வரரருளுண்டாகி, னைத்தொழிலு மினிது முடியுமென்பது கருத்து.

வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணை
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

(இ-ள்.) மேகம்போன்றகூந்தலையும், கிருபைவழிந் தொழுகுகின்ற இரண்டு கடைக்கண்களையும், தந்தங்களின் காந்தி இளமையீர்கிய சந்திரிகைபோற் பிரகாசிக்கப் புழுகுதங்கிய அழகு பொருந்திய முகத்தையும், கச்சணிந்த தனங்களையும், அதிகவழகை யுடையதாயொருவருக்குந்தெரியாத இடையையும்சிறப்புப்பொருந்தியபாதங்களையுமுடைய அருணசலதலத்தில்வீற்றிருகின்ற உண்ணமுலையம்மையை மனத்தில் நினைந்துகொள்ளுவோம். எ-று. (கூ)

யானைதிறைகொண்ட விநாயகர் துதி.

மதமூன்று மாறுக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்றுங்
கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு
மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்கும் மானைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்.

(இ-ள்.) மும்மதங்களும்ஆருகி ஒடிவருகின்ற யானைமுகமுள்ளவரும், மனதில் தம்முடைய திருவடிகளை நாட்டிச் சிந்திக்கின்ற அரிய தவத்தையுடையவர்களுக்கு சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும்மூன்று பதங்களுக்கும் மேற்பட்ட நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவரும்; முப்புரத்தைநீறுசெய்த சிவபெருமானின்

தருளிய ஒப்பற்ற முதற்கடவுளும். சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமிய மென்னும் மூவகைப்பட்ட வினை காரணமாக வுண்டாகும் பிறவித் துன்பத்தை அடியோடே நீக்குபவருமாகிய யானைமுறை கொண்ட ரென்னும்விநாயகக்கடவுளை மனத்திற் சேர்த்துக்கொள்வாம்.எ-று.

சிவசுப்பிரமணியர் துதி.

கொந்தாரு மலர்ச்சோலை பருணைநெடுங்
கோபுரத்திற் குமர வேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி
தனிலுறையு மயிலி னூர்தி
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத்
தருகிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாராளைப் பணிபவர்தா
டலைமேற் கொள் வாம்.

(இ-ள்.) பூங்கொத்துகளையுடைய சோலைசூழ்ந்த அருணைசலத் தின்கிழக்குக்கோபுரவாயிலுக்கடுத்த மேற்புரமண்டபத்திலிருக்கின் றவரும், தம்மை யடைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்ய வடவீதி யிலே வாசஞ்செய்கின்ற மயில்வாகனத்தை யுடையவரும், தறியிற் கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்தி லேறுகின்ற தேவேந்திர னுக்குத்தேவலோகத்தையும், கற்பகவிருக்ஷத்தி னிழலையுங்கொடுத் தவரும், கடப்பமலர்மாலையைத்தரித்தவருமாகியசிவசுப்பிரமணியக் கடவுளைவணங்குகின்ற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல் வைத்துக்கொள்ளுவோம். எ-று. (கக)

மூவர் முதலிகள் துதி.

வாதுகொண்ட பரசமய கோளரியை
யடிவணங்கி வன்கற் றூணுற்
றீதுகொண்ட கருங்கடலைக் கடந்தசெழுந்
தமிக்கடலின் திருத்தாள் போற்றி

காதுகொண்ட விழிப்பரவை திருமணக்கெம்
பெருமானைக் கால்க ணுவத்
தூதுகொண்ட சுந்தரனைத் தம்பிரான்
றோழனையாந் துதிசெய் வோமே.

(இ-ள்.)வாதுகொண்டு செயிக்கவந்த சமணர்களாகிய யானைக ளுக்குச் சிங்கமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளது திரு ப்பாதத்தைவணங்கி,வலியகருங்கற்றூணெடு பிணித்துச்சமணர்கள் சமுத்திரத்திற்போட அக்கற்றூணையே தெப்பமாகக்கொண்டு சமுத் திரத்தைக் கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பர் சுவாமிகளதுபாதத்தைவணங்கி, காதளவுந் தாவியகண்களையுடைய பரவை நாயகியாருடைய திருமணைக்கு இரண்டுபாதங்களும் நோக எமதாண்டவரைத் தூதாகவனுப்பிய தம்பிரான் றோழராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளைநாம் வணங்குவோம் எ-று. (கஉ

திருவாதவூரடிகள் கஉ.

தாவு கொச்சகக்கலிப்பா

அத்தனார் பெருந்துறைப் கரியவினைக் கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமா கியசீவன்
முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி.

(இ-ள்.) பரமசிவன்குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த திருப் பெருந்துறைக்குப்போய்(அச்சுவாமியினுடையஅனுக்கிரகம்பெற்று அரிதாகிய தீவினைக்கடலைத்தாண்டி அக்காலத்தில் வியாபித்திருந்த பௌத்தர்களுடைய மதத்தைக் கண்டனஞ்செய்து பரிசுத்தமாகிய சீவன்முத்த தசையடைந்தவரும், அம்முத்தியாகியநிலத்திற்குவிதை

போன்றவரும் * திருவாதவூரிற்பிறந்தஞானசொரூபரும்,(அரிமர்த்தனபாண்டியனுக்கு முதன்மந்திரியாருமாகி)யிருந்தமாணிக்கவாசக சுவாமிகளுடைய பாதத்திற்குவந்தனம். எ-று. (கஈ)

திருத்தொண்டர் துதி.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மனையாளை யரற்களித்து மனங்களித்த
வியற்பகையார் மலர்த்தாள் போற்றித்
தனையாளும் பெருமானுக் கெச்சிலிடுங்
கண்ணப்பர் சரணம் போற்றி
வினையாள ரறியாத திருநீல
கண்டரடி விரும்பிப் போற்றி
யெனையாளு மிளையான்றன் குடிமாற
ரிணையடியை யிறைஞ்சு வோமே.

(இ-ள்.) பரமசிவன் அடியார் வேடம் பூண்டுவந்து மனைவியை யெனக்குக் கொடுவென்று கேட்க அதற்காக அதிகசந்தோஷத்தையடைந்து,(அவர்க்குத்) தம்மனையாளைக்கொடுத்துஅதனால் அதிகமகிழ்ச்சியடைந்தஇயற்பகைநாயனாருடைய மலர்போன்ற பாதங்களுக்கு வந்தனம், தன்னை யாட்கொண்ட சிவபெருமானுக்குத் தான்தின்று உருசிப்பார்த்த எச்சிலைக்கொடுத்த கண்ணப்ப சுவாமிகளது பாதத்திற்குவந்தனம், வினையை யுடையவர்கள் அறியாத திருநீலகண்டநாயனாருடைய பாதத்தைமகிழ்ந்துவணங்கி, அடியேனை ஆட்கொண்டருளும்இளையான்றன்குடிமாற நாயனாருடைய உபயபாதத்தை வணங்குவாம். எ-று. (கச)

* திருவாதவூர் என்பது வைகையாற்றின் கரையிலுள்ளது.

ஐயடிகள் காடவர்கோ னீரடியை
வணங்கிமக வறுத்தெம் மாற்கு
நெய்யடிசி லுடன்படைத்தார் திருவடியைத்
தொழுதுதிரு நீற்றுச் சோழன்
மெய்யடியைப் புகழ்ந்துதெய்வ வுலாச்சொன்ன
சேரனடி விரும்பி யேத்திப்
பொய்யடிமை யில்லாத புலவர்முத
லோனவரையும் போற்று வோமே.

(இ-ள்.) ஐயடிகள் காடவர்கோ ளுயனுரது இரண்டு பாதத்தை யும்வணங்கி, எமதுசுவாமிக்குப் பிள்ளையை அறுத்துச்சமைத்த கறி யை நெய்விட்ட அன்னத்துடன் படைத்தவராகிய சிறுத்தொண்ட நாயனுருடைய அழகிய சீர்பாதங்களே வந்தித்து, திருநீற்றுச்சோழ னென்னும் உண்மை யடியாரது திருவடிகளே வாயாரத்துதித்து வணங்கி தெய்வீகம் பொருந்திய திருவுலாப் பிரபந்தம்பாடிய சேர மான்பெருமானுயனுருடைய பாதத்தையும் ஆசையுற்றுப் பணிந்து, மெய்யடிமையையுடைய புலவர்கள் முதலாகிய யாவரையும் வண ங்குவோம். எ-று. (கடு)

நந்திதேவர், துர்க்கை, கௌதமர், சண்டேசுரர் துதி.

நந்திதிரு வடியிறைஞ்சி விந்தையடி
புகழ்ந்துமறை நான்கிற் கைதர்ய்
வந்தருளு கோதமனூர் மலரடியென்
முடிக்குமுடி மாலையாக்கித்
தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாத
பதத்திருந்த தண்டி தாளைச்
சிந்தைமிசைக் குடியிருத்தி யருணகிரி
நினைப்பவர்தாள் சென்னி சோப்பாம்.

(இ-ள்.) திருநந்திதேவருடையஅழகியபாதங்களைத் தொழுது, துர்க்கா தேவியினுடைய பாதத்தைப் புகழ்ந்து, நான்கு வேதத்தினின்றும் திரண்டெழுந்த ஐந்தாம்வேத சொரூபரென்று சொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்ற பாதத்தை என் சிரத்துக்குத் தரிக்கப்பட்ட மாலையாகவணிந்து, தம்முடைய தகப்பனாரது இரண்டு பாதங்களையும் வெட்டி அதனால் கெடாத மோகூபதத்திலிருந்த சண்டேசுரருடைய பாதத்தை இருதயத்திற் குடியிருக்கச் செய்து அருணாசலத் தலத்தை நினைப்பவருடைய பாதத்தையுஞ் சிரத்திற் சேர்த்துக்கொள்ளுவோம். எ-று. (கசு)

அவையடக்கம்.

தேறுகின்ற பலகலையுந் தெளிந்தசுவை
யிருநான்குந் திகழும் பாடல்
கூறுகின்ற புலவர்முன்னே தமியேனுஞ்
சிலபுகல்சொற் குறித்த வாறு
வீறுகின்ற மறைவிரிஞ்ச னேறிவரு
மனத்தின்முன் னும்விரிஞ்சன் றாதை
யேறுகின்ற கழுடன்முன்னு மொருமசகம்
பறவைதொடுத் திடுதல் போலும்.

(இ-ள்.) பெரியோர்களால்தெளியத்தக்கபலநூற்களையுங்குறைவறக்கற்று * மேலாகியஎட்டுச்சுவையும்பொருந்திய தமிழ்ப்பாடல்களைச் சொல்லுகின்ற வித்துவான்கள் முன்னே ஒன்று மறியாதயானுஞ் சிலபாடல்களைப் பாட நினைத்தவிதம் விளங்கிய நாலுவேதங்களையுடைய பிரமனேறிடத்தும் அன்னத்தின்முன்னும் அவன்

* எட்டுச்சுவையாவன;—சிருங்காரம், வீரம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, அற்புதம், பயம் என்பனவாம்.

தகப்பனுகிய விட்டுணு எறும்படியான கருடன்முன்னும் ஒருசிறிய கொசுபறந்திதெலேக் காண்பித்ததுபோலும். எ-று. (கள)

நீரிருக்கு தெனப்பழித்து விடுவரோ
வதுபாலி னிகழுமாலல்
நாரிருக்கு தெனக்கழித்து விடுவரோ
வதுமலரி னண்ணு மாறு
லாரிருக்குஞ் சடைமுடியார் விடமிருக்குந்
திருமிடற்று ருணே நாதர்
பேரிருக்கும் தகைமையினு லென்துரையே
யிகழுவரோ பெருமை யோரே.

(இ-ள்.) பாலொடுகலந்திருக்கின்ற நீரைச் சகவாசயோக்கியத் தால் தள்ளாம லெடுத்துக்கொள்ளுவார்கள், புட்பமாலையோடு சேர்ந்தாரையும் அப்படியே கொள்ளுவார்கள், ஆத்திமாலையைச்சூடிய சடைமுடியையும் ஆலகாலவிருக்குங்கண்டத்தையுமுடைய அருணுசலேசுவருடைய காமமிருக்கிற பெருமையினுலே என்னுற்செய்யப் பட்ட புன்பாடல்களையும் பெரியோர்கள் ஒப்புக் கொள்வார்களே யன்றி இகழார்கள். எ-று. (கஅ)

அழுகுதரக் கனிந்தநச்சு மரம்பழைய
தெனினுமதி லமுதுண் டாமோ
விழைவுதரு சுவைக்கரும்பு புதியதுவே
யெனினுமது விரதம் போமோ
விழிவுறு பாடலுமுயர்வு தங்கியசெய்
யுளுமவைபோ லிருக்கு மாகிற்
பழமையென நலந்தருமோ புதுமையென
விகழ்படுமோ பயன்கா ணோர்க்கே.

(இ-ள்.) அழகிய சிவப்புநிறம் பொருந்தப் பழம்பழுதை எட்டி மரம் வெகுகாலைய மரமாயிருந்தபோதிலும், அதில்மாதுரிய முண்டாகாது, யாவராலும் இச்சிக்கப்பட்ட இனிப்பாகிய கரும்பு கொஞ்சகாலாயதா யிருந்தாலும், அதில் உள்ள இரசம்போய் கசப்புண்டாகாது, (அதுபோற்) பிரயோசனத்தைக் கொள்ளுவோர்களுக்கு, குற்றத்தோடுகூடியசெய்யுள் பழமையாயிருந்ததினாலேயே ஒருநன்மையைத்தராது, யாதொரு தோஷமில்லாத உயர்வானபாடல் சிலகாலைக்குமுன் உண்டாயிருந்ததினாலேயே இகழப்படாது. எ-று (1

தினையளவுந் தமிழ்மிடியற் றதிமதுரம்
பிறந்தகல்வித் திறமை யோரும்
நினையுமியற் சுவையறியா மூடர்பலரு
வறிவின் முன்னே நிற்கலாமோ
வினையடருங் குவளைவிழி யனிச்சமல
ரணையதிரு மேனிமானார்
புனைவின்மதன் மலர்க்கணையைப் பொறுப்பதல்லா
லமரினம்பு பொறுத்திடாரே.

(இ-ள்.) கொல்லுந்தொழி லடைகின்ற நீலோற்பலம்போன்ற கண்களையும் அனிச்சப்பூவையொத்த உடம்பினையு முடைய பெண்கள் கருப்பு வில்லைத் தரிக்கின்ற மன்மதனாலே விடப்பட்ட புஷ்ப பாணத்தைப் பொறுப்பார்களேயல்லாமல் கொடிதாகியயுத்தத்தில் விடுகிற அம்பைப் பொறுக்கார்கள் அதுபோல, தினையளவுகூடச் செந்தமிழ் தரித்திரம் இன்றி அதிக மதுரம்பிறந்த கல்விவல்லவர்களும் சற்றற்கரியதெனப் பலரும் நினைக்கின்ற, இலக்கண ரசமேயறியாத மூடர்களுடைய மிகுந்த அறிவையுடைய கல்விப்பிரசங்கத்தின் முன்னிற்கார்கள். எ-று. (2 0)

நூல்வரலாறு.

கருத்துருக விரைவனந்திக் கருள்புரிய
கந்தியுமார்க் கண்டர் கோத
விருத்திமறை வியாதமுனிக் கவனுரைக்கச்
சூதனுக்கு வியாதன் சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன்
மொழிந்தசிவ புராணங் கோடி
யுருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி
வளத்தினையா லுரைக்க லுற்றேன்.

(இ-ள்.) மனமுருகப் பரமசிவன் கந்திகேசுரருக்கு அருள்புரிய கந்திகேசுரரும் மார்க்கண்டேயருக் கருள்செய்ய, மார்க்கண்டேயர் வேதங்களை யொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய, வியாசர்சூத முனிவருக்குச்சொல்ல, சூதர் ஒருவழிப்பட்ட மனமுடைய சௌன கர்முதலிய முனிவர்களுக்கருள்செய்த, சிவபுராணங் கோடியாகும் அவைகளில் முக்கியமாகியகாண்டத்தில் உருத்திரசங்கிதையிற்சொல் லிய அருணசலத் தலமகிமையை யான்சொல்லத் தொடங்கினே னென்றவாறு. (உக)

அருணைநகர் வளமையுமா லயனகந்தை
விடவழல்வெற் பான வாறும்
பொருவில்மக மழித்தது மரணுமையை
மணந்தது்கண் புதைத்த வாறும்
வருமகிடற் றெறிந்தது மிறைவியிடங்
கலந்தது்வும் வயிரப் பூணி
னிருவினையை யகற்றியது மற்றுமுள்
சரிதையெ லாமியம்பு வேனே.

(இ-ள்.) அருணசலத் தலமகிமையும், பிரமவிட்டுணுக்களுடை யகர்வமடங்க அக்கினிமலையான வரலாறும், ஒப்பில்லாத (தக்கனு

டைய) யாகத்தை அழித்ததும், பரமசிவன்பார்வதிதேவியாரைமண
ஞ்செய்ததும்அப்பார்வதிதேவியார்சுவாமியினுடையதிருக்கண்களை
மூடியதும், மகிடாசுரனேஉமாதேவிகொன்றதும், அப்பார்வதிதேவி
யார் வாமபாகத்திற்சேர்ந்ததும், வச்சிராங்கதபாண்டியனுடையபா
வத்தைநீக்கினதும் மற்றுமுள்ளனவுஞ் சொல்வேன். எ-று. (உஉ)

அங்கிகுல மோங்கவரு வல்லாள
பூபன்ற னரிய தொண்டுங்
துங்கமிகுந் தீர்த்தமுடன் திருமலையை
வலம்புரியுஞ் சுடரோன் பேறும்
பொங்குபிர தத்தனெடு வினைதீர்த்த
வாறுபுள காதி யாவு
மிங்கிதஞ்சேர் வடகலையி லிருந்ததனைத்
தென்கலையா லியம்ப லுற்றேன்.

(இ-ள்.) உலகின்கண் ஓங்குமுக்குலவேந்தருள் அக்கினிகுலோ
த்துங்கனென்றுவழங்குஞ் சோழகுலாதிபனுகிய வல்லாளராஜனுக்கு
பிள்ளைக்கவிநீங்கி முத்தியளித்ததும், அத்தலத்திலோங்குந் தீர்த்தங்
களின்பெருமையும் அந்தவழகியவருணாசலத்தைவலஞ்செய்பவர்கள்
பெறும்பேறும், கதிரவனுடைய கர்வத்தையடக்கி முத்தியளித்தவா
றும், பிரதாபம்பொருந்திய பிரதத்தனென்னும்வேந்தனதுசரித்திர
மும், பாவந்தீர்ந்தசரிதையும், புழுகுபூனையாகவிருந்துமூன்றுலோ
கங்களினுஞ் சஞ்சரித்துவந்த புளகாதிபனென்னுமரக்கனுடையசரி
தமும், இங்கிதமிகுந்த வடமொழியிலிருந்ததைத் தென்மொழியாகி
யதமிழினுற் சொல்லத்தொடங்கினேன். எ-று. (உங)

பாயிரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உங.



3. ஒரு கற்பத்தில் பிரம விட்ணுக்கள் தாம் தாம் பிரமம் என வாதிட்டுப் போரிடுந் திறத்தைத் தீர்த்தாளச் சிவபெருமான் அவர்கள் மத்தியில் அக்கினிமலையாய்நின்று அவ்வி ருவருடைய எண்ணங்களை மாற்றியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநகரச் சருக்க வசனம்.

பூலோகத்திலுள்ளசிவஸ்தலங்களுக்குள்ளேநடுநாட்டிலிருக்கும் திருவண்ணுமலையென்னும் திவ்யகூேத்திரமானதுநினைத்தவுடனே முத்தியைக் கொடுக்கத்தக்கதாகையால் அது மற்றவைகளைப்பார்க்கிலுஞ் சிறப்புற்றது. இதற்கு கௌரிநகரம், தேசுநகரம், அருணாசலம், சிவலோகநகரம், வாயுநகரம், முத்திநகரம், ஞானநகரம், தலேச்சுரம், சுத்தநகரம், தென்கபிலாயம், சோணகிரியென்றும்பெயர்இன்னும் அநேகநாமங்களு முண்டு இதில்தேவர்களும், மகத்தாகிய தபசிகளும் முத்தியையடைந்தார்கள். இதன்தென்திக்கில்என்றும்மிலை பெற்றுவிளங்காநின்ற ஒருமலையுண்டு இதுலிங்கசொரூபமாகப்பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. இதற்குசோணகிரியென்றும், அருணாசலமென்றும்பெயர். இதற்குகீழ்ப்பக்கத்திலிருக்கும் அர்க்கமலையில்தேவேந்திரனும், தென்பக்கத்திலிருக்கும் தெய்வமலையில் இயமனும், மேற்பக்கத்திலிருக்கும் தண்டமலையில்குபேரனும், மற்றநான்குதிக்குகளிலும் இருக்கும் மலைகள் நான்கிலும் மற்ற திக்குப்பாலகர்களும், அவைகளைச்சுற்றியிருக்கிறமலைகளிலெல்லாம் மற்றதேவர்களும் இருந்துகொண்டு சுவாமியைத் தோத்திரஞ்செய்வார்கள். வச்சிராங்கதபாண்டியன்முதலிய அநேகர்அருணாசலத்தைப்பிரதக்ஷணஞ்செய்ததால் பாவம்நீங்கி மோக்ஷத்தையடைந்தார்கள்.

திருநகரச் சருக்க வசனம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

முதலாவது

திருநகரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தங்கமழு வுமைபிரம்பு சுரிகையக
லாதகையான் முகிர்க்குன் றாடே
திங்களுமிழ் கிலவணைய வெண்பொடியான்
சடைமுடியான் செறிமுக் கண்ணன்
பொங்குதிரு வரையலாகப் புலித்தோலான்
புயகாலான் புரிமுந் நூலான்
கங்கைமதி தவழசடையான் றிருவாணை
செலுத்திவெள்ளிக் கயிலை காப்பான்

(இ-ள்) உயர்வாகியமழுவும், மானும், பிரம்பும், உடைவாளும் ஆகிய வினைகள் நீங்காதகையையுடையவர், பவளமலையில்சந்திரன் பொழிகின்ற நிலவுபோலத் தேகத்தில் அணிந்த விபூதியையுடைய வர், சடைமுடியையுடையவர், நெருங்கிய மூன்றுகண்களையுடைய

வர், விளங்குகின்ற இடப்பில் நின்று நீங்காத புலித்தோலை யுடையவர், நான்கு புயங்களை யுடையவர் மூன்றுபுரியாகிய பூணூலையுடையவர், கங்கையும், சந்திரனும்தவழ்கின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச் செலுத்திக் கொண்டு வெள்ளிமயமாகிய கைலாசகிரியைக் காக்கின்றவர். எ-று. (க)

கொய்வனச மலர்நிறத்தான் மைவளருந்
திருமிடற்றன் குலவெள் ளேற்றன்
சைவமெனும் பயிர்தழைக்கக் கருணைமழை
பொழிமேகந் தன்னை யொப்பான்
ஐவரையு மகத்தடக்குஞ் சிலாதரற்குப்
புறத்துலாவு மாவி போல்வான்
றெய்வமெலாந் தொழச்சிவந்த மலர்ப்பதத்தார்
னந்தியெனுந் திருநாம த்தான்.

(இ-ள்.) கொய்யப்பட்ட செந்தாமரைமலரையொத்த நிறத்தையும், கருமைவாய்ந்தவிஷம்பொருந்தியகண்டத்தையும், நல்லவெண்மையாகிய இடபவாகனத்தையு முடைய பரசிவ சம்பந்தமாகிய சைவசமய மென்னும் பயிர்தழைப்பக் கருணையாகிய மழையைப் பொழிகின்ற மேகம்போன்றவரும், பஞ்சேந்திரியங்களையும் பாஹ்யேந்த்ர விஷயங்களிற் செல்ல வொட்டாமல்தம்மனத்தகத்தேநிறுத்திய சிலாதராரிஷிக்குப் புறத்திற் சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவரும், விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம்வணங்க அதனால்சிவப்பேறிய தாமரை மலரைபொத்த பாதங்களையுடையவர், இப்படிப்பட்ட தன்மையையுடைய நந்திகேசரரென்கிற அழகிய திருநாமத்தைப் பெற்றவர். எ-று. (உ)

ஈசனணி நதிமதியுந் திருவுருவுந்
திருவுருவி லிசைந்த நீறும்
தேசவென விளங்குமொரு கயிலாயச்
சிலம்புதளச் சிலம்பின் மீதே

வாசவனே முதலிமையோர் நெருங்குதலான்
மகுடமொடு மகுடந் தாக்கி
யோசையுடன் கனகமணிப் பொடியுதிர்ந்து
கனகமலைக் குவமை யாகும்

(இ-ள்.) பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ்சந்திரனும் அவரது வெண்மையாகிய திருவுருவமும, அவ்வுருவத்தில் இயற்கையானமைந்த திருநீறுமாகிய இந்நான்கினுடைய ஒளியைப்போலப் பிரகாசிக்குங் கயிலாயமென்னும் ஒப்பற்றதிருமலையுண்டு. அத்திருமலைமேல் வணங்குகிறதற்காகத் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் வந்து நெருங்குகிறபடியால் கிரீடத்தோடு கிரீடம் இடிபட்டுச் சத்தத்துடனே பொற்கொடிகளும் இரத்தினப் பொடிகளும் உதிர்ந்து மகமேருகிரிக்குச் சமானமாகக் குலியும். எ-று. (கூ)

இந்திரநீ லச்சிலேயா லிசைந்த * கடங்
தெரியாம லெழுதிச் சேர்த்து
மந்தரமா வெனவயிரத் தூணிறுத்தி
மாணிக்க மதலை கூட்டிச்
செந்துகிரூற் § போதிகையு மரகதத்தா
னுத்திரமுஞ் செறித்து மீதே
சந்திரகாந் தத்தகடு பரப்பியமண்
டபமுளதச் சயில மீதே.

(இ-ள்.) இந்திரநீல ரத்தினக் கற்களினாலே ஒன்றோடொன்று சேர்த்த சந்தெரியாமற் சித்திரமெழுதிச் சுவர்வைத்து, மந்தரகிரி போல் வயிரத்தூண்களை நிறுத்தி மாணிக்கத்தினாற்செய்த கொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாற் போதிகையும் மரகதத்தி

* கடம் - அருகெறி. § போதிகை - குறுந்தரி.

ஞல் உத்திரமுஞ்சேர்த்து அதன்மேல் சந்திரகாந்தத் தகபெரப்பிய மண்டபம் ஒன்று அத்தமலையின்மேல் இருக்கின்றது எ-று. (சு)

இருமருங்குந் தரளமணி யுழைத்தவரி
யாசனத்தி லிருந்து நீலப்
பருமணியா லிழைத்தபெரு பாதபீடிகை
யின்மலர்ப் பதத்தை யூன்றி
மருவுபெருங் கைலையின்மீ திருந்துமுய
லகன்முதுகில் வலத்தா ளூன்றி
யருமறையை முனிவரருக் குறைக்குமிறை
யெனவிருந்தா னந்த வேளை.

(இ-ள்.) நந்திகேசுரர் அந்த மண்டபத்தில் இரண்டு பக்கமும் முத்துகளிழைத்த சிங்காசனத்திலிருந்து பருத்த நீலரத்தினத்தினு லிழைக்கப்பட்டிருக்கிற மேன்மையமைந்த பாதகுறட்டின் மேலே மலர்போன்ற திருவடிகளே வைத்துக்கொண்டு சிவகணங்கள்சூழப் பட்ட பெருமையாகிய கைலாயகிரிமேல் எழுந்தருளியிருந்து, முயலகனது முதுகின்மேல் வலப்பாதத்தைவைத்து அரிதாகிய வைதிகசைவ சித்தாந்தப்பொருளே முன்விரும்பிக்கேட்ட * முனிவரர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிய பரமசிவம்போல இருந்தார் அந்த வேளையில் எ-று (டு)

குற்சனுரோ மசன்குமுதன் குமுதாக்கன்
சகடாயன் கும்ப சாதன்
வற்சர்வைசம் பாயனன்க ணுசிமுனி
புலிக்காலன் வாம தேவன்
நற்சனகன் சனற்குமரன் வாதரா
யணன்மதங்க னடனத் தாளை
யர்ச்சனைசெய் யனந்தமுனி முதனந்த
முனிவரர்தம் மருங்கிற் சூழ.

* முனிவர்-சனகர், சனுதனர், சனந்தனர், சனற்குமாரர் என்பார்.

(இ-ள்.) குற்சர், உரோமசர், குமுதர், குமுதாட்சர், சகடாயர், குடத்திலவதரித்தஅகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கஞ்சிமுனிவர், வியாக்கிரபாதர், வாமதேவர், தத்வார்த்தஞானமுள்ள சனகர், சனற்குமாரர், வியாசர், மதங்கர், சுவாமியினுடைய நடனம்பொருந்திய திருவடிகளில் அருச்சனைசெய்கின்ற ஆதிசேடாவதாரமாகிய பதஞ்சலியார், இவர்கள்முதலாகிய அனந்தமுனிவர்கள் தம்முடையபக்கத்திற்சூழ. எ-று. (சு)

மன்னியமார்க் கண்டமுனி யுடனெழுந்து
பணிந்துயிர்கண் மழைமின் போலே
விந்நிலத்திற் பிறப்பதுவு மிறப்பதுவு
மிருவினையு மெமக்குத் தோன்றச்
சொன்னவொரு தனிமுதலே முத்திபெறும்
பரிசெமக்குச் சொல்வா யென்ரு
னன்னவுரை செவிப்புகலு நந்தியருள்
சுரந்துமுனிக் கருள்வ தானுன்

(இ-ள்) என்றும்பதினாறாக நிலைபெற்ற வயதினையுடைய மார்க்கண்டேய முனிவர் சீக்கிரத்தில்எழுந்திருந்து நந்திதேவரைவணங்கி சுவாமி! மேகத்தில் தோன்றி அதிசீக்கிரத்தில் அழியுமின்னல் போல் உயிர்கள் இவ்வுலகத்தில் பிறப்பதும் இறப்பதும் இவைகளுக்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளாகியஇருவினைகளும்எங்களுக்கு விளங்கும்படியாக உபதேசித்த ஒப்பற்ற கடவுளே! நாங்கள் மோக்ஷத்தை யடைவதற்குரிய தக்கவழியை நிருபை செய்யவேண்டுமென்றுகேட்க; அந்தவார்த்தை அவர் திருச்செவியில் விழுந்தமாத்திரத்தில் கேட்டவுடனே மிகுந்த கிருபையுடையவராகி நந்திதேவர் கிருபாநோக்கம்வைத்து மார்க்கண்டேயருக்கு அருளிச்செய்யத் தொடங்கினர். எ-று. (எ)

கம்பைநதி கும்பநதி காவிரிகோ
தாவரியே கண்ண வேணி
பம்பைநதி வேகவதி வேதவதி
சரயுநதி பரமாங் கங்கை

செம்புநதி பொன்முகரி யமுனைநதி
நருமதைமேற் செப்புஞ் சோணை
யம்புவியின் மிகவ்ளவுங் காடினர்தம்
வினையகற்று மதுவல் லாமல்.

(இ-ள்.) கம்பாநதி, கும்பைநதி, காவிரி, கோதாவிரி, கிருஷ்ண வேணி, பம்பைநதி, வேகவதி, வேதவதி, சரயுநதி, எல்லாநதிகளுக்கு மேலாகிய கங்காநதி, தாமிரபருணி, பொன்முகரி, யமுனாநதி, நருமதாநதி, மேன்மையாகச் சொல்லப்பட்ட சோணை நதியென்று அழகான பூவுலகத்தில் அநேக நதிகளுண்டு. அவைகள் தம்மிடத்தில் வந்து ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவத்தை நீக்கும் அதுவல்லாமல். எ-று. (அ)

காசியெனு மொருதலமிக் கயிலையெனுஞ்
சிறப்புளது கங்கை நீத்தம்
வீசுதிரைக் கொழுந்தோடிப் பரகதிக்கு
வேரோட்டும் வியந்து மூழ்கின்
மாசினுட லதிலிறந்தான் மரமேனும்
விலங்கேனு மனித ரேனு
மீசனரு ளுபதேசஞ் செவிப்புகலா
லிறைவனென விருக்க லாமே.

(இ-ள்.) காசியென்கிற ஒருதிவ்விய க்ஷேத்திரம் இந்தக்கைலாயத்தைப்பார்க்கிலும்சிறப்புள்ளது அக்காசியில்வருகின்றகங்காப்பிரவாகம் எறிகின்ற அலைகளைக்கொழுந்தாக ஓடச்செய்து தன்னிடத்தில் விரும்பி (திரிகரணசுத்தியுடன்) மூழுகினால் அவர்களுக்கு மோட்சத்துக்கு வழிகாட்டும். களங்கம் உள்ளதேகம் அவ்வூரில்விட்டால் மரமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனுடைய தார

கப் பிரமோபதேசம் செவியிற் சேர்தலாலே சிவசாரூப்பியத்தை யடைந்திருக்கலாம். எ-று. (கூ)

போகியொரு புற்றிடங்கொண் டிருப்பதுகண்
டிடுதலல்லாற் புனிதர் போற்றும்
யோகியொரு புற்றிடங்கொண் டிருந்ததலங்
கண்டதுண்டோ வுரைப்பக் கேளு
நாகமிசை நடித்தவருக் குயிர்வேண்டித்
திருதவஞ்செய் நளினக் கோயில்
சேகுமனத் தவரான மருவாரூர்
தனையெரித்தார் திருவா ரூரே.

(இ-ன்.) சர்ப்பப் புற்றையிடமாகக் கொண்டிருந்ததைப்பார்த் ததேயல்லாமல் ஞானிகள்போற்றுகின்ற சிவயோகியோ புற்றினிட த்திலேயிருந்த தவத்தைப்பார்த்ததுண்டோ? அதுயாதெனில் சொ ல்லக் கேளுங்கள், காளிங்கனென்னும் பாம்பின்மேலேறி நடனஞ் செய்த விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சைவேண்டிசெந்தாமரையாகியஆல யத்தில் வசிக்கும். இலட்சுமி பூசைசெய்துகொண்டிருந்தகமலாலய மென்னுந்தலமாகி வஞ்சம்பொருந்திய மனமுடைய திரிபுராதிகளை கைத்தெரித்த சிவபிரான் வாசஞ்செய்கின்ற ஊராகிய திருவாரூர் என்னும் திவ்யஸ்தலந்தான். எ-று. (கo)

தக்கவிராட் புருடன்மனத் தலமெனுமோர்
தலமுளதத் தலத்தின் மீதே
மூக்கணஞர் நடிப்பரவர் மூர்த்தியிலா
யிரத்திலொரு மூர்த்தி தானே
யிக்கயிலை யிடத்துறைவ தென்னிலதின்
பெருமைநம்மா லிசைக்க லாமோ

வக்கனக சபைகண்டா ரரியயன்கா
ணுதமுத்தி யடைகு வாரே.

(இ-ள்.) பெருமைபொருந்திய விராட்புருடனுடைய * இதய தலமாகியசிதம்பரமென்று சொல்லப்பட்ட ஒருதலமுண்டி அதிலுள தாகிய கனகசபையில் மூன்றுகண்ணுடைய பரமசிவன்ஆனந்தத்தா ண்டவஞ்செய்வார்! அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன் றுதான் இக்கைலாச பதத்திலிருக்குமென்றால் அத்தலத்தின்பெரு மையை நம்மாற் சொல்லக்கூடுமோ! அப்படிப்பட்ட அழகுபொருந் திய கனகசபையை (உள்ளன்புடன் கண்டுதரிசித்தவர்கள் விஷ்ணு விஞலும் பிரமாவிஞலும் காணப்படாத முத்தியையடைவார்கள்.

தாங்காழி யவன்சிவனே வழிபடுமு
துவரையந்தத் தலத்தைப் பார்க்கி
லோங்கார வடிவதிலே யுயிரிழந்தா
லுடலழியா தொளிகெ டாது
வீங்காது நெகிழாது பிறவுயிரால்
வருந்தாது வெடித்தி டாது
தீங்கான மணங்கிருமி பிறவாது
கிடக்கும்வலச் செவிமே லாக.

(இ-ள்.) சக்கரத்தைக்கையில்தரித்துள்ள விஷ்ணுமூர்த்திபரம சிவனைப் பூசித்துப்பேறுபெற்ற விருத்தாசல மென்னும் ஒருதலமு ண்டு; அந்தத்தலத்தைப் பார்க்குமிடத்தில் அதுபிரணவசொரூபமா யிருக்கும். அந்தத்தலத்தில் உயிர்விட்டால் தேகமழியாது, நிறங்கு ன்றாது, வீக்கமுண்டாகாது, கட்நெழுவாது, மற்றப்பட்சி மிருகங் கள் முதலிய பிறவுயிர்களால் பின்னமாகாது, வெடிபடாது, அதிர் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாது மேலாகக் கிடக் கும். எ-று. (கஉ)

* ஸ்ரீபர்வதஞ் சிரஸ்தானே கேதாரந் துல்லாட ஹ்ருதயவரூ உம்உபரிடதசுலோகத்தால் சிதம்பரம் இதயதலமாதல்காண்க.

பொய்ம்மகிட முகனைவென்ற வம்மையிட
மகலாத புனித மூர்த்தி
செம்மையிட மென்றிருந்த கருமகிட
முகமாகச் செறிகே தாரம்
இம்மையிடர் மறுமையிடர் ஞானமில்லாச்
சிறுமையிட ரெல்லாந் தீர்க்கும்
மும்மையிடம் பெறுமுலகுக் கெளிதாகத்
தனியிருந்த முத்தி போலும்.

(இ-ள்.) பொய்ம்மையாகிய எருமைக்கிடாமுகத்தினையுடையம கிடாசுரனை வெற்றிகொண்டபார்வதி வாமபாகத்தில்நீங்காதபரிசுத் தராகிய பரமசிவன், செம்மையாகிய இடம்இதுவேயென்றுஎழுந்த ருளியிருக்கிற, கறுப்பாகிய எருமையினது முகம்போல் விளங்கிய திருக்கேதாரமென்னுந்தலம்; இத்தச்சன்மத்தில் வருகிறதுக்கமும் மறுமையில் வருகிறதுக்கமும் ஞானமில்லாததனாலேஉண்டாகின்ற துக்கமுமாகிய எல்லாத்துயரத்தையும் தீர்ப்பதற்கு மூன்றுலகத்தா ருக்கும் எளிதாகித் தனியேயிருந்த முத்திதானம்போல் இருக்கின் றது. எ-று. (கஙு)

இருப்பனத்தன் பருப்பதத்திற் பிரமராம்
பிசுகையுடனென் றிரண்டு போதும்
விருப்பனத்தன் பணிந்திலையோ ருலகுமுத
லினைத்துலகும் விதித்தான் மற்றைத்
திருப்பதிக்கோ யிருப்பவனுந் தேவர்களுஞ்
சராசரமாய்ச் செனித்தவ் வூரி
லிருப்பதற்கு முயல்வரென்று லெத்தலமு
மத்தலத்துக் கிணைய தாமோ.

(இ-ள்.) மல்லிகார்ச்சுன மென்னும் பர்வதத்தில் பிரமராம்பிகையுடனே பரமசிவன் எழுந்தருளியிருக்கிறரென்று அன்னவாகனத்தையுடைய பிரமன்வந்து பத்தியோடு இரண்டுவேளையும்வணங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாவுலகத்தையும் படைத்தார், மற்றைத் திருப்பதியிலிருக்கிற வெங்கடாசல பதியும்தேவர்களும், அந்தத்தலத்தில் சரமாகவும்; அசரமாகவும்பிறந்திருப்பதற்குத் தவஞ்செய்வார்களென்றல் எப்படிப்பட்டதலங்களும் அந்தக்ஷேத்திரத்திற்குச் சமானமாகுமோ. எ-று. (கசு)

விருப்படியார் சொரிந்தவறு கலருடனே
விழியிடந்த வேடர் காலிற்
செருப்படியு முகந்தபிரான் காளத்தி
நகரமெனுந் தெய்வ பூமி
பருப்பதமா கியும்விளங்குந் தண்ணருக்
கொழிக்குமலர்ப் பதுமை யோடு
மருப்படியுந் துழாய்மார்பன் வடமலைமே
லிருந்துகண்டு வணங்க மாதோ.

(இ-ள்.) திருக்காளத்தியென்னுந் தெய்வீகம்பொருந்திய தலத்தில் ஆதிசைவப் பிராமணராகிய சிவகோசரியார் பத்தியோடுமிகுதியாக அருச்சனைசெய்த அறுகு புஷ்பங்களாகிய இவையுடனேகண்ணைப்பிடுங்கிப் பதித்த கண்ணப்பதேவரது காற்செருப்பையும்விருப்பமாகஏற்றுக்கொண்ட இலிங்கசொரூபமாகிய சிவபெருமான்தானே குளிர்ச்சிபொருந்திய தேனைச் சொரிகின்ற தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியோடு வாசனையுள்ள துளசிமாலையையணிந்த மார்பினையுடைய விஷ்ணுமூர்த்தி திருவேங்கடமென்னுந் திருப்பதியில் நின்றவண்ணமங்கிருந்து தரிசனஞ்செயது வணங்கும் பொருட்டு அந்தக்காளத்தியில் மலைவடிவாகியும்விளங்குகின்றார். எ-று. ()

தேக்குநா லிருதிசையும் புகழ்ந்ததொண்டை
நாடெனுமோர் தெய்வ நாட்டி
ணேக்கினர் வினையகற்று மொருதலமுண்
டதன்பெயரை நுவலக் கேளும்
வாக்குநா யகிகணவன் படைத்தபுவி
தழைக்கவறம் வளர்த்தெந் நாளுங்
காக்குநா யகியுடனே கம்பநா
யகருறையுங் கச்சி மூதூர்.

(இ-ள்.) அகன்றளட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கின்ற*தொண்டைமண்டலமென்னுந் தெய்வீகம்பொருந்திய ஒப்பற்றநாட்டில், தரிசனஞ் செய்தவர்களுடைய பாவத்தைப்போக்குகின்ற ஒருதலமுண்டு. அதன்பெயரைச் சொல்லக்கேளுங்கள். சரஸ்வதியின் கணவனுகிய நான்முகன்படைத்த உலகத்தினுள்ள உயிர்களனைத்தும் பிழைக்கும்படி முப்பத்திரண்டு தருமத்தையும் பரிபாலனஞ்செய்து எந்நாளும் காக்கின்ற தலைவியாகிய காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீகாஞ்சிபுரமாகும். எ-று. (கசு)

பழுதறவே யெழுகடலு மெழுகிரியு
மெழுதலமும் படைத்த வேதக்
கிழவன்றி யாழுடியை யொருபால
னறிந்தபதி கிளத்தக் கேளு
மழகுதரு நடம்புரியு மிறைவருக்கம்
பிகைபூசை யயஞர் பூசை
விழைவுதரு மரிபூசை கரன்பூசை
புரிந்ததிரு விரிஞ்சை மூதூர்.

---

* தொண்டைமான் என்னும் அரசனுலாளப்பட்ட மண்டல மாகலின் தொண்டைமண்டலம் என்னும்பெயர்த்து. இவ்வுண்மை யறியார் தொண்டைமண்டலம் எனக்கொண்டு இடர்ப்படுவர்.

(இ-ள்.) யாதொரு பழுது மில்லாமல் ஏழு சமுத்திரத்தையும் ஏழுமலையையும் ஏழுலகத்தையும்படைத்த நான்மறைக் கிழவனுகிய பிரமனுல் அறியக்கூடாத * சிரத்தை ஓர் ஆதிசைவப் பிராமணப்பி ள்ளை அறிந்ததலத்தைச்சொல்லக்கேளுங்கள், அழகுவற்றிருக்கின்ற ஆநந்தத்தாண்டவஞ்செய்தசுவாமிக்குப்பார்வதியாரும் பிரமனும்இவ நேசமிருந்தவிஷ்ணுவும்கரனும்பூசித்தவிரிஞ்சிபுரமென்னும்தலமாம்

* சுவாமி சிரத்தைப்பாலன் அறிந்ததாவது—"பயனுரும்பதிபசு பாசம்புகல் பலநூலுந்தெளிவோ, னியலாகும்பெயர்சிவகா தன்றிண மிவனேடின்புறுமா, னயனுனக்கினி வடமீனுந்தொழுநலமார்பண் புடையா, டயவாமன்கவ டருபாலன்சிவ சருமாவென்பவனே"—

(இ-ள்.) பயனுள்ள பதிபசுபாசங்களைச் சொல்லுகின்ற ஆகம முதலிய பலசாத்திரங்களையுமுணர்ந்தவன், சிவகாதன்என்னுமியற் பெயரையுடையவன், நாடோறுமிவனுடனின்பழுற்றிருக்குமனை நயனுனக்கினி அருந்ததியுந் தொழத்தக்கற்புடையவள், அன்புள்ள அவள்பெற்றபுத்திரன் சிவசருமா எனப்பெயருள்ளவன்—(அப்பே ர்க்கொத்த சிறுபாலன் அபிஷேகமுதலியவைசெய்கிறதற்கு மார்க்க சகாயர் சந்நிதிக்குட்சென்று பார்க்குமளவில், அந்தோ பூசாகாலந் தவறுகின்றதே (—"இருகரத்தினுலிவர் முடிதொட வரிதென்றே கருதியெய்த்துகொந் தினியென்கொல் செயலெனக் கவன்ருன், பரகதிக்குவந்தருள்புரி பதவிசகாயன், மரகதக்கொடி யிடத்தினுன் றிரு முடிவளைத்தான்"—(இ-ள்.) நம்முடைய இரண்டு கைகளால் இம்மார்க்க சகாயருடைய திருமுடியைத்தொடுவது நமக்கு அரிதென் றுகருதி மனமிளைத்துவருந்தி இனி யாதுசெய்வதென்று துயர மடைந்தான்; அப்போது பரகதிக்குவந் தருள்செய்த மரகதவல்லி யம்மையை யிடப்பாகத்திலுடைய மார்க்கசகாயராகிய பரமசிவம் தன் திருமுடியை வளைத்தார்.—இவ்வரலாற்றை திரு விரிஞ்சைப் புராணம் பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்திற் காண்க.)

பொய்யாது புனல்பெருகுங் காவேரி
நதிக்கரையிற் * பூந்த ராயு
மையாறு மிடைமருதுந் திருக்குடந்தை
வளநகரு மானைக்காவு
மையாரு மிடற்றர்திரி சிரமலையு
மாணிக்க மலையுந் தோன்று
மெய்யாக வவற்றினது பெருமையெல்லாம்
விரித்துரைக்கும் வேதந் தானே.

(இ-ள்.) பொய்க்காமல் எந்நாளும் பெருகிவருகின்ற காவேரி நதியினிருகரையிலும்சோழி, திருவையாறு, திருவிடைமருதூர், வளம் பொருந்தியகும்பகோணம், திருவானைக்கா, விஷம்பொருந்திய கண்டத்தையுடையமாதரு பூதேசுரர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரம், இரத்தினகிரி இவைமுதலான தலங்களில் விளங்கிக்கொண்டிருக்கும் அந்தத் திவ்விய க்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம் நான்கு வேதங்களும் மெய்ம்மையாக விரித்துச்சொல்லும். எ-று.()

பருவளையார்ப் பரிக்கும்வைகை நதிக்கரையின்
மதுரையறு பத்து நாலு
திருவிளையாட் டிறைவனியற்றிய தலமா
மதன்பெருமை செப்ப லாமோ
கருவிளையாட் டகற்றுமிரா மேச்சுரன்தென்
கடற்கரையிற் காணு மங்கே
செருவிளையாட் டிராகவனு நிராவணனைத்
தொலைத்தபழி தீர்த்திட் டாரே.

(இ-ள்.) பெரியசங்குகள்முழங்குகின்ற வைகையாற்றின் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்த

* பூவாகவும் தாராகவும் சங்கநிதி பதுமநிதிஎன்னும் இருநிதிகளும் பூசித்தமையால் சோழிபூந்தராய் எனப்பெயர் பெற்றது.

ருளியமதுரைஎன்னும் ஒருதலமுண்டு; அத்தத்தலத்தின் பெருமை யாவராலுஞ் சொல்லப்படாது. தென்சமுத்திரத்தின்கரையில்சன னதுக்கத்தைப்போக்குகின்ற இராமேச்சுரமென்று ஒருதலமுண்டு யுத்தத்தைவிளையாட்டாகச்செய்கின்ற இராமபிரான் இராவணனைக் கொன்றதனால் வந்த பிரமகத்தி அந்தத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துத் தீர்த்துக்கொண்டார். எ-று. (கக)

அத்தகைய தலங்கடமிற் புறக்கவுட
லிறக்கவிழி யமையக் காணச்
சுத்தவெளி தனிலாடுஞ் சுடரொளிக்கு
மனங்களிக்கத் தூய்நீ ராட்ட
வித்தமதை யெடுத்திறைத்துச் சிவாலயமும்
வீரிபொழிலு மிகவுண் டாக்க
வுத்தமமாகியபரம கதியுளதென்
றுரைக்கமுனி யுரைப்ப தானன்.

(இ-ள்.) அப்படிப்பட்டதன்மையையுடைய தலங்களுக்குள்ளே யாவராலுலும், பிறந்தாலும், தேகத்தைவிட்டு இறந்தாலும்,போய் கண்கள்களிக்கத்தரிசித்தாலும், பரிசுத்தமாகிய சிதாகாசத்தில் பஞ் சகிருத்தியநிருத்தஞ்செய்யும் மிகுந்தபிரகாசமே சொரூபமாகியபர மசிவனுக்குத் திருவுளங் களிக்கும்படி தூய்மையாகிய நீரினால் அபி ஷேகஞ்செய்தாலும், திரவியங்களைச்செலவுசெய்து சிவாலயங்கட் டுவித்தாலும், விரிந்த பூஞ்சோலைமிகவைத்தாலும், உத்தமமானபர கதியுண்டாமென்று நந்திதேவர் அருளிச்செய்யக்கேட்டு மார்க்கண் டேயர் சொல்லத்தொடங்கினர். எ-று. (உ0)

இங்ஙிகரா ஙதிதோறுந் தலந்தோறு
மிப்படியே யியற்ற வென்றான்
முன்னியசீ ரமரருக்குஞ் சித்தருக்கு
முனிவருக்கு முடிவு ரைத

மின்னிகருஞ் சிறுவாழ்க்கை மனிதர் தமக்
கெளிதாமோ மேவி னலு
மன்னியமாம் பிறவுயிர்க்கு மரத்தினுக்குங்
கிடையாதே யமல வென்றான்.

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய சிறந்தநதிகள் தோறும் தலங்கள்தோறும்போய்த் தேவரீர் கட்டளையிட்ட விதமாகவேதீர்த்தமாடி வந்தனை வழிபாடு முதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்தசிறப்புப்பொருந்திய தேவர்களாலும், சித்தர்களாலும், முனிவர்களாலும்முடியாது. அப்படியின்னல்போற்றேன்றி கூணத்திலழியுஞ் சிறியவாணுளையுடைய மனிதர்களுக்கு எளிதில்முடியுமோ; அவ்வாறுமுடிந்தாலும் மிருகங்களுக்கும்பட்சிகளுக்கும் விருட்சங்களுக்கும் அவ்விதபுண்ணியம் கிடைக்கமாட்டாதே சுவாமீ என்று சொன்னார் மார்க்கண்டேயர். எ-று. (உக)

ஆடுமெந்த நதிதோறு மினிதெனுமத்
தலந்தோறு மனந்த காலந்
தேடுகின்ற பயனுதவுஞ் சிவஞானம்
வருந்தாமற் சிறிது போதி
னுடுகின்ற வுறுப்பிலர்க்கு மறிவிலர்க்கும்
புலையருக்கு நரகாள் வார்க்கு
மோடுகின்ற விலக்கினுக்கு மற்றைவைக்குந்
தருமூரொன் றுரைப்பா யென்றான்.

(இ-ள்.) மனிதர்கள்ஆடுகின்றஅந்தநதிகள்தோறும்,இனிதாகிய அந்தத்தலங்கடோறும், அநேக காலமாக ஸ்நானஞ்செய்து தரிசனமுதலியவைகளைச்செய்ததனால் உண்டாகிய பிரயோசனமாகிய சிவஞானத்தை, வருத்தப்படாமல் கொஞ்சகாலத்தில் தானேபிரதட்சணஞ்செய்தல்,நமஸ்கரித்தல், தரிசனஞ்செய்தல்,முதலியவற்றிற்கு

எதுவாகியகைகால் கண்களற்றவர்களுக்கும், விவேகசூனியர்களுக்கும் சண்டாளர்களுக்கும்; கரகத்தில் வீழத்தகுந்தபாவஞ் செய்தவர்களுக்கும், சஞ்சரிக்கிறமிருகங்களுக்கும் மற்றுமுள்ளஎல்லாச்சீவராசிகளுக்கும்கொடுக்கின்றஇறந்த ஒருதலம் இன்னதென்று அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்டார் மார்க்கண்டேயர். எ-று. (உஉ)

இப்படியே நமனைவென்ற பெருந்தவனு
மிருந்தவரு மியம்பி யேத்திக்
கைப்பதும் மலர்கொடுதன் காற்பதுமந்
தீண்டுதலுங் கருணை யாகி
யப்படியே முத்திதரு மொருதலமுண்
டுரைக்குதுவென் றமைத்தான் பின்னை
மைப்படியுங் கண்டத்தா ணருணகிரி
நினைந்துபர வசத்த னானன்.

(இ-ள்.) இயமனைச்சயித்த பெருமையாகிய தவத்தினையுடைய மார்க்கண்டேயரும்,மற்றுமுள்ளமுனிவர்களும் இந்தப்பிரகாரமாகச் சொல்லித்தோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்றகைகளால்திருநந்திதேவருடைய தாமரைமலரையொத்த திருவடிகளைப் பரிசித்துவந்தனஞ்செய்யுமளவில், அவர்திருபையுள்ளவராகி, நீங்கள்சொன்னபடியே(சராசரங்களெல்லாவற்றிற்கும்)மோக்ஷங்கொடுக்கிறதலம் ஒன்றுண்டு. அதைச்சொல்லுகின்றேமென்று கையமர்த்திப், பின்பு விஷந்தங்கியகண்டத்தையுடையபரமசிவம் எழுந்தருளியிருக்கிறஅருணசலமென்னுந்தலத்தைநினைந்துபரவசமானார் நந்திதேவர். எ-று.

அங்கமெல்லா மயிர்ப்பொடிப்ப நடுநடுங்கி
விழிவிரண்டு மருவி பாயச்
செங்கையினை மலர்குவிய மொழிதளர
நெடும்போது தெளிவில் லாமற்

கங்கையணி சடையானே யருணகிரிப்
பெருமானே கனற்கண் ணனே
யெங்களையா ளுடையானே யெனத்துதித்து
விழித்ததற்பின் னிசைப்ப தானுன்.

(இ-ள்.) தேகமெல்லா மயிர்க்குச்செறிய நடுநெஞ்சிக்கொண்டு இரண்டு கண்களிலும்நின்று அருவிபோல் ஆனந்தபாஷ்பம்பெருக மலர்போன்ற இரண்டுகைகளும்ஒன்றாய்க்குவிய, வார்த்தைதடுமாற அநேகநாழிகை தம்வயமற்றுப் பரவசமடைந்தவராய்க் கங்கையைத் தரித்திருக்கின்றசடையையுடையவரே! அருணகிரியில்எழுந்தருளியவரே! அக்கினிக் கண்களையுடையவரே! எங்களை யாட்கொண்டவரே! என்றுதோத்திரஞ்செய்து விழித்துக் கொண்டு அதன்பின்பு சொல்லத்தொடங்கினர் நந்திகேசுரா. எ-று. (உசை)

சத்தியம தாமொழிவன் முத்திதருமூர்த்து
தனக்குறிய நாமமிக வுண்
டத்தனையுநான் மொழிய வெத்தனைவலேனதிலோ
நற்பவள வேபுகலு வேன்
சித்தியு தவுங்கவுரி தேசுநக ரென்றுபெயர்
தென்னருணை யென்று பெயர்சீர்
வைத்தசிவ லோகநக ரென்றுபெயர் நீடுசதுர்
வாயுநக ரென்று பெயரே.

(இ-ள்.) அப்படி தோத்திரஞ்செய்த பின்பு நந்திதேவர் சொல்வார், கேளும்மார்க்கண்டேயரே! சத்தியமாகச்சொல்லுகின்றேன், (உலகத்திலுள்ளசராசரப்பொருள்களுக்கெல்லாம்மேன்மைத்தமாத்திரத்தில்) மோக்ஷத்தைக்கொடுக்கிறதலமொன்றுண்டு. அதற்குரியநாமம்

களோ அநேகம். அத்தனைபெயரையுஞ் சொல்லுகிறதற்குநான் எவ் வளவு சக்தியுடையவன்; ஆனலும் அவைகளில் சிலநாமமாத்திரம் சொல்லுகின்றேன், சித்திகளைக் கொடுக்கிற கவுரிநகரென்றும், தேசு நகரமென்றும், அழகியஅருணசலமென்றும், சிறப்புப்பொரு ந்திய சிவலோகநகரமென்றும், நாகரிக மிகுந்தவாயுநகரமென்றும், நூல்களிற் சொல்லப்பட்ட திருநாமங்களை யுடையது. எ-று. (உடு)

சத்தபுரி யேமுத லெடுத்ததலம் யாவுமொரு
தட்டுமொரு தட்ட தனிலே
யத்தலமு மிட்டெதிர் நிறுக்கவவை கட்கதிக
மானதொளி ரந்த நகர
மூத்திநக ரென்றுபெயர் ஞானநக ரென்றுபெயர்
மூர்த்தியத லேச்சுர மெனுஞ்
சுத்தநக ரென்றுபெயர் தென்கயிலையென்றுபெயர்
சோணகிரி யென்று பெயரே.

(இ-ள்.) பின்னும் நந்திதேவர் சொல்வார்; சத்தபுரிகளென்கிற அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி. காஞ்சி, அவந்தி, துவாரகை முதலாகிய எல்லாத்தலங்களையும் ஒருதட்டிலும், அந்த அருணசல த்தை ஒருதட்டிலும்வைத்து நிறுக்க, அந்தத்தலங்களுக்கெல்லாம் அதிககனத்தையுடைத்தாயிருந்துபிரகாசிக்கின்றஅத்தத்தலத்துக்கு மூத்திநகரமென்றும், ஞானநகரமென்றும் முதன்மையாகிய தலேச் சுரமென்றும், சுத்தநகரமென்றும்; தக்ஷணகைலாயமென்றும்சோண கிரியென்றும் பெயராம். எ-று. (உக)

வாதமிகு காலவழ லூழியலை யேழுபுயல்
வாதைபுரி யாத நகரஞ்
சீதமுத லானபிணி தீமையிடையூறு பசி
சேரவரி தான நகரம்

மாதவர்கண் மாதவர்கள் பூசைபுரி மாநகர
மாதவர்க ணாபி மலராம்
போதிலுறை வேதியர்தொ ணூறுபெய
ரோடறுவர் பூசைபுரி தேவநகரம்.

(இ-ள்.) இறுதிக்காலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினாலும் ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும், சமுத்திரபிரளயத்தினாலும், யுகமுடிவில்பொழிகின்றஎழுமேகங்களினாலும்யாதொருகெடுதியும்அடையாததலம்வாதபித்தசிலேத்துமங்களாலுண்டாகிறபிணிகள், தீமையாகிய இடையூறுகள், பசி இவைகள்சேராததலம்; மகத்தாகிய தவசிகள் அநேகவிஷ்ணுக்கள் பூசைசெய்ததலம், அப்படிப்பட்ட விஷ்ணுக்களுடைய நாபிகளாகியதாமரைமலர்களில்உண்டாகிய தொண்ணூற்றுபிரமாக்கள்பூசித்ததெய்வீகம்பொருந்தியதலம் அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (உ எ)

ஒன்றுளது பூமிதனி லின்றுபுதி தன்றுலகு
மும்பரு முயர்ந்த வெளியு
மென்றுளதந் நாளுளது வேதமுடி மீதினி
லிருப்பதக லாம லதிலோர்
குன்றுதலி லாதவொரு வெற்புளது புண்டரிக
கோளகையு மூடுருவி யே
நின்றுளது தென்றிசையி லென்றுமழி யாதுநெடு
நீருலகு வாழ்வு பெறவே.

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடையதலம் ஒன்றுஇப்பூமியுலுண்டு அந்தத்தலம் இன்றைக்குப் புதிதாக வந்ததல்ல; இந்தப் பூவுலகமும்மேலுலகங்களும் ஆகாயவெளியும்என்றுண்டாயினவோ அன்றேஉண்டாயிருக்கின்றது. நீங்காமல் வேதத்தின் முடிவிலுள்

ளது; அந்தத்தலத்தில் கெதெலில்லாத ஒருமலையுண்டு; அதுநெடிய கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்கு தென்திக்கில் என்றும்நிலைபெற்றுப் பிரமாண்டகோளகையூருவிநிற்கின்றது. எ-று.

கலிவிருத்தம்.

ஆரிட மிராக்கத மசுரந் தேவதந்
தாருடை மானிடஞ் சம்பு வென்றுநாம்
பேரிடு மிலிங்கமே பிறங்கு மெங்கணு
மேருடைப் பருப்பத மிலிங்க மாவது

(இ-ள்)* ஆரிடமென்றும், ராக்ஷஸமென்றும், ஆசுரமென்றும் தைவதமென்றும், மானுடமென்றும், நாம்காரணம்பற்றி யிடப்பட்ட, திருநாமங்கள்பெற்ற இலிங்கங்கள் எந்தத்தலங்களிலும் பிரகாசிக்கும். இந்தத்தலத்திலோவென்றால்மகாமேருவினைய மலையேஇலிங்கமாயிருக்கின்றது. எ-று. (உக)

செங்கனன் முதல்யுகந் திரேதை மாமணி
பொங்கிய துவாபரம் பொலிந்த பொன்னிறந்
தங்கிய கலியுகந் தன்னிலே சிலை
யங்கமா மதன்பெய ரருண பூதரம்.

(இ ள்.) முதல்யுகமாகிய கிருதயுகத்தில் சிவப்பாகிய அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில்மாணிக்கமலையாகவும் துவாபரயுகத்தில் மிகுந்தபிரகாசத்தையுடையபொன்மலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவுந்திருவுருக்கொள்ளும்அந்தமலைக்குஅருணசலமென்னுந் திருநாமமாம். எ-று (ஙo)

* இருடிகளாலேபூசைசெய்யப்பட்டதுஆரிடலிங்கம், ராக்ஷசர்களாலே பூசை செய்யப்பட்டது இராக்கதலிங்கம், தேவர்களாலே பூசைசெய்யப்பட்டது தைவதலிங்கம், மானுடராலேபூசைசெய்யப்பட்டது மானுடலிங்கம் என்பர்.

கருவியா முகக்கடை சொரியுங் காரின
முருவமே ழன்றியொவ் வொன்று கோடியாய்ப்
பருவமா யிரந்துளி பணியிற் பெய்யினு
மருவியா யடங்குமவ் வசல மீதினில்.

(இ-ள்.) எல்லாச்சீவராசிகளும்கருவறும்படி யுகாந்தகாலத்தில் உலகம் நசிப்பதற்குக்காரணமாகமழையைப்பொழிகின்ற மேகங்கள் எழெண்கிற எண்ணிக்கையில்லாமல் ஒவ்வொன்றுகோடியாகி ஆயிரம்வருஷம் ஒவ்வொருதுளிபனியின்கனிபோலப் பருமனுகப்பெய்தாலும் அந்தமலையின்மேல் சிறியஅருவியாகச்சுவறி அடங்கிப்போமல்லாமல் புறத்தில் வரமாட்டாது. எ-று. (கக)

அரியய னளவிடா தனந்த காலமாய்த்
திரிதரி னதற்கிணை செப்ப லாகுமோ
சுரநதி பரவதிற் சுனையி னீருண
விரவிதன் புரவிமே லேறிச் செல்லுமே.

(இ-ள்.) விட்டுணு பன்றியாகவும், பிரமன் அன்னமாகியும், அனேககோடிகாலமாய்த்தேடிஅடிமுடிகாணுமல் வருந்துவார்களானல், அந்தஅருணாசலத்துக்குஒன்றைச்சமானமாகச் சொல்லக்கூடுமோ; அஃதல்லாமல்ஆகாசகங்கையான தூதன்னீலுமுக்கியமென்றுதிசெய்கின்ற அந்தமலையிலிருக்கின்ற சுனையிலே இருக்கப்பட்டநீரைவுண்ணச் சூரியன்தேரிற்கட்டிய குதிரைகள் தாவிச்செல்லும்.

வெண்மைசேர் புயலத னடியின் மேவுக
லெண்மகிழ் கயிலைமீ திருப்ப தொக்குமோ
றண்மைசேர் கார்த்திகை விளக்கு சாற்றுதன்
மண்மகன் மகுடமா மணியிற் றோன்றுமே.

(இ-ன்.) வெள்ளைநிறமாகியமேகங்கள் அந்தமலையடிவாரத்தில் சேருதல் யாவரும் எண்ணிமகிழும்படி, கைலாயகிரிமேல்அந்தமலை

யிருக்கிறதை ஒக்கும். குளிர்ச்சிபொருந்திய கார்த்திகைமாதத்தில் கிர்த்திகாதீபம் அந்த மலைமேல் ஏற்றுதல் யாவராலும் புகழப்பட்ட பூமிதேவியினுடையகிரீடத்தில்பதித்தஇரத்தினம்போற் றோன்றும்

அன்றுமா றிசைமுக னடவி டாமுதன்
மன்றல்சேர்ந் திடுமலை வடிவு கொள்கையா
னன்றுநம் மருகனு நாமு மோர்குல
மென்றுள மகிழ்ந்ததே யிமைய பூதரம்.

(இ-ள்.) முற்காலத்தில் விட்டுணுவினாலும்பிரமனாலும்,அறியப் படாத பரமசிவன், கிர்த்திபொருந்திய அந்த மலையுருவங்கொண்ட தினால் இமயபர்வதராசனுனவன் நல்லது (இத்தனை காலம்வரைக் கும் வேறு சாதியாயிருந்த) நம்முடைய மருமகனும் நாமும் இப் போது ஒரு குலத்தவராயினோமென்று மனஞ்சந்தோஷித்தான். ()

பன்னிரு திங்களும் பரிதி யானது
மன்னியீ மதியமும் வலம தாய்வரூ
மந்நிலை யுரைக்கவென் னறிவு போதுமோ
வுன்னிய வாசையா லுரைக்க லுற்றனன்.

(இ-ன்.)பன்னிரண்டுமாதமும்சூரியனும், நிலைபெற்றசந்திரனும் மகாமேருவை வலஞ்செய்தல்போலப் பிரதட்சணஞ்செய்து வருவா ர்களென்றால் அந்த அருணசலத்தின் பெருமையைச் சொல்லுவத ற்கு அற்பமாகியஎன்னுடைய புத்திபோதுமோ ! ஆனாலுஞ் சொல் லவேண்டுமென்று நினைவுகொண்டஅவாவினால் சொல்லத்தொடங் கினேன். எ-று. (நூ)

அர்க்கமா மலையுள தடுத்த கீழ்த்திசை
நற்கணு யிரத்தவ னண்ணி வாழ்த்துவன்
றெற்கிலே யுளதுபுத் தேளிர் மாமலை
பொற்கையந் தகன்றினம் புகழ்ந்து போற்றுவான்.

(இ-ள்.) அருணைசலமென்னு மலைக்கு அடுத்த கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்று ஒருமலையுண்டு, அதில் ஆயிரங்கண்களோயுடைய தேவேந்திரன் இருந்துகொண்டுசுவாமியைத் தோத்திரஞ்செய்வான். அவ்வருணகிரிக்கு அடுத்ததென்பக்கத்தில் தெய்வமலையென்று ஒரு மலையுண்டு, அதில் சிவந்த கைகளையுடையஇயமன் காடோறும் புக ழ்ந்துகொண்டு வணங்குவான். எ-று. (நக)

மேற்றிசைத் தண்டமா விலங்க லுண்டதிற்
சேற்றிசை வருணன்முன் செங்கை கூப்புவன்
தோற்றிடும் வடதிசைச் சூல மால்வரை
போற்றிய வளகையான் பொருந்தி வாழ்த்துவான்.

(இ-ள்) அந்த அருணைசலமென்னுந் திருமலைக்கு மேற்பாரிசத் தில் தண்டமலையென்று சொல்லப்பட்ட பெரிய ஒருமலையுண்டு; அதில்மகரவாகனத்திலேறுகின்ற வருணராஜன் முற்காலத்தில்சிவ ந்தகையைக்கூப்பி அந்தமலையைவணங்குவான். வடபாரிசத்தில்சூல மலையென்று ஒருமலையுண்டு; அதில்எல்லாராலும் போற்றப்பட்ட குபேரன் இருந்துகொண்டு துதிசெய்வான். எ-று. (நஎ)

மற்றுநால் வரைகளில் வாயு தீயவ
னெற்றிசேர் விழியவ னிருதி போற்றுவன்
சுற்றுள மலைதொருஞ் சுரருஞ் சித்தரு
முற்றசீர் வசுக்களு முறைந்து போற்றுவார்.

(இ-ள்.) மற்ற நான்குதிக்குகளிலும் இருக்கிறமலைகள் நான்கி லுமிருந்துகொண்டு வாயு அக்கினி, நெற்றியில் அக்கிநேத்திரத்தை யுடைய ஈசானன், நிருதி இந்நால்வர்களும் வணங்குவார்கள். அவைகளைச் சுற்றியிருக்கிற மலைகளிலெல்லாம் தேவர்களும், சித் தர்களும், சிறப்புப்பொருந்திய அஷ்டவசுக்களும்இருந்துகொண்டு வணங்குவார்கள். எ-று. (நஅ)

தன்னையே நிகருமத் தலத்திலே புவிக்
கன்னமா தவம்புரிந் ததிக மாகவே
ஏன்னையா ளுடையவ னிடங்க லந்தனள்
பின்னையு மதிநலம் பேச லாகுமோ.

(இ-ள்.) தனக்குத்தானே ஒப்பாகிய அவ்வருணசலத்தலத்தில் பூலோகத்துக்குத் தாயாகிய பார்வதியம்மை மகத்தாகிய அரியதவ ஞ்செய்து என்னையாட்கொண்ட பரமசிவனுடைய இடப்பாகத்திற் சேர்ந்தாள். ஆனபடியினாலேஇனிபெருத்தக்காலத்திலும்யாவராலும் அந்த அருணசலத்தின் பெருமையைச் சொல்லமுடியுமோ முடியாது. எ-று. (கூக)

தன்னிகர் மந்திரம் புவனந் தத்துவம்
வன்னமாய் விளங்குமவ் வரையை மாலய
னன்னமு மேனமு மாகி நாடினு
ரின்னமு மளவிடா திடும்பை நீங்கினர்.

(இ-ள்.) தனக்குத்தானே ஒப்பாகிய மந்திரம், புவனம், தத்துவம்என்னும் அத்துவாக்களின் வடிவமாய் விளங்கும் அருணசலத்தைவிட்டுநீபிரமன் இருவரும்பன்றியும்அன்னமுமாகித்தேடி இத்தன்மையையுடையதென்று அறியக்கூடாமையினாலேதங்களுடைய கர்வத்தை நீங்கினர்கள். எ-று. (சு0)

மருவிய பெரும்புகழ் வச்சி ராங்கத
னருணையை வலம்புரிந் தமல னுயினன்
கருவிய கலாதரன் காந்தி சாலியென்
றிருவரும் பரகதி யெய்தினர் ததில்.

(இ-ள்.) மகத்தாகிய கீர்த்திபெற்ற வச்சிராங்கத பாண்டியன், அருணசலத்தைப் பிரதட்சணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்

தைப்போக்கிமலமில்லாதவனுக்கிக்கொண்டனன்; பெருமைபொருந்திய கலாதரன் காந்தசாலி இவ்விருவரும் அந்தத் தலத்தை வலம் வந்து மோட்சத்தை யடைந்தான். எ-று. (சக)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

ஆதியா மிவர்க டொடங்கியின் றளவுக்
கனேகருண் டருணையை நினைத்துங்
காதலா லுரைத்துங் கேட்டுமுன் கண்டுங்
கால்களால் வலஞ்செய்து மதிலே
நீதியா யிருந்து நெறியினு னடந்து
நெடுங்கயப் படிந்தறம் புரியுஞ்
சோதிதா டொழுதுப் பணிவிடை செய்துந்
துளக்கிலா முத்திபெற் றிருந்தார்.

(இ-ள்.) முன்சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத் தொடங்கி அன்றுமுத லின்றுவரைக்கும்அனேகம்பேர் அருணைசலத்தைநினைத்தும், ஆசையோடு தோத்திரஞ்செய்தும், கேள்விப்பட்டும், நேரில்வந்து தரிசனஞ்செய்தும், கால்களாலேபிரதட்சணஞ்செய்தும், அதில் நீதிபொருந்திய வேதமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டிருந்தும்; மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலே முழுகியும், தருமங்களைச் செய்தும், சோதிசொரூபமாகியசிவனதுபாதங்களைத் தொழுதும், திருப்பணிசெய்தும், கெடுதலில்லாதமோட்சத்தைப் பெற்றிருந்தார்கள். எ-று. (சஉ)

அப்பதி தமிழ்நாட் டுள்திடை பெண்ணை
யாறுசெய் யாறுபிங் கலையாஞ்
செப்பிய கமல நதிசுழி முனையாஞ்
செய்ததொன் றுயிரம்பலமாம்

மூப்பத்து மூன்றுகோடி தேவர்களு
முனிவருந் தவஞ்செய்வா ரதற்கோ
ரொப்புவே றில்லை யிம்பர் நாட்டிடத்து
மும்பர்நாட் டிடத்துமென் றுரைத்தான்.

(இ-ள்.) அவ்வருணசலத் தலம் தமிழ்நாட்டிலிருக்கிறது. அப் பதிக்கு வலப்பக்கத்தில் வருகிற பெண்ணையாறு இடைகலேஎன்னு நாடியாகும்; இடப்பக்கத்தில் வருகிற செய்யாறு பிங்கலே யென்னு நாடியாகும்; பலரும்புகழத்தக்க கமலேஎன்கிறநதி சுழிமுனேஎன்னு நாடியாகும்; அந்தநதிகளில் ஸ்நாணஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் பங்குபலன்வரும்; மூப்பத்து மூக்கோடிதேவர்களும் முனிவர்களும் அத்தலத்தில் தவஞ்செய்வார்கள், அதற்கு ஒப்பு இந்த உலகத்தினும் மேலுலகத்திலும் வேறு ஒருதலம் இல்லேயென்றுசொன்னர் நந்தி தேவர் எ-று. (கூ)

அற்றமி வவன்சொ லருணையின் சிறப்பா
லகமகிழ்ந் தருகிய முனிவன்
மற்றுள தலத்தி லதிகமென் றுரைத்த
வாய்மையை மனங்கொளா தரைப்பான்
சிற்றறி வுடையே னுதலா லொருசொற்
றெளிந்திலே னெனச்சொன்ன னதனே
முற்றுள முணர்ந்தான் மொழியெனமொழிந்தான்
முனிவனு மவர்க்கிவை மொழிவான்.

(இ-ள்.) சிவபக்தியிற் சோர்வில்லாத நந்திதேவரால்சொல்லப் பட்ட அருணசலத்தின் மான்மியத்தினுலே மனமகிழ்ந்து உருக்கத் தையடைந்தமார்க்கண்டேயமுனிவர் மற்ற சிவத்தலங்களேப்பார்க்கி லும்அருணசலத்தலம்அதிகமென்றுசொன்னவண்மையைமனத்தில் ஒப்புக்கொள்ளாமல்சொல்வார்;சுவாமி? நான்சிறியஅறிவையுடைய

வனுதலால் நீங்கள் திருவுளம் பற்றியருளியது கன்றுய்த்தோன்ற வில்லை என்றுசொல்ல, அதுகேட்டு சகலத்தையும் உள்ளத்திலுணர்ந்த நந்திதேவர் உமக்குண்டான சந்தேகத்தைச் சொல்லுமென்று கேட்க, மார்க்கண்டேயர் அவருக்குச்சொல்லுவார். எ-று. (சச)

தில்லையைக் காணக் காசியி லிறக்கச்
சிறக்குமா ரூர்தனிற் பிறக்க
வெல்லியில் பெருமை யருணையை நினைக்க
வெய்தலா முத்தியென் றுரைத்தீ
ரொல்லையி னுலு தலங்களுந் தம்மி
லொக்குமென் றுரைத்திடா தடிகே
ளல்லிசூ ழருணை யதிகமென் றுரைத்த
தருளென வருள்செய்வா னவனும்.

(இ-ள்.) சிதம்பரத்தைதரிசனம்செய்தாலும், காசியிலே தேகத்தைவிட்டாலும், சிறப்புள்ள திருவாரூரில பிறந்தாலும், அளவில்லாதபெருமையையுடைய அருணசலத்தை நினைத்தாலும், முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர் இந்நான்குதலங்களையும் ஒன்றுக்கொன்று ஒப்பென்று திருவுளம்பற்றுமல் சுவாமி? அகவிதழினையுடைய; தாமரைமுதலியநீர்ப்பூக்களையுடையதடாகஞ்சூழ்ந்த அருணசலத்தை மாத்திரம் அதிகமென்று கூட்டுகையிட்டதை அதுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க அதற்கு நந்திதேவரும் அருளிசெய்கிறார். எ-று. (சடு)

இறந்திடுந் தொழிலும் பிறந்திடுந் தொழிலு
மெண்ணிய படியவை முடியா
பறந்திடு மனைக்குஞ் சிலவிலங் கினுக்கும்
மாதய முதலிவை யருளிக்கு

நிறைந்த புன்னீச ரந்தகர் தமக்கு
நிறுத்தமண் டபந்தொழ நேரா
தறந்திகழ் பயனுற் சிலசிலர்க் கெளிதா
மல்லவர்க் கரியதா மதுவே.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே, ஒருவன் இறக்குந்தொழி லும், பிறக்குந்தொழிலும் நினைத்தபடி முடியாது. அதிருக்கட்டும்; பட்சாதிகளுக்கும் சிற்சிலமிருகங்களுக்கும் விருட்சமுதலாகியஓர றிவுயிருக்கும், புண்மை நிறைந்த நீசருக்கும் குருடருக்கும் மடராஜ னது நிருத்தசபையைத் தரிசனஞ்செய்ய நேரிடாது. பூர்வஜனன புண்ணியத்தினாலே அந்தச் சபைக்குப்போய்க் காணத் தகுந்தவர்க ளாகிய சிற்சிலர்க்குமாத்திரங்கிடைக்கும், மற்றவர்களுக்கு அரியதா குர்; அந்தத்தலமாம். எ-று. (சசு)

குண்டகர் பதிதர் கோளகர் புலையர்
கொலையின ருறுப்பினிற் குறைந்தோர்
கண்டகர் நெடுந்தூ ரத்தினி லிருப்போர்
கருணைசே ராருணபூ தரத்தை
எண்டக வொருகா னினைத்திட முத்தி
யிவரலால் விலங்குபுண மரங்கண்
முண்டகமுதலா யினவுமுன் காண
மூளைத்திட முத்தியே பெருமால்.

(இ-ள்.) ஒருமாது தன்கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்டகுண்டகர்களும், பாவிகளும், விதவையால்பெறப்பட்ட கோளகரும், நீசருக்கும், கொலைசெய்கிறவர்களும், அவயவக்குறை ந்தவர்களும், தீமைசெய்கின்றவர்களும், நெடுந்தூரத்திலிருப்பவர்க ளும், கிருபைபொருந்தியஅருணசலத்தை நன்முகஒருதரம்நினைக்க

முத்தியுண்டாகும்,. இவர்களேயல்லாமல் மிருகங்கள் பட்சிகள்மரங்கள் தாமரைமுதலியகொடிபூண்கெளும் அவ்வூரில்மூளைத்தால் முத்தியையடையும். எ-று. (சஎ)

சிலையெலா மிலிங்க மதுசிவ லோகந்
தேவர்பா தவங்கள்பா தவங்க
ளலையுலாம் புனல்கள் சடையுலாங் கங்கை
யருந்துமூ ணைமரருண் ணைமுதா
மூலவியே வருதல் புவிவலம் வருத
லுரைத்தசொல் கருதியா முறங்கண்
மலைவருசமா தி யாகுமத் தலத்தை
மானுமோ மற்றொரு தலமே.

(இ-ள்.) அத்தலத்திலிருக்கிற கற்களெல்லாம் சிவலிங்கங்களானபடியினாலே அதுவேசிவலோகமாகும். அத்தலத்திலிருக்கிறவிருக்ஷங்களெல்லாம்கற்பகவிருட்சங்களாகும்;அத்தலத்திலிருக்கிறஅலை பொருந்தியநீரெல்லாம்சுவாமியின் சடையிலிருக்கிறகங்கையாகும்; அத்தலத்திலிருக்கிறவர்கள்சாப்பிடுகிறஉணவுகளெல்லாம்தேவாமிர்தமாகும்; அத்தலத்தில் சஞ்சரித்தல் பூமிப்பிரதட்சணஞ் செய்தலாகும்; அவ்வூரிற்சொல்லும்வார்த்தைகள் வேதமாகும்; அத்தலத்தில் நித்திரைசெய்தல் சிவசிஷ்டைகூடிச்சமாதியிருத்தலாகும்; ஆனபடியினாலே அதற்கு மற்றொருஸ்தலம் சமானமாகுமோ. எ-று. (சஅ)

முத்தழல் புரிந்தோ நான்மறை தெளிந்தோ
ரைவகை வேள்வியு முடித்தோ
ரெத்தவம் புரிந்தோ ரெவ்வறஞ் செய்தோ
ரெண்வகை யோகிய ரெனினு

மத்தல நினையா தவர்க்கிலை முத்தி
யாதலா லமரர்வா னிருந்துஞ்
சுத்தமா னிடராய்ப் பிறந்ததை நினைத்துந்
துளக்கிலா முத்திபெற் றிருப்பார்.

(இ-ள்) காருகபத்தியம், ஆகவநீயம், தக்கணாக்கினியம், என் கிற மூன்றக்கினியையுவளர்த்தவர்களும், இருக்கு, யசுர், சாமம் அதர் வணம் என்னும் நான்கு வேதங்களையோதி உணர்ந்தவர்களும், பிர மயாகம், தெய்வயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடையாகம், என்கிறஐவகையாகங்களையும் நிறைவேற்றினவர்களும், எத்தன்மை யாகிய தவஞ் செய்தவர்களும், எப்படிப்பட்ட தருமஞ் செய்தவர்க ளும், இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படுகின்ற அவ்டாங்கயோகஞ்செ ய்தவர்களுமாகிய இப்படிப்பட்டவர்களா யிருந்தாலும், அவ்வருணா சலத்தை நினையாவிட்டால் அவர்களுக்கு முத்தியில்லை; ஆனபடி யினாலேதான் தேவர்களாய் சொர்க்க லோகத்தி லிருந்தவர்களும் ஞானமுள்ள மானிடராகப் பூமியிற்பிறந்து அவ்வருணாசலத்தைத் தியானஞ்செய்து கெடுதலில்லாத முத்தியை அடைந்திருப்பார்கள்.

பொருவிலாச் சுவர்க்கத் தமிர்தமுண் டிருப்போர்
போகபூ மியைத்தனி புரப்போ
ருருணமா நகரிற் கிருமியாய்ப் பிறப்ப
தகிதமென் றுதரங் கொள்வார்
மருவுமப் பதியிற் பிறப்பது நூறு
மகம்புரிந் தவர்க்கலாற் கிடையா
திருவருள் படைத்தார்க் கெளிதலான் மற்றத்
தேவர் யாவர்க்கும் தரிதே.

(இ-ள்.) ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில் மரை,திரை,மூப்பு, உண்டாகாதபடி தேவாமிர்தமுண்டிருப்போர்களாகிய தேவர்களும் போகத்தை அனுபவித்தற்குரிய அந்தச் சொர்க்க முதலான உலகங் களைத் தனித்தனி யாளுகின்ற தேவேந்திரன் முதலாகிய திக்குப் பாலகர்களும், அருணாசலத்தலத்தில் இருமியாகப்பிறந்து சொர்க்க மாகிய பதத்தை அனுபவித்தலைப் பார்க்கினும், அதிகமென்று அத் தலத்தில் பிறப்பதற்கு ஆசைப்படுவார்கள், தெய்வத்தன்மைபொரு ந்திய அந்தப்பதியில்பிறக்கிறது நூறுயாகஞ்செய்தவர்களுக்கு அல் லாமற்கிடையாது. சுவாமியினுடைய திருபாணியைப் பெற்றவர்கட் குக் கிடைக்கும், அவர்களன்றி மற்றத்தேவர்கள் முதலான மகத்து வம்பொருந்திய யாவர்க்கும் அப்படிபிறப்பது கிடைக்கமாட்டாது.

வெற்றிரும் பிடத்திற் செம்பில்வெண் கலத்தில்
வெள்ளியில் வெள்ளிய பொன்னிற்
குற்றமொன் றில்லாக் குயிற்றிய மணிபோற்
குலவிய சிவனிருந் திடுவன்
மற்றைய தலத்தி லருணையென் றுரைக்கும்
வளம்பதி தனிலெழுந் தருள்வன்
பொற்றகட் டிடத்து மணியென வுரைத்தான்
புனிதனு கியவரு ணந்தி.

(இ-ள்.) சொற்பவிலேபெற்ற இரும்பிலும்,செம்பிலும், வெண் கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப்பொன்னிலும்பதிக்கப்பட்ட யாதொரு தோஷமில்லாத மாணிக்கரத்தினம்போல் மற்றத்தலங் களில், எங்கும் நிறைந்த பரமசிவன் எழுந்தருளி யிருப்பார். பொன் னுறச்செய்த தகட்டில் பதிக்கப்பட்ட அந்தஇரத்தினம்போல்அருணா சலமென்றுசொல்லப்பட்ட வளம்பொருந்தியதலத்தில் எழுந்தருளி

யிருப்பாரென்றுபரிசுத்தராகிய அருளே திருமேனியாகக்கொண்ட நந்திதேவர் திருவுளம் பற்றினார்; ஆகலால் எல்லாத் தலத்திற்கும் இத்தலம் அதிகமாம் எ-று. (இக)

* கண்ணிணுல் விளங்குந் திருமுக முகத்தாற்
கரியகண் விளங்குமவ் விரண்டின்
பண்ணிணுல் விளங்கு மூடலெலா மவ்வபோற்
பரமணுல் விளங்குமவ் வருணை
யண்ணரூன் விளங்கு மருணைமா நகரா
லமலனே டருணைமா நகரா
லெண்ணிலாப் பதிக ளெவைகளும் விளங்கு
மெவற்றினுஞ் சிறந்ததென் றிசைத்தான்.

(இ-ன்.) கேளும் மார்க்கண்டேயரே? கண்களிருக்கிறதினுல் முகம் பிரகாசிக்கும், முகத்தினிடத்திலிருப்பதால் அக்கண்கள் விளங்கிக்கொண்டிருக்கும், இந்த விரண்டினுடைய சேர்க்கை அழகினுலே தேகமெல்லாம்விளங்கும்; அவைபோல் பரமசிவனுலே அருணசலம் சிறப்படைந்திருக்கும், அந்த அருணசலத்தால் சுவாமியும் அமிசையை யுடையவராய் விளங்குகிறார்; அத்தலத்தினுலும் அதில் எழுந்தருளியிருக்கிறசுவாமியினுலும் எண்ணிக்கையில்லாத எல்லா கூத்திங்களுஞ் சிறப்பாய்விளங்கும்; ஆனதினுலே எல்லாத்தலங்களிலும் அதுசிறந்ததென்று திருவாய்மலர்ந்தருளினார். எ-று. (இஉ)

வீசல ரிலைமெய் குளிர்ந்திடுங் கொடியின்
வேரினீர் சொரிந்திடி னதுபோற்
பூசணை யருணை நகரிலே சிறிதும்
புரையற நடக்குமே யாகிற்

* இதனுல்எல்லாத்தலங்களும் உடலாகவும், அருணசலத்தலம் முகமாகவும், அதிற்சுவாமி கண்ணுகவும் சொல்லப்பட்டது.

காசியே முதலெத் தலமெலாம் பூசை
கனம்பெற கடந்ததா மிலையே
லீசர்வா ழுந்தத் தலமெலாம் பூசை
யியற்றியெ னியற்றிடா திருந்தென்

(இ-ள்.) ஒருகொடியின துவேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மணம்வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் தளிர்களும் குளிர்ச்சியை யடையும். அதுபோல் அருணாசலத்தலத்தில் சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசை குற்றமில்லாமல் நடக்குமாஞல் காசிமுதலாகிய எல்லாத்தலங்களிலும் மேன்மையாகப் பூசைநடத்தாகும் அத்திருவண்ணுமலையில் பூசைநடவாவிட்டால் மற்றத்தலங்களில் நடத்தாலென் நடவாவிட்டாலென் ஒருபயனுமில்லை. எ-று.

நிலந்தொழு மருணை சலத்தனி லிருந்து
நெஞ்சினி லியமாய்ப் பிரிந்தோர்
தலத்தினை விரும்பி நடந்தவர் முன்செய்
தவங்களு மறங்களுந் தவறுங்
குலந்தனி லுதித்தோ ராயினும் புலவர்
ஞானத்த வராயினுங் கொடிய
ருலந்தவ ருயிரோ டிருக்கினு மதற்கோ
ருவமைசொன் னவர்க்குமீ தொக்கும்

இ-ள்.) உலகத்தார் போற்றுகின்ற அருணாசலத் தலத்திலிருந்து இதைவிட உயர்ந்ததலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகங்கொண்டு பிரிந்து ஒருகூத்திரத்தைநாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அதற்குமுன் செய்யப்பட்ட தவங்களும், தருமங்களும், பிரயோசனப்படமாட்டா, அவர்கள் நல்ல குலத்திற் பிறந்தவர்களாஞலும் நீசராவார்கள், நல்லகுணங்களையுடையவர்களாஞலும் கொடி

ஜ குணத்தராவார்கள். அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள், அந்த அருணாசலத்துக்குவேறொருதலங்களே ஒப்பாகச் சொன்னாலும் இந்தத் தோஷங்களெல்லாம்உண்டாகும். எ-று. (ருசு)

என்றுதா னருணைச் சிறப்பெலா முனிவற்
கேதுவோ டெடுத்தினி தியம்பிக்
கன்றுமான் மழுவுஞ் சுரிகையுந் தரித்த
கடவுணன் கிருந்தன னவணைச்
சென்றுசென் றிறைஞ்சி நெக்குநெக் குருகிச்
சென்னிமேற் செங்கை வேரோட்டி
யென்றுமா நந்தப் பெருங்கட லிடைப்புக்
குணர்ச்சியாய் முனிவனீ துரைப்பான்

(இ-ள்.) இப்படி அருணாசலத்தின் பெருமை முழுவதுமேதுவோடுமுனிவர்களுக்கினிதாக எடுத்துசெவ்விதாக அருளிச்செய்துமான், கன்று, மழு, உடைவாள் இவைகளேத் தரித்த நந்தி தேவர் களிப்புற்றிருந்தார். அந்த நந்திதேவரைப்பலதரம்வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகிச் சிரசின்மேல் சிவந்த கைகளேநெடுநேரங் கூப்பி நின்றுபட்டவராய், ஆனந்தசமுத்திரத்திலேமுழுகித்தன்னே மறந்தவராகிப் பின்பு ஞாபகம் வந்து இதனைச்சொல்லுவார் மார்க்கண்டேயர். எ-று. (ருருு)

முதலாவது

திருஞகரச்சருக்கம் முற்றிற்று.

ஆச திருவிருத்தம்-எஅ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமஸைச் சருக்கவசனம்.

சர்வசம்மாரகாலத்தில் எல்லா உயிர்களும் அழிந்த பின்பு தனியாய்நின்ற பரமசிவன் மறுபடியும் உலகம் உண்டாகவேணுமென்று எண்ணங்கொண்டவுடனேபஞ்சகர்த்தாக்கள்உண்டானார்கள். பின்பு பிரமாவானவர் தன்னால் உலகமும்அதிலுள்ளசராசரங்களும் சிருஷ்டிக்கப்பட்டதென்கிற அகங்காரங்கொண்டு விஷ்ணுவை அவமதிப்பானவார்த்தைகளேச்சொல்ல, ஒருவர்க்கொருவர் கோபமுண்டாகி அண்டகடாகங்களெல்லாம் வெடிக்கும்படியாகச் சண்டைசெய்யும் போதுதேவர்களெல்லாரும்பயப்பட்டுப் பரமசிவனிடத்திற்குப்போய்த்தொழுது முறையிட்டுக்கொள்ள, சுவாமி அவர்களுக்கு அபயங் கொடுத்து அவ்விருவருக்கும் உண்டாகிய பகையை நீக்கித்தடுக்கும் படிக்கும், அண்டங்களெல்லாவற்றிற்கும்குறைவராமல்காப்பாற்றும் படிக்கும்,அவ்விருவருக்கும்மத்தியில்அக்கினிசொரூபமாகிய ஒரு மலையாகிஎழுந்தருளினார் இதைக்கண்டஅவ்விருவரும்பயந்துஒதுங்கி நின்று இந்தமலையின் அடியையாவது முடியையாவது அறிகிறவர்களே பெரியவர்களென்று ஒருவர்க்கொருவர் சபதஞ்செய்துகொண்டுவிஷ்ணு மலையினடியையும்பிர்மா அதன்சிகரத்தையும், கண்டறிவதாகச்சொல்லி.விஷ்ணுவராகமாகவும் பிர்மா அன்னப்பட்சியாகவும் இரண்டுபேரும் வெகுகாலம்தேடியுங் காணுமற் போய்விட்டார்கள். அப்படியிருந்தும் மலையின்உச்சியை பிர்மா தான்பார்த்ததாக விஷ்ணுவினிடத்திற்பொய்சொன்னபோது சுவாமியின் சிரசிலிருந்துதவறிவிழுந்த ஒருதாழம்பூவும்நிஜமென்றுசொல்லிற்று. அந்தக்ஷணம் அக்கினி மலையினின்றும் பரமசிவன்எழுந்தருளி விஷ்ணுவினிடத்தி



4. சிவபிரான் முடியையும் அடியையும் காணப் பிரமன் அன்னமாயும் விட்டுணு வராகமாயுந் தேடி யலுத்துநிற்க, கயிலையினின்று தவறிய கைதை பிரமனுக்காகப் பொய்சொல்லக், கைதைக்கும் பிரமனுக்கும் சாபம் நேரிட்டது.

ல்அன்புசுரந்தவராய், பிர்மாவைமகாகோபத்துடன்பார்த்து உமக்கு ப்பூமிபில்ஆலயமும்பூஜையும் இல்லாமற்போகக்கடவதென்றும்;தா ழம்பூவைப்பார்த்து நீ பொய்சாட்சி சொன்னபடியால் உன்னை இது முதல்தீண்டமாட்டேனென்றும்திருவுளம்பற்றினர். இதைக்கேட்ட பிர்மா பயப்பட்டுத் துக்கத்தையடைந்து கிருபைக்கடலாகிய பரம சிவத்தைத்துதித்து சுவாமி! அடியேன்செய்த பிழையைப்பொறுத் தருளவேண்டுமென்றுவணங்கிக்கேட்டுக்கொள்ள, அதனால் சுவாமீ க்குக் கிருபையுண்டாகி:பிர்மாவே!பயப்படாதே, பூமியில்பிராமண ர்களுக்குச் செய்கிறபூஜையை உன்பூஜையாகக்கொண்டுமறுபடியும் உன் சிருஷ்டித்தொழிலே நீ அடைந்திருவென்று அருளிச்செய்தனர் இந்த அக்கினிமலையானது சிறிய மலையாகக்கடவதென்றும்,அதன் அக்கினிப்பிரகாசம்மறைந்து மற்றமலைகள்போல் இருக்கக்கடவதெ ன்றும், இதன்உச்சியில் கார்த்திகைமாதத்தில்கிர்த்திகைநட்சத்திரத் தில் ஒரு பிரகாசங் காண்பிப்போம் இதைத்தரிசித்தவாகள் மோட் சத்தை யடைவார்களென்றும், இதன்கீழ் ஒரு லிங்கரூபமாய் நாம் எழுந்தருளுவோமென்றுஞ் சொல்லிப் பரமசிவன் அந்தமலையினுள ளே மறைந்துவிட்டார். உடனே அவ்விடத்தில்ஒருலிங்கந் தோன்றி யதைக்கண்டு தேவர்களெல்லாரும் சந்தோஷப்பட்டு கோபுரங்க ளும் மண்டபங்களும் மதிலும் செய்வித்தார்கள். பின்புஅழியாதகா ரமும் முன்னூறுவகை தீர்த்தமும் உண்டாயின.

திருமலைச் சருக்க வசனம்

முற்றிற்று.



க

சிவமயம்.

இரண்டாவது
திருமஞ்சனச் சருக்கம்.

* கலிநிலைத்துறை.

எந்தை யேயரு ணந்தியே யடியவர்க் கெளியாய்
சிந்தை யானது மகிழ்ந்தன னருணையின் சிறப்பா
லந்த மாநக ரிடத்திலே சிவனழல் வடிவாய்
வந்த வாறுட னதுமலையாகிய வகையும்

(இ-ள்.) அருணாசலத்தின் மகிமையைக்கேள்வியுற்ற மார்க்கண் டேயர் சொல்லுவார்; எம்முடைய ஆண்டவரே? அடியேனுக்கு அருள்செய்த நந்திதேவரே அடியார்க்கெளியவரே நீர் அருளிச் செய்த திருவண்ணாமலை யென்னும் தலத்தின் மகிமையைக் கேட்டு மனக்களிப்படைந்தேன்; அப்படிப்பட்ட தலத்தினிடத்திற் பரமசி வன் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும், அதன்பின்பு அச்சொரூபம் மலையுருவமானதும். எ-று. (க)

* "நெடிலடி காண்காய் நிகழ்வது கலித்துறை" என்பதிலக்கணம்.

அம்மலைச்சுட ரடிதலை தெரிகல தயன்மால்
விம்மலுற்றது மவர்க்கருள் செய்ததும் விளம்பாய்
கைம்ம லைக்கடக் கரியுரி புனைந்திடுங் கயிலைச்
செம்மலைத்தொழுஞ் செல்வனேயெனவவன்செப்பும்.

(இ-ள்.) அந்தஅக்கினிமலையின் அடியும் முடியும் அறியக்கூடாமல் பிரமதேவரும், விஷ்ணுமூர்த்தியும், வருத்தப்பட்டதும், பின்பு சுவாமி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்ததும் திருவுளம்பற்றவேண்டும். கையுள்ளமலையை ஒத்தாய் மதத்தையுடைய யானையின் தோலைத் தரித்தருளிய கைலாயவாசகராகிய பரமசிவனை வணங்கும்படியான செல்வத்தையுடையவரேயென்று சொல்ல, அதற்கு அகஸ்தி தேவர் சொல்லத்தொடங்கினர். எ-று. (உ)

பஞ்ச பாதக மொருவனப் பதியிலேபண்ண
நெஞ்சி னினைத்திடுகினு நினைத்ததே பரமாய்த்
தஞ்சமாகிய முத்தியா மெனமறை சாற்று
மஞ்சொ லாலது மொழிந்தபேர்க் கென்னபேறரிதே.

(இ-ள்.) ஒருவன் அந்த அருணாசலத் தலத்தில் பஞ்சபாதகஞ் சுளைச் செய்ய வேண்டுமென்று மனத்தால் நினைத்தாலும், அப்படி நினைத்ததே மேற்பட்ட புண்ணியமாகி அதனால் பற்றுக்கோடாகிய முத்தியுண்டாகு மென்று வேதங்கள் முறையிடும்; அன்பையுண்டாக்கும்; நல்லசொற்களினால், அத்திருமலையைத் தோத்திரஞ் செய்தவர்களுக்கு என்னபேறுகிடைக்கமாட்டாது. எ-று. (ங)

ஆகையா லுமக் கன்றியே யெமக்குமுண் டதிகஞ்
சோக மோகங்க டவிர்ப்பவ னெருபரஞ் சுடராய்
மாகமூடிற வளர்ந்தது மாலயற் காகப்
போக லிங்கமென் றுனது மொருவகை புகல்வேன்.

(இ-ள்.) ஆனபடியினாலே மார்க்கண்டேயரே? இந்த மஹான் மியத்தைக் கேட்கின்ற உமக்கு மாத்திரமே யல்லாமல், எனக்கும் அதிகபலனுண்டாம், துக்கத்தையும் மோகத்தையும் நீக்கி விடுகிற சிவபெருமான் ஒப்பற்ற பெரியசோதிவடிவமாய்ப் பிரமவிட்டுணுக் களுக்காக ஆகாச அளாவவளர்ந்தும், யாவருக்கும் போகத்தைக் கொடுக்காநின்ற இலிங்கமென்று சொல்லும்படி திருவுருக்கொண் டதும் எனக்குத்தெரிந்த அளவிற்கொஞ்சம் சொல்லுகின்றேன். ()

ஓடுங்கு நாளினி லயனரி யுருத்திரன் மகேச
னெடுஞ்ச தாசிவன் விந்துநா தஞ்சத்தி நெறியே
யடங்கி டும்பர சிவத்தினிற் பரசிவ மீனத்துங்
கடந்த தத்துவ முடிவிலே நின்றது கருதி.

(இ-ள்.) சர்வசங்காரகாலத்தில் முறைப்படிச் சகல உயிர்களும் பிரமனிடத்திலொடுங்கும் அப்பிரமதேவர் விஷ்ணுவினிடத்திலொ டுங்குவார்; அவ்விஷ்ணுஉருத்திரனிடத்திலொடுங்குவார்; அவ் உரு த்திரன் மகேசுரனிடத்திலொடுங்குவார், அம்மகேசுரன் சதாசிவ னிடத்திலொடுங்குவார்; அச்சதாசிவன் விந்துவினிடத்திலொடுங் குவார்; அவ்விந்துநாதத்தினிடத்திலொடுங்கும், அந்நாதம் சத்தியி னிடத்திலொடுங்கும், அச்சத்திபரமசிவத்திலொடுங்கும், அத்தப்பரம சிவம்திருவுளங்கொண்டுஎல்லாங்கடந்ததத்துவமுடிவிலேநின்றது.

பரசி வத்தினில் வருபரா சத்திபாற் குடிலை
விரவி டும்பரா தத்துவ மடைவிலே விரிந்த
மருவு மைவரு மொடுங்கிய முறையிலே வந்தா
ரரிம கன்படைத்திடுவது நினைந்தன னகத்தில்.

(இ-ள்.) அப்படியெல்லாம்ஒடுங்கினகாலத்தில் தனியாய்நின்ற பரமசிவம், உலகமுண்டாக வேண்டுமென்று திருவுளங்கொண்ட அளவில், அந்தப்பரமசிவனிடத்திற்றோன்றியபரசத்தியினிடத்தில்

குடிலே என்னுஞ் சத்திதோன்றியது, அப்பராசத்தியில் பெருமைய மைந்த மற்றைத்தத்துவங்கள் முறையே உண்டாயின. பஞ்சகிர்த்தி யங்களுக்குரிய பிரமன் விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசி வன்முதலிய ஐவரும் முன்னே ஒடுங்கியமுறையே உண்டானார்கள். விஷ்ணுவினுடைய புத்திரனுகிய பிரமாவானவர் உலகத்தைச் சிரு ஷ்டிப்பதற்கு மனதில் எண்ணினர். எ-று. (சு)

மரிசி யங்கிரன் புலத்தியன் புலகனுன் மறையோர்
கிருது வத்திரி சனபதி யெழுவருங் கிளைத்தா
ருரிய தக்கனும் வலப்பதப் பெருவிர லுதித்தான்
பிருகு மார்பினு மறத்திறை முகத்தினும் பிறந்தார்.

(இ-ள்.) அப்படிப்பிரமன்நினைத்தவுடனே, நான்கு வேதங்களி லும் வல்லவர்களான மரீசி, அங்கிரர், புலத்தியர், புலகர், கிரது, அத்திரி, சனபதி என்கிற விருடிகளெழுவர்களும்பிறந்தார்கள், தக் கன்வலக்காற்பெருவிரலிற் பிறந்தான், பிருகுமார்பிடத்திற் பிறந் தான், தருமதேவதை முகத்திற் பிறந்தது. எ-று. (எ)

உன்னு மைந்தரின் மரீசிபாற் காசிப னுதித்தான்
பன்னு தக்கனு * மறுபது பெண்களைப் பயந்தா
னன்ன காசிப னவர்பதின் மூவரை யணைந்தான்
முன்ன ளாகிய வதிதிபா லிமையவர் முளைத்தார்

(இ-ள்.) பிரமனிடத்திற்பிறந்த பிள்ளைகளாகிய எழுவரில் மரீசி ரிஷியினிடத்திற்காசிபரிஷிபிறந்தார், தக்கனென்பவன் (அறுபது) பெண்களைப்பெற்றான், அந்த அறுபது பெண்களில் பதின் மூன்று

* அறுபது பெண்களுள் தருமனுக்குப் பதின்மரையும், காசி பர்க்குப்பதின்மூவரையும் சந்திரனுக்குஇருபத்தெழுவரையும், அரி ட்ட நேமிக்கு நால்வரையும், வெகு புத்திரனுக்கும், அங்கிரசுக்கும் இவ்விருவரையும், பிருகாசுவனுக்கு இருவரையும்விவாகஞ்செய்து கொடுத்தான்.

பெண்களைக் காசிபர் விவாகஞ்செய்தார், மூத்தவளாகிய அதிதிவயிற்றில் முப்பத்துமூக்கோடி தேவர்களும் பிறந்தார்கள். எ-று. (அ)

இருமை சேர்ந்திடு மிரணிய னிரணியாக் கர்களைத்
தெரிய வீன்றனள் சிறப்புறுந் திதியெனு மிளையா
டருண மைந்தரி லிரணியன் பிரகலா தனனே
டருமைமைந்தர் கணுல்வரைப் பயந்தன னவருள்.

(இ-ள்.) அதன்பின்பு அதிதிக்குஇளையவளாகிய சிறப்புள்ளதிதியென்பவள் இரணியன் இரணியாக்கனென்னும் இரண்டு பேரையும் பிரசித்தமாகப் பெற்றாள், இந்த தருணப் பருவமுள்ள புத்திரர்கள் இருவரில் இரணியனுனவன் பிரகலாதன், அனுகிலாதன், கிலாதன், சங்கிலாதன் என்னும் நான்கு பிள்ளைகளைப்பெற்றான்.

பிரக லாதனன் றவத்தினுன் மூவரைப் பெற்று
னருளு மைந்தரில் விரோசனன் மாவலி யளித்தான்
பரவு மாவலி வாணனென் றொருவனைப் பயந்தா
னரன ருச்சனை புரிந்தவ னயன்றொழ வீருந்தான்.

(இ-ள்) அவருட் பிரகலாதன் தவத்தினுல் * மூன்றுபிள்ளைகளைப்பெற்றான், அந்தமூவரில் விரோசனனென்பவன் மாவலி என்பவனைப்பெற்றான், யாவரும் கொண்டாடத்தக்க மாவலி வாணாசுரனைப் பெற்றான், அவ்வாணாசுரன் பரமசிவனைப் பூசித்துப் பிரமன் தொழும்படியான வாழ்வுபெற்றிருந்தான். எ-று. (கo)

தனுவ ளித்தவன் சம்பரன் முதலினோர் பதின்ம
ரனைய தானவர்ப் பெற்றனன் சிங்கிகை யணங்கும்
பனியி ராகுவே முதலொரு நால்வரைப் பயந்தாள்
பினைய ளாங்கொருமூன்றுபே ரசுரரைப் பெற்றாள்.

(இ-ள்.) மலைகளினுடைய சிறகையறுப்பதற்குத்தேவேந்திரனுக்குத்தன் முதுகெலும்பைக் கொடுத்துத் தேகத்தைவிட்டவராகிய

* மூவராவார்—சிபி, பாட்கலன், விரோசனன்.

ததீசிரிஷிஎன்பவர் சம்பரன் முதலாகிய பத்து அசுரர்களைப் பெற் ரூர், அப்பத்துபேரில் சிங்கிகை என்னும் பெண்ணைவள் இராகு முதல் நான்குபிள்ளைகளைப்பெற்ரூள், அளுக்கிளையவள் மூன்று பேசுரரைப் பெற்ரூள். எ-று. (கக)

காலகேயர்க ளாறுவரைப் பயந்தனள் காலே
சாலநீள்சிறைக் கருடது மருணனுந் தவிர
நாலுபாலரைப் புதல்வார் வினதையு நயந்தா
ளாலநேர்விழிக் கத்துரு பணியெலா மளித்தாள்.

(இ-ள்.) காலேஎன்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும் பெற் ரூள், மிகவும்நீண்டிருக்கிற சிறகினையுடைய கருடன் அருணனுடு கூட நான்குபிள்ளைகளை வினதை என்பவள் பெற்ரூள், விடத்தை யொத்த கண்களையுடைய கத்துரு என்பவள் பாம்புக ளெல்லாவற் றையும் பெற்ரூள். எ-று. (கஉ)

அரிட்டை யென்பவ ளிடத்திலே யரம்பையே முதலா
ரேட்டி மங்கையர் பிறந்தன ரிலங்கிளை முனித
னருட்ட வத்திலெண் ணிரட்டிகந் தருவரை யளித்தா
ளருட்டு வாளவிழிக் கபிலைபாற் பதின்மர்வந் துதித்தார்

(இ-ள்.) அரிட்டைஎன்பவளிடத்தில் அரம்பைஊர்வசி முதலா னபெண்கள் பிறந்தார்கள், விளங்காநின்ற இளைஎன்பவள் முனியி னுடைய கிருபையினலே பதினறு வகையாகிய காந்திருவர்களைப் பெற்ரூள், உருட்டிப்பார்க்கும் சுபாவமமைந்த வாள்போன்ற கண் களையுடைய கபிலையினிடத்தில் பத்துப்பிள்ளைகள்பிறந்தார்கள். ()

அங்கி ரார்சன பதிகள்காஞ் தருவரை யளித்தார்
தங்கு மத்திரி கதிர்மதி புலத்தியன் றணேயர்
பொங்கி ராக்கதர் வானரர் கின்னரர் புலக
னங்குமைந்தர்கிம் புருடர்பின்விலங்கையுமளித்தான்.

(இ-ள்.) அங்கிரர் சனபதி என்கிற இருவரும் காந்தருவரைப் பெற்றார்கள், நிலைபெற்ற அத்திரி என்பவர் சூரியசந்திர ரிருவரையும்பெற்றார், புலத்தியருக்குப் புத்திரராக இராக்கதர், வானரர், கின்னரர்ஆகிய இவர்கள் பிறந்தார்கள், புலகரிஷிஎன்பவர் கிம்புருடரையும், மிருகங்களையும், புதல்வர்களாகப்பெற்றார். எ-று. (கச)

தருண ராகிய வசுக்களைச் சனபதி தந்தான்
பிருகு வென்பவன் கவியுடன் சவுனரைப் பெற்று
னிருவரோடுசெந் திருவையும் பிருகுபெற்றெடுத்தான்
பருவமைந்தரிற் கவியுமோ வெள்ளியைப் பயந்தான்.

(இ-ள்.) சனபதி என்பவர் பின்னும் தருணப்பருவம் பொருந்திய அஷ்டவசுக்களைப்பெற்றார், பிருகு என்பவர் கவி என்பவனையும், சவுனகரையும்பெற்றார்; இவ்விருவரைப் பெற்றதுமல்லாமல் பின்பு இலக்குமியையும்பெற்றார், அப்பருவம்பொருந்திய பிள்ளைகளில், கவி என்பவர் சுக்கிரனைப்பெற்றார். எ-று. (கரு)

பரிய தானதன் றேவிமூக் கிரண்டினும் பரிதி
யுரிய வாண்பரி யாகியிந் திரியத்தை யூற்ற
வரிசை பற்றிய மருத்துவ ரிருவரும் வந்தார்
வரிச ராசரம் பிறந்தன பலபல விதமாய்.

(இ-ள்.) சூரியன்தன்மனைவியைச் சேருகிறதற்கு எத்தனப்பட்டபோது, அவளதற்குப் பொருந்தாமல் பெண் குதிரையா யோடினாள், சூரியன் ஆண்குதிரையாய்த் துரத்த அவள் திரும்பிப் பார்த்தாள். அப்போது சூரியன் தனது பெண்சாதியின் இரண்டு மூக்கினும் இந்திரியத்தை ஊற்ற, வரிசையாகிய அசுவினி தேவர்களிருவர் பிறந்தார்கள்; அதன்பின்பு விரிந்த * சரமும் அசரமும் அநேகவிதமாயுண்டாயின. எ-று. (கக)

* சரம்-நடையுள்ளனவும், அசரம்-நடையில்லனவுமாம்.

* கலிவிருத்தம்.

கண்டுலகெ லாநமது கற்பனைக ளென்றே
புண்டரிக வேதியன் மதத்தரி புரத்தில்
ரண்டியெதிர் கொண்டுபகை தங்கவிசை வண்டார்
வண்டுளப மாயவனை வைதுரை வழங்கும்.

(இ-ள்.) இப்படி எவற்றையும் உண்டாக்கிய பத்மாசனனுகிய பிரமதேவன் தன்னுற்படைக்கப்பட்ட சிருட்டிப்பொருள்களைப் பார்த்து, இந்த உலகெல்லாம் நம்முடைய சிருஷ்டியினு லல்லவோ உண்டாயினவென்று அகங்காரங்கொண்டு, அதனுல் விஷ்ணுவுக்குரியதான வைகுந்தத்தில் வலிதிற்போயெதிர்த்துப் பகைகொள்ளும் படிசங்கீதம்பாடுகின்ற வண்டுகள்சூழ்ந்ததுளபமாலையைதரித்தவிஷ்ணுவைப்பார்த்து அவமதித்துச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினன். எ-று. (கள)

ஏழுலக மேழுபில மேழுபுய லோரே
யாழிமுக லேழுகிரி யாம்வகை யியற்றி
வாழுமுயிர் யாவையும் வகுத்திட மனத்தாற்
பாழிகொண் மரீசிமுதன் மைந்தர்கள் படைத்தேன்.

(இ-ள்.) விட்டுணுவே ! பதினுன்கு லோகங்களையும், கறுத்தசத்தமேகங்களையும், சத்தசமுத்திரங்களையும், முதன்மையாகிய சத்தகுலபருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினுற் படைத்து இப்பொழுது வாழ்கின்ற சராசரங்களாகிய எல்லாவுயிர்களையும் உண்டாக்கவலிமையமைந்தமரீசிமுதலியவிருடிகளைப்பெற்றேன். எ-று.

மைந்தரது மைந்தர்கள் குருக்களுடன் வானோர்
சந்திரன் முதற்பெரிய தானவர்க ளானோர்
கந்திருவர் கிம்புருடர் சித்தர்கண நாத
ரிந்திரன் முதற்றிசைக ளெட்டினு மிருப்போர்.

---

* "அளவடி நான்கின் கலிவிருத்தம்மே" என்பதிலக்கணம்.

(இ-ள்) விட்டுணுவே! என்னுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள்குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத் தேவர்களும், சந்திர சூரியர்களும், அசுரர்களும், கந்தருவர், கிம்புருடர், சித்தர், கணநாதர்களும், தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் எட்டுப்பேருமாயிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் என்னுலல்லவோ உண்டானார்களென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர். எ-று. (கசு)

எஞ்சுத லாவிறைவ னென்பதனை யென்பேர்
கஞ்சனெனு மைந்தனை மறந்திடு கரத்தா
லஞ்சலில் படைப்பொழியி லெப்படி யளிப்பாய்
செஞ்சுவ ரிலாதெழுது சித்திரமு முண்டோ.

(இ-ள்.) குறைவில்லாத சகலத்துக்கும் நானேகர்த்தாவென்பதையும், என்பிள்ளைதான் கஞ்சனென்னும் பிரமனென்பதையும் மறந்துவிடு, நான் என்கையினலே உலகத்தைப்படைக்காவிட்டால் நீஎப்படிக்காப்பாற்றுவாய்; அழகிய சுவரில்லாம லெழுதுகிற சித்திரமுமுண்டோ! வென்று பின்னுஞ்சொல்லுவார்பிரமதேவர். எ-று.

அளித்திடு களிப்பினை யகத்தினில் விடாயேல்
வெளிப்பட வொருத்தனை யளித்திட விதிப்பேன்
குளிர்ச்சிய கடற்கிடை குதித்திட தனுள்ளே
யொளித்திடு சுரத்திர ஞனைச்சருவு முன்னே.

(இ-ள்.) விட்டுணுமூர்த்தியே! சகலத்தையும் இரட்சிக்கின்றேமென்கிற மதத்தைவிட்டுவிடு, அவ்வாறு உன்மனதிலிருக்கும் எண்ணமதைநீ விடாமற்போனுல், உன்உத்தியோகத்தை நீக்கி மற்றொருவனையுண்டாக்கி இரட்சிக்குந் தொழிலுக்கு நியமித்து விடுவேன், நம்முடைய புத்திர பௌத்திரர்களாகிய தேவர் கூட்டங்கள் வந்து உன்னைக்கொல்லும்படி வளைத்துக்கொள்ளுவதற்கு முன்னே குளிர்ச்சிபொருந்திய திருப்பாற்கடலுக்குள்ளேகுதித்து ஒளித்துப்போவென்று சொன்னர் பிரமதேவர். எ-று. (உக)

வித்தக முனிப்பிருகு விட்ட முனிவாலே
பத்துரு வெடுத்தனை பகுத்தறிகி லாயோ
வத்தனை யுடற்களு மமைத்தபடி யாலென்
கைத்தலமு மிப்படி கறுத்தபடி பாராய்.

(இ-ள்.) ஞானசொரூபியாகிய பிருகு ரிஷியிட்ட சாபத்தினால் பத்துதரம் பூமியில் பிறந்தாய், நீ அதை பகுத்தறிய வில்லையோ (அப்படி நீ பிறந்தபோதெல்லாம்) அவ்வளவு பெரிய வுனது உடல் களே யெல்லாம் படைத்துப் படைத்தல்லவோ என்கைகள் காய்ப் பேறி இப்படிக் கறுத்துப்போயிற்று நீ பாரென்றுபின்னுஞ் சொல் லுவா ராயினர். எ-று. (உஉ)

உந்திமல ரோகனென விகழ்ச்சியுரை யாதே
மூந்தவொரு தூணிடை முளைத்தனை யுனக்குத்
தந்தையென வோவலது தாயதென வோசொல்
செந்தழல் பிறந்துகிளை தீய்ப்ப தறியாயோ.

(இ ள்.) ஓவிட்டுணுவே? நம்முடையநாபிக்கமலத்தினால் தான் இவன் தோன்றினு னென்று நிந்தனைசொல்லாதே, முன்னுலே நீ ஒரு தூணினிடத்திலே பிறந்தாயே, அந்தத்தூணை உனக்குத் தகப் பனென்று சொல்லட்டுமா! அல்லது தாயென்று சொல்லட்டுமா! அந்தத் தூண் உனக்குத் தந்தையானால் எனக்கு நீ தந்தையாவாய், செந்நிறம் பொருந்திய நெருப்பு மூங்கிலினிடத்திலேபிறந்து மூங் கிலைத்தானேகொளுத்திப்போடுகிறதை அறியாயோ! அப்படி உன் னிடத்திலே நான்பிறந்தாலும் உன்னை அழித்துப் போடுவேனென் ரூர் பிரமதேவர். எ-று (உக)

வேதனிவை சொற்றன கொடும்படை வெதுப்பிக்
காதிடை துளைத்தனல் புகட்டின கடுப்பக்
* கோதமோ டெழுந்தபுகை கொண்டகைகொண்டே
மாதவன் மதித்தனன் மறுத்திவை யுரைப்பான்.

---

* குரோதம், கோதமெனத் திரிந்து நின்றது.

(இ-ள்) பிரமன் இவ்வாறு இகழ்ந்துபேசியவார்த்தைகள் விட்டுணுவுக்கு இரண்டுகோதிலுங் கொடியவேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் தொளைக்கவிட்டு உள்ளேசெலுத்திய நெருப்புபோல் தகிக்கமிகுந்த கோபங்கொண்டு புகையெழும்பும்படியாகநகைத்து இவனுக்கு இந்தஅகங்காரம்வந்தது எந்தவிதத்திலுலேயென்று ஆலோசித்துச் சிலவார்த்தைகளைச்சொன்னர் விட்டுணுமூர்த்தி. எ-று. (உசு)

வந்தவழி தன்னையு நினைத்திலை மனத்தென்
னுந்தியுன தன்னையென வுன்னுதலி யில்லாய்
தந்தைசிறு மைந்தர்பிழை தன்னையுண ராரென்
றிந்தவுரை சொல்லினை யிகழ்ந்தது பொறேனே

(இ-ள்.) பிரமனே? நீ வந்தவழியையும் நினைத்தாயில்லை! என்னுடைய நாபியையுனது தாயென்று உன்மனத்தில் ஆலோசிக்கவும் இல்லை; தந்தைகளாயிருக்கிறவர்கள் பிள்ளைகள் செய்த பிழையை ஒரு குற்றமாகநினையார்களென்று இந்தவார்த்தைசொல்லினையோ இனிமேல் இப்படி இகழ்வாயாகில்பொறுக்கமாட்டேனென்றுபின்னுஞ்சொல்லுவார் விட்டுணுமூர்த்தி. எ-று. (உஙி)

கன்றுமது வுங்கை டவப்பகடு தானு
மென்றனைய ராகவு மிகழ்ந்துயிர் குடித்தேன்
மன்றவொரு தீமைசெயின் மைந்தனென வுண்டோ
வன்றியுட லுனையையு மறுத்தெறிகி லாரோ.

(இ-ள்) கோபத்தையுடைய மது என்பவனும் யானேபோன்ற கைடவனென்பவனும் எனக்குப் பிள்ளைகளா யிருந்தும் என்னையிகழ்ந்து எதிர்த்தபடியினுலேகொன்றுவிட்டேன்; நிலைபெற்ற ஒருதீங்குசெய்தால் மகனென்றுபார்க்கக்கூடுமோ! அஃதல்லாமல்தேகத்திலே ஒருகட்டிகண்டால் அதை யறுத்தெறிந்து சொஸ்தப்படுத்திக்கொள்ளாம லிருக்கின்றார்களோ மனிதர்கள். எ-று. (உசு)

பித்தனுன தோர்தலை பிடுங்கியெறி போதி
லத்தலை நமக்கென வமைக்கவிதி யில்லா
யெத்தலைவ னென்பதுனை யித்தகைமை கொண்டோ
பைத்தலை யராமுடிகொள் பாரிடம விதித்தாய்.

(இ-ள்.) ஓ பிரமனே! பித்தனுகியசிவன் உன்னுடைய தலைகளி லொன்றைப் பிடுங்கி எறிந்தகாலத்தில், அந்தத்தலையை மறுபடியும் முண்டாக்கிக்கொள்ளவகையில்லாதவனுகிய நீஉன்னை எப்படித்தலை வனென்றுசொல்லுகின்றது; இந்தத்தலைபைக்கொண்டு தாளுபட த்தையுடைய ஆதிசேடன் முடியிலிருக்கின்ற பூமியைப் படைத்தா யென்ருர் விட்டுணுதேவர். எ-று. (உஎ)

மச்சவுரு வங்கொடு மறைத்தொருதி தந்தேன்
விச்சையுள தானவரை வென்றுயிர் குடித்தே
னச்சுமர மாமெனினும் வைத்தமர மென்றே
யச்சமுறு கின்றன னழிக்கவரி தென்றே.

(இ-ள்.) பிரமனே? சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்க ளைப்பிடுங்கிக்கொண்டு போனபோது, நான்மச்சாவதாரங்கொண்டு (அவ்வசுரனைக்கொன்றுவேதசமுகங்களைவாங்கித்தந்தேன், அஃதல் லாமல் சாமர்த்தியமுள்ள அநேகஅசுரர்களைக்கொன்று ஜெயங்கொ ண்டுதேவர்களோடுஉன்னைபுங்காப்பாற்றினேன் எட்டிமரமானலும் தான் வைத்த மரமாகவிருந்தால் வெட்டார்கள்; அதைப்போல பின் னையான உன்னை கொல்லக்கூடாதென்று பயப்படுகிறேன் னென்ருர் விட்டுணு. எ-று. (உஅ)

என்றொருவ ருக்கொருவ ரெத்தனை யுரைத்தார்
கன்றினர் புயத்தின்மிசை கைத்தல மடித்தார்
நின்றுல குதித்தனர் நெருங்கினர் நிமிர்ந்தார்
துன்றிய கனற்பொறி சுருக்கெழ விதித்தார்.

(இ-ள்) இப்படி ஒருவர்க் கொருவர் எத்தனை வார்த்தைகளை யோசொல்லிக் கொண்டிருந்தார்கள்; கோபித்துக்கொண்டு புஜத்தின்மேல்கைகளாலே அடித்துக்கொண்டார்கள்; தின்றுபூலோகத்தில் குதித்தார்கள்; தெருங்கினார்கள்; நிமிர்ந்தார்கள்; நெருப்புப்பொறிகள் தெருக்கமாய்விழ சுருக்கெனக்கண்களை விழித்தார்கள். எ-று.

வெற்புகள் பொடித்தன வெடித்தது கடாகம்
பற்பல சுடர்க்கதிர் பனிக்கதி ரொளித்த
சர்ப்பமு நெளித்தது தலைச்சுமை பொறுத்த
கற்பமுடி வென்றமரர் கண்களை யிமைத்தார்.

(இ-ள்.) (பிரமதேவரும், விட்டுணுமூர்த்தியும், சண்டைசெய்கிறபோது) மலைகளெல்லாம் பொடியாய்ப்போயின, அண்டகடாகம் படீரென்று வெடித்து, பற்பலவெப்பம்பொருந்திய கிரணங்களையுடையசூரியர்களும், குளிர்ச்சிபொருந்தியகிரணங்களையுடைய சந்திரர்களும் ஒளித்தார்கள், ஆதிசேஷன்தலைச்சுமை பொறுக்கமாட்டாமல்உடல் நெளித்துக்கொண்டான்; கற்பகாலம்வந்து உலகமழியப்போகின்றதென்று (இமையா) நாட்டமுடைய தேவர்கள் கண்களை இமைத்துக்கொண்டார்கள். எ-று. (கூ0)

உடுக்கண முகிற்கண முதிர்ந்தவுல கெல்லா
மிடுக்கணில் விழுந்தன வெழுந்தன பராக
மடக்கின பகீரதிமுன் னைநதி யெல்லாந்
திடுக்கொடு முழுங்கின திசைக்கரிக ளெட்டும்.

(இ-ள்) நட்சத்திரக்கூட்டங்களும், மேகக்கூட்டங்களும் உதிர்ந்தன; உலகமெல்லாந் துன்பங்களோடுஅடுக்குக்குலைந்துவிழுந்தன செந்தூள் கருந்தூள்களெழும்பின கங்கைமுதலானநதிகளெல்லாம் தண்ணீரில்லாமல்வற்றிப்போயின; அட்டதிக்கிலுமிருக்கிற அஷ்டகஜங்களும் திடுக்கிட்டுப்பயந்தன. எ-று. (கூக)

மேலினி தெடுத்தெறிவர் வீழ்வர்கடி தோடிக்
கோலியெதிர் குத்துகென நின்றிடுவர் குத்திச்
சாலமடி தொட்டளவில் சாரிகை திரிந்தார்
மாலையு மிருட்டும்வல வாய்வருதன் மான.

(இ-ள்.) ஒருவரையொருவர் மேலேயெடுத்தெறிவார்கள் கீழே விழுவார்கள்; மறுபடியும்எழுந்து விரைவில் ஒடிவஞ்சுந்து எதிரே நின்றுகுத்தென்று சொல்லுவார்கள்; அப்படிக்குத்திக்கொண்டுமிக வும்கோபத்துடனே மடிபைப்பிடித்து ஒருவருக்கொருவரிழுத்து சூறைபோலநேகவிசைசுழன்று திரிந்தார்கள்; * அந்திநேரமும்இரு ளும்வல'மிடமாக வருதலை யொத்திருக்கும்படி. எ-று. (கூஉ)

ஊருவன தத்துவன செல்வனவிண் ணேடே
சேருவன யின்றன திரிந்தன திரட்டார்
தாருவகை யிற்றன தழைந்ததிரு ளெங்கு
மேருவரை யுக்கதெழு வேலையள ருக.

(இ ள்.) அவ்வேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்றசீவன்க ளும், தவழ்கின்றவைகளும், நடக்கின்றவைகளும், பறக்குஞ் சீவரா சிகள்போல ஆகாயத்தில் பறந்தன, நிலையாகநின்ற விருக்ஷமுமலைக ளும்நிலைபெயர்ந்தன, திரளாகநிறைந்தஐந்து வகையாகிய தேவதரு க்கள் பொடிப்பொடியாய்ப்போயின எவ்விடமும் அந்தகாரம்நிறை ந்ததுமகாமேரு அசைந்தது; சத்தசமுத்திரங்களுஞ் சேரூயின. ()

அந்தமுடி வெல்லதனி லஞ்சியிமை யோர்தா
மிந்திரனை யெய்தினர்க ளெய்திய துரைக்கு
முந்தியவ ணுற்றதுயர் யாவையு மொழிந்து
வந்தவர வேதென வகுத்துரைசெய் கின்றார்.

---

* பிரமன் செந்நிறமும், திருமால் கருநிறமு மாதலின், மாலை யும்இருட்டு மென்றனர்.

(இ-ள்.) சருவசங்காரகாலம் வந்ததென்று சொல்லும்படி இருவருஞ்சண்டைசெய்யும் அந்தவேளையில், தேவர்களெல்லாம் பயப்பட்டுத் தேவேந்திரனிடத்திற்போய்ச் சேர்ந்து தங்களுடைய துக்கத்தைச்சொல்லுவதற்கு முன்னே, தேவேந்திரன்தான்பட்ட துன்பங்களெல்லாஞ்சொல்லிப்பின்பு நீங்கள்வந்தகாரியம் எதென்றுகேட்கத்தேவர்கள் சொல்லுவார்கள். எ-று. (கூ)

ஆரணனு நாரணனு மானவிரு வோருங்
தாரணியி லேமிகு சமர்த்தொழில் வீளைத்தா
ரேரணிய வேறுகதி யில்லையெவ ருக்கும்
காரணமே யேதொழுதல் காரியமி தென்றார்

(இ-ள்.) நான்கு வேதங்களுக்குரிய பிரமனும், விட்டுணுவுமாகியஇருவரும் பூமியில்மிகுந்தயுத்தத்தைச் செய்கிறார்கள்; எங்களுக்குப்பிழைக்கத் தகுந்தமாக்கம் வேறேயில்லை; எல்லாருக்குங்காரணமாயிருகிற பரமசிவனைத்தொழுது இந்த செய்தியைச்சொல்வதேகாரியமென்று சொன்னார்கள் தேவர்கள். எ-று. (கூ)

நாயக னிசைந்துபினர் நாகவுல கத்தோர்
தூயமலர் போலடி தொழுத்தரிவை பாகா
மாயமுடன் மாலயன் வருத்தமது தீராய்
தாயலது மைந்தர்துணை தாரணியி லுண்டோ.

(இ-ள்.) இப்படிச்சொல்லத் தேவேந்திரனும் சம்மதித்துப்பின்பு,அவனோடு விண்ணுலகத்தில் வசிக்கும் தேவர்களெல்லாரும் போய்ச்சிவனுடைய பரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற பாதத்தைத்தொழுது, உமாதேவியை யிடதுபாகத்திலுடையவனே மாயஞ்செய்கின்றவிட்டுணுவும், பிரமனும் சண்டைசெய்வதனால், வருந்துக்கத்தைத்தீர்க்கவேண்டும்; பிள்ளைகளுக்குத்தாயேதுணையல்லாமல்மற்றொருதுணை பூமியிலுண்டோ! என்று சொன்னார்கள் தேவர்கள்.

உருட்படு சகட்டைநிக ருற்றுலகின் மீதே
யிருட்படு புறப்பிணை யிறப்பிணை யுருதே
பொருட்பெற வுனக்கடிமை யுக்களவி லாவுன்
னருட்கடல் குளித்திட வடைக்கலம தாணெம்.

(இ-ள்.) உருண்டுகொண்டுபோகின்ற வண்டியினுடைய சக்கரம்போல், இவ்வுலகத்தின்கண்தோன்றி அஞ்ஞானம்பொருந்தியபிறப்பையுமிறப்பையும் மாறிமாறியடைந்துவருந்தத்தை யனுபவியாமல் மோட்சத்தைப்பெற உனக்கடிமையாகப்புகுந்த உன்னுடைய அளவில்லாத கிருபைக்கடலில்குளிக்குமாறு அடைக்கலமாணுமென்றார்கள் தேவர்கள். எ-று. (கஎ)

புழுக்குடை யுடற்சுமை பொறுக்கமுடி யாத
விழுக்குடைய விச்சைகெட விச்சையருள் வானே
முழுக்கட லிடைத்தின முழுக்குறினு மாரு
வழுக்கமல மற்றிட மடைக்கலம தாணெம்.

(இ-ள்.) அநேகம்புழுக்கள்குடைந்துகொண்டிராநின்ற உடலாகியபாரத்தைப்பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப்பிரயத்தினாலே கிருபைசெய்கின்ற கடவுளே! பெரிய சமுத்திரத்தினிடத்தில் தினம்முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்கற்றுப்போக அடைக்கலமாயும்மைச் சேர்ந்தோமென்றார்கள். எ-று. ()

எண்ணமினி வேறிலை யெமக்கருள்செ யென்றே
கண்ணுதலை விண்ணவர்கள் கற்றுமொழி தோதி
லண்ணலு முணர்ந்தன னனைத்துயரி னுள்ளே
யெண்ணெனென நிற்குமவ னீதறிகி லாணை.

(இ-ள்.) இனிமேல்வேறே ஆலோசனையில்லை, எங்களுக்குக்கிருபைசெய்யுமென்று பாலநேத்திரத்தையுடையசிவனைத் தேவர்கள் புகழ்ந்து தோத்திரஞ்செய்கையில், சிவபெருமானும் அவ்விருவருக்

கும் வந்தசண்டையின் மூலத்தையறிந்தார்; எல்லா வுயிர்களிடத்தி லும் எள்ளினிடத்து எண்ணேபோல்நிற்கும்கடவுள் இதுஅறியமாட் டாரோ! அறிவார். எ-று. (நஈ)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

நடுக்கமுறு முனிவரெலா மம்பரெலாம்
பயந்தவிர நாக மீது
படுக்கைபுரி திருமாலும் பங்கயத்தி
லுறுமயனும் பகைமை தீர
வடுக்கியிடும் புவனமெலா மடுக்கழியா
திருக்கமனத் தருள்வ தாகித்
தடுக்கரிய தழலுருவத் தொருவரையா
யிருவரையுங் * தடுப்ப தானன்.

(இ-ள்.) நடுக்கமடைந்தமுனிவர்கள் தேவர்களெல்லாரும்பயம் நீங்கும்படிச் சர்ப்பசயனத்தில் நித்திரைசெய்கின்ற விட்டுணுமூர்த் தியும், தாமரைப்புட்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், ஒருவ ருக்கொருவர்பகைநீங்கவும், அடுக்கடுக்காயிருக்கும் அண்டகோடிக ளெல்லாம் அடுக்கழியாம லிருக்கவும், கிருபைசெய்வதற்கு மனத்தி லெண்ணி தடுத்தற்கரிய, அக்கினிசொரூபத்தோடு கூடிய ஒருமலை யாகிய அவ்விருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார் பரமசிவன்.

பாதலத்திற் பணிகளெலாம் வீழுதாக
வதன்கீழிற் பருவே ரோடிப்
பூதலத்திற் கீளத்திமையோ ருலகெல்லா
மலர்ந்துமலர்ப் புண்ட ரீகன்
மீதலத்து முகடுடைத்துக் கடாகவெளி
கடந்துபெரு வெளிக்கு மேலா

---

* மாசிமாதத்திலேஅபரபக்கத்துச் சதுர்த்தசிதிதியிலே இரவு மகா நிசிக்காலத்திலே சோதியாகத் தோன்றினார்.

மாதலத்துக் கிதுவுமொரு கனன்மேரு
வடுத்ததென வளர்ந்த மாதோ.

(இ-ள்.) பாதாளலோகத்திலிருக்கிற பாம்புகளெல்லாம் அம்ம லைக்குச சல்லிவேராகவும், அதன்கீழ்பருத்த வேரோடிபூமியிற்பெ ரிதாய்கிளைத்துத் தேவலோகங்களெல்லாந் தாண்டி பிரமலோக த்துமுகட்டையுமுடைத்து அண்டகடாக வெளியைக்கடந்து அதற் கப்பாலிருக்கும் பெரியவெளிக்கு மேலாயிருக்கிறஇடத்துக்கும்அக் கினிச் சொரூபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்லவளர்ந் தது. எ-று. (சக)

மூளைக்குநெடுஞ் சுடரிரவி புரவியுல
வாவுலக முழுது மோடிக்
கிளைக்குமணி யிருளகற்ற வேற்றிவைத்த
விளக்கெனவே கிளர்க்கை பாலே
யளக்கரெலா மளப்பரிய வடவையழல்
பரந்ததென வரத்தமானத்
திளைக்குமெழு கிரிகளெல்லா மதுசொரிந்த
சிறுபொறிபோற் சிவந்தமாதோ.

(இ-ள்.) உதயமாகிநெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரிய னுடைய தேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக்கூடாத உலகமெல் லாங்கடந்து கிளைத்த நீலமணிபோலும் கரிய இருளையோட்டுவதற் குவற்றிவைத்த விளக்கென்று சொல்லும்படி பிரகாசிப்பதனால், ச முத்திரமெல்லாம் சொல்லுவதற்கரிய வடவாமுகாக்கினி பரந்தது போலச் சிவப்புநிறம்பொருந்த சத்தகுல பர்வதங்களெல்லாம் அந்த ப்பிரகாசத்தினால் அக்கினிமலை சொரிந்த அக்கினிப்பொறிகள் போலச்சிவந்தன. எ-று. (சஉ)

வானக்கண் ணழலாயது சண்டமல மோனுங்
காணக்கண் ணனுமஞ்சி யகன்றூர்கறை காணூர்
ஞானக்கண் ணினர்காணும தல்லானவை சேரு
மீனக்கண் ணினருக்கெளி யாரேவெம்மானே.

(இ-ள்.) இப்படி ஆகாசபரியந்தம் அக்கினி சொரூபமாயுள்ளதைக்கண்டபிரமனும், வேணுகாதத்தைச் செய்கின்ற கிருஷ்ணனுகியவிட்டுணுவும், அதனுடைய முடிவைக்காணுதவர்களாய் பயப்பட்டுஒதுங்கி நின்றார்கள்; ஞானக்கண்களையுடையவர்கள் காணுவதல்லாமல் குற்றம்பொருந்தியஞானமாகிய முகத்திற்கண்ணுடையவர்காண்கிறதற்கு எளியவரோ! நம்முடைய பரமசிவன். எ-று. (கஅ)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கண்ணிலள விடவரிய சுடரினேக்கண்
டிருவருமாய்க் கவலையாஞ
ரெண்ணிலிதி னடிமுடியை யறிபவரே
பெரியவரென் றிசைத்தாரிந்த
ணிமனடிண் யறிவனெனப் பணவிடையிற்
றாக்கமிக்கோன் வராகமாஞன்
விண்ணின்முடி யறிவனென வெகினவடி
வெடுத்தயனும் விரைந்து போஞ்ன்.

(இ-ள்.) கண்களாலே இவ்வளவுதூரம் இந்தமலைபோயிருக்கிறதென்றுஅறியக்கூடாத பிரகாசமானமலையைப்பார்த்து,இரண்டுபேருந்தன்பத்தையுடையவராய் அளவுகடந்துள்ள இந்தமலையினதுஅடியையாவதுமுடியையாவது அறிகின்றவரே பெரியவரென்றுஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள் அப்பொழுது படத்தை

யுடைய சர்ப்பத்தில்நித்திரை செய்கிறவராகியவீட்டுணுமூர்த்தி, இந்தமலையினடியை நானறிந்து வருகின்றேனென்றுவராகவடிவாஞன்; ஆகாயமார்க்கத்திற்சென்று இந்த மலையின் சிகரத்தைக் காணுகின்றேனென்று பிரமனும் அன்னப்பட்சியாகி ஆகாயத்திற் பறந்தான்.

மெத்தமரைக் கனத்தினுக்கா யிரங்காதம்
பறந்தயனூர் விரைந்து போனூர்
துத்தியரா வெடுத்தபுவிகனத்தினுக்கா
யிரங்காதந் தூளத்துப் போனு
ரத்தகையோர் செயலுரைக்கிற் கனகமணி
நெடும்பூட்டுக் கருகிலோடு
நித்திலப்பொற் குண்டிகையு நீலமணிக்
குண்டிகையு நிகர்த்த மாதோ.

(இ-ள்.) சொல்லப்பட்ட அரைக்கணத்தில் பிரமதேவர் ஆயிரங்காதவழி அதிவேகமாய்ப் பறந்து மேலாகப்போனூர்; படத்தையுடைய ஆதிசேடன் சுமந்தபூமியை ஒருநொடியில் ஆயிரங்காததூரம் தொளைத்துக்கொண்டு விட்டுணு கீழாகப்போனூர்; அஃதெப்படியிருந்தென்றால், அம்மலை தங்கமயமாகிய ராட்டணப் பூட்டைப்போலவும், அதில் இறைக்கிறதற்குக் கட்டிவிட்டிருக்கின்ற நீலரத்தினத் தோண்டிபோலவும் முத்துகளிழைத்திருக்கிற அழகிய தோண்டிபோலவுமிருந்தது. எ-று. (சடு)

பூவுலகை யரியகன்று கீழுலகின்
முறைமுறையே புகுந்து போந்து
காவலுறு மாவலிதன் சோபகவதி
யெனும்புரமுங் கடந்து மேவித்

தேவர்தொழும் பரஞ்சுடர்வா ழாடகே
சுரங்கரதஞ் சித்தும் போற்றி
மூவுலகை முதலள்ந்தோ னேழுல
மளந்துமதன் மூடிவு காணுன்.

(இ-ள்.) வராகவடிவமெடுத்த விட்ணுவானவர் பூலோகத்தைக் கடந்து, அதன்கீழிருக்கிற ஏழுலகத்தையும் முறையேதொளைத்துக் கொண்டே கடந்துபோய், மாவலிச்சக்கிரவர்த்தி காவலிலிருக்கிற போகவதிபட்டணத்தைத் தாண்டிச்சென்று, அப்புறம்தேவர்கள் வணங்கும் பிரமசொரூபமாய்விளங்குகின்றசிவன்வசிக்கும் ஆடகேசுரத்தைக் கண்டு கைகளினலும் சிரத்தினலும் வணங்கிமுன்னேமூன்றுலகத்தையு மளந்தவர் இப்போதேழுலகங்களே அளந்தும்அந்தமிலையினடியைக் காணுமற்போனர். எ-று. (சசு)

வளர்ப்புடைய பிறைபோல வளர்மருப்புந்
தேய்பிறைபோல் மழுங்கிப்போகக்
குளப்படியு முகநுனியும் பிணைத்தேடு
மாசையைப்போற் குறைந்துபோக
வளப்பரிய துயரளவிப் பத்துநூருண்
டகன்றதற்பி னரணை வாழ்த்தி
யிளைப்பதுவுஞ் சலிப்பதுமற்
றெழுதலமு மிடர்க்கடலு மேறினனே.

(இ-ள்.) அப்படி மகாவிட்ணு வராகவடிவங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல் நாளுக்குநாள் வளர்ச்சியுற்ற இரண்டு கொம்புகளும் தேய்பிறைபோல் குறைந்து மழுங்கிப்போகவும், குளம்புகளும் முகத்தினுனியும் அம்மலையைத்தேமோசை பின்பு எப்படி குறைந்துபோயிற்றே ! அப்படித்தேய்ந்து குறையஎண்ணக்கூடாத துக்க சமுத்திரத்தில் விழுந்து ஆயிரந்தேவ வருஷகாலந் தேடியுங் காணுமல் பின்பு தெளிவுவந்து இது சிவனுடையசெயலென்றறிந்து

அவரைத் தியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்பும் நீங்கித்தன்னுடைய துக்க சமுத்திரத்தையும் எழுதலத்தையும் தாண்டிவந்தார். எ-று. ()

தம்போரை முகற்றெடுக்கத் தழற்பிழம்பா
யெழுந்தவந்தத் தலத்தைச் சார்ந்தா
னம்போத னிதன்முடியி னளவறிபா
னெனமனத்தி லையந் தீர்ந்தா
னம்போருக் கரியானைச் சேயானைத்
தனதுவிழி நயனத் தோடே
பைம்போதைப் புனைவானைப் பலகாலும்
பணிக்துருகிப் பரவி நின்றான்.

(இ-ள்.) தனக்கும் பிரமனுக்கும் வந்தகலகத்தை நீக்கும்படிசிவ பெருமான்! அக்கினிசொரூபமாக தோன்றிய அந்தத தலத்தைச்சேர்ந்து, அழகியதாமரைப்பூவிலிருக்கிற பிரமன் இந்தமலையின் முடியளவை அறியமாட்டானென்று தன்மனத்திற் சந்தேகமற நிச்சயஞ் செய்துகொண்டு, நம்பாதமனிதர்களுக்கு அரியவரை எப்படிப்பட்டவர்களுக்கும் தூரமாகவிருக்கிறவரைத் தம்முடைய கண்ணுகிய புட்பத்தோடு அழகியபுட்பங்களைத் தரிக்கின்றவரைப்பலதரமும் வந்தனஞ்செய்து உள்ளமுருகிப் பரவினர் விட்டுணுமூர்த்தி. எ-று. (சஅ)

கலி விருத்தம்.

இன்னதா மிவன்செய லிருக்க விங்கிதன்
முன்னமே யழற்கிரி முடியைத் தேடவே
யன்னமாய்ப் பறந்தவ னரைக் கணத்திலே
மன்னுமோ ராயிரக் காதம் வாவினான்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் இந்தவிட்டுணுவின்காரியமிருக்க, இதற்குமுன்னே அவ் அக்கினிமலையின் முடியைத்தேட அன்னப்பட்சிரூபமாகிப் பறந்தபிரமன் அரைக்ஷணத்திலே நிலைபெற்ற ஆயிரங்காதவழிதாண்டினர். எ-று. (சக)

கிறியே யண்டகோ ளகையுங் கீழுற
வேறி * யோராயிர மாண்டு மேவினு
னூறுநூ றுயிராக் காத நோக்கினு
மீறிலா திருந்ததவ் வெரியின் றாண்மே.

(இ-ள்.) அண்டகோளகையும் பிளவுபடக் கிழித்து அவ்வண்ட கோளகை கீழுறவதற்கு மேலும் பறந்துபோய் ஆயிரவருடந்தேடினர், அப்படி அநேக நூறுயிரங் காதந்தாண்டிப் போய்ப்பார்த்தாலும் முதல் பார்த்ததுபோலவே முடிவில்லாதிருந்தது அந்த அக்கினித்தூண். எ-று. (கூ)

சிறையெலா முதிர்ந்தன விசையுந் தீர்ந்தன
நிறைவதா மிடுக்கணு முயிர்ப்பு நீண்டன
குறையெலாம் வளர்ந்திடத் தனிமை கூர்தலான்
மறையினு னிவையிவை மனத்தி னெண்ணினான்.

(இ-ள்.) அப்படி பிரமன் அன்னமாய்ப் பறந்து போம்போது, சிறகுகளெல்லா முதிர்ந்துபோயின; விசையும் அடங்கிற்று, குறைவில்லாத திக்கமும் பெருமூச்சும் அதிகப்பட்டன; மனக்குறையானது மிகவும்வளர ஒருவருமில்லாமல் தான் ஒன்றியானபடியினலே பிரமன் சிலவற்றை மனத்திலெண்ணினர். எ-று. (கக

அரியமா லிதனடி யறிந்து மீளுமோ
தெரிவுரா திடையிலே திரும்புமோ வென
வரியதா கியதய ரூச லாடினு
னெறியுறு மெழுகுபோ லிளகுஞ் சிந்தையான்.

(இ-ள்.) அரியமகாவிட்டுணு இந்த அக்கினிமலையினுடையஅடியை இந்நேரம் அறிந்து திரும்புவானே கொஞ்சதூரந்தேடி இனி மேல் தேடக்கூடாதென்று திரும்பி வருவானே என்கிற பொறுத்

* விட்டுணுவும் பிரமனும் பன்றியும் அன்னமுமாகத் தேடினர் என்பதை "விஷ்ணுர்வை வாராகம் ரூபமாஸ் தாய எனவும், ப்ரஹ்மாவை ஹம்சோபூத்வா" எனவும் வரூஉம் இருக்குவேத மகாமந்திர வசனங்களால் தெளிக.

தற்கரிய தூக்கமாகிய ஊசலிலிருந்தாடினார். நெருப்பிலேயிட்ட மெழுகுபோல் இளகிய மனமுடையவனாகிய பிரமதேவன். எ-று. (இஉ)

மற்றிது சிவனென மனத்தி னெண்ணிலே
னுற்றரி தன்னையு முரவு கொண்டிலே
னிற்றைநாள் வரைக்குமிவ் விடர்க்குண மூழ்கினேன்
சிற்றறி வுடை மையோ செய்த தீமையா.

(இ-ள்.) இந்த மலையைச்சிவனென்றுநிஞ்சிற்றும்மனத்தினினைத்து அறியாமற்போனேன், பகைத்துக்கொள்ளப்பட்ட விட்டுணுவையாவது உறவுகொள்ளாமற் போனேன், அன்றுமுதலின்றுவரையிலும் வெகுகாலமாய் இத்தத்துக்கசமுத்திரத்தில் மூழ்கினேன்; என்னுடைய சிறியபுத்தியினாலேயோ பூர்வம் நான் செய்த பாவத்தினாலேயோ என்று விசனத்தையடைந்தான் பிரமன். எ-று. (இங)

எய்தினேன் முடியறிந் தேகிலே னெனும்
பொய்களை யுரைக்கினும் பொருந்தவே யுரை
செய்துணை பிறிதிலை யென்று தேம்பினான்
* கைதையின் மடல்வரப் பின்புகண்டனன்.

(இ-ள்.) இவ்வளவு தூரந்தேடிவந்தும் இம்மலையினது முடியையறியாமற் போனேன் ஆனாலும் இனிமேற்போய் விட்டுணுவினிடத்திற் பார்த்தேனென்று பொய்ச்சொன்னாலும், ஒத்தாசையாகப்பார்த்தானென்று பொய்ச்சாட்சி சொல்வதற்கு வேறு ஒருதுணையுமில்லையே யென்று விசனப்பட்டான்; அச்சமயத்தில் தாழம்பூ மடல் ஒன்று மேலே யிருந்திறங்கப்பார்த்தான் பிரமன். எ-று. (இச)

இம்மட லெங்குற்று வருவ தென்னுமுன்
னெம்மட லணைந்ததங் கதனை யேற்றனன்
செம்மறன் முடியில்வீழ் o செம்ம லாகையால்
மெய்ம்மைசே ருயிர்ப்பதாய்விடுமி னென்றதே

* கைதை—தாழம்பூ. o செம்மல்—பழம்பூ.

(இ-ள்.) இந்தத்தாழைமடல் எங்கேயிருந்து வருகிறதென்று ஆலோசிக்குமுன்னே, தாழம்பூ பிரமனுக்குச் சமீபத்திலில்வர; அதைக் கையினாலே பிடித்தான்; அதுபரமசிவனுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்த பழம்பூ வாகையால் மெய்மையான பெருமூச்சோடு என்னைச் சிக்கிரத்தில் விட்டுவிடுவாயென்று சொல்லிற்று. எ-று. (இரு)

ஏரணி கைதை யே யிங்கு நீவருங்
காரண மேதெனக் கமலன் கூறினன்
ஆரண ஞரண னளவிடா முத
றூரணி முடியினுந் தவறி வீழ்ந்தனன்.

(இ-ள்.) அந்தத் தாழம்பூ சொல்லியதைக்கேட்டு, அழகான தாழம்பூவே? நீ எங்கேயிருந்து இங்குவந்தாய். அவ்வாறு வருவதற்குக் காரணமென்னவென்று பிரமன்கேட்க, பிரமனாலும் விட்ணுவினாலும் அறியக்கூடாத பரமசிவத்தினுடைய கொன்றைப்பூமாலையையணிந்த சிரத்திலிருந்து தவறிவிழுந்தேனென்று சொல்லிற்று. எ-று. ()

தார்ப்பொலி முடியினுந் தவறி வீழ்ந்தபின்
னாற்பதி னாயிரம் வருட நண்ணினே
னேற்பது விடுகவென் றசைப்ப வெந்தையைப்
பார்ப்பது விடுத்தயன் பகர்வதா யினன்.

(இ-ள்.) கொன்றைமாலைபிரகாசிக்கின்ற சிவபெருமான் திருமுடிமேல் நின்றுவிழுந்து நாற்பதினாயிரம்வருஷங்களாகவந்தேன், இன்னும் நான் பூமியிற் போகவில்லை; வருத்தத்தோடு வருகிறேன், என்னைப்பிடிக்கவேண்டாம், விட்டுவிடென்று தாழம்பூசொல்ல, பிரமன் அம்மாலையின்றிருமுடியைத் தேடுவதை வெறுத்துச் சிலவார்த்தை சொல்லத்தொடங்கினன். எ-று. (இஎ)

தன்னிய கைதையே துணையமாய் நமக்
கின்னமு மலைவுறு திடுக்க ணீக்கினு
மன்னினு முயிர்த்துணை யுறவுவேறிலை
யன்னினு னல்லனு னனமு மல்லனே.

(இ-ள்.) என் சமீபத்திலடைந்த தாழம்பூவே? நீ எனக்குச்சகாயமாயிருந்து நானின்னமுந் தேடியலையாமல் என்வருத்தத்தை நீக்கினால், உன்னைப் பார்க்கினும் உயிர்போன்ற சினேகனும் உறவும் வேறில்லை, நானும் அன்னியனல்லன், அன்னப்பகுதி மல்லன் என்று சொன்னன் பிரமன். எ-று. (நஅ)

நாமமோ நான்முக னனு மாலுமா
யேமமா மிதற்கள விசைக்க வெண்ணினேம்
பூமிகி ழிடந்தவன் போயினன் மனத்
தீமையேன் றிருமுடி தேடிக் காண்கிலேன்.

(இ-ள்.) என் பெயரோ பிரமன்; நானும் விட்டுணுவுங்கூடி அக்கினி சொரூபமாகிய இந்தமலையினளவைத் தெரிந்துகொள்ள நினைந்தோம்; பூமியின் கீழிடத்தைப் பிளந்துகொண்டு அடியை, அவன்தேடப்போனன்; பாவியாகியநான் அதன் திருமுடியைக்காண வெகுநாள்தேடி அலைந்துங் காண்கிலன். எ-று. (நக)

அடிதலை வரவிது வதுகொண் டென்பய
னெடியநின் வரவினு னினைத்த தெய்தினுற்
படியளந் தவனுடன் பறவை யாமிவன்
முடியறிந் தானென மொழிதல் வேண்டுமே.

(இ-ள்.) ஆதியந்தமாக நடந்தசெய்தியிது, அதைக் குறித்துப்பேசுவதினுற் பலனென்ன; பெருமைபொருந்திய உன்னுடைய நல்வரவினாலே நினைத்தகாரிய முடிந்தால்தான் பயன்; பூமியையளந்தவிட்

ணுவினுடன் பறவையாயுருவெடுத்த இப்பிரமன் சிவனுடைய முடியையக்கண்டா னென்று நீசொல்லவேண்டுமென்று சொல்லப்பின்னுஞ்சொல்லுவான் பிரமன். எ-று. (சுo)

வஞ்சமென் றிகழ்ந்திடேல் வருந்தி னுர்க்குபிர்த்
தஞ்சமா மெனிற்பெரும் பொய்யுஞ் சாற்றலா
மஞ்சியே சொலத்தகா மொழியு மன்றிது
நஞ்சமுண் டமைவரே நண்பு வேண்டினுர்.

(இ-ள்.) தாழம்பூவே? கேள், இது வஞ்சனைத் தொழிலென்று இகழ்ந்து தள்ளிவிடாதே; யாதோ ஒரு துன்பத்தை யடைந்தவர்க்கு உயிர்ச்சேதம் வருமாயின், அது பிழைத்தற்குப் பெரிதாகியபொய்யையும் சொல்லலாம் இது பயப்பட்டுச் சொல்லக்கூடாத வார்த்தையுமல்ல; சினேகம்வேண்டினவர்கள் தம்முடைய நண்பன் விஷத்தைதின் என்றாலுந் தின்று சிநேகிதன் பேச்சைத் தட்டாமல் கீர்த்திலே க்கச் செய்வார்கள். எ-று. (சுக)

[உண்ண என்னும் செயவே னெச்சம் உண்டு எனச்செய்தெனெச்சமாகத் திரிந்து அங்கு இழிவு சிறப்பும்மை தொக்கு நின்றது ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது.]

கண்ணுதன் முடியில்வாழ் கைதை யேபிறி
தெண்ணுவ தொழிகென வியைந்து போந்தது
விண்ணினு மிருந்துகீழ் விரைந்து வேதியன்
மண்ணுல களந்தமான் மருங்கு நண்ணினுன்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனது முடியில் வாழ்கின்ற தாழம்பூவே? வேறே ஓர் ஆலோசனையுஞ் செய்யவேண்டாம்; இதற்குடன்படென்று சொல்லத் தாழம்பூ அதற்கிசைந்துவந்தது; ஆகாயத்தில் நின்றும் சீக்கிரத்தில் பிரமன் மண்ணளந்தவிட்டுணுவினிடத்தில் வந்துசேர்ந்தான். எ-று. (சுஉ)

சிதரா கேட்டி யென் வரவின் செய்கையைக்
காதநூ றுயிரங் கணத்தி லேகடன்
தாதியான் முடியறிந் தணுகி னேனென
வோதினன் கைதையு முள்ள தென்றதே.

(இ-ள்.) இலக்குமியைத்தாங்கிய வட்சஸ்தலத்தினையுடைய விட்ணுவே? என்னுடைய நல்வரவைக்கேள், ஒரு நொடியிலே நூறுயிரங்காதம் பரந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவபெருமானுடையதிருமுடியைக்கண்டு வந்தேனென்று சொன்னன்; தாழம்பூவும் பிரம்மதான் பிரமன் பார்த்தானென்று சொல்லிற்று. எ-று. (கூஉ

எழுசீரடி ஆசிரியச் சந்தவிருத்தம்.

அக்கண மழற்கிரி வெடித்தது வெடித்தவர
வத்தினி லரக்க ரிமையோ
ருக்கனர் திசைக்களிறு கக்கின வரக்கரை
யுருக்கிய தெனக் குருதிநீர்
செக்கரொளி மட்கிட முருக்கிதழ் கறுக்கமெய்
சிவப்பொளி வெளுத்த வடிவாய்
முக்கண னதற்கிடை முளைத்தனன் முகத்திலவன்
முப்புர மெரித்த நகையே.

(இ-ள்.) அப்படி பிரமன்சொன்ன அந்தக்ஷணமே, அக்கினிமலை படீரென்று வெடித்தது; வெடித்தசத்தத்தில் இராட்சதர்கள், தேவர்கள் திடுக்கிட்டு உயிர்சோர்ந்தார்கள்; எட்டுத்திக்கில் உள்ள அஷ்டகஜங்களும் சூரியர்களே உருக்கிச்சாய்த்தாலெப்படியோ அப்படி இரத்தஜலத்தைக் கக்கின; செக்கர் வானத்துப்பிரகாசம் மழுங்கிப்போம்படி யாகவும், முருக்கம்பூவிதழ் கறுக்கும்படியாகவும், சிவந்ததமது திருவுருவின் ஒளிவுபொருந்திய நிறம் விபூதியினல்

வெளுத்தவடிவாய்த் தோன்றவும் அந்த வெடிப்பில் நின்று பரம சிவன் மூப்புரத்தை எரித்தநகை அவர்முகத்தில் தோன்ற எழுந்தரு ளினர். எ-று. (சுச)

முண்டக வகந்தையின் மொழிந்தவுரை நன்றென
மொழிந்து நகை கொண்ட வளவே
அண்டபகி ரண்டமு நடுங்கின வொடுங்கின
வடங்கின விடுஞ்சு டரெலாங்
கொண்டலு மறைந்தன சிறைந்தன விறந்தன
குறைந்தன நிறைந்த னகுவா
லெண்டிசை திரிந்தன கரிந்தன பொரிந்தன
வெரிந்தன விரிந்த தருவே.

(இ-ள்.) ஓ தாமரையில் வசிக்கும் பிரமனே? உன்னுடைய அக ங்காரத்தினுற் சொன்ன பொய்வார்த்தை நன்ரு யிருந்ததென்று சொல்லி நகைத்தகாலத்தில், அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகி டென்று நடுங்கி யொடுங்கிப்போயின, சூரியசந்திரருடைய பிரகாச மிணந்து மடங்கிப்போயின, மேகங்களும்மறைந்தன, சிறந்து நிலை யாயிருக்கிறவைகளெல்லாம் இறந்தன, குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன கூட்டமாகிய திக்குகள் அலைந்தன; பரவியிருந்த மரங்க ளெல்லாங்கரிந்தும் பொரிந்தும் எரிந்தும் போயின. எ-று. (சுடு)

கலிவிருத்தம்.

அழிந்தன னயனென வமர ரஞ்சினர்
குழிந்தது நிலமெனக் கொள்ளை யாமலர்
பொழிந்தனர் நெடியவற் குவகை பூத்தது
கழிந்தது மலரவற் கிடும்பைக் கங்குலே.

(இ-ள்.) தேவர்களெல்லோரும் பிரமன் இன்றே அழிந்துபோவ னென்று பயப்பட்டார்கள், பூமிபள்ளமாகும்படி கொள்ளைகொள்

ளையாகப் புட்பமாரியைப் பொழிந்தார்கள், நீண்டதிருவுருவத்தினை யுடைய விஷ்ணுவுக்குச் சந்தோடம்வந்தது, பத்மாசனத்தில் வசிக்கும் பிரமனுக்கு அகங்காரமென்கிற இருள் நீங்கிப்போயிற்று. எ-று.

பாடினன் பரவினன் பரவ சத்திணி
லாடினு னெடினு னளவிடா முதல்
கூடினு னெவ்வரங் கொள்ளுகே னெனத்
தேடினன் சிவனெயத் தெளிந்த செங்கண்மால்.

(இ-ள்.) அப்போது நாம் உலகமுதற்கடவுளல்ல வென்றுதெளிவையடைந்த விட்ணுதேவர், அக்கினிமலையினிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப்பாடினர், வந்தனஞ்செய்தார், பரவசங்கொண்டானந்தக் கூத்தாடினர், நான்கு திக்கிலும் ஓடினர், யாவராலு மளவிடக்கூடாத இச்சுவாமியைத் தரிசித்துக் கூடினவரானி, இனி நா னென்னவரங் கேட்பேனென்றுலோசனை செய்தார். எ-று. ()

ஆசையா லுருகுமவ் வரித னன்புகண்
டீசனும் பலவர மினிது நல்கினன்
வாசமா மலரவ னுனக்கு மண்ணின்மேல்
பூசையுங் கோயிலும் போக வென்றனன்.

(இ-ள்.) இப்படி மிகுந்தபக்தியினாற் நேகம் உருகாநின்ற விட்டுணுவினுடைய அடிமைத்திறத்தைப்பார்த்து அவர்கேட்டவரங்களெல்லாஞ்சிவபெருமான் அருளிச்செய்து, பிரமனைப்பார்த்து வாசனைதங்கிய சிறந்ததாமரையில் வசிப்பவனே உனக்குப் பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற் போகக்கடவதென்று திருவுளம் பற்றினர்.

கைதையே யிவனெடு கரவு நீயுரை
செய்ததாற் றீண்டிலே மென்று தீர்த்தன
னெய்திய முனிவுகண் டேங்கி நான்முகன்
மெய்தறை யுறப்பதம் வீழ்ந்து போற்றினன்.

(இ-ள்.) ஓ தாழம்பூவே? இப்பிரமனோடு சேர்ந்து பொட்சாட்சி சொன்னபடியினால். உன்னை யிதுமுதற்கொண்டு தீண்டே னெனத் தள்ளினார்; அதன் பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம் வந்த தைப்பார்த்து எக்கமெடுத்து நான்குதிருமுகங்களையுடைய பிரமன், தன்னுடைய தேகம்பூமியில் நன்றாய்ப் பதியும்படி விழுந்து வந்தன ஞ்செய்தான். எ-று. (சுசு)

வே று.

பொடிமூடிய தழலேகிர் புலியாணவ மலமாஞ்
செடிமூடுகை யாலேயுழல் சிறியேனெரு பொருளோ
வடிவேபெரு வெளியேசதுர் மறையே சதுர்மறையின்
முடிவேதனி முதலேயெனை முனியேலெனை முனியேல்

(இ-ள்) நீறுபூத்த நெருப்பை யொத்த கடவுளே! சண்டாளத்து வமாகிய * ஆணவமலமென்கிற செடிமூடிக் கொண்டிருப்பதினால், அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியவனுகிய யானெருபொருளோ உருவமானவரே! அகண்டவெளியானவரே! நான்கு வேதமானவரே! நான்கு வேதத்தினுடைய முடிவாகிய உபநிடதப்பொருளானவரே! ஒப்பற்றமுதலாகியவரே! அடியேனைக்கோபித்துக் கொள்ளவேண் டாம், அடியேனைக்கோபித்துக் கொள்ளவேண்டாம். எ-று. (எ0)

எந்நீர்களு மொன்றுகிய வெழுவாரியு மறுகி
வெந்நீரது வானுடன் விளாவப்புன லுண்டோ
நின்னீர்மையி தென்றாலுல குய்யிரெப்படி நிகழும்
முந்நீர்விட முண்டோயெனை முனியேலெனை முனியேல்.

(இ-ள்.) எல்லாநதிகளினீரும் விழுந்து ஒன்றுகிய ஏழுசமுத்திர மும் காய்ந்து வெந்நீராய்ச்சுட்டால், அதையாற்றுவதற்கு வேறேசல முண்டோ! உமக்கே யிப்படிப்பட்ட கோபம் வந்தால் உலகமும் அதி

* ஆணவமென்பது செம்பிற்குக் களிம்புபோல அநாதியேயு டன்கலந்து, நிற்பது. ஆண்மாக்களை, அணுத்தன்மைப்படுத்தலின் ஆணவ மாயிற்று.

லுள்ள சிவராசிகளும் எப்படிப்பிழைக்கும்! முன்னே திருப்பாற் கட லில் பிறந்த ஆலகால விடத்தையுண்ட மூர்த்தியே அடியேனைக் கோ பஞ்செய்ய வேண்டாம் அடியேனைக்கோபஞ் செய்யவேண்டாம். எ-று

பிறையே முழு மதியேயுறை பெண்ணே பிறவானே
நறையோ நறு மலரேயென நாலுவித மாலை
பொறையேதிரு வருளேபொழி புயலேயிய லிசையே
முறையேபல முறையே பெரு முனியேயெனை முனியேல்.

(இ-ள்.) இளம்பிறையாகியும், பூரணச்சந்திரனுகியும், பெண்ணு கியும், ஆணுகியும், தேனுகியும், வாசனைதங்கியகல்ல புட்பமாகியும், பொறுமையில் மலைகளுக்கொப்பான வராகியும் திருபாவருஷத்தைப் பொழிகின்றமேகமாகியும், விளங்காநின்ற சப்தஸ்வரூபமாகிய நாத மாகியும், மற்றும் நாலுவித ரூபமாகிய மிருக்கின்ற மூர்த்தியே! உமக் குமுறையோ முறை என்னைக் கோபிக்கவேண்டாம் என்னைக் கோபி க்கவேண்டாம். எ-று. (எ2)

வெம்மைச்சர மலராகிய வில்வேடனு வன்றே
கொம்மைத்தலை மதவாரெழு கோபக்களி ரன்றே
செம்மைக்கன லன்றேகொலை செயுமந்தக னன்றே
மும்மைப்புர மன்றேயொரு பொருளாயெனை முனியேல்.

(இ-ள்.) மிகுந்தவெப்பத்தைக் கொடுக்கின்ற புஷ்பபாணங்களை யுடைய மன்மதனுடைய தேகமல்லவே! தாருகாவனத்து ரிஷிகள் விடவந்து, எழும்பினதலையும், ஆறுபோன்ற மதத்தையுமுடையகோ பமாகியயானையல்லவே! அந்தரிஷிகள்பின்புவிட்ட சிவப்பாகிய அக் கினி யல்லவே! கொலைசெய்யுந் தொழிலையுடைய எமனல்லவே! திரி புரமல்லவே! நான் எவ்வளவு! உமக்கு என்னை ஒருபொருளாகக்கோ பஞ்செய்ய வேண்டாம். எ-று. (எ3)

அறிதற்கரி தாமுன்முடி யறிவேனெனு மளவே
பறவைப்படி வானேனினி மேலோவிடர் படுவேன்
சிறுமைப்படு மென்பாலருள் செய்யென்றுரை செய்தான்
மறுகிக்குளி ரனல்போலிறை மகிழ்வாயிவை மொழிவான்.

(இ-ள்.) யாவராலுமறியக் கூடாத தாகிய உம்முடையமுடியை யறிகிறேனென்ற மாத்திரத்திலே பறவையுருவ மானேன், இனி மேலோ துக்கத்தையடைவேன்; சிறுமையையடைந்த என்னிடத்தில் கிருபைசெய்யுமென்று சொல்லி வியசனப்பட்டபோது, மறுகக்காய்ந்து குளிர்ந்த ஜலம்போலச்சிவபிரான் சந்தோஷமாய்த்திருவாய்மலர்ந்து சிலமொழிகளே அருளிச்செய்வார். எ-று. (எச)

அம்போருக வஞ்சேவினி யவனித்தல மறையோர்
தம்பூசனை யுன்பூசனை யாகித்தம னியமாஞ்
சம்பூதா வுலகேழையும் விதியென்றருள் செய்தான்
கம்பூர்கடல் விடமுண்டருள் கருணைக்கட லான்றன்.

(இ-ள்.) விஷ்ணுவின் நாபிக்கமலத்திற் றோன்றிய பிரமனே? இனிமேல் நீ பயப்படாதே, பூமியிலுள்ள பிராமணர்களுக்குச் செய்கிற பூசை உன்பூசையாகக்கொண்டு, பொன்னுருவமா யுண்டாகிய மகாமேருமலை தாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும்போல் படையென்று அருளிச்செய்தார், சங்குகள் தவழ்கின்ற சமுத்திரத்திற் றோன்றிய விஷத்தையுண்டகிருபைக்கடலாகியசிவபெருமான் எ-று.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

இத்தலத்தி லுமக்குவரங் கொடுத்தலினல்
யோசனைமூன் றெல்லை தூரம்
சுத்தபவித் திரஞானத் தலமாகப்
பொலிகவிந்தச் சோதி தானுஞ்

சிற்றுருவ மலையாகி வரமுதவக்
கடவதின்பஞ் சிறந்த தான
முத்திதனைத் தகையாம லுதவுமிதற்
கருணைபுரி மொழியு நாமம்.

(இ-ள்.) பிரமவிட்டுணுக்களே உங்களுக்கு இத்தத்தலத்திலேஅ நுக்கிரகஞ்செய்து வரங்கொடுத்தபடியினால் இன்றுமுதல் இத்தல த்தைச்சுற்றி மூன்றுயோசனை தூரம் வரைக்கும் சுத்தபவித்திரமாக விருக்கவேண்டும், இந்த அகண்டச்சோதி ஸ்வரூபமாயுள்ளமலைசிறி ய உருவத்தோடுங்கூடிய மலையாகக்கடவது, பேரின்பஞ்சிறந்தமோ ட்சத்தை தடையில்லாமற் கொடுக்கும். இந்தத்தலத்துக்கு அருணை புரியென்று பெயராம். எ-று. (எசு)

வாதைபடு மிந்திரனு மிமையவரு
நினைக்கவவர் வருத்தந் தீர்த்தோம்
ஆதலினு லித்தலத்தை நினைப்பவர்க்குப்
பிறப்பிடும்பை யகற்று வோமிப்
பூதரமு மித்தலமும் பிரளயத்து
மழியாத பொற்ப தாகி
மோதியகாற் றடைந்ததிசைச் சராசரங்க
ளெவையுமுயர் முத்தி சேர்க்கும்.

(இ-ள்.) துன்பத்தை யடைந்த தேவேந்திரனும், தேவர்களும் நம்மை நினைக்க அவர்களுடைய மனத்தின்பத்தைத் தீர்த்தோம் ஆ னபடியாலிந்தத் தலத்தை நினைக்கின்றவர்களுக்குப் பிறவிநோயை நீக்குவோம், இந்தப்பர்வதமும் இந்தத்தலமும் பிரளயகாலத்திலும் நாசமடையாத லக்ஷணத்தை யுடையதாகி இதினின்றும் மோதுகி ன்ற வாயுசஞ்சரிக்கின்ற திக்குகளிலுள்ள சராசரங்க ளெல்லாவற் றையும் மேலான முத்தியிலே சேர்க்கும். எ-று. (எஎ)

வையகத்தி லரியதவம் புரிந்தவருக்
கினியமுத்தி வழங்க வேண்டிச்
செய்யவிந்தத் திருநகரி லவதரிக்க
வரந்தருவோஞ் செய்த தான
மெய்பெறவொன் றுயிரமாய் வளருமிதிற்
கொடும்பாவம் விளையா தீதை
யையமென வுணர் வார்க்குப்
பாகதிகிட் டாதுநம தாணைதானே.

(இ-ள்.) பூமியி லரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனி மையான மோட்சத்தைக் கொடுக்கவிரும்பிச சோதி வடிவமாகிய இந்தத்தலத்தில்பிறக்கும்படி வரத்தைக்கொடுப்போம், இஃதிலோ ர்தானஞ்செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும், இந்தத்தலத திற்கொடிய பாவமேயுண்டாகாது, இதைசசுத்தேகமாக நினைப்பவர் களுக்கு மோகூங்கிடைக்க மாட்டாது, நம்முடைய ஆணைப்படியெ ன்றூர் பரமசிவன். எ-று. (எஅ)

அண்ணலிவை மொழியளவி லழற்றூண
மதுகுறுகி யசல மாகி
வண்ணநெடுஞ் சுடர்விரிந்து விளங்குதல்கண்
டயன்றிருமால் வணங்கிச் சொல்வார்
விண்ணவர்க்கு மெங்களுக்கு மிதன்சோதிக்
கெதிர்குறுகி விழிக்கப் போகா
தெண்ணரிய சுடர்களெல்லா மூட்கரந்த
மலையாக விருக்க வென்றூர்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் பரமேஸ்வரன்சொன்ன அளவில், அக் கினி மலைகுறுகி ஒரு சிறியமலையாய் நிறம்பொருந்திய மிகுந்த பிர

காசம் விரிந்து பிரகாசித்தலைப்பார்த்த பிரமவிட்டுணுக்களும் சுவாமியை வணங்கிச் சொல்லுவார்கள்; தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்த மலையின் சோதிக்கெதிராகப்போய் தரிசிக்கக் கூடவில்லை; ஆனபடியினால் எண்ணுதற்கரிய கிரணங்களெல்லா மறைந்து ஒரு மலையாயிருக்கவேண்டு மென்றார்கள். எ-று. (எக)

அன்னமிசை வருவானுங் கருடன்மிசை
வருவானு மமலமூர்த்தி
வன்னியொளி மறைத்தமற்றை மலையாக
விருத்தியென மலையாச் செய்தார்
சென்னியிலே யொருசோதி யணுதினமுந்
தெரியவருள் செய்வா யென்ரு
ரென்னுமந்த வடியவர்க்கா விறையவனு
மிரங்கியிவை யியம்ப லுற்ரான்.

(இ-ள்.) அன்னவாகனத்தி லேறுகின்ற பிரமனும் கருடவாகனத்தில் வருகின்ற விட்டுணுவும், மலரகிதராகிய பரமேஸ்வரா? அக்கினிப்பிரகாசத்தை மறைத்து, மற்றமலைகள் போலிருக்கவேண்டு மென்று கேட்க, அப்படியேமலையுருவாகச்செய்தார்; இந்த மலையினுச்சியில் ஒருபிரகாசம் எந்நாளுந்தெரியும்படியாகக் கிருபை செய்யவேண்டுமென்றார்கள், அப்படிச்சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச்சுவாமியுந் திருவாய் மலர்ந்தார். எ-று. (அ0)

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைதுணியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்
லாதுலகில் மன்னி வாழ்வார்

பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவிருமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்.

(இ-ள்.) பிரமவிட்டுணுக்களே? * கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையினுச்சியில் ஒரு பிரகாசங்காண்பிப்போம்; அப்படிபொருந்திய சுடரைக்கண்டால் பசியும் வியாதியுமில்லாமல் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள்; இந்தச சோதியைக்கண்ட அரசர்களுக்கும் அரியதவசிகளுக்கும் இடையூறு நேரும், இதைப்பணிந்தவர்கள்தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில்இருபத்தொரு தலைமுறையிலுள்ளவருக்கும் முத்தி அடையும்படி வரங்கொடுப்போ மென்றார் அருணாசலேசுரர். எ-று. (அக)

மரணபவ மறுக்கநல்ல மருந்தாகு
மதற்குமலை மருந்தென் றோர்பே
ரருணவடி வாதலினு லருணகிரி
யெனுமொருபே ரதனை யோர்கால்
தரணியிலே யுரைத்தவர்க்கு முக்கோடி
யஞ்செழுத்துச் சரித்த தாமென்
றிருணிலவு மிடற்றிறைவ னிசைக்கமகிழ்ந்
திறைஞ்சியவ ரிசைப்ப தானார்.

(இ-ள்.) இறப்பினையும் பிறப்பினையும் நீக்குதற்கு மேலானமருந்தானபடியினாலே இந்தமலைக்கு மலைமருந்தென்றும் பெயர், இந்தமலை சிவப்புநிற மானபடியினாலே அருணகிரியென்றும் ஒருபெயர், அதை ஒருதரம் பூமியில் சொன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச் சமானமாகுமென்று கைலகண்டத்

* அனல் வடிவினின்றும் இவ்விடமாகக்காட்சி கொடுத்தகாலம் மகாசிவராத்திரிக் காலமாகலின், மாலுடனினைப்படி கார்த்திகைமாதக் கார்த்திகை கொள்ளப்பட்டது.

தையுடையசிவன் அருளிச்செய்ய, பிரமவிட்டுணுக்கள் சந்தோஷத்தை யடைந்து சுவாமியை வணங்கிச் சொல்லுவார்கள். எ-று. (அஉ)

அடித்தருண கிரியானே யுனக்குவிண்ணீ
ரலதுபுன லாட்டுவா ரார்
தொடுத்தவுடுத் திரளலது திருமுடிக்கு
மணிமாலை சூட்டுவா ரார்
கடுத்திகழு மிடற்றுனே கதிர்களன்றி
மணித்தீபங் காட்டுவா ரா
ரெடுத்திறைஞ்சிப் பூசைசெய்ய வித்தன்கீழோ
ரிலிங்கவடி வெடுப்பாயென்றார்.

(இ-ள்.) விஷந்தங்கிய கண்டத்தையுடைய அருணசலேசுரரே? மலை வடிவமாய் விளங்கும் உமக்கு ஆகாயத்தில் நின்றும் பெய்யா நின்ற மழையே யல்லாமல் ஜலங்கொண்டு வந்து அபிஷேகஞ் செய்கின்றவர்களுண்டோ? நக்ஷத்திரக் கூட்டங்களே முத்து மாலையாவதல்லது வேறேமுத்துமாலை சூட்டுகிறவர்களார்? சூரியகிரணமே தீபமாவதல்லாமல் தீபங்கொணடுவந்து வேறேகாட்டுகிறவர்களார்? ஆனபடியினாலே, நாங்கள் அபிஷேக முதலானவைகள் செய்து பூசை செய்வதற்கிந்த மலையின்கீழ் ஓரிலிங்க வடிவமாயெழுந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எ-று. (அஊ)

அன்னதுவா யிருக்குதுநீர் காமியத்தி
லருச்சியுமென் றசலம் புக்கா
ரெங்கிலமும் புகழவங்கோர் சிவனுருவ
மூனாத்தகண் டிறைஞ்சியேத்தி
மன்னியபூ மழைபொழிந்து பரவசமாய்
மகிழ்ந்தாடி மயனைக் கூவித்
தன்னிகரில் கோபுரமு மண்டபமு
மணிமதிலுஞ் சமைப்பித் தார்கள்.

(இ-ள்.) அப்படியே இலிங்கமாகிநிறும் நீங்கள் காமியவிதிப்படி பத்தியுடன் பூசியுங்களென்று அத்தமலையினுள்ளே மறைந்தருளினர். பின்பு எந்தத்தேசமும் புகழும்படி யவ்விடத்தில் ஓரிலிங்கந்தோன்றிற்று; அதைக்கண்டு வணங்கித்தோத்திரஞ்செய்து, புட்பவருஷம் பொழிந்து, பரவசமாய்ச் சந்தோஷமடைந்து, ஆநந்தக் கூத்தாடி மயனென்கிற தேவதச்சனைக் கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்களும் மண்டபங்களும் அழகுபொருந்திய திருமதிலுஞ் செய்வித்தார்கள். எ-று. (அசு)

அழியாத வளநகருந் தீர்த்தமுந்நூற்
றறுபதுங்கண் டழகுசெய்தார்
வழியாநீர்ச் சரஸ்தியுஞ் சுரதருவுங்
கேணிகளு மரமு மான
வொழியாம லிமையவரு மிருடியரு
மனிதரென வுருவங் கொண்டார்
விழி யால விடமனைய கணிகையரா
யமரம்பையரு மேவி னரே.

(இ-ள்.) ஒருகாலத்து மழியாதவனப்பமுள்ள நகரமும், முந்நூற் றறுபதுவகையாகியதீர்த்தமும் உண்டானதுகண்டு அவைகளைஆங்காங்கு அழகுபெறச்செய்தனர் வழியாத சலத்தையுடைய ஆகாயகங்கையும், கற்பகவிருட்சமும், கிணறுகளும் மரங்களுமாயின. நீங்கா மல் தேவர்களும் ரிஷிகளும் மனிதவடிவங்கொண்டு பிறந்தார்கள்; விஷம்போன்ற கண்களையுடைய தாசிகளாக அரம்பாஸ்திரீகள்பிறந்தார்கள். எ-று. (அஏ)

காலையிலே முழுகிமா வரியுடுத்துச்
சிவந்தசடை கட்டி நீறு
மேலணிந்து கண்டிகைபூண் டனமுதலா
மஞ்சனத்தான் மிகுத்த சாந்தான்

மாலையினற் சிவபூசை புரிந்தகண்ணு
மலையதனே வலங்கொண் டேத்தி
யேலவொரு பதினலா யிரவாண்டு
கழிந்ததற்பின் னிறைவ ரானர்

(இ-ள்.) பிரம விட்டுணுக்கள்இருவரும் காலையில் முழுகி மரவு ரிதரித்துக்கொண்டு, சிவந்த சடையைச்சிவலிங்க வடிவாகக் கட்டி விபூதியைத் தேகமெல்லாந்தரித்து, உருத்திராக்கமாலை பூண்டுகொ ண்டு, அன்னமுதலாகிய திருமஞ்சனத்தினலும் சந்தனத்தினலும் மாலையினலுஞ் சிவபூசைசெய்து திருவண்ணு மலையைப் பிரதக்ஷண ஞ்செய்து வணங்கிப் பதினலாயிரம் வருஷம் ஆனபின்பு சுவாமியி னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள் பதிக்குப்போய்த் தங்க ளதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். எ-று. (அசு)

ஆசைதருந் திருவருணை சமைத்த தற்பின்
கயிலைமலை யாசை போயிற்
றீசனுக்குங் கனகமலை யிதுவாயின்
வெள்ளிமலை யினிமே லென்னுங்
காசிமுத லெடுத்துரைக்குஞ் சிறப்புடைய
தலமேழுங் கனக நாடு
மாசகன்ற கதிர்தோன்ற வொளியிழந்த
வுடுக்கணம்போல் வளமை தேய்ந்த.

(இ-ள்.) சுவாமிக்கு ஆசைகொள்ளும்படி திருவருணைசலத்தலம் அமைந்தபிறகு, திருக்கயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது; இந்த மலையே பொன்னுருவங் கொள்ளுமாயின், வெள்ளிமலையின்மே லாசை யுண்டாகுமா? காசிமுதலாகச்சொல்லப்பட்ட * ஏழு தலங் களும் பொன்மயமாய் விளங்குந் தேவலோகமும் குற்றம்நீங்கிய சூரி யனுதயமாகப் பிரகாசமிழந்த நக்ஷத்திரங்கள்போல ஒளி மழுங்கிப் போயின. எ-று. (அஎ)

---

* காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மதுரை, மாயா அயோ த்தி என்பன சத்தமுத்தித் தலங்களாம்.

* அரியயனு மளவிடுதற் கரியமலை
நிலையுரைக்க வரிதென் றுலகந்
தெரியவுனக் கறிந்தபடி சிறிதுரைத்தே
னினியுரைக்குந் திறமேதென்றன்
வரிசைபெறு † மார்க்கண்ட முனிமகிழ்ந்து
பணிந்துமைபாண் மலையிற் றோன்றி
யுரியசிவ னிடங்கலந்த கதையுமுரைத்
தருளுகென வுரைப்ப தானார்.

(இ-ள்.) நந்திதேவர் மார்க்கண்டேய ரிஷியைப்பார்த்து, விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் அறிதற்கரிதாகிய திருமலையின் சிறப்பை என்னுல் சொல்லுதற்கரிய தென்றலும், எனக்குத்தெரிந்த அளவில் சிறிதுஉமக்குத் தெரியும்படி சொன்னேன், இனிச்சொல்ல வேண்டிய தென்னவென்றூர் அதுகேட்ட வரிசைபெற்ற மார்க்கண்டேயரிஷி சந்தோஷித்து வணங்கி, சுவாமி! பார்வதியார் இமாசலத்தில் அவதாரஞ்செய்ததுவும், சுவாமியைநோக்கித் தவஞ்செய்திடப்பாகம் பெற்றதுவுஞ் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்லத் தொடங்கினர். எ-று. (அ)

இரண்டாவது,

திருமலைச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉஉ

---

* அரி—கைபவரை யழிப்பவன் அயன்—பிறத்த லில்லாதவன் இவை உபசாரம். † மார்க்கண்டர்—மிருகண்டே முனிவரின் புத்திரர் இடது வடமொழித் தத்திதாந்தபம்.

5 தக்கன் பரமசிவனை நிந்தித்து யாகஞ்செய்யவும், அதையறிந்த பரமசிவன் வீரபத்திரரால் யாகத்தையழிக்கவும், பின்பு பரமேசுவரனைப் பாணிக்கிரகணஞ் செய்யப் பார்வதி, பர்வதராஜனுக்குப் பெண்ணுபவதாரஞ் செய்ததுமறிக.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றுவது

பார்வதியார்

திருவவதாரச் சருக்கம்.

அம்மன் திருவவதாரம்.

தக்கன் அருமையான தவஞ்செய்து பார்வதியார் தன்மகளாகப் பிறந்து சுவாமிக்குக் கலியாணஞ்செய்துகொடுத்து மாமனாராகும்படி வரம்பெற்று, அந்தப்படி வாய்த்தபின்பு ஒருநாள் பரமசிவன் தனக்கு எழுந்து மரியாதைசெய்யவில்லையென்கிற கோபங்கொண்டு அவரைப் பார்க்கிலும் தான் மேன்மையை அடையவேணுமென்று ஒருபெரிய யாகஞ்செய்யத் தொடங்கினான். அந்தயாகத்துக்குவந்த பார்வதியைத்தக்கனும் அவனுடைய பெண்சாதியும் அவமதித்ததற்காக அம்மனுக்குக் கோபம்வந்து இந்த யாகசாலை சுடலையாகக்கடவதென்று சபித்து, இவர்கள் வளர்த்ததேகம் இருக்கக்கூடாதென்று யோகத்திலே தன்னுடைய தேகத்தைவிட்டாள். இந்தச்செய்தியைக்கேட்ட பரமசிவனுக்குக் கோபமுண்டாக அப்போது அவர் நெற்றிக்கண்ணி

லிருந்து தோன்றிய வீரபத்திரர் சுவாமியை வணங்கி என்னே அழைத்தகாரியம் யாதென்று கேட்கத் தக்கனுடைய யாகத்தை அழித்துவரக் கடவை என்று பரமசிவன் கட்டளையிட்டதகுணம், வீரபத்திரர் பூதகணசகிதராய் யாகசாலைக்குப்போய்த் தக்கனுக்காகத் தன்னே எதிர்த்த தேவர்களேயும் யாகத்தை நடத்துகின்ற ரிஷிமுதலானவர்களேயுங்கொன்று யாகசாலையை அழித்துத் தக்கனேயுங்கொன்று சுவாமியினிடத்திற்குப்போய் இந்தச் சங்கதியைச்சொல்ல, அப்போது பரமசிவனுக்குக் கோபம் நீங்கிக்கிருபைவந்து இறந்தவர்களேயெல்லாம் மறுபடியும் பிழைப்பித்து அவர்கள் குற்றத்தைப் பொறுத்துப் பழையபடி அவரவரிடங்களே அவரவர்களுக்குக் கொடுத்து அனுப்பிவிட்டார் தக்கனேமாத்திரம் ஆட்டுத்தலையை அவன் உடலில்வைத்துப் பொருந்தி எழுந்திருக்கும்படி செய்தார்.

மூன், யோகாக்கினியால் தன் தேகத்தை நிவர்த்திசெய்துகொண்ட பார்வதிதேவியானவள் இமயகிரிராஜனும் அவர் மனேவியாகிய மேனாதேவியுஞ்செய்த தபோபலத்தால் அவர்களுக்குக் குமாரத்தியாகத் திருவவதாரஞ்செய்து வளர்ந்துகொண்டிருந்தாள்.

இவ்விடத்தில் இப்பிரகாரமிருக்க தேவேந்திரன் மற்றத்தேவர்களோடு பிரமாவினிடஞ்சென்று தாருகாசுரனல் தாங்கள் இம்சைப்படுவதைச்சொல்ல; அதற்கு பிர்மா அவனேயாரும் வெல்லமாட்டார்கள், ஆயினும்பரமசிவனுக்குப் பார்வதியாரிடத்தில் பிறக்கப்போகிற சுப்பிரமணியர் அவனேவெல்வார், ஆதலால் இப்போது இமயமலச்சாரலில் யோகஞ்செய்துகொண்டிருக்கும் பரமசிவன் பார்வதியாருக்குத் திருமாங்கிலியதாரணஞ் செய்யும்படியான மூயர்ச்சியைத் தேடுங்களென்று சொன்னர். பின்புதேவேந்திரன் முதலானேர் மன்மதனேத்தருவித்து, சுவாமியினுடையதவத்தை அழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவன் அப்படியேபோய் யோகத்திலிருந்த பரமசிவன்பேரில் தன்பாணத்தைப் பிரயோகஞ்செய்தவுடன்

பரமசிவன் தன்நெற்றிக்கண்ணைத் திறந்துபார்க்க அதனல்மன்மதன் எரிந்துபோய்விட்டான். பின்பு பரமசிவன் கயிலாயத்திற்கு எழுந்தருளி இமயகிரிராஜன் புத்திரியாகிய பார்வதியைத் தனக்கு விவாகஞ் செய்துகொடுக்கவேணுமென்று அவனுக்குச் சொல்லியனுப்ப. அவனும் சந்தோஷத்துடன் இசைந்து பட்டணத்தை அலங்கரித்து கலியாணமண்டப முதலானவைகளுஞ் சிறப்பாக அமைத்து சுவாமியினுடைய வரவுக்கு ஆவலுடன் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கும்போது, பரமசிவன் கலியாணகோலமாய், ரிஷபவாகனத்தின்மேலேறித் தேவர்கள் ரிஷிகள்முதலானவர்கள் சூழ்ந்துவர இமயமலைக்கு எழுந்தருளிக் கலியாணமண்டபத்தில் வீற்றிருந்தார் பார்வதியாரை அலங்காரஞ்செய்து இட்டுக்கொண்டுவந்து சுவாமியின்பக்கத்தில் உட்காரவைத்தவுடன், பிரமாவானவர் வேதவிதிப்படி கலியாண சடங்குகள் செய்ய சுவாமி அம்மனுக்கு மாங்கிலியந் தரித்தருளினர். அப்போது தேவர்கள் ரிஷிகள் முதலான சர்வத்திரபேரும் புகழ்ந்து துதிசெய்தார்கள் இவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் சுவாமி மன்மதனையும் வாவழைத்துக்கொடுத்தார் பிறகு விக்கினேஸ்வரரையும் சுப்பிரமணியரையும் பார்வதியார் பெற்றனள். சுவாமிகொடுத்த வேலாயுதத்தைக்கொண்டு சுப்பிரமணியர் தாருகாசுரனைக் கொன்றுவிட்டார். பின்பு பரமசிவனும் பார்வதியும் தங்கள் புத்திரர்களுடனே கயிலாயத்தில் எழுந்தருளியிருந்தார்கள்.

பார்வதியார் திருவவதாரச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பன்னிருவர் பதினொருவ ரெழுவரெண்மர்
திசைக்கிறைவர் பணிநாட் டுள்ளோர்
இன்னரார்கிம் புருடர்சித்த ரியக்கரிமை
யவர்முனிவர் கிளையி னுள்ளோர்

மன்னு மலரவன் றிருமால் கலிமடந்தை
மலர்மடந்தை மகிழ்ந்துசூழ
முன்னவனே யிகழ்ந்துதக்கன் முடியாத
பெருவேள்வி முடிக்க லுற்றான்.

பூருவகதை.

கேளும் மார்க்கண்டேயரே! முன்னுளிலே பிரமனிடத்திற் பிறந்த தக்கனென்பவன், அரியதவஞ்செய்து உயர்ந்தவரங்களைப் பெற்றுக்கொண்டு மிகவும் பிரசித்தனாகி வாழுகிறகாலத்தில், பார்வதி தேவியார் தன்னிடத்திற் பிறக்க, அவரைச் சுவாமிக்குத் திருக்கலியாணஞ்செய்து கொடுத்து மாமனாராகும்படி வரம்பெற்று, அந்தப்படி செய்தபின்பு, ஒருநாள் இவன் சுவாமியினுடைய சபைக்குப்போனான்; அவ்விடத்தில் சுவாமி தனக்கு எழுந்து மரியாதை செய்யவில்லையென்கிற கோபங்கொண்டு தன்னுடைய வீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வை யடையவேண்டுமென்று எண்ணங்கொண்டு.

(இ-ள்.) பன்னிரண்டு சூரியர்கள், பதினொருருத்திரர்கள், சத்தரிஷிகள், அஷ்டதிக்குப்பாலகர், நாகலோகத்தார், கின்னரர், கிம்புருடர், சித்தர், யக்ஷர், தேவர்கள், முனிவர்கள், நிலைபெற்றபிரமன், விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி ஆகியயிவர்கள்மிகவுஞ்சந்தோஷம்அடைந்து சூழ்ந்துநிற்கவும், எல்லோருக்கும் மூதல்வராகிய பரமசிவனே கிஞ்சித்து நிறைவேற்றுத பெரிய யாகஞ் செய்யத்தொடங்கினான். எ-று.

எந்தைசெயு மகம்பார்க்க விடையருளென்
றிறைக்கிறைவி யிசைத்தா னந்தை
புந்தியிலா திகழ்ந்தனனென் றுரைத்தனனீ
யெனவேண்டிப் பொறுப்பாயென்று

வந்தனஞ்செய் தனலவளை நகைபுரிந்து
கடிதுசென்று வருவா யென்றுன்
கந்தமலர்க் குழலாளுந் தந்தைமகந்
தொடங்குகன தலத்தைச் சார்ந்தாள்.

(இ-ள்.) பார்வதி தேவியானவள் தகப்பனுடைய தக்கன் யாகம் பண்ணுவதைக்கேட்டு, சுவாமீ! என்னுடைய தகப்பன்செய்கிறவே ள்வியைப் பார்த்துவருகிறதற்கு உத்தரவுகொடுமென்றுகேட்க அதற் குப் பரமேஸ்வரர் உன் தகப்பன் புத்தியில்லாமல் என்னைமிகவும் நிந் தித்திருக்கின்றனே; நீபோகலாமாவென்று சொல்லினர், அதைக்கே ட்டுச் சுவாமி என்தகப்பன்செய்த இந்தக்குற்றத்தை என்னைவேண் டிப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ் செய்தனள் அந்தஅம்மை யைப்பார்த்து நகைத்து நல்லதுநீபோய்ச் சீக்கிரத்தில் வந்துசேரென் றனர், அதைக்கேட்ட பார்வதியும் தகப்பன் யாகஞ்செய்கிற இடத் துக்குப்போனுள். எ-று. (உ)

தாயரைக்கண் டடிதொழுதா ளவடழுவா
திருந்தனடன் றந்தை யான
தியவனைப் பணிந்தனளங் கவனுமிகழ்ந்
தானிகழ்ந்த செயலை நோக்கிப்
பேயிருக்குஞ் சுடலையெனப் பிழைபிறந்து
விடுகவுங்கள் பெருவாழ் வென்று
வாய்பிறக்குங் கொடுமைசொலி மறைந்தனளச்
செயலறிந்தான் மங்கை பாகன்.

(இ-ள்.) பார்வதி தக்கன் யாகசாலைக்குப்போய்த் தன்னுடைய தாயைவணங்கினுள்; அவள் இந்த அம்மையைத் தழுவி உபசாரஞ் சொல்லாமலிருந்தாள்; அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனை வந்

தனஞ்செய்தனள். அவனும்நித்தித்தான்; அதைப்பார்த்துக் கோபங் கொண்டு உன்னுடைய யாகசாலையின்வாழ்வு, பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகி நாசமடையக் கடவதென்று தனதுவாக்கினற் கடின சாபங்கொடுத்து பிராட்டியார் மறைந்தார். அதனையறிந்தனர் உமாதேவிநாயகராகிய சிவபெருமான். எ-று. (சு)

கலி விருத்தம்.

உண்ணிலாவு வஞ்சிசெல்ல வொருவனுவி யுய்யுமோ
தண்ணிலா முடிக்குணின்று தழலிலொண் டிறைக்கையா
லண்ணல்வெமபிழுவுகொள்ளு மாவினெற்றிவிழிதனில்
விண்ணடுங்க மண்ணடுங்க வீரன்வந்து தோன்றினன்;

(இ-ள்.) (அக்கினியிற்பூவிபோலத்) தம்முடன் அபேதமாயிருந்த தேவியார் இவ்வனங் கோபித்து வரத்தனியாய் தக்கனுயிரும் பிழைக்குமோ? சிவனது குளிர்ந்த சந்திரன் சிரத்திலே தானேயிருந்து நெருப்பைவாரிச் சொரிகின்றபடியினலே அதிகதாபமடைந்து இந்தத் தக்கனுகிய பாவியினுலல்லவோ இவ்வருத்தம் உண்டாயிற்றென்று கோபித்துக்கொள்ளும்போது, அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரர் ஆகாயவுலகமும் பூமியும் நடுங்கும்படி தோன்றினர். எ-று. ()

மஞ்சுபற்றி யுடல்கறுத்து மணிமயூர முடியுடன்
சஞ்சரிக்கு மேருவென்ன விடிமுழங்கு தழலின்வாய்
நஞ்சுகொப் புளிக்கநெற்றி நயனமூன் கொதிக்கமே
லஞ்சலித்த கையொடெங்க ளையன்வந்து தோன்றினன்.

(இ-ள்.) மேகத்தைப்பார்க்கிலும் கருமையாக உடம்புகறுத்து மயிலின்நிறம்போன்ற மரகதரத்தினமிழைத்த கிரீடத்துடன், சஞ்சரிக்கின்ற மேருவுக்கு ஒப்பாகி இடிபோல் முழங்குகின்ற நெருப்பாகிய சொல்லையுடைய வாய்நஞ்சைக் கொப்புளிக்க, நெற்றிக்கண்கொதிக்கச் சிரத்தின்மேல்வைத்துக் கூப்பிய கைகளோடு எம் ஐயராகிய வீரபத்திரர் வந்துதோன்றினர். எ-று. (சு)

ஒழித்தசிங்க வுரிபுயத்தி னுத்தரீய மாகவே
கழித்தெறிந்தவல்லியத்தி னதளிசைத்தகச்சையாய்[னியா
விழித்திமைக்குமுன்னம்விண்ணின்வெளியடைத்தமே [ன்.
யழைத்ததென்னவென்னவென்றெனையன்வந்துதோன்றினை

(இ-ள்.) இரணியனைக் கொன்ற நரசிங்கத்தை யுரித்தெடுத்த தோல் உத்தரீயமாகவும், தாருகாவனத்து ரிஷிகளால்விடப்பட்டுச் சுவாமியால் மரணமடைந்த புலியின் தோல் இடுப்பிற்கட்டிய கச்சையாகவும், விழித்து இமைப்பதற்குமுன்னே ஆகாயமெல்லா மறைத்ததேகத்துடனே என்னே யழைத்தது என்னகாரணம் என்னகாரணமென்று வீரபத்திரர் வந்தார். எ-று. (சு)

மூக்கணத்த னீர்கொடாது கனல்கொடுக்கு முகிலெனத்
தக்கன்வேள்வி பைத்தகர்த்து மீள்தியென்று சாற்றினு
ணக்கணத்தி னுவகைபொங்கி யடிவணங்கி யேகினன்
பக்கநின்ற பூதநாதர் பாரிடங்கள் சூழவே.

(இ-ள்.) என்னையழைத்த காரியம் யாதென்றுகேட்ட வீரபத்திரரைப்பார்த்து, மூன்று கண்களையுடைய பரமசிவன்; சலத்தைப் பொழியாமல் நெருப்புகளைக்கக்கும் மேகம்போற்சென்று தக்கனுடைய யாகத்தையழித்துவாக் கடவாயென் றருளிச்செய்ய, அக்கணமே வீரபத்திரர் அதிகசந்தோஷமடைந்து சுவாமியினது திருவடியைத்தொழுது பக்கத்திநின்ற பூதகூட்டங்களும் பேய்களுஞ் சூழப்போனார். எ-று. (எ)

நஞ்சுகொப் புளிக்குநாக நாலிரண்டு மாலையா
யஞ்சிரட்டி பூதலே வாலவட்டம் வீசவே
குஞ்சரங்க ளெட்டையுங்கு தம்பைராக விட்டவெண்
கஞ்சுகத்தர் நால்வர்தூய கவரிநின்று வீசவே.

(இ-ள்.) விஷநங்களைக்கக்குகின்ற*அஷ்டமாநாகங்களையும்மாலை யாகத் தரித்துக்கொண்டு, பத்துப்பூதங்கள் நீலவர்ணமான ஆலவட் டம்வீசிக்கொண்டுவரவும், எட்டுதிக்கிலிருக்கும் † யானைகளெட்டை யுங் காதிலேகுண்டலமாகத் தரித்துக்கொண்டு, வெள்ளைச்சட்டை யணிந்த நால்வர் பரிசுத்தமாகிய சாமரம்வீசவும் புறப்பட்டார் வீர பத்திரர். எ-று. (அ)

தீயிருந்த வுதரவெர்மை விண்பிழிந்து நீர்த்திடும்
பேயிரண்டு நூறுநூறு கரகளம் பிடிக்கவே
வாயிரண்டு போலுமாலை மதியிடந்த பூரமோ
ராயிரங் கவிக்கமுத்தி ஞதபத்திரங்களே.

(இ-ள்.) வடவாமுகாக்கினிகுடிகொண்டிருந்த வயிற்றினுடைய பசியை மேகங்களைப் பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இர ண்டாயிரம் பைசாசகணங்கள் எக்காளம்பிடிக்கவும், சந்திரனை இர ண்டாகப் பிளந்து ஒழுங்காக. இரண்டு கடைவாயிலும் வைத்தது போன்ற வக்ரதந்தங்களையுடைய ஆயிரம் பூதகணங்கள் முத்துக்கு டைகள் பிடிக்கவும் புறப்பட்டார். எ-று. (கூ)

மாயுமாயர் தந்தசங்கு கோடிகோடி மறுகவே
தீயின்வாயி னூர்திதந்த சிங்கநாத மூதலே
சாயுமெண்ணில் காலர்மேதி தந்தகொம் பிசைக்கவே
யாயிரங்க ளிற்றெருத் தண்டத்தேரி லேறினன்.

(இ-ள்.) இறந்திறந்து பிறக்கிற அனேககோடி விஷ்ணுக்களு டைய கையிலிருந்த சங்குகளை அனேக பூதங்கள் வாயில்வைத்து

* அஷ்டநாகங்கள்-அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன் குளிகன், † யானைகளெட்டு ஐராவதம், புண்டரீகம், வாமனம் குமுதம், அஞ்சனம், புட்பதந் தம், சாருவபௌமம், சுப்பிரதீபம்.

ஊதிக்கொண்டுவரவும், இறந்த அக்கினிபகவான் வாயுபகவானே றுகின்ற ஆட்டுக்கடா கலேமான் இவைகளுடைய கொம்புகளே வா யில்வைத்து அனேகபூதங்களுதவும், இறந்துபோன அளவற்ற எம ராசர்களேறிய எருமைக்கடாக்களுடைய கொம்புகளே வாயில்வை த்து அனேகபூதங்களுதவும், ஆயிரம் ஆண் யானைகள் கட்டியிழுக் கிற தேரிலேறினர் வீரபத்திரர். எ-று. (கo)

சிலகணங்க ளானேயான சிலகணங்க டேரதா
யிலவுகின்ற சிலகணங்க ளோடுகின்ற வாசியாய்
மலவுகொண்டு சிலகணங்கண் மனிதர் தேவராயின
வலகைதானு மகிலா தனந்தவேட மானதே.

(இ-ள்.) அப்படி வீரபத்திரர்தேரிலேறினபோது; சிலபூதங்கள் யானேரூபங் கொண்டன; சில பூதங்கள் தேரிணுருவங் கொண்டன; சிலபூதங்கள்குதிரையாயின; சிலபூதங்கள்மனிதரும் தேவரு மாயின; எண்ணில்லாத பேய்கள் எண்ணிறந்த ரூபங்கொண்டு புறப்பட்டன.

வீரையே முடங்கவுண்டும் விடாய்கெடாதுமீளுமே
பாரவேழு பாருமுண்டு பசிகெடாது படருமே
கூரவே லெறிந்துகால ணுடுகொள்ளே கொள்ளுமே
போரையே விரும்பிமுன் னடந்துசென்ற பூதமே.

(இ-ள்.) வீரபத்திரர்புறப்பட்டவுடனே, யுத்தஞ்செய்ய வீரும் பி அவருக்குமுன்னே நடந்தபூதங்கள் * எழுசமுத்திரத்து நீரடங் கலும் குடித்தாலும் விடாய்தீராமல் திரும்பும் பாரமாகிய எழுலகத் தையும் சாப்பிட்டும் பசிபோகாமல் அலைந்துகொண்டிருக்கும், கூர் மைபொருந்திய வேலாயுதத்தைஎறிந்து எமனுடையகாட்டைக்கொ ள்ளே கொள்ளும். எ-று. (கஉ)

* எழுசமுத்திரங்கள் உப்பு, தேன், கறுப்பஞ்சாறு, தயிர், நெய், பால், சுத்தநீர் என்பன.

கொண்டலேழை யுஞ்சிவந்த குஞ்சிமீது சுற்றுமே
புண்டரீக ரண்டமும் புகைகொளுத்தி மீளுமே
யெண்டிசா முகத்தைநாடி யாகசாலை தேடுமே
சண்டவாயு வென்னவங்கை தட்டியோடி பூதமே

(இ-ன்.) பூதங்கள் எழுமேகங்களையும் பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சுற்றிக்கட்டிக் கொள்ளும்; அனேக பிரமாண்டங்களையும் புகையுண்டாக நெருப்பிலுல் கொளுத்தும்;எட்டுதிக்குகளிலுஞ்சென்று யாகசாலையெங்கேயென்றுதேடும்; பிரசண்டவாயுபோலக்கைகளைக்கொட்டிக்கொண்டு வீரபத்திரர் பின்னே ஓடாநிற்கும்.எ-று.

வெள்ளவாழி மதுருகர்ந்து வீறுகின்ற சிலகணந்
துள்ளவந்து புவனமுற்றுஞ் சுற்றுகின்ற விறையையார்
தள்ளுகின்ற பேர்களென்று சாய்க்கநின்று நகைசெயும்
பள்ளிகொள்ளு முடனெழுந்து பரிவுகொண்டு பாடுமே.

(இ-ள்.) வெள்ளமாகிய சமுத்திரம்போன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து அதனால் வீரூப்பு மேலிட்டுச் சிலபூதகணங்கள்சண்டைக்கு எழுந்தன, சிலபூதங்கள் துள்ளிக்கொண்டுஉலகமெல்லாஞ் சுற்றிவரும்; சிலபூதங்கள் தம்முடையசுவாமியைத் தள்ளுகிறவர்கள் யாரென்றுகேட்டு அவர்களைக்கொல்லுகிறதற்காக நின்று வீரகைகொள்ளும், சிலபூதங்கள் நித்திரைசெய்யும்; சிலபூதங்கள் உடனே யெழுந்து அன்புகொண்டு சிவகுணத்தைப் பாடும். எ-று. (கச)

வெதிர்சிலம்பு பூரசங்கம் விருதுபம்பை யதிரவே
புதியகண்ட மணிதவண்டை புரிமதங்க மறுகநீள்
கதிகடந்து யாகசாலை கண்டு பூதகணமெலா
மதிதிமைந்த ரானபோக ளாவிவாரி வீசினர்.

(இ-ள்.) வீரபத்திரர் புறப்பட்டவுடனே புள்ளாங்குழல், திமிம்பு, பூரசு, சங்கங்கள், விருதாகிய வுக்கை முதலான வாத்தியமு

ழங்கவும், விநோதமான பெரியமணி தவண்டை, முறைப்படியமைத்த மிர்தங்கம் சத்திக்கவும், வழிமுழுதும்போய்த் தக்கனுடைய யாகசாலையைக் கண்டு எல்லாப்பூதக்கூட்டங்களும் அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும்தாக்கி வாரிவீசினார்கள். எ-று

காரிலேறி மையிலேறி கடாவிலேறி யலகைமே
லேரினேறி மகரமேறி யிரலேயேறி யளகையாம்
பாரிலேறி மானமேறி பசுவிலேறி யெண்மருந்
தேரிலேறி வந்தவீரர் சேனைமாள மோதினர்.

(இ ள்.) மேகவாகனனாகிய தேவேந்திரனும், ஆட்டுக்கடாவிலேறுகின்ற அக்கினியும் எருமைக்கடா வாகனனாகிய யமனும், பேய் வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மான்வாகனனாகிய வாயுபகவானும், அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்ற குபேரனும் இடபவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேர்களுந் தேரிலேறி எதிர்த்துக்கொண்டுவந்த வீரபத்திரனுடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள். எ-று. (கசு)

வாளிசூலம் வேலுலக்கை வச்சிரங்க ணிச்சிவாள்
மீளிசேனை காவலாளர் வீழுமாறு வீசினார்
கூளிநா லிரண்டுசென்று கொடியவெண்மர் பரிவெலா
மாளியோ டெடுத்தெதிர்ந்த * வம்மனைக்கு நிகரவே.

(இ-ள்.) அட்டதிக்குப் பாலகரும்பாணம், சூலாயுதம், வேல், உலக்கை, வச்சிராயுதம், மழு, கத்தி இவைகளை யுத்தவீரத்திற் சிறந்த வீரபத்திரருடைய சேனைத்தலைவர்கள் விழும்படி பிரயோகஞ்செய்தார்கள்; அப்போது எட்டுப்பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுப்பேரையும், அவர்களேறிய வாகனங்களெட்டையும் அம்மனைக்குச் சமானமாக எடுத்தெதிர்ந்தன. எ-று. (கஎ)

* அம்மனை என்பது மகளிராடும் ஒருவிளையாட்டு.

அலகைகா லிரண்டும்வீழ வமர்செய்பூத மோடவே
மலிவுகண்டு திக்குபாலர் வாகைமாலை சூடினர்
கலிதல்கண்டு வீரன்வாளி நாலிரண்டை யேவினு
லுலகபால ருடல்புகுந்து ளமுதமுண் டுலாயதே.

(இ-ன்.) முன்னே எட்டுப்பூதங்களால் எறிபட்டுவிழுந்ததிக்குப் பாலக ரெண்மரும், அந்த எட்டுப்பூதங்களும் கீழ்விழவும்,மற்றைப் பூதங்களெல்லாம் ஓடிப்போகவும்யுத்தஞ்செய்து, வெற்றிமாலையை ச்சூடிக்கொண்டார்கள், அதுகண்ட வீரபத்திரர் எட்டுப்பாணத்தை விட்டார்; அவைகள்போய் எட்டுபேர்க ளுடலத்துளைத்து அவ்வுட ல்களுள் இருக்கிற அமிர்தத்தைப் புசித்து சஞ்சரித்தன. எ-று. ()

மருங்கிழிந்து குயிலதாகி வச்சிரத்த னேகினு
னெருங்குமீச னளகையாளி நிருதிவாயு வருணனுஞ்
கருங்கிரைக் கடாவிலேறி தஞ்சினு னழற்பிரான்
பெருங்கையேழு மீசனன்பர் பிறவிபோ லறுத்தனன்.

(இ-ன்.) தேவேந்திரன், தன்வாகனத்தைவிட்டுக் குயில்வடிவ க்கொண்டு ஒருபக்கத்தில் ஓடினன், ஈசானன், குபேரன், நிருதி வாயு, வருணன் இவர்கள் தோற்று வெட்கத்தை யடைந்தார்கள்; எமன் இறந்தான்; அக்கினிபகவானுடையவழுகையும், சிவனுடைய அன்பரது பாவங்களை அறுப்பதுபோல, அறுத்துத்தள்ளினர் வீரப த்திரர். எ-று. (கக)

கச்சமற்ற வச்சமோடு கலியதான வெச்சனு
ரெச்சனுக வுயிரைவாரி யுடலுரித் தெறிந்தனன்
பச்சைவல்லி யன்னையான பன்னிகா நிரண்டையும்
வச்சிரத்தி னுலர்ந்து மாமன்முன்பு சென்றனன்.

(இ-ள்.) அளவில்லாதபயங்கொண்ட யாககர்த்தாவாகியகலைக் கோட்டு மகாரிஷி பிராணனுந் தேகமும் வேருகக்கொன்று உடலை உரித்து எறிந்தார், கருநிறத்தையுடைய பார்வதியின் தாயாகிய தக்கனுடைய பெண்சாதியின் இரண்டுகாதையும் அறுத்துத்தள்ளிமாம்னுகிய தக்கனிடத்திற்குப்போனுர் வீரபத்திரர் எ-று. (உ்)

மிக்கருந்து சோமபானம் வீரபான மாகவே
யொக்கநின்ற யாகதண்ட மொன்றுகொண்டு குன்றுபோற்
றக்கனு ரெதிர்த்தபோது தலையரிந்து தள்ளினு
ணக்கணத்தி லொன்றுசென்று ரைக்கணத் தயின்றதே.

(இ-ள்.) தேவர்கள் கூடி யதிகமாகச் சோமபானஞ் செய்வதை நீக்கித்தக்கு வீரமே பான்மாகும்படி யாகசாலையிற்புகுந்து,யாகத் தம்பங்களிலொன்றைப்பிடுங்கிக்கொண்டு எதிர்த்ததக்கனுடையதலை யை மலைபோல் கீழேவிழ அறுத்துத் தள்ளினுர்; அப்போது அத்தப் பூதகணங்களிலொன்று விரைந்துசென்று அரைநொடியிற்றுனே தக்கன் தலையைத் தின்றுவிட்டது. எ-று. (உக)

பசுக்களே றுருத்திரப் பசுக்களாவி தன்னையும்
வசுக்களாவி தன்னைய மருத்துதேவ ராவியும்
முசுக்கள்போ லொளித்திருந்த முனிவராவி தன்னைய
மகிக்கவீரன் விட்டசூல மள்ளியள்ளி யுண்டதே.

(இ-ள்) மாகெளிலேறுகின்ற பசுப்போன்றஉருத்திரக்கூட்டங் கள்பிராணனையும்;அஷ்டவசுக்களுயிரையும்;மருத்துவர்களென்கிற அஸ்வனி தேவர்களுயிரையும்,குரங்குகள்போல் ஒளித்துப்பதுங்கியி ருந்தமுனிவருடைய பிராணனையும் பரியாசஞ்செய்ய வீரபத்திரர் விட்ட சூலாயுதமான தாவுத்தாவுத்து * தின்றுவிட்டது. எ-று. ()

* தின்றுவிட்ட தென்றது, இங்ஙனம் பிளந்துகொன்றதுஎன் றுபொருள் கொள்க.

விழியிலை டருக்கர்பல்லே வேரறுத்துவானிமா
வெழில்படைத்த துண்டநர விரண்டு துண்ட மாக்கினன்
கழலமைத்த காண்மிதிக்க வமூர்தமுண்ட கலிங்கா
வழலவிக்கு மாறுதாளி லப்புவெண்ணெ யொத்தமித.

(இ-ள்.) சூரியன் பற்களுங்கண்ணுந் தெரித்துக்கீழேவிழ அடித்துச் சரஸ்வதியினுடைய அழகுபொருந்திய செவத்த நாவினை இரண்டு துண்டமாகும்படி யறிந்தார்; இலக்குமியை மூக்கறுத்தார், வீரகண்டாமணியைத் தரித்த காலினல் சந்திரனைமிதிக்க; அவன் நசுங்கித் தக்கனுடைய யாகசாலே நெருப்பைமித்ததனல்அந்தவெப்பந்தீர அப்பிய வெண்ணெய்போ லாஞன். எ-று. (உங)

காயமண்ணில் விட்டதேவர் கரியமேனி யலகையாய்
மாயமாகி முண்ணியாகம் வந்துதோன்றி யமர்செயத்
தூயசேனை யாயபேர் தொடர்ந்துசாக வமர்செய்தார்
பேயதா யிருக்கவும பிணக்கநின்ற தில்லையே.

(இ-ள்.) பூதகணங்களாலே தேகத்தை இவ்வுலகத்தில்விட்டிறந்துபோனதேவர்கள், கரியதேகத்தையுடையபைசாசமாகி, மறுபடியும் முன் யாகத்திலே மாயமாய்த்தோன்றி எழுந்து சண்டைசெய்ய அவர்களை வீரபத்திரர்சேனை அடித்துக்கொன்றார்கள்; ஆகையால் பேயாய்ப்போகியுந் துக்கம் நீங்கவில்லே. எ-று. (உச)

விதிபுனைந்தவோம குண்டம் வேறுபட்ட தென்னினும்
புதியசோறு மெள்ளிலேடு பொரியும்வாய் புகட்டிமுன்
குதிகொணெய்க்கடாமெடுத் தொழுக்குபோதொர்கூளித
னுதரகுண்ட மனலெழுந்த வோமகுண்ட மானதே.

(இ-ள்) ரகூப்பிரமனுலே விதிக்கப்பட்ட யாகசாலேயான தூணாசத்தையடைந்தாலும், அதற்குபகரணங்களாகவைத்திருந்தசோறும் எள்ளும்பொரியும்,ஒருபூதம்வாயிற்கொட்டிக்கொண்டு நெய்க்குடங்

களே யெடுத்து மடமடவென்று உட்கொள்ளும்போது, அதனுடை யவயிறேஓமகுண்டமாகவும் உதராக்கினியே நெருப்பாகவுமிருந்தது

அட்டதிக்கு பாலரும் வசுக்களுங் குருக்களு
மூட்டரான மூப்பதிற்று மூன்றுகோடி தேவரும்
பட்டபோ தவர்தம்மெய்கள் பழுதுறாது தன்னுளே
யிட்டபூத வுதரமுன்னே யாகசாலை யொத்ததே.

(இ-ள்.) அஷ்டதிக்குப் பாலகரும், அஷ்டவசுக்களும்தலைவரா கவந்தருக்களும், மூட்டுப்பட்டவராகிய மூப்பத்து மூகோடிதே வர்களும்இறந்தபோது, அவர்களுடையதேகம் வீணாகப்போகாமல் வீரபத்திரருக்கு முன்னே அவருடையசேனைகளாகியபூதகணங்கள் சாப்பிட்டபடியினால் அந்தப் பூதகணங்களுடைய வயிறுயாகசாலை யை யொத்திருந்தது. எ-று. (உசு)

கற்பகால முங்கெடாத கணமிதிக்க வமரர்த
பற்பமா முடம்பிரத்த மாவிகார மொத்ததால்
பற்பலா ரியக்கர்சித்தர் பண்டிசிந்து குடர்களா
சர்ப்பயாக மொத்ததன்று தக்கர்செய்த யாகமே.

(இ-ள்.) கற்பகாலத்திலும்அழிவில்லாதபூதகணங்கள்காலினால் மிதித்தபடியினால், நீடித்த ஆயுளுடைதேவர்கள் அற்பமாகியஉடம்பினி ன்றும் பீரிட்டஉதிரம் யாகத்துக்கு நெய்யெடுத்துச்சொரிதல்போலி ருந்தது; ஆதலால் பல பலயட்சர் சித்தர்களுடைய வயிறுபிதுங்கப் பட்டு அவர்களுடைய குடல் கொடி கொடியர்கச் சிந்திக்கிடந்தது, எவ்வாறிருந்தனெனில் சர்ப்பயாகஞ்செய்தலை யொத்தது அன்றுதக் கன் செய்தவேள்வி. எ-று. (உஎ)

சிறந்ததிக்கு பாலராதி தேவர்சித்தர் முதலினை
ரிறந்திறந்து போகவேத னிறையிலே யியற்றினான்
பிறந்துவந்து வந்துபோர் பெருக்கினார் பிறந்தபேர்
மறந்துவீழ வீரன்மோதி மலரினானை யண்டினான்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர் முதலாகிய தேவர்கள், சித்தர்கள் முதலாவோர் இறக்க இறக்கப் பிரமன் கொடிப்பொழுதில் அவர்களைப் படைத்துக்கொண்டேவந்தார் அவர்கள் மறுபடியும் பிறந்து பிறந்துவந்து யுத்தஞ்செய்தார்கள்; 'பிறக்கும் வரலாற்றையுணர்ந்து) அவர்கள்பின்னும்பிறக்காமலிருக்கும்படி அதற்குக்காரணமாயுள்ளபிரமனையடித்துயுத்தஞ்செய்யதொடங்கினர்வீரபத்ரர்.

செத்ததேவர் மீளவுஞ் செருச்செயப் படைத்திடுங்
கைத்தலங்கள் வீழுமாறு கமலனை மோதினன்.
*முத்தலைக்கொள்படையெடுத்துமுண்டகத்தர்சிந்தைசேர்
பத்துமைந்தர் சென்னியும் படிக்குளே பரப்பினன்.

(இ-ள்) இறந்துபோன தேவர்கள் மறுபடியுஞ்சண்டைசெய்யும்படியுடனுக்குடன் படைக்கும் பிரமனுடையகைகளை அறுத்துத்தள்ளினர்; மூன்றுதலையையுடைய சூலாயுதத்தினால் அவ்ர்மனத்திலிருந்து உண்டாகிய பத்துப் பிரமருடைய தலைகளையும் குத்திப் பூமியில் விழத்தள்ளினர் வீரபத்திரர். எ-று. (உக)

அண்டகூட முண்டுமிழ்ந்த வாதிமாய னமர்செயத்
துண்டமேரு வெனவிளங்கு கருடன்மீது தோன்றியே
விண்டவாளி வருடமாக வீரன்மார்பில் வீசினன்
கண்டதுண்ட மாகவீரன் கையின்வாளி யேவினன்.

(இ-ள்.) அண்டகோடிகளை விழுங்கி உமிழ்ந்த முதல்வராகிய விட்ணுமூர்த்தி சண்டைசெய்யும்படி மேருகிரராக விளங்கிய மூக்கையுடையகருடன்மேல் ஏறிக்கொண்டு அநேகபாணவருஷங்கள்வீரபத்திரர் மார்பில் படும்படியாகப்பொழிந்தார், அப்படிவிட்டபாணங்களை எல்லாம் கண்டதுண்டமாகத் தன்கைப்பாணத்தினால் அறுத்தெறிந்தார் வீரபத்திரர். எ-று. (உ)

* முத்தலை கொள்படை-சூலாயுதம்.

வையமுண்ட மால்வெகுண்டு வாள்விதிர்த்து வீசினு
னையனங்கொர் வாளியா லறுத்தெரிந்தோ ரம்பினுற்
பையரா வருந்தியாவி பருதினன்மெய் கருகினுன்
கையிலாழி யேவினுன் பணிந்ததண்ணல் காலிலே.

(இ-ள்.) உலகத்தையுண்டருளும் விட்டுணுவில்யுத்தம்பண்ணு கிறதற்குச் சக்தியில்லாமல் கோபங்கொண்டு, ஒரு வாளாயுதத்தை எடுத்துச்சுற்றிவீசினுர்; வீரபத்திரர் அவ்வாளினை ஒருபாணத்தை விட்டறுத்தெறிந்து ஒருபாணத்தினுல் பாம்பைக் கொல்லுகின்ற கருடனைக் கொன்றுவிட்டார்; அதுகண்டு துக்கத்தினுல் உடம்பு கருகிப்போய்க் கையிலிருக்கிற சக்கிரத்தை வீரபத்திரர்மேல் பிர யோகஞ்செய்தார்அஃதோடிவந்துவீரபத்திரசுவாமிகாலில்விழுந்து பணிந்தது. எ-று.

எந்தைமுன் னளித்தவாழி யெந்தைதாளில் வீழவே
யந்தமெய் யொழிந்துபன்றி யரியின்வேட மாகிய
வந்துவந்து போர்தொடங்கி வாணின்வேலின் வவ்வினு
னுந்திவேரொர் சேலதாகி வாரிமீ தொளித்தனன்.

(இ-ள்) முற்காலத்தில், விட்டுணு ஆயிரம் தாமரை மலரைக் கொண்டு பரமசிவனைப்பூசித்து வருகிறபோது, இவர்பக்தியைப்பரி சோதிக்கவேண்டி*ஆயிரம்பூவிலேஒரு பூவைச்சிவபெருமான்மறை த்துவைத்தார். விட்டுணுபூசைசெய்துஅருச்சனைபண்ணிக்கொண்டு வரும்போது, புட்பங்குறைய அதற்குப்பதிலாகத் தன்னுடைய தாமரைபூவொத்தகண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச் சுவாமிக்கு மனத் தில் சுந்தோஷம் வந்து சக்கிராயுதம் கொடுத்தார்! அந்தச சக்கிரத் தைத்தானேவீரபத்திரர்மேல்விட, அதுபயந்துகாலில்விழுவேஇனி மேல் இந்தரூபத்தோடேநின்றுல் பிழைக்கமாட்டோமென்றுஅந்த உருவததையொழித்துப் பன்றியாகவும், சிங்கமாகவும்.ரூபமெடுத்து

* " யோவாமபாதார்ச்சித விஷ்ணுநேத்ரஸ் தஸ்மைததென சக்ரமதீவகிருஷ்ட:" தஸ்மைருத்ராயநமோ அஸ்து என்றது வேதம் தமிழ்வேதங்களாலு முணர்க.

வந்து யுத்தஞ்செய்ய அந்தந்தஉருவங்களேவாளாயுதத்தாலும்வேலா யுதத்தாலும், வீரபத்திரர்கொன்றார்; அதன்பின்பு மிகவும் பயந்து ஒரு மீனுருவமெடுத்துச் சமுத்திரத்தில் விழுந்து ஒளித்தார். எ-று.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

புவியுண்ட நெடுமாலும் பழையபடி
புவியுண்டு போனன் வேதா
தவியுண்டு தலைகாலுந் தடியுண்டா
ரிமையவர்தந் தடியூ ணுண்டார்
கவியுண்ட கனற்குண்டம் பேயிறைச்சி
யருந்துகண கலமே யான
தவியுண்டு மனமகிழ்தற் கெய்துமுனி
வரெல்லா மவியுண் டாரே.

(இ-ள்.) மண்ணையுண்ட மகாவிட்டுணுவுந்தோற்று முன்போல வே மண்ணைவாயிற்போட்டுக் கொண்டு (அலைகடலில் ஒளித்துக் கொண்டார்; பிரமன்தவிர்த்து உண்டாயிருந்தகான்குதலையும்அறுப் பட்டிறந்தார்; தேவர்களுந்தண்டத்தாலடியுண்டுஇறந்தார்கள்;பூதக ணங்கள், இறைச்சி சாப்பிடுகிறதற்கு விருப்பத்தோடு மறைக்கப்பட் ட ஓமகுண்டம் உண்கலமாயிற்று அவிர்ப்பாகஞ்சாப்பிட்டு மனமகி ழுவந்த முனிசிரேஷ்டர்கள் எல்லாரும் வீரபத்திரசுவாமியினு லிறந் தார்கள். எ-று. (கூகு)

இங்கிதுவாய் முடிந்ததற்பின் வீரனிறை
பதம்பரவி யிசைத்தா னெல்லா
மங்கணனு முனிவாறி யருள்சுரந்து
மகத்திறத்தார்க் காவி யீந்து
மங்கரியு பதங்களெலாம் பழையபடி
யுதவுதலும் வணங்கிப் போனர்
சங்கரியை முன்பெற்று னென்பெற்றுன்
றனக்காட்டுத் தலைபெற் றனே.

(இ-ள்.) இவ்விடத்தில் இவ்வாறுக யாகசாலையோடு யாவரும் காசமடைந்த பிற்பாடு, வீரபத்திரர் கைலாயத்திற்குப்போய்ச் சுவாமியினுடைய பாதத்தில் வணங்கி அங்குநடந்த சங்கதிகளெல்லாஞ் சொன்னர்; அதுகேட்டருளி அழகிய நுதற் கண்ணினையுடைய பரமசிவனும் கோபமாறி இருபைபிறந்து யாகத்திலிறந்தவர்கள் அனைவரையும் பிழைப்பித்துக் கேடில்லாத அவரவரிடங்களே யவரவர்க்குப்பழையபடியே அருளிச்செய்தலும்; அவர்கள் சுவாமி! நாங்கள் விவேகமில்லாமையினல் செய்தகுற்றத்தைப் பொறுக்கவேண்டுமென்றுகமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டார்கள். முற்காலத்தில் பார்வதியைப்பெற்றதக்கன்யாது பிரயோசனமடைந்தானென்றல் நிந்தைசெய்ததற்கு அபராத அடையாளமாக தனக்கு ஆட்டுத்தலையைப்பெற்றெழுந்தான். எ-று. (கூச)

எந்நாதன் றனையிகழ்ந்தோன் புதல்வியென
வுலகுரைக்கு மிடுக்கண் டீரத்
தன்னுகந் தன்யோக சாதனத்தால்
விடுத்திமவான் முவத்தி னலு
முன்னுக மைநாகன் றனைப்பயந்த
மேனையது முயற்சி யாலு
மின்னுக வவதரித்தா ளமரரெலாங்
கற்பகப்பூ வீசினரே.

(இ-ள்.) எமக்கு நாரதராக இருக்கின்ற பரமசிவனை நிந்தித்த தக்கனுடைய குமாரியென்று பழிப்பாக உலகம் சொல்லுமேனும்மையென்றுபார்வதி அந்தத் துக்கந்தீரத் தன்னுடைய தேகத்தை யோகாக்கினியினலே நிவாத்திசெய்து, மலையரசன் தபோமகிமையினலும்முன்னே மைநாகனென்கிற பிள்ளையைப்பெற்ற மேனுதேவியினதுதவமுயற்சியினலும், அவர்களுக்குக் குமாரியாக அவதாரஞ் செய்தாள்; சமஸ்தமான தேவர்களும் கற்பகப்புட்பங்களை வருஷமாகப் பொழிந்தார்கள். எ-று. (கூடு)

* சித்தாந்தத் தொன்றுசத்தி சிவத்திரண்டாய்
ஞானமிச்சை செயலின் மூன்று
கொத்தாகிக் குடிலைதரு நாதவிந்து
வீரண்டினுக்குங் கொழுகொம்பாகி
முத்தாகிச் சிவனிடத்தே யுருத்திரன்மா
லையன்முதலே முளைத்த மூல
வித்தாகி நிறைவாளைப் பயந்தவர்க்கு
முடிநததவம் விளம்ப லாமோ.

(இ-ன்.) சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்தில் ஒன்று பட்ட அபிண்ணசத்தியாயிருந்து பின்பு அச்சிவத்தினின்றும்பின்ணசத்தியென்றுவேறுபட்டிரண்டுருவினையுடையவளாகி பின்புஞாணசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தியென மூன்றுவகையாகிக்குடிலையுண்டாகிய நாதவிந்துகளுக்குக் கொழுகொம்பாகியும், சுவாமிக்கு முத்தாகியும், பரமசிவனிடத்தில் உருத்திரன், விட்டுணு, பிரமன் முதலானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகியவித்தாகியும், எங்கும் நிறைந்த பார்வதியைப்பெற்றவர்க்குமுடிந்ததவப்பெருமையைச்சொல்லக்கூடுமோ. எ-று. (நகூ)

கலிவளரு மதிபோன்று சிவனெவெல்ல
மதன்வளர்க்குங் கரும்பு போன்றும்
பலகலையுந் தெளிந்துபந்து கழங்கூச
வியற்றியுமை பயிலு நாளில்
மலையரச னிடத்தின்மறை நாரதனு
மொருநாளின் மகிழ்வா யெய்தி
யுலகமெல்லாங் குடியிருக்குந் திருவயிற்று
விலக்கணமபார்த் துரைக்க லுற்றார்.

---

* சித்தாந்தம்—தீர்த்தமுடிபு. வேதாந்தத்தின்முடிபே. சித்தாந்தமென்றவாறு. "வேதாந்தத்தெளிவாஞ் சைவசித்தாந்தத்திறனிங்கு தெரிக்கலுற்றும்" என்றது சிவப்பிரகாசமும்.

(இ-ள்.) பார்வதி இமாசலராஜனுக்கும், மேனாதேவிக்கும்குழந் தையாகி வளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்ந்துமன்மதன்சிவனை வெல்ல வில்வேண்டி அதற்கு வளர்த்த கரும்பையொத்தும்பலபல சாஸ்திரங்களோயுங் கற்றுப் பந்து, கழங்கு, ஊசல், முதலியவிளையா டல்களைச் செய்துகொண்டும், உமாதேவியாரிருக்கும் காலத்தில், நான்குவேதங்களோயு மொருங்கேகரைணர்ந்தநாரதமுனிவர் பர்வதரா சனிடத்தில் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம வயிற்றில் வைத்தி ருந்த அம்மையுடைய இலக்ஷணம் பார்த்துசசொல்வார்.எ-று. (கூஎ)

செற்றியிலோர் புறத்திலரை நேத்திரமுண்
டாமொருகை நெடிய சூலம்
பற்றுமொரு தனமறையு மொருபாக
மரகதம்போய்ப் பவள மாகும்
கற்றைகறுங் குழல்பாதி சடையாகு
மொருகைவளை கழன்று போகு
முற்றுவர விவைகளென மலையரசன்
மனமுருகி யுவகை யானான்

(இ-ள்) பருவதராஜனே, உம்முடைய குமாரத்திக்குச் சிலநா ளில் செற்றியில் ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும்,ஒருகையில் சூலமுண்டாகும்; ஒருபக்கத்திற்தனம் மறைந்து போகும், பாதிசரீ ரம் பச்சைநிறம்போய்ப்பவளமாகும், கூந்தலிற்பாதிசடைகளாகும். ஒருகையில் வளைகளில்லாமற் போகும், இவைகள்சம்பவிக்குமென் று நாரதர்சொல்லப் பருவதராஜன் உள்ளமுருகிச் சந்தோஷத்தை யடைந்தான். எ-று. (கூஅ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வே று.

வையநீர்க் கங்கை பாயும்
பனிவரை மருங்கி னெந்தாள்
தூய்யநீர்ச் சடையான் வந்தங்
கோர்தவந் தொடங்கக் கேட்டு

வையக மளித்தா டாதை
வள்ளலைப் பணிந்து மானை
யையநின் றத்துக் கேவல்
கோடியென் றளித்துப் போனான்.

(இ ள்) இப்படி நாரதர்சொன்னதைக்கேட்டுப் பார்வதியேநமக்குப் பெண்ணாகவந்த படியினால், பரமசிவன் மருமகனாகிவரவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறகாலையில், பூமியில் கங்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிறஅந்த இமயபர்வதத்திலொரு பக்கத்தில் பரமசிவன்யாதோவொரு நினைவினால்யோகத்திலிருக்கிறரென்கிற வார்த்தை கேள்வியாகத் தன்மகளாகியபார்வதியையும் சிலதோழிப் பெண்களையும் அழைத்துக்கொண்டுபோய்ச் சிவபெருமானை நமஸ்காரஞ்செய்து என்னுடைய பெண்ணை ஐயனே உம்முடைய தவத்துக்காக எவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்றுஅவரிடத்தில் அம்மையைவிட்டுப்போனான் பருவதராசன். எ-று. (ங க)

ஓங்குமா லயன்மற் றுள்ளோ
ரொழிவிலாத் தவம் புரிந்தால்
தாங்குபே றளிப்பான் றானோர்
கருத்திறற் றவஞ்செய் போதிற்
பூங்குழல் கனியும் போது
முஞ்சியும் புனலுங் கொண்டு
பாங்கியர் பலருஞ் சூழப்
பணிவிடை பலவுஞ் செய்தாள்.

(இ-ள்.) எல்லாத்தேவரிலு முயர்ந்தவிட்டுணு, பிரமன் மற்றவர்கள்பெருமையாயொழிவில்லாததவசுசெய்வதால்அவர்களுக்கு வேண்டியவரத்தைக்கொடுக்கிறசுவாமியானவர்யாதோவொருகருத்தினும்

தவஞ்செய்கிறபோது பார்வதி, பழம், புஷ்பம், தருப்பை திருமஞ் சன முதலானவைகளைக் கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களு டனே பல பணிவிடையுஞ்செய்து கொண்டிருந்தாள். எ-று. (சு0)

இங்கிவை யிருக்கத் தேவ
ரியாவரு மிமையோர் கோவும்
பங்கயத் தவனை யெய்திப்
பணிந்தனர் பதுமத் தோனு
மங்கவர்க் கிருக்கை யீந்தா
னவரவர் முகத்திற் சோர்வுங்
குங்குமக் குழம்பு நீத்த
புயங்களிற் குழைவுங் கண்டான்.

(இ-ள்.) இவ்விடத்தில் இப்படியிருக்க, எல்லாத் தேவர்களும் அத்தேவர்களுக்கு அரசனுகிய தேவேந்திரனும் கூடிப்பிரமனைச்சே ர்ந்து தொழுதார்கள், அந்தப் பிரமனும் அவர்களுக்கு இருக்க ஆச னங்கொடுத்துப் பிற்பாடு, அவரவர்களுடையமுகஞ்சோர்ந்து இரு ப்பதையும் குங்குமம் பூசியிருந்ததோள்கள்அதுகலைந்து இளைத்திரு ப்பதையும் பார்த்தார். எ-று. (சுக)

வச்சிர மொடிந்தீ சானன்
கணிச்சிவாய் மடிந்துங் கானன்
முச்சிரம் வளைந்து மற்றோர்
படையெலா முறிந்துந் தேவர்
மெய்ச்சிர மகுட நீத்து
மெலிந்தமை விளம்புமென்று
னச்சுரர் தமக்குக் கோமான்
றாரா னழித்தா னென்றான்.

(இ-ள்.) வச்சிராயுதம்ஒடிந்துபோயும், ஈசானன்மழுவாயுதத்தின் வாய்மழுங்கியும், எமனுடையமூத்தலைவடிவாகியசூலாயுதம்வளைந்தும், மற்றைத்தேவர்களுடைய ஆயுதங்களெல்லா முறிந்தும், தேவர்கள் சிரத்தில் இருக்கிற மகுடம்பிடுங்கப்பட்டும், வருத்தத்தையடைந்தீர்கள், அவ்வருத்தத்தைச் சொல்லுங்களென்று கேட்கத்தேவேந்திரன் தாரகாசுரன் இப்படி அவமானஞ்செய்தானென்றுசொன்னன். எ-று. (சஉ)

காலியம் புயத்தோன் சொல்வான்
காலனற் கனலாற் காற்றுண்
மாலினு லென்னு லுண்ணு
வெவ்வலி தொலைக்க லாமோ
வாலமா மிடற்றுன் பேரு
யசலமா திடத்தே தோன்றும்
வேலனூர் வெல்வா ருங்கள்
சிறையெலாம் விடுப்பா னென்றுன்.

(இ-ள்.) அப்படிதேவேந்திரன் சொல்லியகாலத்தில் அதுக்கேட்ட பிரமன் சொல்வான், இயமன், அக்கினி, வாயு, விட்டுணுஇவர்களாலும், என்னுலும், உன்னுலும், அந்தத்தாரகாசுரனதுஆற்றலையடக்கிக் கொல்லக்கூடுமோ விஷந்தாங்கிய சிறந்தகண்டத்தினையுடைய சிவனுடையபிள்ளையாய், இமாசல புத்திரியானபார்வதியினிடமாக அவதரிக்கப்போகிற சிவசுப்பிரமணியர் அவனைக்கொன்று உங்கள்சிறையை மீட்பாரென்று சொன்னன். எ-று. (சங)

யோகத்தி லிருக்கு மீச
னுமைக்குநாண் டரிக்கு மாறு
வேகத்தி லியற்று மென்றே
யயன்விடை கொடுத்தான் மீண்டு

மாகத்த லணுகித் தேவர்
மதனனை நினைத்தார் மாரன்
சோகத்தை யொழிக்குந் தென்றற்
றேருடன் றோன்றிச் சொல்வான்.

(இ-ள்.) யோகத்திலிருக்குஞ் சிவபிரான்பார்வதிக்கு மங்கலிய தாரணஞ்செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிரமன் சகலருக்கும் உத்தரவுகொடுக்கத்தேவர்களெல்லாம் அமராபதிக்குவந்து மன்மதனை நினைத்தார்கள்; அம்முணர்ந்த மன்மதன் விடாய்தீர்க்கத்தகுந்த தென்றலாகிய தேரிலேறிவந்துசொல்லுவான்.

னவன்றவ மழிக்க மாத
ரெவர்களை மயக்க நீவிர்
கவன்றதெத் துயரா லெம்மை
யழைத்ததென் கரும மென்று
னவன்றனை யிருகப் புல்லி
யமரர்கோ னருளி னேக்கிச்
சிவன்றவ மழிக்க வேண்டி
யழைத்தெமை தெரியச் சொன்னன்

(இ-ள்.) மன்மதன், தேவர்களைப்பார்த்து எவனுடைய தவத்தை அழிக்கவேணும்; எந்தப்பெண்களை மயக்கவேணும், நீங்கள் எந்தத்துக்க நிமித்தமாக மனக்கவலை யடைந்தீர்கள் என்னை யழைத்த காரண மென்னவென்று கேட்கத் தேவேந்திரன் அந்த மன்மதனை இரண்டுகையினாலும் இறுகக்கட்டித்தழுவி உபசாரத்துடனேபார்த்துச் சிவனுடைய தவத்தை யழிக்கும்படி உன்னைவேண்டி யழைத்தென்று தெரியச்சொன்னன். (சுரி)

விண்ணிலார் மகவான் சொல்ல
வெகுண்டுவேள் பயந்து கூறும்
பெண்ணலா னலியா னல்லன்
பிறப்பிலா னிறப்பு மில்லான்

கண்ணினு லளவை நூலாற்
கருத்தினு லளவா வந்தத்
தண்ணிலான் முடியான் செய்யுந்
தவத்தையார் தவிர்க்க வல்லார்.

(இ-ள்.) தேவலோகத்தி லிருக்கும் இந்திரன்சொல்ல அதைக் கேட்ட மன்மதன் கோபித்துச் சுவாமிக்குப் பயப்பட்டுச் சொல்லுவான், தேவேந்திரனே! சிவன்பெண்ணுமல்லர், ஆணுமல்லர், அலியுமல்லர், பிறப்பும் இறப்புமில்லாதவர், காட்சிப்பிரமாணத்தினுலும் ஆகமப்பிரமாணங்களினுலும், கருத்தினுலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்ச்சி பொருந்திய சந்திரசேகரருக்கும், முடியையுடைய அந்தப்பரமேஸ்வரனது தவத்தையழிக்கின்றதற்கு யார்வல்லவர். எ-று. (சசு)

கன்னிகை கவுரி யீசன்
கதமிலாப் பிரம சாரி
சந்நிதித் தன்மை யாலே
யுயிரெல்லாந் தழையா நிற்கு
முன்னிய வுயிர்கள் போல
வொடுங்கிடு மவன்பாற் செல்லு
மன்னிய பொருளுந் தோன்றி
மனதிலே யொடுங்கு மாபோல்.

(இ-ள்.) அம்மனே கன்னிகை சிவனே, குற்றமில்லாத பிரமசாரி, இவர்களிருவருடைய சந்நிதி மகிமையினுலே சகல உயிர்களு முண்டாகி விருத்தியாகும், முன் எப்படிசுவாமியிடத்திருந்து சீவர்கள் உண்டாயினரோ, அப்படியேஅவரிடத்தில்ஒடுங்கும், மனதிலே தோன்றிய அநேகவஸ்துக்கள் அதிலே ஒடுங்குவதுபோல். எ-று.

தாமத குணத்த னென்பர் சங்கரித்திடலா லீசன்
சேமமா முயிர்கட் கெல்லா மிளைப்பொழித் தருள்வ தாகு
மாமல குணமொன் றில்லை வடிவ'பு'ங் கனலா மென்கைப்
பூமலர் சொரிந்தக் காலும் புகையெழப் பொரிந்துபோமே.

(இ-ள்.) உலகத்தில் சங்காரத்தொழில் செய்வதனால், சிவன்த மோகுணத்தை யுடையவரென்று சொல்வார்கள் அப்படி அன்று, அஃது ஆன்மகோடிகளின் இளைப்பையொழிப்பதாகும், மற்றத்தே வர்களுக்கு உண்டாயிருக்கின்ற * மும்மலகுண சம்பந்தங்களிலொன்றேனு மவர்க்கில்லை; இவருடையசொரூபமும்நெருப்பாகும் அவர்மேல் நான்புஷ்பபாணத்தைவிட்டபோதிலும் அவைகள் புகையாய்க் கரிந்துபோகும். எ-று. (சஅ)

உருவெனத் தெரியா தானே யுருவிலே டருவா வானே
யருவெனத் தெரியா தானே யமர்செயி லரிதென் றஞ்சி
வெருவரப் புகுந்தா னந்த வேளையில் வேளைநோக்கித்
தருவெனத் திடையில் வாழுஞ் சதமக னுரைப்பானுனன்.

(இ-ள்.) உருவென்று யாவராலும்தெரியக்கூடாதவரை, உருவமாகியும், அருவமாகியும், இருக்கின்றசிவனே, அருவமென்றுந்தெரியாதவரை, மிகவும்யுத்தஞ்செய்துசெயிக்கப்படாதென்று மன்மதன் பயப்பட்டுத் தன்னுடைய தானத்திற்குப்போகப் புறப்பட்டான், அக்காலத்தில் மன்மதனைப்பார்த்து கற்பகத்தருவினிழலில்வாசஞ்செய்யாகின்ற தேவேந்திரன் சொல்லத்தொடங்கினன். எ-று. (சக)

மாரத்யவ னுதின் மீது மலரவ னுவின் மீது
நாயகன் சிரத்தின் மீதும் பொறுத்ததுன் னலமேயன்றே
காயுநற் கதிரின் மேனிகடைந்தது மிற்மெனக்குத
வாயிர நயனந் தந்த செயலுமுன் ணன்மை யன்றே.

---

* மும்மலகுணங்களா "அஞ்ஞானப்பொ யர்வேமோகம்பை சாசூந்நியமார்ச்சரியம்பயம்" எனவரும் இருபாவிருபதின் செய்யுளானறிக.

(இ-ள்.) விட்டுணு, தம்முடையமார்பினிடம் இலட்சுமியைவைத்துக்கொண்டதும், பிரமன்சரசுவதியைநாவில்வைத்துக்கொண்டதும், மகாதேவர் தலையிலே கங்கையென்கிற பெண்ணை வைத்துக்கொண்டதும், உன்னுடையசாமர்த்தியமல்லவோ! சூரியனைச்சாணியில் கடையச்செய்ததும், எனக்குஆயிரங்கண்கள்வந்ததும், உன்னுடைய ஆண்மையல்லவோ! என்றான் தேவேந்திரன். எ-று. (இ0)

செல்வதின் றெமக்கா யங்கே
தருவது தேவர்க்காவி
வெல்வது சிவனை வென்று
கொடுப்பது காம வேட்கை
சொல்வது மறுக்க வேண்டா
மெனச்சொலித் துணைக்கை பற்றி
நல்வர மிதுதா வென்ன
மதனவே ணயந்து கூறும்.

(இ-ள்.) பின்னுந் தேவேந்திரன் சொல்வான், மன்மதனே? எனக்காக அங்கேசென்று சிவனைஜயித்து அவருக்குக்கமலாகிரியுண்டாகும்படிசெய்தால் அவருக்குப் புத்திரனுண்டாகும், அந்தப்புத்திரன், அசுரர்களைக்கொன்று தேவர்களைப் பிழைக்கும்படிசெய்வார், அதற்குநீயேகாரணமாயிருக்கிறாய், நான்சொன்னவார்த்தையை மறுக்கவேண்டாமென்று கைபைப்பிடித்துக்கொண்டு எனக்கு இந்த நல்லவரத்தைக் கொடுவென்று கேட்க, மன்மதன் சந்தோஷித்துச் சொல்வான். எ-று (இக)

அரன்சில மலையென் றலு
மடுங்கணை யரியென் றலு
வரம்புற விசைந்த நாணும்
வாசுகி யரவென் றலுங்

கரும்பெனுஞ் சிலேயா லேந்து
கணேயெனு மலரா னீலச்
சுரும்பெனுங் குணத்தால் வெல்வே
ணெனச்சொலித் தொழுது போனன்.

(இ-ன்.) தேவேந்திரனே, சிவனுக்கு வில்மலேயாகி யிருந்தாலும், விட்டுணுவே எதிர்த்தவரைக்கொல்லும் பாணமாகியிருந்தாலும் வாசுகி என்னும் சர்ப்பமே நன்றாகவற்றுகின்றநாணியாஞலும் என்னுடையகரும்பாகியவில்லிஞலும்பஞ்சபுட்பங்களாகிய பாணங்களாலும் நீலநிறம்பொருந்தியவண்டென்கிறநாணியிஞலும், அந்தச்சிவனேஜயித்துப்போகிறேனென்றுவந்தனஞ்செய்துசுவாமியிடத்துக் குப்போனன் மன்மதன். எ-று. (இஉ)

சந்தனமணமுந்தெய்வத்தமிழ்ப்புதுமணமுங்கொண்டு
வந்ததுமலேயைத்தென்றல்வசந்தமந்திரியுஞ்சேர்ந்த
திந்துவுநிலமாம்வெள்ளே வலேயினியெறிந்ததெங்கும்
கொந்தலரிளமாவெல்லாங்கோகிலமுழங்கிற்றன்றே.

(இ-ள்.) மன்மதன்சிவனேஜயிக்கும்படி புறப்படும்போது, பொதியமலேயிலிருந்து அவ்விடத்தில்தங்கிய சந்தனவாசனேயும், திவ்யமான தமிழ்வாசனேயுங்கொண்டு தென்றற்காற்றுவந்தது வசந்தனுகிய மந்திரியும் வந்துசேர்ந்தான், சந்திரனுங்கிரணமாகிய வெள்ளே வலேயினே ஞான்குபக்கமும் வீசினன், புஷ்பக் கொத்துகளேயுடைய இளமையுற்ற மாமரத்திலெல்லாங் குயில்முழங்கியது. எ-று. (இங)

மல்லிகை மூகையாஞ் சங்க
மதுகர முழக்கஞ் செய்ய
முல்லேசண் பகம சோகு
மூளரியே முதலா யுள்ள

வெல்லியில் மலருந் தேனு
மிறைத்தன நிரும்பைச் செம்பைக்
கல்லினை யுருக்குஞ் சொல்லார்
குறிஞ்சியாழ் கரத்திற் கொண்டார்.

(இ-ள்.) மல்லிகையரும்பே சங்கமாகவும், அவ்வரும்பில் சப்திக்கின்ற வண்டுகள் அச்சங்கத்தை வாயில்வைத்து ஊதுகிற வீரஞ்சகவும் விளங்க முல்லை, சண்பகம், அசோகு, தாமரைமுதலாகிய கணக்கில்லாத புஷ்பங்களையும், தேனையும், நான்குபக்கமும் மிறைத்துக் கொண்டு கடினமாகிய இரும்பு, செம்பு, கல், இவைகள்கூடஉருகும் படிசொல்லுகிற வார்த்தையையுடைய பெண்கள் குறிஞ்சியாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள். எ-று. (நிச)

பொங்கிய வுடுக்க ளான
புகரணி முகத்துச் செக்கர்
தங்குசிங் தூர மாகுங்
தனியிருட் கரியுங் கிள்ளைப்
பைங்குர கதமுஞ் செல்லப்
பணிமுலைப் பவளச் செவ்வாய்
மங்கைய ரெனும்போர் வீரர்
வடிக்கண்வாள் விதிர்த்துச் சென்றார்.

(இ-ள்.) மிருக்தஷட்சத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாகவும், செவ்வானம் ஒருதிலகப்பொட்டாகவும், விளங்குகின்றஒப்பற்ற இருட்டாகிய யானையும் பசுமை பொருந்திய கிளியாகிய குதிரையும், கடக்கப்பருத்தமுலையையும் பவளம்போன்ற வாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்கள்தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். எ-று. (நிடு)

கோணிய கரும்பு மைந்து குலமலர்க் கணையுங் கொண்டு
வாணுத லிரதி செல்ல மகரகே தனத்தினோடு [டஞ்சி
தாணுமாவனத்தைச்சேர்ந்தான்றவஞ்செய்வான்றனக்கண்
ணாணினு னறுகால் வண்டு ணாணினு னடுங்கி னானே.

(இ-ன்) வளைவாகிய கரும்புவில்லையும், புட்பங்களாகிய ஐந்து பாணங்களையுமெடுத்துக்கொண்டொளிபொருந்தியதெற்றியையுடைய இரதிதேவிகூடவர மீனக்கொடியுடனே பரமசிவன்யோகத்திலிருக்கிற வனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்கிற அத்தச்சுவாமியைப்பார்த்து இவரைஎவ்வாறுசெயிப்போமென்றுபயந்துவெட்கத்தையடைந்து நடுங்கினான். வண்டைநாணுகவுடைய மன்மதன் என்றவாறு. (நிக)

வெளித்தலத் தெதிர்த்தா லென்ன
வீளையுமோ தனக்கென் றெண்ணி
யொளித்தனன் முன்னே பின்னே
யுமையவள் வரவு கண்டு
களித்தனன் மயக்க மாமோ
கனத்துக வெறைத்து வில்லை
வளைத்தன னளிநாண் பூட்டி
வடிக்கணை தொடுத்தான் மாரன்.

(இ-ள்.) நேரேவெளியாகவந்து யுத்தஞ்செய்தால் என்னகேடு நமக்குண்டாகுமோ! என்றுநினைத்து சுவாமியின்பின்தெரியாமல் ஒளித்திருந்தசமயம்பார்த்துக்கொண்டிருந்தபோது, பார்வதிஅக்கடவுள்முன்னே பணிவிடைசெய்ய வருதலைக்கண்டு, பெண்துணை நமக்கிருக்கின்றபடியினால் வெல்லக்கூடுமென்றுசந்தோஷித்து மோகத்தை உண்டாக்கும்புஷ்பபாணத்தையிறைத்து வில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைத்தொடுத்தான் மன்மதன். எ-று. (நிள)

ஒருகரும் புருவச் சாப
மொடியினு மூலக மீன்று
ளிருகரும் புருவச் சாப
மூளவெனு மெழுச்சி யாலே
பொருகணை தொடுத்தான் சென்று
பூஞ்சுடு கணையி னனு
மொருகணை விடுத்தான் மார
னுடலெலாங் கொளுத்திற் றன்றே.

(இ-ன்.) மன்மதன் தானதிக சண்டைசெய்தால் ஒரு கரும்பு உருவமாகிய வில்லானதுஒடிந்தாலும், உலகத்தைப்பெற்றபார்வதி யின் இரண்டுகரும்புருவமாகிய வில் உண்டாயிருக்கின்றன நமக்கு யாதொருகுறைவுமில்லை யென்கிறசெருக்கினற்பேராய் அனேகயுத்தத்திற்குரியபாணங்களைவிட்டபோது மூன்றுபுரத்தையும்எரித்தருளியகையாகிய அம்பையுடையசிவன் அந்தமன்மதன்மேல் தன்நெற்றிக்கண்ணுகிய ஒருகணையைச்செலுத்தினர். அக்கணை மன்மதனுடைய உடம்பையெல்லாந் தகித்துவிட்டது. எ-று. (இஅ)

அருக்கவேண் பஞ்சு போல
வழற்கண்ணு லனங்க னென
திருக்குளங் கனலக் கண்டு
தேவருந் திசையி னேரும்
வெருக்கொள வொளித்தார் பூத
கணத்துடன் விகடபி னனும்
பொருக்கென முறைந்து வெள்ளிப்
பொருப்பிடைப் புகுந்தா னன்றே.

(இ-ள்.) நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனுடைய மாறுபாடு பொருந்திய மனத்தையுடையவன் எரிந்துபோகக்கண்டு தேவர்களும், அஷ்டதிக்குப்பாலகரும், பயப்பட்டு ஒளித்துக்கொண்டார்கள், அதன்பின்சுவாமி பூதகணங்களுடன்சீக்கிரமாகஅந்தவிடம்விட்டுக் கைலாயத்துக்கு எழுந்தருளினார். எ-று. (நிகூ)

சங்கரன் மணத்தை வேண்டி
யுமைநற் றவமே செய்தா
ளங்கது புணரு மாறெழ்
முனிவருக் கமலன் சொன்னான்
மங்கல முரைக்க வேழு
முனிவரு மகிழ்வா யெய்தித்
துங்கவெற் பிறையார்க் கிந்தச்
சோபனச் சொல்லி னார்கள்.

(இ-ள்) பரமசிவன்தன்னைக்கலியாணஞ்செய்துகொள்ளப் பார்வதிசிறந்த தவஞ்செய்கிறாள்; அவள்வந்துசேரச் சப்தரிஷிகளையழைத்துப் பருவதராஜனிடத்திற்போய்சுவாமிக்கு உன்பெண்ணைக் கலியாணஞ்செய்து கொடுவென்று கேளுங்களென்று அனுப்பினார் அந்தப்படியேஅந்தஏழுபேரும்பருவதராஜனிடத்திற்குப்போய் இந்தத்திருக்கலியாண சங்கதி சொன்னார்கள். எ-று. (கூ0)

மலையிறை மகிழ்ந்தா னந்தமலையிறை புதல்வன் வள்ளல்
குலமெது பயந்தோர் நாமங் குடிப்பெய ரேதுவாழுந்
தலமெது புகலுமென்றான் றவத்தவா நகைத்துச்சொல்வா
ரலகிலான் பிறப்பு நல்லகிலையென வறிவித்தார்கள்.

(இ-ள்.) இருடிகள்பேய்ச்சொன்னவுடனே பருவதராஜன்சந்தோஷித்தான்; அவன்பின்லோகியமைநாகன்ரிஷிகளைப்பார்த்து

சிவன்என்னசாதி! அவருக்குத் தாய்தகப்பன் யெயரென்ன! குடிப் பெயரென்ன! அவரிருக்கும் ஊரெது! சொல்லுங்களென்று கேட் டான்; அதைமுனிவர்கேட்டு நகைத்துச் சிவனே அளவிடக்கூடாத வர்அவர்பிறந்தவிடம் மூங்கில், அவர் நல்லசாதியென்று தெரிவித் தார்கள். எ-று. (சுக)

பெருத்ததோ ருவகையாகிப்
பிறைமுடி யன்பேர் காளிற்
பொருத்தமு நாளுந் தேர்ந்து
முனிவரைப் புகழ்ந்து போற்றி
விருத்தியார் வரவு நாளுங்
குறித்திறை விடுத்தா னன்னேர்
பரித்தகங் கையினற் கந்தப்
படியெலாம் பணிந்து சொன்னர்.

(இ-ள்.) அப்படி சப்தரிஷிகள் சொன்னபிறகு பருவதராஜன் முதலானவர்களெல்லாம் மகாசந்தோஷத்தையடைந்துசந்திரனைத் தரித்தமுடியையுடைய சிவபெருமானதுபெயர் நட்சத்திரத்திற்கும் அம்மையாரதுபெயர் நட்சத்திரத்திற்கும் பொருத்தசவிதபொருத் தமுங்கலியாணஞ்செய்கிற காலமுமறிந்து நிச்சயஞ்செய்து ரிஷிக ளினுடைய பாதத்தைப்புகழ்ந்து வணங்கி விருத்திபொருந்திய திரு க்கலியாணமுகூர்த்த ஓலையும் எழுதிக்கொடுத்தனுப்பிவித்தான், அ ந்த எழுரிஷிகளும் கங்கையைத் தரித்த சுவாமிக்கு நடந்த சங்கதி களெல்லாம் வணங்கினர்கள். எ-று. (சுஉ)

இமையவெற் பிறைவ னேலே
முகத்திலேழ் கிரிக்கு மேருச்
சிமையமால் வரைக்குஞ் செம்பொற்
றிகிரிமால் வரைக்கு மேழு

தமரவான் கடற்குஞ் சித்த
சாரணர் முனிவோருக்கும்
அமரரா னவர்க்கும் வஞ்சி
மணத்தினை யறிவித் தார்கள்.

(இ-ள்.) இமயபருவதராஜன் பார்வதியம்மையின் திருக்கலியாணமுகூர்த்தஓலையை அநேக தூதர்கள்கையிற்கொடுத்தனுப்பிவிக்க அவர்கள் சத்தகுலபருவதங்களுக்கும், கொடிமுடிபொருந்தியமேருமலைக்கும், சக்கிரவாளகிரிக்கும், ஒலியையுடையசத்தசமுத்திரத்திற்கும், சித்தர், சாரணர், முனிவர்தேவர்முதலானவர்களுக்கும், வஞ்சிக்கொடிபோன்ற இடையினையுடைய அம்மைத் திருக்கல்யாணத்தைத் தெரிவித்தார்கள். எ-று. (சுஉ)

ஓலைகண் டளவே சேர்ந்த வுத்திகளேழும் பூமி
மாலையாய்ச் செல்லுகின்ற மகிமைசேர் நதிகளேழும்
நீலமே முதலாயுள்ள கிரியெலா நெருங்கிச்சென்ற
கோலமாமுனிவோர்சித்தரிமையவர்குழாங்கொண்டார்கள்

(இ-ள்.) ஓலையைக்கண்டவுடனே ஏழு சமுத்திரத்திற்கும் பூமிதேவிக்கும் மாலைபோலப்பிரகாசிக்கின்ற மகிமைபொருந்தியஏழுநதிகளுக்கும், நீலகிரிமுதலாகியசப்தகுலபருவதங்களுக்கும், அதிஷ்டானமாகியதேவதைகள்நெருங்கிச்சேர்ந்தார்கள்; தவக்கோலத்திற்கிறந்தமுனிவர்களும், சித்தர்களுந்தேவர்களுங் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்துவந்தார்கள். எ-று. (சுச)

அட்டதிக் கினைத்துந் தேராற்
கொடிகளா லடைத்தார் விண்ணை
மட்டறு விமானந் தன்னுன்
மாலையான் மறைத்தார் வீதி

நெட்டிலை யரம்பை பூக
நிரைகளால் நிறைத்தார் வெற்பிற்
றட்டிய புழுகி னூலே
மெழுகினர் தரைக ளெல்லாம்.

(இ-ள்.) எட்டுத்திக்கையுந்தோரினும் கொடிகளாலும்இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள், ஆகாயத்தை இடமில்லாமல் அளவற்ற விமானத்தினாலும், மாலைகளினாலும்மறைத்துவிட்டார்கள், வீதிகளில்நீண்ட இலைகளையுடைய வாழைகளையும், கமுகுகளையும், நிரைநிரையாக நட்டு அலங்காரஞ்செய்தார்கள், மலையிலிருக்கிற புழுகைத் தட்டிக் கரைத்துத் தரைகளெல்லாம் மெழுகினார்கள். எ-று (சுடு)

தோரணஞ் சமைத்தார் முத்தின்
றொடையெலாந் தொடுத்தார் விண்ணிற்
பூரண கும்பம் வைத்தார்
புதுமணி விளக்கு மிட்டார்.
சாரண னுலகு மற்றை
யளகையு மமரர் நாடு
நாரண னுலகும் வந்து
காணவே நாணு மாறே.

(இ-ள்.) நகரமெங்கும் தோரணங்கட்டினார்கள்; அதில் முத்து மாலைகளைத்தொங்கவிட்டார்கள்; ஆகாயகங்கையைக்கொண்டுவந்து பூரணகும்பம்வைத்தார்கள் நூதனமாக இரத்தினதீபம்ஏற்றினார்கள்; பிரமலோகமும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும், இதைப்பார்த்து நாணும்படிச் சிங்காரித்தார்கள். எ-று. (சுசு)

மணிவிளக் கனைய மின்னே மலையர மகளிர் கூடிக்
கணிமலர்க் கங்கையாட்டிக் கலையினுண் மருங்கைவாட்டிப்

பணிமணியாரம்பூட்டிப் பரிமளத்தாமஞ் சூட்டிப்
யணிறுதற் றிலகந்தீட்டி யருமறைச் சடங்கு செய்தார்.

(இ-ள்.) இரத்தினதீபம்போன்றபார்வதியை மலையிலிருக்கிற பெண்கள்கூடிக் கற்பகமலர்வாசனைசேர்ந்த கங்காசலத்தினால்ஸ்நானஞ்செய்வித்து, இடையானது சோரும்படி சித்திரப்பட்டாடைகட்டி, ஆபரணங்களும் முத்துமாலையும்பூட்டிப்பரிமளம்பொருந்திய நறுமலர் மாலைசூட்டி, அழகியநெற்றியிற் கஸ்தூரித்திலகப்பொட்டு அணிந்து வேதவிதிப்படிச் சடங்குசெய்தார்கள். எ-று. (கூஎ)

பூமணக் கோலஞ் செய்த பொடியணி புனிதனுரைத்
தாமணக்கோலஞ் செய்யுஞ் சதுர்முகன் முதலோரீண்டித்
தூமணித் துகில்கள் சாத்திச் சுரதரு மாலைசாத்தி
மாமணிப் பணியை நீக்கிமரமணிப் பணிகள்பூட்டி.

(இ-ள்.) வாசனைபொருந்திய புட்பபாணங்களை எய்த மாரனை கெற்றிக்கண்ணாலெரித்து அந்தப் பஸ்பத்தைத் தரித்தருளிய பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ்செய்யும்படியாக நான்குமுகங்களையுடையபிரமன் முதலானவர்கள்கூடிப் பரிசுத்தமாகியஇரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக்கற்பகப்பூமாலைதரித்து, முன்னேயிருந்தசர்ப்பாபரணத்தைக் கழற்றிப்போட்டுமாணிக்க இரத்தினங்களாலாகிய ஆபரணங்களைத் தரித்தார்கள். எ-று. (கஅ)

சடையிளம் பிறையைத் தங்க
ளிறையெனத் தகைந்து சூழ்ந்த
வுடுக்குல மென்ன முத்தா
லொளிவிடு மகுடஞ் சூட்டி
யடைவுடன் விழியாற் றிங்க
ளாதவர் காதின் மீது
குடியிருந் தன்போற் செய்யக்
குண்டல மிரண்டுஞ் சாத்தி.

(இ-ள்.) சுவாமியினது சடையிற்றரித்த இளம்பிறையைப்பார்த்து தம்மூடைய தலைவனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக் கூட்டங்கள்போல, முத்துக்களால்பிரகாசிக்கின்ற கிரீடஞ்சூட்டிப்பொருந்திய கண்களாயிருக்கிறசந்திர சூரியரிருவருங் காஞ்சனிடத்திற் குடியிருந்தாற் போல அழகாகிய இரண்டு குண்டலங்களைச் சாத்தினர்கள். எ-று. (அக)

வரம்பெற்ற திருமால் சாத்து
மலர்விழிக் கரிய சோதி
பரம்பிய தூய நீலப்
பருமணிச் சிலம்பு சாத்தி
விரும்பிய கோலஞ் செய்தா
ரிறையுமால் விடைமேற் கொண்டா
ரரம்பையர் நெருங்கித் தெண்ணீ
ராஞ்சனங் காட்டி னார்கள்.

(இ-ள்.) விட்டுணுவரம் பெற்றுக்கொள்வதற்காகத் தம்மூடையகண்களிலொன்றைப் பாதத்திற்சாத்தினரே; அத்தக்கண்ணினது கறுப்புச்சோதிகாலைச்சுற்றிப் பரவினதுபோல நீலமணிகளாலிழைத்தச்சிலம்பைத்தரித்து சகலராலும் விரும்பத்தகுந்த அலங்காரஞ் செய்தார்கள்; இவ்வாறலங்கரிக்கப்பட்டபரமசிவனும் விட்டுணுவேயுருவமாகிய ரிஷபத்திலேறினர், அப்பொழுது, அரம்பாஸ்திரீகள் ஒன்றுசேர்ந்து மஞ்சளாலத்தி யெடுத்தார்கள். எ-று. (அ0)

குலவுமா லணுகிப் போற்றக்
குமுதவாய் மலர்ந்தான் கஞ்ச
மலரினன் வணங்கச் சற்றே
மணிமுடி யசைத்தான் விண்ணோர்

தலைவனு தெதிரதின் றேத்தத்
தனிநகை புரிந்தான் றேவர்
பலரும்வந் திறைஞ்சி யேத்த
வவர்க்கெல்லாம் பார்வை யீய்ந்தான்.

(இ-ள்.) திரிமூர்த்திகளில் ஒருவராக விளங்குகின்ற விட்டுணு தேவர் சுவாமியின் முன்னேவந்து வணங்கச்செவ்வாம்பற் பூப்போலுந் திருவாய்மலர்ந்துவாருமென்றார்? தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமன்வந்து நமஸ்காரிக்கச் சற்றே இரத்தினசிரீடமிழைத்ததிருமுடியையசைத்தார்; தேவர்களுக்குஅரசனுகியதேவேந்திரன் எதிரில்வந்துவணங்கி அஞ்சலியஸ்தனுய்நிற்கப் புன்சிரிப்புகெகண்டார்; மற்றதேவர்களெல்லாரும் வந்துவணங்கக்கிருபைக்கண்ணினுலே பார்த்தருளினர். எ-று. (எக)

கலி விருத்தம்.

முடித்த கங்கையாற் பிறைக்கொழுந்
தெழுந்துமேன் முகைத்து
வெடித்த தாமெனத் தவளவான்
கவிகைமேல் விளங்க
வடித்த கங்கையி னருவியு
மம்புலிக் கொழுந்துந்
தொடுத்து வீழுமா றெனவிரு
கவரிக ளெங்க.

(இ-ள்.) திருமுடியிற்றரித்த கங்காசலத்தினுல் பிழையானது கொழுந்துவிட்டு அதற்குமேல்அரும்பாகிப் புட்பித்ததென்றுசொல்லும்படியாத உயர்ந்த வெள்ளை வட்டக்குடைபிடிக்கவும், அலையடிக்கிற கங்கையினருவியும்சந்திரனும்சேர்ந்து விழுந்தனபோலும்இரண்டுசாமரங்களிருபுறத்திலும் வீசவும். எ-று. (எஉ)

திருவி னுயகனடைப் பைகொண் டொருபுறஞ் சேரத்
தருவி னுயகன் களாஞ்சிகொண் டொருபுறஞ் சார
விரவி நான்முக னுலவட்டங் கொடுவீசப்
பரவி நாரதர் தும்புரு விருபுறம் பாட.

(இ-ள்.) இலக்குமிகாந்தராகிய விட்டுணு பாக்கு வெற்றிலை முதலானவை வைத்திருக்கிற அடைப்பையெடுத்துக்கொண்டொருபக்கம்வரவும், கற்பகத்தருவிற்கு நாதனுகிய தேவேந்திரன் தம்பலப்படிக்கம்எடுத்துக்கொண்டுவரவும், பிரமன் சமீபத்தில் நின்று ஆலவட்டம்வீசவும் தும்புருநாரத ரிருவரும்வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம்பாடவும். எ-று (எக)

கூற்றனனவன் கனகபா துகைகொடு குறுகக்
காற்று வேந்தனுந் திசையெலா நறும்புகைகாட்ட
வேற்றுவாகனக் கடவுளுஞ் சிறியவாளெடுப்பத்
தோற்று மாதவர் கலிமதி விளக்கொடு சூழ.

(இ-ள்.) இயமன் தங்கத்தினுற்செய்திருக்கிற பாதகுறடுகளைக் கையாலெடுத்துக்கொண்டுவரவும், வாயுபகவானும் திக்குகளெட்டிலும் அகிற்புகை சாம்பிராணிப்புகைகாண்பிக்கவும், ரிஷபத்திலேறுகின்ற ஈசானமூர்த்தி உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், பிரகாசிக்கின்ற சூரியர்களேகரும் குளிர்ந்தகிரணங்களையுடைய சந்திரரேகரும் விளக்கெடுத்துக் கொண்டுவரவும். எ-று. (எச)

சுரமடந்தையர் துகிலின்மஞ் சிகைபல சுமப்ப
வரவமங்கையர் நவமணிப் பணிசுமந் தணுகப்
பரவுகின்னரர் முதலினோர் வீணையார்ப் பரிக்கப்
பொருவி லண்மறை நடந்திறைதலைமையைப் புகழ.

(இ-ள்.) தேவகன்னியர் அநேகர்வஸ்திரம் வைத்திருக்கிற பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வரவும், நாகலோகப் பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச்சுமந்துகொண்டுவரவும், கூட்டமாகிய கின்னரர்கிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும் நிகரில்லாத நான்குவேதங்களுஞ்சமீபித்துச்சுவாமியெல்லாருக்கும்பெரியவரென்று புகழ்ந்து முறையிடவும். எ-று. (எடு)

கிரக மேழு * மென் வசுக்களு முனிவருங் கிளர
வுரகர் விஞ்சைய ரிமையவர் மகிழ்ந்துகண் டுருக
விருக ரங்களா லுருத்திரர் மலர்மழை யிறைப்பத்
திருவும் வெண்கலே மடந்தையு மிமசலங் தெளிப்ப.

(இ-ள்.) சந்திரர் சூரியர் இருவருந்தவிர, மற்றையேழுகிரகங்களும், அஷ்டவசுக்களும், முனீசுரர்களுங்களிகூர்ந்துவர; நாகலோகத்தார், வித்தியாதார்கள், தேவர்கள், பார்த்துச் சந்தோஷத்தை யடைந்து உருக; ஏகாதசருத்திரர்களும்இரண்டுகைகளாலும் புட்பங்களே மழைபெய்வதுபோல் இறைப்ப இலக்குமி சரஸ்வதியும் பனிநீர்தெளிக்கவும். எ-று. (எசு)

திக்குப் பாலகர் தெரிவையர் திசைதொறுந் திகழ
மிக்க ○ மாதர்க ளெழுவருஞ் சோபனம் விளம்ப
விக்குநேர் மொழி நீர்ம மகளிர் வாழ்த் தெடுப்பத்
தக்க விஞ்சையர் மகளிர்பல் லாண்டிசை தழங்க.

(இ ள்.) அஷ்டதிக்குப்பாலகருடையதேவிகள்அவரவர்திசைகளினின்று சேவிக்கவும்,கற்பிற்சிறந்தசதிமாதர்கள் சோபனம்பாடவும்; கருப்பஞ்சாறுபோல் மாதுரியம் பொருந்திய வார்த்தைகளையுடைய நீரமகளிர் வாழ்த்துச்சொல்லவும், தகுந்த வித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறும் ஓசையானது முழங்கவும். எ-று. (எஎ)

கண்டை பேரிகை குடமுழா முழவு காகளந்த
வண்டை மல்லரி சல்லரி வலம்புரி யொலிப்ப
வண்ட கோளகை மடந்தையர் கிலம்பொலி யதிர்ப்ப
வெண்டிசா முகந் தனிலுமெண் பிரம்பொலி யிசைப்ப.

(இ-ள்.) பெரியமணியிலேசையும்,பேரிகையும்கு—வாத்தியமும்மத்தளவாத்தியமும்காகளமும்தவண்டையும் மல்லரியும் சல்லரியும்

* வசுக்களாவார்-தரன், துருவன், சோமன், ஆபச்சைவன், அனலன், அணிலன், பிரத்தியூசன், பிரபாசன்.

○ மாதர்களெழுவர்-பிரமாணி.உருத்திராணி, நாராயணி, வராகி, கௌமாரி, காளி, இந்திராணி யென்னு மிவர்களாம்.

சங்கங்களும்ஆகிய இவைகள்கோஷ்டிக்கவும், கோளாகாரமாயுள்ள வீண்ணூட்டிலவிக்கும் தேவப்பெண்கள்காலின்விலம்புகலீரென்று சப்திக்கவும் எட்டுத்திக்கிலும் சுத்திதேவர்வருகிற கூட்டங்களைவில க்கஅடிக்கிற பிரம்பினது சப்தம் பிரகாசிக்கவும். எ-று. (எஅ)

எண்ணும் வெள்ளிமால் வரையடி யிறங்கிய திடப
மண்ணல் சேணியின் கொழுந்திம கிரித்தல் மடைந்த
விண்ணு மண்ணுமெள்ளிடமற நெருங்கிய விமானம்
மண்ணுமால் விடைநெறிகடந் தடைந்தது பதியே.

(இ-ள்.) யாவராலுஸ்தோத்திரஞ்செய்யப்பட்டகைலாயகிரியின டிவாரத்தில்ருஷபவாகனமிறங்கியது; சுவாமியினுடையசேனையின் முன்னணிஇமையபர்வதத்தையடைந்தது; ஆகாயமும் பூமியுமாகிய வெவ்விடங்களிலும் எள்ளிருக்க இடமில்லாமல் விமானங்கள் நெருங்கின; அலங்கரித்திருக்கின்றவிட்டுணுவாகியருஷபம் சுவாமியைத் தூக்கிக்கொண்டு வழிமுழுதுங்கடந்து இமயபர்வதராஜன்பட்டண த்தில் வந்துசேர்ந்தது. எ-று. (எக)

இமகிரிப் பதியடைந்தது மிமகிரி மடவார்
நிமலனர் திருவழகெலாம் விழிகளா னிரைத்தா
ருமை தவத்தினுக் கழிவிலை யெனப்புகழ்ந் துரைத்தா
ரமர்செய்காமனை யழித்தகண் ணெதுவென வறைந்தார்.

(இ-ள்.) அப்படியேசிவன் இமயபருவதத்தில்எழுந்தருளினமா த்திரத்தில், அந்தமலையிலிருக்கின்றபெண்கள் பரிசுத்தராகியசுவாமி யின்அழகைப்பார்த்துப் பார்வதிசெய்ததவத்துக்கு ஒருகுறைவுமில் லாமல்பலன் சித்தியாயிற்று என்றார்கள்; அவர்களில்சிலர்யுத்தத் துக்குவந்தமன்மதனை எரித்தகண்ணதுவோ அந்தக்குரூரமானகண்ணை ப்பார்ப்போ மென்பார்கள். எ-று. (அ0)

ஆகமார னிங்கிருக்கவு முலகெலா மயர்ந்த
யோகமீ திவரிருக்கை யான்மத னுடலொழித்துப்

போகமீதிவர் விருப்புற வுயிர்க்கவை புணர்ந்த
மோகமாக்கிடு முதலிவ ரெனச்சிலர் மொழிந்தார்.

(இ-ள்.) மன்மதன்தேகத்தையுடையவனுயிருந்தபோதும்இவர் யோகத்திலிருந்ததனுல் உலகத்திலுள்ளசராசரங்களெல்லாம்விகார மில்லாமல்அயர்ந்துகிடந்தன; மன்மதன்தேகம்போயும், இவருக்கு போகத்தில் விருப்பம் உண்டானபடியினுல் சகலருக்கும் போகத்தி லாசையுண்டாயிற்று ஆனபடியினுல் மோகத்தையுண்டாக்குகிறவர் இந்தச்சிவனேயன்றி வேறொருவருமில்லையென்று ஸ்திரீசனங்களி ல்சிலர் சொன்னுர்கள். எ-று. (அக)

மாயவிற் கைவே ளழகிவ ரெழின்முகு வடிவி
லாயிரத்தி லொன் றிலையெனத் தணமதித் தவணைத்
தீயிடத் துடல் கொளுத்திய தவத்தினற் றிரனே
யாயு முத்தம ராழிப்பரோ வெனச்சில றறைந்தார்.

(இ-ன்.) சகலரையும்மயக்குகின்றகருப்புவில்லுக்கையிற்றரித் திருக்கின்ற மன்மதனுடைய வழகு இந்தச்சுவாமியினுடைய வடிவ மாகியஅழகில்ஆயிரத்திலொருபங்குகாணுது; அதனுலேஅவனேஇக ழ்ந்துதன்னேமதித்துத்தீயினுல் அவனேக்கொளுத்திப்போட்டது; த போமகிமையினுலேயேஆராய்ந்தெடுக்கத்தகுந்த உத்தமர்கள்ஆனுல் அப்படிச்செய்வார்களோவென்றுசிலமாதர்கள்சொன்னுர்கள். எ-று.

மாதலன் பெருங் கிளைஞரு மருமகனுர் திரளுங்
காதலன்பினு லெதிரெதிர் தழுவினர்க லந்தா
ராதி யந்தமு மதனிலை யளவிட லறியோன்
வேதியன் கரம்பிடித்தினி திழிந்தனன் விடைமுன்.

(இ-ள்.) மாமனுகியமலையரசன் சுற்றத்தார்முதலியதிரண்டசே னைகளும், மருமகனுகிய பரமசிவத்தினுடைய சேனைசமமுமிருந்த ஆசையோடுங்கூடினவர்களாய் எதிரெதிராகவந்துஒருவருக்கொரு

ராகத்தழுவிக்கொண்டார்கள்; முதலுமீறுமில்லாதஅளவிடப்படாத சிவபிரான்பிரமன் கையைப்பிடித்துக்கொண்டு ருஷபவாகனத்தில் நின்று இறங்கினர். எ-று. (அஉ)

இலகுமங்கைய ரனேகர்நீ ராஞ்சன மெடுப்ப
வுலகபாலக ரிருமருங் கினுநடந் தொதுங்கத்
திலகமாதவ னிருகைமே லொருகரஞ் சேர்த்திட்
டலதிலாமணி யிழைத்ததோர் மண்டபத் தணைந்தார்.

(இ-ள்.) இப்படிச்சுவாமி இடபவாகனம் விட்டு இறங்கினவுட னே அழகுள்ள அனேகம்மங்கைப்பருவப்பெண்கள் ஆலாத்திஎடுக்கு வும், திக்குப்பாலகரெண்மரும்சுவாமியினிருபுறத்திலும்நடந்தொது ங்கிவரவும்தேவரனேவர்க்கும் எல்லாருக்குந்திலதமாகியவிட்டுணுவி னுடைய இரண்டுகைமேலும்தம்முடையஒருகையைச்சேர்த்துகண க்கில்லாதரத்தினங்களால் இழைக்கப்பட்டிருக்கின்றமண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள். எ-று. (அசு)

அரியமண்டபத் தமைந்தபீ டிகையின்மீ தடைந்தார்
வரையி டைப்பிறந் தமைவளர் முலைசொல வருவார்
குருமலர்க் கையிலேந்தி வந்தருள் குடியிருக்குந்
திருமுகத்தியை யிறையவன் வலப்புறஞ் சேர்த்தார்.

(இ-ள்.) சிவபெருமான் அருமையாகியஅந்தமண்டபத்தில் இட் டிருந்ததிவ்யாசனத்திலெழுந்தருளினார்; ஸ்தனங்கள்மலைபோலிருப் பதனால், அந்தத்தனங்களே இவர்கள்மலையிற்பிறந்தார்களென்றுகா ண்பிக்கும்படியாகவருகிறமாதர்கள் தங்களுடைய நிறம்பொருந்திய புட்பம்போலும்கைகளிலேந்திக்கொண்டுவந்து கிருபையேகுடியாக விருக்கின்றஅழகியமுகத்தையுடையபார்வதியைச சிவனுடையவல ப்புறத்தில் உட்காரவைத்தாகள். எ-று. (அடு)

மூன்னியாரணன் வதுவையின் சடங்கெலா முடித்து
வன்னிவேற்பொரி யிறைத்துநெய் சொரியமந் திரத்தா

லென்னாளுடை யிறைவனு மேழுல கின்ற
கன்னிசெங் கரம்பிடித்து மூவலஞ் செய்தான் கனலே.

(இ-ள்.) இந்தப்பிரகாரம்சுவாமியும் அம்மனும் கலியாண மண்டபத்திலெழுந்தருளியிருக்க, அந்தவேளையில்பழமையாகிய வேதங்களைவெளியிட்டபிரமதேவர் கலியாணச்சடங்கை விதிப்படிமுடிக்க என்னையாட்கொண்டபரமசிவன் அக்கினியிற்பொரிசொரிந்துமந்திரவிதிப்படிநெய்யாகுதிசெய்து, முன்னமே எழுலகத்தையும்பெற்ற கன்னிகையாகியபார்வதியின்செவ்விய திருக்கரங்களைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம் வலமாகச் சுற்றிவந்தார். எ-று. (அசு)

ஒற்றை வாள்வளை யொளித்தது சுருதியு மொலித்த
சுற்றும் வானவ ரிருடியர் மலர்மழை சொரிந்தார்
பற்றி யாசனத் திருந்தன னனைவரும் பணிந்தார்
பெற்ற தாதையோ டன்னையைப்பணிந்தனள் பெதும்பை.

(இ-ள்.) வெண்மைபொருந்திய ஒப்பற்றசங்கமுழங்கவும் நான்குவேதங்களும் சப்திக்கவும்,நான்குபுறமும் சுற்றிக்கொண்டதேவர்களும் ரிஷிகளும்புஷ்பமாரியைப்பொழியவும், சுவாமிஓர்ஆசனத்தில் எழுந்தருளினார்; அப்போது, சமஸ்தமானதேவர்களும் வந்தனஞ் செய்தார்கள்பெதுமைப்பருவமுடையபார்வதிதேவியார்தமதுதாயையுந் தகப்பனையும் வணங்கினார். எ-று (அஎ)

எரித்த காமனைத் தருதியென் றிமையவ ரயன்மா
லொருத்த ரன்றியே யிறையவன் மகிழ்ச்சிகண் டுரைத்தார்
மரித்தகாமனை யழைத்தருள் புரிந்தனன் வள்ளல்
பொருத்தவன்பினி லனைவரும் விடைகொடு பெயர்ந்தார்.

(இ-ள்.) தேவர்களும்,பிரமனும், விட்ணுவும்மற்றயாவரும் எமதுகடவுளாகியபரமேஸ்வரன் எல்லாரிடத்திலும்வைத்தபிரியத்தை பார்த்துச் சுவாமி! தேவரீர் முன்னே எரித்த மன்மதனை எழுப்பித்

தடல்வேண்டுமென்றுகேட்டார்கள்; அப்படியே இறந்துபோனமன் மதனைவரவழைத்துக்கொடுத்துக்கிருபைசெய்தார்பரமசிவன்; பின் புயாவரும் விடைபெற்றுக்கொண்டு போனார்கள். எ-று. (அஅ)

அதற்பி ணண்ணலுங் கவரியு முருகி யொன்றுகி
மத்தத வானையைக் குமரனைப் பயந்தனர் மகிழ்வாய்
விதிர்த்த வேலினைக் குமரனுக் களித்திறை விடுத்தான்
கொதிர்த்த தாரக னுயிர்குடித் துவந்தனன் குமரன்.

(இ-ள்.) அப்படியே திருக்கலியாணம் நடந்தபின்பு சுவாமியும் அம்மையும்மிருந்த அன்புகொண்டொருருவமாகிச்சேர்ந்து மகிழ்ச்சி யுடன்வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுவர ரையும், சிவசுப்பிரமணியரையும் பெற்றார்கள்; அதன்பின்பு,சுவாமி சிவசுப்பிரமணியருக்கு அஞ்சுத்தக்க வேலாயுதத்தை அருளிச்செ ய்தனுப்புவிக்க, அவர்போய் அந்தத் தாரகாசுரனை வேலாயுதத்தை விட்டெறிந்துகொன்று சந்தோஷத்தை யடைந்தார். எ-று. (அக)

மயிலெ னத்திகழ் மலைமகள் பொருகரி வதன
னயிலெடுத்த செங் கரனுட னிமயவெற் பகன்று
கயிலைவெற்பிலவந் திமையவர் முனிவர்கண் களிக்க
வெயிலுடைப் புரமெரித்தவ னிருந்தன னப்பால்.

(இ-ள்.) மயில்போலவிளங்குகின்றபருவதராசன்மகளாகியபா ர்வதி பேரார்த்தொழிலில்வல்ல யானைமுகத்தையுடைய பிள்ளையார் வேலாயுதத்தைத்தரித்த சிவசுப்பிரமணியர்ஆகியவிவர்களுடன் இம யகிரியைவிட்டு நீங்கித்தேவர்கள் முனிவர்களுடைய கண்களிகூரக் கைலாசத்தில் எழுந்தருளியிருந்தார் மூப்புரத்தை யெரித்தவராகிய பரமசிவன் அதன்பின்பு. எ-று. (கூ0)

மூன்றுவது
திருவவதாரச்சருக்கம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-உஙகூ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்புதைத்த சருக்கவசனம்.

அப்படியிருக்கும்போது ஒருநாளையதினம்சுவாமியானவர்சூரி யசந்திரர்கள் நமது கண்களென்று சொல்லப் பார்வதியார் வேடிக் கையாக அவரது கண்களைத் தன் இரண்டுகைகளாலும் மூடினவுட ன்உலகங்களெல்லாம்இருண் டெல்லாப்பொருள்களுங் கறுத்துமய ங்குகின்றகாலத்தில்,மும்மூர்த்திகள்முதலானவர்கள்வந்துசுவாமியி னிடத்தில்முறையிட்டார்கள். அப்பொழுது பரமசிவன்தன்நெற்றி க்கண்ணைத்திறக்க உலகங்களிற்பரவிய இருள்நீங்கி எங்கும்பிரகாச ம்உண்டாச்சுது பார்வதியார் தன்கைகளைவாங்கிக் கண்களைமூடிய பாவம் போகும்படிபூலோகத்தில் தொண்டைமண்டலத்திலிருக்கு ம் காஞ்சீபுரத்திற்குவந்து கம்பைநதியருகில்மணலுக்குவித்துலிங்க ரூபமாக்கிப்பூஜைசெய்யும்போதுசுவாமியின்கிருபையால்கம்பாநதி பெருகிவர, இலிங்கத்திற்கு அபாயம்வராதிருக்க அதைத்தன் இர ண்டு கைகளாலும்மார்பிலே இறுகத்தழுவிக்கொண்டாள் அப்பொ ழுது பரமசிவன் ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளியபோதுஅம் மன்வணங்கி உமது இடப்பாகங் கொடுக்கவேண்டுமென்றுகேட்டுக் கொள்ள, நீ திருவண்ணாமலைக்குவந்தால் அப்படியே கொடுப்போ மென்றுசொல்லிக்கயிலாயத்திற்குப்போய்விட்டார். பின்புஅம்மன் திருவண்ணாமலைக்குவந்து அங்கே கௌதமருடைய ஆச்சிரமத்தில் இறங்கி ஊசியில்ஒருகாற்பெருவிரலை ஊன்றிக்கொண்டுஅருமையா னதபசுசெய்யும்போது, விஷ்ணுமுதலான தேவர்கள்தவச்சாலைக்கு வந்து அம்மனைவணங்கி மகிடாசுரனுலே தாங்கள்படுகிற துன்பத் தைச் சொல்லிக்கொண்டதின்பேரில் பார்வதியார்அவர்களைப்பார் த்து தேவிர்காள்! அஞ்சேல் என்றுசொல்லி தன்னிடத்திலிருக்கிற துர்க்கையைஅழைத்து அவனைக்கொன்றுவருதியென்றுபணித்தார்.

திருக்கண்புதைத்த சருக்க வசனம்.

முற்றிற்று.



ஓ

சிவமயம்.

நான்காவது பார்வதியார்

திருக்கண்புதைத்த சருக்கம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

மின்னனைய பூகிறவழூ மிமகிரியின்
றவபலத் தான் மேனை யான
வன்னையிடத் தென்னன்னை யவதரித்த
கதைசிறிதே யறைந்தே னிப்பால்
பொன்னனைய சடையிறைவன் றிருநயன
மிருகரத்தாற் புதைத்த வாறுந்
தென்னருணை மாநகரி லன்னைவினை
தீர்த்ததுவுஞ் செப்ப லுற்றேன்.

(இ-ள்.) மின்னல்கள் பொருந்திய மேகங்கள் தவழ்ந்துபோகின்ற இமயபருவதத்தின் தபோபலத்தால் மேனாதேவியிடமாகஎன் தாயாகிய பார்வதி அவதரித்த கதையிலே சிறிதுபாகஞ் சொன்னேன். பிறகு அப்பார்வதிபொன்போலுஞ்சடையையுடையசிவனது அழகிய கண்களை இரண்டுகைகளினாற் பொத்தியதும்; அந்தால்



6. ஓர் சமயம் வேடிக்கை யார்த்தமாய் பார்வதியார் சுவாமியின் கண்களை மூட அதனால் ரோஷமடையப் பெற்றது.

ஷ தோஷம்நீங்க பார்வதியார் காஞ்சீ நகரிலே கம்பாநதியில் மணலால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்தது.

வரும்வினையைத தெற்கின்கண்ணிருக்கின்ற அருணசலத்தில் அம்மைபூசைசெய்துதீர்த்துகொண்டதுவும்சொல்லத்தொடங்கினேன்

வேறு.

ஊடுவர் புலவி தீர்ப்ப ரொருவருக் கொருவர் மாலை
சூடுவர் மறைநூல் கேட்பர் சொல்லுவர் வீணை நாதம்
பாடுவர் பலவி னோதம் பயிற்றுவர் பலகாற் சூத
மாடுவர் வெல்வர் தோற்ப ரணிகலம்புனைய வன்பால்.

(இ-ள்.) சிவபிரானும் பார்வதியும் பிணங்கிக்கொள்வார்கள்;அதைமறுபடியும் தீர்த்துக்கொள்வார்கள்; ஒருவர்க்கொருவர் மாலைகளுடிக்கொண்டு வேதசாஸ்திரங்களைத் தேவர்கள் முனிவர்கள் சொல்லக்கேட்டும், அதன்பொருளைச்சிலருக்குச்சொல்லியும்வீணை முதலியவற்றைவாசித்தும், மற்றும் பலவிளையாட்டுகள் செய்தும், பலதரம் சூதாடியும், அஃதால்வெற்றியையும் தோற்பையுமடைந்து மிகவும் பிரியத்துடன் அழகிய ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு மிருந்தார்கள். எ-று. (உ)

அந்தமே லாயிலென் னன்னை யையனை பிறைஞ்சி யையா
விந்துவு மிரவி தானும் யாவரென் றிசைத்தா ளெந்தை
சுந்தரக் கனிவாய் மின்னே சுடர்களெம் மிருகணென்றூர்
கந்தனைப் பயந்தாளீசன் விழிகளைப் புதைத்தாள்கையால்.

(இ-ள்.) அச்சமயத்தில் என்தாயாகியபார்வதி சுவாமியைவணங்கி ஐயா! சந்திரரும், சூரியரும் யாவரென்று கேட்க, சுவாமி அழகாகிய கனிபோலும் வாயையுடைய பெண்ணே? அந்த இருசுடர்களும் நம்முடைய கண்களென்றுசொன்னர் சிவசுப்பிரமணியரைப் பெற்ற தாயானவள்கேட்டு வேடிக்கையாய்ச்சுவாமியினுடையகண்களை இரண்டுகைகளால் மூடினள். எ-று. (ஊ)

கலி நிலைத்துறை.

சசனர்விழி புதைத்தலு மிருட்பிழம் புருக்கிப்
பூசினலென விருண்டன திசைகளும் புவியு

மாகினீலமால் வரையெனக் கருகிய மலைகள்
காசுலாவிய நதியெலாம் யமுனைபோற் கறுத்த

(இ-ள்.) பரமசிவத்தின் திருக்கண்களைப்பார்வதிமூடிய மாத்திரத்தில் இருட்கூட்டத்தையுருச்செய்து பூசினதுபோல் திக்குகளும்பூமியுமிருண்டன; மலைகளெல்லாங்குற்றமற்ற நீலகிரியைப்போல் கறுத்தன; முத்துகள்பொருந்திய நதிகளெல்லாம் யமுனைநதிபோல் கறுத்தன. எ-று. (ச)

அருணசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மறையவனு நாரணனு முனிவர்களும்
வசுக்களுநான் மறையும் வானே
றிறையவனும் விழியொளிபோய்ப் பிறவிநெடுங்
குருடென வீழ்ந்தார் மற்றைக்
கறவைநிரை முதல்விலங்கு பறவைகளு
மொளியிழந்த கண்ண தான
துறவமும் பிறவறமுந் தொலைந்தனமற்
றுளதொழிலுந் தொலைந்த தன்றே.

(இ-ள்.) நான்குவேதங்களில் வல்லபிரமனும், விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும், நான்குவேதங்களும், தேவர்கோனாகிய தேவேந்திரனும் கண்களினதுபிரகாசமற்றுப் பிறவிக்குருடர்போலிருந்தார்கள், பசு காளை முதலியமிருகங்களும் பக்ஷிகளும்கண்ணொளியற்றன, தூறவறமில்லற மிரண்டும் ஒழிந்தன, மற்றஎல்லாத்தொழில்களும் கெட்டன. எ று. (ஞ)

கலி நிலைத்துறை.

தேவர் மானிட ரரக்கதர் நிறமெனத் திரிந்தார்
கோவி லிந்திரன் வெண்கரி கருநிறங் கொண்ட
தாவி லம்பயன் கொடிகொடி யானதவ் வளவின்
மூவர் தேவனுக் கிணைவரு முறைசொலிப் புகன்றார்

(இ-ள்.) தேவர்களும், மனிதர்களும், இராக்ஷதர் நிறம்போலக் கறுத்தார்கள், ஆகாயத்தில் இந்திரன் வாகனமாகியவெள்ளையானை

சரிபோலக் கறுத்தது, கெடுதலில்லாதபத்மபீடஞ்சிய பிரமன் கொடியாகிய அன்னம் காகம்போல் கருகியது, அப்படிஎல்லாப்பொருளுங்கறுத்து மயங்குகின்ற காலத்தில் மும்மூர்த்திகட்கு முதல்வனான சிவனிடத்தில் எல்லோரும்போய்முறையிட்டுத்தங்கள்குறையைச்சொல்லிக்கொண்டார்கள். எ-று. (சு)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அஞ்சலென வமைத்தகரத் திறைவனுதல்
விழிதிறந்தா னவனி யேழுந்
துஞ்சுமிரு ளகன்றதுபன் னிருகோடி
சூரியர்தந் தோற்றம் போல
வஞ்சியுமை யிறைவன்விழி புதைத்ததிருக்
கரமலரை வாங்கி நின்றாள்
விஞ்சுமறை யவர்வளர்க்குங் கனல்போல
விழிமூன்றும் விளங்கிற் றன்றே.

(இ-ள்.) சிவபிரான் பயம்வேண்டாமென்றுகையமைத்துப்பன்னிரண்டுகோடிசூரியர் ஏககாலத்தில் உதையமானாற்போலத் தம்முடையநெற்றிக்கண்ணைத்திறக்க, ஏழுலகமும் அஞ்சத்தக்க அந்தகாரத்தைநீங்கியது; வஞ்சிக்கொடிபோன்ற இடையினையுடைய பார்வதியானவள் பரமசிவத்தின் விழிகளைப்பொத்திய அழகியதாமரைமலர்போன்ற கையைவாங்கி நின்றாள்; பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல் மூன்றுகண்களும் விளங்கின. எ-று. (எ)

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பா
ணெடுஞ்சூலப் படையாய் காலன்
மார்புதைத்த மலர்ப்பதத்தா யார்புதைத்த
சடாடவியாய் வைய மேழுங்
கார்புதைத்த விருளாக விழிபுதைத்த
கொடும்பாவங் கழலு மாறு
நீர்புதைத்த பாரிடத்திற் றவம்புரிதற்
கானவிட நிகழ்த்து மென்றாள்.

(இ-ள்.) உலகத்திலுள்ள எல்லாச்சீவராசிகளேயும் கருவாகவைத்துக்கொண்டவயிற்றையுடையபார்வதி சுவாமியைப்பார்த்துவணங்கிச்சொல்லுவாள் நெடியசூலாயுதத்தையுடையவரே! எமனே மார்பிலே யுதைத்த மலர்போன்றபாதங்களேயுடையவரே! ஆத்திமாலையையணிந்த சடைக்காட்டினே யுடையவரே! ஏழுலகமும்மேகநிறத்திலும் அதிகநிறமான இருளுண்டாக உமது திருக்கண்களே மூடிய கொடியபாவம்நீங்கும்படிச்சமுத்திரஞ்சூழ்ந்தபூமியினிடத்தில்தவஞ் செய்ததற்கு நல்ல இடமுஞ்சொல்லுமென்று கேட்டாள். எ-று.(அ)

ஈசனுமங் குரைத்தருள்வா னுணர்வினவ் வினவந்
தணுகாதே யெனினும் யார்க்கு
மாசகலும் படிக்கரிய தவம்புரிய
விரும்பினேயென் மதுரை மாயை
காசியவந் திகைதுவரை யயோத்தியினுஞ்
சிறப்புடைய காஞ்சி மேவிப்
பூசைபுரிந் தரியதவம் புரியென்றான்
விடைகொண்டாள் புகழ்ந்து போற்றி.

(இ-ள்.) அப்படிப்பார்வதிகேட்கச் சுவாமியானவர் பெண்ணே உன்னைப்பாவம்வந்து சேராதாயினும், மற்றவர்களுக்குப்பாவம் நீங்கும்பொருட்டுத் தவஞ்செய்ய இச்சித்தாயாலுல் மதுராபுரி, மாயாபுரி, காசி, அவந்தி, துவாராகாபுரி, அயோத்திஆகிய இவைகளிற்சிறந்தகாஞ்சீபுரத்திற்போய்ப்பூசையுடன் அரியதவஞ்செய்யென்றுசொல்லக்கேட்டு பார்வதியானவள் சுவாமியைவணங்கி விடைபெற்றுக் கொண்டாள். எ-று. (கூ)

விசையமகள் குடையெடுப்பச் சயமகள்பொன்
னடைப்பைகொடு விரைந்து மேவ
வசையுமணிக் கவரியிரண் டருந்தியுங்
கமலினியு மடித்து வீசத்
திசையிலிள நிலவெறிக்குந் தாளமணிச்
சிவிகையின்மேற் சென்ற போது

நசைபெருகு மறம்பெருகப் புனல்பெருகும்
புகழ்க்கங்கா நதியைச் சேர்ந்தாள்.

(இ-ள்.) பார்வதியம்மைக்கு வீரலட்சுமிருடைபிடிக்க, ஜயலட்சுமியானவள் பொன்னடப்பைதாங்கிச் சீக்கிரததில்வர, இரத்தினங்களிழைத்தசாமரைகளால் அருந்ததியும் இலட்சுமியும்இரண்டுபெக்கங்களில் நின்று காற்றுகளேவீச, நாலுதிக்குஞ் சந்திரனேப்போலப் பிரகாசம்வீசும் முத்துப்பல்லக்கிலேறிக்கொண்டுபோய் யாவரும்விரும்புகின்றதருமம்பெருகசசலம்பெருகுகின்றகீர்த்தியினையுடையகங்காதீர்த்தத்தில் வந்துசேர்ந்தாள். எ-று. (கo)

இறந்தவுயி ரினிமீளப் பிறவாம
லிறவாம லிறைவ னுந்தஞ்
சிறந்ததிரு வுருவாகுந் திருக்காசித்
தலமடைந்து சிவன்றாள் போற்றி
வறந்தமழைக் குருகுமந்தத் தலத்தவர்கள்
பிழைக்களறம் வளர்த்துப் பன்னாள்
நறுந்தொடையி னரசன்விடை கொண்டுநிற்பத்
தொண்டைவள நாட்டைச் சேர்ந்தாள்.

(இ-ள்.) இறந்துபோனஉயிர் இனிதிரும்பிப்பிறக்காமலுமிறக்காமலும் பரமசிவத்தினுடைய திவ்விய சொரூபமாய்விளங்கும் மேன்மையமைந்த காசிப்பதியைசேர்ந்து விசுவேசருடையபாதம்போற்றி மழையில்லாமல் வருந்துகின்ற அச்சலத்திலுள்ள சீவராசிகள் பிழைக்கும்பொருட்டுஅவ்விடத்தில்தருமத்தைப்பலநாள்வளர்த்துத் தேன்தங்கியமலர்மாலையைத்தரித்த அத்தேசத்தரசன்விடைபெற்றுநிற்கத்தொண்டமண்டலத்தைச்சேர்ந்தனர் பார்வதிதேவியார். (

மழைதவழுந் தலைப்பலவின் பழமதுவாய்
விரிந்தாலு மகா வாழைப்
பழமதுவாய் விரிந்தாலும் புதுமதுவாய்
விரிந்தொழுகும் பழன நீங்கக்

குழையளவு நடமாடும் விழிமாதர்
நடமாடுங் குறிப்பு நோக்கிப்
பொழிலதனின் மடமயில்க ணடமாடுந்
திருக்காஞ்சிப் புரத்தைச் சேர்ந்தாள்.

(இ-ள்) மேகங்கள்தவழ்கின்ற தலையையுடைய பலாமரத்தின துபழங்கள் வாய்விண்டாலும், மகரவாழைப் பழங்களானவை வாய் விரிந்து அழிந்தாலும், புதியதேன்பெருக்கெடுத்து வாய்க்கால்வழி யாக ஓடிவிழுகின்ற கழனிகளைக்கடந்து குண்டலம்வரைக்குந்தாவு கின்ற கண்களையுடைய பெண்கள் நாட்டியஞ் செய்கின்ற குறிப் பைப்பார்த்துச் சோலைகளி லிளமையாகிய மயில்கள் நடனஞ்செய் கின்ற காஞ்சீபுரத்தைச் சேர்ந்தனர் பார்வதிதேவியார். எ-று. (கஉ)

தாவரத்தை யறிவாக்கி மனிதரையுள்
ளறிவழிக்குத் தடங்கண் மாதர்
நூபுரத்தம் புயசரணஞ் சிவப்பேற
விழைமருங்கு ளுடங்க வேறு
மாபுரத்தின் மணிமேமட யரம்பையார்க்கு
வீளையாட மலைக ளாகுங்
கோபுரத்தி னெடுங்கொடிகள் காமவல்லி
யெனுங்கொடிக்குக் கொழுக்கொம் பாகும்.

(இ-ள்.) அறிவற்ற ஜடபதார்த்தங்களாகிய கற்களையும் மரங்க ளையும் சிவபதார்த்தம்போல் உருகச்செய்து மனிதர்களுடையஉள்ள றிவைக்கெடுக்கிற விசாலமாகிய கண்களையுடைய பெண்கள் சிலம் பணிந்த தாமரைமலர்போலும் பாதஞ்சிவக்க, நூல்போலும் இடை வளையவறுகின்ற அப்பட்டணத்திலிருக்கும் இரத்தினமிழைத்த உப் பரிகைகள் அரம்பைமுதலாகிய தெய்வப்பெண்கள் விளையாடுதற்கு மலைகளாகவிருக்கும், சிவாலயத்தின் கோபுரத்திற் கட்டியிருக்கிற

கொடிகள்கற்பகவிருட்சத்திற் படர்ந்த காமவல்லியென்னுங்கொடி க்குப் படருகிறதற்குக் கொழுக்கொம்பாயிருக்கும். எ-று. (கங)

பரதநா டகமாடு மயில்போலுங்
கயிற்றுவழிப் பாவை போலுஞ்
சுரதநா டகமாடுந் துடி யிடையார்
கணவருடன் றுவளும்போது
மரகதா திகளுறுத்த விழுத்துமணி
மேடையினும் வாரி வீச
வரதநா கரமான தன்றுமுத
லின்றளவு மாழி தானே.

(இ-ள்.) பரதநாட்டிய மாடுகின்ற மயிலுக்குச் சமானமாகவும், கயிற்றுவழியாகஆடுகின்றநிங்காரம்பொருந்திய பிரதமைபோலவும், சுரதவீளையாட்டைச்செய்கிற உடுக்கைபோன்றஇடையினையுடைய பெண்கள் புருடர்களோடு பயித்துப் புரளும்போது, மரகதமுதலிய இரத்தினபரணங்களுறுத்தக்கோபித்து அவ்வுப்பரிகையில்நின்றும் எடுத்து வீசியெறிய, அவ்வாபரணங்கள்சமுத்திரத்திலேவிழுந்ததனு லேதான் அன்றுமுத லின்றளவும் அது இரத்தினாகரமெனப்பெயர் பெற்றது. எ-று. (கச)

அனையமருங் ககன்றுவஞ்சி யொருமாவின்
கீழிருக்கு மரனைப் போற்றிக்
கனலனைய வினைகளையு நடுங்குவிக்க
நடந்திருக் கம்பை மேவிப்
புனையமணற் குவித்திலிங்க வடிவாக்கி
யுமைபூசை புரிந்தா ளப்போ
தெனையுடையா னவடவத்தி னுறுதிநினைந்
தரியகங்கை யேவி னானே.

(இ-ள்.) வஞ்சிக்கொடிபோன்ற இடையையுடைய பார்வதியானவள் அத்தன்மையுடைய வீதியைக் கடந்து ஒப்பற்ற மாவிருட்சத்தின்கீழ்எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரைவணங்கி, தெருப்பையொத்த தீவினைப்பயன்களெல்லாம் நடுங்கிஓடிப்போக வருகின்ற கம்பைநதியருகேபோய்அலங்காரமாய்மணலெடுத்து சிவலிங்கரூபமாக்கிப் பார்வதி பூசைசெய்யும்போது, என்னையடிமையாகக்கொண்டபரமேஸ்வரன் அவள்தவத்தின் உறுதியை யரிதாகியகங்கையைப் பிரவாகமாக வரச்செய்தார். எ-று. (கஞ)

பூதலமே குறுமுனிவன் குண்டிகையிற்
கசிந்துவரும் பொன்னி தானே
ஆதியிலே யந்தமுனி யாசமித்தே
யுமிழ்ந்தவலி யாழி தானே
வேதமறத் தவம்புரியும் பகீரதற்காச்
சன்னுமுனி யிரக்கத் தாலே
காதின்வழி யொழுகவிடப் பரவியகங்
காநதியோ கம்பை யாறு.

(இ-ள்.) பூமியின்மேல் அகத்தியமுனிவர் கமண்டலங்கவிழ்த்த திஞற் பெருகிவருகிறகாவேரியோ! அந்தமுனியானவர் ஆதிநாளையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின்பெருக்கோ! குற்றமற்றதவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் இரக்கத்தினால் காதின் வழியாக விடப் பெருக்கெடுத்துவந்த கங்காநதியோ வென்று சந்தேகப்பட விருந்தது கம்பைநதி. எ-று. (கசு)

வேறு.

மங்கா நதியின் மணலிலிங்க
மழியா திருக்கும் வகையுமையாள்
வெங்கா தலினு லணைபவள்போல்
வெற்பா ரிமைய வெற்பாடன்

சங்கார் கரத்தா லிருதனத்தா
லிறுக விறுகத் தழுவுதலுங்
கொங்கார் களபத் திருமார்பு
முருகி யுருகிக் குழைந்தாரே.

(இ-ள்.) பார்வதி கெடாத கம்பையாறு பெருக்கெடுக்கும்போது மணலால் செய்த இலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்றுபயந்து காமங்கொண்ட ஆசையினால் அணைபவள்போல் மலைகளுக்கெல்லாம் தலைவனுகிய பார்வதராஜ குமாரியானவள்தன்னுடைய வளையணிந்த கைகளாலும் இரண்டு கொங்கைகளாலும், இறுகியிறுகத் தழுவுதலும் வாசனை பொருந்திய சந்தனத்தை யணிந்த திருமார்பு உருகிக் குழைந்தார். எ-று. (5

மனத்தா னினைந்த பெருந்துயரு
மணைக்காப் பிரிவு முடன்மீரத்
தனத்தா னெருக்கி முகமழுத்தித்
தலைநாட் போலத் தழுவுதலு
மனத்தால் விளங்கும் கம்பைநதி
யருணை சலத்தை யொருபொழுது
நினைத்தார் வினைக ளிரண்டுபோ
லிரண்டாய்ப் பகுந்து நீங்கியதே

(இ ள்.) தன்னுடைய சுவத்துக்குப் பின்னம்வராமல் நினைத்திருந்த துன்பமும், சுவாமிகூடாமற்பிரிந்ததுன்பமும்தீரும்படித்தனங்களாலே நெருக்கி முகமழுத்தி முன்னுள்போல்அணைந்தவுடனே, அன்னங்கள்சூழ்ந்த கம்பைநதியானது, அருணைசலத்தை ஒருவேளை நினைத்தவர்களுடைய நல்வினை தீவினைக ளவரை விட்டுப் பிரிந்து போனதுபோலிரண்டாகப்பிரிந்து இலிங்கத்தைச்சுற்றிப்போன து

விடுத்தனள் கரத்தைப் பாங்கர்
விளங்கிழை யவர்கள் சூழத்
தொடுத்தபூந் தொடையுஞ் சாந்து
மணிந்தவள் தொழுதா ளந்த
வடுக்கணுள் தனது கேள்வன்
மார்பினைத் தொடாது நாணித்
தடுத்திடுங் குறிகள் போல
விளங்கிய தழும்ப ரம்மா.

(இ-ள்.) பார்வதிசுவாமியைத் தழுவியகைகளைவிட்டாள், அருகில் பிரகாசிக்கின்றஆபரணத்தையுடையஅசேகம்பெண்கள் சூழக்கட்டியபுட்பமாலையுஞ்சந்தனமும்தரித்துவந்தனஞ்செய்தாள்;மாவடுப்போன்றகண்களையுடையஅந்தஅம்மைதன்னுடைய கணவனுகியசிவபெருமானுடைய மார்பை மற்றப்பெண்கள் வெட்கத்தை யடைந்து தொடாமலிருக்கும்படி தடுக்கவைத்தகுறிகள்போல்தழும்புகள் விளங்கின. எ-று. (கக)

அப்பொழு தரனு மாற
னடித்தழும் பிருக்குந் தோளு
முய்ப்பொழு திறைஞ்சுந் தேவர்
முடித்தழும் பிருக்குந் தாளு
மைப்பொலி குழலாள் கொங்கை
வளைத்தழும் பிருக்கு மார்பு
மெய்ப்பொலி நீறு மாகத்
தோன்றினர் விடையின் மீது.

(இ-ள்.) அக்காலத்தில், பரமசிவன் அரியர்த்தன பாண்டியராசன் பிரம்பால்அடித்ததழும்பிருந்ததிருத்தோள்களும்;மூன்றுகாலத்திலும்வந்துவந்துவணங்குகின்றதேவர்களுடைய கிரீடங்களின்தழு

ம்புகளிருந்ததிருவடிகளும், மேகம்போல்விளங்குங்கூந்தலையுடைய பார்வதி முலைத்தழும்பும், வளைத்தழும்பு மிருக்கின்றமார்பும்,தேகத் திற்பொலிந்ததிருநீறுமாய்ருஷபவாகனத்தில்எழுந்தருளினார்.எ-று.

அந்தரத் தமரரெல்லா மலர்மழை சொரிய வானத்
துந்துமி முழக்கத் தோடே சுருதிகண் முழங்கா நின்ற
விந்திரன் றிருமாற் றேவ ரிறைவியைத் தொழுது நின்றார்
சுந்தரக் கனிவாய் மின்னு மீசனைத் தொழுது நின்றாள்.

(இ-ள்.) ஆகாயத்தில் வசிக்கும் தேவர்க ளியாவரும் புட்பவருஷம் பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடு வேதங்கள் முழங்கா நின்றன. தேவேந்திரனும்,விட்ணுவும்,தேவர்களும்பார்வதியைத் தொழுதார்கள், அழகியகனிபோலும்வாயையுடையஅம்மையும் பரமசிவனை வணங்கிநின்றாள். எ-று. (உக)

ஒண்ணுதல் விடைமுன் சென்று
டணிந்துள முருகிப் பூசை
பண்ணுதல் புகழ்ந்த லாகிப்
பணிந்தன ளவளை நோக்கிக்
கண்ணுத லுனக்கு வேண்டும்
வரமெது கழறு கென்ற
னெண்ணுதல் பிறிதொன் றில்லை
யிடப்புறந் தருதி யென்றாள்.

(இ-ள்.) விளங்குகின்றநெற்றியையுடையஅம்மை, ருஷபாரூடராகத்தரிசனந்தந்த யெம்பெருமான்திருமுன்னர்ச்சென்றுமஸ்காரித்துமனமுருகிப் பூசைசெய்து புகழ்ந்துவணங்கினாள், சுவாமி பார்வதியைப்பார்த்து உனக்கு வேண்டியவரம்யாது? சொல்லென்றார்.

அதற்கு அம்மையும் யாதும் வேண்டிலேன், உமது இடப்பாகத்தை அருளுமென்றுகேட்டாள். எ-று (உஉ)

அத்தனு மொழிவா னென்கண்
புதைத்ததா லடைந்த தீமை
யித்தலத் தினிய பூசை
யியற்றலா லகன்ற திந்த
மெய்த்தலந் தனக்குத் தென்பா
லொருநகர் விளங்கித் தோன்று
மூத்திமா நகரந் தன்னே
நினைத்தபேர்க் களிக்கு மூதூர்.

(இ-ள்.) அதற்குப் பரமசிவன் அருளிச்செய்வார்என் கண்களே மூடியதனாலேஅடைந்தபாவம், இந்தத்தலத்தில் இனிமையானபூசை செய்தலினால் நீங்கியது; இந்தமெய்மையானஸ்தலத்துக்குத் தென் பாரிசத்தில் ஒருநகரம் பிரகாசிக்கும், அதைநினைத்தால் முத்தியுண் டாகும். எ-று. (உங)

ஆரணன் திருமாறேட வடிமுடி யொளித்து ஞானப்
பூரணவொளியாய் மேல்கீ ழுலகெலாம்பொருந்திநிற்போந்
தாரணி யவர்க்கு மற்றைச் சயிலமா யிருப்போமங்கே
வாரணி முலையாய் பாகந் தருகுவோம் வருதி யென்றார்.

(இ-ள்.) வேதங்களையருளியபிரமனும், விட்டுணுவும் தேடப்பா தமும் சிரசும் அவர்களுக்குத் தெரியாம லொளித்துப் பூரணமாகிய ஞானவொளியாய் மேல்கீ ழுலகங்களெல்லாம் ஒன்றாய் வியாபித்து நிற்போம், பூமிகளிலிருப்போர்க்குமலையுருவமாயிருப்போம், அவ்வி டத்தில் வந்தால் கச்சணிந்த தனத்தையுடையபெண்ணே? இடப்பா கத்தைத் தருவோம் வாவென்றார் பரமசிவன். எ-று. (உ.ச)

என்னலு மிறைவி சொல்வா ளினிமைசேர்கயிலே காசி
தன்னிலு மினிது காஞ்சித் தலமென வுரைத்தீ ரிந்த
நன்னிலந் தனக்குச் சோணே நகரமே யதிக மென்றீர்
பின்னையு முளதோ வந்தத் தலத்திலுக் கிணையாம் பேரூர்.

(இ-ள்.) பரமசிவன் இப்படி திருவுளம்பற்றிய அளவில், பார்வதிசொல்லுவாள், இனிமைசேர்ந்தகைலாயம், காசிஇவ்விரண்டுதலங்களிலும் இக்காஞ்சீபுரம் அதிகமென்று அருள்செய்தீர், இந்தக்ஷேத்திரத்தைப்பார்க்கிலும் அருணாசலக்ஷேத்ரம்அதிகமென்கிறீர்,அத்தலத்துக்குச் சமானமான பெருமைபொருந்தியதலம்வேறுண்டோ என்றுள் பார்வதி. எ-று. (உடு)

அவ்வுரை மறுத்தெங்கோமா னருளுவா னமக்கொப்பான
தெய்வமைந் தெழுத்து மானத் திருந்து மந்திரமு மில்லை
சைவமே யனைய தான சமயமு மருணை போல
வெவ்வினை தவிர்க்குமூரு மிலையென விளம்பிப் போனான்.

(இ-ள்.) அப்படிப்பார்வதி சொன்னவார்த்தையை எமது தலைவனுகிய பரமேஸ்வரன் மறுத்து நமக்குச் சமானமாகியதெய்வமும், பஞ்சாக்கரத்திற்கொப்பானமந்திரமும், சைவத்திற்குச்சரியானசமயமும், பொல்லாத பாவங்களைத் தீர்க்கும் அருணாசலத்திற்குச் சரியானதலமும் உலகத்திலில்லைஎன்று திருவாய்மலர்ந்தகைலாயத்திற்கெழுந்தருளினார். எ-று. (உசு)

கொம்பனாள் பொறுப்பா யீதென்
றிறைவனைக் குவித்துப் போற்றிக்
கம்பையார் நகன்று காஞ்சித்
தலத்தையுங் கடந்து வேலன்

றும்பிமா முகத்தோன் கண்ணி
வயிரவர் கணங்கள் சூழச்
செம்பொனா கவரி வீசச்
சிவிகைமேற் சிறந்து சென்றாள்.

(இ-ள்.) புஷ்பக்கொம்பையொத்த பார்வதியானவள் சுவாமி! நான்தெரியாமற்சொன்னவார்த்தையைப்பொறுத்துக் கொள்ளுமென்று இரண்டு கைகளையுங் குவித்து சிவபெருமானை வணங்கிக் கம்பையாற்றைவிட்டுக் காஞ்சீபுரத்தையுங்கடந்து சுப்பிரமணியர், யானைமுகத்தையுடையகணபதி, சப்தகன்னிகள், வயிரவர், சிவகணங்கள்தன்னைச் சூழ்ந்து வரவும் இலக்குமி கவரிவீசவும், பல்லக்கில் எழுந்தருளினாள். எ-று. (உஎ)

மண்மகன் மகிழப்பட்ட
மரங்களுந் தழைத்து வீறிக்
கண்மலர் சொரியக் கல்லு
மலைகளுங் கரைந்து சோர
வெண்மலர் மடவாள் போற்றக்
காவத மிரண்டு நீங்கி
விண்மதி முகத்தாண் மற்றோர்
வெள்ளிடை மருங்கிற் சேர்ந்தாள்.

(இ-ள்.) பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகும்படிபட்டுப்போனமரங்களும் தளிருண்டாகித்தழைத்துச்செழித்துதேனுகும் புஷ்பங்களைச்சொரியப் பாறுங்கல்லுகளும் பெரியமலைகளுங் கரைந்துருக, வெள்ளைத்தாமரைப்பூவில் வாசஞ்செய்யும் சரஸ்வதி தோத்திரஞ்செய்ய இரண்டு காததூரம்போய் ஆகாயத்திலுள்ள சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதி ஒருவெளியிடத்தி லிறங்கினாள்.

வெய்யவ னமையா ரென்று
வினவுகா ரணத்தா னீலக்
கையவன் மரக தத்திற்
கரியவன் கரமுங் காலுஞ்
செய்யவள் வருந்தி னளென்
றறிந்துயிர் சிதைப்பான் போலப்
பையமேற் கடலிற் பாய்ந்தான்
குமரவேள் பந்தர் செய்தான்.

(இ-ள்.) சூரியனனவன் தன்னையாரென்று பச்சைநிறமுள்ள பரமசிவனைக் கேட்டதனல் நீலம்போன்றகையும், மரகதம்போன்ற வடிவமும், செந்தாமரைப்பூப்போன்றஉள்ளங்கையும்உள்ளங்காலும் பொருந்திய அம்மைசாபத்தினல் வருந்தினளென்றறிந்து தன்னுயிரைவிட்டுவிடுகிறவன்போல மெள்ளமெள்ளமேற்குச் சமுத்திரத்தில் விழுந்துஅத்தமித்தான்; சுப்பிரமணியர் அம்மையிருக்கிறதற்காகஒரு பந்தல் போட்டுவைத்தார். எ-று. (உக)

அன்னையுங் குகனை நோக்கி
யரம்பையாற் பந்தர் செய்து
பன்னிரு கரமுஞ் சால
வருந்தினை யெனப்பா ராட்டி
யின்னுமோர் கருமஞ் சந்தி
முடிப்பதற் கினிய நன்னீர்
கைந்நிறை வேலை யேவி
யழைத்திடு கணத்தி லென்றுள்.

(இ-ள்.) அதன்பின்பு, பார்வதி சுப்பிரமணியரைப்பார்த்து வாழைமரத்தினல் பந்தற்போட்டுப் பன்னிரண்டுகைகளுஞ்சிவக்க வரு

த்தத்தையடைந்தாயென்றுபிரியவசனஞ்சொல்லி, இன்னும்ஒருவே லையிருக்கின்றது, அஃதென்னவென்றால்சக்தியாவந்தனஞ்செய்கிற தற்கு கல்ல பரிசுத்தமான சலம்வேண்டும், உன்கையிற் பிடித்திருக் கிற வேலாயுதத்தையேவி அழைப்பியென்று சொன்னள். எ-று. ()

காதலா லிறைஞ்சிக் கந்த னேவினுன் கைவ லவ்வேல்
போதவாழ் புத்திராண்டன் புகழ்புரு கூதன் போதன்
வாதில்பாண் டரங்கன் சோமன் வாமனென் பவரைவாட்டி
மீதிலேழ் கிரியை வீட்டிக் கொணர்ந்தது வேலீதம்

(இ-ன்.) அப்படிச்சொன்ன அளவில், அதிகபக்தியோடுசுப்பிர மணியர்தன்தாயாரைவணங்கி தன்கையிலுள்ள வேலாயுதத்தையே வினுர்; அதுபோதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டரங்கன், சோமன், வாமன்என்றுசொல்லப்பட்ட ஏழுபேரையும் அதற்குமேல் அவர்களிருந்த ஏழுமலையும் உருவிநல்லதண்ணீர்க்கட லுக்குப்போய்ச்சலங்கொண்டுவந்தது அந்தநதிக்குச்*சேயாறென்று பெயர். எ-று. (நக)

கந்தவே ளழைத்த வாற்றிற் கடனெலாங் கழித்துவாழைப்
பந்தரி லிருந்தா ளப்போ துமைபதம் பணிந்தவ் வாற்றிற்
சிந்துநீர் சிவப்பா தேதென் றுரைத்தலுஞ் சிறப்பதாக
வந்தவா றதனை யாறு திருமுதற் குரைப்பாள் வஞ்சி.

(இ-ள்.) சுப்பிரமணியக்கடவுள்வரவழைத்த ஆற்றிலே நீர்க்கட னெல்லாமுடித்துக்கொண்டு அவ்வாலமைக்கப்பட்டவாழைப்பந்தரி லிருந்தாள்; அப்போது, அம்மையைவணங்கி இந்தஆற்றிற்பெருகிவ ருகிறநீர் சிவப்பா யிருக்கவேண்டிய தென்னவென்றுகேட்க அந்த விவரத்தைச் சுப்பிரமணியருக்குச்சொல்லுகின்றுள் பார்வதி. எ-று.

அனந்தமா புரத்திலேழு மறையவ ரறியாக் காலத்
தனந்தமா வினைகள் செய்தா ரதன்பினல் லறிவுதோன்றி

* உலகோர் செய்யாறுஎன்று அழைப்பது முண்டு.

யனந்தமா வெனவே யேறு மயன்பதங் கருதிப் பன்னு
ளனந்தமா லமதா யுட்கொண் டருந்தவம்புரிந்தா ரந்நாள்.

(இ-ள்.) அநந்தமாபுரமென்கிற பட்டணத்தில் ஏழு பிராமணர்கள், அறியாதசிறுபிராயத்தில்அனந்தம்தீவினைகளைச்செய்து, அதன் பின்பு நல்லவிவேகந்தோன்றி அதமமென்ற அன்னத்தைத் தனக்குரிய வாகனமாகக்கொண்ட பிரமதேவனது திருவடிகளைத் தியானித்து இலைகளையே உணவாகவுண்டு பலகாள் அருமையாகியதவம்செய்தார்கள் அக்காலத்தில். (நூறு)

பதுமனு மவர்முன் சென்று
பாவிநான் வரைக ளேழில்
விதிமுறை தவஞ்செய் வீரேற்
குமரவேள் விடுக்கும் வேலாற்
பொதிசடை முடியு முங்கள்
வினைகளும் பொடியா மன்று
சதுர்முக னுரைத்துப் போனு
னவருமத் தவமே செய்தார்.

(இ-ள்.) பிரமன் அவ்வேழுபேர் முன்னேபோய்பாவிகளே! நீங்களேழுபேரும் ஏழுமலைகளில் விதிமுறையாகத் தவம்செய்வீர்களானால், அப்போது அம்மைக்குச்சலம்வேண்டிய நிமித்தியத்தால், சுப்பிரமணியர்பிரயோகிக்கும் வேலாயுதத்தினால் உங்கள்சடையோடுங் கூடியசிரங்களும் பாவங்களும் பொடியாகப்போமென்று சொல்லிவிட்டுப்போனார்கள்; அவர்களும்அப்பிரகாரம்தவஞ்செய்தார்கள். (1)

வே று.

ஏழுவரையு மதிலிருக்கு பெழுவரையும்
பிளந்துநீ யெறிந்த கூர்வே
லழியுமவ ருதிரமுடன் புனல்கலந்து
சிவந்த ததுகா ணுகையாலே

வழுவிலையுங் குனக்கென்ன வடிபணிந்து
மகிழ்ந்திருந்தான் மலைமேற் பட்ட
செழுமுனிவர் குருதியினுற் சிவந்ததுபோற்
சிவந்ததுவே செக்கர் வானம்.

(இ-ள்.) அவ்வேழுபேரையும், அவர்களிருக்குமலை யேழையும் பிளந்தது நீவிட்டகூர்மைபொருந்திய வேலாயுதம், அதனால் வழிந்தொழுகுகின்ற அவர்களுடைய இரத்தத்தோசெலங்கலந்துசிவந்து போய்விட்டது, உனக்கொருகுற்றமுமில்லையென்று சொல்ல, அம்மன்பாதத்தில் சுப்பிரமணியர் வணங்கிச் சந்தோஷமா யிருந்த அளவில், மலையில் தவம்செய்துக் கொண்டிருந்த முனிவர்களுடைய இரதத்தினால் ஆற்றுநீர்சிவப்பு நிறத்தையடைந்ததுபோலச் சிவந்தது செவ்வானம். எ-று. (நடு)

வித்தகர்கண் புதைக்கமுனம் பரந்தவிருண்
மறுமையிற்சூழ் வினையைப் போல
வத்தலத்தி லுமையவளைப் பின்பிடித்தா
லெனப் பரந்த தந்தகாசை
முத்தமியோ சிறுகதலிப் பந்தரின்கீ
ழிருப்பவளென் றும்ப ரிட்ட
நித்திலப்பந் தரைநிகராய் விளங்கியது
தாரகையா னெருங்கும் வானம்.

(இ-ள்.) சுவாமியினுடைய திருக்கண்களை முன்னே மூடினதினால் உலகமெல்லாம்பாவியவிருள்ஒருவனுக்குமறுமையில்வந்துபிடித்துக்கொள்ளுகிற பாவத்தைப் போல் அந்தத் தலத்தில் பிறகுவந்து அம்மையைப்பிடித்ததுபோலிருளான துளங்கும்பரவியது; உத்தமவிலக்கணங்களையுடையபார்வதியோ ஒருவாழைப்பந்தரின்கீழிருப்பாளென்றுதேவர்கள்போட்டுவைத்த முத்துப்பந்தரையொத்திருந்தது நக்ஷத்திரங்களால் நெருங்கப்பட்ட ஆகாயம். எ-று. (நசு)

மாலையெனுங் குமரியிருண் மகிடமுக
மகற்றியந்தி வானிற் கோரிக்
கோலமுடன் படிகலிங்கங் கொண்டதுபோன்
மதியெழுத்து குடபாற் சென்ற
தாலமணி மிடற்றிறைவன் விழிபுதைக்க
வளைந்தவிரு ளனைத்து நீங்கப்
பாலமிசை வெடித்தெழுந்த விழியெனவே
யெழுந்ததுசெம் பரிதி தானே.

(இ-ள்.) மாலைக்காலமென்னும் துர்க்கையானவள் இருட்டாகி யமகிடாசுரன்தலையையறுத்து, அதனுல்செவ்வானமென்றுசொல்லப்பட்ட இரத்தக்கோலத்தோடு படிகலிங்கத்தைக்கைக்கொண்டது போலச் சந்திரனுதயமாகி மேற்குத்திக்கில் அத்தமித்தது; நீலகண்டராகியபரமசிவன், இரண்டுநேத்திரங்களையும் அம்மைபுதைத்தளவில்; நான்குதிக்கும்பரவியெல்லாவிருளும் போகும்படியாய்வீழித்தஅச்சுவாமியின் நெற்றிக்கண்போலச் செம்மைநிறம் பொருந்திய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானன். எ-று. (கூஎ)

வேறு.

கங்கை நிகராஞ் சேயாற்றிக்
காலைசந்திக் கடன் கழித்து
மங்கை சனகச் சிவிகையின்மேன்
மறையோ லமிட வழிகொண்டாள்
பங்க மலர்நீர் வழியடியார்
கொடிப்பி னியாம் பஞ்சமலக்
கங்கி மலையாய் விளங்கியசீ
ரண்ணு மலைகண் டடிதொழுதாள்.

(இ-ள்.) பார்வதிகங்காநதிக்குச்சமானமாகிய சேயாறு என்கிற நதியில் காலைக்கடனை முடித்துக்கொண்டு, பொன்மயமாகிய பல்லக்கிலேறி; வேதகோஷ்டங்கள்முழங்க நடந்து பங்கப்படுத்து மும்மலங்களையும் ஒழிக்கவல்ல அடியார்களுடைய பாவமாகிய பஞ்சுமலைக்கு நெருப்புமலையாய்விளங்கிய திருவண்ணுமலையைப்பார்த்துச்சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டாள். எ-று. (நஅ)

வென்றியினுற் கவர்ந்தபொருள் பகர்ந்திறைவி
பணியாடும் வேனிற் பாலைக்
குன்றமெலாம் வெறியாடன் முல்லையெலாம்
பொதுவர் பின்னர் குரவை யாடன்
மன்றல்கம ழிந்திரற்கு விழாவெடுத்துக்
கொண்டாடன் மருத வேலி
முன்றிலெலாஞ் சினச்சுறவு முண்ணுணக்கி
யணங்காடு முந்நீர்க் கானல்.

(இ-ள்.)வல்லமையினுலேஉஷ்ணமிகுந்தபாலைநிலத்திலுள்ளவர்கள்வழிச்செல்வோரை அடித்துப் பறித்தபொருளே பங்கிட்டு அந்நிலத்திலிருக்கிற துர்க்கைக்குப் பலிபோடுவார்கள்; மலைகளையுடைய குறிஞ்சிநிலத்தில் இருப்பவர்கள் ஆடுபலிகொடுக்கிற பூசைபோடுவார்கள்; முல்லைநிலங்களெங்கும் இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள்; கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உற்சவஞ் செய்வார்கள் முற்றங்களில் சுறுமீன்களைக் காயப்போடுகின்ற கடலருகாகிய நெய்தனிலத்திலிருக்கின்றவர்கள் வருணனுக்குத் திருவிழாச் செய்வார்கள். எ-று. (நக)

சோதிபெறு சரநாக மறையவம்பு
சொரிகையினுற் றாய்மை யாய
மாதரையெ லாங்கலந்த மகிழ்ச்சியினுற்
பொன்கலந்து மருவுநீரார்

போதவரி சனங்களையப் பெருகுதலான்
மதுவுடையப் பொருத லாலே
சீதரனே நிகராகத் திருநதிநாற்
றிசைகளெலாஞ் சிறந்த தன்றே.

(இ-ள்.) திருநதியானது ஒளிபொருந்தியதுதிக்கையையுடைய யானைகள்மறையச்சலத்தைப்பெருக்கிவருதலாலும், பரிசுத்தமாகிய பெரியபூமியெல்லாம்பரவியசந்தோஷத்தினாலும்,பொற்பொடிகளையுந் திரட்டிக்கொண்டு வருதலாலும், மிகுந்தமஞ்சள் பொடிகளையப் பெருகின படியாலும் தேன்கூடுடைத்து மோதலினாலும் என்று நதிக்குப் பொருள்கொண்டு சிலேடைவகையால்; கரனுடையதே கமறையப் பாணங்களைச் சொரிதலாலும், தூய்மைபொருந்தியகோபிகாஸ்திரீகளைச் சேர்ந்திருந்த விருப்பத்தினாலும் இலக்குமியைச் சேர்ந்திருக்கிறதினாலும், வைஷ்ணவர் மிகவும் மனம் உருகத் தயை செய்தலாலும், மதுவென்கிற அசுரன்சாக யுத்தஞ் செய்தலாலும், விஷ்ணுவுக்குச் சமானமாக காஞ்திக்கினாஞ்சிறந்தது. எ று. (சு0)

இது நதிக்கும் திருமாலுக்கும் செம்மொழிச் சிலேடை யணி என்க.

இதுமுத லாறுபாடல் வயற்சிறப்பு.

மேவுபுனல் பரந்தொழுகக் குளிர்ந்துமயிர்
பொடித்தனபோல் விதத்திற் றோன்றிக்
காவிலுறை பசுங்கிளியின் சிறகெனவே
பசந்துதொண்டைக் கதிராய் முற்றிக்
கூவுகுல வாரணத்தின் களம்போல
நிமிர்ந்தெழுந்து குறைவில் சாலி
பாவையுமை தவம்புரியுந் தலமிதெனப்
பணிந்தனபோற் படிந்த மாதோ.

(இ-ள்.) அந்தியில்வர்தநீர் பரந்து ஒழுகுகிறபடியினால் குளிர்ச்சியுற்ற பூமிதேவியினுடைய தேகத்தின்மயிர்க்குச்செறிந்ததுபோல் குறைவில்லாதநெற்பயிர்களுண்டாகத் தோப்புகளில்வாசஞ்செய்கிறபச்சைக்கிளிகளின்சிறகுபோல் பச்சைநிறத்தையடைந்துதொண்டைக்கதிராய்முற்றிக் கூவுகின்றகோழிக்கழுத்துப்போல நிமிர்ந்து பார்வதிதவஞ்செய்கிறதலம் இதுவென்றுவணங்கினதுபோல் வளைந்து கிடக்கின்றன. எ-று. (சுக)

சந்ததமு மேருழுவர் பதம்பார்தங்
கரிந்தவரி தடுத்து வாரி
யிந்திரனு ருலகினெடு போர்செய்வா
னெழுமலையா மென்னப் போர்செய்
தந்தரமே சுற்றிரவி புரவிகள்போற்
கடாவிடித்தே யாற்றித் தூற்றி
மந்தரமா மெனக்குவித்து வழங்குகினுந்
தொலையா நென் மருத வேலி.

(இ-ள்.) எப்பொழுதும் வர்த்தொழில் புரியும் உழவர்களாகிய பயிரிடுங்குடிகள் பதம்பார்த்து அறுத்துஅரிகளைச் சுமையாகவாரித் தேவேந்திரனுலகத்தோடு சண்டைசெய்ய எழுந்தமலையென்றுசொல்லும்படியாகப்போர்போட்டு ஆகாயவழியாகவருகிற சூரியனுடையகுதிரைகள்போலும் கடாக்களைவிட்டு அடித்துவைக்கோலத்தூற்றிமந்தரகிரிபோலக் குவியல்செய்து உளர்காணித்தெய்வம், பரதேசிகள்முதலிய எல்லா மனிதர்களுக்குங் கொடுத்தாலும் நெல்குறையாது பெருகுகின்ற மருதநிலத்தில். எ-று. (சுஉ)

கயிலினமென் றழுத்தியர்கண் கண்ணிழலைக்
கண்டுகருங் கயல்வந் தேற்று
மயிலிலிவர் கொடும்புருவ நிழலினைக்கண்
டேசிலையென் றஞ்சிமீளு

T. 584

மயலுதவு மாவதனந் தாமரைப்போ
தெனமருவி வண்டு சேரு
மியலுமவர் நாசிநிழல் சண்பகப்போ
தெனவெருவி யிரியல் போகும்.

(இ-ள்.) வயலிற்களே யெடுக்கிற்பள்ளஸ்திரீகளுடைய கண்ணி ழலேக்கண்டு சேற்கண்டைகள் நம்மினமென்றுவந்துசேரும், பின்பு அருகில் அவர்களுடையபுருவநிழலேப்பார்த்துவில்லென்றுபயப்பட் டோடும், உண்டார்மனங்கவறஆசையைக்கொடுக்கிறஅவர்களுடைய முகத்தைத்தாமரைப்பூவென்று நினைத்து வண்டுகள் வந்து சேரும். அதன்பின்புஅவர்களுடையநாசியினிழலேப்பார்த்துச்சண்பகப்பூவென் றுஓடிப்போகும். எ-று. (சஉ)

பெரும்பழனத் தழத்தியர்தங் கணைக்காலே
வராலெனப்போய்ப் பிடித்து மள்ளர்
திரும்பவுமங் கவற்புறங்கால் கமடமெனப்
பிடிமருதத் திணைக டோறும்
குரும்பையெனு முலேச்சியர்கண் முகத்தினுக்கும்
விழியினுக்குங் குலேந்தோ மென்று
சுரும்பினுடன் கலுழ்வனபோற் றுமரையுங்
குவளேயுந்தேன் சொரியுந் தானே.

(இ-ள்.) பெரிய வயல்களிற் களேபிடுங்குகிற உழத்திகளுடைய கணைக்காலேவரால்மீனென்றுவிரைவிற்சென்று மள்ளர்பிடித்துவெ ட்கத்தையடைந்துமறுபடியும்அப்பெண்களுடையபுறங்காலே ஆமை யென்றுபிடிக்குமருதநிலந்தோறும் தென்னங்குரும்பைபோன்றமு லேகளேயுடைய பெண்கள் முகத்திற்கு கண்ணுக்குத்தோற்றுப்போ ஞேமென்று வண்டுடனேசொல்லியழுகிறதுபோல்தாமரைப்பூவும் நீலோற்பலமும் தேனேச்சொரியும். எ-று. (சஎ)

வேறு.

நிழலையுஞ் சுழிக்கு மேதி நெடும்புனல் குடைய வன்ன
மழலைவண் டானத் தோடு மருதவண் டானத்தோடு
மழலவிர் மணப்பூண் மள்ள ரரிகிணைக் கிசைய வூதுங்
குழலிசை யறுகான் மாதர் குழலிசை யறுகாற்கூட்டம்.

(இ-ள்.) தன்னிழலைப்பார்த்து தானே கோபிக்கும்எருமைகள் நீரிலேபோய்விழுந்துகலக்க அன்னம்இளமையாகியநாரையுடனேம ருத நிலத்தில்வளம்பொருந்தியதானத்தையுடையசோலையில் ஓடும்; பிரகாசம்பொருந்தியஇரத்தினபரணங்களையுடையமள்ளர்கள்அடிக் கிற அரிகிணையென்னும்வாத்தியத்திற்கு இசையும்படியாகஊதுகின் றபுள்ளானங்குழலிசைஇல்லாதபோதுபெண்களுடையகூந்தலிற் பொ ருந்திய வண்டுகள் இசையும்படியாக ஊதும். எ-று. (சஞ)

மூசுவண் டினங்க ளெல்லா மூடிந்தசங் கிலிகளாகக்
காசுநெற் கதிர்க ளெல்லாங் கன்னசா மரைகள் காட்டத்
தேசுவாய்க் கவளம் பெற்றுத் தேறுகட் பாதைச் சிந்தி
வாசவன் களிறுபோல மருதம்வீற் றிருந்த மாதோ.

(இ-ள்.) ஒழுங்காய் மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுக்கூட் டங்கள்எல்லாம்சங்கிலியாகவும், இரத்தினம்போலும்விளங்குகின்ற நெற்கதிர்கள் சாமரைபோன்ற காதாகவும்பிரகாசம்பொருந்தவளப் பம்பெற்றுபருவங்கொண்டதேனுகியஅமிர்தத்தைச்சிந்திதேவேந்தி ரனேறுகிறஐராவதமென்னும்யானைபோலமருதநிலம் வீற்றிருந்தது யானையானதுதன் அழகியவாயினுலேகவளம்பெற்றுதேறித்தன்கண் ணிருக்கின்ற பாகனைத்தள்ளிக் கொல்லுதலால் தேசுவாய்க் கவளம் பெற்றுத்தேறுகட்பாகைச்சிந்திவாசவன்களிறுபோலமருதம்,என்று நிலைடையாகக் கூறினர். எ-று. (சசு)

நாலடித்தாழ கொச்சகக்கலிப்பா.

பண்ணுர் கமலப் பழனப் பதிநீங்கி
மண்ணுடர் போற்றும் வடவீ தியிற்குறுகி
யண்ணு மலையா னடிக்கமலஞ் சென்றுதொழு
வீண்ணுர் கொடி நெடுந்தேர் வீதிகளின் மேவினுள்.

(இ-ள்.) வண்கே ளிசைபாடுகின்ற தாமரைபுட்பங்களையுடைய மருதநிலத் தூரைவிட்டுநீங்கிபூலோகத்தார்வணங்கும்வடக்குவீதியி லெழுந்தருளி அருணுசலேசருடையபாதாரவிந்தத்தைப்போய்வண ங்கஆகாயத்தையளாவியகொடிகளையுடையஅதியுந்நதமானதேர்களி ருக்கும் கிழக்குவீதியில் வந்தாள் பார்வதி. எ-று. (சுவ)

கலி விருத்தம்.

நச்சு கோபுரத் துச்சிமே வியோர்
வச்சி ரத்தினுன் மதியின் மாசுபோம்
* வச்ச மாமணிச் செம்மை யாலினன்
பச்சை மாவெலாம் பவள மாகுமே.

(இ-ள்.) யாவரும்விரும்பப்பட்டகோபுரத்தின்சிகரத்தினருகில் சந்திரன் வரும்போது, அக்கோபுரத்தி லிழைக்கப்பட்டிருக்கிறஒப் பற்றவச்சிரத்தினங்களினெளியினுலேதன துகளங்கத்தை நீக்குவா ன்இன்னும் அக்கோபுரத்திலிழைத்திராகின்றமாணிக்கங்களுடைய சிவந்தவொளியினுலே அதனருகில்வரும்போதுசூரியன்இரதத்திற் கட்டிய பச்சைக்குதிரைகளேழும்பவளக்குதிரைகளாகத்தோன்றும்

வேற்று மேருநீர் மேடை மீதினும்
தோற்று நீலமா மணியின் சோதியா
லேற்ற வானதி யழுனை யானதே
போற்று கார்மதிற் புரிசை மீதினும்.

* வைத்த என்பது எதுகைநயத்தால் வச்சவெனத் திரிந்தது.

(இ-ள்.) வேறுவேறுயமைந்துள்ளமேருவையொத்தமேடைகள் மேலும், காலமறிந்துநீரைசொரிந்துசராசரங்களையிரட்சிக்கும்மேகங்கள் சஞ்சரிக்கிறமதில்கள்மேலும் இழைத்திருக்கும் நீலரத்தினத்தின் பிரகாசத்திலுல் ஆகாயத்திலிருக்கும்கங்காநதியானது யமுனை நதிபோல் கறுப்பு-நிறமடைந்தது. எ-று. (சகூ)

பரவை யாமெனப் பணைமு ழங்கவே
யரிவை மாதரா ராட ரங்கினமேல
விரவு பச்சையின் கதிரை வெய்யவன்
புரவி கௌவிடும் புல்லென் றுன்னியே.

(இ-ள்.) சமுத்திரம்போல வாத்தியங்கள்முழங்கஅரிவைப்பருவமுடையபெண்கள்நாட்டியஞ்செய்கின்ற மேலுப்பரிகையில்இழைத்திருக்கும் பச்சை ரத்தினங்களுடைய கிரணங்களாப் புல்லென்றுநினைத்துச்சூரியன்இரதத்திற்கட்டியபச்சைக்குதிரைகளேழுங்கௌவும் எ-று. (கூ0)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

அத்தகைய வீதி கடந்துமணி யாலயஞ்சேர்ந்
தத்தமனை யென்னையா ளுடையானைச் சோணகிரி
வித்தகனைக் கண்டு பணிந்துருகி மீண்டுபல
சத்திகள் தம்மோடு தலேச்சுரத்தை மேவினள்.

(இ-ள்.) அப்படிப்பட்டதன்மையையுடைய வீதிகளைத்தாண்டி அழகுள்ள கோயிலுக்குட்போய் தேவோத்தமரை என்னையாட்கொண்டவரை அருணைசலத்திலிருக்கின்ற ஞானசொரூபரைத் தரிசித்துநமஸ்கரித்து உருக்கத்தையடைந்து திரும்பிப்பலசத்திகளுடனே தலேச்சுரமென்கிற மலேச்சாரலே யடைந்தாள் அம்மை. எ-று. (ருக)

ஊசியிலோர் கால்விரலே யூன்றியொரு கான்மடித்து
நாகிமிசை விழியை நாட்டி யழன் மூட்டித்
தேசினமு துருக்கித் தெள்ளமுதை யுண்டுதவக்
கோசிகனைப் போன்முயல்வார் * கோடான கோடியே.

* கோடான கோடியென்றது கிராமிய வழக்கச் சொல்.

(இ-ள்.) ஊசியினுனியிலேஒருகாலின்விரலையூன்றிக்கொண்டு, ஒருகாலைமடித்து முக்குணியிலேகண்களைசேர்த்துப் பஞ்சாக்கினியைவளர்த்திப்பிரகாசமானஅமிர்தகாரணைசெய்துபிரமரந்திரத்தின்வழியாய்வருகிற அமிர்தத்தைச்சாப்பிட்டு தவஸ்ரேஷ்டராகிய விசுவாமித்திரன்போய்த் தவஞ்செய்வார் அநேகங்கோடிபேர். எ-று. ()

நாடுமல மூன்றகற்றி நல்வினையுந் தீவினையுஞ்
சாடிமன மிறந்து தானிழந்து தன்மயமாய்
வீடுபெற விரும்பி வேட்கைபிறி தில்லாமற்
கூடுசிவ ஞானியர்கள் கோடான கோடியே.

(இ-ள்) ஆணவம், காமியம், மாயையென்கிறமும்மலங்களையும் நீக்கிநல்வினைதீவினையாகிய இருவினைகளிலும்சமநோக்கமடைந்து வணமென்பது இறந்து தற்பாதங்கெட்டு, உலகம் சிவசொரூபமாய் மோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றேராசையு மின்றிப் பஞ்சேந்திரியங்களும் ஒருமித்துச் சிவஞானம்பெற்றஞானிகள் வெகுகோடிபேர்கள் அம்மலைச்சாரலில் இருப்பார்கள். எ-று. (திரு)

தொண்டருட னகமங்கள் சொன்னவிதி முறையைத்
தண்டிமுடிவு சவுராதி யாய்ப்பூசித்
தண்டர்பிரா னஞ்செழுத்தை யோதியக மகிழ்ந்து
கொண்ட கிரியையினர் கோடான கோடியே.

(இ-ள். அடியார்களோடு காமிகாதி சிவாகமங்களிலெடுத்துச சொன்ன விதிமுறைப்படி சூரியன்முதல் சண்டேசுரர் அந்தமாகப் பூசைசெய்து தேவர்களுக்கெல்லாம்முதல்வனை, சிவபிரானுடைய பஞ்சாக்கர மந்திரத்தையோதிமனமகிழ்ந்து கிரியைகளை நடத்துபவர்கள் கோடான கோடிபேர். எ-று. (திசை)

நேருமியம நியமா தனவகையும்
பேர்பிரா ணயாமம் பிரத்தியா காரமொடு

தாரணை தியான சமாதிவகை தன்னினுமெய்
கூருமுயல் யோகியர்கள் கோடான கோடியே.

(இ ள்.) இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்று சொல்லப்பட்ட அஷ்டாங்க யோகங்களின் வகைகளையறிந்து அவைகளைத் தேகசிரமப்பட்டு முயல்கின்ற சிவயோகியர்கள் அனேககோடிபேர்கள். எ-று. (இகூ)

மாதவர்க ளின்னசெயல் செய்யும்வகை பார்த்துச்
சூதவனஞ் சூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த
சீத வருவிகளும் பார்த்துச் சிறப்புற்றுக்
கோதமனு ராசிமன் தன்னிற் குறுகினாள்.

(இ-ன்.) மகத்தாகியதவத்தினையுடையோர்கள்செய்யும்இப்படிப்பட்டசெய்கைகளின்வகைகளைப்பார்த்துமாந்தோப்புச்சூழ்ந்தசுனையுஞ்சுனைசூழ்ந்தசீதளமானஅருவிகளையும்பார்த்துச் சிறப்பையடைந்து அவ்விடத்தில்இருக்கிற்கௌதமருடைய ஆச்சிரமத்தில் அம்மன்வந்து சேர்ந்தாள். எ-று. (இசு)

அந்த விடத்துமையாள் செல்ல வகலிகையு
மைந்தனும்வந்தேத்திநிற் வாழ்த்திமறைக்கோதமனுர்
முந்துமுனி யெவ்விடத்தே யென்றுள் முனிபுதல்வன்
தந்தைமலர் தருப்பைக் கெய்தியதுஞ் சாற்றினன்.

(இ-ள்.) அக்கௌதமருடைய இடத்திற்கு உமாதேவியார்போனவுடனே, அவரது பெண்சாதியாகிய அகலிகையும் புத்திரராகியசதானந்தரும் வந்துபணிந்தார்கள்; அவர்களைப்பார்வதிதேவி ஆசீர்வதித்துவேதங்களையுணர்ந்தமுதன்மையானகௌதமரிஷி எங்கே யிருக்கிறாரென்று கேட்க, சதானந்தர்புட்பம் தருப்பைகொண்டுவருகிறதற்குப் போனரென்று சொன்னர். எ-று. (இஎ)

பின்னுமவ னுரைப்பான் பேதமையேன் புன்குடிலில்
கன்ன லமுதே கணப்போ திருந்தவரி
லன்னவனீக் கொணர்வே னென்றே யடிதொழுது
தன்னே யளித்தவன்பாற் சென்றான் சதானந்தன்.

(இ-ள்) மறுபடியும் பார்வதியைப் பார்த்து அச்சதாநந்தர்சொல்லுவார், கருப்பஞ்சாறுபோன்ற பார்வதியம்மையே! அறியாமையுடைய என்சிறுகுடிசைவீட்டில் கூணைநேரம் இருந்தால், என்தகப்பனரைக்கொண்டுவந்துசேருகிறேனென்று பாதங்களைத்தொழுது தன்னைப்பெற்ற கௌதமரிடத்திற்குப்போனர் சதானந்தர். எ-று. ()

இங்கிவன் செல்போதி லிளந்தருப்பை கொய்துமுனி
புங்கவர்கள் சூழ்ந்து வருமுனிவன் பூத்தலர்ந்து
துங்கவனங் கற்பகம்போற் றோன்றுதலா லிந்தவனந்
தங்கள்வன மல்லவென்று சங்கையுற்றே நோக்கினான்.

(இ-ன்.) சதானந்தர்போகிறபோது, இளமையாகியதருப்பைக் கொய்துகொண்டு அநேகமுனிவர்கள்சூழக் கௌதமர்வருகிறதற்கு முன்னே இவ்விடத்தில் அம்மைவழுத்தருளியிருந்த கோதமாது பூங்காவனமானது எல்லாவிருக்ஷங்களும்புட்பித்துக் கற்பக விருக்ஷம் போலக்காணுகிறபடியால்நம்முடைவனமல்லவே! இதுயாருடையதென்று சந்தேகப்பட்டுப் பார்த்தார். எ-று. (ஙக)

இத்தலத்தில் வந்தவரா ரென்றுரைத்து மாதவற்குப்
பத்துருவந் தந்தமுனியும் பராசரனு
மத்திரியு மப்புதுமை யாராயு மெல்லையிற்றன்
புத்திரனைக் கண்டுவர வென்ன புகலென்றான்.

(இ-ள்.) இவ்விடத்தில்வந்தபெரியோர்கள்யாரென்று விஷ்ணுவுக்குப் பத்துதரம் பிறக்கச் சாபங்கொடுத்தபிருகுரிஷியும், பாராச

ரும், அத்திரியும் அப்புதுமை விசாரிக்குமிடத்தில் தம்முடைய பிள்ளை சதானந்தரைக்கண்டு இவ்விடத்திலுண்டாகியவிசேஷம் என்ன வென்று கேட்டார் கௌதமர். எ-று. (சுo)

கலி விருத்தம்.

தாதையிவை கேளிறைவர் தங்களை யளிக்குஞ்
சோதியிவ ணெய்தின ளெனத்தொழுது சொன்னா
ணுதமறை தேடுமவ ணங்குடிலின் மேவற்
கேதுதவ மேதுதவ மேதுதவமென்றான்.

(இ-ள்.) சதானந்தர், தன்தகப்பனாகிய கௌதமரைப் பார்த்து ஐயாநான்சொலவதைக்கேட்பீராக, பிரமன் முதலாகிய ஐவரையுந் தன்னிடத்திலுண்டாக்கிய தேசோமயமாகியபராசத்தி இவ்விடத்தில்வந்திருக்கிறளென்றுவணங்கிச்சொல்ல, ஸப்தசொரூபமாகிய வேதங்கள்தேடுதற்கரிய அம்மைநம்முடையகுடிசையில் வருவதற்கு என்னதவம் ! என்னதவம் ! என்னதவஞ் செய்தோமென்றார் கௌதமர். எ-று. (சுக)

ஓடின னணைத்துமக னுச்சியை முகந்தா
னாடினன் மகிழ்ச்சியெனு மார்கடல் புகுந்தான்
பாடின னெடுத்தகுசை பார்மிசை யெறிந்தான்
வீடினது நந்தம்வினை வேரினுட னென்றான்.

(இ-ள். கௌதமர்விரைந்து சென்று இவ்வார்த்தையைச் சொன்ன சதானந்தரைக் கட்டியணைத்து உச்சிமுகந்தார், திருக்கூத்தாடினார்; சந்தோஷ மென்கிற பெரிய சமுத்திரத்தி லாழ்ந்தார்; பாடினார்; கையிலேகொண்டுவந்ததருப்பையைப்பூமியிலேயெறிந்துவிட்டார்; நம்முடையபாவம் வேருடனேகெட்டுப்போயிற்றென்று சொன்னார். எ-று. (சுஉ)

அத்திரி முதற்றபை யந்தணர்க ளெல்லாங்
கைத்தல மெடுத்தனர் நடித்தனர் களிப்பால்

வித்தகி யிருக்குமிட மேவியெதிர் கண்டார்
பத்திவலை யிற்படு பதங்களில் விழுந்தார்.

(இ-ள்) அத்திரிரிஷீமுதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டு கைகளையுந் தலைமேல் வைத்துக் கூத்தாடினார்கள்; சந்தோஷத்துடனே ஞானஸ்வரூபியாகிய பார்வதியிருக்கிற இடத்தையடைந்து எதிரேகண்டு பத்தியாகிய வலையில் அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில்விழுந்து நமஸ்கரித்தார்கள்.

நின்னிலிமை கன்னியிறை நீள்பிரம சாரி
யென்னுமறை யன்றிமுத லின்றுவரை யெல்லா
முன்னிடை யுதித்துல குயிர்த்தொகைக ளெல்லா
மன்னையெனு முன்பெருமை யாரறிய வல்லார்.

(இ-ள்.) தாயே! நீயோ கன்னிகை, சுவாமியோ நித்தியபிரம சாரி யென்று சிருஷ்டிதொடங்கியிதுவரைக்கும் வேதங்களெல்லாஞ்சொல்லிக்கொண்டிருக்கின்றன; அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களி லிருக்கின்ற எல்லாவுயிர்களுந் தோன்றித் தாயென்று சொல்லும், அப்படிப்பட்ட உன்பெருமையை யாரறியப் போகிறார்கள். எ-று. (சுச)

நித்தனே முதற்றருவை நித்தன திடத்தே
சத்தியென நீவருவை சத்திசிவ மென்றே
யித்தகைமை கொண்டுயிர்கள் யாவையு மளிப்பா
யத்துவித மாகுமுனை யாரறிய வல்லார்.

(இ-ள்.) நித்தியமாகவிருக்கிற சிவபிரானே முதலில் உண்டாக்குவாய்! அச்சிவனிடத்திலே சத்தியாக நீ வருவாய்! சத்திசிவமென்கிற இத்தத்தன்மையைக் கொண்டு உயிர்களெயெல்லாம் பெறுவாய் அத்துவித சொரூபமாகிய உன்னையாரறியப்போகிறார்கள். எ-று ()

மெய்ப்பொருண் மகேசனரன் வேதனரி யாஞல்
மைப்பெருமை கேசியுமை வாணிதிரு வாவை
யிப்படியு மன்றியவ னெப்படி யெடுத்தா
னப்படியு மாவையுனை யாரறிய வல்லார்.

(இ-ள்.) பரமசிவன், மகேசுரர், உருத்திரர், பிரமர், விஷ்ணு, ஆஞல், ஈ மகேசுவரி, உருத்திரி, சரஸ்வதி, இலக்குமியாகிய சத்திகளாய் இப்படியுமல்லாமல் அச்சிவபிரான் எப்படிப்பட்ட உருவங் கொண்டனரோ அதற்குத் தகுந்த உருவங்கொள்வாய்! உன்பெருமையை யாரறியவல்லவர்கள்யார். எ-று. (சுசு)

நெஞ்சுருகி மாதவர்க ணின்றிவை புகழ்ந்தார்
வஞ்சியிடை கோதமனும் வந்தனன் வரும்போ
தஞ்சலிபு ரிந்தன னதற்குமுன மேமின்
கஞ்சமல ரென்னவிரு கால்களில் விழுந்தான்.

(இ-ள்.) மாதவத்தையுடைய ரிஷிகளெல்லாம் நெஞ்சமுருகி நின்று இப்படிதோத்திரஞ்செய்தார்கள் அச்சமயத்தில் வஞ்சிக்கொடியையொத்த இடையினையுடைய பார்வதி சமீபத்தில் கௌதமர்வரும்போதே இரண்டுகைகளையுஞ் சிரத்தில்வைத்துக் கூப்பித் தாமரைமலரையொத்தஅம்மையின் இரண்டுபாதத்திலும்நமஸ்காரித்தார்.

அன்பிலுயர் கோதமனு மன்னையை வணங்கி
யின்புற வுரைப்பனய னெண்டிசை புரப்போர்
தன்சிர மிதிக்கரிய தாளிணைக ளின்றென்
புன்குடின் மிதிக்கவென புண்ணிய முடித்தேன்.

(இ-ள்.) பக்தியினுலேஉயர்ந்தகௌதமரிஷியும்பார்வதியம்மையைவணங்கி அவ்வம்மை சந்தோஷிக்கும்படி சொல்வான்; பிரமன் அஷ்டதிக்குப்பாலகர் சிரத்திலேகூடவைத்ததற்கு அருமையானபத

மிரண்டும் அடியேனுடைய புண்மைபொருந்தியசிறுவீட்டில்மிதிக்க என்னபுண்ணியஞ் செய்தேன். எ-று. சுஅ)

இந்தமொழி சொற்றலு மிளங்கொடியும் வேலன்
றந்தியிடை சென்றிடுவ னங்கது தவிர்ந்தால்
சிந்தைமகி ழுன்னிடையில் வந்துகுறை தீர்வேன்
மைந்தவென வோதினன் மறுத்துமிவை சொல்வாள்.

(இ-ள்.) இவ்வார்த்தையைச்சொன்ன அளவில், இளமையாகிய கொடிபோன்ற உம்மையும் பிள்ளையாகிய கௌதமனே? எனக்கோர்குறைவந்தால் வேலாயுதத்தைக்கையில்தாங்கியசுப்ரமணியனிடத்திலும்யானைமுகமுடையகணபதியிடத்திலுஞ்சென்றுதீர்த்துக்கொள்வேன்; அவ்விடம்விட்டால்என்மேல்அன்புவைத்தஉன்னிடத்தில் வந்துதீர்த்துக்கொள்வேனென்றுசொல்லி மறுபடியுஞ்சொல்வாள்.

நாயகன் மொழிந்திட நடந்தபடி யெல்லாம்
பாயிர மெனும்படி பகர்ந்தன னெவர்க்குந்
தாயிவை மொழிந்தள வினிற்சத மகற்கன்
ருயிரம் விழித்திர ளளித்தமுனி சொல்வான்.

(இ-ள்.) பரமசிவன் சொன்னபடி பூமியில்வந்து தான் நடந்த சமாச்சாரமெல்லாம் பாயிரத்தோடுங்கூடிய நூல்போல் முறையாக விரித்து எவருக்குந்தாயாகிய பார்வதி சொன்னபோது,முற்காலத்தில் நூறு அஸ்வமேதயாகங்களைச்செய்த தேவேந்திரனுக்குஆயிரங்கண்ணுண்டாகச்செய்த கௌதமர்சொல்வார். எ-று. (எ0)

இத்தல முதற்றல மிதன்பெயர் தலேச்ச
முத்தம மிதிற்றரும மொன்றுபல வாகும்
மெய்த்தவ மியற்றதனில் வெள்விடையின் மேல்வந்
தத்தனு மிடப்புற மளித்தருளு மென்றான்.

(இ-ள்.) இத்தலம் இவ்வுலகத்திலுள்ள சிவஸ்தலங்களுள்முதன்மையான தலம்; இதனுடையபெயர்தலேச்சுரம்; இதுமிகவுமுத்தமமானது, இஃதில் ஒருபுண்ணியத்தைச்செய்தால் ஒன்றுபலவாய் விருத்தியாகும்;இதிலிருந்துகொண்டுநீமெய்ம்மையாகியதவஞ்செய்கால், வெண்மையுள்ள ரிஷபவாகனத்தின் மேலெழுந்தருளி பரமசிவன் உனக்கு இடப்பாகங்கொடுப்பாரென்றார் கௌதமர். எ-று. எக)

மாலயன் வசுக்கண்மக வான்முனிக னத்தோர்
சாலிகள் சமைத்ததில் தனித்தவ முடித்தார்
காலமிட னன்றுசெயல் கைப்பலமி தென்றான்
மூலமுதல் வல்லியு முடிப்பனிது வென்றாள்.

(இ-ள்.)அம்மையே?விட்ணு,பிரமன்,அஷ்டவசுக்கள்தேவேந்திரன் அநேகமுனிவர்கள் அவரவர்கள்வசிப்பதற்குரிய இடஞ்செய்துகொண்டுஅதிலிருந்துகொண்டு ஒப்பற்றதவஞ்செய்துநினைத்தகாரியமுடித்துக்கொண்டார்கள்; நீவந்தகாலமு மிடமுநன்மையாகும், இவ்விடத்தில்நீதவஞ்செய்தால்கைப்பலமாகி இனிதுமுடியுமென்று கௌதமர்சொல்ல,எல்லாப்பொருள்களுக்குமூலமாகிய அம்மையும் தவஞ்செய்துவன்கருத்தைமுடித்துக்கொள்ளுகிறேனென்றாள்எ-று

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கோதமனே முதலாய் முனிவர்க் கெல்லாங்
குளிர்ந்தமொழி பகர்ந்துவிடை கொடுத்துச்சோண
பூதரமா மதன்குணபாற் பன்ன சாலை
புதிதமைப்பித் தகமகிழ்ந்து புறம்பு காக்க
மாதரெழு வரையமைத்து நாலு பாலின்
வாயிலெண வயிரவர்கண் மகிழ்ந்து காக்க
வாதரவி னிறுத்தி மைந்தர் மருங்குகாக்க
வந்தரியுட் புறங்காக்க வமைத்தாண் மன்னே.

(இ-ள்.) கௌதமர்முதலான முனிவர்களுக்கெல்லாம் பிரியவசனஞ்சொல்லிஉத்தரவுகொடுத்து, செம்மைநிறமுள்ள அருணைசலத்

துக்குக் கிழக்குப்பக்கத்தில் பர்ன்னசாலைபுதிதாகச்செய்வித்து, சத்தமாதர்களைப்புறக்காவலாகவைத்து. நான்குவாயில்களையும்எட்டுவீரவர்கள் காக்கவும், விநாயகர் சுப்பிரமணியர்தன் இரண்டுபக்கமுங்காக்கவும், துர்க்கை உட்பக்கங்காக்கவுஞ்செய்தாள்பார்வதி எ-று.

கொந்தளகஞ் சடைபிடித்து விரித்துப் பொற்றோட்
குழைகழுத்திற் கண்டிகையின் குப்பைபூட்டி
யுந்துமர வுரிங்கர்பட் டாடை நீக்கி
யுரித்தமர வுரிசாத்தி யுத்தூ ளத்தால்
விந்தைதிரு நீறணிந்து கனற்குட் காய்ந்து
விளங்குமூசியி னெருகால் விரலை யூன்றி
யந்திபக லிறைபதத்தின் மனத்தை யூன்றி
யரியபெருந் தவம்புரிந்தா ளகில மீன்றாள்.

(இ-ள்.) புட்பங்களைத்தரிக்கின்ற கூந்தலைச்சடைசெய்து விரித்து அழகியதோள்குழந்தை கழுத்துகாதுகளில் உருத்திராக்ஷமாலைகளைத்தரித்து. ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கிற பட்டாடையுடுப்பது விட்டு மரவுரிதரித்து, செயத்தைக்கொடுக்கின்ற விபூதியைச்சருவாங்கமுந்தரித்து நெருப்பில்காய்ந்து பளபளவென்றுபிரகாசிக்கும் ஊசியில ஒருகாற்பெருவிரலையூன்றி இராப்பகலாகமனத்திலே பரமசிவத்தைத்தியானஞ்செய்து, அரிதாகியபெரியதவத்தைசெய்தாள்உலகத்தைப்பெற்ற பார்வதி அம்மன். எ-று. (எச)

இளைத்தகொடி மருங்குவளைந் தெரியி னுப்ப
னிணியதவ மியற்றுதல் கண்டிளைத்து வாடிக்
களைத்துமனந் துடித்துவிழி புதைத்துவாணி
கண்ணீரின் மூழ்கிநின்றாள் கமலத் தாளு
முளைத்துமனந் தளர்ந்தழுது விழுந்தாண் மற்றை
யுயிர்களெலாங் கரைந்துகரைந் துருகா நின்ற
வளைத்துவளைத் துரைப்ப தென்றுய் வருந்து மாலல்
வயிற்றிலுள்ள கருப்பமெலாம் வருந்தி டாதோ.

(இ-ள்.) மிகவுஞ்சிறிதாகியகொடிபோன்ற இடைவஞ்சிக்துபஞ் சாக்கினிமத்தியில் இனிமையானதவத்தைச்செய்வதைப்பார்த்து இ வளத்தவாட்டமடைந்ததுபோலது. மனந்துடித்து, இரண்டுகண்களு யுமூடிக்கொண்டு சரசுவதிகணணீரில்முழுகினுள். பத்மாசாரியாகிய இலக்குமியும் மனம்வருந்திச்சஞ்சலப்பட்டு அழுதுவிழுந்தாள்; மற் றதேவதாசிகளெல்லாம்மனங்கரைந்தருகின; தானிதைப்பிரித்துபிரி த்துச்சொல்வதனுல்என்னபயன்! தாயான்வள்வருந்துவளாயின் வ யிற்றிலுள்ள கருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தை யடையாதோ.

முன்பனியிற் கருகுபடாக் கமலம்போல
முகந்தோன்றப் பனிக்கயத்துண் மூழ்கிற்கு
பின்பனியி லதிசீத விடத்திற் சேரும்
பெருமழைக்குன் மீனென்னப் பேணிநிற்கும்
அன்பனிடம் பெறுமளவு மதுபோல் வேண்டு
மரியதவம் புரிந்தனளவ் விடத்து வேதன்
வன்பனியிற் றுயினெடுமான் முதலாந்தேவர்
மறைபுகுந்த தவச்சாலே மருங்கிற் சார்ந்தார்.

(இ-ள்.) முன்பனிக்காலத்தில் கருகிப்போகாத தாமரைப் பூப் போல முகமாத்திரந்தெரியக்குளிர்ச்சிபொருந்திய தடாகங்களில்மூ ழுகின்றும். பின்பனிக்காலத்தில் அதிக சீதளம்பொருந்திய இடத் திலிருந்தும்மழைபெய்கிறபோது அதில்ஒருமீன்போலச்சஞ்சலப்ப டாதுநின்றும், கணவனுகியபரமசிவனது இடப்பாகத்தைப்பெருகி றவரைக்குமதுபோலவேண்டியதவத்தைச்செய்தாள்; அவ்விடத்தில் பிரமனும்வலியசர்ப்பத்தில்நித்திரைசெய்கின்றவிட்டுணுமுதலாகிய தேவர்களும் வேதகோஷ்டம் பொருந்திய தவச்சாலையைவந்து அ டைந்தார்கள். எறு. (எசு)

அந்தநியு மாயவனுர் முதலாந் தேவ
ரணைவருக்கு முபசார மளித்து நீங்கள்
வந்தா வியம்புமென மகிட னுலே
வருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச் சொன்னுர்

சுந்தரியுங் குமரியுடன் சுடரும் வாளாற்
றொடுகளத்தின் மகிடனுரந் தொலைப்பாயென்றுள்
விந்தையது புரிவமெனப் பணிந்தா ளன்னே
விளம்புதல்கண் டகமகிழ்ந்து விடைகொண்டாரே.

(இ-ள்.) பார்வதி, விட்டுணுமுதலானதேவர்களெல்லாருக்குமு பசாரஞ்சொல்லி நீங்களிவ்விடத்திற்கு வந்தவகை சொல்லுங்களென்றுகேட்க, அவர்கள மகிடாசுரனுல் தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்தவகை விவரமாகச் சொன்னார்கள், அதற்குப் பார்வதி துர்க்கையைக் கூப்பிட்டு நீகத்தியினுல் யுத்தகளத்தில் மகிடாசுரன் வல்லமைகெடக் கொன்று விடென்று சொன்னுள். அதற்குத்துர்க்கை அப்படிசெய்வேனென்று பணிந்தாள். தாயாகியபார்வதி இந்த வார்த்தையைச்சொன்ன அளவில், விட்டுணுமுதலானவர்கள்சந்தோஷத்தையடைந்துவணங்கி விடைபெற்றுக்கொண்டார்கள். எ-று.()

கலி விருத்தம்.

கோத மாச்சிர மந்தனிற் கோல்வளை
தீதி லாத்தவஞ் செய்தது செப்பினேன்
மேதி மாமுகக் காய்ந்ததும் வெள்விடைச்
சோதி பாக மடைந்ததுஞ் சொல்லுவேன்.

(இ-ள்.) சத்திதேவிகௌதமருடையஆச்சிரமத்தில்ஒழுங்காகிய வளையலணிந்தபார்வதிகுறைவிலாத தவஞ்செய்ததுஞ்சொன்னேன் பிறகு மகிடாசுரனைக்கொன்றதும், ரிஷபவாகனத்தையுடையசோதிஸ்வரூபராகிய சிவபிரானது இடப்பாகத்தைப் பார்வதி அடைந்ததுஞ் சொல்வேன். எ-று. (எஅ)

நான்காவது

திருக்கண்புதைத்தசருக்கம்

மூற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ஈஈச.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இடப்பாகம்பெற்ற சருக்க வசனம்.

இவ்வாறு பார்வதியார் கட்டளையின்படி துர்க்கையானவள் பார்வதியின் கணங்கள் சூழ்ந்துவரச் சென்று, மதிடாசுரனோடு அ கோரயுத்தஞ் செய்து அவனையும் அவன் சேனையையும் கொன்று பார்வதியாரிடத்தில் வந்து செய்தியைச் சொல்லத் தேவர்களெல் லோரும் சந்தோஷப்பட்டார்கள். பின்பு பார்வதியார் அருணசலே சுரருக்குக கார்த்திகைமாதத்தில் திருவிழாநடத்திவணங்கினவுடன் மலைமேல் ஒருபிரகாசம் உண்டாகி அதில் பரமசிவன் எழுந்தருளி பெண்ணே! இம்மலையைப்பிரதக்ஷணஞ்செய்யென்றுசொல்லி மறை ந்துவிட்டார். அப்படியே பார்வதியார் பிரதக்ஷணம் வரும்போது மேற்குத்திக்கில் பரமசிவன்ரிஷபவாகனரூடராய்த் தரிசனங்கொடு த்தார். அவ்விடம்விட்டு ஈசான்யதிசைக்குவரும்போது பரமசிவன் மறுபடியும் ரிஷபவாகனரூடராய்த்தரிசனங்காட்டி இடப்பாகத்தில் இருவென்றுகையிலுலேஅணைத்துக்கொண்டபோது, சுவாமியினு டையபாதி வலதுபக்கத்திலும் அம்மனுடையபாதி இடதுபக்கத்தி லுமாக, இரண்டுதேகமும் ஒருதேகமாய்ப் பிரகாசித்தது. இதைத்த ரிசித்த தேவர்களெல்லோரும் ஆனந்தம் அடைந்துவணங்கித் தோ த்திரஞ் செய்தார்கள்.

இடப்பாகம்பெற்ற சருக்க வசனம்

முற்றிற்று.

7. பார்வதிதேவியார் துர்க்கையைக்கொண்டு மகிடாசுரனைச் சம்மரிக்கச் செய்வித்த பின், பரமசிவன் பார்வதியார் தவத்துக்கிரங்கி இடப்பாகந் தந்து அர்த்தநாரீச்சுரரென்னு மியற் பெயருஞ் சூட்டப்பெற்றனர்



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது பார்வதிதேவியார்

இடப்பாகம் பெற்ற சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அஞ்சனக் கிரியில் வாழு
மசுரன்ரு னர்க்குந் தீர
னஞ்சமே யனைய னந்த
நமனக்கு நமனுய் வந்தோ
னஞ்சிகை யெரியைத் தீய்க்குந்
தீமையா னளகை நாட்டின்
விஞ்சையான் வருத்த வுள்ள
வளமெலாங் கவர்ந்த வீரன்.

(இ-ள்) நீலகிரியில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற அசுரன் எல்லாரிலும், அதிகபராக்கிரமத்தையுடையவன். விஷத்தினுக்குச்சமானமானவன், அந்தஎமனுக்கும் எமனுகவந்துற்பவித்தோன், சிவப்பாகி மேலேயெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச்சுடத்தகுந்த தீமையையுடையவன், அளகாபுரியில்குபேரன் தரித்திரத்தையடைய அங்கேயிருக்கிற வளங்களெல்லாங் கொள்ளையிட்டவன்.

தாமரைக் கண்ணன் றூங்கு
மாவினைத் தலைவால் கூட்டி
மாமணிக் கவண்போற் கொள்வன்
மன்னிவா கனத்தை வாங்கி
வேமழற் குஞ்சி மைந்தர்க்
குதவுவன் விமானத் தோடே
சோமனைப் பிடித்துக் கையாற்
பிழிந்தமு தருந்துஞ் சூரன்.

(இ-ள்.) விட்டுணு யோகநித்திரைசெய்கின்ற ஆதிசேடனைத்தலையையும்,வாலையும்,ஒருகையிலுல்சேர்த்துப்பிடித்து கவணைஅந்தவிட்டுணுவைக்கல்லாக்கித்தாரதத்தில்எறிந்துவிளையாடுவான்; அக்கினியைத்தள்ளிவிட்டுஅவனேறுகிறவாகனமாகியஆட்டைநெருப்பைப்போலச் சிவப்புமயிரையுடைய தன் பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான்; தனதுகையிலுல்சந்திரனை அவன்விமானத்துடன்பிடித்துப்பிழிந்து, அவனுடம்பிலிருந்துவருகிற தேவாமிர்தத்தைப் பானம்பண்ணுகிற சூரன். எ-று. (உ)

கருதிய மகவான் வெள்ளைக்
களிற்றின்மேற் றிரிவன் பின்னைப்
பரித்தே ரதனிற் பச்சைப்
பரிசெலப் பவனி போவா

நிருதியைச் சுமக்கு மானி
யேறுவ னிணத்தின் மூழ்கிக்
குருதிகொப் பளிக்கு வாளொன்
றெடுத்துயி ரினத்துங் கொல்வான்.

(இ-ன்.) உயர்வாகநினைக்கப்பட்டதேவேந்திரனுடைய ஐராவத மென்னும்வெள்ளையானையின்மேல்திருவோலக்கம்வருவான், பிறகு சூரியனுடையதேரிலேறிக்கொண்டு பச்சைக்குதிரைகளேழும் நடக்கப் பவனியாகப்போவான்; நிருதியைசுமக்கின்ற ஆளிவாகனத்தின் மேலேறிக் கொள்ளுவான்; நிணங்களால் மூழுகப்பட்டு இரத்தங்களைக் கொப்பளிக்கும் ஒருவாளாயுதமெடுத்துச் சருவசீவன்களையும் கொல்வான். எ-று (ரு)

அன்னவன் மகிடமான் வாற்றினு லஞ்சிக் காலத்
தென்னவன் மகிடமேறன் காலினுற் றிரிந்தானென்று
லென்னவன் கொடுமை நம்மா லியம்பலா மிலங்குஞ்சோதி
மன்னவன் கிரியைச் சாய்த்தான் மீனுக்க வாரிதூர்த்தான்

(இ-ன்.) அப்படிப்பட்டஅசுரன் எருமைமாட்டு முகத்தையுடையவனுயிருந்தபடியால்ஒவ்வொருவரின்முடிவுக்காலத்தையெதிர்பார்த்திருக்கும் தென்றிசைக்கதிபனுனவிபமன் தன் எருமைக்கடாவிலேறுமற்காலினுல்நடந்துதிரிந்தானென்றுல்அந்தமகிடாசுரனுடையகொடுமை நம்மாலெப்படிச்சொல்லக்கூடும்பிரகாசிக்கின்றசோதிசொரூபமாகிய சிவபிரானிருக்கிறகைலாயத்தையுஞ் சாயச்செய்தான் மீன்வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந்தூர்த்தான். எ-று. ()

மயனெனுந் தச்சன் செய்த மகிமா புரத்திலன்னு
னயனரு கரிசி நல்க விருக்குநா ளவனுக் காய
பயனுறு நுகர்ச்சி வேண்டி யாயிரம் படைக்கை யாளர்
கயமுதல் விலங்கை நாடி வேட்டையாக் கானிற்சென்றார்.

(இ-ள்.) மயனென்கிற தேவதச்சனால் இரத்தினகசிதமாகச்செய்யப்பட்ட மஹிடபுரத்தில் அந்தஅசுரன், பிரமதேவர் நித்தியம் அறுகும் அக்ஷதையுங்கொடுக்க வாழ்ந்துகொண் டிருக்கிறநாளில், அந்த அசுரன் தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம் பேர்கள்யானைமுதலான மிருகங்களைத்தேடிவேட்டைமாச்சுமாகக் காட்டுக்குப்போனார்கள். எ-று. (இ)

தானவர் சென்று வஞ்சி தவஞ்செய்கா னகத்தைச்சூழ
வானவர் பணியு மட்ட வயிரவர் தொலைத்தா ராவி
போனவ ரழிந்த வாறும் புரிகுழ றவமுங் தூத
ராணவ ரவுணர் கோவுக் கடிபணிந் தறிவித் தார்கள்.

(இ-ள்.) அப்படிவேட்டைக்கு வெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதிதவஞ்செய்துக்கொண்டிருக்கின்றவனத்தைச்சுற்றிக் கொள்ள, அதைக்கண்டுதேவர்கள்பண்கின்றகாவலாகவிருந்து அஷ்டவைரவர்கள் அந்தஆயிரம்பேரையுங்கொன்றார்கள்; அவர்கள்இறந்துபோனதும், சடையாகத்திரித்துக் கட்டிய கூந்தலையுடைய அம்மைதவம்பண்ணுகிறதும் தூதர்கள்மஹிடாசுரன்பாதத்தைவணங்கித் தெரிசித்தார்கள். எ-று. (ஈ)

போற்றியங் கவர்கள் செல்லப் புகைநகை பிறந்ததங்கி
தூற்றிய விருக ஞண்டகோளமுஞ் சுழன்ற தங்கே
நாற்றிசை யின்வேழ நடுங்கிய திமையோர் கூட்டங்
கூற்றமுங் கரந்ததால காலமுங் குளிர்ந்த தன்றே

(இ-ள்.) தூதர்கள்வணங்கிநடந்ததைதெரிவித்தளவில் புகையுண்டாகும்படி கோபச்சிரிப்புமுண்டாயின; இரண்டுகண்களும்நெருப்புப்பொறிகள் பறக்கவீசின; அண்டகோளங்களெல்லாம் நிறுவிறென்றுசுழன்றன அஷ்டதிக்கிலிருக்கிறயானைகளும்தலையைத்தொங்கப்போட்டனதேவர்கூட்டம்நடுக்கத்தையடைந்தது, எமனும் ஒளித்துக்கொண்டான், ஆலகாலவிஷமுங் குளிர்ந்தது. எ-று. (எ)

அப்படி மகிடன் சீறு
மளவினி னிகும்ப னென்போன்
செப்பிடு முனது கோபம்
பொருப்பரோ சிறிய ரென்றே
முப்புடை யிளநீ ரென்னு
முலைச்சிவாழ் வனத்து ளாரைக்
கைப்படை யதனுற் கொல்வே
னெனச்சொலிக் கடிது போனான்.

(இ-ள்.) அவ்வாறு மகிடாசுரன்கோபிக்குமளவில் நிகும்பாசுர னென்கிற படைத்தலைவன் அரசனே! உம்முடையகோபத்தை அற் பமானவர்களாபொறுப்பார்கள்யோசித்துச்சொல்லும் என்றுசொல் லி, தெங்கினது மூன்றுபக்கங்களுடைய இளநீர் ஒத்ததனமுடைய பார்வதிதவஞ்செய்கின்றவனத்திலிருப்போரைக் கையிலிருக்கின்ற வாளால் கொன்றுவருகிறேனென்று சேக்கிரத்திற் புறப்பட்டுப்போ னான். எ-று. (அ)

குடதிசைக் கடலிற் சீறிக்
குணதிசைக் கடல்சென் றென்ன
நெடியதேர் கரிமா சேனை
யெழுந்தன நிகும்ப னென்போன்
வடகிரி தனக்குங் கும்ப
மாமுனி மலைக்கு நேரே
யிடையொரு கரிய மேரு
வெழுந்ததா மென்னச் சென்றான்.

(இ-ள்) மேற்குத்திசையிலுள்ளசமுத்திரத்தின்மேற்கோபித்து கிழக்குத்திக்கிலுள்ளகடல் சண்டைசெய்யப்புறப்பட்டதுபோல் பெ

ரியதேர்களும், யானைகளும், குதிரைகளும், காலாள்களும்புறப்பட்டன; நிகும்பாசுரன் மகாமேருவுக்கும் கலத்திற்பிறந்தஅகத்தியரிருக்கின்ற பொதியமாமலைக்குமத்தியில் நிறைந்த ஓருகரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாகப் போனன். எ-று. (கூ)

வே று.

எழுந்தவனு மரகதத்தேர் துரகத
மாயிரம்பூண்ட விரத மேறி
வழிந்தகரி மதக்கடலை யெழுந்ததுக
ளடக்கவுமை வனத்திற் சென்றான்
கொழுந்துவிடுங் கனலம்பூயார் வரவுகண்டு
பலகோடி குன்றம் வீசித்
தழைந்தபடைத் தாக்கணங்கு நோக்கணங்கும்
பொருதெதிரே தடுத்தன றன்றே.

(இ-ள்.) இவ்வாறுபுறப்பட்ட நிகும்பாசுரன் பச்சைக்குதிரைகள் ஆயிரங்கட்டியதேரிலேறிக்கொண்டுஅப்பொழுது எழும்பிய சிறு அணுக்கள் முன்போகின்றயானைகளின்கன்னம், கபோலம், பீஜங்களாகிற இவைகளினின்றும் போகிறமதஜலம் சமுத்திரமாகத்தேங்கியிருப்பதை வற்றசெய்ய, பார்வதிதவஞ்செய்யும் வனத்திற்குப் போனன், கொழுந்துவிட்டெறியுநெருப்பையொத்த அசுரப்படைகள் அநேககோடிமலைகளேவிட்டெறிய இவர்கள்வருவதுகண்டுஅம்மையாரிடத்திலிருக்கிற தாக்கணங்குநோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப்போய் எதிரேதடுத்தார்கள் எ-று. (சு0)

சண்டனுருத் திரன்சோமன் கபாலிங்கர்
சங்கரன்கோ தண்டன் வீர
னெண்டகைய சித்திராங் கதனென்னும்
வயிரவர்க ளிருநாள் வோரு

மண்டமுக டுடையநகைத் தானைகளைத்
தொலைத்திட்ட வரிகள் போலக்
கண்டகனுஞ் சாரதியுந் தேருமன்றிச்
சேனையெல்லாங் கணத்திற் சாய்த்தார்.

(இ-ள்.) சண்டன், உருத்திரன், சோமன், கபாலி, தனக்குத்தானே ஒத்தசங்கரன், கோதண்டன், வீதன், மஹா சுத்தவீரனென்று மதிக்கத்தக்கசித்திராங்கதன் இவ்வெட்டுவையிரவர்களும் அண்டகோளகைகளுமுடைபட யானைகளைக்கொல்லுகிறசிங்கங்கள்போலக் கர்ச்சித்து, நிகும்பாசுரனும் அவன்சாரதியுந்தேருந் தவிர மற்றச்சேனைகளையெல்லாம் கொடிப்பொழுதில் கொன்றார்கள். எ-று. (கக)

அட்டவயி ரவர்படையா லணங்குகளாற்
றனதுபடை யழித லுணர்ந்து
வட்டநெடுந் தேர்மூடுக்கித் தாக்கணங்கின்
முகத்திலெண்ணில் வாளி கோத்தான்
விட்டகணை களைவிலக்கித் தேருருட்டுஞ்
சாரதியை வீழ்த்தி வாளி
தொட்டகரங் களைப்பிடுங்கி யவனுயிரைக்
குடித்தனளச் சூர மாது.

(இ-ள்.) எட்டுவையிரவர்களுடையஆயுதங்களினாலும் இரண்டுதெய்வப்பெண்களாலும் தன்னுடைய படைமுழுதும் இறந்து போவதைப்பார்த்து நிகும்பாசுரன் தெடியதேரை சக்கரமாக விட்டுக்கொண்டு தாக்கணங்கென்பவளுடையமுகத்தில் கணக்கில்லாத பாணங்களைவிட்டான்; அப்படி அவன்விட்டபாணங்களைவிலக்கித் தேர்நடத்துகிற சாரதியைக்கொன்று அம்புதொடுத்த கைகளையறுத்து அவனுடையதலையையும்அறுத்துக்கொன்றாள் அந்தத்தாக்கணங்கு. எ-று.

ஓடினசெங் குருதிநதி யுடலிழந்து
விழுமவுண ருயிர்கள் போல
வாடினவெங் குறைத்தலைக ளனுதினமு
மருந்துகின்ற வலகை போலச்
சூடினர்கள் வைரவருந் தாக்கணங்கு
நோக்கணங்குந் தும்பை வாகை
வீடினர்க ளவுணரென மகிடமுதற்
குரைத்தனர்போய் விரைந்து தூதர்.

(இ-ள்.) வயிரவர்களாலும்இந்தஇரண்டுதெய்வப்பெண்களாலும்தேகமறுபட்டுச் சீக்கிரத்தில்போகுமசுரருயிர்போல்இரத்தநதிஓடியது; நித்தியம்மாமிசத்தைத்தின்று கூத்தாடுகிறபேய்போல் கொடியகவந்தங்கள்கூத்தாடின;வயிரவர்களும், வெற்றிக்குறிகளாகியதாக்கணங்கும்நோக்கணங்கும் தும்பைவாகையென்கிறமாலைகளைச்சூட்டிக்கொண்டார்கள்; அசுரர்களிறந்துபோனார்களென்று மகிடாசுரனுக்குத் தூதர்கள் சீக்கிரத்திற்போய்ச் சொன்னார்கள். எ-று. (கங)

கேட்டளவின் மகிடமுகன் கயிடவன்றன்
முகநோக்கிக் கிளத்து வானோர்
காட்டிலுறை சிறுபேயுங் கணங்களுநம்
பெரும்படையைக் கடிந்த வென்று
ளைட்டறுத லயனரியு மெனக்கினிமேற்
றிறை கொடுக்க நாணுவாரென்
றீட்டிநகை புரிந்தெழுந்தா னேறினனு
யிரங்கரிசூ ழிரத மீதில்.

(இ-ள்.) மகிடாசுரன் இவ்வார்த்தையைக்கேட்ட அளவில் தன்னருகிலிருக்கும் கயிடவன்முகத்தைப்பார்த்துச்சொல்லுவான் ஒரு

காட்டிற்சஞ்சரிக்கிற சிறியபேய்களுங்கணங்களும் நம்முடையபெரி யசேனைகளைக்கோபித்துக்கொன்றனவென்றுல்நெற்றிக்கண்ணரா கியசிவனும்சிவன்;பிரமன், விஷ்ணுமுதலானவர்கள் எனக்குக்கொ டுக்கும்திறைப்பொருளைக்கொடுத்து, நான்சொன்னபடிகேட்பார்க ளோவென்று அதிகமாகியகைக்கொண்டெழுந்திருந்து ஆயிரம்யா னைகள்கட்டிய தேரிலேறிக்கொண்டான். எ-று. (கச)

வே று.

பதினெரு கோடி யானைப்
பலத்தராங் காந்த னீலன்
முதுகரன் குருதி யண்ட
னீசகன் சண்டன் முண்டன்
மதுகயிட வன்றீக் கண்ணன்
புகைக்கணன் மாலி யென்னுந்
துதிகொளா நிரண்டு பேருந்
தேர்களைத் தூண்டிச் சென்றார்.

(இ-ள்.) மஹிடாசுரன் தேரிலேறினவுடனே, பதினெருகோடி யானைப்பலத்தையுடையவராகிய காந்தன்,நீலன்,முதுகரன்,குருதி அண்டன்,நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன், மாலியென்று பலரும்துதிக்கப்பட்ட பன்னி ருவரும் தங்கள் தங்கள் இரதங்களைநடத்திக்கொண்டு போனார்கள்.

கரிமுகத் தவர்நி வாத கவசர்கள் காலகேயர்
பரிமுகத் தவுணர் மேதிப் பணைமுகத் தவர்கள் பற்றி
யெரிமுகத் தவுணர் சீறி யெழும்புலி முகத்துக் கள்வ
ரரிமுகத் தவுணர் வெள்ள மாயிரஞ் சென்ற வன்றே.

(இ-ள்.) யானைமுகத்தையுடையவர்கள்,நிவாதகவசர்கள், கால கேயர்கள்,குதிரைமுகத்தையுடைய இராக்கதர்கள். எருமை முகத் தையுடையவர்கள்நெருப்பெறிந்துகொண்டிருக்கிறமுகத்தையுடை

யவவுணர்கள், நிறப்பாய்கின்றபுலிமுகத்தையுடையவர்கள், சிங்கமுக
த்தையுடைய இராக்கதர்களாகிய அசுரர்கூடிய ஆயிரம்வெள்ளம்கட
ந்தன. எ-று. (கசு)

பாய்பரி யதனிற் பாதி பரிகளிற் கரிகள் பாதி
காய்கரி யதனிற் பாதி கடும்பரிக் கொடுந்தேர் செல்லப்
பேய்கருங் கொடிகளாடப் பிணங்கிவெண் கொடிகளாட
வேய்களப் பறைகளார்ப்பக் குறுகினன் விந்தைகானில்.

(இ-ன்.) இப்படி ஆயிரம் வெள்ளங்காலாட்கள் புறப்பட்டவுட
னே, ஐந்நூறுவெள்ளங்குதிரையும், இருநூற்றைம்பதுவெள்ளம்யா
னையும், வேகமாகச்செல்கின்ற நூற்றிருபத்தைந்துவெள்ளந்தேரும்
கடக்கப்பேய்களும் காக்கைகூட்டமும் விருந்தகப்படுமென்று களித்
துகூத்தாடவெள்ளோக்கொடிகளாடப்புள்ளாங்குழல்பேரிகை இவை
முதலான வாத்தியமுழங்க மகிடாசுரன்அம்மை இருக்கிற காட்டில்
வந்து சேர்ந்தான். எ-று. கள)

அடலவன் வரக்கண் டஞ்சி
யடைந்துமைக் கபயமென்று
படருறு முனிவர் கூற
வுமையவள் பயங்க டீர்த்து
விடலுட னருகு நின்ற
விந்தையை விரும்பி நோக்கிக்
கடகங்கொண் டடுவா யென்றான்
விடைகொடு பெயர்ந்தாள் கண்ணி.

(இ-ன்.) வல்லமைபொருந்திய மகிடாசுரன் வருவதைப் பார்த்
துப் பயப்பட்டு ஓடிவந்துபார்வதிக்கு அபயமென்று மிக்க தன்பத்
தையனுபவிக்கும் முனிவர்கள் முறையிட்டுச்சொல்ல, அம்மைஅவர்
களுடையபயங்களைத்தீர்த்து உடனேதன்சமீபத்தில்நின்றபெருமை

பொருந்திய துர்க்கையைப்பார்த்து உன்னுடையகத்தியினாலே அவ்வசுரனைக்கொன்றுவிடென்று சொல்ல உத்தரவுபெற்றுப் புறப்பட்டாள் துர்க்கை. எ-று. (கஅ)

ஆளிமேற் கன்னி செல்ல
வருணநா யகிமுன் செல்லக்
காளிதுந் துமிபின் செல்லச்
சுந்தரி கணங்கள் செல்ல
ஞாலிமேல் வடுகர் செல்ல
நான்முகி முதலா மாதர்
தூளிமேற் செல்லத் தாங்கள்
விடையின்மேற் றூசிச் சென்றார்.

(இ-ள்.) துர்க்கைசிங்கவாகனத்திலேறிக்கொண்டுபோக, அருணாயகியென்பவள் முன்னேபோகவும், காளி, துந்துமி என்கிற இருவரும் பின்னேபோகவும், பார்வதியின் கணங்களும் வீரர்களும் போகவும், சுவானவாகனத்தில்வயிரவர்போகவும், பிராமிமுதலாயினமாதரெழுவரும் தங்கள்தங்கள்வாகனங்களிலேறிக்கொண்டு தூசிப்படையாகத் தூளிமூடும்படி போனார்கள் எ-று. (கக)

சென்றுதோ மரத்திற் குன்றிற்
சிலைகளிற் படையிற் கையிற்
கன்றிய மகிடன் சேனைப்
பாதியைக் கணத்திற் சாய்த்தார்
வன்றிறன் மகிடன் சேனைத்
தலைவரும் மகிடன் முனிந்
குன்றென வெதிர்த்து கன்னிப்
படையெலாந் தூசத்திச் சென்றார்.

(இ-ள்.) இப்படித்துர்க்கைசேனைகள்போனவுடனே உல்க்கை யிஞலும்,மலைகளாலும்,வில்முதலாகியபிறஆயுதங்களாலும்.கைகளி ஞலும் கோபத்துடனேபோர்செய்கிற மகிடாசுரனுடையபாதிச்சே னையை ஒருகொடிப்பொழுதிலே கொன்றுவிட்டார்கள்; மகிடாசுர னும் அவனுடையசேனைத்தலைவர்களும் மலைபோல்எதிர்த்துத் துர்க் கையின் சேனைகளையெல்லாம் துரத்திச் சென்ருர்கள். எ-று. (உ o)

துந்துமி முதலா நால்வ ரிடைந்தனர் சூலியால
கந்தரி வராகி யாறுமுகத்தவ டிகிரிக் கையா
னிந்திரை மறையா ளென்னு மெழுவரு மடைறந்தார் ஞாளி
யுந்தினரிடைந்தார் கண்ணிமனந்தளர்ந்துமையேயென்ருள்

(இ-ள்.) அசுரனதுபடைகள் எதிர்த்து யுத்தஞ்செய்த அளவில் துந்துமி, காளி, மதங்கி, சண்டி என்கிற நான்குசத்திகளுந் தோற் ருர்கள், சூலி, நீலகண்டி,வராகி,கௌமாரி. சக்ராயுதத்தைத்தரித்த நாராயணி, இந்திரைபிராமியென்கிறஏழுமாதருமம்யுத்தஞ்செய்யமா ட்டாமற்காட்டிலொளித்தார்கள்; சுவானவாகனத்தையுடைய வயிர வர்களும்தோற்ருர்கள், துர்க்கைமனந்தளர்ந்துஉமாதேவியேயென் ரு தியானித்து நின்ருள். எ-று. (உக)

உறுதுணை யுமையே யென்னும்
பொழுதில்யோ கினிகள் வானி
லறுபது நாலு கோடி
யதிர்த்தெழுந் தழலின்மாரி
பிறுதியா யுருளச் சேனை
யிடிமழை சொரிகை யாலே
குழுகிய மகிடன் சேனைத்
தலைவருங் கொதித்துச் சென்ருர்.

(இ-ள்) துர்க்கையானவள் இக்காலத்தில் அம்மையே! நமக்குத்துணையென்றபோது அறுபத்து கான்குகோடியோகினிகள் ஆகாசத்திலார்ப்பரித்தெழுந்து கெருப்புமழையையும், இடிமழையையும் உகாந்தகாலமழைபைப்போற் சொரிந்தபடியினல் மகிடாசுரனுடைய சேனைகளெரிந்து போயின; அப்பொழுது சேனைத்தலைவர்கள் கோபித்துச் சண்டைசெய்தார்கள். எ-று. (உஉ)

கலி விருத்தம்.

அருகி கன்றனைச் செற்றன ளாரணி
மருவு காந்தனை மாய்த்தனள் வாரணி
கரனை வென்றனள் வேலுடைக் காரணி
நகர னருயி ருண்டன ணூரணி.

(இ-ள்.) அப்படிமகிடாசுரனுடைய சேனைத்தலைவர்களெதிர்த்தவுடனே அபிராமியென்பவள் அருகிகனென்பவனைக்கொன்ருள்; வாரணியென்பவள்வலிபொருந்திய காந்தனென்பவனைக்கொன்ருள்வேலாயுதத்தைகையிலேந்தியசண்முகியென்பவள் கரனென்னும் அசுரனைக்கொன்ருள் நரகன்என்னும் அசுரனை நாரணியென்பாள் கொன்ருள். எ-று. (உங)

சூல பாணி தெரிலத்தனன் மிண்டனைக்
கோல மாமுகி சண்டனைக்கொன்றன
ளால வூணி மதுவை யழித்தன
ணீல னருயி ரிந்திரை நீக்கினுள்.

(இ-ள்.) சூலாயுதத்தையுடைய காளியென்பவள் மிண்டனென்பவனையும், பெரியபன்றிமுகத்தையுடையவராகி சண்ட னென்பவனையும், விஷத்தையுண்ட நீலகண்டி மதுவென்னுமசுரனையும் இந்திராணி நீலனென்பவனையுங் கொன்ருர்கள். எ-று. (உச)

துந்து மிக்கொடி சோணித வூணனைக்
கந்து மிக்கும் படிக்கதை காட்டினு
ணந்து மிக்க நிகர்த்தரு ணுசலை
வந்து மிக்கெரிக் கண்ணனை வாட்டினுள்.

(இ-ள்.) துந்துமிக்கொடியையுடையவள் சோணித வுணனென்பவனைத் தலையறும்படி தண்டாயுதத்தா லடித்தாள், சங்கத்தைக் கையிலேதரித்த அருணசலையென்றவள் அக்கினிக்கண்ணனைக்கொன்றாள். எ-று. (உரு)

கயிட வன்புகைக் கண்ண னிருவருஞ்
செயிரின் மாளுறச் சிந்தினள் சுந்தரி
நெயிடு மிக்க நிணமிடு வேலினண்
மயிட வன்முகங் கண்டெதிர் வந்தனள்.

(இ-ள்.) சுந்தரியென்கிறசத்தியானவள்கயிடவனையும், புகைக் கண்ணனையும்யுத்தத்திற்கொன்றாள்;நெய்பப்பொழிகின்றமிகுந்த நிணம்பொருந்திய வேலாயுதத்தையேந்திய துர்க்கை மகிடாசுரனைக்கண்டு எதிர்த்துவந்தாள். எ-று (உசு)

வெங்கடா முகன் மேவலு மாதர்க
டங்க ளாயுதங் கொண்டு தடுத்தனர்
சிங்க வூர்தி யவனெதிர் சென்றுகைச்
சங்கை யூதினண் மேரு சலிக்கவே.

(இ-ள்.) வெப்பம்பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய ஓர் அசுரன் யுத்தத்துக்குநேரிட்ட அளவில் சப்தமாதர்களும், தங்களாயுதங்களினுல் அவன்விட்ட ஆயுதங்களைவிலக்கினர்கள்; அவ்வேளையில் சிங்கவாகனத்திலேறிவந்த துர்க்காதேவியானவள் யவனுக்கெதிரேபோய்த் தன்கையிலிருக்கிறசங்கத்தைமகாமேரு அசையும்படிவாயில்வைத்து ஊதினுள். எ-று. (உஎ)

செருவி லங்கவள் சங்கொலி செய்திட
வொருவ ரின்றி யவுண ருறங்கினர்
பெருவ ரங்களிற் பெற்ற சரங்களா
லிருவருஞ் சொரிந் தார்மழை யென்னவே.

(இ-ள்.) வல்லமைபொருந்திய சிங்கவாகனத்தையுடைய துர்க்கையானவள் யுத்தகளத்தில் சங்கத்தொனிசெய்யஅசுரர்களொருவரும் இல்லாமல்மயக்கத்தையடைந்தார்கள்; அருமையாகியபெரியவரத்தினால் பெற்றுக்கொண்ட பாணங்களே இருவரும் மழைபோலச் சொரிந்தார்கள். எ-று. (உஅ)

எந்த வெந்தக் கணையிவ ளேவினு
மந்த வந்தக் கணையா லறுத்தனன்
விந்தை மீண்டிரு வெம்பிறை வாய்க்கணை
சிந்தி னளவன் செண்ணி யழுந்தவே

(இ-ள்.) எந்தெந்தப் பாணங்களைத்துர்க்கைவிட்டாலும்அவைகளை அந்தந்தபாணங்களினாலே மகிடாசுரன் அறுத்துத் தள்ளினான் அதன்பிறகு துர்க்காதேவி பின்னும் இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடையசிரத்தில்அழுந்தும்படியாகவிட்டாள். எ-று.(உக)

வெம்பு செம்புனல் வெள்ள முருக்கிய
செம்பு போலச் சிதற விடுங்கணை
யம்பு போல விருக்கினு மாங்கவன்
கொம்பு போல விளங்கின கோடியே.

(இ-ள்.) கொடியயுத்தகளத்திலோடும் இரத்தவெள்ளம்உருக்கினசெம்புபோல் சிதறிவிழவிட்ட அர்த்தசந்திர பாணங்கள் அம்பாகவிருந்தாலும் அசுரன் தலையில்முளைத்திருந்த கொம்பிரண்டுபோல் தலையில்தைத்து அழுந்திவளைந்து தோன்றின. எ-று. (ஈ0)

வெற்றி கொண்டவள் வில்லை முறித்தனள்
ஊற்ற வம்பிற் சிலைதுத லொன்றினள்
கொற்ற வம்பின் குலங்கள் விடுத்தவ
னெற்றி யிற்கண ணழலி னிமிர்ந்ததே.

(இ ள்.) ஜெயங்கொண்டவளாகிய துர்க்கையின் கையிலிருந்தவில்லையிரண்டாகமுறித்தான், அந்தவில்லினால் அசுரனுடையநெற்

றியில் அடித்தாள்; மிகப்பலம்பொருந்தியபற்பலஅம்புகளேவிட்டவ ளுடைய அந்தமகிடாசுரன்நெற்றியில் சுவாமியினுடையநெற்றிக்கண் நெருப்புப்போலச் சுறுக்கென்று தாக்கியது. எ-று (கூக)

சாப வெஞ்சிலே போகத் தரிப்பளோ
கோபம் விஞ்சிக் கொதித்தெழு கூற்றத்திற்
றீப மென்னத் திகிரியொன் றேவியே
பாப காரி தலைவிழப் பண்ணினாள்.

(இ-ள்.) தர்க்கையானவள்கொடியதுற்சாபமென்னும்பெயரு டையதுமாகியவில்லொடிந்ததும் பொறுக்காமல்அதிகோபங்கொ ண்டுகொதித்தெழும்பும் எமன்போல்பிரகாசிக்கின்ற அக்கினிச்சுட ர்போன்ற ஒருசக்கிராயுதம்விட்டுப் பாவியாகிய மகிடாசுரனுடைய தலையறும்படி செய்தாள். எ-று. (கூஉ)

கன்னி யாழி யெறியக் கடாமுகன்
சின்ன பின்னங்க ளாயுஞ் சிதைந்திலன்
முன்னை மாதவத் தண்மையின் மும்மதந்
துன்னு மால்கரி யாயெதிர் தோன்றினான்.

(இ-ள்.) என்றும் அழிவில்லாத தர்க்கையானவள் சக்கிராயுத த்தைவிட்டெறிய, மகிடாசுரன் தேகஞ்சின்னபின்னமாயும் சாகா தவனுகிப் பூருவகாலத்திற்செய்த தபோபலத்தினல்மும்மதங்களேப் பொழிகிற பெரியயானேயுருவங்கொண்டெதிராகவந்தெதிர்த்தான்.

ஆளி யேறு சென் றங்கத னுச்சியின்
மூளை வாரி நுகர்ந்தது மொய்ம்பினன்
மீளவுங் கதைகொண் டெதிர் வீசினன்
கூளி காயகி கூரவே லேவினாள்.

(இ-ள்.) அப்படியானேயுருவங்கொண்டெதிர்த்தஅளவில் தர்க் கையேறுகின்ற ஆண்சிங்கம்போய் அந்தயானேயுச்சியி லிருக்கின்ற

மூலையைக்கையினல்அறைந்து தோண்டியெடுத்துத்தின்றது, அதி கதிடகாத்திரமுள்ளமானிடசூரன் அதனலேயுஞ்சாகாமற்கையினல் திரும்பியுந்தண்டாயுதங்கொண்டெறிந்தான், பேய்களுக்கதிகாரியா யிருக்கிற துர்க்காதேவி கூர்மை பொருந்திய வேலாயுதத்தை விட் டாள். எ-று. (ஈச)

விடந்த தும்பிய வேல்பட வெஞ்சமர்க்
கிடைந்த தும்பி முகனு மிறந்தன
னடைந்த தும்பிக ளாயிர மாயிரங்
குடைந்த தும்பி மரமெனக் குன்றியே.

(இ-ள்.) விஷத்தைக் கக்கிக்கொண் டிருக்கிற வேலாயுதம்பாய் ந்தவுடனே கொடியயுத்தத்தில் அபஜெயப்பட்டுநின்ற யானைமுகன் அதைச்சகிக்கமாட்டாமல் இறந்துவிட்டான்; அநேகமாயிரம்வண்டு கள்குடைய வுள்ளேயொன்றுமில்லாமற்றேளோகூடிய அத்தி மரம்போல் குன்றினன். எ-று. (ஈடி)

வீழ்ந்த பின்பரி வேடம தாயெதிர்ப்
போந்து வெங்கதை கொண்டு புடைத்தனன்
சேர்ந்த வன்கதை யும்மவன் சென்னியு
நேர்ந்த கங்கொண் டறுத்தன ணுரணி.

(இ-ள்.) அப்படிவிழுந்து இறந்துபோனவுடனே, குதிரைமுக முள்ள அசுரனுடி யெதிரேவந்து கொடிய தண்டாயுதத்தினல் அடி த்தான்; அவ்வாறுஅடித்த தண்டாயுதத்தையும் அவனுடைய சிரசை யும் கத்தியினல் அறுத்துத்தள்ளினன் துர்க்கையும். எ-று. (ஈசு)

அங்க தன்பி னழலுரு வாயினன்
கங்கை யாயினன் காரிரு ளாயினன்
பங்க யாசன னுயினள் பங்கய
மங்கை நாயக னுயினன் மாயையால்.

(இ-ள்.) அதன்பின்பு அசுரன் தெருப்புருவங்கொண்டுவந்தான் அதன்பின்பு சலப்பிரளய ரூபங்கொண்டும்அந்தகாரமாகியும், தாம

ரைப்புட்பத்திலிருக்கின்ற பிரமனுகியும், செந்தாமரைமலரில் வசிக்கும் இலக்குமிநாயகராகிய விட்டுணு மூர்த்தியாகியும், எதிர்த்தான் மாயையினுலே எ-று. (நூஎ)

சது கண்டவ ளென்செய்வண் மாயையால்
வாதை செய்தள னென்றுத ளந்துமை
பாத நெஞ்சினிற் பற்றினள் பற்றிய
போதி லோர்மொழி விண்ணிற் புகன்றதே.

(இ-ன்.) அப்படி அசுரன் பலபலவடிவங்கொண்டு வருவதைப் பார்த்து மாயையினுலே துன்பப்படுத்துகிறன். என்ன உபாயஞ்செய்தாலும்இவன்சாகிறதில்லை, இதற்கென்னசெய்வேனென்றுதுர்க்கையானவள் பார்வதிதேவியினுடைய இரண்டு பாதங்களையும் மனத்திலேதியானித்தாள்; அப்படிதியானித்தவுடனேஆகாயத்தில்நின்றும் அசரீரி ஒருவாக்கியஞ் சொல்லிற்று. எ-று. (நூஅ)

மாய வேடங்க ளன்றி மகிடமே
யாய போதி லவன்றலை தள்ளியே
தூய தாளின் மிதிக்கத் தொலைந்திடும்
தீய மாயையெனச் சொலத் தேறினள்.

(இ-ள்.) அநேகவிதமானமாயவேஷங்களல்லாமல்சுபாவவடிவமானஎருமைமுகரூபங்கொண்டபோது, அவன்தலையையறுத்துக்கீழேதள்ளி உனதுபரிசுத்தமாகியகாலினுலே மிதித்தால், தீமைபொருந்தியமாயைதொலைந்துபோமென்றுசொல்ல துர்க்கைதேறினள்.

மட்டின் மாயை வடிவின் மலைந்தபின்
னெட்டி லைத்தலைச் சூலத்தி னீக்கினன்
திட்டன் மேதிய தாய்படை தொட்டனன்
வெட்டி வீழ்த்தி யடியின் மிதித்தனள்.

(இ-ள்.) அளவில்லாத மாயரூபங் கொண்டுவந்து பெருத்தயுத் தஞ்செய்தபிறகு கெடுமையான தகட்டுவடிவாகச்செய்யப்பட்ட சூல த்தினுற் குத்திக்கொன்ருள். பின்பு அத்துஷ்டன் பழையஎருமைக் கடாமுகத்தையுடையவனுகி ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்த அள வில், அவைகளைவிலக்கி வாளாயுதத்தால் தலையைவெட்டித்தள்ளிக் காலினுல் மிதித்துக்கொன்ருள் துர்க்கை. எ-று. (சுo)

ஒப்பி லாப்பத மூன்றி மிதித்திடில்
தப்பின் மாயை தவிர்ப்பது பாரமோ
வப்ப தத்தை நினைக்கினு மாணவஞ்
செப்பு காமிய மாயையுந் தீர்க்குமே.

(இ-ள்.) துர்க்கை பாதத்தை நினைத்தாலும், அதை நினைத்தவ ருடைய ஆணவம், மாயை, காமியம்என்கிற மும்மலங்களையும் நீக்கி விடும்; அப்படிப்பட்ட ஒப்பில்லாதபதம்பரிசமாகும்படி ஊன்றிமிதி த்தால் பொய்யாகியமாயைமாத்திரந்தவிர்த்தொழிவது பெரியதோ.

போத வானவர் பூமழை பெய்தனர்
மேதி மாமுகன் மெய்க்கதி யுற்றனன்
தீதி லாவவன் செங்களந் தன்னிலோர்
சோதிலிங்க மிருந்தது தோன்றவே.

(இ-ள்.) தேவர்கள் மிகவும் புட்பவருஷம்பொழிந்தார்கள்; மகி டாசுரனும் அம்மைகையிலுலிறந்ததலுலே மெய்ம்மையானமோட்ச த்தைச்சேர்ந்தான்; யாதொரு குற்றமில்லாத அவன்சிவப்பாகிய க ண்டத்தில் ஒரு ஜ்யோதிர் மயமாகிய படிகலிங்கமிருந்தது. எ-று.(

கண்ட மட்டிலக் கைக்கொளக் கார்நவ
கண்ட மட்டிற் புரந்த கடாமுகன்

கண்ட மட்டி லிருந்த கடவுளைக்
கண்ட மட்டி லெடுத்தனள் கன்னியே.

(இ-ள்.) ஒன்பதுகண்டங்களையும்ஆண்ட ஒருமைக் கடாமுகத் தையுடைய மகிடாசுரனதுகழுத்தை இலக்காகவைத்துத் தர்க்கை அறுக்க, அக்கழுத்திலிருந்த படிகலிங்கத்தைக்கண்டபோதே கையி னலெடுத்தாள். எ-று. (சசு)

கொண்டு சென்றுமை கோகந கப்பதங்
கண்டு போற்றிக் கடவுளை யீந்தனள்
வண்டு வார்குழல் வாங்கினள் செங்கையை
யண்டர் நாயகன் விட்டில ணைசையால்.

(இ-ள். அப்படிப்பட்டபடிகலிங்கத்தைஎடுத்துக்கொண்டுபோ ய் உமாதேவியின்தாமரைமலர்போன்ற பாதங்களைத்தொழுது நட்ந் தகாரியமெல்லாஞ்சொல்லிச் சுவாமியைக்கொடுத்தாள்; வண்டுகள் சூழ்ந்திருக்கின்ற நீண்டகூந்தலையுடையபார்வதி கையினால் வாங்கி னாள்; தேவர்கட்கெல்லாம்நாதராகவிருக்கின்ற சுவாமியும் அம்மை கைமேல்வைத்திருக்கிற ஆசையினால் செந்தாமரை மலரையொத்த கையைவிடாமற் கெட்டியாக விருந்தார். எ று. (சசு)

தாயு மங்கது கண்டு மகிழ்ந் திறை
யேய றிவென்கரம் பற்றிய தேதென
வாயை யங்கை புதைத்து மகபதிக்
காயி ரங்கண் ணளித்தவன் கூறுவான்.

(இ-ள்.) பார்வதி, அந்தஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடை ந்து; பரமசிவம் அன்புடனே என்கையைவிடாமலிருந்தது எதனால் என்றுகேட்க, தேவேந்திரனுக்குஆயிரங்கண்கொடுத்தகௌதமர்வா யைக்கையினால் பொத்திக்கொண்டு அம்மைக்குச் சொல்லத்தொட ங்கினார். எ-று. (சஎ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூன்மகத் தியன் தாமுமுனிவர்களோம்
பதின்மர்வர முனிபாற் செல்ல
வன்னவன்றன் றவன்மதிப்பா லவமதிப்பா
மிருந்திடவு மவரை நோக்கிப்
பொன்னனைய தவமுனிவர் வெகுண் டுரைப்பா
ரெமை யிகழ்ந்த புன்மையாலே
யுன்னரிய கருங்கடவா யினிப்பிறக்கக்
கடவாயென் றுளையச் சொன்னார்.

(இ-ள்.) முற்காலத்தில் அகத்தியர் முதலானஐம்பதுமகரிஷிகள்கூடி, வரமுனி யென்பவருடைய ஆச்சிரமத்திற்குப் போனார்கள் அந்தவரமுனி தம்முடைய தபோபலத்தினால் மரியாதையாக உபசாரம் செய்யாமலவமதித்திருந்தார்; அப்போது அவரைப்பார்த்துபொன்போலும் அரியதவத்தையுடைய எல்லாமுனிவர்களுங்கோபித்து எங்களை அவமரியாதை செய்தகுற்றத்தினால் யாவராலும் குறைவு சொல்லப்பட்ட கரிமுகருமைக்கடாவாகப்பிறப்பாயென்றுஅவர்கள் மனம் வருந்திச்சபித்தார்கள். எ-று. (சஅ)

அருந்தவரைம் பதின்மருமன் றுரைத்தமொழிக்
கொடுமை யைக்கண் டச்சமாகி
யிருந்தவனு மெழுந்துபணிந் தெனதுபிழை
பொறுத்தருள்வீ ரென்ரு னந்தப்
பெருந்தவரன் புடனுரைப்பா மகிடமுகத்
தவுணனெனப் பிறந்து பின்னர்த்
திருந்தவர னிடம்வேண்டித் தவம்புரியு
முமைகணத்திற் றீர்ப்பா ளென்ரூர்.

(இ-ள்.) அரியதவத்தினையுடைய ஐம்பதுமுனிவர்களும்அன்று சொல்லிய சாபத்தின் குரூரத்தைக்கேட்டுபயப்பட்டு;பெருமைபொருந்தியதவஞ்செய்த வரமுனியும் எழுந்துவந்தனஞ்செய்து முனிவர்களே! தெரியாமல்நான்செய்தபிழையைப்பொறுத்துப்பிரதிசாபம் தருங்களென்றார்;அதற்குமுனிவர்கள் நீர் எருமைமுகம்பொருந்திய அசுரனுக்கரசாளுங்காலத்தில்சுவாமி இடப்பாகத்தைப்பெறும்படி தவஞ்செய்து கொண்டிருக்கிறஅம்மை உம்முடைய சாபத்தை தொடிப்பொழுதில் தீர்ப்பாளென்று சொன்னார்கள். எ-று. சள)

ஆங்கவர்சொற் படியிலவ னசுரர்பெருங்
குலத்திலுதித் தரசனுகி
யோங்கியபேர் மகிடனெனக் கொடுங்கோன்மை
புரிகுதலு மொருநாள் வேட்டைத்
தீங்குசெய வனத்திலடைந் தழற்பசியா
லிளைத்தோடித் திரிந்தா னுங்கே
நீங்கரிய வருச்சனைசெய் மன்ன தனென்
றெருமுனிவ னேர்ப்பட் டானே.

(இ-ன்.) அந்தமுனிவர்கள்சொன்னபிரகாரம் வரமுனி அசுரகுலத்திற்பிறந்து அரசனுகிமகிடாசுரனென்றபெயரையடைந்துகொடுங்கோலரசு செய்துகொண்டு வருகையில், ஒருநாள் வேட்டையாடும்படி வனத்தில்வந்து சுட்டுவருத்துகின்ற மிருந்தபசியினால் இரையொன்றும் அகப்படாமல் ஓடித்திரிந்துகொண்டிருந்தான்; அவ்வாறுஅலையுங்காலத்தில் அவ்விடத்தில்நீங்குதற்கரிய தவஞ்செய்கின்ற மன்னதரிஷி என்பவன் எதிர்ப்பட்டான். எ-று (சஅ)

மன்ன தனு மயனே யிவன் கரத்திலிங்கத்
துடன்விழுங்கி மகிழ்ந்து போனுன்
பின்ன தனு லவன்மிடற்றிற் சிவனுருவ
மிருந்ததற்குப் பெருமை யாலே

யுண்ணதமா யினன்சிவனு முருத்தரித்த
வுடலுமிறை யுருவ மன்ரு
வன்னதனல் வினையடைந்த ததுதவிரு
*நவதீர்த்த மாடி லென்ரூன்.

(இ-ள்) எதிர்ப்பட்டஅம்மன்னதனென்கிறரிஷியைக்கையிலி ருக்கும்இலிங்கத்தோடேஇம்மகிடாசுரன்எடுத்துவிழுங்கிவிட்டுமகி ழ்ச்சியுடன் போனனு; பின்பு அவன்கண்டத்திற் சிக்கிக்கொண்டுப டிகலிங்க மிருந்ததனல்மிகுந்தபெருமையையடைந்துமேன்மையுற் ரூன் அந்த இலிங்கமிருந்த கண்டத்தையுடையவனும்சிவசொரூபம ன்ரே! அவனைக்கொன்றபடியினல்பாவம்சம்பவித்தது, நீ நவதீர்த் தங்களாடினல், அப்பாவம்போ மென்ரூர் கௌதமர். எ-று. (சுக)

அன்புமுனி யுரைத்தளவி லொருமொழியங்
தரத்திலெழுந் தரிய தீர்த்த
o யொன்பதுமிவ் விடத்தில்வரு மவைவருமா
றியற்றுமென வுமையும் விந்தை
தன்பதும முகநோக்கி யுனதுகைவா
ளெறிந்து சங்கை தருவாயென்ரூள்
வன்பணில மெடுத்தாளுந் தொழுதுகைவா
ணிலத்தெறிந்து வாங்கும் போதில்.

(இ-ள்.) மிகவும்பக்தியையுடையகௌதமர் இப்படிச்சொன்ன அளவில், பாவந்தீர ஆதற்கு ஒன்பதுதீர்த்தமும், இவ்விடத்தில் வ ரும்படிச்செய்யென்றுஆகாயத்திலிருந்துஒருவார்த்தைபிறந்தது. அ தைக்கேட்டுப் பார்வதியும், தூர்க்கைதாமரைமலர்போன்றமுகத்தை

* நவதீர்ததங்களாவன—கங்கை யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவிரி, காவிரி, சிந்து, சீதேவி, சோணநதி என்பனவாம்.

o "கங்கையமுனை சரசுவதிநமழ்கோதாவிரிகாவேரி.நங்கைசிந் துநன்மதை சீதேவி சோணநதியெனவே.யிங்கேயெனுமொன்பது நதியுமிந்தத்தலத்தினினி துதிக்கு, மங்கைவிக்தைகைவாளால்வெட் டவாய்க்குஞ்சிலை படுவில்" என்பது அருணகிரி புராணம்.

ப்பார்த்துஉன்னுடைய கையிலிருக்கின்ற வாளினால் பூமியைப் பிள ந்துகங்கைவரும்படிசெய்யென்றுசொல்ல, ஜயசங்கைக்கையிற்றரி த்ததுர்க்கையும் வணங்கித் தனது கையிலுள்ளவாளாயுதத்தால்பூமி யில்வீசியெடுத்தபோது. எ-று. (இ0)

நவநதியும் பிறவுளநண் ணதிகளுமச்
சோகந்தீர் நல்ல தான
சுவையதிக முதவுபல தடங்களுமங்
கெழுந்தவந்தச் சுனையி னூடே
பவமகல வொருமாத முழுகியிருந்
தாள்கரத்தை பற்றி நீங்காச்
சிவவடிவு மகன்றதுதன் னுளமகிழ்ந்து
கரையில்வந்தா டேவர் போற்ற.

(இ ள்.) ஒன்பதுதீர்த்தங்களும் மற்றுமுள்ளநதிகளும் விடாயா றும்படிஉதவிசெய்யும்வல்ல ருசியைக்கொடுக்கின்றஅநேகந்தடாகங் களும்அவ்விடததில் உண்டாயின; அந்நதிகளில் ஒருமாதவரைக்கும் அம்மைசுற்றம்நீங்கும்படி ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தாள்; கை யைப்பற்றிக்கொண்டு விடாமலிருந்த இலிங்கமும்கையைவிட்டுநீங் கிற்ற; அப்போதுதேவர்கள் போற்றும்படி மனம்சந்தோஷித்துஅ ம்மைகரையில் வந்துசேர்ந்தாள். எ-று (இக)

அருவுருவா மொருசிவனீ யதன்கரைமேற்
புறத்திருத்தி யருச்சித் தாணம்
மிருவினையுந் தவிர்ப்பானுக் கென்பாவந்
தீர்த்தானென் றியம்பே ரிட்டாள்
திருமநவும் பெருஞ்சுனைக்கு மினியகட்க
தீர்த்தமெனத் திருப்பே ரிட்டாள்
குருமணியை யருணகிரிப் பெருமானைத்
தொழுக்கனகக் கோயில் சார்ந்தாள்.

(இ-ள்.) அருவமாயும் உருவமாயும் விளங்கும் ஒப்பற்ற சிவனே அந்த நதிக்கரையில் மேற்புரத்தில் எழுந்தருளச்செய்து அருச்சனை செய்தாள்; நம்முடையகல்வினை, தீவினை, இரண்டையும்நீக்குகின்ற அப்பரமசிவனுக்குளன்பாவந்தீர்த்தாரென்றுபேரைக்தரித்து அழகிய அச்சுனைக்குகட்கதீர்த்தமென்றுபெயரிட்டான்; நிறம்பொருந்திய மணியொத்தவரை அருணசலத்தில்எழுந்தருளியிருக்கிறபரமசிவனை வணங்கும்படியாகப்பொன்மயமாகியகோவிலுக்குப்போனாள் எ-று.

முருகுமல ரயன்றடத்திற் படிந்துவெண்ணீ
றணிந்துசெங்கை முடியிற் கூப்பி
யருகுவருங் கோதமன்சொற் படிதொழுதுட்
புகுந்துதண்ணு ரபுதைக் கண்ணுற்
பருகுநில முறவிழுந்து பணிந்தெழுந்து
பரவசமாய்ப் பாடி யாடி
யுருகிவந் தழுதுயிர்த்து வலம்புரிந்து
தனதுகுறை யுரைத்துப் போற்றி.

(இ-ள்.) வாசனையுள்ளதாமரைமலரிலிரு கிறபிரமதேவனாலே ற்பதித்தப்பட்ட பிரமதீர்த்தத்தில்முழுகி விபூதிதரித்துச் சிவந்தகை களாசிரமேல்வைத்துத்தெண டனிட்டுத் தன்னருகேவருகிற கௌ தமர்சொன்னபடிபோய்க்குளிர்பொருந்திய அமிர்தம்போன்ற சுவா மியைக்கண்ணுற் றரிசித்தும் பூமியிற் றேகம்பொருந்த நமஸ்காரஞ் செய்துஎழுந்திருந்துபரவசமாகிப்பாடியாடி உருக்கமடைந்துகளித் து ஆனந்தக்கண்ணீர்பெருகிப் பெருமூச்செறிந்துவலமாகவந்து த ன்னுடையகுறையைச்சொல்லி வணங்கினாள். எ-று. (ஙஉ)

கார்த்திகைத்திங் களிற்றிருநா ளாகமத்தின்
படிநடத்திக் கனற்கண் ணுனைத்

தோத்திரம்பண் ணுதலுமொரு சுடர்மலேமே
லெழுந் தந்தச் சுடரி னூடே
ஏத்தரிய பலகோடி யிரவியென
வொருசோதி யெழுந்து மின்னே
வாய்த்தவலி வலமாக நடத்தியென
வுரைத்துடனே மறைந்த தன்றே.

(இ-ள்.) கார்த்திகையாதத்தில்ஆகமத்தின்படி திருநாள்செய்து நெருப்புருவமாகியபாலநேத்திரங்களையுடையவிபிரானைப்பணிந்த அளவில், மலைமேல்ஒருபிரகாசமுண்டாகி, அதிற்சொல்லுதற்கரிய பாலகோடிபாலசூரியப்பிரகாசமாய்சுவாமியெழுந்துபெண்ணே! இம்மலையைவலமாக நடந்துவாவென்றுசொல்லி அத்தக்ஷணமேமறைந்துவிடடார். எ-று. (கூச)

நாரிதனைச் சிலையாக்கு முனிவனுமப்
படிவலமா நடத்தி யென்றுன்
வாரியென மறைபுகழக் காரிகையு
நடந்தனடன் மலர்க்கை கூப்பிப்
பேரிகையுங் காகளமுஞ் சல்லரியு
மல்லரியும் பெரிய வாணிற்
றூரியமுந் துந்துமியு மத்தளமுங்
குடமுழவுந் துவைத்த வன்றே.

(இ-ள்.) * தன்மனைவியாகிய அகலிகையென்னும்பெண்ணைக்கல்லாக்கியகௌதமரிஷியும், அம்மா! அப்படியே வலமாகப்போவென்றுசொல்லச் சமுத்திரம்போல் வேதகோஷ்ட முழங்கவும், பேரிகை, காகளம், சல்லரி,மல்லரி முரசு,துந்துமி, மத்தளம், குடமுழா இவை முதலான வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்கவும் பார்வதி இரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு நடந்தாள். எ-று. (கூஇ)

* அகலிகையைக் கல்லாக்கிய சரித்திரத்தைக் கூர்ம புராணம் பார்க்கவபுராணம் என்பவற்றிற்காண்க.

அரம்பையுருப் பசிமுதலா மகபதிநாட்
டரிவையர்க ளாடல் காட்டக்
கரும்பையென நெருங்குபூ லை வரையாமங்
கையர்மலரின் குப்பை கொட்டக்
கரும்புகனிந் தனையமொழிப் புனலரமங்
கையரிரட் டுங்கவரி யாட்ட
விரும்புருக நகைபுரியு மரவமினூர்
மணிவிளக்க மெடுத்து வீட்ட.

(இ-ள்.) இப்படிபார்வதி வலம்வரும்போது, அரம்பை ஊர்வசி முதலான தெய்வலோகத்துப்பெண்கள்நாட்டியமாடவும் தென்னங் குரும்பையையொத்துநெருங்கியதனத்தையுடையமலையரமகளிர் அம்மைநடந்துவரும்போது, பாதம்பூமியிற்பட்டு உருத்தாமலிருக்கப் புட்பங்களைக்குப்பையாகக்கொட்டவும்கருப்பஞ்சாறுபோலும் வார்த்தையையுடைய நீரரமங்கையர் சாமர மெடுத்து வீசவும், இரும்பு முருகும்படி நகைசெய்கின்ற நாகலோகப்பெண்கள் இரத்தினதீபங் கையிலெடுத்துக் கொண்டு வரவும். எ-று. (இசு)

[இதமுத லிரணபொடல் குளகம்.]

முண்டகமண் டபமயிலும் புலோமசையு
நறுந்தவள முளரி மானுங்
கண்டகமும் வழிப்பாலு மொழிந்துவர
நிலமகடன் கைகணீட்ட
அண்டர்குல மடந்தையரு முனிவர்குல
வனிதையரு மருவிப் பூந்தேன்
வண்டலிடுஞ் சேறகற்ற மலரினறுந்
துகள்சொரிந்து வழிக ளாக்க.

(இ-ள்.) தாமரைப்புட்பமாகியமண்டபத்திலிருக்கிறமயில்போலும்சாயலையுடைய இலக்குமியும். இந்திராணியும். நறுமணம்வீசும் வெண்டாமரைப்பூவிலிருக்கிறசரஸ்வதியும்போகிறவழியிலிருக்கும் முள்ளுகளையும்கற்களையுந்தள்ளிக்கொண்டுவரவும் பூமிதேவிகைகளை நீட்டிசாக்கிரதையாகத்தாங்கவும்தேவஸ்திரீகளும் முனிவர்களுடையஸ்திரீகளும்புட்பத்திலிருக்கிறதேனருவியிலல்வழிசேறுசிக்கிடந்ததைதீக்க புட்பத்துக்குள்ளிருக்கிற பராகப் பொடிகளைக் கொட்டிகல்லவழியாகச் செய்யவும். எ-று. (நிஎ)

கன்றினதுன் னிருசரணம் பொறுத்தருள்வா
யெனவங்கை கங்கை கூப்ப
மன்றனலத் திசையணுகி யழற்கிரியை
யெதிர்முகமா வணங்கிப் போற்றித்
தென்றிசையு நிருதிபெருந் திசையினையுங்
கடந்துகுட திசையிற் சென்றுள்
குன்றரிய புகழாளு மழவிடைமீ
தினிற்காட்சி கொடுத்துப் போனான்.

(இ-ள்.) கங்கையானவள் அம்மாபார்வதி உன்பாதமிரண்டும்பூமியிலேபட்டுக் கன்றிப்போய்விட்டன; அதைப் பொறுக்கவேண்டுமென்று இரண்டுகைகளையுங்கூப்பவும். அழகிய அக்கினிதிசையில் வந்துஅக்கினிமலையைஎதிர்முகமாகத்தொழுது, தோத்திரம்செய்தும், தெற்குத்திசையும்நிருதியினதுபெரியதிசையையும்தாண்டிமேற்குத்திசையிற்போனான்; குறைவில்லாத கீர்த்தியையுடைய சுவாமியும் இளமைதங்கிய ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்து தரிசனங் கொடுத்து மறைந்தருளினார். எ-று. (நிஅ)

நாற்றிசையும் போற்றிசெயும் புகழணியண்
ணுமலையா னடத்தாள் போற்றி
மேற்றிசையுங் காற்றிசையும் கடந்துவட
திசையணுகி விரும்பியேத்தி

யேற்றிசையு மிறைதிசையு மகிழ்ந்துகுண
திசையடைந்தா ளிமய வெற்பிற்
சேற்றிசையு மணவழலே வலம்புரிந்த
செயல்போலச் செறிந்த தன்றே.

(இ-ள்.) நாலுதிக்கும் வணங்குகின்ற கீர்த்தியையுடைய அழகியதிருவருணாசலேசுவரரது நடனபாதத்தைவணங்கி மேற்குத்திசையும் வாயுதிசையுந்தாண்டி,வடதிசையில்மறுபடியுந்தொழுது,எருதிலேறுகின்ற ஈசானனுடைய திசைபக்கடந்து, கிழக்குத்திசைக்குவந்தாள், அப்படிவந்தது இமாசலத்தில் சுவாமி கலிபாணஞ்செய்தபோது ஓமாக்கினியை வலம்வந்ததுபோலிருந்தது. எ று. (கூ)

கலி நிலைத்துறை.

* பானு கம்பன்கைச்சங்கொலி நெடியமால் பணிலத்
தான கம்பலை நாரதர் வீணையி னரவம்
வான துந்துமி கம்பலை திசையெலா மறைத்த
தேனி றைந்திடு மலர்மழை யிமையவர் சிதற.

(இ-ள்.) பானுகம்பனென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளிலுஞ் சங்கத்தைவைத்து ஊதுகிற ஒலியும், விட்ணுதமது சங்கத்தைவாயில்வைத்து ஊதுகிற சத்தமும், நாரதமுனிவர் வீணையைவாசிக்கிறசத்தமும், ஆகாசதுந்துபியினுடைய சத்தமும், திசைகளெல்லாஞ்செவிபடைச் செய்தன, தேனிறைந்த புட்பவருஷங்களைத்தேவர்கள் சொரிய. எ-று. (கூ)

இதுமுதல் மூன்றுபாடல்களுங் குளகம்.

கற்றை வார்சடை விளம்பிறை நெடுநிலாக் கமழப்
புற்ற ராமணி யிளவெயில் விரித்திடப் புவியைப்
பெற்ற மாதினுக் கொருபுற மளித்திடப் பிடித்த
வெற்று நூலெனப் புரிமுநூன் மார்பகத் திலங்க.

---

* பானுகம்பன் சங்கு சலஞ்சலம், திருமால் சங்கு பாஞ்சசன்னியம், நாரதர் வீணை மகதியெனப்படும்.

(இ ள்) கற்றையாகிய நீண்டசடையில் தரிக்கப்பட்ட இளமை யாகிய பிறையின் நெடுமையான சந்திரிகை பிரகாசிக்கவும், ஆபரண மாகியபுற்றிலிருகின்ற சர்ப்பத்தின் தலையிலிருக்கிற மாணிக்கம் காந்திபை விரிக்கவும் உலகசராசரங்களையீன்றருளியமாதாவாகியபார் வதிக்குப் பாதிசரீரத்தைக் கொடுப்பதற்கு மத்தியாகபிடித்த ஏற்ற நூல்போல்புரியாகிய பூணுநூல் பிரகாசிக்கவும். எ-று. (கூக)

பிறப்பி லாமுதன் மறையெலா மளவிடாப் பெரியோ
னிறப்பி லாவிறை விடையின்மே லினிதெழுந் தருள
வறத்தி னுயகி யடிபணிந் திறைஞ்சின ளனைத்தும்
துறக்கு மண்ணலு மவளுட னினையிவை சொல்லும்.

(இ-ள்.) பிறப்பிறப்பில்லாததலைவர் அநேகவேதங்களாலும் அறி யப்படாதபெருந்தன்மையுடையவர் இறப்பில்லாதபரமசிவன், நிகரி பவானத்தில் மனமகிழ்வோடெழுந்தருளத்தருமம்வளர்க்கின்றபா ர்வதி, அச்சுவாமிபாதத்தைத்தொழுதுவணங்கினள். எல்லாவற்றை யும் நீக்கியருளியகடவுளும் அவ்வமமையோடு சொல்லுவார். எ று.

பெண்ணுமாணுமா யுலகுயிர்ப்பொருளெலாம்பிரித்தோ
மண்ணிதாகிய பீடமு * மிலிங்கமு மானே
மெண்ணு நீயென நானென விரண்டிலை மரமு
முண்ணிலாவிய வயிரமு நிகர்த்துட னுறைவோம்.

(இ ள்.) உமையேநீயும், நானும் பெண்ணு மாணுமாகி, உலகத் தில் அநேகம் சிவராகிலும் வேறுவேறுண்டாக்கினேம், சமீபமாய்வி ளங்கும் ஆவிடையாரும் இலிங்கமுமானேம், நீயென்றும்நானென்று ம்வேறுஇரண்டு பேதமில்லை; மரமும் அதற்குள்ளே யிருக்கிறவயிர மும் போல் ஒன்றாய்ச் சேர்ந்திருப்போம் எ-று. (கூக)

அங்கம் யாவுநம் பொருட்டிவிட் டிமயவெற் படைந்தா
யிங்கு நாமுனக் கொருபுற மளிப்பதே யியற்கை
மங்கையேநம திடப்புறத் துறையென மகிழ்வுற்
றங்கை யாலணைத் தருளின னுமையொன் றுரைப்பாள்.

* லிங-லயம. சம்-தோற்றம். எனவே உலகமெல்லாம்தோன் றியொடுங்குதற் கிடமாயதெதுவே அதுவே இலிங்கமெனப்படும்.

(இ-ள்) தேகத்தை அடியோடேவிட்டு நம்பொருட்டாக இம யப்பர்வதத்தில் வந்துபிறந்தாய், இவ்விடத்தில் நாம் ஒருபாகங்கொ டுப்பது சுபாவமே, பெண்ணே நம்முடைய இடப்பாகத்திற் சேர்ந் திருவென்று சந்தோஷமடைந்து அழகியகையினால் அணைத்துக் கொண்டார் இரண்டுதேகமும் உருகி ஒருதேகமானார்கள், அம்மையு மப்பனும் எ-று. (சுச)

அடுத்த செஞ்சடை யொருபுற மொருபுற மளகந்
தொடுத்தகொன்றையோர் புறமொருபுறநறுந்தொடையல்
வடித்த சூலமோர் புறமொரு புறமலர்க் குவளை
திடத்தி லார்கழ லொருபுற மொருபுறஞ் சிலம்பு

(இ-ள்.) அப்படியிருவரும் உருகிச்சுவாமியினுடைய பாதியும் அம்மையுடைய பாதியும். ஒருதேகமானதேபாது ஒருபக்கத்திற் ஒன் றேடொன்றடுத்துள்ள சிவந்தசடையும், ஒருபக்கம்கூந்தலும், ஒரு பக்கம்கொன்றைமாலையும், ஒருபக்கம்வாசனையுள்ளபுஷ்பமாலையும் ஒருபக்கம்சூலமும், ஒருபக்கமநீலோற்பலபுஷ்பமும், ஒருபக்கம்வீர கண்டாமணியும், ஒருபக்கம் சிலம்புந்தோன்றின. எ-று. (சுடி)

பச்சை வண்ணமற் றொருபுற மொருபுறம் பவளங்
கச்சுலா முலையொருபுற மொருபுறங் கவின்மார்
பச்சநீக்கிய வரதமொண் றபயமொன் றங்கை
யிச்சையாமிவ ரூறுதல்கண் டிறைஞ்சினர் மைமீயார்.

(இ-ள். ஒருபுறம் பச்சை நிறமும், ஒருபுறம்பவளநிறமும், ஒரு புறம் கசசணிந்ததனமும், ஒருபுறம் அழகானமார்பும், ஒருபுறம்அப யமும், ஒருபுறம்வரதமுமாகிய கைகளாக ஆசையோடு இருவரும் பொருந்துதலேபார்த்துத் தேவரும் வணங்கினார்கள். எ-று. (சுசு)

இவ்வாறு இருவர்நின்ற கோலத்தைச்சேரமான் பெருமானும் "வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே, கலந்தான் வல நீறிடஞ்சாந்தெரிவலம் பந்திடமென், பலந்தார்வலமிட மாடகம்வே

ல்வல மாழியிடஞ், சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ்சங்க ரற்கே" எனப் பொன்வண்ணத் தந்தாதியில் அருளிச்செய்த லாறு மறிக.

இந்தமாக்கதை படித்தவர் செவிகளிற் கேட்டோர்
சந்தனசல முனியினிற் றமிழ்க் கடல்கடப்பார்
மைந்த ரேமுதற் கிளையுட னுலகினில் வாழ்வார்
பந்தபாசமற் றழிவிலாப் பரகதி பெறுவார்.

(இ-ள்.) இந்தமகிமைதங்கிய கதையைப்படித்தவர்களும், செவியிற் கேட்டவர்களும் சந்தன விருக்ஷங்களசூழ்ந்த பொதியமலையிலிருக்கின்ற அகத்தியர்போய் தமிழ்க்கடல் கடப்பார்கள், சந்தானபாக்கியத்தோடுஞ் சுற்றத்தாரோடும் உலகத்தில்வாழ்வார்கள்; தங்களுப்பந்தமாகச் சூழ்ந்துகொண்டிருக்கிற தீவினையைத் தள்ளிமோட்சம்பெறுவார்கள். எ-று. (சுஎ)

மூனிவனே யெனைப்பயந்தவ னுரைத்ததிம் முறையென்
றனையமாமுனிக் குரைத்தனு மவனெழுந் திறைஞ்சிக்
கனக வச்சிராங் கதனுயர் கதிபெறுங் கதையை
வினவி ஞன்முனி வினவலு மகிழ்ந்திவை விளம்பும்.

(இ-ள்.) நந்திதேவர்மார்க்கண்டேயரைப்பார்த்து என்னைப்பெற்ற பரமசிவன்சொன்ன சரித்திரத்தின்முறையிதுவென்று அவருக்குச்சொல்ல, அம்மார்க்கண்டேயமகாரிஷி எழுந்துதண்டஞ்செய்து, பின்பு, சுவாமி? வச்சிராங்கதபாண்டியன் உயர்வாகியமோட்சம் அடைந்தகதையைச் சொல்லுங்களென்று கேட்க, நந்திதேவர் சந்தோஷமடைந்து சொல்லத்தொடங்கினர். எ-று. (சுஅ)

ஐந்தாவது,

இடப்பாகம்பெற்றசருக்கம்.

மு ற் றி ற் று.

ஆக திருவிருத்தம்-சாஉ.

9 — தாருவாசரிஷி சாபத்தால் காந்திசாலி கலாதான் புழுகுபூனையாகவும் குதிரையாக வும் ஜனித்துய்யுங்கால், வச்சிராங்கதன் புழுகுபூனையைத் திரத்தி அண்ணுமலையை வலம்வர ஷை புழுகுபூனையும் குதிரையும் சாபம் நீங்கின.

திருச்சிற்றம்பலம்.

வச்சிராங்கதபாண்டிய சருக்கவசனம்.

பாண்டிநாட்டுக்கு அரசனுகிய வச்சிராங்கத பாண்டியன் வேட்டைக்குச்சென்று அநேக மிருகங்களைக்கொன்று களைப்பியாகத்தன்னுடைய சேனைகள பின்னிட்டுபோகத் தானெருவனுகக் குதிரையின்மேலேறிஒருபுழுகுபூமியைத்துறத்திஞன். அம்முதுபடிப்போய்அருணுசலத்தை வலமாகச்சுற்றிவீழ்ந்து தன்தேகத்தைவிட்டுதிவ்விய தேகம் அடைந்து அதன்பின்னேவலமாகச்சுற்றி துரத்திக்கொண்டு அரசன் ஏறிவந்த குதிரையும் விழுந்து இறந்து திவ்வியதேகம்பெற்றது அவ்விரண்டும் காந்திசாலி, கலாதரன் என்கிற இரண்டுவித்தியாதரர்களாகிப் பாண்டியனைப்பார்த்து நாங்களிருவரும் துர்வாசரிஷியின் ஆச்சிரமத்திலிருக்கிற நந்தவனத்திற்புகுந்து புட்பங்களைப்பறித்ததினுலே அவர்களுக்குகுதிரையாகவும்புழுகுபூனையாகவும்போகக்கடவீர்களென்றுசபித்தார்கள்வருந்திக்கேட்டுக்கொண்டதின்பேரில் இந்தஅருணுசலத்தைப்பாண்டிநாட்டரசனுல் நீங்கள் பிரதக்ஷணஞ்செய்யும்படி நேரிடும் அப்போது இந்தச்சாபம்விமோசனமாகுமென்றுசொன்னர். ஆதலால்அந்தப்படியே சம்பவித்ததுநீர் இந்தமலையைக்காலினுல் பிரதக்ஷணஞ்செய்யாமல் குதிரையின்மேலேறிப்பிரதக்ஷணஞ்செய்ததபடியால் உமக்குப்பாவம் வந்திருக்கிறது அதுவும்சுவாமியைப்பூசைசெய்தால் போய்விடுமென்று சொல்லிவிட்டுத்தங்கள்விமானங்களின்பேரில் ஏறித்தங்கள்ஊருக்குப்போய்விட்டார்கள் பின்புவச்சிராங்கதபாண்டியன்தன்பிள்ளையாகிய இரத்தினுங்கதபாண்டியனுக்குத்தன் அரசாக்கியை ஒப்பித்துவிட்டு அண்ணுமலையாருக்குவிசேஷதிருப்பணிகள்செய்வித்துக் கிரிப்பிரதக்ஷணஞ் செய்துகொண்டுவரும்நாளில். ஒருநாள்பரமேஸ்வரர் ரிஷபவாகனரூடராய்ப்பாண்டியனுக்குத் தரிசனங்கொடுத்து, பாண்டியனே! முன்னெஜன்மத்தில் தேவேந்திரனுயிருந்த நீரம்மேல் உன்வச்சிராயுதத்தைப்பிரயோகஞ்செய்ததபடியால் பூமியில்மனிதனுகப்பிறந்தாய் இப்போது நம்மைப்பூஜித்துப்பிரதக்ஷணஞ் செய்ததபடியால் மறுபடியுந் தேவேந்திரனுகப்போயிருவென்றுவரங்கொடுத்துவிட்டுமறைந்தார்

வச்சிராங்கதபாண்டியச் சருக்கவசனம் முற்றிற்று.



உ

சிவமயம்.

ஆ ரூ வ து

வச்சிராங்கத பாண்டியச் சருக்கம்.

கலிவிருத்தம்.

தேதாடுகமழ் சந்தன வனத்தினிடை தூளேந்தே
நீடுதமி ழின்சுவை யளேந்துநெடு நாளா
யாடுமயி லன்னவர்க ளன்னநடைபோலே
வாடைமிசை தென்றல்புகும் வையை வளநாடு.

(இ-ள்.) பூமிதழ் மணக்கும் சந்தனவனத்தின் மத்தியிற்சஞ்சரித்து, என்றும் வளர்ந்தோங்கும் தமிழின்மதுரம் அளேந்து நெடுநாள்

ஆடுகின்றமயில்போன்ற சாயலையுடைய பெண்கள் நடைபோல வாடைக்காற்றோடு சம்பந்தமாகத் தென்றற்காற்றுவருகின்ற வையையாறு பொருந்திய பாண்டிநாடு. எ-று. (க)

வெவ்விருக ணிரிடையை மின்னென மருண்டே.
செவ்விபெறு கேதகை செறிந்தலரு நாடு
நவ்வியனை யாரளக நள்ளிருள தென்றே
மவ்வலரு கேயலரும் வையையள நாடு.

(இ-ள்.) வெப்பத்தைச் செய்யும் கண்களிரண்டையு முடைய பெண்களினிடையைப் பார்த்து மின்னலென்றுமயங்கி, அழகுபொருந்திய தாழைகள்நெருங்கிப் புஷ்பிக்கும்நாடு. மான்போன்ற கண்களையுடையமாதர்கள் கூந்தலைப்பார்த்து நடுசாமவிருளென்று நினைத்துமுல்லைச்செடிகள்கரையில் புஷ்பவிக்கும் வையை ஆற்றினுல்வளம்பொருந்திய பாண்டிநாடு. எ-று. (உ)

அந்தவள நாடர்பெரு மானரசர் கோமா
னிந்திரன் முடிக்கிடை யெறிந்தவளை வீர
னிந்தையக றென்கயிலை நெற்றிவிழி போலே
* மூந்திய திசைக்கரி முகத்தெழுதி வைத்தோன்.

(இ-ள்.) அத்தன்மையாகிய பாண்டிவளநாட்டாருக்கு அரசன் அரசர்க்கரசனவன்தேவேந்திரன்மகுடம்சிதறும்படியாகவளையென்னும்ஆயுதத்தைப்பிரயோகித்தவன்மிக்கவல்லமையுடையவன்குற்றமற்றதென்கைலாயத்துக்கு நெற்றிக்கண்போல் அட்டத்திக்கிலுமிருக்கிறயானைகள்முகத்திற்றன்னுடையமீனக்கொடியைஎழுதிவைத்தவன். எ-று. (ஙு)

---

* மூந்தியதிசைக்கரிமுகத்துஎழுதிவைத்தோன்என்பதற்கு, எல்லாத்திசைகளிலுஞ்சிறந்த கீழ்த்திசையானேயாகிய ஐராவதத்தின் முகத்தில்அத்திசைகளிறைவனை இந்திரனைத்தன்வளையால் பொருதுவென்றமை எழுதிவைத்தவனென்னலுமாம்.

வேறு

ஆக மாதி மதனி னழகினு
ணாக மாதி தெளிந்த வறிவினன்
பாக நாரியர் பத்தியி னன்மொழிப்
பாக நாரியர் பற்றிய தோளினன்.

(இ-ள்.) சகமுதலானவைகளால் மன்மதன்போலழகுள்ளவன்; சகலாகம சாஸ்திரந்தெளிந்த விவேகத்தையுடையவன்; பாகத்திற் பார்வதியையுடைய சிவன்மேல்பக்தியுடையவன், பாகுபோல் மதுரமாகிய சொற்களையுடையஸ்திரீகள் விரும்பாநின்ற தோளையுடையவன். எ-று. (சு)

வான கத்தி லும் மண்ணி லு மெண்ணிய
வான கத்தி லும் வைத்த புகழினன்
கான கத்தொளி யார்சடைக் கண்ணிதன்
கான கத்தொளி யாமனைக் காப்பவன்.

(இ-ள்.) தெய்வலோகத்திலும், பூமியிலும்எண்ணத்தக்க அதியுன்னதமான இமயபருவதத்தினிடத்திலும், தன்கீர்த்தியைநாட்டினவன், சுவாமிதரிக்கின்றசடைக்காட்டினிடத்தில்பிரகாசிக்கும்ஆத்திமாலையினது வாசனையைத் தன்மனத்தில் நினைத்துக்கொண்டு பூமியைக்காக்கின்றவன். எ-று. (டு)

தங்க ணுயக னைத்தலை சூடிய
வெங்க ணுக ரடித்தலை யீயத்தினன்
பொங்கு நன்றி யறிந்தது போற்றுவா
ரிங்கி வற்கினை யாவரு மில்லையே.

(இ-ள்.) தங்கள் குலத்துக்குத்தலைவனுகிய சந்திரனை முடியில் தரித்த எங்கள்நாதராகிய பரமசிவனுடையபாதங்களைத் தலையினல் வணங்குகிறவன். மிகுந்தநன்றியையறிந்து அதைப் பாதுகாக்கின்றவர்களில் இவனுக்கொப்பானவ ரொருவருமில்லை எ-று. (சு)

பத்து வார்திசை மீதும் படர்புகழ்
வித்துவாரி யிரைக்கின்ற மேன்மைபோ
னத்து வாரியில் வாரினர் நல்கிய
முத்து வாரி யிறைத்திடு முன்றிலான்.

(இ-ள்) நீண்டபத்துத்திக்கிலும்பரவும்படி கீர்த்தியாகியவிரை யையவாரியிறைக்கின்ற தன்மைபோல்; சங்கங்கள்தவழ்கின்ற கடலி ற்குளித்து வாரிவந்தவர்கள் கொடுத்த முத்துகளேவாரி இறைத்துக் கிடக்கின்ற முற்றத்தை யுடையவன். எ-று. (எ)

ஆடலர்ந்த வரசன் புகழ்க் கடற்
கோடு கின்ற கலங்கதி ரோட்டுபோர்
கூடு செக்கர் பவளக் கொடிகளே
நீடு திக்கினர் நீரின் மனிதரே.

இ-ள்.) வெற்றியமைந்தஅரசன் கீர்த்தியாகியகடலில்ஓடுகின் றகப்பலான து சூரியன் எறிச்செல்லுகின்ற தேர்கூடியசெக்கர்வான மேஅக்கடலிற்படர்ந்தபவளக்கொடிகள். நீண்டஎட்டுத்திக்கிலுமுள் ளமனிதர்களே அக்கடலிற் சஞ்சரிக்கும் நீர்மனிதர்கள். எ-று. (அ)

எச்ச ராசர முங்களிப் பெய்தவே
நச்ச ராவுல காளு நலத்தினன்
கச்ச ராவு கழற்பாலி காலினன்
வச்சி ராங்கத னென்றொரு மன்னவன்.

(இ-ள். அசையும்பொருள்அசையாப்பொருள்களாகிய எல்லா ப்பொருள்களும் சந்தோஷத்தையடைய விஷத்தையுடைய ஆதிசே ஷன் தாங்கும் உலகத்தைஆளும் நன்மையுடையவன், கச்சு அராவி ய வீரகண்டாமணியைத் தரித்த காலையுடையவன். வச்சிராங்கதபா ண்டிய னென்றொருவனிருந்தான். (கூ)

படையிற் ரோற்ற வரசரைப் பல்சிறை
யிடையிற் போட்டன னென்கை வியப்பதோ
கொடையிற் ரோற்றிடுங் கொண்டலே யுஞ்சிறை
யிடையிற் போட்டன னென்ற திருக்கவே.

இ ள்.) அவன்யுத்தத்திற்ரோற்ற பற்பல அரசர்களைச்சிறையி லிட்டானென்பதென்ன ஆச்சரியம்! தன்கொடைக்குத்தோற்றமே கத்தையுஞ் சிறையிற் போட்டானென்னும் வார்த்தை இருக்கும் போது. எ று. (கo)

நாட்டு மவ்வர சன்ரெரு நாளிலே
வேட்டை யாட விரும்பின ஞகியே
மூட்டு சேனை கரிபரி மொய்த்திட
வோட்டி ஞன்பரி யுத்தர திக்கிலே.

(இ-ள்) இப்படிச்செயத்தைநாட்டிய அந்த வச்சிராங்கதபாண டியன் ஒருநாள்வேட்டையாடும்படி மனத்திலெண்ணினவனும் செ ருக்கிய யானை, குதிரை, சேனைகள்சூழக் குதிரையைநடத்திக்கொ ண்டு வடதிசையில் நடந்தான். எ-று. (கக)

துங்க வாம்பரி மீதிவன் ரோன்ரலு
மங்கை வேழ மகன்றகன் ரோடின
திங்க ளின்குலச் செல்வனென் றஞ்சியே
யெங்கு மோடி மிருட்கண மென்னவே.

இ-ள்.) சந்திரவமிசத்திற்பிறந்தஅரசன் தாவும் சிறந்தகுதிரை மேலேறினமாத்திரத்தில் தங்களோடெருட்டும்பகைவனுகியசந்திரன துவடிவத்திற்ரோன்றியவனென்றுசினைத்து பயந்தோடும் இருட்கூ ட்டம்போல் துதிக்கையையுடையயானைக்கூட்டங்களஞ்சியோடின.

வீறு மம்புலி யின்குல மேன்மையான்
வீறு மம்புலி யின்குலம் வீட்டிஞ

ஞறி லொன்று கடமைகொண் டாள்பவ
ஞறி லொன்று கடமை கொண்டானரோ.

(இ-ள்.) சிறப்புள்ள அம்புலியென்னும் பேரினையுடைய சந்திர குலத்திற்பிறந்த மேன்மையினால், இறுமாப்படைந்த அழகிய புலிகளைக் கொன்றான்; ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு ஆள்கிறவன்போகும் வழியில்நேரிட்ட கடம்பை மிருகங்களைக் கொன்றான்.

சேர மானினந் தன்னைச் சிதைத்தவன்
சேர மானினந் தன்னைச் சிதைத்தனன்
வார மாய்கலைச் சங்கம் வளர்த்தவன்
வார மாய்கலைச் சங்கம் வளர்த்திட்டான்.

(இ-ள்.) சேரமானென்னும்பெயரையுடைய சேரனது சேனையைசெயித்தவன், ஒருமிக்க மானினங்களையெல்லாம் கொன்றான், அன்போடு ஆராய்கின்ற வித்தியாசங்கத்தை வளர்த்தவன், அநேக கலைமான்கூட்டங்களை வளர்த்துக் கொண்டான். எ-று. (கசு)

சேனை போன்மத மாரி சொரிந்திடும்
யானை தேர்பரி யாண்முத லாகிய
தானை பின்னிடத் தான்றனி வாசிமேற்
கான நாவியைக் கண்டுதொ டர்ந்தனன்.

(இ-ள்.) சேனை மழைபோல் மதத்தைச் சொரிகின்ற யானை, தேர், குதிரை, காலாள்முதலாகிய நால்வகைச்சேனைகளும் பின்னிட்டுப்போகத் தானொருவனுகவே குதிரைமேற்கொண்டவனுய்காட்டில்வசிக்கும் ஒரு புழுகு பூனையைத் தொடர்ந்தான். எ-று. (கரு)

அந்த நாவி யகன்றரு ணைசலத்
தந்தி யேவல மாய்விரைந் தோடலு
முந்தி வாசிய தன்பின் முடுக்கினன்
கந்த நாவி விழுந்தது கண்முனே.

(இ-ள்.) அப்படி அரசனாலே துரத்தப்பட்ட புழுகுபூனை சீக்கிரத்தில் அவ்வலத்தை விட்டு அருணாசலத்தை வலமாகச் சுற்றி யோடினவளவில், வேகத்தோடுங்குதிரையை அதன்பின் நடத்தினான்; அந்த வாசனையையுடைய புழுகுபூனை (அவன்) கண்முன்னே வந்து விழுந்தது. எ-று. (கஉ)

பச்சை நாவிபருகினர் போல்விழுந்
தச்சநாவிதன் ஞகம் விடுத்தெழில்
விச்சை வேந்தர் துதிக்க விமானமே
லிச்சை மேனிகொண் டேகி யெழுந்ததே.

(இ-ள்.) பச்சையாகிய நாவியென்கிறவிஷம் சாப்பிட்டவர்கள் போல்விழுந்து பயத்தையுடைய புழுகுபூனை தன் தேகத்தைவிட்டு ரூபலட்சணமுள்ள வித்தியாதரர் முதலானவர்கள் துதிக்க விமானத்தின்மேல் யாவரும் விரும்பும்படியான திவ்வியதேகம் பெற்றுக் கொண்டெழுந்தது. எ-று. (கஎ)

மேவுமந்த வரசன் விழுந்திட
மாவும் வீழ்ந்து வடிவு தனைத்துறந்
தோவி யர்க்கெழு தாவருக் கொண்டொரு
பூவி மானம் தேறிப் பொலிந்ததே.

(இ-ள்.) தற்செயலாய்ஏறினவரசன்விழவே குதிரையும்இடறி விழுந்ததன்தேகம்விட்டுச்சித்திரக்காரரும் எழுதக்கூடாத திவ்விய ரூபம்பெற்று ஒருபுட்பவிமானத்திலேறிப்பிரகாசித்தது. எ-று. ()

கைவி லங்கனு யான்பரிக் காலின்வீழ்ந்
தவ்வி லங்கை யரசனைப் போலவே
செவ்வி லங்கு லடியினிற் றேர்பிணன்
வெவ்வி லங்குட னேடின் விழார்களோ.

(இ-ள்.) துதிக்கையினுடையமிருகமாகியயானைபோல்பலஞன வச்சிராங்கதபாண்டியன்குதிரைக்காலினருகில்விழுந்து, அத்தில

ங்கா புரியையாண்ட இராவணன்போல் அருணாசலத்தி னடியில் வருந்திஞன், கொடிய மிருகத்தின் பின் ஓடிஞல் யார்தான் வீழார்கள் எ-று. (கக)

பாய்ந்த நாவி பரிப்பெயர் போய்ப்பழங்
காந்தி சாலி கலாதரப் பேர்படைத்
தாய்ந்த நண்பொ டருவிபங் கண்ணராய்
மோந்த னேந்து மகிழ்ச்சியின் மூழ்கினர்.

(இ-ள்.) பாய்ந்து செல்லுகின்ற குதிரைஎன்றும் நாவீஎன்றும் சொல்லப்பட்ட பேர்போய் பழைய காந்திசாலி கலாதர னென்கிற பேர்படைத்தவராய் மிக்கநண்பராய் அருவிபோல் கண்ணிலிருந்து நீர்பெருக ஒருவர்க்கொருவர் கட்டியணைத்து உச்சிமோந்துசந்தோஷத்தில்மூழ்கினர்கள். எ-று. (உ0)

அன்ன வீரர்க ளவ்விடை நின்றுழு
யொன்ன லர்க்கு முறுத்துய ருய்த்திடு
மன்னர் மன்னவன் மற்றிது வந்தவா
றென்ன வென்னவென் றிறங்கி யிரங்கினன்.

(இ-ள்) அவ்வீரர்கள் அவ்விடத்தில் நின்றபோது தன்சத்துருக்களுக்குவந்த துக்கத்திலும் அதிகமாய்வருந்துகின்ற அரசர்க்கரசனுகியபாண்டியன் இதுவந்தகதையென்னவென்று இரங்கி வருத்தமுற்றன். எ-று. (உக)

விஞ்சை மன்னர் விமானத்த ராகியே
தஞ்ச மில்லவன் றன்புடை சூழ்ந்துநீ
யஞ்ச லஞ்சலென் றங்கை யமைத்தனர்
பஞ்ச வன்மகிழ் வோடும் பகருவான்.

இ-ள்.) வித்தியாதரர்களாகிய இருவரும் விமானத்திலேறிக் கொண்டவராய்த் தஞ்சமில்லாத பாண்டியனிடத்தில் வந்துசேர்ந்து நீ பயப்படவேண்டாம் பயப்பட வேண்டாமென்று கையமர்த்தினர்கள் அப்போது பாண்டியன் மிகவுஞ் சந்தோஷத்தோடு சொல்வான். எ-று. (உஉ)

நீதி யாய்வரு நீரெவ ரித்துயிர்க்
காதி காரணம் யாதில் வருந்துயர்
போது மாறெது போதியு மென்றவ
னோத வோதக் கலாதர னோதுவான்.

(இ-ள்.) நீதிமார்க்கங்களிற்றவறுதவராய்வந்த நீங்களிருவரும் யார்உங்களுக்கு இப்படிவந்ததுக்கத்திற்கு மூலகாரண மென்னவென்றுன் அதுசென்றது எவ்விதத்தினுல் சொல்லுங்களென்று சொல்லக்கேட்டி. கலாதரனென்பவன் சொல்லுவான். எ-று. (கூ)

வாய்ந்த சாலி மதுரை யின்மன்ன னே
யேய்ந்த விஞ்சையர் யாங்களிவண்பெயர்
காந்திசாலி கலாதர னென்பெய
ராய்ந்த நன்பின ராய்வினே யாடினேம்.

(இ-ள்.) பொருந்திய செந்நெல் விளைகின்ற மருங்களையுடையமதுரைக்கு அரசனே? நாங்கள் ஒப்பற்றவித்தியாதரர்கள், இவன்பேர் காந்திசாலி, என்பெயர் கலாதரன் நாங்களிருவரும்மிகுந்தநேசராய் விளையாடிக் கொண்டிருந்தோம். எ-று. (கூ)

மார வேளும் வசந்தனும் போலவே
யார வேபிரி யாதுறை நாளிலே
சேர வூழ்வினை சென்று தொடர்ந்திட
மேரு மால்வரைச் சாரலின் மேவினேம்.

(இ-ள்.) மன்மதனும் அவன்சிநேகனுகிய வசந்தனும் போல, ஒருவர்க்கொருவர் பிரியாமல் வாசஞ்செய்யு நாளையில் முன்செய்த ஊழ்வினைவந்தடைய மகாமேரு மலையின் சாரலில் போய்ச் சேர்ந்தோம். எ-று. (உஇ)

வேறு.

மாச்சரிய மிக்கதுரு வாசமுனி வாழு
மாச்சிரம மேலருகி லந்தமுனி தானே

நீர்ச்சொரிய நெஞ்சுருகி நின்றமர மெல்லாம்
பூச்சொரியு நந்தவன மீதினிடை புக்கேம்.

(இ-ள்.) கோபமிகுந்தமுனிவராசரிஷிவாழ்கின்ற ஆச்சிரமத்தினருகில் அந்தரிஷிமனமுருகித் தண்ணீர்சொரியவளர்ந்த விருட்சங்களெல்லாம் புட்பங்களைச் சொரியும் நந்தவனத்திற் புகுந்தோம். (1)

புக்க வனத்திற்சிறு புதர்க்களை மிதித்தான்
மிக்கவினை யேனுமதின் மென்மலர் பறித்தே
னக்கணமு ணர்ந்துமுனி யங்கிவிழி யாலே
ககவொளி மிக்கசடை கட்டவிழ வந்தான்.

(இ-ள்.) அப்படிப்புகுந்த வனத்தில் இக்காந்திசாலி அங்குள்ள சிறுபுதர்களை மிதித்தான், மிகுந்ததீவினையபுடையனானும் அவைகளிலிருக்கும்மேன்மையாகியபுட்பங்களைப்பறித்தேன், அக்கணமே முனிவராசரிஷிஅறிந்து விழிகளால் நெருப்பைக்கொட்டிக் கொண்டு சடையவிழ்ந்துவிழக் கோபித்துவந்தார். எ-று. (உஎ)

முத்துமணி யாமென முகத்தினில் விபர்ப்ப
வித்துருமம் வைத்தனைய மெல்லிதழ் துடிப்ப
வுத்தரியம் வீழ்வதை யடிக்கடி யுயர்த்திச்
சித்திர வழற்பொறி தெறிக்கவிவை சொன்னான்.

(இ-ள். அழகியமுத்துகள்போல் முகத்தில் வேர்வையுண்டாகவும், பவளம்போன்றமிருதுவாகிய இதழ்துடிக்கவும், நழுவிப்போகின்றவஸ்திரத்தையடிக்கடி உயர்த்திக் கொண்டு சித்திரமாகிய அக்கினிப்பொறி தெறிக்க இவைகளைச்சொன்னார். எ-று. (உஅ)

செந்தபனர் தங்கதி ருமுதுசிறு காலு
நந்துமாக றுலுமொரு காலுமிதை நண்ணு

மூந்திலேயு திர்ந்துயுல ராமுமுடி வெய்தா
திந்தவன மீதொருவ ரெய்தவெளி தாமோ

(இ-ள்.) சிவப்பாகியசூரியகிரணமும் என்னுடையபயத்தினுலே வரக்கூடாது; தென்றற் காற்றும், வண்டுகளும், ஒருபோதும்இவ்வனத்தையடையமாட்டாது; இலைகள்பழுத்துதிராது; வாடாது;நாசமடையாது; இத்தன்மையையுடையவிவ்வனத்தில் ஒருவர்வருவதற்கு எளிதோ. எ-று. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சேவினுர்க் கினிய பூசைக்
கணிமலர் செலுத்துங் காவிற்
பாவிகாள் புகுந்தென் கோபக்
கனலிடைப் பஞ்ச தானீர்
மேவிய துரங்க மாகென்
றிவற்குரை விடத்தை யீந்தா
னுவியாப் பிறப்பா யென்று
ணுண்மலர் பறித்த வெனனே.

(இ-ள்.) இடபவாகனராகிய சிவபிரானுக்கு இனிமையாகிய பூசைக்காகச்சாத்தும் அழகியபுட்பங்கள்இருக்கும் சோலையில் பாவிகளே! நீங்கள்புகுந்து என்னுடைய கோபமாகிய நெருப்பினிடத்தில் அகப்பட்டுப்பஞ்சானீர்கள், குதிரையாகப்போகக்கடவாயென்றுவிஷம்போல் இக்காந்திசாலிக்குச்சாபங்கொடுத்தார்; புட்பம்பறித்தனன்னைப்புழுகுபூனையாய்ப்போவென்றுசபித்தார்குருவாசரிஷி.எ-று

கோபமே தவம தாகப்
பலித்திடுங் கொடியோ னிட்ட
சாபமேல் வரவே நாங்க
ளிருவருந் தளர்ந்து ஞானத்

தீபமே யருளே யன்பர்
செல்வமே யெனச்சென் றேத்திப்
பாவமே லிடுமிச் சாப
மொழியுநான் பகர்தி யென்றும்.

(இ-ள்.) கோபமே தவமாகப்பலித்த பொல்லாத இருடி யிட்ட சாபம் எங்கள்மேல்வர; நாங்களிருவருந்தளர்வடைந்துஞானவிளக் கே! கிருபாசமுத்திரமே!பத்த நடையசெல்வமே!என்று எதிர்சென் றுவணங்கிப்பாவம் உண்டானதினால எங்கள்மேல் வந்த சாபம் ஒழி யும்நாள் என்றைக்குச் சொல்லுமென்று கேட்டோம். எ-று. (நக)

முனிவரது தவிர்ந்துசாப
முனிவனு மொழிவா னிந்தத்
தனிவருஞ் சாபஞ் சோணை
சலத்தி னவலஞ்செய் தாற்போம்
மனிதருஞ் சுரரும் போற்று
மலைவலம் புரிகை தானு
மினிமையாம் பாண்டி நாட்டி
னிறைவனு லெய்து மென்றார்.

(இ-ள்.) தருவாசரிஷிக்கு உண்டாயிருந்தகோபம் நீங்கினானி ட்ட இவ்வொப்பற்றசாபம்அக்கினிமலையாகிய திருவண்ணாமலையை வலமாக வந்தாற்போகும், மனிதரும் தேவரும்வணங்கும்அந்தமலை யைப் பிரதக்ஷணஞ்செய்தல்சிறந்தபாண்டியதேசத்தரசனுக் கிடைக் குமென்றார். எ-று. (நஉ)

என்றொரு கதையுஞ் சொல்வா
னெரியழற் கிரிய தாக
நின்றவெம் மிறைவன் முன்னு
ணெடுவனக் கடவு ளீந்த

மன்றல்சேர் கனியைத் தன்சே
யிருவரும் வருந்திக் கேட்க
வின்றுல கணைத்துஞ் சூழ்ந்தோர்
களிப்பமென் றிறையுஞ் சொன்னன்.

(இ-ள்.) இப்படிச்சொல்லிஒருகதையுஞ் சொல்வார், கொழுந் துவிட்டெரிகின்ற அக்கினிமலையாய்நின்ற எமதுபரமசிவம்,மூற்கா லத்தில்ஜலத்திற்கதிதேவதையாகியவருணன்கொடுத்தவாசனைபொ ருந்திய மாம்பழத்தைத் தமதுபிள்ளைகளாகிய விநாயகர்,சுப்பிரமணி யர் இருவரும்வருந்திக்கேட்க,இன்றைக்குள்உலகமுழுதுஞ்சுற்றிவ ந்தவர்க்குஇப்பழங்கொடுப்போமென்றுபரமேஸ்வரனும்சொன்னர்

கந்தனு மயிலி லேறிக்
கடலுல கணைத்துஞ் சூழ
முந்தினன் கரிய வானை
முகத்தவ னெழுந்தெல் லோர்க்குந்
தந்தையாந் தனதுதாதை
தனைவலம் புரிந்தான் றன்தை
மைந்தனைத் தழுவி வேண்டும்
வரத்துடன் கனியு மீந்தான்.

(இ-ள்.) சுப்பிரமணியரும் மயில்வாகன மேறிக்கொண்டு சப்த சமுத்திரஞ்சூழ்ந்தபூமிமுழுதுஞ் சுற்றிவந்தார்; கருமையாகியயானை முகமுடைய விநாயகர் எழுந்திருந்து உலகத்திலுள்ளசர்வாத்மாக்க ளுக்கும் தந்தையாயுள்ளவர்தனதுபிதாவல்லவாவென்று சிந்தித்து, அவரைச்சுற்றிவந்தால்உலகத்தைச்சுற்றிவருதலொக்குமென்று தம் முடையதகப்பனைப்பிரதக்ஷணஞ்செய்தார்; சுவாமி மகனைத்தழுவிக் கொண்டு வேண்டியவரங்களும் பழமுங்கொடுத்தார். எ-ழு. (சு)

வேலினன் கடிது மேவிக்
கனிதா வினவத் தம்மைக்
காலினல் வலமா யிந்தக்
கரிமுகன் வந்தா னேழு

தாலமே வலஞ்செய் தாலும்
பலபல தவஞ்செய் தாலும்
பாலகா நமைச்சூழ் தெய்வப்
பலத்தினுக் கிணையோ பார்க்கின்.

(இ-ள்.) சத்திவேலைக் கரத்திற்றரித்தருளியசுப்பிரமணியர்சிக் கிரத்தில் சென்றுபூமியைச்சுற்றிவந்துபழத்தைக்கொடுக்கும்படிகேட்கச் சுவாமி நம்மைவிக்கினேசுரன் காலால்நடந்து சுற்றிவந்தான்; எழுலகத்தை வலஞ்செய்தாலும்பலபலவாகிய தவத்தைச்செய்தாலும்மகனே ! நம்மைச்சுற்றிவரும் மேலானபலனுக்குஒப்பாகுமோ பார்க்குமிடத்தில். எ-று. (கூடு)

செம்மலை யுருவார் நம்மைத்
தினம்வலம் புரிந்தோர் வேதன்
றம்மினு மதிக மாயோன்
றனக்குமே லதிகம் பார்க்கி
லும்மினு மதிக ரிந்த
வுமையினு மதிகர் மைந்தா
வெம்மினு மதிக மென்று
னெவர்க்குமே லதிக மாஞான்.

(இ-ள்.) சிவப்பான மலையுருவமாகியநம்மைதினந்தினமும்வலம்வந்தவர்கள்பிரமனிலும்அதிகராவார்; விட்டுணுவிலும்அதிகராவார்; பார்க்கில்நம்மிலும்அதிகராவார்;இந்தப்பார்வதியிலுமதிகராவார் மகனே? எம்மைப்பார்க்கிலும்அதிகராவார்என்றூர். எல்லார்க்குமேலாகிய சிவபிரான். எ-று. (கூசு)

மாசிலா நமது மேனி
வரைதனக் கமரர் தாமும்
பூசனை புரிய மாட்டா
ரதைவலம் புரிந்தபேருக்

காசையா யளிக்கும் பூசை
நமக்கினி தளிக்கும்பூசை
கூசுமா றிழைத்த தீங்கு
நமைச்செயுங் கொடுமையாகும்.

(இ-ள்.) குற்றமில்லாதநம்மூருவமாகிய இம்மலைக்குச்சார்க்காட நிற்றவர்களாகிய தேவர்களும் பூசைபண்ணமாட்டார்கள்; அதைவல மாகச்சுற்றி வந்தவருக்கு ஆசையுடனேசெய்கிறபூசை நமக்கு இனி தாகச்செய்கிறபூசையேயாம், அவர்களுக்குக்கூசும்படி செய்ததீமை நமக்குச் செய்த தீமையே யாமென்று சுவாமிசுப்பிரமணியருக்குஅ ருளினார். எ-று. (கூஎ)

என்பது மொழிந்தான னத்த
னெனச்சொலி முனிவன் போனான்
பின்பதன் படியே நாவி
புரவியாய்ப் பிறந்தோ மின்று
தென்புவி யுடையாய் நின்னுற்
றிருமலை வலமும் பெற்றே
மின்பொலி பழைய கோலம்
படைத்தெழில் விமானத் தானேம்.

(இ-ள்.) இப்படிச்சுவாமிசொன்னரென்று திருவாசரீஷ்சொ ல்லிப்போனார், பின்புஅப்படியேகுதிரையாகவும்காவியாகவும்பிறந் தோம், பாண்டியதேசத்தையுடையஅரசனே? இன்றைக்குஉன்னால் திருமலையைப்பிரதட்சணமுஞ்செய்தோம்,மின்னல்போல்பிரகாசிக் கின்றபழைய உருவம்பெற்று அழகுபொருந்திய விமானத்தில் ஏறி னவர்களானேம். எ-று. (கூஅ)

எங்கடம் வாவி துன்பா
லிடுக்கண்வந் தடைந்த திந்த
வெங்கனல் வடவை மாவின்
மிசைவலம் வருகை யாலே

பொங்கிய தகுவும் பூசை
புரிந்திடிற் போமென் றேகித்
தங்களூர் புகுந்தார் காந்தி
சாலியுந் தானுமா மாக.

(இ-ள்.) எங்களுடையசரித்திரமிது; அக்கினிசொரூபமாகியஇம்மலையைக்காலிஞல்வலஞ்செய்யாமல் குதிரையிலேறிவலஞ்செய்தபடியினலுனக்குத்துன்பம்வந்துசேர்ந்தது; அதுவுஞ்சுவாமியைப்பூசைசெய்தாற் போய்விடுமென்று சொல்லிக் காந்திசாலியுங் கலாதரனுந்தங்களூருக்குப்போனர்கள். எ-று. (நகூ)

வேழமும் பரியுந் தேரும்
வீரருஞ் சுவடு நாடிச்
சூழமந் திரிக ளோடுஞ்
சூழ்ந்தனர் துயரந் தீர்ந்தான்
முழையின் கழுகின் காடுந்
தவளவான் கதிரைத் தீண்டும்
வாழையுங் கரும்பின் சாற்றின்
வளர்ந்திடும் வையை நாடன்.

(இ-ள்) அதன்பின்புயானேயும், குதிரையும், தேரும், காலாள்களும், அடிபற்றிக்கொண்டு மந்திரிகளுடனே அரசனே சுற்றிக்கொண்டார்கள்; அப்பொழுது வியசனம்நீங்கினன்; தென்னமரங்களும் கமுகவனமும்சந்திரனேத்தழுவுமவாழைமரங்களும்ஆகிய இவைகள் கரும்பின்சாற்றினுல்வளர்ந்திடும் வளப்பமுள்ள பாண்டியதேசத்திற்கரசனுகிய வச்சிராங்கத பாண்டியன். எ-று. (சo)

அரதனுங் கதனு மைந்தன்
றனைக்கடி தழைப்பித் தாதி
பரதனு மெனவிப் பாரைப்
புரவெனப் பகர்ந்தான்சில

விரதனுங் கதனைக் கேளா
வதன்முனம் விடைபெற் றனே
யிரதகான் மருங்குஞ் சூழப்
பதிபுகுந் திறைமை செய்தான்.

(இ-ள்.) வச்சிராங்கதபாண்டியன் தன்பிள்ளையாகிய இரத்தினாங்கதபாண்டியனைச் சிங்கிரத்தில்வரவழைத்து, முன்னுள் சுமதுவமி சத்திற்பிரபலனுயிருந்த பரதன்போல் இவ்விராச்சியத்தைக்காப்பாற்றென்றுசொன்னுன்; நல்லொழுக்கத்தையேவிரதமாகக்கொண்ட இரத்தினாங்கதனும் அவ்வார்த்தையைக் கேட்பதற்குமுன்னமே விடைபெற்றுக்கொண்டு யானைதேர் முதலாகிய சேனைகள் நான்குபக்கத்திலும் சூழ மதுரைக்குப்போய் இராச்சியபரிபாலனஞ்செய்தான். எ-று. (சக)

முறையினு லிறையின் வந்த
கனகமு முத்துந் தெவ்வர்
திறையினு லளந்த பொன்னுந்
தினந்தொறுங் களிற்றின் மேலே
யிறைவனுந் தனது தாதைக்
களித்திட விறைவன் வேணிப்
பிறையினுற் கினிய பூசை
திருப்பணி பெரிதுஞ் செய்தான்.

(இ-ள்.) நியாயமாக ஆறிலொருகடமை கொண்ட திரவியமும் கடலிற்குளித்து வாரிவந்த முத்துக்களும், சத்துருக்களால் திறையாகக் கொடுக்கப்பட்ட பொன்னும் தினந்தோறும் யானையின்மேலேற்றி அரசனுகியதன்தகப்பனுக்கு அனுப்புவிக்க; வச்சிராங்கதபாண்டியன் சடையில் சந்திரனைத்தரித்த சுவாமிக்கு இனிமையாகிய பூசை திருப்பணிபெரிதாகச் செய்தான். எ-று. (சஉ)

செய்த பின் றவமதாகிக்
கௌதமாச் சிரமத் தோர்பா
லெய்திய பன்ன சாலை
யியற்றிநம் பாவந் தீர்க்கு
மைதவழ் மிடற்றுற் கன்பாய்
மலைவலஞ் செயுநாளந்தக்
கைதவற் கெதிரே வந்தான்
கைதவர்க் கெதிரேவாரான்.

(இ-ள்.) அருணசலேசருக்குத் திருப்பணியும் பூசைமுதலான வைகளும் சிறப்பாகநடந்தபின்பு, தவஞ்செய்வதற்குநினைந்து கௌதமருடைய ஆச்சிரமத்திலொருபக்கத்திற் பர்ணசாலைகட்டி நம்மு டையபாவத்தைதீர்க்கின்ற நீலகண்டமுடையசுவாமிக்கு அன்பாய்க் கிரிப்பிரதக்ஷணஞ் செய்கின்றநாளில், கைதவனுகிய பாண்டியனுக் கெதிரே தோன்றினர், வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவர்க ளெதிரேவாராத பரமசிவன். எ-று. (சநூ)

அணிச்சிறு பிறையும் போத
வருள்பொழி விழியு நீல
மணிக்கறை மிடறு நாலு
புயங்களு மலர்க்கை மானுங்
கணிச்சியும் விடையின் மீதி
லிருப்பதுங் கண்டென் பாவப்
பிணிச்சிறை விடுப்ப தென்றே
வெனச்சொலிப் பெரிதுந் தாழ்ந்தான்.

(இ-ள்.) அழகு அமைந்த சிறிய சந்திரனையும், மிகவும் கருணை பொழிகின்ற கண்களையும், நீலமணிபோல்பிரகாசிக்கின்ற கண்டத்

தையும், கான்முகைகளோயுமலர்போன்றகையில்மானும்மழுவுமுடைய வராய்ரிஷபவாகனத்தின்மேலிருப்பதையும்பார்த்து என்னுடைய பாவப்பிணிப்பு என்னைவிடுவது என்றைக்கோவென்றுசொல்லி மிகவும் பாண்டியன் வணங்கினான். எ-று. (சச)

வே று.

அண்ணுமலை யுடையாய் மழ
விடையா யணி சடைசேர்
தண்ணுமலை யுடையா யெமை
யுடையாய் நுதல் தழுவும்
கண்ணுமலை வுடையாவினை
கடவா ரறி வறிதற்
கொண்ணு மலை யுடையா யுமை
யுண்ணு முலை தலைவா.

(இ-ள்.) அண்ணுமலையென்னும்பெயரையுடையவரே! இளமையாகிய ரிஷபவாகனத்தை யுடையவரே! அழகுள்ளசடையில் குளிர்ந்த கங்கையையுடையவரே! எங்களை யாட்கொள்ள உடையவரே! நெற்றியிற்பொருந்திய கண்ணுடையவரே! மயக்கமுடையவரும்பாவங்களைக்கடக்காத பாவிகளறியப்படாதகைலாயமலையிலிருக்கின்றவரே! உண்ணுமுலையாகியபார்வதியினது தலைவரே. எ-று. (சஙி)

மையாகிய வினையே னுனை
யொருமா வினில் வலமாய்ச்
செய்யாதது செய்தே னிது
தீரென் றுரை செய்தான்
பொய்யா தவன் மொழிகின்றது
கண்டேயருள் பொழிவற்
றையானன முடையான் மழ
விடையா னிவை யருள்வான்.

(இ-ள்.) தீவினையை யுடையவனுகிய நாம் உம்மை ஒருகுகிரை மிலேறி வலமாகவந்து நான் செய்யத்தகாத காரியம் செய்ததனுல் பொறுத்தருள வேண்டுமென்று பொய்யில்லாத பாண்டியன் சொல்ல, அதைக்கேட்டு கிருபையுண்டாகி இளமை பொருந்திய ரிஷப வாகனராகிய ஐந்து திருமுகத்தையுடைய பரமசிவன் அருளிச்செய்தார். எ-று. (சசு)

மன்னுமக பதிநீ யெமை
மதியா தொரு குலிச
மங்நாள்விட லுற்று யத
னுலே நரர் வடிவா
யின்னுதன பெற்று யினி
யிமையோ ரதி பதியாய்ப்
பொன்னுடனே யென்றே வரம்
பொழிந்தே யிறை மறைந்தார்.

(இ-ள்.) வச்சிராங்கதபாண்டியனே! நீபூர்வஜன்மத்தில்தேவேந்திரனுயிருந்தாய், அந்நாளில் நம்மை அலட்சியஞ் செய்து வச்சிராயுதத்தை நம்மேல் பிரயோகஞ்செய்தாய், அதனுல் பூமியில் மனிதனுகப் பிறந்து வெறுக்கத்தக்கனவாகிய துன்பமடைந்தாய்; அதன் பின்பு (இப்போது நீ) நம்மைப்பூசித்து வலம்வந்தபடியினுல் இனித் தேவர்களுக்கு அதிபதியாகிய தேவலோகத்துக்குப் போவென்று வரங்கொடுத்து சுவாமிமறைந்தார். எ-று. (சஎ)

அருணைப்பதி வள மிப்படி
யருளுபுரி நினைவோர்
மரணத்துக ளடையார் சிவன்
வடிவா குவரென்றுன்

கருணைக் கொரு கடலேபர
கதி பெற்றன மென்றே
சரணத்திடை பணிந்தா னமன்
றணை வாட்டிய தவத்தோன்.

(இ-ள்.) அருணாசலத்தின் வளப்பம், இத்தலத்தை நினைப்பவர்கள் மரணத்துன்பம்பொருந்தாமல் சிவனுடையரூபம் பெறுவார்களென்று நந்திதேவர்சொல்ல, எமன்வாடும்படி செய்த தவமுடைய மார்க்கண்டேயர்கேட்டு இருபாசமுத்திர மானவரே, உம்மால் பரகதியடைந்தேனென்று அவர்பாதத்திலேவணங்கினர். எ-று. (சஅ)

இக்காதையின் பொருளானதோ
ரெழுத் தாகிலுங் தெளிந்தோர்
தக்காருடன் படித்தோர் சிவ
சாயுச் சியம் பெறுவார்
முக்காலமு மிது கற்றவர்
வினவிப் பொருண் முடிப்பார்
புக்கார்சிவ கதி யென்பது
புதுமைப் பொரு ளன்றே.

(இ ள்) இக்கதையில் ஒருஎழுத்தினதுபொருளாயினும் அறிந்தோர்களும்,பெரியோர்களோடுபடித்தவர்களும்சிவசாயுச்சியமடைவார்கள்; திரிகாலத்திலுமிதைத் தோத்திரித்தவர்கள் இதின் அருத்தத்தைக்கேட்டு முடிப்பவர்கள்ஆகிய இவர்களெல்லோரும் சிவகதியிற் சேர்வார்களென்பது ஆச்சரியமாமோ. எ-று. (சகு)

ஆ ரு வ து

வச்சிராங்கத பாண்டியச் சருக்கம்.

மு ற் றி ற் று.

ஆக திருவிருத்தம்-சகுக.



10. திருவண்ணாமலையை அரசாண்ட வல்லாளமகாராஜனுக்குச் சிவபெருமான் புலமை லோகத்தோன்றி மறைந்து, ரிஷபவாகனரூடராய்வந்து அவ்வரசனுக்குக் காட்சிதந்த மகாத்மியம்.

ஒ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வல்லாளமகாராஜாச் சருக்க வசனம்.

சந்திரசடாதரராகிய சிவபெருமான் திருக்கோலங்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ அருணேயம்பதியினகண் அகஇனிகுல திலகனுயும் பக்த சிரோமணியுமான வல்லாளமகாராஜனன்பவன் மனுநீதிமுறைவழாது செங்கோனடாத்திவந்தனன் அவ்வரசற்கு இகத்தின்கண் அடைதற்குரியவன்பங்களேமலியச்செயும் அளவிறந்தசெல்வமிருந்தும், புத்திரப்பேறின்மையால்மனந்தளர்ந்தவனுய் அப்பேற்றை யடையுமாறு மந்திரிகளிடத்திற்பரியாலோசித்து யாவராயினுந்தன்னிடமிருந்து எதையடையக் கருதுகின்றனர்களோ அதைஅவர்கள் மனேபீஷ்டப்பிரகாரம் அளிப்பதாக ஆகாயத்தையளாவத்துவசம்நாட்டி உலகெங்கணும்முரசறைவித்தான். அவ்வாறேவேண்டுமெவர்கள் வேண்டியவண்ணம்,உதருமங்களேயும்குறைவறநடத்திவருங்கால் முற்றுமுணர்ந்து அறியார்போல்கைலாயத்தில்வீற்றிருக்கும் நம்பெருமான்நாரதரால்வல்லாளராஜன் உலகின்கண்செய்யும்தருமங்களேயும்அதனலுண்டானபுகழையும்அறிந்துஅன்புகூர்ந்துஅவ்வரசனது மனேபீஷ்டத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்டுகருணுநிதியாகிய கடவுள் தங்கணங்களுடனும் தமதுநன்பனுகிய குபேரனும் உபசங்கவர்களாகப் புடைசூழவும் தாம் அச்சங்கமகக்கூட்டத் தலைவராகவேடங்கொண்டுவல்லாளனுல்பாதுகாத்துவரும் அருணேயம்பதிக்குவந்து கணிகையர்வீதியிற்சென்று சிற்றின்பவாதையிலமிழ்ந்தினவர்போலநடித்துத்தங்களுக்குரியவிரகதாபத்தைதீர்த்துக்கொள்வதற்காக தங்களுடன் மனமொத்தலீலகளேச்செய்துபோக நுகர்வதற்கு ஓர் இரவுமுழுதற்குமுரிய பொருளைத் தருவதாகத் தீர்மானித்து அவ்வாறேதன்கூட்டங்களேயெல்லாம் கணிகையர் வீடுகளொன்றேனுந் தவருமல் விடித்து அன்றிரவு விடியுமளவும் அவரவர்கள்கைக்கொண்டமாதர்களேவிட்டுப்பிரியாதிருக்கும்படித் தங்கூட்டத்தவர்களுக்குக்குறிப்பாகவுரைத்துத் தாம்வல்லாளமகாராஜனேச் சோதிக்க எண்ணங்கொண்டு அரண்மனேயைநோக்கிவர, அவ்வரசனுல் ஈதிர்

கொண்டுசென்று ஆராதிக்கப்பட்டவராய் விளங்கும் சங்கமர் உருக்கொண்டமான்மழு சதுர்ப்புஜகாளகண்ட திரியம்பகராகியசம்பெருமான்தாம் மன்மதன்கணையால் கலங்கப்பட்டவர்போல்நடித்து அதனை நிவர்த்திப்பன் தமக்கு ஒருமாதைக்கிட்டும்படிசெய்யவேண்டுமென்றும் அதனுலவ்வரசனதுபுகழ் நிலவுலகின்கண் பிரகாசித்தலோடும் வானுலகிலும் பிரகாசிக்குமென்றும் கூறினர்.

அரசன் அவ்வாறுதருவதாகச் சங்கமருக்குவாக்களித்து தூதர்களைநோக்கி, கணிகையர்வீதியிற்சென்றுமிக்கரூபலாவண்யம்பொருந்திய ஒருமாதை அழைத்துவரும்படி உத்திரவுசெய்ய, அவர்களுமப்படியேபோய்நோக்குங்கால்கணிகையர்களெல்லாம் ஒவ்வொரு சங்கமர்களோடும் ஆனந்தித்துக்கொண்டிருக்குஞ் சம்பிரமங்களைக்கண்டு இன்றுமுடியாதென்று அரசனிடமுரைத்தனர். அஃதை யரசன்கேட்டுத தாமேசென்று அழைத்துவருவதாய்ப்போனபொழுது கணிகையர்கள் வீடுதோறுந் தவறுமல் ஒவ்வொரு சிவனடியார்களிருந்துகொண்டும், மாதர்களோடுகலந்து லீலைகளைப்புரிந்தானந்தித்துக்கொண்டு மிருப்பதைநோக்கியும், யாராவதுஒருமாது தன்னெண்ணத்திற் குடன்படுபவர்களுக்குத தந்நாடுராச்சியபாரம்முதலியசம்பத்துக்களைக்குறைவறக்கொடுப்பதாகக்கொண்டிருக்கும் எண்ணத்தை வெளியிட்டும் ஒருவரும் அதற்கிணங்காதலால்மனக்கிலேசமுற்று இன்னதுசெய்வதென்றுதோன்றாது இன்றோடே தன்புகழுக்கு ஊனம்வந்துவிடுமே என்பதையுட்கொண்டவனுய் அரண்மனைக்குச்சென்று அயர்வடைந்திருந்தான் பூரணச்சந்திரோதயம்போன்ற அவ்வரசனது முகாரவிந்தம வேறுபட்டிருத்தலைநோக்கிய தன்பத்தினிமார்களி லிளையவளான சல்லமாதேவி தன்னுயகனுக்குற்றுள்ள கவலையையறிந்து அரசனதுகீர்த்தியை நிலைநாட்டக்கருதி அச்சங்கமரதுமனோவிஷ்டத்தை நிறைவேற்றும்படிஆக்ஞாபித்தால் உடன்படுந் தனதுஎண்ணத்தை நாயகனுக்குத்தெரிவித்தனள் அதனைக்கேட்ட வல்லாளன் அதிக சந்தோஷமடைந்து சங்கமருக்குத்தான் அளித்தவாக்கு நிறைவேறும்படிமுன்வந்ததுதவிய தன்மைவாய்ந்த தனதிளைய மனைவியினது திறத்தைமெச்சி அவ்வாறேநடத்த ஆக்ஞாபித்து பின்னர்சங்கமர்சந்நிதானத்தில்வந்து ''தேவரீர்தமது விருப்

பத்தைநிறைவேற்றிக் கொள்வதற்காக பள்ளியறைக்கு எழுந்தருளி
இருபை பாலிக்கவேண்டும் எனப்பணிந்து அஞ்சலியத்தஞ்ய் நின்ற
வரசனைச்சங்கம ருருத்தரித்துவந்த பரம்பொருள்தண்ணளிகூர்ந்து
அரசனுல்நியமிக்கப்பட்ட நவரத்தின கசிதமான அம்சதூளிகாமஞ்ச
முதலியன வமைக்கப்பெற்றுள்ள திருப்பள்ளியறைக்குஎழுந்தருளி
அம்மஞ்சத்தின்மீது யோகநித்திரையி லமர்ந்தனர்.

இதனிடையில் தன்ஞயகஞன வரசனுற் பணிக்கப்பட்ட ஆக்
ஞையசல்லமாதேவி சிரமேற்கொண்டுசுகந்தபரிமளதைலாதிகளா
ல்ரோட்டப்பெற்று பீதாம்பரமுதலிய பட்டாடைகளேயணிந்து சூரி
யகிரணங்களேயுந் தோற்கச்செய்யும் நவமணிகளிழைத்துள்ள ஆபர
ணங்களாலும் களபகஸ்தூரி முதலியவாசனைத் திரவியங்களாலும்ந
றுமலர்மாலேகளாலும் அலங்காரஞ்செய்துகொண்டு தன்ஞயகனைத்
தியானித்தும் சங்கமரைக் கூடுந்தொழிலேக்கருதினவளாயும் மயிற்
சாயலேயுடைய நடையோடும் இளமான்போன்ற மிரண்டபார்வை
யோடும் சங்கமரமர்ந்திருக்குந் திருப்பள்ளியறையைநோக்கிச்சென்
றுட்புகுந்து சிவனடியாரைக் குளிர்ந்தபார்வையால் நோக்கி அவர்
நித்திரை செய்வதாகவெண்ணி அதிலிருந்தும் விழிக்கச்செய்வான்
கருதிதன துகரத்தி லமைபெற்ற வீணையைமீட்டிகேட்டபேருக்
குஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய கீதத்தைஊட்டியும், சுகந்தபரிம
ளங்கமழக்கூடியதும், புளகாங்கிதஞ் செய்யக்கூடியதுமான களபம்
பனிநீர் முதலியவைகளேமுறையே அவர்தக்திருமேனியிற் புரோட்
சித்தும், துயினீங்காததுகண்டு மாரனது வெவ்விதாகிய கணைகளா
ல்துன்புற்றயர்வடைந் திருப்பரென்று கவலையுற்று சோகவிகாரத்
தீர்க்கஆலிங்கனம்என்னும்மருந்தை ஒருகணமேனுந் தாமதிக்காமல்
அருத்தஉன்னி,தனது இருகரங்களாலும் அவரைமெய்யுடன்சேர்த்
தணைக்கத்தொடங்குங்கால் நம்பெருமானுகிய அறிவுக்கறிவாய்நின்

றஅற்புதன் தாம்கொண்ட சங்கமருருவங் கரந்து, இளங்குழந்தை யாகியழுங்குரலேக்கேட்டு இதுவும்பரமன் திருவிளையாடலென்றவ் வாசியானந்திக்கஅவள் தண்ணிருகரவுகளிலு மேந்தப்பெற்றுள்ளசெ வ்வியபாலகனுய்த் தோன்றினர். அதனை அம்மாது சிரோமணியும் வல்லாளமகாராஜனும் தம்அருந்தவத்தைநிலைபெறச் செய்துபுகழை நிலைநாட்டும்பேறு இதுவேவாளம்பெருமான் நமக்களித்தது என்றுஅ க்குழந்தையின்சரீர காந்தியையும் அருள்நிறைந்த பார்வையையும் செவ்விதான இதழமைந்த வாயையும் நோக்கிநோக்கி முத்தமிட்டு உச்சிமோந்து மிக்கசாதலோடும் பேரானந்தங்கொண்டிருக்கையில வர்கள் வியப்புற்று துக்கசாகரத்தி லமிழும்படி மாயமாய் எம்பெரு மான்மறைந்து திருக்கைலாய கோலத்தோடும் ஆகாயத்திற்றோன் றிதேவதுந்துமிக ளார்ப்பரிக்கவும் வானவர்கள் புஷ்பமாரிவருஷிக் கவும், இமையோர்கள் அஞ்சலியத்தராய்ப்போற்றவும், தரிசனந்தந் தார். வல்லாளமகாராசன் அக்காக்ஷியைக்கண்டு ஆவலோடும் பூமியி ற்பணிந்தெழுந்து இருகரங்களையுங்கூப்பி 'அடியார்களைச்சோதித்தா ட்கொள்ளுஞ்சோதியே! சரணம்அடியேனுக்குப்பின் னிவ்விராச்சி யபாரந்தாங்குதற்கும், சாஸ்திரவிதிப்படி எனக்குகடத்தவேண்டிய கிரியைகளை நிறைவேற்றுவதற்குமாக ஒருபுதல்வனைக் கடாக்ஷித்த ருளவேண்டுமென்று' தொழுதான் அதற்கப்பரமசிவம்; அரசனே! உனக்குநாமே பிள்ளையாய்த் தோன்றினபடியால்உனது வாஞ்ஞைக் குப்பின்புத்திரன் செய்யவேண்டியசகல கிரியைகளையும் நாமேசெ ய்து வருவோமென்று திருவருள்புரிந்துதம்பதி சென்றடைந்தார். பிறகுமிகுந்தஆவலோடும் வல்லாளமகாராஜன் அருணையம்பதியை நெடுநாளாய் ஆண்டுவந்தனன்.

வல்லாள மகாராஜச் சருக்க வசனம்

முற்றிற்று.



சிவமயம்.

ஏழாவது

வல்லாள மகாராஜன் சருக்கம்.

கலி நிலைத்துறை.

பாச முற்றவச் சிராங்கத பாண்டியன் சீரை
வாச மாய்ந்வின் ரோமினி * வல்லாளனுக்
கீசனேமக வாகவந் தெய்திப் பின்னுறுதி
ஓசையா யருட் செய்ததை யுமக்குரை செய்வாம்.

(இ-ள்.) சந்திரஜடாதர மூர்த்தியாகிய பரமசிவனுடைய பாத பத்மங்களில் மிகவும் அவாவினையுடைய வச்சிராங்கதபாண்டியன் சரிதையை கிரமமாகச்சொன்னேம். இனிவல்லாள மகாராஜனுக்கு

* ஆதியில் விஜயநகரத்தையரசாண்ட கிருஷ்ணதேவராயர்வி ஜயத்தாலும் பிரதாப உருவத்தாலும் மேற்படி வல்லாளமகாராஜன் வமிசந் தெரிந்துக்கொள்ளலாம்.

(அரிபிரமாதி தேவர்களுக்கரியவனுகியும், பார்வதி தேவியாரோடுந் தேவகணங்கள் பணிந்துபோற்றும்படியானவனுகியும், ஸ்ரீகைலாய கிரியி லெழுந்தருளியிருக்கும்) பரமசிவமேபுத்திரனுகத் தோன்றிம றைந்தபின்னர், அக்கடவுள்விசும்பின்கண் வெள்விடையின்மீதெழுந்து அவ்வரசனுக்குஅருள்சுரந்ததையும் மார்க்கண்டேயமுனிவரே? உமக்குச்சொல்லுகிறேமென்றுநக்கிதேவர்திருவாய் மலர்ந்தருளுகின்றார். எ-று. (க)

மணி கொழித்திடு மாடமா ளிகைதவழ் சோலை
திணிகொ ளம்பரத் தினையுறு சிறப்பினை யார்ந்த
கணிகை யாமவர் கற்பினை யருந்ததி தனக்கே
யிணையெனச்சொல விசைக்குமாவருணையம்பதியாம்.

(இ-ள்.) மாணிக்கம், மரகதம்,வயிரம்,வயிரியம்,கோமேதகம் புட்பராகம்,இந்திரநீலம், முத்துபவளமென்னும்நவமணிகளால்அலங்கரிக்கப்பட்ட மேனிலைகளையுடைய மாடமாளிகைகளும்,ஆகாயத்தையளாவி யுயர்ந்து தீஞ்சுவைக்கனிகளை உதிர்க்கு மலர்ச்சோலைகளெங்கும்நிறைந்துபரிமளிக்கவும், அருந்ததிக்கொப்பானவடிவமும் கற்பும் வாய்ந்த கணிகையர்கள் வசிக்கும் அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (உ)

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இத்தகை சிறப்பை வகித்திடு நகருக்
கிறைவனும்வல் லாளபூபன்
சத்திய மொழியா னற்குண முடையான்
றன்னுயிர் மன்னுயிராகப்

பத்தியாய்நாளும் பாதுகாத் திடுவோன்
பகரருஞ் சேரனற் குலத்தோன்
அத்தஞ ரடியை ஙித்தமுங் துதித்தே
வவர்திருப் பணிசெய வந்தோன்.

(இ ள்.) இத்தன்மைபொருந்திய புகழினையுடைய அவ்வருணசலம், என்னுந் தலத்திற்கு அரசனுகிய வல்லாளமகாராஜ னென்பவன்மிகவும்சத்தியவாக்கியமுடையவன், நல்ல உத்தமகுணமுடையவன் சகலவுயிர்களையுந்தன்னுயிர்போற் பாதுகாப்பவன் அக்கினிவமிசமென்கிறவன் குலகூத்திரியமரபில் உதித்தவன் சகதீசனுகியபரமசிவனுடையஉபயசரணும்புயங்களைத் தினந்தினந்தூரிகாலமுந் துதிசெய்பவன், அக்கடவுளினதுதிருப்பணிசெய்யவுதித்தவன். எ-று. (ஈ)

பிறர்பொரு ளாசை யற்றவன் றனது
பெண்டிரை யன்றிமற் றேரை
முறையுடன் றமக்கை தங்கையரெனவு
மொழுந்திடு நன்னடை யுடையோன்
நெறியுடன் ஞறி லொருபங்கு குடிக
ணிலேயுடன் றரப்பெறும் புனிதன்
கறைமிடற் றண்ண லாலயப் பணியைக்
கருத்துகந் தியற்றுநல் லன்பன்.

இ-ள்.) ஒருவன்பொருளின்மீது இச்சையென்பதை மறந்தவன், தன்மனைவியாரை யன்றி மற்றஸ்திரீகளைத் தமக்கைமார்களைப் போலவும், தங்கைமார்களைப் போலவும் மனத்திற் பரிவு கொண்டு பேசும் நன்மையுடையவன், நீதிதவறுமல்குடிகளிடத்தில் ஆறிலொருபங்குபகுதிபெறப்பட்டவன் ஆலாலமுண்டஸ்ரீகண்டகராகியஅரு

ணைசலேசுவரது ஆலயத்திருப்பணியை மனக்களிப்போடும்கடத்தும் மேன்மைபொருந்திய பத்தியையுடையவன். எ-று. (சு)

நீதியாய்ப் புலியும் பசுவுமோர் துறையி
னெருங்கியே புனலுண்டு வசிக்கும்
போதனே யருளும் பவதியர் மறையைப்
புகன்றிட யாவருங் கேட்பார்
ஆதியாங் கடவு ளருட்பெற நகரை
யலங்கரித் தற்புதஞ் செய்வார்
வீதியிற் புனலைத் தெளித்துமின் னார்கள்
மேம்படு கோலமு மிடுவார்.

(இ-ள்.) அரசன்ஆணையால் புலியும்பசுவும் ஒருதுறையில்சேர்ந்து தண்ணீரருந்திக்களித்துவிளையாடிவாசஞ்செய்துவரும்,வேதாகமங்களையுணர்ந்துஉபதேசிக்கும் அந்தணர்கள்செய்யும் வேதபாராயணம் யாவரும் பக்தியோடுங் கேட்பார்கள், ஆதியாகவும் ஒப்பற்றதாயும்விளங்குங்கடவுளாகிய ஸ்ரீ அருணைசலேசருடைய திருவருள்பெறும்பொருட்டுஅந்நகர்முழுவதும்வீதிகடோறும்வரிசைவரிசையாய்மகரதோரணங்களும், மாவிலைத்தோரணங்களும் விருஷபத்துவசங்களுந் தைத்து, எங்குஞ்சுகந்தபரிமளவீசும் புட்பங்களால் அலங்காரஞ்செய்து, வீதிகளில் மங்கையர்கள் வாசனைகமழுஞ்சுண்ணந்தெளித்து விசித்திரங்களாகிய கோலங்களையிடுவார்கள் எ-று. (டு)

மாதமும் மாரி சொரிந்துவே ளாண்மை
மாறிலாச் செழிப்புற விளையும்
சாதமென் போரை யக்கண மழைத்தே
தழைக்க ஷட்சுவை யமுதளிப்பார்

மாதவர்க் கேவல் புரிந்தவர் கேட்கும்
வகையெலாந் தந்தருள் பெறுவார்
நீதனு லயத்தி னெய்விளக் கமைத்து
நிரந்தரம் பூசித்து வருவார்.

(இ-ள்.) அவ்வருணேயம்பதியென்னுந் தலத்தில் மாதமும்மாரி பொழிந்து வேளாண்மை எந்நாளுங் குறையாது செழித்தோங்கி விளைந்துவரும், அல்லாமலும் அந்நகருள்யாவரேனும் பசிப்பிணியால்மெலிந்துவந்து புசிப்புவேண்டுமென்று வினவுபவர்களே அக்கண மேஅழைத்துசயித்யோபசாரஞ்செய்து (கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், திக்திக்தல்என்னும்) அறுசுவையோடுங் கூடியஉணவை திருப்தியாகக் கொடுத்து உபசரிப்பார்கள்; மேலும் தபோமஹிமையையுடைய குணமுடையவர்கள், சொல்லுங்குற்றேவல்களேப்புரிந்துஇச்சித்துக்கேட்டவஸ்துக்களேயெல்லாங்குறைவில்லாமல்ஈந்து, அவர்கள்அருளேப்பெறுவார்கள்; அஃதல்லாமலும்மீதனுகிய ஸ்ரீ அருணசலேசராலயத்தில்எங்கும்பிரகாசம்பொருந்தத்தக்கதாய்நெய்யினுல்திருவிளக்குகள்அமைத்து அக்கடவுளேஎன்றும்பத்தியுடன்பூசித்துப் பணிந்துவருவார்கள். எ-று. (சு)

கலி விருத்தம்.

இந்த வண்ண மிறைவன் விதிப்படி
அந்த மாநகர ரானதி லங்குநாள்
எந்தச் சீரு மிருக்கமன் போர்சொல
சந்ததி யில்லையென்று தளர்ந்தனன்.

(இ-ள்.) இத்தன்மையாய்அரசன்கெங்கோன்முறைமையால்யாதும்குறைவில்லாமல்அந்நகரம்செழித்தோங்கியிருக்கையில் ஓர்நாள் மன்னனுகியவல்லாளமகாராஜன்தனக்கு ஆண்டவனருளால்எல்லா

ச்சிதப்பும்பொருந்தியிருக்க நாம்எத்தணைத்து உச்சிமோந்துமுத்த மிடவும் இனியமழலைச்சொற்களாற்சிரவணனந்தமுறவும், பின்னர் நம்பெயரைச் சொல்லவும் பிள்ளையில்லாமற் போயிற்றே யென்று மனம்வெதும்பி மிகவுந்துன்பமுற்றான். எ-று. (எ)

ஐயன் பூசை யதிற் குறை வோவிந்த
வையந் நீதியின் மாறுளதோ வன்றிக்
கொய்யு மலர்களிற் கோதுறச் செய்தனை
செய்யு வண்ணமேன் செப்பு மமைச்சரே.

(இ-ள்.) ஜகதீசனுகியும்உமாமகேசனுகியும் என்னையாட்கொள் ளும்பொருட்டு எழுந்தருளியிருக்கும்ஐயனுகிய ஸ்ரீ அருணசலேசரு க்குப்பேதையனுகிய என்னுற்செய்யப்பட்ட பூசையில் ஏதேனுங்கு றையுளதோ! அல்லது இவ்வுலகநீதிநடத்துவதில்மாறுபாடாகியகுற் றங்களுண்டோ; அதுவல்லாமலும்நங்கடவுளே அருச்சித்தும்பணியும் பொருட்டுகொய்தமலர்களி லேதேனுங்குற்றங்குறையுண்டோ என் செய்வேன், அறியேன், இனியான்செய்யும் விதியாது கூறுவீர்கள் மந்திரிகளே என்றான் வல்லாளமகாராஜன். எ-று. (அ)

அண்ண லேநமை யாதரித் தாண்டிடுங்
கண்கள் மூன்றுடை யானற் கருணையால்
நண்ணு மாதுலர் யார்க்குநல் லன்புடன்
றிண்ண மாயறஞ் செய்யிற் சுதனுண்டாம்

(இ-ள்.) பெருமையிற்சிறந்த எங்களிறைவனே நம்மைஅன்புட னுதரித்தாட்கொள்ளும்பொருட்டெழுந்தருளிய சகலபுவனகர்த்தா வாகியுஞ்சர்வாந்தரியாமியாயும்திரிகோத்திரமூடையவராயும் அடியா ர்களிருதயத்தில் விளங்கும் ஸ்ரீ அருணசலேசுவரதுமேண்மைபொரு

ந்திய கருணையினால் நம்பதியை நாடிவரும் ஆதுலர் முதலிய அந்த ணர்களும் இன்னும் மற்றவர்களும் எதைக்கேட்டபோதிலும் அவை களே இல்லையென்னுது அவர்மனங் களிப்புறும்படி உள்ளன்போ டும் நல்குவோமாயின் (பரமசிவனருளால்) புத்திரனுண்டாமென்று சொன்னர்கள் மந்திரிகள். எ-று. (கூ)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சுந்தர வருணை நாதர் துலங்குமிந் நகரி னுள்ளே
வந்தவ ரெது கேட்டா லும்வழங்குது மெனவிப்போது
அந்தர மளாவ நீங்க ளழகிய துவச நாட்டி
எந்தனற் பெயர் விளங்க வெழின்முரசரையச் செய்மின்.

(இ-ள்) சோமசுந்தரக்கடவுளாகியஸ்ரீ அருணசலேசுரர்வாழும் இப்பதியின்கண்வந்தவர்கள் எந்தப்பொருளை விரும்பிக்கேட்டாலும் குறைவின்றித்தருகிறோம் இப்போதேவாருங்கள்நற்றவர்களே என் று கரங்களை நீட்டியழைப்பனபோலும் இவ்வெல்லையுட்புக்கியமாந் தர்களைக் கலியென்னும் பிணியணுகாமற்றுறத்த ஆகாயபரியந்த மளாவியுயர்ந்து, படபடாகாரஞ் செய்யும்படியாய் அழகிய ஓர்துவ சம்நாட்டி என்பெயர் எங்களுஞ் சிறக்கும்பொருட்டு எழுகடலொ லிகளையுங் கவளீகரித்து இடி முழக்கம்போற் பேரொலிகாட்டும் முரசமார்ப்பச் செய்யுங்களென்றான் வல்லாளராஜன். எ-று. (கo)

தாத்திரி முற்று நற்சீர்
தழைக்குமெங் கோனே கேண்மோ
சாத்திரம் புகழு மீசர்
தாடொழுந் தொடர மூப்பர்
தோத்திர விரவ லோர்கள்
தோன்றிய வண்ண மீயப்

பாத்திர ராஞை மென்று
பகர்ந்தன ரமைச்சராஞேர்.

(இ-ள்.) நெடியகடல்சூழ்ந்த உலகமெங்கும் மிகுந்தகீர்த்தியை விரியச்செய்த எங்களரசே!(கேளீர்) இருக்கு,யசுர்,சாமம்,அதர்வண மென்னும்நான்குவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும்புகழத்தக்கஉமா மகேசனுகியஸ்ரீ அருணசலேசருடையஉபயசரணம்புயங்களேப்பணியும்மெய்யன்பர்கள்,தபோமகிமையைப்பெற்றவிருத்தர்தோத்திரஞ் செய்யும்பாவலர் முதலியவர்களின் மனத்திற்றோன்றிய வண்ணம் அளித்து களிப்படையச் செய்விக்கும்படியாகிய பாத்திரரோ நாம் இறைவனேயென்று மொழிந்தார் மந்திரிமார்கள். எ-று. (கக)

பூவிலப் பொருளைக் கேட்கப் போகுமோ கேட்கிலவ்வா
றியாவரா யினுந்தா னல்கா ராதலாற் புகன்றவண்ணந்
தேவிர மாகச் செய்வீ ரெனத்துவ சத்தைநாட்டித்
தேவநா டளவு மோங்கச் செயமுர சறைவித்தாரால்.

(இ-ள்.) இவ்வுலகிலில்லாத பொருளைக்கேட்கப்போமோ;அவ்வாறுகேட்டபோதிலும் யாவரேனும் எத்தன்மைவாய்ந்தவராயினுங் கொடார்கள், ஆகையால் யான் உங்களுக்குறைத்தவிதியின்படிஅதிகசிக்கிரத்திற்செய்வீர்களென் றறைந்த மொழியைக்கேட்டு மந்திரிகள் துவசத்தை நாட்டி வானுலகளவும் பேரொலிமுழக்கம் எட்டும்படி ஜெயமுரசறைவித்தார்கள். எ-று. (கஉ)

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

நாதன்வா ழருணை நகரினில் வேந்த
ணாட்டிய துவசத்தை யோர்ந்து
பூதலத்துள்ள விருத்தர்கா வடிகொள்
பூரிய ருடன்மிகச் சிறந்த

மாதவர் மறையோர் ஜோகி ஜங்கமர்கள்
வானவர்க ளியாசக ரியாருரும்
நீதமாய்த் திரளாய் யெய்தினன்னேர்க
ணிலெபெறப் பரிசிணை யடைவார்.

(இ-ள்.) காதஞகியஜகதீசன் ஸ்ரீ அருணசலேசுரர்வாழும்அரு ணையம்பதியின்கண்வல்லாளமகாராஜஞல் தருமக்கொடிநாட்டியிரு ப்பதாய்கேள்வியுற்ற நெடியகடல்சூழ்ந்த பூமியிலிருக்கும் விருத்தர் தீர்த்தக்காவடி ஏந்திவரும் பிராமணர், தபோதனர், ஜோகி, ஜங்க மர்கள் பாவணர் யாசகர்முதலியயாவரும் பத்தியோடுங் கூட்டம்கூ ட்டமாய்க் கூடிவந்து தத்தம் வறுமைநீங்கும்படியாய் அரசனிடம் வேண்டியவைகளைப்பெற்று குறைவின்றிவாழ்வார்கள். எ-று. ()

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வதுவை செயப் பொன்வேண்டி வந்தோருக்
காயிரம்பொன் வழங்கிப் பின்னுங்
கொதுவை மனை நிலம்பணிதி கொற்றவனே
யதைமீட்டுக் கொடுமென் றேர்க்கத்
ததியிலீ ராயிரம் பொன் தந்தவரை
மகிழச்செய் ததன்பின் னுங்கு
முதுமறையோ ருபநயன முடிக்க வென்ரு
லவர்க்குநிதி மூன்நூ றீவான்.

(இ-ள்.) விவாகஞ்செய்துக்கொள்ள பொருள்வேண்டுமென்று ஆவலோடும் அரசனைநாடிவந்துகேட்டவர்கள் மனம் திருப்தியடை யும்படிஆயிரமாயிரமாகப்பொன்கொடுத்தும், பின்னர்ஆபரணதிரு தலியமண்மனையாவுங் கொதுவைவைத்து மீட்டுக்கொள்ளுவதற்கு ஹேதுவில்லாமல்மூழ்கிப்போகின்ற அரசர்க்கரசனுகியஎங்கள்சோ

வே! தேவரீர் அவற்றைமீட்கும்பொருட்டுத் திருவருள்காப்பீராயின் மிக்க புண்யமாமென்று பணிந்து வினவியர்களுக்கிரங்கி, அக்க ணமே இரண்டாயிரம் பொன்கொடுத்து அன்னவர்மண மகிழச்செய் வித்தும் அதன்பின்பு வேதாகமங்களையுணர்ந்த பெரியோர்களாகிய அந்தணர்வந்து அரசனேஆசீர்வதித்து மகாராஜனே! உபநயனம்மட த்தவேண்டி யிருக்கிறதென்று அறிவிப்பார்களாயின் அவர்களுக்கு மூன்றுபொன்கொடுத்து மகிழச்செய்விப்பான். எ-று (கச)

ஆலயத்தி லுற்றமணி மண்டபமுஞ்
சூழ்மதிளு மவமாந் தன்னைக்
கோலமுற வமைப் பதனுக்கிறையவனே
திரவியங்கள் கொடுப்பா யென்னச்
சீலமுட னிருபதினாயிரம் பொன்னுந்
தந்துசீர்செய்யென் றுன்பின்
ஞாலமதின் மடந்தருமஞ் செய்ய
காயிரம்பொன் நல்கினனால்.

(இ ள்.) ஸ்ரீ அருணாசலேசுரர்எழுந்தருளியிருக்கும்கோயிலி லுள் நவமணிகளிலுலுஞ் சந்திரகாந்தக்கற்களிலுலும் அமைத்துப்பிர காசம்பொருந்தியிருக்கும் மண்டபங்களும் செஞ்சுடராகியசூரியனு ஞ்சாய்ந்து ஒதுங்கிப்போகும்படி ஆகாயத்தையளாவி மேகங்கள்தவ ழுஞ்சுற்றுமதில்களுஞ் சிலப்பட்டிருக்கின்றமையா லவைகளைத்திரு த்தஞ்செய்யும்பொருட்டுப் பொருளுதவிசெய்யவேண்டும் மகாராஜ னேயென்றுகேட்குங்கால், அரசன் மிக்கபக்தியோடும்ஜகதீசன்திரு ப்பணி நிறைவேறும்பொருட்டு இருபதினாயிரம்பொன்கொடுத்துச் சீர்திருத்தஞ்செய்தும் பின்பு உலகின் சிவசரணர்கள் வசிக்குமடால யங்களைப்புதுக்கவேண்டுமென்றாலவைகளுக்கு ஐம்பதினாயிரம்பொ ன்னுங் கொடுப்பான். எ-று. (கரு)

அந்தகர்க்குஞ் சங்கமர்க்கு முடவ ருக்கும்
சோகிகட்கு மாபத் தென்று
வந்தவர்க்கு மாதுலர்க்கு மாறுத
சஞ்சலமும் வறுமை நோயால்
நொந்தவர்க்குஞ் சொலுமின்ன மற்றவர்க்குந்
தினந்தினமும் நுவன்ற வாறு
சந்தமொடு பரிசளித்தல் நாரதரு
மோர்ந்தங்கண் சார்ந்திட் டாரால்.

(இ-ள்.) கண்ணில்லாதவர்களுக்கும், ஜங்கமர்களுக்கும், கரசரணதிகளற்றவர்களுக்கும், ஜோகிகட்கும் வினைவழியால் வெவ்விய ஆபத்துநேர்ந்துவந்தவர்களுக்கும், யாசகர்களுக்கும், கெடாததுன்பத்தையடைந்து தரித்திரமென்னும் பிணியால் மெலிந்து மனநொந்தவர்களுக்கும், பின்னும் சொல்லும் யாசகர்களுக்கும், சதாகாலமும் அவரவர்கள்விரும்பிக் கேட்டுக்கொண்டவண்ணம் மனக்களிப்போடும் உதவிசெய்வதை நாரதமுனிவர் கேள்விப்பட்டு வல்லாளமகாராஜனிடத்திற்கு மிகுந்த கருணையோடும் எழுந்தருளிவந்தார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாதவ முனிவ ராங்கு வந்ததை மன்ன னேர்ந்து
காதல்கொண் டமைச் சர்சூழக் கடிதினி லரசைவிட்டுப்
பூதல னெதிர்சென் றேத்திப் புகுதுவி யழைத்து வந்து
ஏதமில் பீடநல்கி யெழுந்தபின் னியம்பு வானால்.

(இ-ள்.) மகாதபோதனராகிய நாரதமுனிவர் அவ்விடம்வந்தவரவைக் காவலாளிகளால்கேள்விப்பட்டவல்லாளமகாராஜன்மிகவும் அன்போடும் சிங்காதனத்தைவிட்டெழுந்து மந்திரிமுதலியசேர்வை

க்காரர்கள்புடைசூழ்ந்துவரும்படி அரசனுனவன் எதிர்சென்றுபணிந்து தமியேங்களே யாட்கொள்ளும்பொருட்டுத் திருவருள் சுரந்தெழுந்தருளிவந்த மாதவமே புண்ணியப்பொருளே என்று துதித்துப் பேரானந்தத்தோடும் அழைத்துவந்து குற்றமற்ற மணிகளிழுலலங்காரஞ் செய்யப்பெற்ற பொற்பீடமளித்து அதிலெழுந்தருளியபின் சொல்லுகின்றான். எ-று. (கஏ)

அயன்றவத் தினிலு தித்தே
அழகிய கரத்தின் வீணை
லியழுறக் கொண்டு பாடும்
மெனமுனி வரனே தாங்க
ணையமுட னுயன் மீது
நாட்டமுற் றெழுந்த செய்தி
தயையுட னருள்க வென்னத்
தாபத நிசைப்ப தானுர்.

(இ-ள்) சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமன் தபோமகிமையால்உதித்து, சரோருகம்போன்ற அழகியகரத்தில்வீணை இலங்கக்கொண்டு கானஞ்செய்யும் மேன்மைபொருந்திய முனிசிரேஷ்டனே தாங்கள் காயினுங் கடையேனுகிய பேதையேன்மேல் கருணைவைத்தெழுந்தருளிவந்த சங்கதியை அருள்செய்யவேண்டுமென்று பணிந்து நின்ற வல்லாளமகாராஜனைப்பார்த்து நாரதமுனிவர் கூறுவார். எ-று. (

தலத்தின்மேன் மகிமை யுற்ற தாபதர் புகரு மாவைம்
புலத்தினை வென்ற மோனர் புகலுமே வகையுள்வண்ணி
குலத்தினில் வருமன்னனுநின் கோதிலாத் தருமங்கேட்டுக்
நலத்தினை யறியவந்தோம் நவின்றிடார் யெனவுரைப்பான்.

(இ-ள்.)புவனத்தின்கண்மகிமைபொருந்தியமுதியவர்களும்புகழத்தக்கமகத்தாகிய ஐம்புலனுகர்ச்சிகளையும்வென்றுமெய்யுணர்ச்சிபெற்றபுண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினியென்னுமுக்குலத்தரசன் அக்கினிக்குலத்திலுதித்தஅரசேயின்குற்றமற்றமகாதானத்தின்பெருமையைக் கேள்வியுற்றுஅதையறியும்பொருட்டுவந்தோம், ஆதலால்உன்கருத்தைவெளியிடுவாயென்றுநாரதமுனிவர்கேட்க அரசன்சொல்லுவான். எ-று. (கஈ)

மனுமுறை யறிந்த மாபதர் புகழு
மாதவ முனிவரே கேண்மோ
தளியிலென் னரசைத் தாங்கவு மென்பேர்
சாற்றவு மகவில னதனற்
பனிமலர்க் குழலாள் பாகனுந் தொழும்பர்
பரிவுடக் கேட்டவை மண்மேற்
கனிவுட னளிக்கத் துவசம் துயர்த்தேன்
கடவுளின் செயலறி யேனே.

(இ-ள்.)வேதசாஸ்திரமந்திரங்களையுணர்ந்த முனிவர்கள்புகழத்தக்கமகாதபோபலமுடைய நாரதமுனி எளியேன்ஒப்பற்றஆளுகையைத்தாங்கிக்கொள்ளவும்,பின்னர்எளியேன் பெயரைச்சொல்லவும் மைந்தனில்லாமையால்,மனமெலிந்துகுளிர்ந்ததேனைச்சொரிகின்றபூங்குழலையுடைய உமாதேவிபாகனுகிய ஸ்ரீ அருணசலேசுவரடியார்கள் இச்சித்துக்கேட்டவைகளை இல்லையென்னுது கொடுக்கும் நியமங்கொண்டுதுவசமுராட்டி நடத்திவருகிறேன், நம்மையாட்கொள்ளுங்கடவுளின் திருவுளம்யாதோ அறியேனென்றான் வல்லாளமகாராசன். எ-று. (உ0)

திருவுயர் தரும நடத்துவர் மண்மேற்
சேயரைப் பெறுவ ரென்றேநற்
றவமறை நூல் களிலுஞ் செப்புவ தன்றித்
தக்கவ ரும்புகல் வதனற்
பெருகுமாந திியுமதியமுஞ் சடையிற்
பெட்புட னுற்றலாங் காக்குங்
குருபர னருளாற் குழவியு முண்டாங்
கொற்றவா செலவிடை தருவாய்.

(இ-ள்.) அழகிலுயர்ந்த மூப்பத்திரண்டறங்களையும் இரப்பவர் களுக்கில்லையென்னுமல் நடத்துபவர்கள் மண்மேல் புத்திரபாக்கிய ங்களைப் பெறுவார்களென்று மேன்மைபொருந்திய ஆகமசாத்திரங் களிற்சொல்லியிருப்பதல்லாமலும்; மறைவிதியுணர்ந்தபெரியோர்க ளுஞ்சொல்லுவார்கள்; ஆதலால் எங்கும்பரவி மகிமையுள்ளகங்கை யும்சந்திரனையுஞ்சடையில்விருப்பத்துடன்தரித்து எண்பத்தாறா யிரம் ஜீவபேதங்களைப்படைத்தளிக்கும்பரமசிவத்தின்திருவ ருளால் மக்கட்பேறுபெறுவாய், எனக்கு விடைதருவாய் அரசனே யென்று நாரதமுனிவர் விடைபெற்றுச் சென்றார் எ-று. (உக)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மன்னவன்ற னீதிதனைக் கயிலைவளர்
பரமனுக்கு வழங்க வேண்டித்
தன்னுமுனி காதலுற்றுச் செல்லுகையிற்
சிவகணங்கள் துதித்து நிற்க
முன்னிலங்குஞ் சங்கரனை நாரதனும்
பணிந்து பின்னர் முனிவர்சூழச்
சென்னிமதி யணிந்தபிரான் றிருக்கோலங்
கண்டிறைஞ்சிச் செப்பு வானால்.

(இ-ள்.) வல்லாளமகாராஜனுடையகன்மார்க்கத்தையும், தரும பரிபாலனத்தையும், கயிலாயகிரியில்எழுந்தருளியிருக்கும்பார்வதிசமேதனாகிய பரமசிவனுக்குத் தெரிவிக்கும்படி யெண்ணங்கொண்டு தவத்திற்சிறந்த(நாரத)முனிவர்ஆசையோடுஞ்சென்று செல்லுகையில், அங்ஙனம் அநேக சிவகணங்கள் அடிபணிந்து துதித்துநிற்க முன்னம்பிரகாசித்துக் கட்டளைகள்விதித்துக்கொண்டிருக்கும் இரண்டாஞ்சங்கரனாகிய சுந்திதேவரைப்பணிந்து; பின்பு மகாதபோதனர்களும்தேவர்களும்முனிவர்களும் புடைசூழும்படி உமையவள் இடப்பாகத்தில் இலங்கக் கொலுவீற்றிருக்குஞ் சந்த்ரசடாதரனாகிய சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு சாஷ்டாங்கமாய்ப்பணிந்தெழுந்துபோற்றிக் கூறுவார் நாரதமுனிவர். எ-று. (உஉ)

தேசின்மிகு கயிலையில்வாழ் தேவாதி
தேவனேநின் றிருத்தாள் போற்றி
மாசின்றி விளங்கருணை யம்பதியின்
வல்லாள மன்ன னென்போன்
ஓசைபெறச் சுதன்வேண்டிக் கொடிநாட்டி
யுலகிலுள்ளோ ருவந்து கேட்கும்
பாசமுட னெதையேனுந் தருவனென்று
பறைசாற்றும் பண்பைக் கேண்மோ.

(இ-ள்.) பிரகாசம் பொருந்திய கயிலாயகிரியில் வீற்றிருக்குந் தேவதேவனே! உன்உபயசரணங்களுக்குட் போற்றிசெய்கிறேன் பூலோகத்தில் குற்றமற்று விளங்கும் அருணையம்பதி யென்னுந் தலத்துக்கிறைவனாகியவல்லாளமகாராசனென்பவன் தன்பெயரைவிளக்கஞ்செய்ய ஓர்புதல்வனேவேண்டியாவர் எப்பொருளேவிரும்பிக்கேட்டபோதினும் அவர்திருப்தியடையும்படி இஷ்டத்துடன்தருகிறேனென்று கொடிபோட்டு, பறைசாற்றிநடத்திவரும் பெருமையைக் கேளும் எந்தையேஎன்றுபின்னுங்கூறுவார் நாரதமுனிவர். எ-று ().

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

நீதியை வளர்ப்போ னுண்மையைக்காப்போ
னெறிமுறை தனிற்பிற ழாதோன்
கோதிலைக் களைந்த வறமெனு முருவாய்க்
குவலயத் துதித்தநற் பூபன்
பூதலத் துயிர்க ளியாவுந்தன் னுயிர்போற்
புந்தியுட் கருதியே காப்போன்
ஆதியே நினதுபதமலர் துணையென்
றனுதினந் தொழுதுவா ழுன்பன்.

(இ-ள்.) நன்மார்க்கங்கள்பெருகும்படி வளர்ப்பவன், சத்தியத்தைக் காப்பாற்றத் தக்கவன், செங்கோல்விதி பிசகாதவன், பாவமகளென்னும்இருளைத்துரத்தியெழுந்த மதிபோன்றதருமமாகிய ஒளியேயொருருவங்கொண்டு உலகிற்பிறந்தமேன்மைபொருந்திய அரசன் அல்லாமலும் பூமியில்வாழுசராசரங்களாகிய எல்லாவுயிர்களை தன் னுயிர்போல மனத்திலெண்ணிக்காப்பவன், அடியவர்க்கெளியவன் ஆதிகடவுளாகிய தங்கள் சரணகமலங்களில் மனம்பொருந்திச் சதா காலமும்பணிந்து துதிசெய்து வாழ்ந்துவரும் மெய்த்தொழும்பன் என்று நாரதமுனிவர் கூறினர். எ-று. (உச)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வந்தமா முனிவன் கூறும் வாய்மையை யீசனேர்ந்து
அந்தவல் லாளன்றன்மை யாமுங்கண் டறிவோமென்றே
சிந்தைசெய் முனிக்கு மற்றத் தேவர்க்கு மிருடிகட்குந்
தந்தமாச்சிரம மெய்தச் சாற்றினன் தன்னே ரில்லான்.

(இ-ள்.) அங்ஙனம் வந்து வல்லாள மகாராசன் பெருமைபைச் சொல்லும் நாரதமுனிவன்மொழியைப் பரமசிவன்கேட்டு, அவ்வல்

லாளமகாராஜன்தன்மையைநாமுங்கண்டறியவேண்டுமென்று மனத்தில்நினைந்து துதிசெய்துகொண்டு நிற்கும் முனிவரையும் மற்றத் தேவர்கள் இருடிகள்யாவர்களையுந் தத்தம் இருப்பிடம்போய்ச் சேரும்படிதிருவாய்மலர்ந்தருளினர் ஒப்பொருவருமில்லாத உமாமகேசர். எ-று. (உஙி)

அக்கணங் கயிலாத னளகைகோன் றனைய ழைக்கத்
திக்கெலாமதிக்க வன்னோன் றிரண்டபொற்குவியல்தாங்கி
அக்கர வணிந்த வீசனருட்பதம் வந்துபோற்றச்
செக்கர்மே னியனுமாங்கு சிலமொழி யருள லுற்றான்.

(இ-ள்.) அக்கணமேகயிலாயபதியாகியபரமசிவன், அளகாபுரிக்கிறைவனாகியகுபேரனைவரும்படி கட்டளையிட்டமாத்திரத்தில் எண்டிசையிலுள்ளவரெவரும் மதிக்கும்படி அவ்வரசன் அளவிறந்தபொற்குவியல்களோடும் பிரயாணப்பட்டு அக்குமணிகளாகிய ஊருத்திராட்சமாலைகளையும் சர்ப்பங்களையும் ஆபரணமாக வணிந்த சிவபெருமானிடம்வந்து அடிபணிந்துபோற்றிநிற்கச் செவ்வானம் போன்றதேககாந்தியுடையபரமசிவன் அங்ஙனம்சிலவசனங்களையருளுவார்.

அளகையா ளாசேகேளு மருணையம் பதிவாழ் வேந்தன்
உளமுறு தியைச்சோ திக்கவுன்னிய படியா னீயும்
வளமுறுஞ் சீடனாகி மாநிதி யுடனெம் மோடு
புளகமாய் வருகவென்று புகன்றனன் கயிலாநாதன்.

(இ-ன்.) அளகாபுரிக்கிறைவனாகியகுபேரனேகேள் பூமியில்நாம்அருணையம்பதியில்வாழும்வல்லாளமகாராஜன் மனவலியைச்சோதிக்கும்படி எண்ணங்கொண் டிருக்கின்றமையால், நீயும்சிறந்தசீடனாகிஅளவிறந்தபொருளோடும் நம்மூடன்மனமகிழ்ந்துவரக்கடவையென்றுகூறினார் கயிலாயபதியாகியும் திரிநேத்திர முடையராகியும் விளங்கும் ஜகதீசன். எ-று. (உஎ)

மாலய னிருவர்கண்டு மனத்தினி லென்றுமில்லா
மால்கொள வும்பராரு மலர்மழை சொரிய வேத
நூல்களுந் துதிக்க யாருநுவலுநற் கரியமாதோர்
பாலொளிர் பரமன் யாரும் பரவுஞ்சங் கமராய் நின்றார்.

(இ-ள்.) விட்டுணுவும்பிரமனுங்கண்டுமனத்தில்ஒருநாளுமில்லா தமிழ்ச்சிகொண்டுஒருபால்தின்றுபோற்றவும், தேவர்கள்மலர்மாரி பெய்யவும்வேதாகமங்கள்துதிக்கவும், யாவராலுஞ்சொல்லுதற்கரிய உமாமகேஸ்வரியை ஒருகூறுகக்கொண்ட பரமசிவன் சகலரும்பணி யும்படிசங்கமராய் வேடங்கொண்டு நின்றார். எ-று. (உஅ)

தேவுறை கயிலைவாழுந் திருவுயர் சிவகணங்கள்
யாவுமெம் மையநற்சீ ரருளினு லாண்டியானுர்
பூவுல கினில்வல் லாளன் பொருந்துநற் பதியை நாடிக்
கோமுறையோர் கொண்டாடக் கூட்டமாய் வருவதானுர்.

(இ-ள்.) தேவதேவனுகியபரமசிவன்வாழும்கயிலாயகிரியில்வா சஞ்செய்துகொண்டிருக்கும் அழகியசிவகணங்களெல்லாம் எமதை யன்கருணாசத்தினுல் ஆண்டிகளுருவங்கொண்டு உலகில்இணையில் லாக்கீர்த்தியையெய்திப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வல்லாளமகாராசன்வாழும்பதியைநோக்கி அரசநீதியோர்கொண்டாடிப்பணி யத்தக்கதாகக் குருமூர்த்தமா யெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமானைச் சூழ்ந்துவந்தார்கள். எ-று. (உக)

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கற்பினி லுயர்ந்துங் கணவனை யிறைபோற்
கருதுதா யொருவரு மிலையோ
பொற்புறு மைந்த ரில்லையோ பசிக்குப்
போனக வளிப்பவ ரிலையோ

விற்பன முடைய வரசர்க ளிலேயோ
வியப்புட னெங்களைக் கூப்பிக்
கற்பனை யோடு வழுதினைப் படைக்குங்
கண்ணிய ரில்லையோ வென்பார்.

(இ-ள்.) கற்பினில் அருந்ததியைப்போல்மிகுந்தும் தத்தம்கண வனையே தெய்வமாகப் பாவித்து நடக்குந்தாய்மார்க ளொருவருமி ல்லையோ அழகிய பெருமைதங்கிய வாய்மைகள் வாய்ந்த மைந்தர்க ளில்லையோ அடியார்கள்பசிவேளையறிந்து அன்னங் கொடுப்பாரில் லையோ மநுநீதியோடுங்கூடிய அரசர்களில்லையோ மனப்பூர்த்தியா ய் எங்களைத்தொழுது அழைத்துக் கொண்டுபோய் பத்திரசத்தோ டும் அன்னம்பாலிக்கும் கண்ணியர்களுமில்லையோவென்றுகூறுவா ர்கள். எ-று. (ஈ0)

பொன்னளித் தாலும் வேண்டுவ திலைநற்
பூடணந் தரினும்யாம் வேண்டோம்
துன்னுமா மணிக ணல்கினும் விரும்போந்
தொங்குமுத் தாரமுங் கருதோம்
மன்னர்கள் செங்கோ லரசினை யெமக்கு
வழங்கினு மனமதி லில்லை
அன்னமீந் தெம்மை யாதரிப் பாரே
லன்புட னுண்ணுவோ மென்பார்.

(இ-ள்.) செம்பொன் அளித்தாலும் விரும்போம் இரத்தினங்க ளாயழுத்தி யிலங்கும் அழகியபணிகளைத்தரினும் யாம்விரும்போம், பிரகாசம்பொருந்திய ரத்தினங்களை அளித்தாலும்விரும்போம், தா ழ்வடமிகத்தொங்குகிற முத்துமாலைகளிலும்மனம்வையோம், அ

ர்கள்செங்கோலின் விதியைத்தந்த போதிலும் மனமகிழ்ந்துவேண் டோம், அறுசுவை பதார்த்த வகைகளோடும் அமுதளித்தெங்களைப் பாதுகாத் தளிப்பார்களாலுல் மிகவும் அன்பாய் உண்ணுவோமென் று அடியார்கள் கூறுவர்கள். எ-று. (நக)

நவ்வியங் கரத்தி லிருந்தனை நீத்த
நாதர்சங் கருமமே நற்சீ
ரொவ்விய வருணை மாநகர்த் தெருவி
லொலியெழக் குமுதவாய் மலர்ந்து
வெவ்விய பசியான் மெலிந்தவ ரேற்க
மேவுவ போலவுங் கூவிச்
செவ்விய கொவ்வை வாயராங் கணிகைத்
தெருவினைச் சார்ந்தவ ராணர்.

(இ-ள்.) அழகியகரத்திற்றுங்கிய மானேத்துறந்தவராகிய சங்க மர்சிறப்போங்கி இலங்கும்அருணையம்பதிவீதியில் ஓசைபெறத்தக்க தாகச் செங்குமுதம்போன்ற திருவாய்மலர்ந்து கொடிதாகிய பசிப் பிணியால்துன்புற்று இரைப்போரைப்போலவரற்றிச்சிவந்தகொவ் வைக்கனிபோன்ற அதரங்களையுடைய கணிகைமாதர்கள் வசிக்கும் வீதியில்வந்தார் பரமசிவஞான சங்கமர். எ-று. (நஉ)

கெண்டைபோல் விழியுங்கிளிநிகர் மொழியுங்
கிளர்மதி வதனமு மென்பூச்
செண்டையார் குழலுங் கந்தம தூலவுங்
தெங்கதிர் குரும்பை நேர் முலையா
ரண்டையி லிருந்து வல்விடி யளவு
மைங்கணை மாரனுற் புரியுஞ்
சண்டையை யகற்றத் தருபொணை மின்கள்
சாற்றுது மெனவவர் மொழிவார்.

(இ-ள்) சேற்செண்டையைப்போன்ற அழகியவிழியையும், அ ஞ்சுகத்தையொத்த இனியவார்த்தைகளையும் ஆகாயத்திலிலங்கும்பூ ரணச்சந்திரோதயம் போன்ற திருமுக வொளியையும், சேதளநிறை ந்தகளபமலர்களாற் கட்டப்பட்டப் புஷ்பச்செண்டை யணிந்துள்ள நெருங்கியகூந்தல்களையும், சுகந்தங்களைத் திமிர்ந்து தென்னங்குரு ம்பைகளைப்போற்பிரகாசிக்கும் இரண்டுகுயங்களையுடைய வனிதை யர்கள்பக்கலில் இன்றிரவு விடியளவு மிருந்து முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரை இவ்வைந்துமலர்களை ஐந்துகணை களாகவும் கரும்பைவில்லாகவும்வளைத்து போர்புரிய எழுந்துநிற்கும் மன்மதன்கணைவலியைத்தடுத் தோட்டும்பொருட்டு பரியமாகக்கொ டுக்கும்பொன்னைப் பகருவீர்கள் பெண்களை யென்று சங்கமர்வினவியபோது அக்கணிகைமாதர்கள் கூறுவார்கள். எ-று. (ஙஙூ)

பையர வணிந்த பரமனைப் போன்ற
பகரரும் ஐயகேள் யாங்கள்
பொய்யது முரையோம் வஞ்சக முணரோம்
புணர்தலுக் கோரிருண் முற்றும்
தையல ரொருத்திக் காயிரங் கனகந்
தருவதவ் வாறளித் திடின்யாம்
மெய்யுடன் மெய்யும் பொருந்திடக் கலவி
விளைத்துமன் மதன்வினை தவிர்ப்போம்.

(இ-ள்) வெவ்வியவிடங்களையுடைய சர்ப்பங்களை. ஆபரணமா கவணிந்த ஸ்ரீ கைலாயபதியாகிய பரமசிவனைப்போல் சொல்லுதற் கரியசங்கமரே! கேளுங்கள்யாங்கள்பொய்வார்த்தைகளைப்பேசோம் வஞ்சகமாகியதுரோகசிந்தனைகளையுங்கருத்தோம்; ஓரிரவுமுழுமை யுஞ்சுகலீலைகளை யநுபவிப்பதற்கு ஒவ்வொருபெண்ணுக்கு ஆயிரம் பொன்கொடுக்கும்நியமமாதலால், அதுபோற்றருவீராயின்யாங்கள்

எங்கள்மனமும்மெய்யும் ஒன்றுபடத்தக்கதாக அஷ்டவிதஆலிங்கன முஞ்செய்து அனங்கன்கணையுங்கருத்தும் நாணும்படி புணருவோ மென்றார்கள் கணிகைமாதர்கள். எ-று. (நடு)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரத்தையர்க ளுரைத்தவணங் தந்துடனெவ்
வொருத்திக்கோர் பண்டாரத்தைக்
கரத்தமைத்துப் பிரியாதீர் என்னவுங்கண்
காட்டி மிகக் கட்டுப் பாடா
யுரைத்துவிலை மாதர்களின் வீதியெலாஞ்
சங்கமரா யொளிரச் செய்து
வரத்தைமிகத் தருமருணை நகரினிலெண்
காதமட்டு மருவச் செய்தார்.

(இ-ள்.) அக்கணிகைமாதர்கள் சொல்லியவைபோல் அவர்மகிழும்படி கனகம்சொரிந்து ஒவ்வொருத்திக்கோர் ஐங்கமர்க்கூக்கை வசமாகநியமித்து கங்குல்விடியவும் விட்டுநீங்காதீர்களென்று கண்சாடையினுற் றெரிவித்து மிகவும்கட்டுப்பாடாக அக்கணிகைமாதர்கள்வாழும் வீதியெல்லாம் சிவனடியார்களாகவே பிரகாசிக்கும்படி செய்து எண்ணிய எண்ணங்களையெல்லா முற்றச்செய்யும் அழகிய அருணேயம்பதிஎன்காதம்வரையிலுஞ்சுரதலீலைபுரியச்செய்தார் சங்கமராகிய பரமசிவன் எ-று. (நடு)

விலைமாதர் தனித்தொருவ ரில்லாம
லரிதாக்கி வெய்ய காமன்
கலைமார்க்கப் படிமருவச் செய்தசங்க
மரும்நீங்கிக் கமழு மாநன்

னிலைமார்க்க மாய்ந்திட்ட சீடனுடன்
மேவவந்த நிலத்தை யாளுஞ்
சிலைமார்க்க மறிந்தமன்னன் கண்டெதிற்சென்
றிறைஞ்சியழைத் திருத்திச் சொல்வான்.

(இ-ள்.) விலைமாதர்கள் தனித்து எங்கும் கிடைக்காது அரிதாகச்செய்து கொடியமன்மதன் சாஸ்திர விதிபின்படி அஷ்டவிதஆலிங்கனமும்நகக்குறி தந்தக்குறி தாடனங்கள்அறுபத்துநான்குவிதலீலைகள் இவைகளையுஞ் செய்யச்செய்த சுங்கமராகிய சகதீசன்அவணின்றெழுந்து பிரகாசமும் பெருமையும் பொருந்திய நண்மார்க்கநிலையைப்பரிசோதித்த சீடனுகிய அளகேசனுமெம் அரசன்அரண்மனையைநோக்கிச் செல்லுகையில், அப்பதியையரசாளு மிறைவனுகியும்தநூர்வேதமார்க்கம் யாவும் பூரணமாயுணர்ந்த மன்னனுமாகியவல்லாளமகாராஜன் சுங்கமர்வருதலைக்கண்டு எதிர்சென்று பணிந்துபோற்றிபழைத்துக்கொண்டுபோய்நவமணிகளாலலங்கரிக்கப்பட்டுப்பிரகாசம் பொருந்திய அழகிய ஒரு சிங்காசனத்தில் எழுந்தருளச்செய்து அஞ்சலியதனுய் நின்று கூறுவான். எ-று. (நகூ)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பண்ணிய தவமோ வன்றிப் பாரினி லியாரி யற்றும்
நண்ணிய கருமம் யாதோ நயக்கினவ் வாறு நல்கப்
புண்ணிய வசமோ தேவர் பொன்னடி வருந்தவிங்கு[றுன்
கண்ணிய முறுவேன் றங்கள் கடாக்ஷமும் பெறுவேனென்

(இ-ள்.) தமியேன்செய்த தவப்பலனே, அல்லதுஸ்ரீ அருணேசலேசுரர்வாழும் இவ்வருணையம்பதியில்எளியேனுற்செய்யப்பட்டசத்திரியைகளின் புண்ணியமோநினைத்துப்பார்க்குமிடத்து பரமசிவத்தைப்போலெழுந்த சங்கமதேவரின் பிரகாசம்பொருந்திய தங்கமயமாகியஉபயசரண கமலங்கள் வருத்தமுறும்படி இவ்வனம் அருள்

சுரந்தவிதியாதோ, அவற்றைத் திருவாய்மலர்ந்தருளினால் அத்தன் மையாயடியேன் நடத்திக்கண்ணியனைவதல்லாமலுந்தேவரீர்கருணை கடாக்ஷத்திலுந் தோய்வேனென்றான் வல்லாளமகாராசன். எ-று.

மண்ணகே ளரசுநீதி மார்க்கமும் நீடுவாழி
உண்ணியாங் கருதிவந்த தோதுல முருவில்மாரன்
பன்னுமைங் கணையா லின்றுபடுத்திடுந் துயரை மாற்றக்
கன்னியை நல்கிற்கீர்த்தி கடலேழும் வயங்கு மென்றார்.

(இ-ள்.) இப்பூமண்டலத்திற் கீர்த்திபொருந்திய வல்லாளமகாராசனே! மனமகிழ்ச்சியுடன் கேட்பாயாக உன் அரசும், செங்கோன்முறைமையும், நீடுழிகாலம்வாழி. இப்போது உன்னையாம்வேண்டிவந்தகாரணம் யாதெனில், சொல்வோம் உருவிலியாகிய மன்மதனுலெய்யும் மூல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரைமலரென்றுசொல்லப்பட்ட ஐந்துகணைகளினாலும் இன்றுயாம் படுந்துன்பத்தை நீங்கும்பொருட்டு ஒருமாதை எனக்குக்கிட்டும்படி செய்வையேயானால், உன்கீர்த்தி ஏழுகடல்சூழ்ந்த இவ்வையகத்திற் பிரகாசிக்குமென்றார் சங்கமராகிய பரமசிவம். எ-று. ஈஅ)

இதைவிட தேவ ரீருக்
கெழின்மண முடிப்பிப் பேனென்
றதையுணர்ந் தையரானே
ரரசேகே ளதுமாதொல்லை
வதைசெயுங் காமநோயை
மாற்றுதல் விலைமா தர்க்கே
புதையல்போற் றெரியு மென்று
புகன்றனர் பெரியோ ராங்கு.

(இ-ள்.) இவ்வாறு பரமாதரை இச்சித்துத் திரிவதைப்பார்க்கிலும்எக்காலமும் தேவரீரைவிட் டகலாமலிருக்கும்படி சிறப்போங்

கியமணஞ்செய்து வைக்கிறேனென்று மிகுபத்தியும் பரிவுங்கொ
ண்டுரைத்த வல்லாளமகாராசனது அன்புநிலையையறிந்த சங்கமரா
கியசிவபெருமான் சொல்லுகின்றார், அரசனே? நான்சொல்வதைக்
கேள் இப்போதுநீசொல்லியவார்த்தை கொடியதுன்பத்திற்கிடமா
யும். சுடர்முன் மெழுகுபோல்மனம் ஒருங்குபடாமல் பலவிதகோல
ங்களுண்டுபண்ணி அலையச்செய்யும்; அதுவல்லாமல்பஞ்சேந்திரி
யங்களுந்தம்மோறி காமவெகுளி மயக்கத்தால் நாவறட்சிசெய்யும்சக
ப்பிணியைப் போக்கும் ஔடதம் விலைமின்னார்களுக்கே நிக்ஷேபம்
போல் கைவலியப்பட்டதேயன்றி இதரமான மாதரியார்கள், ஆத
லான் அவரால் என்பிணியைமாற்றுவிப்பாயென்று பெரியோராகிய
சங்கமரர் கூறினர். எ-று. (நகூ)

நிட்டைசெய் வோர்க்கும் போதநிகழ்த்துசங் கமரேதங்க
ளிட்டத்தின் படியான் செய்வேனென்றிறை காவலோறை
லிட்டவிரைவிற் சீரார்வேசையா மொருமின் னுளே
இட்டமா யழைமினென்ன வேகினர்வாய்வின் மிக்கோர்.

(இ-ள்.) இல்வாழ்க்கையைக் கடந்துசதா நிட்டைசெய்யும் த
போதனர்களுக்கும் ஞானோபதேசஞ் செய்விக்கும் மகிமைபொருந்
தியசங்கமஸ்வரூபரே உமதுகருத்தின்படியேநடத்துகிறேனென்று
அங்குள்ளகாவற்காரரை அழைத்துநீங்கள்அதிசீக்கிரமாய்சிறப்போ
ங்கியகணிகை மாதர்கள்வாழும் வீதியிற்சென்று அதிரூபலாவண
யமுள்ளஓர்மாதை அழைத்துவாருங்களென்று விடைதரக்காற்றினு
மதிவேகமாய் நடக்குங் காவலாளர்கள்சென்றார். எ-று. (சூ0)

சென்றுவே சையர்கள் வாழுந் தெருமன்ன தோறும் புக்கு
நின்றங்கு நோக்குங் காலே ஞெயமாய் நடனகீதம்
கொன்றைசூ டியவெம் மான்றன் குழுமுன ராடல்கண்டு
இன்றுத வாதென்றெண்ணி யிறைக்குவந் துரைப்பதானார்

(இ-ள்.) அரசன் ஆக்கினையைப் பெற்றுச்சென்றதூதர்கள் அழகியவிலைமாதர்கள் வாழும்வீதிகளில் மனைகள்தோறும்புகுந்து புகுந்துபார்த்துவருகையில், ஒருவீடாகிலும்நீங்காமல்சுரலயதாளத்தோகெந்தபரதநாட்டியங்கள்வீணாகான சங்கீதமுழக்கத்தோடும்பொன்னிறம்போன்றகொன்றைமாலையைச்சூடிய சிவனடியார்கள்வீடுகள்தோறும் தனித்தனியாயிருந்துஆனந்தித்துக் கொண்டிருக்குஞ்சம்பிரமங்களைக்கண்டு இன்றுமுடியாதென்று கருதினவராய்தமதுஅரசனிடம்வந்து கூறினர்கள். எ-று (சக)

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அம்மொழி யோர்ந்த மன்னவன் வெகுண்டே
யமைச்சரை நோக்கியே புகல்வா
னம்மொழி பிறழ்வ தான்றிருச் செயலோ
நாம்செய்த பூசையின் குறையோ
செம்மொழி யார்ந்த சங்கமர் கேட்ட
தெருவையர் கிடைப்பது மரிதென்
றிம்மொழி யவர்மு னிசைப்பது முறையோ
வன்னவ மமைச்சர்க ளிசைப்பார்.

(இ ள்.) இவ்விதமாய்த் தூதர்கள் உரைத்தமொழியைக்கேட்ட அரசன்கோபித்துத்தன் மந்திரிமார்களைப்பார்த்துச் சொல்லுவான். நாம்பரமசிவத்தின் அடியவராகிய சங்கமருக்குரைத்தமொழிபிரண்டுபோவது ஜகதீசனுகிய ஸ்ரீ அருணாசலேசுரன் திருவுளச்செயலோ அல்லதுநாம் ஆண்டவனுக்குச்செய்த பூசையின் குறைவோஎன்செய்வேன், செவ்வியதாகிய இனியசொற்களையுடைய சங்கமர்நம்மை நாடிக்கேட்டமாதர் கிடைப்பது அரிதென்று அவர்முன் நாம்புகலுவது தருமமோவென்று தன்பப்படும் வல்லாளமகாராசனைப்பார்த்து மந்திரிமார்கள் சொல்லுகின்றார்கள். எ-று. (சஉ)

சிந்தையிற் கவலை யுற்றிட வேண்டாஞ்
செல்வனே பேதையாம் சென்று
விந்தைகொள் வேசை மாதினைக் கொணர்வோம்
வியாகுலம் விடுமென வவர்வாழ்
சந்தைகொள் வீதி யடர்ந்தவர் மனையிற்
றங்கிய கோலமு நோக்கிப்
பந்துநேர் முலைமேற் கந்தமு மணிந்த
பரத்தையர்க் கெடுத்துரைப் பாரால்.

(இ-ள்.) மனத்தில் கவலைகொள்ளவேண்டாம் லட்சுமிகடாக்ஷமுள்ள அரசே, கடையர்களாகியயாங்கள்சென்று அடியவர்எண்ணியவண்ணம்அதிரூபலாவண்யமுள்ள கணிகைமாதைக்கொண்டுவருவோம்.தாங்கள்துன்பமொழியுமென்றுசொல்லி, அவர்வாழும்பேட்டையாகியவீதிகளிற்சென்று அவர்கள்மனைகளிற் புகுந்துபார்க்கையில்; ஈங்குஞ் சிவனடியார்களாய் விளங்கியிருப்பதைப்பார்த்தும்பந்துபோன்றழகியதனங்களின்மீது சுகந்தபரிமளங்களையணிந்திருக்கும் விலைமாதர்களுக்குச்சிலவார்த்தைகளை எடுத்துச்சொல்லுவார்கள். எ-று. (சங)

மையுலாம் விழிநேர் மாதர்கணெருங்கி
வாழுமிழ் வீதியி லொருத்தி
மெய்யுலா மரசை நாடிய பெரியோர்
விரகதைத் தணித்திடு வாரேல்
கையுலாங் கடகப் பணிமணி வடமுங்
கலித்திடு சதங்கையு மணிந்து
நெய்யுலாந் தயிர்பா லறுசுவை யன்ன
நிரந்தர மூண்டுவாழ் குவரே.

(இ-ள்.) நீலோற்பலம்போன்ற பிரகாசம்பொருந்திய கண்களை யுடைய பெண்கள்கூட்டமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வீதியில் யாராலுமொருமாது உண்மைவினவும்எங்களிறைவனோடியநந்த சங்கமருடைய வெவ்வியகாமநோயைத்தனிப்பாரேயானால், அவர்கள் இருகரங்களுக்கும் கடகமும்; நவமணிகளாலமைத்தஆபரணங்களும், முத்துமாலைகளும், ஓசையைக் கொடுக்கும் பாதச்சதங்கைமுதலிய நூபுரங்களே அணிவதல்லாமலும்; நெய்பால்தயிர் அறுசுவை பதார்த்தங்களோடும் அமுதுண்செதாகாலமும்யாதும் குறைவின்றிவாழ்வார்கள். எ-று. (சச)

இன்னவா றமைச்ச ருரைக்கவம் மின்னு
றிறைஞ்சியே யாங்க ளெல்லோரும்
முன்னுபு வடியா ரிடம்பொரு ளிரவு
முழுமையு மிருந்திடப் பெற்றோரும்
துன்னுமிவ் விரவு கழிந்தபின் நீவிர்
சொற்றது போலவா மமைச்சர்
தன்னகஞ் சலித்து மன்னனுக் கதனைச்
சாற்றவு மாங்கவன் மொழிவான்.

(இ-ள்.) இவ்வண்ணமாய்மந்திரிகளுரைத்தமொழியைக்கேட்ட மின்னலைப்போற் றுவளும் இடையினையுடையஅக்கணிகைமாதர்கள், எதிர்வந்து நின்றுபணிந்துபலவாறுகத்துதித்துநாங்கள் யாவரும்இன்றுபகற்போதே நம்மையாட்கொள்ளும் ஸ்ரீ அருணாசலேசருடையமெய்த்தொழும்பராகியஇவ்வடியார்களிட மின்றிரவு விடியுமளவும் சுகலீலைகளுக் கிணங்கி நடப்பதாய்ப் பொன்னைப் பெற்றுக்கொண்டோமாதலால் இந்நாள்செல்லுமாலுல்தேவரீர் சொல்லியபடிநடக்கலாமென்று மொழிந்தவைகேட்ட அமைச்சர்கள் தத்தம்மனஞ்சலித்து அவணின்று நீங்கிஅரசனிடம் வந்துரைக்க, அப்போது கூறுவான் வல்லாளமகாராசன். எ-று. (சடு)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அற்பமிது நமக்கரிதா யிருப்ப தென்கொ
லந்தோவென் றயர்வுற் றுங்கு
பற்பலவாய் சிந்தைதனி லேக்கமுற்றி
திறையருளும் பான்மை தானே
தற்பரனைப் போலெழுந்த சங்கமருக்
குரைத்த வண்ணந் தருவேனென்று
விற்பொருதும் வேந்தனதி விரைவாகக்
கணிகையர்பால் மேவி னனால்.

(இ-ள்.) அற்பமாகியஇச்செய்கை நடக்குக்கிடைப்பது துற்பல மாகவிருக்கும்காரணம்யாது ஐயோஎன்று அரசன்துன்பமடைந்து, பின்புபலவிதமாய் மனத்தில் எக்கங்கொண்டு இதுவும் பரமசிவனு டைய திருவிளையாடல் தானே ஜகதீசனைப்போல் வடிவுகொண்டு எழுந்தருளிவந்த சங்கமருக்குக் கொடுத்த வாக்கின்படி எவ்வகையி லாவது ஒருபெண்ணைத்தேடித்தருவேனென்றெழுந்து வில்லேந்தி யொளிரும் வல்லாளமகாராஜன் மிகவும் தீவிரமாய் வீலமாதர்கள் வாழும் வீதிக்குச்சென்றான். எ-று. (சசு)

வே று.

வந்தவ ரெதுகேட்டா லும்வழங்கு தெனப்பதாகை
அந்தரமளாவ நாட்டி யளித்திடு நாளினின்று
சுந்தரசங்கமற்குச் சொன்மொழிப் பிறழா தென்னைப்
பந்தயமாய்க் காப்பவட்கிப் பதியினைத்தருவே னென்றான்.

(இ-ள்.) நம்பதியைநாடிவந்தவர்கள் எந்தப்பொருளைஎண்ணிக் கேட்டபோதினும் கொடுக்கின்றேனென்று ஆகாயபரியந்தம்உயர்ந் துபறக்கும்படியாய்த் துவசமுயர்த்தி நடாத்திவரும் நாட்களில், இ ன்றுவிரகவேதனையால்மெலிந்து நம்மைநாடிவந்த அழகியசங்கமரு

க்கும் உமதுநோயையகற்றுவோமென்றுகூறியவண்ணம்மாறுது ஆ
சையோடுங்காப்பாற்றியகனிகைக்கு என்அரசுக்குரிய இப்பதியைய
ளிப்பேனென்று உரைத்தான் வல்லாளமகாராஜன். எ-று. (சஎ)

கரிபரி யுடனும் வேண்டுங்
கனகமுந் தருவேன் முத்துச்
சொரிகிய சிவிகை யீவன்
றெல்லுல காள்வ தற்கிங்
கரியசெங் கோலு நல்கி
யவர்க்கியான் பணியுஞ் செய்வேன்
பெரியவர் விரகந் தீர்த்தாற்
பெற்றதா யெனக்கா மென்றான்.

(இ-ள்.) யானைகுதிரை முதலியவைகளோடுந் தாங்கள் வேண்
டியபொன்னுந்தருவேன்; இதல்லாமலும், முத்துகளிஞல் அலங்கா
ரஞ்செய்தபல்லக்குங்கொடுப்பேன்; இப்பூமண்டலமுழுமையும்ஆள
நினைத்தபோதிலும்என்செங்கோலைக்கொடுத்தாளும்படிசெய்துஅவ
ர்கட்குயான்பணிவிடையுஞ்செய்வேன்; இன்றுநாடிவந்தசங்கமரது
காமநோயைத்தணித்தால் என்னைப்பெற்றஅன்னையுமாவார்களென்
றுஅரசர்க்கரசனுகிய வல்லாளமகாராசன் புகன்றான். எ-று. (சஅ)

உலகினில் வருஞ்சுகத்து ளுயர்சுக மீதேயென்று
கலையுணர் முனிவராருங் கழறுவராத லானந்
தலமதினுற்ற செய்யசங்கமர் விரகந்தீர்த்தால்
இலகுமென் னுயிர்கேட்டாலு மீகுவேன்வருவீர்மின்காள்.

(இ-ள்.) கடல்சூழ்ந்த இவ்வுலகில் வாழும் இன்பங்களுக்கெல்
லாம்மேலாகியசுகம் மானுர்விழியினையுடைய பெண்களின் கலவித்
தொழிலில் இன்பமேயதிகமென்று வேதநூலுணர்ந்த முனிவர்களு

ம் கூறியிருக்கின்றீர்கள், ஆதலால், நமதுபதியை நாடிவந்த மேன்மைபொருந்தியசங்கமரை வருத்தும் விரகவேதனையை இன்றுமாற்றினவர்களுக்கு பிரகாசம்பொருந்திய என்பிராணனைத் தானமாகக் கேட்டபோதிலும் அளிப்பேன்வருவீர் கணிகைமாதர்களேயென்று கூறினன் வல்லாளமகாராஜன். எ-று. (அக)

ஆதர வாகத்தங்க ளாணையின் படியேயாங்கள்
ஏதமிலடியர் தம்மோ டின்புறப் பொருளும் பெற்றோம்
நாதவென் செய்வோ மென்று நங்கையா பணிந்துரைக்கப்
பூதல மன்னன் வெட்கிப் புகழ்மனைவந்து சார்ந்தான்.

(இ-ள்.) அரசன்சொன்னமொழியைக்கேட்டவிலைமாதர்கள்தெவரீர் ஆக்ஞையின்படி நடந்துவரும் நாங்கள் இன்றுகுற்றமற்ற பரமசிவத்தின் அடியார்களிடத்திற் கலவித்தொழில் புரியும்பொருட்டு பொருள் பெற்றுக்கொண்டோ மாதலால் எங்களை ஆட்கொள்ளும் இறைவனே ! யாங்களென் செய்வோமென்று அடிபணிந்துரைத்த மொழியைக்கேட்ட இப்பூமியையாளும் வல்லாளமகாராஜன் நாணமுற்றவனுய் கீர்த்திபொருந்திய தன் அரண்மனையைச் சேர்ந்தான்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

இல்லமுற்ற மன்னன்மதி வதனமாறி
இருப்பதனை மங்கையர்க ளிசைந்துநோக்கி
மல்லமா தேவியரு மிளையா ளாகும்
வண்மைமிகு சல்லமாதேவி யாரும்
தொல்லுலகைப் புரக்கவல்ல எங்கள்கோவே
துன்பமுற்ற காரணமென் னவற்றைநீர்
சொல்லுமென வடிபணிந்து வினவவாங்கு
தூயநெறி யோனவருக் கிதுசொல்வானுல்.

க்கும் உமதுநோயையகற்றுவோமென்றுகூறியவண்ணம்மாறாது ஆ சையோடுங்காப்பாற்றியகனிகைக்கு என்அரசுக்குரிய இப்பதியைய ளிப்பேனென்று உரைத்தான் .வல்லாளமகாராஜன். எ-று. (சஎ)

கரிபரி யுடனும் வேண்டுங்
கனகமுந் தருவேன் முத்துச்
சொரிகிய சிவிகை யீவன்
மெல்லுல காள்வ தற்கிங்
கரியசெங் கோலு நல்கி
யவர்க்கியான் பணியுஞ் செய்வேன்
பெரியவர் விரகந் தீர்த்தாற்
பெற்றதா யெனக்கா மென்றான்.

(இ-ள்.) யானைகுதிரை முதலியவைகளோடுந் தாங்கள் வேண் டியபொன்னுந்தருவேன்; இதல்லாமலும், முத்துகளிஞல் அலங்கா ரஞ்செய்தபல்லக்குங்கொடுப்பேன்; இப்பூமண்டலமுழுமையும்ஆள நினைத்தபோதிலும்என்செங்கோலைக்கொடுத்தாளும்படிசெய்து அவ ர்கட்குயான்பணிவிடையுஞ்செய்வேன்; இன்றுநாடிவந்தசங்கமரது காமநோயைத்தணித்தால் என்னைப்பெற்றஅன்னையுமாவார்களென் றுஅரசர்க்கரசனுகிய வல்லாளமகாராசன் புகன்றான். எ-று. (சஅ)

உலகினில் வருஞ்சுகத்து ளுயர்சுக மிஃதேயென்று
கலையுணர் முனிவராருங் கழறுவராத லானந்
தலமதினுற்ற செய்யசங்கமர் விரகந்தீர்த்தால்
இலகுமென் னுயிர்கேட்டாலு மீகுவேன்வருவீர்மின்காள்.

(இ-ள்.) கடல்சூழ்ந்த இவ்வுலகில் வாழும் இன்பங்களுக் கெல் லாம்மேலாகியசுகம் மானுர்விழியினையுடைய பெண்களின் கலவித் தொழிலில் இன்பமேயதிகமென்று வேதநூலுணர்ந்த முனிவர்களு

ம் கூறியிருக்கின்றீர்கள், ஆதலால், நமதுபதியை நாடிவந்த மேன்மைபொருந்தியசங்கமரை வருத்தும் விரகவேதனையை இன்றுமாற்றினவர்களுக்கு பிரகாசம்பொருந்திய என்பிராணனேத் தானமாகக் கேட்டபோதிலும் அளிப்பேன்வருவீர் கணிகைமாதர்களேயென்று கூறினன் வல்லாளமகாராஜன். எ-று. (சக)

ஆதர வாகத்தங்க ளாணையின் படியேயாங்கள்
ஏதமிலடியர் தம்மோ டின்புறப் பொருளும் பெற்றும்
நாதவென் செய்வோ மென்று நங்கையா பணிந்துரைக்கப்
பூதல மன்னன் வெட்கிப் புகழ்மனைவந்து சார்ந்தான்.

(இ-ள்.) அரசன்சொன்னமொழியைக்கேட்டவிலைமாதர்கள்தே வரீர் ஆக்ஞையின்படி நடந்துவரும் நாங்கள் இன்றுகுற்றமற்ற பரமசிவத்தின் அடியார்களிடத்திற் கலவித்தொழில் புரியும்பொருட்டு பொருள் பெற்றுக்கொண்டோ மாதலால் எங்களே ஆட்கொள்ளும் இறைவனே ! யாங்களென் செய்வோமென்று அடிபணிந்துரைத்த மொழியைக்கேட்ட இப்பூமியையாளும் வல்லாளமகாராஜன் நாணமுற்றவனுய் கீர்த்திபொருந்திய தன் அரண்மனையைச் சேர்ந்தான்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

இல்லமுற்ற மன்னன்மதி வதனமாறி
இருப்பதனே மங்கையர்க ளிசைந்துநோக்கி
மல்லமா தேவியரு மிளையா ளாகும்
வண்மைமிகு சல்லமாதேவி யாரும்
தொல்லுலகைப் புரக்கவல்ல எங்கள்கோவே
துன்பமுற்ற காரணமென் னவற்றைநீசிர்
சொல்லுமென வடிபணிந்து வினவவாங்கு
தூயநெறி யோனவருக் கிதுசொல்வானுல்.

(இ-ள்.) அரண்மனைவந்துசேர்ந்த வேந்தனுடையபூரணச்சந்தி ரோதயம்போன்ற முகாரவிந்தம் சலனத்தால் வேறுபட்டிருப்பதைக்கண்டஅவன்தேவிமார்களில் மல்லமாதேவியும் மிகுவண்மைபொருந்திய இளையாளாகியசல்லமாதேவியும் நெருங்கிவந்துநெடியகடல்சூழ்ந்தஉலகங்களையெல்லாம் ஒருகுடைநிழலின்கீழ் பரிபாலனஞ் செய்யும்எங்கள்காதலனே! எந்நாளுமில்லாது இன்றுமனத்திற்றுன்பம் நேர்ந்தவாறென்னை? அவைகளைதேவரீர் அருளிச்செய்தவண்டுமென்றுபாதகமலங்களிற் பணிந்துகேட்க, அங்ஙனம்பரிசுத்தமாகியநிலையினையுடைய வல்லாளமகாராசன் மங்கையர்களுக்கு நடந்தசெய்தியைக்கூறுவான். எ-று. (இக)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இன்றொரு முதியோர் மானு
நின்பத்தி லிச்சை கொண்டு
வென்றிசேர் நம்மை நாடி
வினவிய படிக்கி சைந்தும்
மன்றதில் விலைமின் னார்கள்
வாய்ப்பது மரிதா னெந்தை
னென்றவர் வாய்மை கேட்ட
வெழின்மனை யாருஞ் சொல்வார்.

(இ-ள்.) இன்று ஓர்பெரியவர் சேல்போன்ற விழியினையுடைய மடந்தையர்கள்மயக்கத்தின்மேல் மனம்வைத்து வெற்றிபொருந்திய நம்பதியைச்சேர்ந்து, நம்மைவினவியவண்ணம்தருவதாகச்சொல்லி இவ்வருணைமாநகர்முழுமையும் விலைமாதர்கள் வாழும்வீதி யெங்கணுந்தேடியும்கிடைப்பதுஅரிதாயிருப்பதால்துன்பமுற்றேன்!நான் கொண்டிருந்தவைராக்கியத்தையும் துறந்துவிட்டேன்? என் செய்

வேன்! அடியவருக்குரைத்த மொழிதப்பிப் போகின்றதே யென்று கூறித்துன்பமுற்றிருக்கும்வேந்தன் வாய்மையைக்கேட்ட மங்கையர்கள் சொல்லுவார்கள். எ-று. (ஙூ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரகமுற்ற வடியவர்க்குவாக்களித்த வேந்தேநின்
மனம்யாதோ வறிகி லோம்யாம்
இருவர்களிற் சிறியவளா மெண்ணை யன்னேற்
கிசைத்திடவுங்கருத்துளதேலிசைவேனென்று
திருவளரு மன்னனக மகிழ்ந்து நோக்கிச் [ள்
சேயிழையே யடியவரோடையிற் சேர்ந்து
உருவிலியாற் படுந்துயர மொழிப்பாயென்று
உத்தமனும் பெரியவருக் குரைத்திட் டானால்.

(இ-ள்) விரகவேதனையால் மெலிந்துவந்த சங்கமருக்கந்நோயைத்தணியசெய்கிறேனென்றுவாக்குத்தத்தஞ்செய்தஎங்களரசே! தங்களுடையகருத்து எத்தன்மையதோ சிறியேங்களறியோம், ஆதலால் எங்களிருவர்களிற்சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க்கிசையச்செய்யும்படியாய்கருத்திருக்குமானால் தேவரீர் எண்ணக்குறைவுபடாமலவ்விதமே நடக்கின்றேனென்று கூறியபோது, இலட்சுமிகடாக்ஷம்பொருந்திய வல்லாளமகாராஜன் மனமகிழ்ந்து தன்மனைவியைப்பார்த்து பெண்கள் நாயகமே! என் எண்ணத்தைநிறைவேற்றிவைத்த என்னிருகண்மணியே? நம்மைநாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற் சேர்ந்து அவர்மன்மதஞற்படுந் துன்பத்தைப் போக்குவாயென்றுசொல்லி விடைகொடுத்துப்பின்னர் உத்தமகுணத்தையுடையவனாகிய மன்னன் பெரியவரிடஞ்சென்று, தேவரீர்கருத்தின்படியமைத்தேன் அங்கீகரித்துக்கொள்ளுமென்று மிகுபக்தியோடுங் கூறினான். எ-று. (ஙஎ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அக்கண நன்னீராடி யழகுற வறையுட் சேர்ந்து
மிக்கநல் லியாழை மீட்டி விநோதமாய்க் கீதம் பாடிப்
பச்சலி நெருங்கி யந்தப் பரமனைப் பார்க்குங் காலி
லக்கணி மெய்ய ணுங்கே யரியயோ கத்தி லுற்றான்.

(இ-ள்.) இராஜபத்தினியாகியசல்லமாதேவிஉடனேவாசங்கல
ந்த சுத்தோதகமாடி ஆடையாபரணமணிந்து சுகந்தபரிமளங்களைய
ணிந்து பஞ்சகச்சாயவர்க்கங்களேந்தி வீணையெடுத்துபள்ளியறையு
ட்பிரவேசித்து இந்திரநீலமரகதங்களாலமைத் தொளிருமஞ்சத்தில்
அம்சதூளிகாசயனத்தின்மீ தாரோகணித்துக்கொண்டிருக்கும்அடி
யவர்பக்கலினின்றுகொண்டுஇன்னிசையைத்தரும் வீணையைமீட்டிக்கீ
தம்பாடிக்கொண்டுசிலநேரஞ்சென்றபின்பு பெரியவர்சித்திரப்பிரத
மைபோ லசைவற்றிருப்பதை நோக்கையில் உருத்திராட்சமாலிகா
பரணமணிந்துவிளங்கும் மெய்யினையுடைய பெரியவர் யோகநித்தி
ரையிலிருப்பதைக்கண்டாள் சல்லமாதேவி. எ-று (நிச)

பின்னுமம் மங்கையந்தப் பெரியவர் மகிழ வெண்ணித்
துங்குமங் கவர்மீ துற்ற சுகந்தநீ ரெடுத்துத் தூவி
நன்னயத் துடனே நிற்க நயனமுந் திறவா தன்னூர்
தன்னையும் நோக்கா தாலுந் தயங்கியங் குரைப்ப தானாள்

(இ-ள்.) பின்னையும்அருந்ததிக்கொப்பாகிய அவ்வரசிஅங்ஙன
ம்யோகநித்திரையிலிருக்கும் சங்கமர்மனமகிழத்தக்கதாக நிலைந்து
நிரகாசம்பொருந்திய மஞ்சத்தின்மேலிருக்கும்அவர்மீ துசுகந்தமுற
வும் பனிநீரையெடுத்துத்தெளித்தும் நன்னயவசனத்தோடுநின்றும்
கண்விழியாமலும் தன்னையுநோக்காமலுமிருப்பதை யுணர்ந்ததேவி
சிந்தைமெலிந்து கூறுவாள். எ-று. (நிரி)

வேந்தனு ரைத்த வாய்மை
விண்படு முறையோ வந்தோ
ஏந்தலே யென் றிறைஞ்சி
யெழிலுறு மடந்தை யாங்கு
சாந்தமாய் மேல் விழுந்து
தழுவவப் பரம ராணேர்
ஏந்தவுங் குழந்தை யாகி
யின்புற வழுவ தானர்.

(இ-ள்.) அரசர்க்கரசனுகிய எங்கோமானுரைத்தவாய்மைவிர்த்தமாவது தருமமோ! ஐயோ,கடவுளேயென்றுதொழுதுஅழகுலாவும்அவ்விராஜபத்தினி அக்குறித்திரையிலிருக்கும்பெரியவர்மேல்மெதுவாய்ச்சார்ந்துஆலிங்கனஞ்செய்கையில், ஸ்ரீகயிலாயபதியாகியசிவபிரான் ஏக்துங் குழந்தைவடிவமாகி யவ்வணங்குகளிப்பும்ஆச்சரியமுங்கொள்ளத்தக்கதாக செங்குமுதம்போன்ற அழகியவாயைத்திறந்து அழவாரம்பித்தார். எ-று. (நிசு)

அரனெரு குழவி யாகி
யலறியே யழும்போ தங்கே
பரமனர் செயலென் றெண்ணிப்
பார்த்திபன் விரைவில் வந்து
கரமதி லெடுத் தணைத்துக்
களிப்புட னுச்சி மோந்து
விரகுட னிருக்கும் போதவ்
விமலனு மறைந்திட் டானுல்.

(இ-ள்.)திருக்கயிலாயபதியாகியபரமசிவம்ஒருகுழந்தைவடிவாய்அலறியழுகின்றசெயலறிந்தஅரசன், இதுஆண்டவனுகிய அருளு

சலேசரின் திருவிளையாடலென்றுகினைத்து மிகத் தீவிரமாயங்குச் சேர்ந்து, தாமரைமலர்போன்ற விருகரங்களாலெடுத்தணைத்துமுத் தமிட்டு உச்சிமோந்துமிக்ககாதலோடும் பேரானந்தங்கொண்டிருக் கையில், சகதீசனுகிய எம்பெருமான் மாயமாய் மறைந்தார். எ-று.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஐயனே நினது திருவுளச் செயலை
யறிவமோ வறிவிலோம் யாங்கண்
மெய்யனே கண்கண் மூன்றுடை யானே
வேதனே வேதநா யகனே
துய்யனே யெம்மைச் சோதனைச் செயலோ
சுதனெனத் தோன்றியே மறைந்தீர்
செய்யனே யெங்கட் கென்விதி யென்று
தேவியோ டரசனு மெலிந்தான்.

(இ-ள்.) சந்திரசடாதரமூர்த்தியாகிய ஐயனே தேவரீரது திரு வுளச்செயலைமடமையோமாகிய யாங்கள்தெரிந்து கொள்வோமோ வேதஸ்வரூபமானவனேவேதங்களுக்குத்தலைவனேபரிசுத்தமானவ னேதிரிநேத்ரதரனே உண்மைப்பொருளானவனே உமதுபரிசுத்தம் பொருந்திய உபயசரணரவிந்தங்களுக்குத்தொண்டராகியஎளியோ ங்களைச் சோதனைசெய்யும்பொருட்டோபுதல்வனுகவந்தோன்றி ம றைந்தீர்மேன்மையுற்றவனே,எங்களுக்கென்னவிதியென்றுமங்கை யருந்தானும் ஆற்றப்படாததுன்பத்திலழுந்தினர்கள். எ-று. (இ)

கொற்றவ னிவ்வா றுளமெலிந் தாங்கு
கோவெனக் கதறுமக் காலை
நற்றவத் தோர்க டிதிசெயு மீச
ணுயகி யுடன்விடை யேறிச்

சுற்றிலுங் கணங்கள் சூழ்ந்திட விதிமால்
ரௌடாவு மருணேயம் பதிவாழ்
வெற்றிகொ ளிறைக்குத் தெரிசன முதவ
விரகுடன் பணிந்தவன் றுதிப்பான்.

(இ ள்.) அரசன் இவ்வகையாய் மனம்வெதும்பிக கோவென்று வாய்விட்டலறி நிற்குங்காலத்தில் மகிமைபொருந்திய தவத்தினையுடையவர்கள்போற்றிப்பணியத்தக்கபரமசிவம்பார்வதிதேவியோடும் வெண்ணிறமுள்ள ருஷபாரூடராய்ப் அநேகசிவகணங்கள் சூழத்தக்கதாகவும், பிரமனும் விட்ணுவும் வாகனங்களிலேறிவரவும்அருணேயம்பதியையாளும் வல்லாளமகாராசனுக்குத் தரிசனந்தந்தமாத்திரத்தில் ஆவலோடெப்பூமியில்பணிந்தெழுந்துசிரத்தில்இருகரங்களையுங் கூப்பித் துதித்தான். எ-று. (ருக

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதியே சரண மண்மே லடியரைக் காக்க வல்ல
சோதியே சரணங் கங்கைத் தூயசெஞ்சடையிற் றுண்டப்
பாதிமா மதிய ணிந்தபரமனே தமியேற் குற்ற
நீதியைத் தாங்க வோர்செய் நின்மலா வருளுவாயே.

(இ-ள்.) ஆதிநாயகனாகிய தேவனே சரணம் உலகில்அடியார்களுச்சோதித்தாட்கொள்ளவல்லஜோதிவடிவான பூரணனேசரணம் அருட்பெருஞ்சுடரேசரணம், கங்கையையும்சந்திரனையும் பரிசுத்தமாய்பொன்போற் பிரகாசிக்குஞ் சடையிற்தரித்தபரம்பரனே, அடியேன் செங்கோல்விதியை ஏற்றுக்கொள்ளும்படி ஓர்புதல்வனைக்கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று தொழுதான். எ-று. (கூ0)

சுந்தர மன்னு கேண்மோ சுதனுமக் கியாமே யானும்
மந்தத்தினு முனக்கே யறைவிதி முடிப்போ மென்று
சந்த்ரசே கரனுர் வாழ்த்திச்சார்ந்தனர் கயிலைபின்னர்ப்
பந்தமா யுலகை வேந்தன் பண்புடனாண்டு வாழ்ந்தான்.

(இ-ள்.) அழகுலாவும் கீர்த்திபொருந்திய அரசனேகேட்பாயாக யாமே உனக்குப்பிள்ளையாய்த் தோன்றினபடியால், உன் அந்திய காலத்தில் வேதவிதியிற்கூறுஞ்சடங்குகளைச்செய்துவருவோமென்றும் சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபெருமான் வாழக்கடவைஎன்றும்கூறித் தேவகணங்களுடன்கயிலாயகிரியைச்சேர்ந்தபின்பு, மிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராஜன் அருணையம்பதியைஆண்டு வாழ்ந்துவந்தான். எ-று. (சுக)

ஏழாவது,

வல்லாள மகாராஜன் சருக்கம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-டுகஉ.



11. திருவண்ணாமலத்தலத்தி னெட்டுத் திக்குகளிலும் பாவநிதேவியார் முதல் பல தேவர்களாலும் உண்டாக்கப்பட்ட அநேகதீர்த்தங்களின் மகாத்மியம்; இப்போது சில தீர்த்தங்கள்மாத்திரம் காணப்படுகின்றன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தீர்த்தச் சருக்க வசனம்.

இந்த அக்கினிமலைக்குக் கிழக்குத்திக்கில்இருப்பது இந்திர தடாகம். இதில்தைப்பூசத்தில் ஸ்நானஞ்செய்தால் பிரமத்திதோஷம் போய்விடும். முன்புதேவேந்திரன் ஸ்நானஞ்செய்து தன்தீவினைகளைத் தீர்த்துக்கொண்டான்.

தென்கிழக்கிலிருப்பது அக்கினிதீர்த்தம். இதில் பங்குனிமாதம்பௌர்ணமியில் முழுகினால் ஸ்திரீகளால்வந்தபாவந்தீரும் இந்தப்படிமுன்பு இதில்ஸ்நானஞ்செய்து தேரிட்டபாவத்தை அக்கினிதேவன்போக்கிக்கொண்டான்.

தெற்கிலிருப்பது யமதீர்த்தம். இதில்முழுகினால் வியாதிபோம் இந்தப்படியமனுக்குற்ற வியாதிபை இதில்முழ்கிப்போக்கிக்கொண்டான்.

நிருதிமூலையிலிருப்பது நிருதிதீர்த்தம் இதில்ஸ்நானஞ்செய்தவர்களுக்குப்பகைகள்தீரும் நிருதியானவன்இதில்முழுகினதினாலே பேயைத் தன்வசமாக்கிக் கொண்டான்.

மேற்குத்திசையிலிருப்பது வருணதீர்த்தம். இதில்முழுகினால் நவக்கிரகங்கள் நன்மையைக் கொடுப்பார்கள்.

வாயுதிக்கிலிருப்பது வாயுதீர்த்தம். இதில்ஸ்நானஞ்செய்தால் எல்லாத் துன்பமும் தீரும்.

வடக்கிலிருப்பது குபேரதீர்த்தம். இதில்முழுகினால்தரித்திரம் போய்விடும்.

ஈசான்னிய திக்கிலிருப்பது அசுவினிதீர்த்தம். இதில்முழுகினால் பரமசிவனைச் சேரலாம்.

முன்சொன்ன யமதீர்த்தத்திற்குத் தெற்கி லிருப்பது அகஸ்தி யதீர்த்தம். இதில்முழுகினால் கல்வியில்சிறந்தவர்களாவார்கள்.

முன்சொன்ன குபேரதீர்த்தத்திற்கு அருகிலிருப்பதுவசிஷ்ட தீர்த்தம். இதில்ஐப்பசிமாதத்தில்முழுகினால் சாஸ்திரங்களெல்லாம் விளங்குவதுமன்றிப் பாவமும் போய்விடும்.

இப்படி இன்னும் அனேகபுண்ணியதீர்த்தங்கள் உண்டு.

அருணசலத்திற்குவடபக்கத்தில்திருநதியென்று ஒருநதி இருக்கின்றது. அதில்முழுகினால் நாம்நினைத்தவரங் கிடைக்கும்

தென்பக்கத்தில் சோணைநதியிருக்கின்றது அதில் முழுகினால் துன்பங்களெல்லாம் நீங்கும்.

மேற்பக்கத்திலிருக்கிற் புண்ணியநதியென்கிறநதியில் முழுகினால்நல்லஉருவத்தையும் வேண்டியபேறும் அடையலாம் ஆதியில்ஈழன்என்கிற ஒருஅரசன் இதில்முழுகின பலத்தினாலே தனக்குவக்தபெண்ணுருவம்நீங்கி நல்லஉருவத்தைப் பெற்றான்.

முன்சொன்ன திருநதிக்கு வடக்கிலிருக்கிற சேயாறுஎன்கிற நதியில் முழுகினால் நினைத்தவரத்தை யடையலாம்

ஆலயத்துக் குள்ளிருக்கும் சிவகங்கை என்னுந் தீர்த்தத்தில் மாசிமகத்தில் முழுகினால் எல்லாத்தேவர்களைப் பார்க்கிலு மேன்மைபெறலாம்.

அந்தச் சிவகங்கைக்குக்கிழக்கிலிருக்கிற சக்கரதீர்த்தத்தில் முழுகினால் சிவபதத்தை யடையலாம்

கோயிலுகுப் பக்கத்தில் அக்கினிதிசையிலிருக்கிறது பிரமதீர்த்தம் இதில்முழுகினால் பிறவிநீங்கும்.

இந்தத்தீர்த்தங்களிலும் நதிகளிலும்முழுகி இத்தலத்தில் தானஞ்செய்தால் ஒன்றுகோடியாகப்பலனுண்டாகி நற்கதிஅடையலாம்.

தீர்த்தச் சருக்க வசனம்

முற்றிற்று.



சிவமயம்.

எட்டாவது

தீர்த்தச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி லாசிரியவிருத்தம்.

செருமலையுங் களிற்றுமுகப் பிள்ளையிரு
பதம்போற்றித் திரை யான் முத்தந்
தருமலையு மொருமலையுந் தொலைத்தமலைக்
கிழவனிரு சரணம் போற்றிப்
பொருமலையு மிரங்கலையு மடியாருக்
கொழிக்கவழற் பொருப்பாய் நின்றென்
கருமலையுஞ் செம்மலையும் பச்சைமலை
மடந்தையையுங் கருத்துட் சேர்ப்பாம்.

(இ ள்.) யுத்தஞ்செய்யத்தக்க யானைமுகத்தையுடைய மூத்தபிள்ளையாருடைய இரண்டுபாதங்களையும்வணங்கி, அலைகளாலேமுத்துக்களை கொழிக்குஞ் சமுத்திரத்தையும் கிரௌஞ்சமென்னு மலையையும் அடக்கிய குன்றுதோ விடலுக்குரிய சுப்பிரமணியர் பாதத்

தைவணங்கித் துன்பத்தையும்சோர்வையும் அடியார்களுக்குஒழிக்க அக்கினிமலையாக நின்று என்னுடைய பிறவியைக் கெடுக்குஞ் சிவ பிரானையும் மரகதநிறம் பொருந்திய பார்வதியாரையும் மனத்திற் சேர்ப்பாம். எ-று. க)

கலி விருத்தம்.

தேங்கு மன்பிற் சிவபுரா ணந்தனி
லோங்கு ருத்திர சங்கிதை தோதினன்
பாங்கி லிங்கபு ராணப் பரப்பினு
மீங்க றிந்த படியு மியம்புவேன்.

(இ-ள்.) பெருகியஅன்பினாலே சிவபுராணத்தில் உயர்ந்திருக்கின்ற ஸ்ருத்திரசங்கிதையை முன்சொன்னேன். பெருமையாகிய இலிங்கபுராணத்துள் விரித்துச்சொல்லப்பட்டதை நானறிந்ததன்மையையுஞ் சொல்வேன் எ-று. (உ)

ஆதி வேத னருளச் சனகனும்
வேதம் வல்ல வியாதனுக் கீந்தனன்
சூத னுக்கவன் சொல்லினன் சூதனு
மேத மற்ற விருடியர்க் கீந்தனன்.

(இ-ள்.) ஆதியிலேபிரமன் சனகரிஷிக்குச் சொல்ல, அச்சனகர்வேதங்களில் வல்லவராகியவியாசருக்குச்சொல்ல அவ்வேதவியாசர்சூதரிஷிக்குச்சொன்னார். அச்சூத மகாமுனிவரும் சூற்றமற்றமைமிசாரணிய முனிவர்க்குக் கூறினர். எ-று. (ங)

வன்னி மாமலைத் தோற்றமும் வான்மலைக்
கன்னி பாகங் கலந்தது முன்னமே
சொன்ன தாதலி னுங்க தொழித்ததன்
பின்ன ருள்ள கதைசில பேசுவாம்.

(இ-ள்.) அக்கினிமயமான பெரியமலை தோன்றியதும், பெருமையமைந்த பர்வதராஜகுமாரியாகியபார்வதி, சுவாமியினது இடப்பாகம்பெற்றதும் முன்னமேசொன்னபடியினல் அதைநீக்கி அதற்குப்பின்னுண்டாகிய சிலசரித்திரங்களையுஞ் சொல்லுவோம். எ-று.

தீர்த்த மும்மதிற் செய்தரு மங்களும்
வாய்த்த வெற்பின் வலமுமி லிங்கமும்
மேத்தி டாதவ ரெய்து மிகழ்ச்சியும்
பார்த்த ரன்பொருள் கொண்டவர் பாவமும்.

(இ-ள்.) தீர்த்தங்களின் மகிமையும், அதிற்செய்யப்பட்ட தரு மங்களும், அக்கினிமயமாய் தோன்றிய கிரிப்பிரதக்கிணத்தின் மகிமையும், இலிங்கமகத்துவமும், சுவாமியை வணங்காதவ ரடையுமி கழ்ச்சியும், அவரடைந்த இகழ்ச்சியைப் பார்த்தும் சுவாமியின்பொ ருளை அபகரித்தவர்களுக்கு வருகின்ற பாவமும். எ-று. (நி)

பந்த மாயறி யாதுசெய் பாவமுஞ்
சிந்தை யார வறிந்துசெய் தீமையு
மூந்தை யோர்க ளொழித்த முறைமையு
மெந்தை நான் மகிழ்வுமி யம்புவேன்.

(இ-ள்.) முன்செய்தவினையால் மயங்கி யறியாமற் செய்தபாவ மும், மனதாரஅறிந்து செய்தபாவமும், முற்காலத்தி லுள்ளவர்கள் அப்படிவந்த பாவத்தைத் தீர்த்துக்கொண்ட முறைமையும், சுவாமி யிலுல் மகிழ்ச்சியடைந்த புழுகுபூனையின் செய்கையுஞ் சொல்லுகி ன்றேன் எ-று. (சு)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விருப்பில் கோதமனு ரீசன்
றிருமுகனே வேள்வி நாட்டத்
திருப்பொலி சடையோன் றண்ணற்
செனித்திடு மறையோ னங்கு
வருப்பொலி கனலோ னென்ன
வுதித்தன னவனை நோக்கிப்
பொருப்பிறை யவனைப் பூசை
புரியெனப் புகழ்ந்து சொன்னன்.

(இ-ள்.) உலகத்தில் ஆசையில்லாதகௌதமரிஷி, சுவாமிசந்நி திமுன்வேள்வி யொன்று செய்வதற்கு எத்தனித்து அக்கினிவளர்க் க அழகுபொருந்திய சடையையுடைய அத்தச் சுவாமி கிருபையால் முன்னமேதோன்றியிருக்கிற சிவப்பிராமணன்அந்தயாகத்தில் * அ க்கினிசொரூபம்போலப்பிறந்தான்; அவனைப்பார்த்துக்கிரிரூபமாகி விளங்கிய அருணாசலேசுரரைப்பூசைசெய்யென்று புகழ்ச்சியாகஉப சாரஞ் சொன்னர். எ-று. (எ)

மற்றுமேழ் தருப்பை தீயி
லிடுதலு மலர்மா தென்னக்
கற்றையங் குழலேழ் மின்னு
ருதித்தனர் கணிகை மாராய்
நிற்றலு மிறைவர் முன்னே
நிருத்தமே புரியு மென்று
னற்றடம் பலவுங் கண்டு
நகரமுஞ் சிறப்புஞ் செய்தார்

(இ-ள்) அதன்பின்கௌதமர் ஏழுதருப்பையை யெடுத்துக் கு ண்டத்தின் அக்கினியிலேபோட்ட அளவில், இலட்சுமிபோலக்கற் றையாயிருக்கின்ற. கூந்தலையுடைய மின்னற் கொடிபோன்ற ஏழு பெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள்; அவர்களைப்பார்த்து நீங் கள்சுவாமிசந்நிதியில் நாட்டியஞ்செய்து வாருங்க ளென்றார், அவர் கள்நன்மையாகிய தடாகங்கள் பலவுண்டாக்கி ஊரைச் சிறப்புசெய் தார்கள். எ-று. (அ)

மந்திரம் பரவும் வண்ணி மலைதனைக் கடுத்த கீழ்பா
லிந்திர தடமுண் டந்த விந்திரன் முதலே கண்ட

* அக்கினி சொரூபம்போல் பிறந்தான் என்கிற மொழியை கௌதம புராணத்தில் தெரிந்து கொள்க.

தந்தரத் தமரர் தாமு மதிற்றின் மூழ்க லாலே
சந்தனக் குழம்பு நாறு மணக்குமைந் தருவின் மாலே.

(இ-ள்.) தேவர்கள்மந்திரங்களாலே தோத்திரஞ்செய்யப்பட்ட அக்கினிமலைக்கு அடுத்தகிழக்குத்திசையில் இந்திரதடாகமென்றொன்றுண்டு; அது இந்திரன்முன்னுண்டாக்கினது; தேவலோகத்திலுள்ளதேவர்கள் அதில்நித்தியமும் முழுகுதலால் சந்தனக் குழம்பின் வாசனையும் கற்பகப் புட்பத்தின் மாலையினுடைய வாசனையும் மணக்கும். எ-று. (கூ)

பரமமா மதிற்றைப் பூசம் படிந்திடிற் பருகிற் கோடி
பிரமபா தகம்போ மென்ற லதினலம் பேசலாமோ
சுரர்பதி மூழ்கி முன்னே தொடர்ந்த தீவினைக டீர்ந்தா
னிரவி யுள்ளளவும் வாழ விமையவ ருலகம் பெற்றான்

(இ-ள்.) மேன்மைபொருந்திய அந்த இந்திரதீர்த்தத்தில்தைப் பூசத்தில்ஸ்நானஞ்செய்து ஓருகைசலம்ஆசமனஞ்செய்தால், கோடி பிரமஹத்திதோஷம் போமென்ற லதன்பெருமையைப் பேசக்கூடுமோ! இந்திரன்முன் அதில்மூழ்கித் தன்னைப்பற்றிய தீவினைகளை நீக்கிக்கொண்டு சூரியனுள்ளளவும்வாழத் தெய்வலோகத்தையும்பெற்றான். எ-று. (கo)

அங்கதன் பெயராந்தீர்த்த மருணைமால் வரைத்தென் கீழ்ப்பாற், பொங்கிய ததனின் மீனத் திங்கட்பூ ரணியின் மூழ்கிற், செங்கையற்கருங்கட்செவ்வாய்த் திருந்திழையவ ரால்வந்து, தங்கியவினையுந்தீருந் தருமமுந்தவமுஞ்சாரும்

(இ-ள்.) அருணைசலத்துக்குத்தென்கிழக்கில் அக்கினிதீர்த்தமென்றொன்றுண்டு; அதில் பங்குனிமாதம் பௌர்ணமியில்முழுகினால் செம்மையானகயல்மீன்போன்ற கரியகண்களையும் சிவப்பாகிய பவ

ளம்போன்றவாயையும் திருத்தமாகச் செய்யப்பட்ட ஆபரணமு முடைய மாதர்களால்வந்துபொருந்திய பாவமுந்தீரும்; தருமமும்தவ முஞ்சேரும். எ-று. (கக)

வன்னிமுன் னெருநா ளேழு
வறைக்குல முனிவர் காதற்
றுன்னிய மடந்தை மாரை
விரும்பத் தன் சுவாகை யந்தப்
பன்னியர் வடிவ மாகப்
புணர்ந்துமேற் படர்ந்த பாவந்
தன்னைத்தான் கண்ட வந்தத்
தடத்தினிற் படிந்து சாய்த்தான்.

(இ-ள்.) அக்கினிதேவன் முற்காலத்தில் ஒருநாள்வேதமுணர்ந்த ஏழுமுனிவர்களுடைய ஆசைக்குரிய பத்தினிமார்களை விரும்ப, அதைத்தன் பெண்சாதியாகிய சுவாகாதேவியறிந்து அந்தமாதர்வடிவத்தை தானெடுக்கப்புணர்ந்து, மேலே நிகழ்ந்த பாவத்தைத் தீர்க்கத் தன்னாலேஉண்டாக்கப்பட்ட அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து பாதத்தைப் போக்கிக்கொண்டான். எ-று. (கஉ)

தென்றிசைத் தரும தீர்த்த முளத்திற்
செறிந்து மூழ்கிற்
பொன்றிகழ் வடிவ மாகு முடற்பிணி
பொடிபட் டோடும்
வென்றியிற் காலன் முன்னுள்
விதிப்படை தொடர மேனி
குன்றிய சாபந் தீர்த்தா
னதனிடைக் குளித்து மாதோ.

(இ-ள்.) பின்னும் அந்தமலைக்குத் தென்பக்கத்தில் யமதீர்த்தமென்றொன்றுண்டு, அதில்அடைந்துமூழ்கினால் உடல்பொன்வடிவமாகும்; தேகத்திலுள்ளவியாதிகள் பஸ்மீகரப்பட்டொழிந்துபோம்

வெற்றிபொருந்திய பிர்ம்மாவினது ஆயுதந்தொடர்ந்து அதனுல்தே
கங்குன்றினதையமனுனவன் அதில்மூழ்கித் தீர்த்துக்கொண்டான்.

நீங்கரு நிருதி தீர்த்த முளதுமே னிருதி கோணத்
தாங்கதின் முழுகி னருக் கரும்பகை யணைத்துந் தீரு
மோங்குமத் தடத்தின் முன்னே யுருகியே நிருதி மூழ்கி
வீங்கிய கனற்கட் பேய்வா யலகையின் விசயம் பெற்றுன்.

(இ-ள்.) நேகுற்கரிதாகிய நிருதிதீர்த்தமென்று நிருதி மூலை யிலிருக்கின்றது அதில்முழுகினவர்களுக்கு அரியபகைகளெல்லாந் தீரும்;உயர்ந்த அந்தத்தீர்த்தத்தில் முன்னே முழுகின பலத்தினுல் நிருதியானவன் மிகுந்தசெருப்புநிறம்போன்ற கண்களையும் பிளவு பட்ட ஆழமாகியவாயையுமுடைய ஒருபேயைத்தன்வசமாக்கிக்கொ ண்டான். எ-று. (கச)

வசையறு மலைக்கு மேல்பால் வளம்பெறு வருண தீர்த்த
நசைபெற வதனின் மூழ்கிற் கிரகமொன் பானுநன்று
மிசைபெறக் கிரக மெல்லா முழுகுமவ் விடத்தில் வாயு
திசையினிற் பவன தீர்த்த முழுகிலெத் துயருந் தீரும்.

(இ-ள்.) குற்றமற்ற அருணகிரிக்கு மேற்குத்திக்கில் வளப்பமுள்ள வருணதீர்த்தமென்றொன்றுண்டு, ஆசையுண்டாகஅதில்முழுகினுல் ஒன்பதுகிரகங்களும் நன்மையைக்கொடுக்கும்; ஏனெனில்முன்அந்த ஒன்பதுகிரகங்களும்மூழ்கி தங்களிஷ்ட சித்தியடைந்தனர் அந்தத்தீர்த்தத்திற்கு வாயுதிக்கில் வாயுதீர்த்தமென்றொன்றுண்டு, அதில்முழுகினுல் எல்லாத்துன்பமும் நீரும் எ-று (கஇ)

வடதிசை குபேர தீர்த்த முழுகினுர் வறுமை போமத்
தடமதிற் குணபா லீசன் மருத்துவர் சமைத்த தீர்த்தம்
புடைசெறிக் ததனின் மூழ்கிற் புலையரிற் கடைய ரேனு
மடைவுடன் வருண நான்கி லதிகமா யரணைச்சேர்வார்.

(இ-ள்.) வடக்குத் திக்கிலே குபேரதீர்த்தமென் றொன்றுண்டு அதில் முழுகினவர்களுடைய தரித்திரம் நீங்கிப்போகும் தீர்த்தத்திற்குகிழக்கே, ஈசானியதிக்கில் அசுவினிதேவர்களால்உண்டாக்கப்பட்டதீர்த்தம் இருக்கின்றது, அதனிடத்திற்சென்று அதில்முழுகினால்ஈசுரைப்பார்க்கிலும்இழிந்தவராயிருந்தாலும்பெருமையோடொன்குவருணத்திலு மதிகமாகிப் பரமசிவனைச் சேர்வார்கள். எ-று. (கசு)

அந்தகத் தடத்திற் றென்பா லகத்தியத் தடமுண் டங்கே
முந்திய கன்னி மாதம் மூழ்கியுட் கொண்ட பேர்கள்
சந்திர வதனங் கண்டார் தமிழ்க் கவிக் கரச ராவர்
செந்திரு மயிலுங் கல்விச் செல்வியுஞ் சேரு மன்றே.

(இ-ள்.) முன் தெற்காகச்சொன்ன யமதீர்த்தத்துக்குத் தெற்காக அகஸ்தியமுனிவரா லேற்படுத்திய அகத்தியதீர்த்தமென்றொன்றுண்டு, அதிற்புரட்டாசிமாதத்தில்முழுகி ஒருகைஜலம் உட்கொண்டபேர்களுடைய சந்திரனையொத்த முகத்தைப்பார்த்தவர்கள் தமிழிற்சிறந்தவர்களாவார்கள், இலட்சுமியும் சரசுவதியும் அவரிடத்தில் சேர்ந்திருப்பார்கள். எ-று. (கள)

தனபதி தடத்தைச் சேர வதிட்டனுந் தடமுண் டந்த
முனிவரைப் பசியின்மூழ்கி முனிவரிற் றலைமைப்பெற்று
ரணையதின் மூழ்கி னார்கட் கங்கமுஞ் செங்கை நெல்லிக்
கனியென விளங்கும் பாவக் கடலதுங் கடப்பரன்றே.

(இ-ள்.) முன்சொன்னகுபேரதீர்த்தத்துக்கருகே வசிட்டமுனிவராலேற்படுத்தப்பட்ட வதிட்டதீர்த்தமென்றொன்றுண்டு அதில்வதிட்டர் ஐப்பசிமாதத்தில் முழுகி முனிவர்களுக்கெல்லாம் முதன்மையாயிருக்கப்பெற்றார்; அப்படிப்பட்ட தீர்த்தத்தில் முழுகினவர்கட்குவேதத்திற் சங்கமாயுள்ள சாத்திரங்களெல்லா முள்ளங்கை நெல்லிக்கனிபோலவிளங்கும், பாவமாகிய கடலையுங்கடப்பார்கள். எ-று.

கங்கைவேற் குமரனீன முகத்தவன்
கதிரோன் வெற் பின்
மங்கையோர் வடிகன் கன்னி
மதியன்மெண் வசுக்கள் வெள்ளைப்
பங்கய மடந்தை தேவர்
குண்டதடம் பலவுஞ் சூழ்
மங்கதோர் தடத்தின் மேன்மை
மறைகளு மறிவ ருவே.

(இ-ள்.) கங்கை வேலாயுதமேந்திய சுப்பிரமணியர் யானைமுகத்தையுடைய விக்கினேசுரர், ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன், பர்வத குமாரியான பார்வதி, வயிரவர், சத்தகன்னிகள், சந்திரன், அஷ்டவசுக்கள், வெண்டாமரை மலரில் வசிக்கும் சரசுவதி, மற்றும் உள்ள தேவர்கள்முழுகிய தீர்த்தங்கள் அனேகமுண்டு அவைகளில் ஒவ்வொருதீர்த்தத்தின் பெருமையையேதங்களும்சொல்ல அறியா.

ஒருநதி தானு மொவ்வாத்
திருநதி வடபா லாக
வருநதி முழுகிப் பூமான்
மாயவ னுரத்திற் சேர்ந்தா
ணருமதை பரவுஞ் சோண
நன்னதி தென்பாற் றோன்றுஞ்
சுரநதி யமுனை பொன்னி
படிந்துதக் துயரந் தீர்ந்தார்.

(இ-ள்.) ஒருநதியையும் ஒப்பச் சொல்லக்கூடாத திருநதிஎன்று ஒருநதி, அருணசலத்தில் வடக்குப்பக்கத்தில் உண்டு, அதில் இலக்குமி முழுகி விட்டுணுவினுடைய மார்பைச் சேர்ந்தாள்; நர்மதா நதியினால் வணங்கப்பட்ட சோணமென்று ஒருநதி, அருணசலத்து

க்குத்தென்பாரிசத்தி லிருக்கும்; அதில் கங்கை, யமுனை, காவேரி, முதலிய நதிகளெல்லாம்வந்து முழுகித் தங்கள் துன்பத்தைப் போக்கிக்கொண்டார்கள். எ-று. (உ0)

புண்ணிய வாறு தெய்வ மலைக்குமேற்
றிசையிற் பொங்கும்
நண்ணிய புண்ணி யாற்றா ரென்றுபேர்
நகரந் தானும்
எண்ணிய நதியின் மூழகி யீழனென்
றரசன் தீங்காம்
பெண்ணியல் வடிவந் தீர்ந்தான் வடிவமும்
பேறும் பெற்றான்.

(இ-ள்.) தெய்வீகம்பொருந்திய அம்மலையின்மேற்பக்கத்தில் புண்ணியநதியென்று ஒன்றுண்டு, அதனருகில் புண்ணியாற்றார் என்றுஒருநகரமுமுண்டு, அதிலிருந்த ஈழனென்கிற அரசன் தனக்குத்தீங்காகவந்தடைந்த பெண்ணுருவை அந்நதியில் முழுகித்தீர்ந்து கல்ல உருவமும் வேண்டியபேறும் பெற்றான். எ-று. (உக)

திருந்துசே யாறு மூன்சொற் றிருநதி வடபாற் றோன்றும்
பொருந்தவே லெறிந்து செவ்வே ளழைத்தவப் புனித நீரி
லருந்திக ழயிலோன் மூழ்கி யசுரரைத் தொலைக்குஞ் சீரு
மருந்தயி லமரர் சேனை பதியெனும் வரமும் பெற்றான்

(இ-ள்.) அழகிய சேயாறுஎன்னுநதி முன்சொன்ன அழகமைந்த கண்ணியநதிக்கு வடபக்கத்திலிருக்கும், அதுமுன் சுப்பிரமணியர் வேலெறிந்தழைத்த பரிசுத்தமான தீர்த்தம், அதில் மிகவும் பிரகாசிக்கின்ற வேலையுடைய அச்சுப்பிரமணியரே முழுகி அசுரர்களைக்கொல்லும் வரமும் அமிர்தபானஞ் செய்யுந் தேவர்களுடைய சேனாபதியென்கிற பேரும்பெற்றார். எ-று. (உஉ)

நிருத்தரா லயத்தி னுள்ளே சிவதட மூளது நித்தங்
கருத்தினுணிணைத்தாற் றெய்வக்கங்கையிற் படிந்ததொக்கு
மூருத்திரர் பலரு மாசி மகத்திலே யுகந்து மூழ்கி
யெருத்தினி லிருந்துதேவ ரெவரினு மேற்றம் பெற்றூர்.

(இ-ள்.) அனந்தம் திருவிளையாடல்களைச்செய்யும் ஆலயத்திற் சிவகங்கையென்று ஒருதீர்த்தமுண்டு, அதைத்தினந்தோறும் தன்மனதிலே நினைத்தாற் கங்கையில் முழுகிய பலனுண்டாகும்; அநேக உருத்திரர்கள் மாசிமாதத்தில் ஸ்நானஞ்செய்து இடபவாகனரூடராய் எல்லாத்தேவர்களிலும் மேண்மை பெற்றூர்கள். எ-று. (உங)

சக்கர தீர்த்த மந்தத் தடத்தினிற் குணபாற் றோன்று
மைக்கட லணையமேனி வராகமால் படிந்த தாகு
மக்கரை வலமாய் வந்தோர் முழுகினே ரருந்தி னோர்க
டுக்கசா கரம்விட் டீசன் றுணைப்பதம் பெறுவரன்றே.

(இ-ள்) சக்கரதீர்த்தமென் றொருதீர்த்தம், முன்சொன்ன சிவகங்கையென்னுந் தீர்த்தத்துக்குக்கிழக்கிலிருக்கின்றது;அதுமுன்னமே சமுத்திரத்தினிறம் போன்ற கருநிறமுடைய விட்டுணுவராக அவதாரத்தில் முழுகிப்பேறுபெற்றதாகும்; அத்தீர்த்தத்தைத் வலமாகவந்தவர்களும் அதில்முழுகினவர்களும் அந்நீரை உட்கொண்டவர்களும் துக்கசமுத்திரத்தில் நின்று நீங்கிச்சிவபிரானது இரண்டுபாதங்களையும் இடபமாகப் பெறுவார்கள் எ-று. (உச)

நாயக னமருங்கோயின் மருங்கினி னளிநக் கோயிற்
றூயவன் பெயராந் தீர்த்தத் தியவன் றிசையிற் றோன்றுங்
காயமத் தடத்திற் றோய்ந்தார் பிறவியாங் கடலிற்றோயா
ராயிரம் ஜனனந்தோறு மடைந்த தீவினையுந் தீர்ப்பார்.

(இ-ள்.) அருணைசலேசுரர்எழுந்தருளியிருக்கின்றகோயிலுக்குப் பக்கத்தில் அக்கினிதிசையில் தாமரையாகியசிறந்தஆலயத்தில்வசிக்கும் பிரமனுலமைக்கப்பட்ட பிரமதீர்த்தமென்று ஒருதீர்த்தம்உண்டு அதில்முழுகினவர்கள் பிறவிக்கடலில் முழுகார்கள். கீழ்ச்சென்ற ஆயிரம்பிறப்புகள் தோறுஞ்சேர்ந்த தீவினையுந்தீர்ப்பார்கள் எ-று.)

அத்தட முழுகிச் செம்பொன் னணுவள வளிப்பாராகிற்
சத்தசா கரஞ்சூ ழிந்தப் புவியெலாந் தனத்தி னுலு
முத்தணி மணியி னுலு நிறைத்தது முழுது மீசன்
பத்தர்பா லளிக்கு மந்தப் பலத்தினு மதிகமாகும்.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தங்கம் ஒரு அணுவளவு கொடுப்பாரானுல் சத்தசமுத்திரஞ்சூழ்ந்தஇப்பூமி எல்லாம்சொர்னத்தினுலும், நவரத்தினங்களினுலும்நிறைத்துஅவைகளையெல்லாம்சுவாமியினுடையபத்தரிடத்திற் கொடுக்கும்பலனிலு மதிகமாகும்.

தேனகு தடத்தின்மூழ்கிச் செய்யவானீந்தோர் வெள்ளைத்
தானவா ரணஞ்சூழ் செம்பொற் சயிலநேர் விமானத்தேறி
மேனகை யரம்பை தூய கவரிக ளிரட்ட வேகி
யானிலோர் மயிர்க்கோர் கற்ப மரன்பதத் திருப்பரன்றே.

(இ-ள்.) தேன்பொருந்தியபுட்பங்களையுடைய அத்தீர்த்தத்தில் முழுகிச் சிவப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள் மதங்கொண்டவெள்ளையானைகள்சூழ்ந்து தாங்கப்பட்ட மகாமேருபோலுஞ்சொர்ணமயமான விமானத்திலேறிக்கொண்டு மேனகை அரம்பைஎன்கிறதேவதாசிகள் இருவரும் பரிசுத்தமாகிய கவரிவீசப்போய், அப்பசுவின் மயிர் ஒன்றுக்கு ஒருகற்பகாலம் சிவபதத்தில் இருப்பார்கள். எ-று.

காலமே யதனின் மூழ்கிக் கரியவா னளித்தோர் கோல
நீலமால் வரைபோனீல நெருங்கிய விமானத் தேறிச்

சூலமே பிடித்துப் பூதகணத்தவர் தொடர்ந்து போற்றப்
பாலலோ சனர்வாழ் கின்றபரமபதத் திருப்பரன்றே.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில் சூரியோதயகாலத்தில் விதிப்படிமுழுகிக் கறுப்புப்பசுவைத்தானஞ்செய்தவர்கள், அழகுபொருந்திய உந்நதமானநீலமலைபோல்விளங்கும் நீலரத்தினமிழைத்தவிமானத்திலேறிச் சூலாயுதம்பிடித்துக்கொண்டு பூதகணங்கள் தொடர்ந்து வந்து வணங்கநெற்றிக்கண்ணையுடையசிவன துபரமபதத்திலிருப்பார்கள்.

வெள்ளையா னளித்தேர் வெள்ளை
விடைகளா யிரஞ்சூழ் முத்தின்
கொள்ளையம் விமானத் தேறி
யிமையவர் குழாங்கொண் டேத்த
வள்ளலாற் பதத்திற் சேர்வர்
மழைக்குடை செருப்புத் தந்தோ
ரெள்ளரும் பரிமா வீந்தோ
ரிந்திர பதத்திற் சேர்வார்.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில்முழுகி வெள்ளைப்பசுவைவிதிப்படிதானங்கொடுத்தவர்கள், ஆயிரம் வெள்ளையிடபங்கள் சூழ்ந்த முத்தினலங்கரிக்கப்பட்ட தெய்வத்தன்மைபொருந்தியவிமானத்திலேறிக்கொண்டு தேவர்கள்கூட்டமாகச்சேர்ந்துவணங்க, ஸ்ரீ அருணசலேஸ்வரருடைய திருவடிநிழலிற்சேர்வார்கள்,மழைக்குடையும், (வெயிலுக்கு, பாதரட்சையுங்கொடுத்தவர்களும்இகழ்தலில்லாதகுதிரைகொடுத்தவர்களும் இந்திரபதவியிற் சேர்வார்கள். எ-று. (உக)

கன்னியைத் தான மாயக் கரைதனி லளித்தோர் தேவர்
பொன்னிய லுலகிற் போகபூமியி லளகை நாட்டின்
மின்றிகழ் மலரோ ணட்டில் விரும்பின துகர்ந்து தேவர்
சென்னியால் வணங்கிப்போற்றச் சிவபதத்திருப்பரன்றே.

(இ-ள்) அத்தீர்த்தக்கரையில் கன்னிகாதானஞ் செய்தவர்கள் தேவர்கள்வசிக்கும் பொன்மயமானபோகபூமி என்கிறபுண்ணியஸ் தானத்திலும், சுவர்க்கலோகத்திலும் குபேரனுடையஅளகாபுரிபட் டணத்திலும், பிரகாசம்பொருந்தியபிரமலோகத்திலும்,சிலசிலகாட் களிலிருந்து விரும்பினவற்றையெல்லாம் அனுபவித்துத்தேவர்கள் தலையாலேவணங்க அதன்பின் சிவபதவியிற்சேர்வார்கள். எ-று. ()

உத்தம தலத்திறற் கோடி யருந்தவர்க் குதவு மன்ன
நித்தமாங் காசிமீதே ரளிப்பலன் றனக்குநேரா
தத்தலத் தனந்தகோடி யருந்தவர்க் குதவுமன்னஞ்
சத்திய வருணை நாட்டி லவிழ்ப் பலன்றனக் கொவ்வாதே.

(இ-ள்.) உத்தமமாகியதலங்களிற்கோடிஅருமையாகியசிவயோ கிகளுக்குபடைத்தஅன்னத்தின்பலன், நித்தியமாயிருக்கிறகாசியில் பெரியோர்களுக்குப்படைத்தஅன்னத்தில் ஒருஅன்னப்பலனுக்கும் ஒவ்வாது, அப்படிப்பட்டகாசிக்ஷேத்திரத்திலேகோடி சிவயோகி களுக்குப்படைத்த அன்னத்தின்பலன், உண்மையாகியஅருணைசலத் தலத்திற்படைத்த அன்னத்தில் ஒருஅன்னப்பலனுக்குஒப்பாகாது.

ஆவடி யளவுபூமி யந்தணர்க் களித்தோ ரீசன்
சேவடி நிழலிற் றங்கள் கிளையுடன் செருக்கி வாழ்வார்
மாவிடை யாற்கு விட்டோர் மற்றொரு விடைமேலேறி
மேவிடுஞ் சிவலோ கத்திற் பவனிபோய் வியப்ப ரன்றே.

(இ-ள்.)பசுவின்குளப்படியளவுள்ளபூமியைவிதிப்படிபிராமண ர்கட்குத் தானஞ்செய்தவர்கள், பரமசிவன்சிறந்த பாதநிழலிலேதங் களுடைய சுற்றத்தோடு களித்து வாழ்வார்கள்; சுவாமிக்குப் பெரு மைபொருந்தியரிஷபங்களேத்தானஞ்செய்தவர்கள், வேறுரிஷபவா கனத்திலேறிக்கொண்டு சிவயோகிகளாலு மமைத்தற்கரியசிவலோ கத்தில் பவனியாகப்போய் சந்தோஷித்திருப்பார்கள். எ-று. (கூஉ)

சாலிகள் சமைத்தோ நந்த வனஞ்சமைப்பித்தோர்கேணி கூலமார் தடங்கள் கண்டோர் குளிசனர் பதத்திற்சேர்வா ராலய மெழுகித் தூர்த்து விளக்கிட்டோ ரலங்கரித்தோர் வேலியி னடுவிற் பாந்தன மெத்தையிற் றுயில்வ ரன்றே.

(இ-ள்.) அருணசலத்தில் மரங்களைச்சாலையாக வைத்தவர்களு ம்நந்தவனம்வைத்தவர்களும், திணறுகள்மணற்குன்றுகள்பொருந்தி யகுளங்கள்வெட்டினவர்களும் வச்சிராயுதத்தைக்கையிற்றாங்கிய இ ந்திரபதவியடைவார்கள். ஆலயத்திலுள்ளபள்ளங்களை நிரவிமெழுகி விளக்கேற்றிவைத்தவர்களும், அலங்காரஞ்செய்தவர்களும்விட்டுணு வாய்த்திருப்பாற்கடல்மத்தியில்சர்ப்பசயனத்தில்யோகநித்திரைசெ ய்வார்கள். எ-று. (கூ)

மகிழ்ப்புன லரிதா ரளின் மருவுநீர்ப் பந்தர்வைத்தோர் செழிக்குமேற் பதவி தன்னிற் றேவருந் துதிக்கவாழ்வார் புழைக்கமா வுரிய ரன்பர்க் கணிகலை புனைவித் தோரோ ரிழைக்கள விறந்தகால் மிறைபதத் திருப்ப ரன்றே.

(இ-ள்.) யாவருக்கும் மகிழ்ச்சியை விளைவிப்பதான நீரரிதாகி யகோடைக்காலத்தில் பலர்க்கும் உபயோகமாகும்படி தண்ணீர்பந் தல் வைத்தவர்கள், செழிப்பன மேலாகியபதவியில்தேவர்களும்புக ழும்படிவாழ்வார்கள். தவாரம் பொருந்திய துதிக்கையினையுடைய யானைத்தோலைப்போர்த்தசிவனுடைய அன்பருக்குவஸ்திரங்கொ த்தவர்கள் ஓர் இழைக்குஅளவிறந்தகாலம்சிவபதத்தி லிருப்பார்கள்.

மடஞ் சமைத் தவர்களந்த மடத்திலோர் துகட்கோர்கற்ப மிடம்பிடித் தழியாவீட்டி லிருப்பவர்வே றிறந்தபேர்க்கும் விடங்குடித் திறந்த பேர்க்கும் விதியினு லுறுதிவேள்விக் கடன்கழித்தனரே லந்தக் குலமெலாங் கதியிற் சேரும்.

(இ-ள்.) இத்தலத்தில் ஒருமடங்கட்டினவர்கள், அம்மடத்திலி
ருக்கிற எருதுகளுக்கு ஒருகற்பகாலம் கெடுதலில்லாதமோக்ஷதான
த்தில் நிலைபெற்றிருப்பார்கள். பின்னும் வேறுவிதமா யிறந்தவர்கட்
கும் விஷங்குடித்திறந்தவர்கட்கும் விதியாக உறுதிபொருந்திய பிதி
ர்யாகம் முதலியவற்றை அத்தலத்திற்செய்தால் அவர்கள் குலத்தா
ரெல்லோருங் கதியிற் சேருவார்கள். எ-று. (கூ.டு)

காகமுன் பலிபீடத்திற் பலிதனைக் கவரும்போதி
லாகமார் சிறையைக்கீழ் புடைத்ததா லயத்தினூடே
யோகையானமது கோயில் விளக்கிய தெனவுட்கொண்டு
பாகசா தனனூர் வாழும் பதியினைப் பரமனீந்தான்

(இ-ள்.) ஒருகாக்கையானது அத்தலத்துக் கோயிற் கெதிரிலு
ள்ள பலிபீடத்தில்வைத்திருக்கிற பலியன்னத்தை வாயிலுற்கிரங்கி
கும்போது தன்னுடைய தேகத்திலுள்ள சிறகால் கீழேயடித்தது.
அதைச் சுவாமிபார்த்து ஆலயத்திற் பிரியத்தினால் நம்முடைய கோ
யிலை விளக்கினதென்று நினைத்து இந்திரன் வாழ்கிற தேவலோக
த்தை அக்காக்கைக்குக் கொடுத்தருளினார். எ-று. (கூசு)

மூடிக மொன்று கோயின்
முழையினைக் கிளறும் போது
தேடரு மணியொன் றங்கே
யிதறியோர் விளக்கங் காட்ட
வாடிய பெருமான் றீப.
மளித்ததென் றதற்கு நல்ல
வீடியர் நெறியுங் காட்டி
விரைந்துசாலோக மீந்தான்.

(இ-ள்.) ஒருபெருச்சாளி கோயில்வளை யுண்டாக்கும்பொரு ட்டுக்குளனும் தேதெதற்காரியமாணிக்க மணியொன்று அங்கேகிதறிச் சந்நிதியில் திருவிளக்குபோல பிரகாசிக்கநடன மூர்த்தியாகியசுவா மிநமக்குநீபமிட்டதென்று அதற்குமோட்ச சாதனத்துக்குக்கருவி யாயுள்ள ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சாலோகபதவியைக் கொடுத்தார். எ-று. (கஎ)

சிலந்தியொன் றெருநா ளந்தத்
திருமலை யிடத்து நூலைக்
கலந்துட னிழைக்க வீது
கலிநமக் களித்த தென்று
நலந்திக ழாச னுக்கி
யதற்குநல் லறிவு நல்கி
யுலந்தபின் னெடிய மாய
னுலகினை யுதவி ஞனே.

(இ-ள்.) அழகுபொருந்திய அம்மலையின்கண் ஒருநாள்ஒருசில ந்தியானது வாயினூலால் பின்னலிட, இதுதோலான்மைப் புனைந் துள்ளநமக்கு வஸ்திரஞ்செய்து கொடுத்ததென்று அச்சிலந்தியைந ற்குணமுள்ள அரசனுகப் பிறப்பித்து நல்லஞானத்தைக் கொடுத்து த்தேகவியோகமான பிறகுவிஷ்ணுலோகத்தைக்கொடுத்தார். எ-று.

வேறு

ஒருமணலைச் சிவனுருவ மெனநினைத்தவ்
விடத்தில் வைத்தோ ரெருவன் பின்னைப்
பரகதிபுக் கடைந்துசிவ னென்னவேற்
றுமைபகன்ற பதவி சேர்ந்தான்

பொருவரிவ வருணகிரிப் பதிவளமீ
தென வுரைத்துப் புண்டரீகத்
திருமுகமண் டலமலர்ந்தே யிருந்தனனன்
மறைபுகன்ற செல்வன் ருனே.

(இ-ள்.) பின்னும்அத்தலத்தில் ஒருவன் ஒருமணலேச்சிவனுரு வமென்றுநினைத்து வைரிதனால், அவன்மேலாகிய கதியைச்சேர்ந் துசிவனென்றும் இவனென்றும் பேதமில்லாமல் இருக்கின்றஉமா தேவிநீங்கியசிவரூபமான சாரூப்பிய பதவியைப்பெற்ருன், ஒப்பில் லாத அருணைசலத்தின் வளம்இதுவென்று தாமரைமலர்போன்றமு கமலர்ந்துசொல்லியிருந்தார் வேதங்களையுஞ்சொன்னபிரமதேவர்.

எட்டாவது,

தீர்த்தச்சருக்கம்.

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-குடo.



15. திருக்கண்ணுடைகூடைத்திரிகரணசுத்தியுடன் இத்தலபுராணத்தைமனமுருகப்பா
டிவலம்வருவோர்கள்தீவினைநீங்கி,நான்காம்பதவியடையவேண்டிவலம்புரியும்மகாத்மியம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலைவலம்புரிச் சருக்க வசனம்.

இப்படிப்பட்ட தெய்வீகம்பொருந்திய அருணாசலத்தை வலஞ் செய்யும்விதம் எப்படியென்றால்;—பிரதக்ஷணஞ்செய்கிறதினத்தில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகியவஸ்திரம் உடுத்திவிபூதிதரித்துரு மாற்கூடியதானங்கொடுத்து காம ஒருவரிடத்தில தானம் வாங்காம லும் மேற்போர்வையில்லாமலும்குடைபிடித்துகொள்ளாமலும்தாம் பூலந்தரிக்காமலும்போசனத்தைவெறுத்தும் வாகனங்களிலேறாமலு ம்பாதரட்சையில்லாமல்காலிலேநடந்தும் சிரசில்கையைவைத்து க்கூப்பிக்கொண்டும்கோபம்முதலான வைகளில்லாமலும் அருணாசல த்தையேதியானித்துமெள்ளநடந்துகிரிப்பிரதக்ஷணஞ்செய்யவேண் டும். அப்படிச்செய்யும்போது ஒவ்வொருத்திக்கையும் அந்தந்தத்திக்குகளி லிருக்கிறசுவாமிகளையும் வணங்கிசிந்தாகளையும் தேவர்களையும்ம னதிலுல்வந்தனஞ்செய்து ஆலயத்துக்குப்போய்ப் பரமசிவத்தைத்த ரிசித்து காம்இருக்கும்இடத்திற்குவந்து பழங்களும் பாலுமாவது; அல்லது, பரிசுத்தமாகிய அன்னமாவதுபுசிக்கவேண்டும்;இந்தப்படி அந்தஸ்தலத்திலிருக்கிறவர செய்யவேண்டியது. அதிகதூரத்திலிரு ந்து வந்தவர்கள் தங்கள் வருத்தத்திலுல் எவ்விதமாகவலஞ்செய்தா லும் புண்ணியமே. இவ்வாறு பிரதக்ஷணஞ்செய்கிறவர்கள் மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைவார்கள்.

மேலும் இம்மலையின் எட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர்கள் தங் கள்பேரால் சிவலிங்கங்களைஸ்தாபித்துப்பூசித்திருக்கிறார்கள். கிழக் கில் பார்வதியார் பூசித்த லிங்கமும் இருக்கின்றது.

தெற்கில் வச்சிராங்கதபாண்டியன்பூசித்த புழுகணியிறைவர் எ ன்னும் சிவலிங்கம் இருக்கின்றது.

மேற்கில் பிரமாவினுல் பூசிக்கப்பட்ட அணியண்ணாமலையார் எ ன்கிற சிவலிங்கம் இருக்கின்றது.

சூரியனுற் பூசிக்கப்பட்ட சிவலிங்கமும் இருக்கின்றது.

இப்படியேபரசிவரூபமான அனேகசிவலிங்கங்களிருக்கின்றன

திருமலைவலம்புரிச் சருக்கவசனம் முற்றிற்று.



சிவமயம்.

ஒன்பதாவது

திருமலைவலம்புரிச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கனகமல கனகமலர்த் தடங்களது
பெருமையினுற் களித்தே னந்த
வனகமலை வலம்புரியுஞ் செயலினையுங்
தெரியவுரைத் தருள்வா யென்று
சனகமுனி யெழுந்துபணிந் துரைக்குதலு
மனமகிழ்ந்து கிரணக் கோலிற்
றிருகரனுர் திறந்தடைக்குந் திருக்கோயிற்
கடவுளிவை செப்ப லானுன்.

(இ-ள்.) மேலான பிரமனே? சிறந்தபொன்போன்ற நிறத்தை யுடைய தாமரைபுட்பங்கள் சூழ்ந்த தீர்த்தங்களின் பெருமையைச் சொல்லக்கேட்டுச்சந்தோஷித்தேன்; பாபரஹிதமாகிய சோணகிரியை வலஞ்செய்யும் பெருமையுந்தெரிய அருளிச்செய்யென்றுசனகரிஷி எழுந்து வணங்கிச்சொன்ன அளவில் மனஞ்சந்தோஷித்துசூரியன் தன்கிரணமாகிய நிறவுகோலால் நிறந்து மூடிந்தாமரை மலராகிய கோயிலில் வாசஞ்செய்கின்றபிரமதேவர் சொல்லத்தொடங்கினர்.

கற்பமெலா மரியதவம் புரிந்தவரு
மதன்பெருமை காண மாட்டார்
அற்பதவம் புரிந்தவருக் கருணைகிரி
வலத்தினல மறிய லாமோ
சிற்பரன்றன் புகழ்கேட்கும் விருப்புடையா
யெனவுனக்குச் செப்பா கின்றே
னற்புதமிக் கதையமுதைச் செவிவழியே
புகட்டவின்ப மருந்து கென்றான்.

(இ-ள்.) அநேககற்பகாலம்வரையில் அரிதாகியதவஞ்செய்தவர் களும், அதன்பெருமையை யறியமாட்டார்கள், அற்பமான தவத் தைச்செய்தவர்களுக்கு அருணாசலத்தைவலஞ்செய்யும் பெருமையை அறியக்கூடுமோ ஞானசொரூபமாகிய பரமசிவனுடையபுகழைக்கே ட்கும் ஆசையுள்ளவனென்று உனக்குச்சொல்லத் தொடங்குகிறேனும்; அற்புதமான இக்கதையாகிய அமிர்தத்தை உன்காதாகியவாய் வழிபு கட்ட இன்பமாக அருந்தென்றுசொன்னர் பிரமதேவர். எ–று. (உ)

சோணகிரி வலம்புரிதல் பிறவியெனும்
பெருங்கடற்குத் தோணி யாகு
மேனரகக் குழிபுகுதா தரியமுத்தி
வழிக்கேறு வேணி யாகுங்

காணரிய தவத்தினுக்கு மறத்தினுக்கு
மரும்பொருட்குங் காணி யாகும்
வாணுதன்மின் னிடத்திருக்குங் கண்ணுதலை
மனமுருக்கு மகிழ்ச்சி யாகும்.

(இ-ள்.) ஸ்ரீ அருணாசலத்தை வலஞ்செய்வது பிறப்பென்னும் பெரியகடலைத்தாண்டுவதற்குஒருதோணியாகும்; கும்பியாகமுதலிய எழுநரகக்குழியிலும்புகுதாமல் அருமையாகியமுத்தியில்ஏறுவதற்கு ஏணியாகும்; காணுதற்குஅரியதவத்திற்கும், தருமத்துக்கும், அரிதாகியசம்பத்துக்கும், ஒருகாணியாயுமிருக்கும், ஒளியுள்ளநெற்றியையும் மின்னல்தோன்ற சாந்திபினையுமுடையபார்வதியை இடப்பாகத்தில்வைத்திருக்கின்ற சுவாமியை மனமுருக்கி சந்தோஷமாகும்.

காசிமுதற் சிறப்புடைய தலங்களிலே
யிருந்திறையைக் கற்ப காலம்
பூசைசெயு மொருபலமு நெடுங்கால
மரியதவம் புரிகை தானுங்
தேசிகனு ருரைத்தபடி சமாதியிலே
யிருந்துபெறுஞ் சித்தி தானு
நேசமுட னருணகிரி வலம்வருகென்
றுரைப்பதற்கு நிகர தாமோ.

(இ-ள்.) காசிமுதலாகச் சொல்லப்பட்டசிறப்பையுடையதிவ்யஸ்தலங்களிலிருந்து பரமேஸ்வரனைக் கற்பகாலம் பூசைசெய்த பலமும், அநேககாலம் அருமையாகியதவஞ்செய்ததும், குருசொல்லியமுறைப்படி சமாதியில் இருந்து அடைகின்ற சித்திகளும் பக்திவிஸ்வாசத்துடன் அருணாசலத்தை வலம் வரவேண்டுமென்று சொல்லியபலனுக்கு நிகராகுமோவென்று சொன்னர். எ-று. (ஈ)

அருணைகி ரிவலம்வருகென் றுரைப்பளவி
லதிகபிர மத்தி நீங்கு
நருமதையி னளவுமது வருந்துன்பவம்
வருந்தநடு நடுங்கி யோடு
மருவுபெரும் பொருள் கவர்ந்த பழவினையுங்
கரங்குவித்து வழிக்கொண் டேகும்
குருபரற்குத் தவறிழைத்த கொடுவினையும்
பயந்துகருக் குலையுந் தானே.

(இ-ள்.) ஸ்ரீ அருணசலத்தைவலஞ்செய்யென்று சொல்லுமளவில் நீங்கற்கரிய பிரமஹத்திபாதகம்போய்விடும்; நருமதையாற்றுநீர்ளவு மதுவைப் பானம் பண்ணியபாவமும்வருத்தமுற்றுநடுநடுங்கியோடிப்போகும்;பிறருடையமிகுந்தபொருளைக்களவுசெய்தபழமையாகிய பாவமுங் கைகுவித்து நமஸ்காரஞ் செய்து கொண்டு ஓடிப்போகும்; குருவாகிய சுவாமிக்குத் தவறுசெய்தபாவமும்பயந்துகருப்பங்குலைந்து ஓடிப்போகும். எ-று. (இ)

அந்தவினை யுடன்படலும் பெருங்காற்றி
னெரிசுடர்போ லவியா நிற்குந்
தந்தையரைக் கடிந்தவினை கருடனுற்ற
வரவெனவே தளர்ந்து மாயு
மைந்தரையு மகளிரையுந் தொலைத்தவினைக்
கடல்சுவறி வறிய வாகு
மெந்தைபொருள் கவர்ந்த வினை
தனக்கிருக்கு மிடமேதென் றிசைக்குந்தானே.

(இ-ள்.) இறுதியைக்கொடுக்கும்பாவமும், அருணசலத்தை வலஞ்செய்யவேணுமென்று நினைத்தஅளவில் சூறைக்காற்றி னெதிரிலிருக்கும்தீபம்போலவிந்துபோம்;தந்தைமாரைக்கொன்றபாவமும்

கருடனைக்கண்ட பாம்புபோல்நடுக்கமடைந்து ஓடிப்போம்குழந்தை களையும் மாதரையுங்கொன்ற பாவமாகியகடலும்வற்றிச்சிறிதும்இ ல்லாமல்நீங்கிப்போம், எம்மூடையசுவாமிதிரவியம்திருடினபாவமு ம்தானிருக்குமிடமெங்கேயென்றுதேடிக்கொண்டுஓடிப்போம்எ-று.

வே று.

ஓரடிக் கியாகஞ் செய்த பலத்தினை யுதவா நிற்கு
மீரடி யிராச சூய பலந்தரு மினிய மூன்று
நேரடி பரிமே தத்தின் பலத்தினை நிறைக்கு நாலு
பாரடி யிடுவார்க் கியாக பலனெலாம் பலிக்குந் தானே.

(இ-ள்.) ஸ்ரீ அருணைசலத்தைவலஞ்செய்யவேண்டுமென்றுநினை த்து ஓரடி எடுத்துவைத்தவர்க்கு யாகஞ்செய்தபலன்சித்தியாம்; இர ண்டடிவைத்தவர்க்குஇராஜசூயயாகபலன்சித்தியாம்; மனத்தூய்மை யுடன் மூன்றடிவைத்தவர்க்குஅஸ்வமேதஞ்செய்தபலனுண்டாம்நா லடிவைத்தவர்க்கு எல்லாயாகத்தின் பலனுஞ்சித்தியாம். எ-று. (எ)

வலங்கொளோ ரடியே பூமி வலஞ்செயும் பலத்தைநல்கும்
மலங்குமீ ரடியே தீர்த்த மாடிய பலன்க ளீயுந்
தலங்கொண்மூன் றடிகளீரெண் டானத்தின் பலத்தைநல்கு
மிலங்குநா லடிக்கு யோகத்தெண்வகைப்பலத்தை நல்கும்.

(இ-ள்.) பிரதக்ஷிணஞ்செய்கையில் தூக்கிவைத்தஓரடியின்பல ன்பூமிப்பிரதக்ஷிணஞ்செய்தபலம்காலத்தூக்கிவைத்துஇரண்டடியி ன்பலன் சருவதீர்த்தமாடியபலன்தரும்; மூன்றடியின்பலன்சோட சதானப்பலன் தரும் வீளங்காநின்றநாலடியின்பலன் அஷ்டாங்க யோகஞ்செய்த பலன்தரும். எ-று. (அ)

வைத்தவோ ரடியே பூசைப் பலனெலாம் வழங்கு மங்கே
உய்த்தவீ ரடியே லிங்கந் தாபித்த வுறுதி நல்கு

மெத்தவே யடிமூன்றிட்ட பலன்செரலின் விமானங்கோடி
யெத்தனை தூபிக் கோயில் சமைத்தபோ றெல்லா நல்கும்.

(இ-ள்.) அதுவல்லாமலும்வலமாகவைத்தஓரடிக்குச்சிவபூசாபலன்களெல்லாம்பலிக்கும்; இரண்டடிக்குசிவலிங்கப்பிரதிட்டைசெய்தபலன் கொடுக்கும்; மூன்றடிக்கு எத்தனையோ கோடி விமானம் தூபிகளையுடைய கோயில் கட்டியபேறுதரும். எ-று. (கூ)

வேறு.

நீடருண கிரிவலத்தோ ரடியிட்டோ
ருருத்திரர்வா ணிலகைக் கொண்டோர்
நாடியிரண் டடியிட்டோர் மகேசுரர்தம்
பதத்தடைந்தார் நதியுஞ் சூடி-
ஆடரவம் புனைந்தமலை வலமாக
வெழுந்தொருமூன் றடியிட் டார்க்கே
கோடிதலை முறையவரைச் சிவலோகந்
தனிற்கொடுபோய்க் குடிவைத் தாரே.

(இ-ள்) நீண்டஅருணசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று நினைத்துஓரடியெடுத்துவைத்தவர்கள், உருத்திரபதமடைந்தவராவார்கள்அன்புடனே இரண்டடிவைத்தவர்கள், மகேசுரபதமடைவார்கள் சந்திரனைத்தரித்தும், படமெடுத்தாடுகின்றசர்ப்பங்களையணிந்தபரமசிவனுருவமானஅவ்வருணசலத்தைவலம்வரநினைத்து, மூன்றடிவைத்தவர்கள் கோடிதலைமுறையிலுள்ளமனிதரையும் பதவியிற்கொண்டுபோய்ச்சேர்க்கும். எ-று. (கo)

நன்றிதரு மருணகிரி வலமாகச்
சிறிதுவழி நடந்த பேர்க்குத்
துன்றுநெடுங் கிரணவெள்ளிக் கயிலைமலை
வழிகடுகித் தொலையா நிற்கு

மன்றியுமம் மலைவலமாய் நடந்தவழிப்
பரலுறுத்து மழற்சி யாலே
கன்றியகா லரைக்காணிற் கன்றியகா
லரைப்போலக் காணும் பாவம்.

(இ-ள்.) நன்றியைக் கொடுக்கும் அருணாசலத்தை வலமாகச்சி றிதுதூரம் நடந்தவர்களுக்கு நெருங்கியகிரணத்தை வீசுகின்ற வெள்ளிமலையாகிய கைலாயத்திற்குப்போகும்வழிவிரைவில்தொலையும் அல்லாமலும், அம்மலையை வலமாகப்போம்போதுவழியிலுள்ளபருக்கைக்கல்லுகளாலும் அழற்சியினாலும் கன்றிப்போனகாலையுடைய வரைக்கண்டால் எமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போம். எ-று.

வன்னிமலை வலம்புரிந்தோர் பதத்துகளொன்
றிருவாயு வசத்தினு லே
புன்னரக மனையவிடம் புகுதிலது
கயிலையெனப் புனித மாகு
மின்னுமவர் பதத்துகளோர் மனிதருடற்
செறியிலவ ரிறப்பு நீங்குந்
துன்னுமவர் பிறப்பொழியும் வலம்புரிந்தோர்
பெருமைகளென் சொல்லு வோமே.

(இ ள்.) அக்கினிமலையாகியஅவ்வருணகிரியை வலம்வந்தவர்கள்பாதத்தில்ஒட்டியதுகளொன்று ஒப்பற்றசிறுகாற்றினால்நகரத்தையொத்த இடங்களிற்சேர்ந்தால் அதுவும் கைலாயம்போல் பரிசுத்தமாம், இன்னும்வலம்வந்தவர்கள் பாதத்துகளில் ஒன்று மனிதர் தேகத்திற்பட்டால் இறப்பும் அவர்கண்பின்பற்றிவருகிற பிறப்பும் நீங்கும், அப்படியாகும்போதுபிரதக்ஷணஞ்செய்தவர்களுக்குண்டாகும் பெருமைகளை என்சொல்லுவோம். எ-று. (கஉ)

அந்தமலை வலம்புரிந்தோர் சிவனிருக்குங்
கயிலையினி னேகும் போதிற்
சந்திரன்வெண் குடையெடுக்கு மிரவிவிளக்
கெடுக்குமங்கை தருமந் தாங்கு
மந்தரமே லிந்திரனர் வழிக்குமலர்ப்
பரப்பிடுவா னளகைக் கோமான்
வந்தனைசெய் தருகுவருங் கந்தமலர்
மழைசொரிவர் வசுக்க டாமே.

(இ-ள்.) அவ்வருணாசலத்தைவலஞ்செய்தவர்கள் பரமசிவன்வாசஞ்செய்கின்ற கைலாயமலையைச் சேரும்போது, சந்திரன் வெள்ளைக்குடை பிடிப்பான், சூரியன் தன்கையினாலே விளக்கெடுப்பான்; தருமதேவதையைதாங்கிவரும் வானுலகத்தில் வசிக்கும் இந்திரன் வருகிறவழியில் புட்பங்களைப் பரப்புவான், அளகாபுரிக் காசனாகிய குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில் வருவான், அஷ்டவசுக்கள் புட்பவருஷம் பொழிவார்கள். எ-று. (கஉ)

மேனகையு மரம்பையுட னூருப்பசியுந்
திலோத்தமையும் வீணை யார்க்குங்
கான நடம் புரிவர்கங்கா நதியுடனே
யமுனாநதி கவரி வீசும்
போனகவின் னமுதமலைத் துகிலுமுகி
லெடுத்தெதிரே போகும் போது
ஞானமுங்கொண் டலர்மடந்தை நணுகுமுன்னே
மறைபுகழ்ந்து நடக்குந் தாமே.

(இ-ள்.) மேனகையும், அரம்பையும் ஊர்வசியும், திலோத்தமையும், ஆகியநான்கு தேவதாசிகளும் வீணைவாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ்செய்துகொண்டு வருவார்கள், கங்கையும் யமுனையு

மாகிய இரண்டு நதிகளும் சாமரம்வீசிக்கொண்டு வருவார்கள்; சாப் பிடத்தருந்த அமிர்தத்தையும் மலையளவு ஆடைகளையும் மேகமெடுத் துக்கொண்டு எதிரேவரும்; இலக்குமி பூவும்கஸ்தூரியுங் கொண்டு வருவாள்; முன்னே நாலுவேதங்களும் புகழ்ந்து கொண்டுவரும். ()

வே று.

சேற்பொதிந் துகளுங் கங்கை படிவதுஞ் சிறந்த தானம் பார்ப்பது மியோகத் தாலே வருதலும் பலமொவ் வாதா லார்ப்பொலிசடையான் சோணசலத்தினை வலமாய்ச்சூழல் காற்பல னென்றெண் ணுதே முழுப்பலங் கருதுங் காலே.

(இ-ள்.) சேற்கெண்டைகுதித்து விளையாடும் கங்கை முதலிய தீர்த்தங்களிலாடிய பலனும், சிறந்தசிவத்தலங்களைத் தரிசனஞ்செ ய்தபலனும், யோகஞ்செய்தலினால் வந்தபலனும் ஒப்பாகாது; ஆத் திமாலைதரித்த சடையையுடைய சிவசொரூபமாகிய அருணைசலத் தைவலஞ்செய்தால் காற்பலமென் றெண்ணுமல் முழுப்பலமென் றேநினைப்பாயாக. எ-று. (எடு)

நிரந்த ரமைமையோர் போற்று
நெடியமால் வரையைச் சூழ்வோர்
பரந்திடும் வழியிற் ரூன்றும்
பாலினற் சிவந்த பாதம்
வரங்கொள வணங்கும் வானோர்
மகுடகோ டிகளிற் றைத்து
விரிந்தசெம் மணிக டாக்கி
மீளவுஞ் சிவக்கு மாதோ.

(இ-ள்.) எப்போதும் தேவர்கள்வணங்கும்பெருமையுள்ளநீண் யோர்ந்தஅருணைசலத்தை வலஞ்செய்வோர்களுடையவழியிற்கிடக்கி

றபரற்கல்லுகளை மிதித்துச் சிவந்தபாதம் பின்புவரத்தைப்பெறுவ
தற்குவணங்கும் தேவர்களுடைய மகுடகோடிகளிற் பதித்துப்பிர
காசிக்கும் இரத்தினகோடிகள் தாக்கி மறுபடியுஞ் சிவக்கும். எ-று.

கானநடைகொடுக்கப் பெற்றென் கரியகண் டெரியப்பெற்
மானுடப் பிறவி யுற்றென்மலைவலம் புரியாமாந்த [றென்
ரூனுடைப் புழுக்கூ டேறி நரகிடை யூச லாடி
தானிடர்ப் படுவ தல்லா லுய்கிலர் சனகவென்றூர்.

(இ-ள்) அப்படிப்பட்ட அருணசலத்தை வலஞ்செய்யாதவர்க
ள்கால்நடையுண்டாய் நடந்துதிரியப் பெற்றென்ன பிரயோசனம்? கறுத்தகண் நன்றாகத்தெரியப் பெற்றென்ன பிரயோசனம்? பெறு
தற்கரிய பிறவியாகிய மானுடப்பிறப்பாகப் பிறந்ததென்ன பிரயோ
சனம்? மாமிசம்திரண்ட புழுக்களையுடைய தேகத்திற்சேர்ந்து நரக
த்தில்வீழ்ந்து அலைந்து துன்பப்படுவ தல்லாமற் பிழைக்கமாட்டார்
கள்? சனகனே என்றூர் பிரமதேவர். எ-று. (கஎ)

வஞ்சியர் புணர்ச்சி வேண்டின் மன்னர்கை வசமாவேண்டி
லஞ்சிய பகைமை யெல்லா மக்கணத் தகற்றவேண்டிற்
பிஞ்சின மதிபோ னல்ல புதல்வரைப் பெறுதல் வேண்டில்
சஞ்சிதமுதலா மூன்று கருமமுந் தவிர்க்கவேண்டில்.

(இ-ள்.) அஃதல்லாமல் வஞ்சிக்கொடிபோன்ற இடையினை யு
டையகல்ல மாதருடைய போகம்வேண்டினுலும்; அரசர்கள்கைவச
மாகவேண்டுமானுலும், அஞ்சத்தகுந்த பகையெல்லாம் அக்கணத்தி
லேநீக்கவேண்டுமானுலும், பாலசந்திரன்போல நல்லபிள்ளைகளைப்
பெறவேண்டுமானுலும், ஆகாமிய சஞ்சிதபிராரத்துவமாகிய மும்ம
லங்களையும் நீக்கவேண்டுமானுலும். எ-று. (கஅ)

முயலக னலகைபூத கணங்களை முனியவேண்டிற்
றுயறுறு பிணியுமாகச் சோகமுந் தவிர்க்கவேண்டி

வியலிசை யறியவேண்டி லெழுதருங் கோலம் வேண்டின்
மயலறு புகழை வேண்டின் மலிவலம் புரிவார் வல்லார்.

(இ-ள்.) முபலகன்போன்ற இராக்கதரையும், பிசாசுகளையும் பூதகூட்டங்களையும் கோபித்தொழிக்க வேண்டினாலும், துன்பம் செய்யும்வியாதியையும் தேகத்தில்வரும் சோகத்தையும்நீக்கவேண்டினாலும், இயலிசை முதலாகிய கல்வியையறிய வேண்டினாலும், அழகைவேண்டினால், குற்றமற்றகீர்த்தியை வேண்டினாலும், அம்மலையைவலஞ் செய்வார்கள் பெரியோர்கள். எ-று. (கக)

வரந்தரு மருக்க வார மலிவலம் புரிந்தோவெய்யோன்
தெரிந்தமண் டலத்தைக் கீறிச் சிவகதி பதியாய்ச்சேர்வார்
திரந்தருஞ் சோமவாரந் திருமலி வலமாய் வந்தோர்
புரந்தர னெனவேழ் பாரும் புரந்தரன் றன்மை பூண்பார்.

(இ-ள்.) நினைத்தகாரியத்தைச் சித்திக்கச்செய்யும் சிறந்தஆதிவாரத்தில் அத்திருமலையை வலஞ்செய்தவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்திற்கதிபதிகளாகப்போய்ச்சேர்வார்கள் ஸ்திரமாகியசோமவாரத்தில் அத்திருமலைபை வலமாய்வந்தவர்கள் இந்திரன்போல ஏழுலகத்தையு மாண்டுசிவசாரூப்பியமடைவார்கள்.எ-று.

மங்கல தினத்திற் சூழ்வோர் கடனுடன் வறுமைநீங்கிச்
சங்கிலித் தொடரா மேழு பிறப்பையுந் தவிர்ப்பார்புந்திக்
கெங்கணு யகளாச் சூழ்வோ ரிருங்கலி மறைகணுலா
றங்கமுந் தெளிந்து முத்திக் கருகரா யமர ராவார்.

(இ-ள்.) மங்களவாரத்தில்கிரியைவலஞ்செய்வோர்தங்களுக்குண்டாகியகடனையும் தரித்திரத்தையுநீங்கி சங்கிலி விடாமற்றொடர்ந்துவருகிறதுபோல ஏழுபிறப்பையும் நீக்குவார்கள்; புதவாரத்தில் சுவாமியைப் பிரதக்ஷிணஞ் செய்வோர் நாலுவேதங்களும், ஆறுசா

த்திரங்களும் அறுபத்துநாலு கலைகளும் தெரிந்து முத்திக்கு ஒரு ங்கினவராய்த் தேவர்களாவார்கள். எ-று. (உ-ச)

மாவியா முத்திற் செய்ய மணிவரை வலமாய்ச்சூழ்வோர்
மூவரும் புகழத்தேவர் முனிவர்தங் குரவ ராவார்
தாவிலா வெள்ளி வாரந் தனில்வலம் புரிந்தோர்சஞ்சப்
பூவையைப் புணரும்பூவைப் புணருமால் புரத்திற்சேர்வார்.

(இ-ள்.) பெருமை பொருந்திய குருவாரத்திலே செவ்வந்த அரதனங்களையுடைய அம்மலையைவலமாகவந்தவர்கள் திரிமூர்த்திகளும்புகழும்படிதேவர்கள் முனிவர்களுக்கு எசமானராவார்கள்; குறைவில்லாதசுக்கிரவாரத்திலே வலஞ்செய்தவர்கள் தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியைச்சேரும் விட்டுணுபதத்தைச் சேருவார்கள். ()

உதயமே சனிநாட்சூழ்வோர்க் கொன்பது கிரகநண்முய்ப்
பதினொரா மிடத்திற் றூய பலன்களைப் பலியாநிற்கு
மதியணி சிவனி ராவும் வருடம்வந் துதிக்கு நாளு
மதிகமா மதிக மாகு மைப்பசி முதலா மூன்றும்.

(இ-ள்.) சனிவாரஉதயத்தில் பிரதக்ஷிணஞ் செய்வோர்களுக்கு நவக்கிரகங்களும் பதினொன்றுமிடத்திலிருந்த பலனைக் கொடுப்பார்கள்; சந்திராலயைத் தரித்த பரமசிவனுக்குரிய சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பினின்றும் ஐப்பசிகார்த்திகை மார்க்கழி இந்தமூன்று மாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்னபலன்களிலும் அதிகபலன் சித்தியாகும். எ-று. (உ-ஞ)

அயனசங் கிராம மாசிமகத்திலர்த் தோத யத்தில்
வெயிலுறுங் கதிரைப் பாம்ப விழுங்குநாள் விதிபாதத்திற்
பயனுற வலஞ்செய்வோர்க்குப் பலன்களிற் கோடியாகு
மயர்வறத் தினமுஞ் சூழ்வார் பேற்றையா ரறிய வல்லார்.

(இ-ள்.) உத்தராயண புண்ணியகாலத்திலும், தக்ஷிணயணபுண்ணியகாலத்திலும், மாசிமகத்திலும், அர்த்தோதயகாலத்திலும்சூரியகிரணகாலத்திலும், விதிபாத யோகத்திலும், இஷ்டசித்தியை அடையவிரும்பி வலஞ் செய்தவர்களுக்குக் கோடிபங்கதிக மாதப்பலன்கிடைச்சும்; தளர்ச்சியடையாமல் தினந்தோறும்வலஞ்செய்தவர்களுக்குண்டாகும் பலனையாரறிந்து சொல்லவல்லவர். எ-று. (உசு)

காரிகை யவரை யற்றைக் கனவிலும் புணர்ந்திடாம
னீரினின் மூழ்கித் தூய துடுத்துவெண் ணீறு சாத்தி
யாரிட முறையே தான மளித்துத்தா மவைகொள் ளாமற்
பாரிடை நடந்து சூழ்ந்த தேவரைப் பணிந்து போற்றி.

(இ-ள்.) அப்படி அதிக பலனைத்தரும் அருணசலத்தை வலஞ் செய்யும்வித மெப்படி யெனின், பிரதக்ஷிணஞ் செய்யும் அன்றைக்குப் பெண்களைச்சொப்பனத்திலும் நினையாமலும் அவர்களோடுகல வாமலும் நீரில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திரமுடுத்துக் கொண்டும் விபூதிதரித்து அவ்விடத்திலேதானம் கிரமமாகக்கொடுத்துதாம்ஒருவரிடத்திலும்தானம்வாங்காமற் பூமியிலேகாலிலுல்நடந்துகிரியைச்சுற்றியிருக்கின்றதேவர்களைப்பணிந்துவணங்கி. எ-று.

கஞ்சுகம் போர்வை நீத்துக் கவிகையுஞ் செருப்பி நீத்தே
யஞ்சுதல் வெகுளி சோக மக்கணத் தகற்றி வாசி
குஞ்சர முதலா யுள்ள வாகனங் குறுகிடாமல்
விஞ்சிய வடக்கா யுண்டி வழியிடைவெறுப்ப தாக்கி.

(இ-ள்.) அங்கத்தில் தரிக்குஞ் சட்டையும் போர்வையும் நீக்கி குடைபிடித்துக் கொள்ளாமலும் கால்களுக்குச்செருப்புப்போட்டுக்கொள்ளாமலும், பயமுங்கோபமுஞ்சோகமும் ஆகியவிவற்றைநீக்

கிக்குதிரையானை முதலாகிய வாகனங்களிலேறுமலும் வழியில்தாம் பூலம்தரிக்காமற் போசனத்தையும் வெறுத்து. எ-று. (உசு)

செங்கைவீ சாமற் சோரா துகையாற் சிரத்திற்கூப்பி
மங்கையர் பதிதர் நீச ரூறுப்பிலா வடிவு நோக்கா
தங்குரு மடியி ஞைசை செவிப்புகா தரசமாதர்
திங்களோயிரண்டுஞ்சென் றுநடந்திடுஞ் செயல்போற்சென் றது

(இ-ள்.) கைகளை வீசிக்கொண்டு போகாமல் மனச்சோர்வில் லாமல், சந்தோஷத்தோடு சிரத்தின்மேற் கையைவைத்துக்கூப்பிக் கொண்டுமாதரையும் பாவிகளையும் சண்டாளர்களையும் அவயவஈன ரையும்பாராமல் நடக்கிறபோது அடியினுடையசத்தங்காதிற்கேட் காமல் மெள்ள அரசமாதர்கள் பத்துமாதத்துக் கருப்பத்தோடுநடக் கிறதுபோல நடந்தது. எ-று. (உஎ)

இருவினை யகற்று மந்தமலையை யெண்டிசையும் வீழ்ந்து
பரவியங் கதனைச் சூழ்ந்த கடவுளர்ப் பணிந்துபோற்றி
யருவமாய் வலமாஞ் சித்த ரமரரை மனத்தாற் போற்றி
யுருகியங் கவர்மேற்கைகால் படுமெனவொதுங்கிச்சென் றது

(இ-ள்) நல்வினைதீவினைகள் இரண்டையும்நீக்கி சிவசாயுச்சிய த்தையளிக்கவல்ல அக்கினியை எட்டுத்திக்கும்வணங்கி அத்திக்கிலி ருக்கும் தேவர்களையும் வணங்கி உருவந் தெரியாமல் வலஞ்செய்து கொண்டுவருகிறசித்தர்களையும் தேவர்களையும் மனத்தினுல்வந்தன ஞ்செய்து, அவர்கள்மேற்தங்கள்கைகால்கள்படுமென்று பயந்துவழி யினின்றும் ஒதுங்கிச்சென்று. எ-று. (உஅ)

வானமார்மலையைப்பொன்னிற் படிகநன்மணியாவெண்ணி
மோனமாய் நடக்கவல்ல திறைபுகழ் மொழியைக்கேட்க
வானவிச் செயலினுலே வலஞ்செய்தா லயத்தி னண்ணி
யேனமுன்னறியான்றனைப் பணிந்துதன்னிருக்கையெய்தி.

(இ-ள்.) ஆகாயமட்டு மளாவிய அம்மலையைப் பொன்போலவு மஸ்படிகம்போலவும், இரத்தினம்போலவும் நினைந்து மௌனமாய் நடக்கவேண்டியது; அல்லதுசுவாமிதுதிகளைக்கேட்கவேண்டியது இப்படிப்பட்ட தன்மையாக வலம்வந்து கோயிலுட்சென்று விட்டு ணுவாகிய பன்றியானது முன்னடியைத்தேடியறியாதசுவாமியின் பாதங்களை வணங்கித் தாங்களிருக்கு மிடத்துக்கு வந்து. எ-று. ()

குன்றெனுங் குணத்தார் சூழ
விருந்துதீங் கனிபால் கொள்க
வன்றியே புலவு நீத்த
வடிநிலை யுண்க தீதி
னின்றவத் தலத்தோர் செய்யு
நிலைமையீ தெதிரா ரத்திற்
சென்றவர் வருத்த மாயெவ்
வகைவலஞ் செயினுஞ் சீராம்.

(இ-ள்.) மலைபோலுயர்ந்த குணத்தை யுடையவராகிய சிவபத் தர்கள்சூழ இருந்துமதுரமாகியபழங்களும் பாலுஞ்சாப்பிடக்கடவர் அப்படியில்லாவிட்டால் மாமிசபதார்த்தமில்லாமல்சுத்தமாகியஅன் னத்தைப்புசிக்கக்கடவர், இப்படிப்பட்ட செய்கைகளை நீதிபொருந் தியஅத்தலத்தி லிருக்கிறவர்கள் செய்யவேண்டியது;அதிகாரத்தி ல்நின்றும்வந்தவர்கள் தங்களுடையவருத்தத்தில் எவ்விதமாகவலஞ் செய்தாலும் நன்மையாம். எ-று. (கூ)

தண்டித லிலாத ஞானச்
சனகவிச் சயிலஞ் சூழ
வெண்டிசை புரப்போர் தம்பே
ரினிற்சிவ வுருவங் கண்டார்

வண்டிசை பெருகு மோ தி
மலைமகண் மலையின் கீழ்பாற்
கண்டனள் பவள வெற்பிற்
கயிலைவெற் பிறைவன் காட்சி.

(இ-ள்.) கெடுதலில்லாதஞானத்தையுடையசனகரிஷியே! இம் மலையினைட்டுத்திக்கிலும்சூழ்ந்துவிளங்கும்படி திக்குப்பாலகர் எட் டுப்பேரும்தங்கள்பேரிலுலே இலிங்கங்களைத்தாபித்துப்பூசித்திருக் கிறார்கள்; வண்டுகளின் ஒலிபொருந்திய கூந்தலையுடைய பார்வதரா ஜபுத்திரியாகிய பார்வதியாளவள். கிரியின்கிழக்குத்திக்கில் பவளம லேபால் ஒரு இலிங்கத்தைத்தாபித்துப் பூசித்தாள். எ-று. (கூக)

மணிவரை பரியிற் சூழ்ந்த
வச்சிராங் கதனப் போது
புணர்பவக் தவிர்க்கத் தென்பாற்
புழுகணி யிறையைக் கண்டான்
றணிவிலா வினைக ணீக்கத்
தமியனேன் மலையின் மேற்பா
லணியண்ணுமலையா னென்னு
மருவுரு விறையைக் கண்டேன்.

(இ-ள்.) நவமத்தினங்கள் பிரகாசித்துக்கொண்டுவிளங்கும்ஸ்ரீ அருணசலத்தினிடத்தில் குதிரையிலேறிக்கொண்டுவந்த வச்சிரா ங்கதபாண்டியன், அக்காலத்தில் தன்னையடைந்தபாவத்தைத்தீர்க்க த்தென்திக்கில்புழுகணியிறைவரென்று ஒருலிங்கத்தைத்தாபித்துப் பூசித்தான்; தணியாதபாவங்களை நீக்கிக்கொள்ள நானும் (பிரமன்) அம்மலையின்மேற்குத்திக்கில் அணியண்ணுமலையானென்கிற பேரி ட்டு ஓரிலிங்கத்தை தாபித்துப் பூசைசெய்தேன். எ-று. (கூஉ)

வாலவெங் கதிர்மேற் சோண
வரைகடந் தொருநாட் பாய்ந்து
சாலுமத் துயரந் தீரத்
தனதுபே ரிறையைக் கண்டா
னுலய முழுதுந் தேவ
ராவநாட் டுறைவோர் சித்தர்
சீலமா முனிவர் கண்ட
சிவனுருத் தெரிக்கொ ணாதே.

(இ-ள்.) ஒளிபொருந்திய கிரணங்களையுடைய சூரியன் மூற்கா லத்தில் அருணசலத்தைத்தாண்டிப்போன தினால்வந்த மிகவும்பெரி தாகிய பாவந்தீரத்தன்பேரிட்டு ஒருலிங்கத்தைதாபித்துப் பூசைசெ ய்தான்; அஃதல்லாமல் அம்மலையிலிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள், நாகலோத்தார்கள், சித்தர்கள் முனிவர்கள் இவர்களா ல்தாபித்துப் பூசைசெய்யப்பட்ட சிவலிங்கங்களே இவ்வளவென்று சொல்லக்கூடாது. எ-று. (நூ)

நசனுர் வடிவமான லிலிங்க
மவ் வெல்லை சூழ
யோசனை மூன்றுஞ் சேர
நெருங்கும்வா னுடுக்கள் போலப்
பேசுவ தெவனே வந்தத்
தலத்தினிற் பெருமை வேலன்
றேசுறுங் கவுரி யாணை
முகத்தனுக் தெரிக்கொ ணாதே.

(இ-ள்.) பரமசிவரூபமான அநேக இலிங்கங்கள் அவ்வெல்லையை ச்சுற்றி மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்தில்விளங்குகிறநக்ஷத்திரங்க

ள்போல நெருங்கியிருக்கும்; அப்படியிருக்கிறபோது அத்தலத்தின் பெருமையைச்சுப்பிரமணியர், பார்வதி, விநாயகர், இவர்களாலேயே சொல்லக்கூடாமலிருக்கிறபோது என்னுற்சொல்லக்கூடுமோ எ-று

தாதவிழ் மலரோ னிவ்வா
றுரைத்தலுஞ் சனகன் போற்றி
வேதனே பிறவி தீர்க்கும்
விமலனே விமல னென
வாதியைப் பழித்தோர் செம்பொன்
கவர்ந்தபே ரடையுந் தீங்கும்
பாதகந் தவிரு மாறும்
பகரெனப் பதுமன் கூறும்.

(இ.ள்) தாதுவிரிந்த தாமரைமலரிலிருக்கின்றபிரமன் இப்படிச்சொன்னமாத்திரத்தில், ஜனகரிஷிவணங்கி வேதமுழுதும் கற்றுணர்ந்தவரே! பிறப்பைநீக்கும் பரிசுத்தரே! மலரிதரான சிவனைப் பழித்தவர்களுக்கு வந்தபாவமும்; அவர்தனத்தை அபகரித்தவர்களடையும்பாவமும், அவைகள்நீங்கும்வகையும்சொல்லுமென்று கேட்கப் பிரமதேவர்சொல்லத்தொடங்கினர். எ-று. (நடு)

ஒன்பதாவது,

திருமலை வலம்புரிச் சருக்கம்

மு ற் றி ற் று.

ஆக திருவிருத்தம்-நிஅடு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதித்தச் சருக்க வசனம்.

சிவசொரூபமாகிய இத்தமலையின்உச்சிவழியின் எல்லையாகச்சூரியன்முன்பு தன்தேரைஉடைத்தியபோதுமலைவெடித்துஅதிலிருந்துவெப்பங்கொண்டுபுகைத்துவர, அதனால் அவனுடைபசிதர் எரித்துபோய்குதிரைகள்எழும்காரிந்துபோய்சூரியன்மதிகெட்டுப்போனான் அப்போதுபிர்மாவினுடைய அனுக்கிரகத்தினால் அவனுக்குப் புத்திவந்து அருணசலத்தைவலஞ்செய்துக்கொண்டுவந்தான். உடனே பரமசிவன் ரிஷபவாகனரூடராய் அவனுக்குத்தரிசனங்கொடுத்துக்கயிலாயத்திற்கு எழுந்தருளினார் அதுமுதல் சூரியன் அத்தமலையின் உச்சிபின்வழியாகப்போகாமல் அதைவலஞ்செய்துக்கொண்டுபோகிறான்.

ஆதித்தச் சருக்க வசனம்.

முற்றிற்று.



13. ஆதித்தபகவான் சோதரூபமுள்ள மலயத்வஜசிகியில் தன் இரதத்தைநடத்த, அச் சோதிதாக்கி இரதமெரிந்தபின்பு, ஆதித்தபகவான் மலையைவலம்வர, பரமசிவன் இடபவாகனரூடராய்த் தோன்றி காக்ஷிகொடுத்த மகாத்மியம்.



சிவமயம்.

பத்தாவது

ஆதித்தச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

அற்ற மற்ற முனிவர் சூழ மருண பூதரத்துடன்
மற்ற வெற்பு மொக்குமென்றி கழ்ந்துரைத்த மனிதர்வாய்
புற் றெழுந்து புகை யெழுந்து புழுநெ ளிந்துபுலவுநீர்
சுற்றெ ழுந்து பெருகு மண்டு சோரி மாரி சொரியுமே.

(இ-ள்.) குற்றமற்றநீங்கிய முனிவர்கள்சூழ்ந்துபிரதக்ஷிணம்வரும் அருணசலமென்னு மலையோடு மற்ற மலைகளையு மொக்குமென்று நிந்தைசொன்ன மனிதர்வாயில் புற்றுண்டாகிப் புகைந்துபுழுக்கள் நெளிந்து புலால்நாற்றம்நாறுகின்ற நீர் தேகமுழுவதுங்கசிந்துமிக வும் இரத்தமாரிசொரியும் எ-று. (க)

அந்த மைந்தர் தம்மை யெற்றி யந்த கன்ற னேவலால்
வந்த தூதர் கெச்சி லிட்டரைத்த ரைத் தெடுப்பர்வாய்
வெந்த வாளி னுலை நூப்ப ரெந்தை சோண வெற்பையோ
நிந்தை செய்வை யென்றடித்து நெய்யில் வேகவைப்பரே.

(இ-ள்.) அருணைசலத்தை நிந்தித்த அம்மனிதர்களைப் பின்பு எமனுடைய எவலாய்வந்த தூதர்கள்தொடர்ந்து செக்கில் அநேகத ரம்போட்டு அரைத்துஅரைத்துஎடுப்பார்கள்; அவர்கள்வாய்களெ ருப்பிற்போட்டுக்காய்ச்சிய கூர்வாளினு லறுப்பார்கள்; எங்களாண் டவன் எழுந்தருளியிருக்கும் மலையையோ நிந்தைசெய்வா யென்று அடித்து நெய்யிலே வேகப்போடுவார்கள். எ-று. (உ)

பஞ்செ முத்து வைத்தரக்கு ருக்கி வாய் பரப்பியே
நஞ்சி னைப்பு கட்டி வெய்ய நரகி லேகி டத்துவார்
அஞ்சி யந்த நரகு தானு மருவ ருத்த லத்திடும்
நெஞ்ச கத்தி லெண்ணி னுர்த மக்கு மீது நிகழுமே.

(இ-ள்.) பின்னும் அவ்வருணைசலத்தை நிந்தித்தவர்களை எமனு தர்கள் பஞ்சுபஞ்சாக அடித்துவைத்து அரக்கையுருக்கிஅரக்கைவா யிலேலிட்டு நஞ்சைக்குடிப்பித்துத் தீமையாகியநரகிலே தள்ளுவார் கள்; அந்நரகமோவென்றால் பயப்பட்டு இவர்களைத் தாங்குதற் குச்சகிக்காமல்மிகவும்வருந்தும்; இப்படிப்பட்டதுன்பம் மனத்தில் இம்மலையைக் குறைவாக வெண்ணினவர்களுக்கு உண்டாம். எ-று.

குருக்க டந்தை தாய ராவி கொன்ற தீயர் முதலினு
நிருக்கும் வெய்ய நரகின் மீதி லிட்ட போதி லவர்களும்
பெருக்க நொந்து பாவி யென்று பேசு வார்க டம்முடன்
சரிக்கொ ணுது தள்ளு மென்று தங்கள் கண் புதைப்பரே

(இ-ள்.) ஆசிரியர்களையும், தாய்தந்தையரையும், வருத்திப்பிரா ணனைவாங்கிய தீயபாவிகள் முதலானவர்கள் வாசஞ்செய்யுங் கொ டியநரகத்தில்இவ்வருணைசலத்தைநிந்தித்தவர்களைப்போட்டபோது இவர்களைமுன்னிருக்கும்பாவிகள்மிகவும்மனம்வருத்தப்பட்டுச்சுவா மியைநிந்தித்தபடியினால்; நம்மிலும்மகாபாவிகளென்றுசொல்லிநம் மோடிவர்கள்சரியாயிருக்கக்கூடாதுதள்ளிவிடுமென்றுதாக்கள்கண் களைப் பொத்திக்கொள்ளுவார்கள். எ-று (ஊ)

என்று றைத்து நானும் வையமேழு முண்ட மாலுமா
யன்று மின்று மளவி டாதவருண் பூதரத்தையோர்

குன்றமென் றிகழ்ந்துசன் றுகுன் றிமெய் குறைந்துபுன்
கன்றிஞ ணெருத்தனென் றுகதைவிளம்ப லாயினன்.

(இ-ள்.) பிரமன் இப்படியென்று சனகமகாரிஷிக்குச்சொல்லி ப்பின்னுஞ் சொல்லுவார்; நானும் எழுலகத்தையுமுண்ட மகாவிஷ் ணுவுஞ்சேர்ந்து அன்றுமுதலின்றையவரையிலும் அளவிடப்படாத மகிமையுள்ள அருணசலத்தை, ஒருவன்சாதாரணமான ஒருமலையென் றிகழ்ந்துபோய் அதனுற்குன்றுதலடைந்து தேகங்குறைந்து துக் கப்பட்டான் முற்காலத்தில் என்று அக்கதையை சொல்லதொட ங்கினர். எ-று. (கூ)

உலவுகின்ற சோதியாவு ருள்ளில் வைத்திவ் வுலகிலோர்
மலையதாகி நின்றதெய்வ மலையைமற்ற மலைகள்போல்
அழகுபெற்ற விரவியெண்ணி யாழியொன்று வாசியே
ழிலகுதேரம் மலையினுச்சி யெல்லையாய் நடத்தினன்.

(இ-ள்.) நான்குதிக்கிலுஞ்சென்றுவியாபித்து விளங்குப்பிரகா சங்களையெல்லாம் தனக்குளடக்கி வைத்துக்கொண்டு இப்பூமியில் ஒப்பற்றமலையுருவங்கொண்ட தெய்வீகமாகிய அருணசலத்தைமற்ற மலைகள்போலநினைத்து ஒருசக்கரமும்எழுகுதிரையும்பூண்டதேரை அவ்வருணசலத்தினுச்சிவழியின் எல்லையாகநடத்தினன்ஆயிரங்கி ரணங்களையுடைய சூரியன். எ-று. (சு)

முகுந்தர் தேடுமந்த வெற்பின்முடியின்மேவு முன்னமே
மிகுந்தசோதியுள்ளினும் வெடித்தெழுந்துவெம்மையாய்ப்
புகைந்து செல்லவீர்த மூவர்புரமெ னப்பொரிந்ததே
யுகைந்த பச்சைவாசி யோவுலர்ந்த வாசியானதே.

(இ-ள்.) சூரியன்விட்டெணுவினுல்தேடப்பட்ட அம்மலையின்உச் சியில்போவதற்குமுன்னே, மிகுந்தபிரகாசமான மலைவெடித்து அ வ்வுள்ளிடத்தில்நின்று எழுந்துவெப்பங்கொண்டுபுகைந்துவரத்தே -ரானது திரிபுரம் பரமசிவன் நகைபாகிய நெருப்பிலே பொரிந்தது போலப்பொரிந்துபோய்விட்டது, நடத்தப்பட்டகுதிரைகளோசிவ னில்லாத குதிரைகளாயின. எ-று. (எ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குதிரையுங் கரிகளாகிக் கொடியதே ரலகைத் தேராய்க்
கதிரையுந் தனதுபாகன் காலென விழுந்தபாணு
மதியழிந் திருந்தானந்த மலைவலஞ் செய்துஞானக்
கதிபெறச் செல்வேன் கண்டுகதிரவற் கிவையுரைத்தேன்.

(இ-ள்.) அம்மலையினிடத்தில்நின் றெழுந்த பரஞ்சோதியின்கிரணவெப்பத்தினால்: குதிரைகள்ஏழும் கரிகளாகப்போய்க்கொடியையுடையதேர் கானல்போலத்தோன்றியுமுருவில்லாததாய்த் தன்னுடையபாகன் காலையிழந்ததுபோலக் கிரணகளெல்லாவற்றையும் தானிழந்துசூரியன்மதிமயங்கியிருந்தான், அந்தமலையைவலஞ்செய்துகொண்டுமேலாகியகதியையடையும்படியாகப்போகின்றகான்பார்த்து அச்சூரியனுக்கு இவ்வார்த்தைகளைச்சொன்னேன் எ-று. ()

ஐயனே மலையென் றெண்ணி
யகந்தையா லிகழ்ந்து வீழ்ந்த
கையனே யொருகா லத்துங்
கதியிலை யுனக்கென் றுலுஞ்
செய்யுமோர் தொழிலி னாலே
தீர்க்கலாந் தெளிவு ளார்க்கு
மெய்யனே யருணை யானை
வலஞ்செயன் றுரைத்து மீண்டேன்.

(இ-ள்.) அருணசலேசுவரரைஒருமலையென்றுநினைத்துஅகங்காரத்தினால்நிந்தித்து கீழேவிழுந்து கிடக்கின்ற ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனே? உனக்குஎவ்வகையிலும் ஒருகாலத்தும்நற்கதிகிடைக்காது, அப்படியிருந்தாலும்ஒருதொழிலினால்கிடைக்கலாம் அதுயாதெனில்தெளிவுள்ளவருக்குமெய்ம்மையாய்விளங்கும் அருணசலத்தைவலஞ்செய்து கொண்டுவாவென்றுசொல்லித் திரும்பினேனென்றார் பிரமதேவா. எ-று. (கூ)

போதித்த படியே சென்று
பொன்மலை வலமாய் முன்னஞ்

சாதித்த வருக்கன் சோணை
சலத்தினை வலமாய் வந்தான்
வாதிக்கு மழுவினனு
மழலிடை மீதிற்கோடி
யாதித்த ரெனவே தோன்றி
யாதித்தற் கருளிப்போனான்.

(இ-ள்.) பிரமன் அனுக்கிரகஞ் செய்தபடியே விரைந்துசென்று மகாமேருகிரியை மூன்னேவலாக வருகின்ற சூரியன் அருணசலத்தைவலஞ்செய்து கொண்டுவந்தான்; அச்சூரியனுக் கெதிரேவாதித்துச்சத்துருக்களைக் கொல்லுகின்ற மழுவையேந்தியபரமசிவன் இளமையாகிய ரிஷபத்தின்மேல் கோடிசூரியர் ஏககாலத்தில் உதயமானாற்போலத்தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்குஎழுந்தருளினார். எ-று. (கo)

பன்னிரு மாதந் தோறும்
பரிதிமுற் பயத்தினுலே
வன்னியின் வடிவதான
மலையினை வலமாய்ச் செல்வான்
சென்னியி னெல்லை செல்லா
னிடப்புறஞ் செல்லான் றன்றேர்
அந்நிலை வரும்போ தெத்தி
யலர்சொரிந் தகலு மென்றான்.

(இ-ள்.) சித்திரைமுதல் பங்குனியீருகச் சொல்லப்பட்ட பன்னிரண்டுமாதமும் சூரியன்முன்னே தனக்குண்டான பயத்தினுல்அக்கினிவடிவமாகிய மலையைவலஞ்செய்து கொண்டுபோவான், அம்மலையினுச்சியின் மேலும்போகான், இடப்புறமாகவும்போகான், தன்னுடையரதம்அம்மலைக்கு சமீபத்தில்வரும்போதுதோத்திரஞ்செய்துபுட்பமாரிபொழிந்து செல்வானென்று சொன்னர்பிரமதேவர்.

பத்தாவது
ஆதித்தச் சருக்கம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-குகூசு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதிஞென்றுவது

பிரதத்தராஜன் சருக்கம்.

மூற்காலத்தில் ஒருநாள் காசிதேசத்தரசனுகிய பிரதத்தன் என் பவன்தன்னுடைய மந்திரிகளோடும் சேனைகளோடும் யாத்திரையா கப்பிரயாணப்பட்டுச் சோழநாட்டுக்குப் போகும்படி திருவண்ணும லைக்குவந்த சுவாமியைத் தரிசிப்பதற்காகக் கோயிலுக்குப்போய்வ ந்தனஞ்செய்யும்போது அவ்விடத்தில் நாட்டியஞ் செய்திருந்தசில் பெண்களில் ஒருத்தியைப்பார்த்து ஆசைகொண்டு இந்தப்பெண் ணைத்தன்னுடன் கொண்டுபோய் விடுவதற்குநினைத்தான் அந்நினை ப்பு அவன்கொள்ளுவதற்கு முன்னமேதானே அவன்முகமான துகு ரங்குமுகமாய் விட்டதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள். பின்பு அவ்வரசன்மிகுந்தவருத்தப்பட்டுத் தன்னுடையவாகனங்களெல்லா வற்றையும் தன்னோடுவந்த பெண்களையும் ஆலயத்திற்குக் காணிக் கையாகக்கொடுத்துவிட்டு சுவாமிக்கு அருமையான பூசைசெய்தா ன்அப்பொழுது பரமசிவத்தின் கிருபையால்குரங்குமுகம்போய் இ யல்பான முகத்தையடைந்து தன்நாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அருணைவா ழிறைவன் றிரவிய மனுமட்
டாயினுங் கரந்தபே ருடனே
மரணமாய் நமனுட் டழலிலை குளிப்பர்
வச்சிர வுலக்கையான் மறிவ
ரிருணிறை நரகமிருபத்தெண் கோடி
யிடத்திலு மடைவிலே யிருப்பர்
தரணியிற் புழுவாய்ப் பிறப்பர்கள் களவு
தனக்கியைந் தவருமத் தகையர்.



14. காசிகரையாண்டபிரதத்தராஜன் இவ்வண்ணமலைசந்தகுவந்துதரிசனஞ் செய்யுங்காலத்தில் ஓர்தாசியைஇச்சித்தபாவத்தால்குரங்குமுகமாகி பிறகு சிலகாணிக்கைகள் கொடுத்துப் பூசித்துப் பழையவடிவமடைந்த மகாத்மியம்.

(இ-ள்.) அருணாசலத்தில் வீற்றிருந்தருளும் தலைவனுகியசிவ பெருமானுடைய திரவியத்தில் அணுவளவேனும் திருடினவர்கள் உடனேமரணமடைந்து எமலோகத்திற்குப்போய் அக்கினிக்குழியில்விழுந் தவஸ்தைப்படுவார்கள், பிரமஹத்தியினுலடிக்கப்பட்டு வருந்துவார்கள், இருள்நிறைந்த இருபத்தெட்டுகோடி நகரங்களிலும் அடைவாக விழுந்துகிடப்பார்கள், மறுபடியும் பூமியில்வந்துபுழுவாய்ப்பிறப்பார்கள். அத்திருட்டுக் குடன்பட்டிருந்தவர்களும் அப்படிப்பட்டதன்பத்தை அடைவார்கள். எ-று. (க)

ஓங்கிய தரையு ளிசைத்தபொன் னெதிரே
யுற்றபே ருடலையு மொறுக்குந்
தேங்கிய கருணை யருணைநா யகர்பொற்
செய்கையைப் படியினிற் கரந்து
வாங்கிய பேரைக் கிளையுடன் சிதைக்கு
மலையினுங் கடலினு மொளித்து
நீங்கிய பொழுதுந் தொடர்ந்திடும் விடுமோ
நிழலெனத் தொடருமெந் நிலத்தும்.

(இ-ள்.) திருவடி விசாலமாகிய பூமியினுள்ஒளித்து வைக்கப்பட்டபொன்னை அவ்விடத்தின்மேல் வந்தவருடையதேகத்தையுங்கண்டிடிக்கும்,அப்படிசெய்வதுமிருந்தகிருபையுடைய அருணுசலேசுரருடைய திரவியத்தின் செய்தியாம், அப்பூமியில் ஒளித்துவைத்துஎடுத்துக்கொண்டவரையோ வென்றுல் அவர்களுறவோடுகெடுக்கும்மலையிலுங் கடலிலுமொளித்துக் கொண்டபொழுதுந்தொடர்ந்துவருத்தும், விடமாட்டாது, எவ்விடத்திற்போனலும் நிழலைப் போலத்தொடரும். எ-று. (உ)

கடிக்கலாஞ் சிலையை விழுங்கலா நெருப்பைக்
கடிவிடங் குழைத்திழைத் தெடுத்துக்
குடிக்கலா மிரும்பை யருந்தலாங் கடும்பாற்
கொள்ளலா மருந்தின குணத்தால்

முடிக்கலாம் பகையை யருணை நாயகர்பொன்
விழுங்கினுல் மிடற்றில் பிடிக்கும்
உடற்குளே கனலும் புகையுமவ் வளவேவா
உயிரையு முளத்தையு மொறுக்கும்.

(இ ள்.) பின்னும்பிரமன் சொல்வான், கல்லிக்கடிக்கலாம்கெ ருப்பையெடுத்து விழுங்கிவிடலாம், விஷத்தோடு கொல்லும்படி யானவஸ்துக்களைச் சேர்த்துக் குழைத்தெடுத்துச்சாப்பிடலாம். இ ரும்பைப்புசிக்கலாம்; கள்ளிர்ப்பால்முதலியவற்றையுங் குடிக்கலாம் இவைகள்உபத்திரவஞ் செய்யவொட்டாமல் அவைகளாலே வரும் கெடுதிகளை நல்லமருந்துகளால் நிவர்த்திபண்ணிக் கொள்ளலாம், அருணாசலேசர்திரவியத்தைச் சாப்பிட்டவுடனே தொண்டையைப் பிடித்துக்கொள்ளும், தேகத்துக்குள்ளே நெருப்பாகச்சுடும்,புகையு ண்டாக்கும் அவ்வளவுதான் செய்யுமோவென்றால் அவர்களுயிரை யுங்கொன்று உள்ளத்தையுங் கெடுக்கும். எ-று. (கூ)

முக்கணன் பொருளைக் கவர்ந்தபே ரிருக்க
முயன்றபேர் நினைத்தபேர் முதலா
யக்கணத் தழிவ ரவர்களு மிருக்க
வடியவர் பொருட்கவர்ந் தலைக்கத்
தக்கது நினைத்தார் கெடுவரென் றுரைத்துச்
சத்தியம் பலபல சாற்றிச்
செக்கருங் கருகவொளிவிடு மணிப்பூட்
டிசைமுக னெருகதை செப்பும்.

(இ-ள்.) மூன்றுகண்களையுடைய அருணாசலேசுரரது திரவிய த்தைத்திருடினவர்கள் படுகின்றதுன்ப மிப்படிப்பட்டது, அஃதிரு க்கட்டும், அப்பொருளைத் திருடுகிறதற்குமுயற்சிசெய்தவர்கள் திரு டநினைத்தவர்கள், இவர்களைத்தக்கணத்திலே யழிவார்கள், அவர்களு மிருக்கட்டும்,சிவபத்தர்களுடையபொருளைத்திருடியவர்களைத்துன்

பப்படுத்த நினைத்தபேர்களும் கெடுவார்களென்று பலபல சத்தியத் தோடுஞ் சொல்லிச் செவ்வானமுங்கருகும்படிஒளிவிடுகின்ற இரத் தினபரணங்களேத்தரித்த பிரமதேவர் ஒருகதைசொல்லத் தொடங் கினர். எ-று. (ச)

மூன்னமே யொருநாள் வடதிசைக் கிறைவன்
முழுமணிக் கங்கைநீர்த் துறைவன்
இந்நிலத் திழிந்த விந்திர னனையா
ணெண்டகை முருகவே ணிகர்வான்
மன்னவர் நிரைந்த மகுடகோ டிகளின்
வயிரநா யகங்காளாற் றேய்ந்த
பொன்னவிர் கழலான் றருமமுங் கழலான்
புகழ்ப்பெயர் பிரதத்த னென்பான்

(இ-ள்.) பிரமன்சொல்லுவான்முற்காலத்தில்ஒருநாள்வடதேச த்துக்கு அரசனாயிருக்கின்றவன்வீலையுயர்ந்தமுத்துகளுக் கிருப்பிட மாகியகங்காநதித்துறையை யுடையவன், தெய்வலோகத்தினின்று பூமியிலிறங்கிய தேவேந்திரன்போன்றவன், ஆண்மைக்குணத்தில் சுப்பிரமணியருக்குச் சமானமானவன், அரசர்கள் பணியும்போது அவர்களால் நிரைநிரையாகத் தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில் இ ழைக்கப்பட்ட உயர்ந்தவயிரங்களாற் றேய்வுற்றபொன்னுற்செய்யப் பட்ட வீரகண்டையைத்தரித்தவன், தருமமென்பதை இடைவிடா துசெய்கிறவன், கீர்த்திபொருந்திய பிரதத்த மகாராஜனென்னும் பெயரை யுடையவன். எ-று. (டு)

காலனேயர் விழியார் முகமென விளங்கிக்
களங்குடைத் தொழுக்கிய மதிபோல்
நீலமா மணிக்காம் பியைந்தவெண் கவிகை
நெடுநிலப் பரப்பெலா நிகழ்த்தச்

சாலவே பணியா வரசர்க ளிவன்பொற்
சரணமே படிந்துயர் பெறுமென்
றேலவே யழைக்குந் தருமதே வதைபோ
லிரண்டுசா மறைகளார்த்திடவே.

(இ-ள்.) எமன்போலக் கொடுமைசெய்கின்ற கண்களையுடைய பெண்கள் முகம்போல் விளங்கிக் களங்கத்தையுடைத்து ஒழுகவிட்டசந்திரன்போலநீலரத்தினமிழைத்திருக்கின்றகாம்பையுடையவெள்ளக்குடைநீண்ட சந்திரிகையைப் பூமியின்பரப்பெல்லாம் நிகழ்த்தவும், மிகுந்தமரியாதையோடு பணியாத பகைவர்களாகிய அரசர்களைப்பார்த்து இந்தஅரசனுடைய அழகியபாதங்களை வணங்கி உங்களுயிரை இறக்காமல் பெற்றுக்கொள்ளுங்களென்றுபொருந்தஅழைக்குந் தருமதேவதையைப்போல இரண்டுசாமரங்கள்வீசவும். எ-று.

வருணமண் டலத்திற் புரவிபோற் கிளர்ந்த
மரகதம் குரகதம் வயங்க
அருணமண் டலத்தை யளவிடுங் கொடித்தே
ரடவிகள் புடவியை யடைப்பக்
கிரணசிந் துரத்துப் புகர்முக மருப்பிற்
கிம்புரிக் கரிதிசை கிளரத்
தரணிபர் நடுங்க மந்திரி கணத்தோ
டெழுந்தனன் றண்டையாத் திரையே.

(இ-ள்.) வருணமண்டலத்தில்விளங்கும் குதிரைகள்போல்உயர்வாகிய மரகதநிறத்தையுடைய குதிரைகள் பிரகாசிக்கவும்சூரியமண்டலத்தையளாவியகொடிகள்கட்டிய தேர்க்காடுகள் பூமியையடைக்கவும், கிரணம்பொருந்தியசிந்துரந்தீட்டியபுள்ளிகளையுடைய முகத்தையும் பூண்கட்டியதந்தங்களையுடைய யானைகள்திசைகள்தோறும் பிரகாசிக்கவும், பகைமன்னர்பயப்படமந்திரிகூட்டத்தோடுஞ்சேனைகளோடும்யாத்திரையாசப்பிரயாணப்பட்டான் பிரதத்தமகாராஜன்.

T. 584

அங்கர்புற் றேற யவனர்வெற் படைய
வவந்தியர் வில்லிஞன் கௌவச்
சங்கிலித் தொடக்காய் மற்றமண் டலிகர்
தம்மிறை தாங்களே சுமக்கச்
சிங்களே றெனவே சோழநா டணைவான்
றிருநதி கடந்துதென் னருணைக்
கங்கைவாழ் சடையான் கோயிலிற் புகுந்தான்
கங்கையும் காசியும் புரப்பான்.

(இ-ள்.) இப்பிரதத்தமகாராசன் பிரயாணப்பட்டபோது, அங்கதேசத்தரசர் பயந்து புற்றிலேறிக்கொள்ளவும், யவனதேசத்து அரசர்கள் மலையிலொளித்துக்கொள்ளவும், அவந்திதேசத்தரசர் வில்லிலிருக்கின்றநாணியைக் கௌவிக்கொள்ளவும், மற்றதேசத்து அரசர்கள் சங்கிலிபோலத்தொடர்ந்துநின்று தாங்கள்கட்டவேண்டிய கப்பங்களைத்தாங்களே சுமந்துவரவும், ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்குப்போகும்படிபுறப்பட்டுத்திருநதியைத்தாண்டி அழகியஅருணாசலத்தலத்துக்குவந்து கங்கையைத்தரித்தசடையையுடைய பரமசிவன்கோயிலிற்புகுந்தான்; கங்கைநதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற பிரதத்த மகாராசன். எ-று. (அ)

அரும்பவிழ மலர்கொண் டருச்சனை புரிய
வருணைநா யகர்திருக் கோயில்
விரும்பியுட் புகுந்து பணியும்மவ் விடத்தில்
விடத்தினுங் கொடியகூர் விழியாள்
இரும்பையு முருக்கு மிசையினு ளொருத்தி
யிலக்கிழை யாருட னிறைபால்
கரும்பெனு மொழியாற் பாடுதல் கேட்டான்
கண்டனன் விளைத்தவேள் கரும்பை.

(இ-ள்.) காசிதேசத்தரசனாகிய பிரதத்தமகாராசன் அரும்புகள் மலர்ந்தபுட்பங்களைக்கொண்டு அருச்சனைப்பண்ணுகிறதற்காக அருணாசலேசர்வீற்றிருக்கும்திருக்கோயிலுள் பத்தியோடுபோய்வந்தனஞ்செய்யும்போது; அவ்விடத்தில் விஷத்தினுங் கொடுமைசெய்கின்றகூரியகண்களையுடையவளும், இரும்பும்உருகும்படிசெய்யும்சங்கீதவித்தையையுடையவளுமாகிய ஒருதாசிப்பெண்பிராகாசிக்கின்றஆபரணங்களைத்தரித்தசிலபெண்களோடு நின்றுசுவைநிறைந்தபாலும் கரும்பினி ரசமும்போன்ற மொழியினால் பாடுவதைக் கேட்டான், அக்கணத்தில்தான்மன்மதன்வளைத்த கருப்புவில்லையுங் கண்டான்.

அன்னமோ கிளியோ வமிர்தமோ திருவோ
வமிர்தமன் றமரருக் களித்த
வன்னமோ கினியோ விரதியோ பிரமன்
மனத்தினல் வகுத்தமே னகையோ
என்னமோ கமதாய்த் தன்துகாட்டினிற்கொண்
டேகுவா னினைந்தன னதற்கு
முன்னமே குரங்கு முகமதா யிருந்தான்
முறுவலா யினதெவர் முகமும்.

(இ-ள்.) காசிதேசத்துப் பிரதத்தமகாராஜன் அத்தாசிப் பெண்ணைப்பார்த்துச்சொல்லுவான்; இவள்அன்னமோ!கிளியோ!தேவாமிர்தமோ! இலட்சுமியோ!அசுரரைக்கொன்று அமிர்தத்தைமுற்காலத்தில்தேவருக்குக்கொடுத்த அழகாகியமோகினியோ! இரதிதேவியோ! பிரமன்மனத்தினல் சிருட்டித்தமேனகையோ! என்றுநினைத்தூமோகத்தோடு தன்னுடையதேசத்துக்கு அப்பெண்ணைக்கொண்டு போவதற்குநினைத்தான், அந்நினைப்பு உண்டாகுமுன்னந்தானே குரங்குமுகத்தையுடையவனாயிருந்தான்; அதைக்கண்டு எல்லாருடைய முகத்திலும் நகைப்புண்டாயிற்று. எ-று. (கூ)

மந்திரிக் கிழவ ராசனை வினவி
மன்னவா நினைத்தவா றதனுல்
வந்தவித் துயரந் தவிர்ந்திட மலைமேன்
மருந்தினைப் பணியென வவனுஞ்
சிந்துரக் குவடுங் கவனவாம் பரியுஞ்
செழுமணிச் சிவிகையுந் தேரும்
சந்தன மணியுந் தனத்தினுர் பலருந்
தமனியக் கோயின்முன் விடுத்தான்.

(இ-ள். மந்திரிமார்கள் பிரதத்தமகாராசனைப்பார்த்து குரங்கு முகம் வந்ததற்குக்காரணம்கேட்டறிந்துகொண்டு, அரசனே? நீமையாகிய உமதுதினைப்பிஞ்ஞல் அடைந்த இத்துன்பம் நீங்கும்படி மலை மேல்மருந்தாகிய அருஞ்சஞ்சீவரைவணங்கென்றுசொல்ல, அவ்வரசனும்மலையையொத்தயானைகளையும், வேகமாய்த் தாவுகின்றகுதிரைகளையும், நல்லஇரத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கும்சிவிகைகளையும், தேர்களையும், சந்தனக்குழம்பைப் பூசுகின்றஸ்தனங்களையுடைய பலபெண்களையும், பொற்பிரகாசம்பொருந்திய அக்கோயிலுக்குமுன் காணிக்கையாகக்கொடுத்துவிட்டான். எ-று. (கக)

பன்னரு மனந்த பூசனை புரிந்தான்
பரமனு மவற்கருள் புரிந்தான்
கின்னர மொழியாள் விருப்பினு லடைந்த
கிலேசவா னரமுக மொழிந்தான்
நன்னர முகம்பெற் றிறையுநா டணைந்தா
ணுதலா லரன்பொருட் கவர
வுன்னிய பாவம் பதின்மடங் கரும்பொன்
னுதவினுற் றவிருமென் றுரைத்தான்.

(இ-ள்.) பிரதத்தமகாராஜன்சுவாமிக்குசொல்லுதற்கரிய அகந்தம்அருமையான பூசைகள்செய்ய, அப்பொழுதுசுவாமியும் அவ்வரசனுக்குக்கிருபைசெய்தார், வீணையினிசைபோலும் வார்த்தையையு

டைய பெண்மேற்கொண்ட ஆசையினாலடைந்ததுன்பம் பொருந்திய குரங்குமுகத்தையொழித்தான், நல்லமானிடமுகத்தையடைந்து அச்வரசன் தன்னுடையகாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான், ஆகையால் அருணாசலேசருடையபொருளாத்திருடினதத்தனுடனுண்டாகியபாவம் அப்பொருளுக்கும் பதின்மடங்கு திரவியங் கொடுத்தால் தீருமென்றுசொன்னார் பிரமதேவர். எ-று. (கஉ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாதவனே யருணகிரி வளமிதுதா
னெனத்தி ருவாய் மலர்ந்தா னந்தப்
போதணையங் கடிபணிந்துன் போதணையான்
மகிழ்ந்தனமிப் புவியின் மீதே
கோதமுட னறிந்துசெய்த பவந்தவிருங்
கதையினையுங் கூறுகென்றான்
மூதறிவா யினனுமுகத்தினுமா
யிரமுகமாய் மொழிய லுற்றான்.

(இ-ள்.) மகத்தாகிய தவத்தையுடையசனகரிஷியே! அருணாசலத்தினதுவளம் இதுதானென்றுசொன்னார், அப்பிரமனவ்விடத்தில்சனகரிஷிவந்தனஞ்செய்து உம்முடையதிவ்யோபதேசத்தினாலே ஆநந்தமடைந்தேன். இவ்வுலகில் குற்றமாக அறிந்துசெய்தபாவம்நீங்கும்படியானகதையையும் அருள்செய்யவேண்டுமெனப்பேரறிவுகொண்டபிரமதேவர் தம்முடைய வாய்நான்கும் ஆயிரம்வாயாகச் சொல்லத்தொடங்கினார். எ-று. (கஉ)

பதினொன்றாவது,

பிரதத்தராஜன் சருக்கம்

மூற்றிற்று.

ஆக திருவிருத்தம் சுஎக.

15. ஓர்காலத்திலுல் பிரமலுல் சாபமடைந்த அஷ்டவசுக்களும், பிரமன்தானசிருஷ்டித்தநிலோத்தமைபேரில் கொண்டமோகத்திலுலடைந்த பாவமுந்தீரத்திருமலையைப்பூசித்து பேறடைந்த மகாத்மியம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பாவந்தீர்த்த சருக்க வசனம்.



முன்பு ஒருகாலத்தில் பிர்மாவிஞல்சபிக்கப்பட்ட அஷ்டவசுக்கள் அந்தச்சாபம் நிவர்த்தியாகும்படி கங்கைக்கரையில் பரமசிவனே நோக்கித்தவஞ்செய்தபோது பரமசிவன்வந்து திருவண்ணுமலையைச்சூழ்ந்த கிழக்குத்திக்குத்தொடங்கி எட்டுத்திக்குகளிலுமிருந்துதவஞ்செய்தால் உங்களுடைய சாபம் நிவர்த்தியாகும் என்றுசொல்ல, அப்படியே அவர்கள் திருவண்ணுமலைக்குவந்து மலையைசூழ்ந்த எட்டுத்திக்குகளிலுமிருந்து சுவாமியைப்பூசித்துப் பழையபடி தமது பதவிகளைப்பெற்றுச் சிவகிருபையும் அடைந்தார்கள். அந்தஎட்டுவசுக்களுஞ்செய்த தபோபலத்தினல் பரமசிவன் எட்டுமுகமாயிருந்ததைப்பார்த்துத் தேவர்கள் பல்லாண்டு கூறினர்கள்.

முன்ஒருகாலத்தில் தேவேந்திரன் பிர்மாவினிடத்திற்குவந்து எல்லாரும் தேவேந்திர பட்டத்திற்காகத் தவஞ்செய்கிறார்கள். அந்தத்தவத்தை எவ்விதமாயாவது அழிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டுபோய்விட்டான். அதற்காகப்பிர்மா திலோத்தமை என்னும்பெண்ணையுண்டாக்கி அவளுடைய அழகைக்கண்டு அவரே இச்சித்தபோது, தகப்பனென்று அவர் கருத்துக்கு அவள் இசையாமல் பெண்மானுகி ஓடினுள். பிர்மாகலைமானுகித் தொடர்ந்தார். அப்போது அவள்மலையுருவமாகிய அருணுசலேசுரரைக் கொஞ்சதூரத்திற்கண்டுநீரேதஞ்சமென்று சொல்லியடைந்தாள். உடனேமலையைக் கீறி அதிலிருந்து பரமசிவன் வேடரூபமாகவும் நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றியதைப்பார்த்த பிர்மா பயந்து தன்னுடைய ஆசையை நிவர்த்திசெய்து சுவாமியை வணங்கினுன் அப்போதுபரம

சிவன் பிர்மாவைப்பார்த்து நீஉண்டாக்கின திலோத்தமையை நீயே இச்சித்ததினால் நேரிட்டபாவம் தீரமாட்டாது. ஆகிலும் இந்தமலை யைத்தரிசித்ததாகையால் அந்தப்பாவத்தைதீர்த்துவிட்டோம் உன் னிடத்திற்குப் போவென்று சொல்லிமறைந்து விட்டார்.

முன்னொருகாலத்தில் பரமசிவன் திருவிளையாட்டினாற் கற்ப காலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் சமுத்திரத்திற் றயிலும் விஷ்ணு உலகம் உண்டாகும்பொருட்டுப்பிரமனைசிருஷ்டி க்காமல்நித்திரைசெய்துத் தாழ்த்ததனாலே தீவினைபைச் சம்பாதித் துக்கொண்டேனென்று பரமசிவனை நினைக்க அவர்சிஷ்யபாவனைத் தின்மேற்சூன்றினார். விஷ்ணுவானவர் எழுந்துஅஞ்சலியத்தராய் எனக்கு நித்திரையினால் வந்தவினையைநீக்கி அருள்செய்ய வேண்டு மென, அதற்குப் பரமசிவன் அருணசலத்திற்குப்போய் பூசைசெய் தால் உன்னைவிட்டு வினைபோம் என்று மறைந்தருளினார் ஸ்ரீவிஷ் ணுவானவர் அப்படியே அவ்வருணசலத்தைப் பூசைசெய்து வினை யைநீக்கிக் கொண்டார்.

சந்திரனவன் உரோகிணியின்மேல் அதிகவிருப்பமாகவிருப் பதை மற்ற இருபத்தாறு பெண்களால் தக்கன்கேள்விப்பட்டு எல் லாராயகிகளிடத்திலும் விருப்பம் வையாமல் ஒருத்திமேல் மாத்திர ம்வைத்ததனால் அவனுடல் குன்றிப்போகக்கடவதென்று சபித்தான் இச்சாபத்தை யடைந்தசந்திரன் அவ்வருணசலத்தை வலம்வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான்.

பாவந்தீர்த்த சருக்க வசனம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

பன்னிரண்டாவது

பாவநீர்த்த சருக்கம்.

கலிவிருத்தம்.

வாக்கினல் வடிவினன் மனத்தினல் பவந்
தாக்கிய ரருணமா சயில நோக்கினு
னீக்கினு ரென்பது நிகழ்த்தி நான்மறை
தோக்கினன் சில கதை செப்ப லாயினன்.

(இ-ள்.) வாக்கினலும், தேகத்தினலும், மனத்தினலும், தூர்வி ஷயங்களேச் சொல்லியும்; செய்தும், நினேத்தும், பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணுமலேயைத்தரிசனஞ்செய்தால், அப்பொழுதே தங்கள் பாவத்தைநீக்குவார்கள் என்றுசொல்லி நான்கு வேதங்களேயுந் தன்னிடத்திலுடைய பிரமன் சிலகதையைச் சொல்லத் தொடங்கினன். எ-று. (க)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எம்பெரிய சபையிடத்தி லிருநான்கு
வசுக்களும் வந்திருந்தார் முன்னே

தம்பெரிய தவத்திணையும் புகழிணையும்
வியந்துரைத்த தகைமை நோக்கிக்
கும்பமுனி முதலாஞ் ரிடையிலுமை
வியந்துரைத்த கொடுமை யாலே
அம்புவியி லிழைத்ததவ மணைத்தினைய
மவமாக்கி யகற்று மென்றேன்.

(இ-ள்.) என்னுடைய பெரியசபையினிடத்தில் அஷ்டவசுக்களும் முன்னொருகாலத்தில்வந்திருந்தார்கள்; அப்பொழுது அவர்கள் தங்களுடைய தவத்தின்பெருமையும் அதனால்வந்த கீர்த்தியையுங் கொண்டாடிச் சந்தோஷித்தார்கள்; அதைப்பார்த்து அகத்தியர்முதலானரிஷிகள்மத்தியில் உங்கள்பெருமையைநீங்களே எடுத்துச்சொல்லிச்செய்த தற்புகழ்ச்சியானது நீங்கள்செய்த தவமெல்லாம் அவமாகச்செய்து விடுமென்று சொன்னேன். எ று. (உ)

உற்றபெருந் தவத்திணையுந் தமதறத்தி
னலத்திணையு மூறைத்த பேரு
மற்றொருவர் தமையிகழ்ந்த வருந்துயரக்
கடன்மூழ்கி மறிவ ரென்றேன்
சிற்றறிவா கியவசுக்க ளீனவர்களு
நடுங்கியிது தீருங்காலஞ்
சொற்றருளு கெனவுரைத்தா ரானருளார்
தீருமுங்க ளெர்தானென்றேன்.

(இ-ள்.) பெருமைவாய்ந்த தம்முடைய தவத்தையும், தாங்கள் செய்ததருமத்தையும்சொன்னவர்களும்மற்றொருவரையிகழ்ந்துபேசினவர்களும், துக்கசமுத்திரத்தில்முழுகிமறிபட்டுக்கிடப்பார்களென்றேன். சிற்றறிவுடையஅஷ்டவசுக்களும் அவ்வார்த்தையைக்கேட்டுநடுங்கி, இச்சாபம் எக்காலத்தில்தீரும் அருள்செய்யவேண்டுமென்றுகேட்டார்கள். பரமசிவன்கிருபை உங்களுக்கு என்றைக்குக்கிடைக்குமோ அன்றைக்குத் தீருமென்றேன். எ-று. (ஊ)

சொல்லுதலும் வசுக்களெலா மெனையகன்று
நெடியகங்கைத் துறையி லேகி
எல்லையிலா நெடுங்கால மிறைபெறினுங்
தரியதவ மியற்றி னார்கள்
வல்லிபங்க னொருநாளின் மழவிடைமே
லடைந்துதவம் வரமே தென்றான்
அல்லி மலரவன்கொடுத்த கொடுஞ்சாபக்
கடலிலெடுத் தருளு கென்றார்.

(இ-ள்.) அப்படிசொன்னவுடன் வசுக்களெல்லாரும்என்சை யைவிட்டு நெடுந்தூரஞ் செல்லுகின்ற கங்காநதியின்ஒருதுறையிற் போய்அளவில்லாத நெடுங்காலம் பரமசிவனை நினைந்து அரிதாகிய தவத்தைச்செய்தார்கள், பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொ ண்டிருக்கும் எமதுபரமசிவன் ஒருநாள்இளமையான ரிஷபவாகன த்திலெழுந்தருளிவந்து நாம்உங்களுக்குக் கொடுக்கவேண்டிய வர மென்னவென்றுகேட்டு அருள்செய்தார். அவ்வசுக்கள் இதழினையு டைய தாமரை மலரிலிருக்கின்ற பிரமன்கொடுத்தகொடிய சாபமா கியகடலினின்றும்எங்களை எடுத்தருளவேண்டுமென்றார்கள். எ-று. ()

கருணைமுகின் முகமலர்ந்து வசுக்களுட
னுமதுபவங் கடக்க வேண்டில்
தரணியிலே யொருநகரந் தலேச்சுரமென்
றிலங்குமந்தத் தலத்தின் மீதே
அருணகிரி யெனுமலையா யிருக்குமந்தப்
பதியணுகி யசலஞ் சூழ்ந்த
வருணதிசை தொடங்கியெட்டுத் திசைகளினு
மிருந்துதவ மியற்று மென்றார்.

(இ-ள்) கிருபாவருஷம் பொழிகின்ற மேகமாகிய பரமசிவன் கிருமுகமலர்ந்துஅந்தஎட்டு வசுக்களைப்பார்த்தது உங்களுடையபாவ த்தைநீங்கள்கடக்கவேண்டினால் பூமியில்தலேச்சுரமென்றுசொல்ல ப்பட்ட ஒருதிவ்வியத்தலம் விளங்குகின்றது அத்தலத்தில் அருணை

சலமென்று ஒருமலையுண்டு, அத்தலத்தையடைந்து ஆம்மலையைச் சூழ்ந்தகிழக்குத் திக்குத்தொடங்கி எட்டுத்திக்குகளிலுமிருந்து தவம்செய்யுங்க ளென்றருளிச் செய்தார். எ-று. (இ)

அன்னவய லருணையிற்சீ ரியதவ
மியற்றிடுமவ் வளவே யுங்கள்
முன்னரழற் கிரியுமெட்டு முகமாக
விளங்கியட்ட மூர்த்தி யாகு
மன்னுமுங்க ளரும்பவமுந் தவிருமென
வுரைத்துவெள்ளி மலையிற்சேர்ந்தான்
தன்னையடைந் தவர்களெலாந் தனிப்போல
விருக்கவரந் தருகு வானே.

(இ-ள்) அன்னப்பறவைகள் தங்கியவயல்சூழ்ந்த அருணைசலத்திற்குப்போய் நீங்கள்மேன்மையாகிய அரியதவத்தைச்செய்யுங்கள், அப்படிச்செய்தஅளவிலே அக்கினிசொரூபமாய்விளங்கிய ஒப்பற்ற அம்மலையானது எட்டுமுகமுள்ள சொரூபத்தோடு உங்களுக்குமுன் வந்து காட்சிகொடுக்கும். அப்போது நிலைபெற்ற உங்களுடைபாவமும் நீங்குமென்று திருவாய்மலர்ந்து, கைலாயத்திற் கெழுந்தருளினர், தம்மிடத்தி லடைந்தவர்கள் எல்லாரையும்தம்மைப்போலஉருவத்தையடைந்திருக்க வரமருளிச் செய்யும்பரமசிவன். எ-று. (சு)

முந்தவசு ரரையுமவர் புரத்தினையு
மெரித்தபிரான் மொழிந்த வாறே
அந்தவசு வினைவருஞ்சென் றருணையிலே
யரியதவ மியற்றி னுர்க
ளிந்தவசுமதி தழைக்க வழற்கிரியெட்
டுருவாகி யிருந்ததங்கே
தந்தவசு நிலைபுகழ்ந்த கொடுஞ்சாபக்
கிரிகளெலாந் தள்ளி னுர்கள்

(இ-ள்.) முன்புஅசுரர்களையும், அவர்கள்வாசஞ்செய்துகொண்டிருந்தமூன்றுபுரங்களையும், நகைத்தெரித்தசுவாமி அருளிச்செய்தபிரகாரம்அவ்வெட்டு வசுக்களும்போய் அருணைசலத்தில் அருமையான

தவம்செய்தார்கள்; இப்பூமிதழைக்கும்படி அக்கினிமலைஎட்டுமுகமாய்வீசியிருந்தன; மூன்னேதங்களுடைய தவத்தைப் புகழ்ந்து சொல்லுகையதனல் வந்தகொடிய சாபமென்று சொல்லப்பட்ட மலையைத்தாண்டி விட்டார்கள் அவ்வீடத்தில். எ-று. (எ)

பூதரஞ்சூழ் திசைகளெலா மிருந்தட்ட
மூர்த்திதணைப் பூசித்தார்க
ளாதலினற் பழயபடி தமதுபத
விகளே யடைந் தருள்பெற்றார்க
ளேதமறும் படிக்கரிய மறைப்பயனெட்
டுருவாகி யிருந்த போதுஞ்
சீதரனும் பதங்கிரமத் துடனறியான்
முடியெனக்குஞ் தெரிந்த தின்றே.

(இ-ள்.) அந்தமலையைசூழ்ந்த எட்டுத்திக்குகளிலுமிருந்து வசுக்கள் அஷ்டமூர்த்தமாகிய அருணசலேஸ்வரரை பூசித்தபடியினல், பழயபடியே தமது பதவிகளைப்பெற்றுக்கொண்டு சுவாமியினதுகிருபையும் பெற்றார்கள்; குற்றம்நீங்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அச்சுவாமிஎட்டு முகமாயிருந்தபோதும், விட்டுணுவும்திருவடியைக்கிரமத்துடன் அறியாமற்போனர், இன்றளவும் எனக்கும் முடிதெரியவில்லே. எ-று. (அ)

சண்முகனே யளித்தவைந்து முகத்தவனெண்
வசுக்கள்செயுந் தவத்தினலே
எண்முகமா யிருந்ததுகண் டொருமுகமா
யிமையவர்வாழ்த் தெடுத்தா ரென்று
தண்முகநான் குடையபிரான் சனகமுனிக்
குரைத்தருளச் சயிலத் தூடே
பண்முகயா ழனையமொழித் திலோத்தமைசேர்
கதையினையும் பகரலுற்றான்.

(இ-ள்.) ஆறுமுகமுள்ள சுப்பிரமணியரைப்பெற்ற ஐந்துமுகங்களையுடைய பரமசிவன் எட்டுவசுக்களுஞ்செய்த தபோபலத்தினல் எட்டுமுகமாயிருந்ததைப்பார்த்து தேவர்களெல்லாம்ஒன்றுய்க்கூடி

ணங்கிப்பல்லாண்டு கூறினர்களென்று கருணைபொருந்திய நான்
குமுகங்களையுடைய பிரமன் சனகரிஷிக்குச்சொல்லி, அருள்புரிகி
ன்றஅத்திருமலையின், யாழின்இசைபோன்ற சொல்லையுடையதி
லோர்த்தமை வந்தடைந்த கதையையும் சொல்லத்தொடங்கினன்.

கலிவிருத்தம்.

தேவர்கோன் முன்னமென் னிடத்திற் சேர்ந்துதன்
பாவன மானதன் பதவி வேண்டிய
யாவரு மருந்தவ மியற்றி னாரதற்
காவது செய்யென வரைந்து போயினன்.

(இ-ள்.) பிரமதேவர் சொல்லுவார், இந்திரன்முன்னே என்னி
டத்தில்வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியைச்சிந்தித்துஉலக
த்திலுள்ளஎல்லாரும் அருமையான தவத்தைச்செய்கிறார்கள்; அத்த
வம் நிறைவேறுதபடி ஏதாவது ஒருவிக்கினம் செய்யவேண்டுமென்
று சொல்லி விட்டுப்போனன். எ-று. (கo)

இந்திரன் போனபின் னியக்க மங்கைய
ரந்தர மங்கைய ரரவநாட்டவர்
சுந்தரக் கடற்புவித் தோகை மார்வரை
மந்தர முலைச்சிய ரழகு வாரியே.

(இ-ள்.) இந்திரன் இவ்வாறுசொல்லி விட்டுப்போனபிறகுஇய
க்கலோகத்துப் பெண்கள், தேவலோகத்துப்பெண்கள், நாகலோக
த்துப்பெண்கள், அழகமைந்த கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ள பெ
ண்கள் மந்திரகிரிபோன்ற முலைகளையுடையவரையரமகளிர், இவர்
களுடைய அழகுகளை எடுத்துக்கொண்டு. எ-று. (கக)

வகுத்தனன் றிலோத்தமை யென்னும் வஞ்சியை
யுகுத்தனன் வலியைநன் மதியை யோட்டினன்
மிகுத்தமேதார் விஞ்சையிற் புவியின் வேட்டுவ
னகத்துட லழித்துட னளிப்ப தென்னவே.

(இ-ள்.) குளவிதன்னிடத்திலுள்ள ஒருசாமர்த்திய விசேடத்தி
னால்இவ்வுலகத்தில் புழுவின் உடலைக்கெடுத்து, அதற்குவேறொரு
தேகத்தைக்கொடுப்பதுபோலத் திலோத்தமையென்னும்பெண்ணை

உண்டாக்கினேன், அப்பொழுதேஅவள்மேற்கொண்ட ஆசையால்எ
ன்னுடைய வல்லமையையிழந்தேன்; ஞானத்திற்செல்லுகின்றஎன்
னுடைய புத்தியையுந் தூரத்திவிட்டேன். எ-று. (கஉ)

மன்மதன் கணையினுன் மயங்கி வாடுமென்
றன்மையை யறிந்துநான் றனக்குத் தாதையென்
றென்மனம் பொருந்திலா தெனதுகை யுரூன்
மூன்பினி லெளிக்கநான் முகமுந் தேடினேன்.

(இ-ள்.) மன்மதனுடைய பாணத்தினுலேமயக்கமடைந்துவாடு
கின்றஎன்னுடையஇயல்பையறிந்து, நான்தனக்குத்தந்தையென்று
என்கருத்துக்குஒவ்வாதவளாகியும், நான்பிடிக்கும்போதுஎன்கைக்
குஅகப்படாதவளாகியும், எனக்கு முன்னின்றும் ஓரிடத்தில் நான
றியாதபடி ஒளித்துக்கொள்ள; நான்குபக்கங்களிலும்அவளைத்தேடி
னேன். எ-று. (கங)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கன்னிமா ஞகச் சென்றுள்
கலேயதாய்த் தொடர்ந்தேன் பேட்டு
வன்னியாய்ப் பறந்தாள் சேவல்
வடிவமாய்த் தொடர்ந்தேன் மங்கை
பின்னேயோர் கதியுங் காணுள்
பிறங்கலா மருணை நாதன்
றன்னையே தூரக் கண்டாள்
சரணமென் றுரைத்துச் சார்ந்தாள்.

(இ-ள்.) அப்படிநான்தேடி அவளைக்கண்டு பிடிக்கும்போது பி
டிப்பதற்கு முன்னே அந்தக்கன்னியாகிய திலோத்தமை பெண்மா
னகிஓடினுள. நான் கலேமானுகத்தொடர்ந்தேன்; அதன்பின்பு அவ
ள்பெண்கிளியாய்ப்பறந்தான், நான்ஆண்கிளியாய்ப்பறந்து தொடர்
ந்தேன்; அத்திலோத்தமைபிறகு என்கையிலகப்படாமலிருக்கிறதற்
குவேறொரு கதியுங்காணுமல்வருந்தும்போது, மலேயருவாகியஅரு

ணாசலேசனைச்ச சிறிது தூரத்திற்கண்டு நீரேதஞ்சமென்றுசொல்லி அடைந்தாள். எ-று. (கசு)

மாயமால் விடையின் பாகர் வடிவிலா விடையின் பாகர்
காயழலான மெய்யர் கானகத் தாடு மையர்
ஆயுமா ரணத்தின் சோதி யடைக்கல மென்றுளையன்
சேயிள மழலைபோலத் திருச்செவி சாற்றினாளே.

(இ-ள்.) மாயஞ்செய்கின்ற விட்டுணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகின்றவரே ! தோற்றுத இடையினையுடையபார்வதியைப் பாகத்தில்வைத்துக்கொண்டிருப்பவரே!கங்கும் அக்கினிமயமானவடிவத்தையுடையவரே! திருவாலங்காட்டினிடத்தில்நடனஞ்செய்கிற சுவாமியே ஆராய்ந்து தேடுகிற வேதத்தையுடைய சோதியே நாணடைக்கலமென்று சகலரையும் ஆளுகின்றபரமசிவன் திருச்செவியிற் செல்லும்படி குழந்தையின் இளமையாகியகுதலைச் சொல்லைப்போலச்சொன்னாள். எ-று. (கரு)

முருகலர்க் குழலி னுடன்
முறையிடு முறைக்கென் னேயன்
திருவுரு வணைத்துங் தூய
செவிகளா யிருந்த போது
விரைவின்மால் வரையைக் கீறி
வெட்டுவ ஞகி நாலு
சுருதியு ஞமலி யாகத்
தோன்றினன் ரூகை பாகன்.

(இ-ள்.) வாசனையமைந்த புட்பமாலையையணிந்த கூந்தலையுடையதிலோத்தமைமுறையிடுதலுக்கு. என்சுவாமிஅழகியஉருவமெல்லாம் செவிகளாயிருந்தன, அதனல்சீக்கிரத்தில்மலையைக்கீறிஅதினின்றும் தாம்வேடவடிவமாகவும், பார்வதிவேடச்சிஉருவமாகவும், நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றினர் பார்வதியைஇடதுபாகத்தில் வைத்துக்கொண்ட பரமசிவன். எ-று. (கசு)

சூடகச் செங்கை பாகன்
சிலையொடு தோன்றும் போதில்
வாடிய மருங்கு லாண்மேன்
மயக்கமும் வருத்தந் தீர்ந்தே
ஞடிய பெருமா னம்மை
முனியுமென் றஞ்சித் தாழ்ந்தேன்
வேடனைப் பறவை கண்டால்
வெருவுமோ வெருவு றாதோ

(இ-ள்.) வளையலையணிந்த செந்தாமரைமலர்போன்ற கையையுடைய பாவதியை ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடஞசி வில்லேக்கையிலேந்திக்கொண்டுதோன்றியபோதுமுன்னே நடனஞ்செய்த சுவாமி என்னைக்கோபித்துக் கொள்வாரென்றுபயந்து வளைகின்ற இடப்பிலையுடைய திலோத்தமைமேலுண்டாகியமையலையும், அதிலுண்டாகிற வருத்தத்தையுந்தீர்ந்து அச்சுவாமியை வணங்கினேன், வேடனைப்பறவைகண்டால் பயப்படுமோ பயப்படாதோ. எ-று. (கஎ)

பெற்பெனு முலையா டன்னை
விதித்துநீ விரும்புந் தீமை
கற்பகோ டியினுந் தீரா
தாயினுங் கருணையாமித்
தற்பர மலைகண்டாயே
யாதலாற் றவிர்த்தேதாம் போவென்
றற்புதன் மொழிந்து மீளப்
புகுந்தன னருணை வெற்பில்.

(இ-ள்.) மலைக்குநிகராகிய தனத்தையுடைய திலோத்தமையைப்படைத்து நீயேவிரும்பினதிலுலுண்டாகிய பாவம் கற்பகோடிகாலத்திலுந் தீராமாட்டாது, ஆலுலும் அருளுருவமாகியும் தானே பரமாகியும் உள்ள இம்மலையைதரிசித்தாயாதலால், அப்படிப்பட்ட பா

வம்தீர்த்து விட்டோம், உன்னிடத்திற்குப் போவென்று திருவாய் மலர்ந்து அம்மலைக்குள் ஞானரூபியாகிய பரமேஸ்வரன் மறைந்து விட்டார். எ-று. (கஅ)

கலி விருத்தம்.

தன்னையறி யாமல்வினை சாருமுட ரூனுந்
தென்னருணை சேரிலது தீருவது திண்ண
மின்னல்வினை யற்றதனி லெண்ணியது பெற்றூர்
முன்னமுள ரென்றயன் முனிக்குமொழி கின்றூன்.

(இ-ள்.) ஒருவனுக்கு அபுத்தி பூருவமாகவந்தபாவம் அவன் அழகுபொருந்திய அருணைசலத்தையடைந்தால் அதுநிச்சயமே முற் காலத்திலும் அநேகர் தங்களுடைய வினையைநீக்கி அத்தலத்தில் தாங்கள் நினைத்தவரம் பெற்றுக்கொண்டார்களென்று பிரமதேவர் சனகரிஷிக்கு ஒருகதை சொல்லுகிறூர். எ-று. (கக)

கற்பமுடி வாயிருள் பெயர்ந்துபுலர் காலத்
தற்பவிரு னின்றதுமுன் ஞளிறையி னூலே
சொற்பரவை மாயனுண ராதுதுயில் கொள்ளச்
சிற்பரம யோகியர்கள் செம்மலை நினைந்தார்.

(இ-ள்.) முற்காலத்தில் பரமசிவனுடைய திருவிளையாட்டினு ல்கற்பகாலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம் நீங்கி வெளிச்சமு ண்டாகிற காலத்தில், அவ்வந்தகாரத்திற்கொஞ்சம்நின்ற அக்காலத் தில் இதனையறியாமல் விட்டுணு சமுத்திரத்தில் நித்திரைசெய்து கொண்டிருக்க மேன்மையான சின்மயமாகிய யோகியர்கள் பரமசி வனை நினைத்தார்கள். எ-று. (உ)

அத்தனடி யார்கடம தாணவ மறுக்குஞ்
சுத்தனழ லானதொரு சோதிவடி வானை
னெத்தலமு மெத்திசையு மெங்கும்வெளி யானை
னுய்த்தபொறி தம்மிலுள வாயுவுல கெல்லாம்.

(இ-ள்.) எல்லாச் சீவராசிகளுக்கும் பிதாவாகியும், தமதடியார்களுடையஆணவமலத்தையறவேகெடுக்கின்றசுத்தராகியும் இருக்கும்பரமசிவன்தெருப்புமயமாகிய ஒருசோதிரூபத்தையடைந்தார், எத்தலங்களிலும் எத்திக்குகளிலும் மற்ற எவ்விடங்களிலும் ஆகாயமேதமக்குருவ்வாகிய அச்சுவாமியானவர் அப்போது சிந்தியபொறிகளாலே உலகமெல்லாம் உண்டாயின. எ-று. (உக)

ஊழிமுடி வாயிருள் புலர்ந்துமுண ராதே
யாழிபிசை யிற்றுயிலு மச்சுதனை யெய்தி
வாழியென வோங்கிய செழுப்புதலு மாயன்
பாழியிலு நின்றதி பயத்துட னெழுந்தான்

(இ-ள்.) ஊழிக்கால முடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் அறியாமல் சமுத்திரார்ணவத்தில் நித்திரைசெய்யும் விட்டுணுவினிடத்தில்வந்துவாழியென்றுசொல்லியோங்கியர்கள்எழுப்புதலும் அவ்விட்டுணுசர்ப்பசயனத்தினின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார்

வையக மளிக்கமல ரோனியுத வாதே
பையரவின் மிக்கதுயில் கொண்டபரி சாலே
வெய்யபுன் வினைத்தொழில் விளைத்தனனெனத்துன்
றையுணர்வு மஞ்சியென தையனை நினைந்தான்.

(இ-ள்.) உலகமுண்டாக்கும்பொருட்டு பிரமனைச் சிருட்டிக்கார்மல்படத்தையுடைய பாம்பின்மேல் நித்திரைசெய்த தன்மையிலுல் வெம்மையாகியதீவினைச்சம்பாதித்துக்கொண்டேனென்றுஐம்பொறிகளுங்கலங்கி மிகவும்பயந்தவராய் யென்னுடைய ஆண்டவனுகிய அருணுசலேஸ்வரரை நினைத்தார். எ-று. (உங)

அன்பர்கரு திற்கடுமை யாகியெதிர் வந்தே
துன்பமகல் விக்குமது தூயதொழி லாளன்

வன்படிக வெற்புமிசை மன்னுசுடர் போலே
மின்படரு மேனியுடன் வெள்விடையில் வந்தான்.

(இ ள்.) அடியார்கள்நினைத்தால்சேக்கிரத்தில்தானே அவர்களுக்குஎதிராகத்தோன்றி அவர்களுடையதன்பங்கலோகத்துக்குவதேதமக்குப்பரிசுத்தமாகிய தொழிலாகக் கொண்டபரமசிவன், வண்மையாகிய படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்ற நிறத்தோடும் எழுந்தருளி வந்தார்.

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள் புகழ்ந்தே
யருக்கிய முதற்புரி யருச்சனையி னுலே
யுருக்கியென் னினைத்தொட ரொழித்தருள்தி யென்று
னெருக்கணி குவானிலை யெடுத்துமொழி கின்றான்.

(இ-ள்.) அப்படிபரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்தவுடனே, விட்டுணு சேக்கிரத்தில் எழுந்து திருவடிக்கமலங்களுக்கு வந்தனஞ்செய்து, அவருடையதிவ்வியகிருபையைப்புகழ்ந்து, அவருக்கு அர்க்கியமுதலிய சோடசோபசாரங்களோடுகூடிய பூசைகளினுலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து, எனக்குநித்திரையினுல் வந்த வினையைநீக்கிஅருள்செய்யவேண்டுமென்றூர் எருக்கம் பூமாலையைத் தரிக்குஞ் சுவாமி இவைகளைச் சொல்லத் தொடங்கினர். எ-று. (உரு)

அர்க்கியம்முதலாயின என்பன அர்க்கியம், பாத்தியம்ஆசமன முதலிய பதினறுமாம்.

வாகிமக மேமுதன் மகம்பல செய்தாலும்
பாசமக லாதவினை பற்றறுத லெண்ணித்
தேசுமிகு தென்றிசை செறிந்தருணை தன்னிற்
பூசைபுரி விட்டுவினை போகுமுனை யென்றான்.

(இ-ள்.) ஒருவன் தனக்குண்டான பாசவினையை நீக்கும்படி நினைத்து அஸ்வமேதமுதலியபலயாகங்களைச்செய்தாலும் அதுபோகாது, ஆகையினுல்அதுநீங்கவேண்டுமானுல் சோதிமயமாகிய தெற்

குத்திசையில் விளங்கும் அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு நீங்கும் என்றார் பரமசிவனார். எ-று. (உசு)

நாறுபொழி லந்தகரு நாமும்வடி வொன்றே
வேறல வதன்பெருமை வேதமுணர் வாதால்
நீறுபுனை யோகியர்க ணீவிர்பலர் தொண்ணூற்
றாறுபிர மாவதி லருச்சனை புரிந்தீர்.

(இ-ள்.) வாசனையுடைய சோலைகள்சூழ்ந்த அவ்வருணாசலத்திற்கும் எனக்கும் வடிவம் ஒன்றுதான் பேதமன்று. அவ்வருணாசலத்தின் மகிமையை (நான்கு) வேதங்களுங்கூட அறியமாட்டார், விபூதியை முக்கியமாகத்தரிக்கும் யோகியர்களும் விட்டுணுக்களாகிய நீங்கள் பலரும் தொண்ணூற்றாறு பிரமர்களும் அத்தலத்தில் பூசை செய்தீர்கள். எ-று. (உஎ)

முற்றிழை யுரோகிணி முலைக்கிடையின் மூழ்கா
மற்றவிரு பத்தறுவர் வாழ்வையு மறந்தான்
கற்றைமதி தக்கனுடல் கன்றுறச் சபித்தான்
அற்றமதி யப்பதியி லத்துயரொ ழிந்தான்

(இ-ள்.) சந்திரன் நன்றாக வேலைசெய்த ஆபரணங்களையுடைய உரோகிணி தனங்களின் போகத்தை விரும்பி அதில் முழுகினவனும் மற்றை இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையுமறந்து விடஅதை முன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்குத் தந்தையாகிய தக்கன்கேள்விப்பட்டு எல்லாநாயகிகளிடத்தும் விருப்பம்வையாமல் ஒருத்திமேல் மாத்திரம் வைத்ததனால் அவனுடல் குன்றிப் போகக்கடவதென்று சபித்தான்; அச்சாபத்தையடைந்த சந்திரன் அவ்வருணாசலத்தில்வந்து அத்துன்பத்தைநீக்கிக்கொண்டான். எ-று.

நினைப்பளவின் முத்திதரு நீணகர திற்போய்.
மனக்குறை தவிர்த்திடுதி யென்றிறை மறைந்தா
னனற்கிரியை நாடியரி யத்திசையி னண்ணிச்
சுனைக்கமல வாசமிகு சோணகிரி கண்டான்.

(இ ள்.) நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கும் அருணாசலமென்னும் அத்தலத்திற்குப்போய் மனக்குறையை நீக்கிக்கொள்ளென்று சுவாமிமறைந்தார்; விட்டுணு அக்கினிவடிவாகிய மலையைத்தியானஞ்செய்து அது விளக்குத்தென்றிசையையடைந்து சுனையிலிருக்கிற தாமரைப்பூவின் வாசனைபிருந்த அச்சோணசலத்தைக்கண்டார். எ-று. (உக)

ஈசர்வடி வானமலை கண்டினி திறைஞ்சித்
தேசுமிகு நன்னகர் செறிந்து மகிழ்வாகி
வாசவ தடத்திடை படிந்துவல மாகிப்
பூசனை புரிந்துவினை போயமல ஞனன்.

(இ-ள்.) மலைவடிவமாகிய சுவாமியைத்தரிசித்து அன்போடுபணிந்து ஒளியமைந்த அத்தலத்திற்குப்போய்ச் சந்தோஷமடைந்து இந்திரதீர்த்தத்தில் முழுகிக்கரிப் பிரதக்கினம்வந்து அநேக காலம் பூசைசெய்து கொண்டுவரப்பிறகு தம்முடைய வினையைநீக்கி விஷ்ணுமூர்த்தி பரிசுத்தராஞர். எ-று. (உo)

மேவியரு ணைப்பதியின் மிக்கபுகழ் மாயன்
பாவமகல் வித்திடு பலத்தினை யுரைத்துத்
தாவியுமை பாகமுறை சோணகிரி நாத
ஞவியின் மகிழ்ச்சியையு நான்முக னுரைப்பான்.

(இ-ள்.) மிகுந்தபுகழையுடைய விட்டுணு அருணாசலத்திற்குப்போய்த் தம்முடைய பாவத்தைநீக்கி அவர் அடைந்தபலனைப் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொல்லிப்பார்வதி ஒருபுறத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசர் புழுகுபூனையிஞலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத் தொடங்கினார். எ-று. (உக)

பன்னிரண்டாவது,

பாவந்தீர்த்தசருக்கம்.

மூற்றிற்று.

ஆக திருவிருத்தம்-உசo.



16. ஓர்காலத்தில் புளகனென்னும் அசுரன் புழுதுரூபவடிவங்கொண்டு உலகத்தை யழித்துத்[3]திருமலையில் புழுகைச்சிதறிஜீவிக்குங்காலத்தில், தேவர்கள்தோத்திரத்திற் இரங்கிய பரமசிவன் புளகனுக்கனுக்கிரகஞ்செய்த மகாத்மியம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

புளகாதிபச் சருக்க வசனம்.

நினைத்தபடி வெவ்வேறான உருவங்களாலெடுக்கத்தக்கதாக வல்லமையுள்ள புளகாதிபன்என்னும் ஒருஅசுரன், ஒருநாள்புழுகுபூனை உருவத்தையடைந்துஅருணகிரியின்மேல்உலாவிக்கொண்டுபுழுதை ச்சிதறியபடியால் சுவாமிபிஞ்ஞலே அதிகபலத்தைப்பெற்றுத் தேவர் முதலானவர்களுக்கும்மிகுந்தஉபத்திரவஞ்செய்யஆரம்பித்தபோ தவர்கள்சுவாமியினிடத்தில்முறையிட்டுக்கொண்டார்கள். பின்பு சுவாமிமிகுந்தகிருபையோடும் அந்த அசுரனையழைத்துஉன்பிராண னைவிட்டுவிடென்றுசொல்லியபோது அவன்சுவாமியைப்பார்த்துஐ யனே! புழுகுபூனைகளினதுபுழுகைஉம்முடைய திருமேனியில் ஏற் றுக்கொண்டு அதனால் புழுகணிபிறைவர்என்கிறதிருநாமத்தை நீர்த ரித்துக்கொள்ளும்படியானகிருபை செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொண்டு அவன்உயிரைவிட்டான். உடனே அவன்நற்கதிசேரும்படி சுவாமி அநுக்கிரகஞ்செய்தபடியால் முனிவர்களும்தேவர்களும்மனி தர்களும் சுவாமியினதுகிரசில் புழுகுகாப்புச் சாத்தலாயினார்கள்.

இந்தப்புண்ணிய சரித்திரத்தைப் படித்தவர்களும் கேட்டவர்க ளும் எழுதினவர்களும் அருணைசேஷரருடைய கிருபாகடாக்ஷத்தி னால் இகபரசௌக்கியங்களை யடைவார்கள்.

புளகாதிபச் சருக்க வசனம்

முற்றிற்று.



சிவமயம்.

பதின்மூன்றாவது

புளகாதிபச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

உருவுபல வேறுபுனை புளகனெனு மோரசுர
னொருபொழுது நாவி வடிவா
யருணகிரி மீதுலவி யரியபுழு கேசிதறி
யதிகபலமா யவனியோர்
வெருவவிமை யோர்முனிவ ரொருவரொழி யாதழிய
வீனபுரிகை யாலவ ரெலாங்
கருணைமலை போலிமய மலையமலை பாகருறை
கயிலைமலை மேவி மொழிவார்.

(இ-ள்.) நினைத்தபடிவெவ்வேறே உருவங்களை யெடுத்துக்கொள்ளும்வல்லமையுள்ளபுளகனென்னும்ஓரசுரன் ஒருநாட்புழுருபூனை உருவமடைந்து செவ்வியசிறத்தையுடைய அம்மலையின்மேல் உலாவிக்கொண்டுபுழுகைச்சிதறியபடியால், சுவாமியினல்அதிகபலம்பெற்றுப்பூமியிலுள்ளவர்கள் பயப்படவும், தேவர்கள், முனிவர்களெல்

லாரும்துன்பப்படவும், துர்க்கிருத்தியம் செய்வதனுலேஅவர்களெ
ல்லாம் இமயபருவதராசனுடைய புத்திரியாகிய பார்வதியைஒருபா
கத்தில் வைத்தருளிய கருணைமலேபோன்ற பரமசிவன் எழுந்தருளி
யிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச் சொல்வார்கள். எ-று. (க)

புளகனெனு மோரசுரன் மிருகவடி வாகிவதை
புரியவுல கேழு முறைபோய்
விரோதுயர மாயினர்க ளெனவுரைசெய் தாரவர்கள்
விமல்னவ ரோடு புகல்வா
னளவின்மண மானபுழு கருணைகிரி மீதுதவி
யதிகபல மாய் மருவினு
னெளிதிலழி யானவனு மினியகதி யேறவுமை
யிடரலையி லேற விடுவோம்.

(இ-ள்.) புளகனென்னும் ஓர் அசுரன்புழுகுபூனை வடிவங்கொ
ண்டு ஏழுலகங்களிலும் முறையேபுகுந்து சிவராசிகளையும்வதைசெ
ய்ய, அதனுல் எல்லாரும் துன்பமடைந்தார்களென்று வந்தவர்கள்
சொல்லிக்கொள்ள பரமசிவன் அவர்களோடு திருவாய்மலர்ந்தருளு
வார்;மணம்வீசும்அளவில்லாதபுழுகை நமதுருவமாகிய அருணசலத்
திற்சிதறியதனுல் அதிகபலம்அடைந்திருக்கின்றன், அப்படிப்பட்ட
வன்எளிதில்அழியமாட்டான்,ஆனபடியினுலே அவனைமோட்சத்தில்
அடைவித்துஉங்களைதுக்கசமுத்திரத்தினின்றும்கரையேற்றுவோம்

மேவுமென வோதியரு ளோடுபுள காதிபனை
வேதமுதல் கூறிய வுணர்
நாவிவடி வாகியவு ணாவிவிடு வாயெனது
நாவிவடி வான்மொ ழிகுவான்
பாவையொரு பாக கருணைலய புராதன
பராபர விலோச னகுளா
வேவலெளி யேன்மொழியு மாறுதவெ ணாவிறைவ
னீடியின் மீது தொழுதே.

(இ-ள்.) நீங்கள்உங்களிடத்திறகுப்போய்ச் சேருங்களென்றுவி
டைகொடுத்தருளிமிக்ககிருபையோடுபுளகனென்னும் அவ்வசுரனை

வேதமுதலாகியபரமசிவன் அழைத்து அசுரனே? புழுகுபூனைவடிவங்கொண்ட உன்பிராணனைவிடக்கடவாய் என்றுசொல்லிய அளவில்; அவ்வசுரன்சொல்லுவான், பார்வதிபையொருபாகத்திற் கொண்டருளியவரே! கிருபைக்கு இடமாயிருக்கின்றவரே! பழமையானவரே! பராபரமாகியவரே! நெற்றிக்கண்ணையுடையவரே! உமக்குஏவல் செய்தற்குரிய எளியேன்கேட்டுகொள்ளுகிறவரங்கொடுத்தருளுமென்றுசுவாமிஇரண்டுதிருவடிகளுக்கும்வந்தனஞ்செய்துசொல்வான்.

எனதுகிளை யாமிருக முனதுதிரு மேனிபுக
வினையபுழு காலு மொருபோ
புனைகவென வேபரவி யுயிர்விடலு நாவிகதி
புகுதவிறை யோனரு ளினன்
மனமுருகி யேமுனிவரிமையவர்கண்மானிடர்கண்
மதிமுடியின் மே லணியவே
யனவரத மான்மதமு மிமசலமு மாலயம
கருவியென வேபெருகுமே.

(இ-ள்) காளைத்தஉருவமாகியபுழுகுபூனையின்மாபிஞல்உண்டாகின்றபுழுகு உம்முடைய திருமேனி ஏற்றுக்கொள்ளவும், அதனற்புழுகணியிறைவனென்று ஒருநாமத்தை நீர்தரித்துக்கொள்ளவும்; அருள்செய்யவேண்டுமென்றுவணங்கிநாவிவடிவமாயிருந்துவவ்வசுரனுயிர்விட்டவுடனே, அவ்வசுரன்கதிசேரும்படி சுவாமி அநுக்கிரகஞ்செய்தார். அப்படி அவனை இரட்சித்தது கண்டு முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும் மனவருத்தமடைந்து சந்திரனைத்தரித்த சுவாமிசிரத்திற் புழுகுகாப்புச்சாத்த, எப்போதும்அப்புழுகு கரைந்துபனிநீரோடி சுவாமி ஆலயம் அருவியை யுடையதாகப் பெருகியோடும். எ-று. (ச)

புழுகுபனி நீர்களப மணுவளவ தேனுமிறை
புனையும்வகை யாலுதவினோர்
விழிகுவிர நாடியர னினையடிக ளேபரவி
வினைவினர்கள் வீடுபெறுவா

குழைமருவு பரணியினர் சரிதமிது வாகுமென
வுவகையுட னேயுரை செய்தான்
மொழியுமல ராலயனே முனிவருடனேசனக
முனிபுகழ்வி னோடு தொழுதான்.

(இ-ள்.) புழுகும் பனிநீரும், கூட்டுவர்க்கச் சந்தனமுமாகிய இவைகளில் அணுவளவேணும் சுவாமிஒப்புக்கொள்ளும்படிசெய்தவர்களும், கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமி திருவடிகளேவணங்கி அவர்சரித்திரத்தைக்கேட்டவர்களும் மோட்சமடைவார்கள்; மானேக்கரத்தில்வைத்தருளிய பரமசிவனுடையதிவ்வியசரித்திரமிதுவாமென்றுசந்தோஷமாய்அப்பிரமதேவர்சொல்ல அப்படிச்சொல்லிய பிரமதேவனேச் சனகரிஷிமுனிவர்களோடு தோத்திரஞ்செய்துவணங்கினர். எ-று. (கூ)

கலி விருத்தம்.

அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம்வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறும்வாழி சைவம்வாழி வாழியே.

(இ-ள்.) பாவங்களேப்போக்கக்காரணமான பஞ்சாக்ஷரம் வாழ்கவாழ்க, அருணைசலத்தலம்வாழ்க, அருணைசலேசருடையதாமரைமலர்போன்ற திருவடிகள்வாழ்க, அசசுவாமி திருபைவாழ்க, அக்கருணைபோன்ற அழகாகியமேகவருடம்வாழ்க, பூலோகம்வாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயம் வாழ்க வாழ்க. எ று (சு)

ஞானம்வாழி நன்மைவாழி நாடுராச நீதிசீர்
தானம்வாழி தருமம்வாழி சதவேத மாகமங்
கானம்வாழி கல்விவாழி கற்றறிந்த கேள்வியன்
பானபோர்கள் வாழியீச னடியர்வாழி வாழியே.

(இ-ள்.) ஞானம்வாழ்க, நன்மைவாழ்க, நாடும் இராஜனும்; அவனுக்குரியநீதியும், கீர்த்தியும்,தானமும்வாழ்க, தருமம்வாழ்கஉண்

மையாகியவேதமும் ஆகமங்களும் வாழ்க, சங்கீதம்வாழ்க, மற்றவித்தைகளும் வாழ்க.அவைகளோகற்றறிந்தும், கேள்விப்பட்டும்மாவரிடத்தும் அன்புஉண்டானவர்கள்வாழ்க, பரமசிவன் அடியார்கள்வாழ்க வாழ்க. எ-று. (எ)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இக்கதை படித்தோர் கேட்டோ
ரெழுதினே ரெழுதி வைத்தோர்
மைக்கடல் சூழ்ந்த விந்த
வையக முழுதுங் காத்துத்
தக்கசந் தான போக
சவுக்கியந் தழைய வாழ்ந்து
திக்கரு ணேச ரன்பாற்
சிவபதம் பெறுவர் தாமே.

(இ-ள்.) இவ்வருணைசலத்தின்மான் மியத்தைப்படித்தவர்களும் கேட்டவர்களும், எழுதினவர்களும், எழுதிவைத்துக்கொண்டவர்களும், கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும் காத்துத் தருக்க புத்திரசம்பத்தும் போகசௌக்கியமும் தழையும்படியாகவாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணைசலேசர்கிருபையினால் சிவபதமடைவார்கள்.)

பதின்மூன்றுவது
புளகாதிபன்சருக்கம் முற்றிற்று.

அருணைசலபுராணம் மூலமும்-உரையும்
முற்றிற்று

பாயிர முட்பட சருக்கம் பதினொன்றுக்கும்
ஆக திருவிருத்தம்-கசகூ.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலரவர்கள்

இயற்றிய

திருவருணையந்தாதி.

காப்பு.

செந்தாதிமஞ்செறிசோணசலத்தரைச்சேர்சந்தமிழி
னந்தாதியமனைச்செற்றோர்க்குக்கோசலநாடுவிட்டுத்
தந்தாதியால்வண்புக்காரும்வேதச்சதுமுகரு
மந்தாதிகண்டிலர்யானேவந்தாதியறைகுவனே. (க)

நிறைவாகுவான்செம்மையொப்பான்பொருதநிருதரஞ்சு
மறவாகுவான்மகவான்பணிவான்பணிவைத்திருந்த [ளே
திறவாகுவான் பொற்கவான் குறியாதின்றென் சிந்தையுள்
யுறவாகுவானம்மருணையந்தாதியுரைப்பதற்கே. (உ)

நூல்.

பூமன்றலைமையளிசூழருணையிற்புங்கவனூர்
மாமன்றலைமையடுந்தலையாகவரங்கொடுத்தார்
காமன்றலைமையறவழலாக்கியகண்ணர்விண்ணோர்
தாமன்றலைமையக்கந்தீரநஞ்சந்தரித்தனரே. (க)

நஞ்சமையக்கச்சணிந்தவண்ணமலநம்பனெழுத்
தஞ்சமையக்கற்றடிபணியாதவரந்திபக
றஞ்சமையகத்துளேமிகத்தத்தித்தலைவெடித்து
நெஞ்சமையக்கத்துடன்போய்விழுவர்நெறியக்கயலே. (உ)

அயற்கண்ணிறைக்குஞ்செழுமாவனங்களரும்பவிழ்த்துப்
புயற்கண்ணிறைக்கும்பொழிலருணேசர்புனலிறைக்குங்
கயற்கண்ணிறைக்குமப்பால்வளைசோருங்கருத்துருகு
மயற்கண்ணிறைக்குமகாலயமன்னவல்லியர்க்கே. (கூ)

காவலர்கடுகுதல்.

வல்லியமன்றுமுதல்போற்றமாசுணம்வாழ்த்தமறை
சொல்லியமன்றுணடமாடுமற்புதன்சோணைவெற்பிற்
கொல்லியமன்றுடியோகர்க்காவலர்கொட்டுபறை
பல்லியமன்றுபகைத்திடியாகுநம்பார்த்திபர்க்கே. (சு)

பாரக்கழலுந்திவஞ்சியராடல்பயிலருணை
பாரக்கழலுந்தியாரணிவார்பதவம்புயமும்
வீரக்கழலுங்கண்டேன்குஞ்சிதானும்வெளுத்துத்தத்தஞ்
சேரக்கழலும்பொழுதுமுண்டோநமன்றீதுகளே. (டு)

தீதகங்காணியளவுமில்லாதென்றிருக்கறுத்தோன் [ச்
போதகங்காணிகொண்டேன்றெழுமீசன் பொருந்தருணை
சாதகங்காணிரைவண்டினங்களுயிர்தான்வருந்தும்
பாதகங்காணிலன்றேபிரிந்தாக்குண்டுபற்றுதலே (சூ)

பற்றவளக்கரும்பாரிடமோதின்படையிமவான்
பெற்றவளக்கரும்பாரிடத்தாய்மறைபேசருணைக்
கொற்றவளக்கரும்பாரிடநாலியுங்கூட்டியழ
குற்றவளக்கரும்பாரிடந்தேரெனவூர்ந்தவனே. (எ)

பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல்.

ஊருவரம்பையன்றுற்பகற்போதிலுறைவிடமைக்
தாருவரம்பையர்சூழும்பொன்னூட்டினுந்தக்கதுகாண்
காருவரம்பையிற்காரிணையாகியகண்டர்வில்வா
மேருவரம்பையிடத்தாரருணையில்வெற்பினனே. (அ)

வாயில்மறுக்கக்கேட்ட பாணங்கூறல்.

வெற்புடையானின்றவேலோனேத்தந்தவன்வேழவுரிப்
பொற்புடையானியல்சோணசலத்திற்புரவலனே
யிற்புடையாழெடுத்தென்மடமான்கல்லெதிரெறிந்தாள்
கற்புடையாளென்றசொல்லேகொடுத்தனுகைபலமே. (கூ)

பாகனெடுகழறல்.

பலவாகனங்களுஞ்சேவிக்குமால்விடைப்பாகனுமை
குலவாகனம்பனருணையிலேமுத்தின்கோவையெலாம்
நிலவாகனங்கடந்தேர்நாடிநிற்பவர்நெஞ்சருக
வலவாகனமுந்திணிற்குமோகையில்வண்டினமே. (கo)

வண்டுகளிக்குமரிப்புன்னைதோறுமதுவுண்டென்றுங்
கண்டுகளிக்குமலர்ச்சோலைத்தேனைக்கயலினங்க
ளுண்டுகளிக்குமருணசலத்திலுவந்துறைவார்
வெண்டுகளிக்குமதனுகப்பூசியமெய்யினரே. (கக)

இடையூறு கிளத்தல்.

மெச்சம்பரவையிரும்பொடியாகவிழித்தவன்றா
தச்சம்பரவையுறமேவுமத்தனருணையண்ணீர்
மச்சம்பரவையிருங்காவியென்றுமகிழ்ந்திருந்தேன்
நச்சம்பரவையிலானற்புதையுநயனத்தையே. (கஉ)

கையுறைபுகழ்தல.

நதியமலிக்குஞ்சடைமுடியாரருணசலனார்
பதியமலிக்குமுயிருக்குமானபரமர்வெற்பி
னிதியமலிக்குளமுதமொப்பீர்தென்றனின்றுலவும்
பொதியமலிக்குங்கிடையாதுகாணுமிப்பூந்தழையே. (கங)

கெடுதி விளைதல்

தழைக்குஞ்சரவணச்செவ்வேளைத்தந்தவர்சங்கிரிகை
குழைக்குஞ்சரபருணையிலேயிருகோலவிழி
யுழைக்குஞ்சரத்துக்குமொப்புடையீரொழுகுங்குருஇ
மழைக்குஞ்சரமிங்குவந்ததுண்டோமும்மதஞ்சொரிந்தே.

நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்.

சொரியுங்கடமையுவாவுரிபோர்த்தவன்சோணவெற்பி
லரியுங்கடமையுமைவாயழுவையுமந்திபகற் [ம்
றிரியுங்கடமையுண்கண்ணுளொருவன்பின்சென்றதென்ஞ
பரியுங்கடமையுமெம்மையுநீத்தின்றுபாவையரே. (கநி)

பாவலருந்தவருங்காணத்தூதுசெல்பாதர்கனி
வாவலருந்தவருங்காவருணையின்மத்தரெண்ணூர்
ஏவலருந்தமருங்காமன்கொண்டெய்யவேந்திழையார்
காவலருந்தவருங்காதல்பூண்டிவணிகின்றதே. (கசு)

கைவளையாழிசைச்சொல்லிபங்காரருணைசலஞர்
மைவளையாழியினஞ்சுகந்தார்நெடுமாலவர்க்கே
கைவளையாழியளித்தாரெனக்கண்டுகைதொழுதேன்
பெய்வளையாழிகளெல்லாமிழந்தனன்பேதையரே. (கஎ)

பேய்த்தேரைநீரென்றுழல்வீர்களுழன்பிடித்தபணி [ஞ்
வாய்த்தேரைநீர்மைகண்டீரிந்தவாழ்க்கையம் மாயமெல்லா
சாய்த்தேரைநீர்பெறுபேறுசொல்கேன்கற்பதாருங்க
ராய்த்தேரைநீள்கொடிசூழருணைசரடிதொழுமே. (கஅ)

தொழுவாருமானிடர்காணரகேழையுந்தூர்க்கும்வண்ணம்
முழுவாருங்கோயில்வலஞ்செயவாருமுதன்மடக்கே
யுழுவாருமங்கவர்மங்கைகணல்லாருமொதுக்கிமுத்தை
யெழுவாருஞ்செந்நெல்வயலருணைசரையேற்றரையே.

ஏற்றுக்கரைக்குளிர்சோணசலத்தாரையேத்தலின்றிச்
சோற்றுக்கரைக்குடைக்காடைக்கென்றேமனந்துன்புறுவீ
ராற்றுக்கரைக்குண்மரம்போலுடல்விழவாருயிரைக்
கூற்றுக்கரைக்கும்பொழுதுமக்கார்கைகொடுப்பவரே. ()

கொடுங்கையிலாயிழையார்தனபாரத்திற்கூடியவர்
நடுங்கையிலாயகண்ணுற்றளர்வீரவர்நண்பையெலாம்
விடுங்கயிலாயனயன்போற்றருணவிமலரைவாழ்த்
திடுங்கயிலாயமலைமேலிருப்பதெளிதுமக்கே. (உக)

உன்பாவனையுநினைவுமுண்டாகியொழிவதில்லா
வென்பாவனையும்படியாரிதேயிரங்காதவர்க்கு
வன்பாவனையும்பிறப்புமில்லாயன்புவைத்தவருக்
கன்பாவனையுமதிலருணச்சலத்தாதிபனே. (உஉ)

ஆதித்தனையனங்காரகன்போற்றியவண்ணல்கழைச்
சோதித்தனையனங்காவருணசலன்றேயுமட்டும்
வாதித்தனையனங்காவினிப்போதுன்வதமழியப்
போதித்தனையணங்கான்றிங்களாகப்புறப்பட்டதே. (உங)

புறங்காட்டிஞலும்புயம்வீசருணையிற்புங்கவனூர் [ற்
அறங்காட்டிஞலுமுனிவோரையாண்டவரம்பொன்பெற்பி
கறங்காட்டிஞலுங்கோவெனச்சுழல்காற்றெய்வமே
யுறங்காட்டிஞலுளதோவிவளாசைக்கொருமருந்தே.(உச)

துணிவு.

ஒருமானிடங்கையிலேயொருமான்றறித்தொன்னலரைப்
பொருமானிடமிசைவருவான்முப்புரமெரித்த
பெருமானிடங்கொண்டசோணசலத்தினிற்பேதையின்பந்
தருமானிடமங்கையென்பதுகாட்டியதாமரையே. (உடு)

குருகோடிரங்கல்.

தர்விக்கவருமலகாற்கயலின்றலைபிடித்துண்
ணவிக்கவருமினக்குருகீரொருநாளடியார்
சேவிக்கவருங்கதிதந்தபாதர்திருவருணை
பாவிக்கவரும்பகையாகினுலென்பகருமதே. (உசு)

பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல்.

கருங்குவளைக்குளிர்பூவணைமீதிற்களித்துமுகஞ்
சுருங்குவளைக்குலஞ்சூழருணைசர்துடிக்கினையா
மருங்குவளைக்குந்தனமயிலேபுண்மடலல்லவோ
நெருங்குவளைக்குழையார்தந்தகாதலைநீக்குமதே. (உள)

நீங்காவிடைக்கொடியாரருணைபுரிந்தர்வெற்பி
லோங்காவிடைக்கொடியார்தந்தபால்கொண்டுலாவரவே
பூங்காவிடைக்கொடிபோலேயிருந்தந்த பொற்குடத்தைத்
தாங்காவிடைக்கொடியாவகையார்செய்யத்தக்கவரே. (ஏ)

கலவிக்குப்பிரிவு தலைமகளுணர்ந்தேதாழி

தலைவிக்குணர்த்தல்.

தக்கவிருக்குமணிகேள்வர்போற்றியசங்கரனூர்
மிக்கவிருக்குமறையாரருணையில்வெற்பரென்றே
டொக்கவிருக்குமலர்ச்சோலையிலெய்தியொண்ணுதலா
யிக்கவிருக்குமணமாமென்றூர்கல்வியெய்துமென்றே (உக)

எச்சிலந்திக்கும்பகலைக்குமேற்றுமெயினனுக்கு
மெச்சிலந்திக்குமருளருணைசரைலில்லம்விளா
நொச்சிலந்திக்குஞ்சடையாரையேத்திலர்நுண்ணிடையார்
பொய்ச்சிலந்திக்குநிகர்மூலக்கேவைப்பர்புந்தியையே. (ஏ)

புந்தினடுக்கந்தவிர்த்தென்னையாண்டநற்போதன்சென்னி
யைந்தினடுக்கந்தடிந்தேதானருணையமலனிதழ்த்
கொந்தினடுக்கந்தருங்கொன்றைவேண்டியென் கோதைதவ
சிந்தினடுக்கந்தனிலேயிழந்தனள்சித்தமுமே. (நக)

சித்தமிழுக்குறத்தீமையுரூர்பெருஞ்செல்வமரூர்
முத்தமிழுக்குமுதன்மையுமாகுவர்முண்டகப்பூங்
கொத்தமிழுக்குவரக்கனியூரல்குளிர்நதியாய்
நத்தமிழுக்கும்வயலருணேசரைநத்தினரே. (நஉ)

கிழவோன் பிரிந்துழிக்

கிழத்திமாலையம்போதுகண்டிரங்கல்.

நந்திக்கொடியமலராதியார்திசைநான்கினுஞ்செவ்
வந்திக்கொடியமலர்வீசருணைவீல்வாசமலர்
சிந்திக்கொடியமன்போல்வானுலாவருந்தென்றலையு
மந்திக்கொடியமதியையுங்காண்கிலரன்பினரே. (நங)

பின்பரியங்கவடியாணுஞ்செய்யபிதாமகனுந்
தன்பரியங்கவடிதாங்கநிற்பவண்சந்தனத்தாள்
மூன்பரியங்கமடிசிலுண்டானேமுகனருணை
யன்பரியங்கவடிவேல்விழிச்சிக்கலர்பெரிதே. (நச)

பெரும்படைவாளையடர்த்துழுவாளைப்பெயர்த்துவயற்
கரும்படைவாளைபுகுமருணைபுரிக்கண்ணுதலார்
அரும்படைவாளையிலாம்விழியாளையளகத்திலே [யே.
சுரும்படைவாளையணையான் கொடான்கொன்றைச் சூழ்த்தொடை

மெய்தொட்டுப் பயிரல்.

தொடுத்துவண்டானமறைபாடவாடியதோன்றல்வய
லடித்துவண்டானமருவருணைபுரியன்னமன்னர்

நடித்துவண்டானம்பரிதேர்மருங்குலிந்நாரிதனை
விடித்துவண்டானமர்காள்மதஞறிக்குள்வீற்றிருமே.(நக)

இரும்புணரிக்கணஞ்சேற்றுண்டநாதனிசைச்சுரும்பின்
பெரும்புணரிக்கணன்மெய்யழித்தோனெம்பிரானருணை
விரும்புணரிக்கணமேமனமேபிணைமெய்யொழிந்தாற்
கரும்புணரிக்கணஞாளியின்கூட்டங்கழித்திடுமே. (நஎ)

கழிப்பாலியேகம்பந்தில்லையின்மேவியகண்ணுதலான்
செழிப்பாலியேதிகழ்தென்னருணைசன்சிலம்பிலிரு
விழிப்பாலியேவுளவண்டர்மின்னேதயிர்விற்கவந்து [யே.
மொழிப்பாலியேன்சிந்துவீர்முனிவோர்கொள்மோகத்தை

மோகமருப்புக்கமலவிற்காமன்முடிக்குதவிக்
கோகவரும்புக்கமலமொப்பாயெழுகொங்கைகல்லார்
தாகமறுப்புக்கமலப்பொற்றூளிற்றனித்தருளாய்
நாகமருப்புக்கமலமுன்சூழருணைசலனே. (நக)

அருணைசலம்பதியாயுறைவாயரவாபரணு
கருணைசலநிதியேமுதலீறுங்கலையுமில்லாத்
தருணைசலஞ்சலமும்மயிராவதத்தந்தமும்போன்
மருணைசலங்கொடுதாரருக்காதருண்மாதருக்கே. (சo)

தலைவியைத் தலைவனெதிர்ப்படல்.

மாதவிழாவுடையாரருணைசார்வரையில்வண்டு
கோதலிழாமற்கதிரோணடைத்தசெங்கோகனகத்
தாதவிழாததிருக்கோயிலுக்கொருதாழுமுண்டோ
போதவிழாநிற்குமன்பாலென்பாரிருட்போந்தவரே. (சக)

போதாம்பரத்தையகலாமற்காஞ்சிபுரத்துறைவான்
பீதாம்பரத்தையனன்முகன்றேடும்பிராணருணை

மாதாம்பரத்தையுரத்தையொப்பாநெஞ்சவஞ்சகரே
யேதாம்பரத்தையர்கண்டாலென்பால்வந்ததேழமையே. (சஅ)

ஏழுமுழுக்குஞ்சரத்தேலருணையிரையெனுமால்
கீழுமுழக்குஞ்சரத்தாள்கொடாவுவமைகேள்வனெனும்
வீழுமுழக்குஞ்சரமாரியெய்தனன்வில்லியென்னுஞ்
சூழுமுழக்குஞ்சலதியென்றேதுமென்றாநகையே. (சஆ)

தூரியங்காமன்கடலாகத்தோன்றினன்சூரியனுர்
தேரியங்காமன்முகிலியங்காமற்றிசைகளெல்லாம்
வேரியங்காமன்றிருவருணைபுரிவித்தகனே
நாரியங்காமன்பதைபுரப்பான்றெழுநாயகனே. (சக)

நாயகனுவிக்குலஞ்சூழருணையினப்பனழற்
சாயகனுவிக்குரியனென்றேத்திலர்தண்டமிழார்
தூயகனுவிக்குமாரவென்றற்பரைச்சொல்வர்நெடி
தாயகனுவிக்குரம்பையில்வாழ்க்கையுமாவியுமே. (சங)

ஆவணங்காரணமாய்வெண்ணெய்மேவியவந்தணனுர்
பூவணங்காயம்பலஞ்சேர்பவர்வரும்பூமகண்மால்
பாவணங்காரணன்போற்றருணேசர்பவனிவந்த
மாவணங்காரணங்காரணங்காகிமருவினரே. (சஉ)

மருமகரந்தருகரளிநாரிவரிக்கொடியே
யொருமகரந்தனுவிக்கானவேளையருவிழித்தார்
அருமகரந்தணர்போற்றருணேசரடியவற்குத்
தருமகரந்தனையோவும்பர்நாடென்பதங்குதற்கே. (சச)

பாங்கி கையுறையேற்றல்.

தங்குறைந்தடையாவயில்போல்விழித்தையலுன்றன்
வெங்குறைவந்தனையாலுரைத்தேனினிவேட்டருள்வாய்

மங்குறைவந்தலருணைசர்மணிச்சிலம்பர்
கொங்குறைவந்தணைசோகையின்மாந்தழைக்கொத்தினையே.

ஆற்றிடமுக்கோர் பகைவரை விலுவுதல்.

கொத்தடியானடியேனென்கூறிக்குலிசத்தினன்
மத்தடியானயன்போற்றருணைசர்மணிவரைமேற்
றத்தடியானடையன்னமொப்பானவென்றையனல்லாள்
முத்தடியானடப்பிர்வந்ததாகின்மொழிந்திடுமே. (சசு)

கனவினலியுரைத்தல்.

மொழித்தேனையோர்ந்துமவராகஞ்சேர்ந்துமுயங்கையிலே
விழித்தேனையோமுன்விதிப்பயனேகதிவிண்ணவரை
யொழித்தேனையோர்க்குந்தருவாருணையிலோடையிற்பூங்
கழித்தேனையோதிமணத்தாலழைக்குங்கருங்குயிலே. (நிo)

கறுத்தகண்டத்தையர்சோணசலத்தர்வெண்காட்டுநங்கை
யறுத்தகண்டத்தைமகவாயழைத்தவராற்றிலர்தீப்
பொறுத்தகண்டத்தைவிழுங்கிலாவெழும்போதயிலே
வெறுத்தகண்டத்தையனையசொல்வார்தம்விருப்பிசையே.

பாங்கிமிறைவனை நகுத்தல்.

விருப்புச்சிலையமர்ந்தாரருணசலர்மேருவெற்பின்
மருப்புச்சிலையெனும்வேழமெய்வாருக்குவாங்குவில்லம்
பருப்புச்சிலையின்றணங்கேயென்னுங்கொனுலகைவென்ற
பருப்புச்சிலைமதன்கூர்வாளிபார்க்கிற்கடிமலரே. (நிக)

கடியரவத்தையுநீர்மானுந்திங்கட்கலையும்வைத்த
முடியரவத்தையன்பர்க்கணுகாமன்முழக்கஞ்செய்யுந்
துடியரவத்தையர்சோணசலத்தைத்தொழாதமண
மிடியரவத்தையடைந்தேழ்நரகத்தும்வெம்புவரே. (நிங)

வெப்புக்குழைக்கும்பனிநீரென்றங்கம்வெதும்புமத
னப்புக்குழைக்குமருணசலத்தரையையரெனுங்
கொப்புக்குழைக்குமப்பாலுங்கண்மாரிகுதிக்கவிழுஞ்
செப்புக்குழைக்குங்கராமுலைவிழித்தீங்கனியே. (நிச)

கற்றாய் தலைவிசொல் சுரந் தணித்தல்.

தீகுதிக்கும்பரல்சூழ்ந்தசெம்பாலையின் றீமையற்றுப்
பாகுதிக்கும்பைங்கரும்பாலையாகப்பழனமன்றி
யாகுதிக்கும்பர்மகிழருணபுரியத்தர்வெற்ப
ரேகுதிக்குத்தையல்சென்றுடமிருநிலத்தே. (நிஙி)

சித்தது.

நிலவிரதத்தரைச்சோணசலத்தரைநெஞ்சில்வைத்த
கலவிரதத்தரெண்ணித்தரியாகவந்தமுடன்
பலவிரதத்தரும்போனமுங்கூட்டிப்படைப்பயனே
கலவிரதத்தரிதாரம்பொன்னுமெந்தக்காலமுமே. (நிசு)

காலைக்கரும்புகொண்டாற்போதலர்ந்தமெய்க்காதலி
லாலைக்கருப்புநிகர்த்தமின்னுருக்கருள்புரியாய்
வேலைக்கரும்புலரக்கரைவாளிவிடுத்ததுமாய்
மாலைக்கரும்புயமேறடருணசலமன்னவனே. (நிஎ)

மன்றமரத்தையல்காணநின்றுடியமன்னபுன்னை
யின்றமரத்தைநிகழருணேசவெனுமெல்லியா
ளென்றமரத்தையலர்பூட்டினன்மதனென்றிடையன்
கொன்றமரத்தையொத்தாளிழந்தாள்கைக்குருகினமே. (நிஅ)

குருவடிவேபெற்றுயர்கயிலாயக்குவட்டில்வட
தருவடிவேர்கொண்டிருப்பாரருணசயிலத்திலே
யிருவடிவேல்விழிபோலவீரென்சென்னிக்கிசையவுங்கள்
திருவடிவேய்த்திடுமீனவன்சூழ்த்துவண்சேகரமே. (நிக)

சேகரமாகவலியாருடன்வைத்தசெல்வகரு
ணாகரமாகவலியாற்றருணையினம்பவிழிச்
சாகரமாகவலியாற்றுறக்கிருந்தையலர்க்குச்
சூகரமாகவலியாவருமென்றுதோற்றுவதே. (சுo)

தோற்றுருத்திக்குநிகரான துரித்தஞ்சோறுதுற்றுப்
போற்றுருத்திக்குளெழுகாரிற்போய்விடும்பூதலத்தீர்
மேற்றுருத்திக்குமருந்துக்குமீசரைவேரிவயல்
நாற்றுருத்திக்குநிகருணைசரைநம்புமினே. (சுக)

மின்றனந்தங்கநிறமேபுனைந்ததும்விஸ்லிகணை
யொன்றனந்தங்கணையான தும்பார்க்கிலனுற்பலத்தே
சென்றனந்தங்கமலர்வீழுருணைச்சிவன்கனக
மன்றனந்தங்கமலர்க்கரிதாகியவானவனே (சுஉ)

வானரகத்தியனேழுதலாமவர்வாழ்த்தும்வெள்ளை
யானரகத்திலிடர்தீர்க்குமத்தருணை
ரீனரகத்தில்வழிகுழியாய்ச்சென்றிரப்பர்பின்னைத்
தீனரகத்திரைதரணிகவீழ்வரச்சேதகத்தே. (சுங)

சேதாவையோதிமத்தாற்புரந்தோன்பங்கர்தென்னருணைப்
போதாவையோதிமந்தன்னையென்னெஞ்சதுபூங்கணையாற்
கோதாவையோதிசருகாவையென்றமைக்கூட்டில்வைத்த
வேதாவையோதினம்வீழ்வானரகத்தின்மெத்தவுமே.(சுச)

எயிற்றியொடு புலம்பல்.

மெத்தவெயிற்றிகழ்கானகத்தேமலர்மென்கொடியே
யொத்தவெயிற்றுகண்டாயிலையோவும்பரூரளவாய்
வைத்தவெயிற்றிகழ்தென்னருணைசர்மணிவரைமேன்
முத்தவெயிற்றியுமுத்தாரமார்பனுமுன்வரவே. (சுஙி)

வரும்பெண்ணை யிலனஞ்சூழ்ந்தேதாகாடாற்குமால்வரையோன்
றரும்பெண்ணை யிலமைத்தாரருணேசர்க்கென்றையல்மயல்
கரும்பெண்ணை யிலையிலெல்லாமெழுதிக்கடிதுவட்ட
சரும்பெண்ணை யிலைவகைவகையாகிய தூதினுக்கே. (சுசஅ)

இறையோ னிறைவித்தன்மை யியம்பல்.

தூதுவளைக்குவனக்கனிவாயொப்புச்சூதமன்ன
னூதுவளைக்குங்கர்கழித்தாந்தெய்வஞர்முனிந்த
போதுவளைக்குஞ்சிலையருணேசர்பொருப்பனையார்
காதுவளைக்குவமேயமின்றேயென்றன்கண்மணிக்கே. ()

நெறி விலக்குதல்.

கண்கைகவரிக்கரிமேற்றொடரக்கரிகளஞ்சி
யெண்கைக்கவரிவனத்தேயிரவிக்கிளங்கமுகு
தன்கைக்கவரியிடுமருணேசர்சயிலத்தின்ப
மூன்கைக்கவரிருள்வாராதுரையென்றனுண்மெலிவே(சுஅ)

உண்ணுமலையத்தகுங்கோபமோகமுலோபமுற்றுய்
தண்ணுமலையத்தமிழ்ப்பாடல்புல்லர்தமக்குரைப்பாய்
அண்ணுமலையத்தனைப்புகழாயனுவத்தனையு
மெண்ணுமலையத்தனைமனமேநமக்கென்கதியே. (சுகூ)

பாங்கி புலம்பல்.

கதிரங்கழலிடரீமத்திலாடிவெங்காலனங்கத்
துதிரங்கழலவுதைத்தருள்வானிசையோங்கருணை
யுதிரங்கழலனணியாமனெஞ்சமழிந்தவஞ்சி
யெதிரங்கழலிறைக்குஞ்செக்கர்வானத்திளம்பிறையே. ()

பிறைக்கண்டருந்திசைகாணுதுழலுமென்பேதைநல்லா
ளுறைக்கண்டருந்திரையோதமொப்பாகியதோதமென்ன

முறைகண்டருந்திமலரோன்புகுதமுழங்கருணை
கறைக்கண்டரும்பிற்கொடுத்தாரிலச்செழுங்கைச்சங்கமே
சங்கமலங்களச்செல்லாதடர்ந்திடுந்தன்பழனச்
செங்கமலங்களையாறுவொழுகவத்தேனலக்கே
துங்கமலங்களேதென்னருணைபுரிச்சோதிதந்தான்
பங்கமலங்களேப்பண்ணுமன்ஞானப்பளிக்கறையே. (எஉ)

தலைமகன் செல்வின்றூட்குணர்த்தி விடுத்தல்.

பளிக்கறைதோறுஞ்சுதையோட்டச்சொல்லுமுற்பாடமெ
கிளிக்கரையச்சொல்லுமந்தணரேகினர்காளவிடத் [ல்லாங்
துளிக்கறைகண்டத்திருத்துஞ்செம்மேனியர்சோணவெற்பி
லளிக்கறைபோன்றசெவிலிக்கும்பாங்கிக்குமன்னைக்குமே.

அன்னைக்களிக்குமதுவண்டவாறெக்குமன்னமன்னு
ளென்னைக்களிக்குமதுவமற்றேவரையிந்தரருப்
பின்னைக்களிக்குமதுசூதனன்றெழும்பிஞ்ஞகனர்
புன்னைக்களிக்குமுதல்சூழருணைப்பொருப்பவனே. (எச)

அவமானமன்றமராற்செய்தவேளையழுத்தவனந்
தவவானமன்றமராடலன்சோணசயிலமிம்பற்
குவமானமன்றமராவதிநேரென்றுரைமனமே
சிவமானமன்றமராலழியாதுநஞ்சிற்றுயிரே. (எடு)

சிறுமையிராவணனகமுன்னுட்செய்தசேவடியாய்
பெறுமையிராவணனுடருணைபுரிப்பிஞ்ஞகனே
யுறுமையிராவணனகியகாலன்பட்டோலையிலே
மறுமையிராவணனகமற்றூட்கொண்டுமாற்றுகவே. (எசு)

பாங்கி தலைமக ளவயவத் தருமைசாற்றல்.

மாற்கண்டனையந்தகன்வருத்தாமல்வரங்கொடுத்த
நீற்கண்டனையன்றிருவருணைபுரிநேரிழையார்

பாற்கண்டணையலஞ்சேர்மொழியைப்பயின்றகொலை
வேற்கண்டணையனத்தோளுமன்பனித்கரிதே. (எஎ)

அரிபுரந்தாழ்வுறச்சிம்புளதானவமலரங்கி
திரிபுரந்தாவநகைத்தாருணையிச்செம்மலிரு
பரிபுரந்தானுற்றபொற்றொடாழுதுவர்பாரளகா
புரிபரந்தார்பின்புரந்தாலுடும்புரந்தனரே. (எஅ)

புரந்தரவானவன்போற்றருணபுரிப்புங்கவனே
யிரந்தரவானபணிபுனைவாய்பிறப்பேழினிரந்
தரந்தரவானமன்றாதர்செல்லாவரந்தாபிறவா
வரந்தரவானம்பினேனெனக்கோர்கதிமற்றில்லையே. (எகூ)

பாங்கன் தலைவனைவியத்தல்.

இலங்காரவாரணிந்தேகாயத்துண்ணின்றிடையொடிக்கு
மலங்காரவாரணக்கோட்டின்முன்னேநின்றவன்பரெங்கு
மலங்காரவாரநிறையருணேசர்மணிவரைமேற்
கலங்காரவாரணஞட்டுமெட்டாயகரிகளுக்கே. (அ0)

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லிநாடலிற்
சுனைவியந் துரைத்தல்.

கரும்புகையுந்துஞ்சிலையாமதனுடல்கட்டழலும்
பெரும்புகையுஞ்செரித்தாருணபுரிப்பெண்ணமுதே
சுரும்புகையுந்தொடையுஞ்சுந்தரகேசையைச்சூழவெயர்
வரும்புகையுந்தருமோசுனையாவர்சென்றடினுமே. (அக)

ஆடரவக்குழையாரணிவாரிசையாளர்நின்று
பாடரவக்குழையாரருணேசர்கண்பாத்தருளார்

கோடரவக்குழையாரளிகரண்மதன்கோத்தமலர்த்
தோட்டரவக்குழையாரணங்காருயிர்த்துன்பத்தையே. ()

துன்னியமாமுனிவாலுரித்தானச்சுகமெனுடுப
மன்னியமாமுனிபோற்றருணேசன்வரங்கொடுத்தா
னன்னியமாமுனிகாத்தூதரோடினுங்கணுகிவா
றென்னியவாபுனிலாதேயெமைக்கடந்தேறகில்லே. (அஉ)

ஏற்றுவளத்துவசத்தாரருணையிலேந்திழையீர்
தோற்றுவளத்துளமுதூட்டிநாண்மலர்சூட்டியன்பா
னேற்றுவளர்த்துவிடுத்தமின்னெவன்னிலத்தினிடை
நூற்றுவளத்துவளநடந்தான்பதநேரவரவே. (அசு)

வரங்களங்கற்றவர்க்கொன்றுங்கொடாதொழிவாரவர்மா
யிரங்களங்கற்றவர்க்கீவாரருணையிறைவரன்று
புரங்களங்கற்றவர்கொண்டெரித்தார்மயல்பூணுமட்டு
சரங்களங்கற்றவர்மேல்விடுவோன்வரத்தாமதமே. (அஙி)

தாமதியாதவரன்பர்முன்னேவரத்தங்குவிழி
நீமதியாதவராமருணேசர்தந்தேரின்முன்னே
போமதியாதவர்தார்கேட்பதென்னேபுலருநெஞ்சே
நீமதியாதவர்பால்பலகாற்செல்லனீதியன்றே. (அசு)

நீடத்துவாபரம்பொன்மலையானதிருத்தர்பிறப்
போடத்துவாவறுத்தாரருணைபுரியோங்குமணி
மாடத்துவாமதிநேர்முகம்வேர்க்கவெண்மார்பமெனுங்
கூடத்துவார்முலைப்பந்தாடுளேநின்றுகோதையரே. (அள)

கோதாயனங்கனம்பான்மெலிவேனுயிர்கொள்ளுகொள்ள
வாதாயனங்களிற்றென்றலையாவர்வரவழைத்தார்
பேதாயனங்கடவாமருணேசர்பிரிந்தவர்க்குத்
தீதாயனங்கழையோசையென்றருடன்செப்புமதே.(அஅ)

தண்மகன் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

செப்புளிக்குஞ்சிதையாமுரம்பூடுமென்சேவடிகள்
கொப்புளிக்கும்பொழுதென்படுமோவுமைகொங்கையிட்ட
மைப்புளிக்குங்குமத்தோளருணைசன்மணிவரைமேல்
லப்புளிக்குஞ்சரமோயும்வெம்பாலையருநெறிக்கே. (அக)

நெற்றிவிடும்பகிராதபுன்மாக்களைநீர்க்கடனும்
வற்றவிடும்பரிமாகுலாவெனுமானிடர்காள்
உற்றவிடும்பையறவருணைசரையொண்கரத்தைச்
சுற்றவிடும்பையரவாரைவாழ்த்துஞ்சுருதிகாண்மே. (கூ0)

சுரும்பாயிரங்கலைமான்குயிலாயிரந்தூதுவிட்டேன்
இரும்பாயிரங்கலைநெஞ்சமென்னேவினியாயினுந்தான்
றிரும்பாயிரங்கலைசூழருணைசலசெப்பியமால்
பெரும்பாயிரங்கலைதான்போனதோதிற்பெருகிடுமே. (கூக)

பெருகாசினியமதுரங்களாகப்பிறர்க்குமொழிந்
தொருகாசினியன்புசெய்யுமென்றுழுதவுவரோ
முருகாசினியடர்சோணசலத்தின்முதல்வரின்பந்
தருகாசினியம்பரம்புகழ்வார்க்குத்தருகுவரே. (கூஉ)

தந்தவிலங்கலைநேரானசேனைத்தலைவர்களும்
பந்தவிலங்கலைபாததரானதும்பார்த்துநெஞ்சே
முந்தவிலங்கலைதீதெரிகாணின்மொழிந்துதொழாய்
அந்தவிலங்கலைவில்லாக்கருணைமலரென்றே. (கூங)

அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

அக்காந்தளையடைந்தாடரவாவென்றரும்பவிழ்ந்த
செங்காந்தளையஞ்சிறின்முழுமேபதைதிருநுதியின்
பொங்காந்தளையடர்தென்னருணைசர்பொருப்பின்மலர்
கொங்காந்தளையஞ்சிதாரோபின்செல்லக்குறித்தனளே. ()

குறித்திட்டமோதக்கரங்காட்டுநெல்லைக் குவித்திரண்டாய்
பிரித்திட்டமீதொன்றுதீண்டணங்கேபிரமன்சிரத்தைத்[ப்
தரித்திட்டசோணகிரிநாதர்சேர்வருன்சட்டுவத்தேதன்
மறித்திட்டகூனன்றுகேளாய்கெவுளிவலஞ்செய்ததே. ()

வலந்தினஞ்செய்துபணிந்தேத்துமன்பர்வடிவுசெவ்வ
னலந்தினஞ்செய்துமிடற்றினெற்கருணைதர்நந்தங்
கலந்தினஞ்செய்துதைந்தாரத்தையீனுங்கவினருணர்
சிலந்தினஞ்செய்துணைத்தாடொழக்கண்டருள்சிற்பரனே.

சிற்பரவத்தனதியணிவேணியன்றிண்புயத்து
பொற்பரவத்தனற்சாக்கியனருட்பொருந்திவிட்ட
கற்பரவத்தனகமிழ்கத்தனருணையின்க
ணிற்பரவத்தனுவன்புமெய்துவர்நீணிலத்தே. (கூஎ)

நிலமந்தரவப்பதியோர்கணிதமுமடைக்
கலமந்தரப்புயகொன்றையவெற்றுகழல்பணியு
நலமந்தரங்கத்தன்கண்டோதுமத்தனளினத்தளிக்
குலமந்தரப்பண்டருமருணைவயற்கொற்றவனே. (கூஅ)

கொற்றவரக்கரம்வானவரிந்திரன்கோக்கணத்தன்
நற்றவரக்கரமெட்டுடையான்புவிநாகத்தருஞ்
பற்றவரக்கரஞ்சூலாருணையப்பதியருள்ளன்
புற்றவரக்கரவிந்தம்பதத்தன்புதவுவரே. (கூகூ)

உதவக்கரத்தாவங்கங்கணத்தின்னருகம்புண
னிதவக்கரத்தரகோரியருணைநிலத்தினமே
னதவக்கரத்தரமாங்கழலாரியம்பரையு
புதவக்கரத்தரவர்க்குயர்பாகன்வெண்பூமன்னனே. (கஂ)

திருவருணையந்தாதி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சை - எல்லப்பநாவலரவர்கள்

அருளிச்செய்த

திருவருணைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

அன்னவயல் சூழருணை யண்ணு மலையார்மேன்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத்—துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின்மீதெழுதும்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனுகரன்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும் [யே.
உய்வைத்தரச்செய்த கால்வர்பொற் றூளெம்முயிர்த்துணை

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு-க.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடுமா றுணராதே
ஏனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வலவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்தும்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்கபெரும்
சோணகிரியெனநிறைந்த சுடரொளியாய்நின்றருள்வோய்.

இவை ஈரடித்தாழிசை-எ.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே.( )
இத்தலத்தி லுன்தொழிலு மிருபிறப்போ ருறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையே லியலாவே. (உ)
இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பல்பேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைக்கவறியாதே.
கருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடக்கவுநின்
இருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே. (ச)
தானவரைக் கடிந்தமலர்ச் சதுமுகனை யொழித்தமற்றை
வானவரை யழித்துநின்கை மழுப்படைவாய் மழுங்காதே.
அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டு நுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே. சு)
மூவாமை தனக்குநின்றன் முதலடியீ றிலாதமைக்குள்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே. (எ)

இவை நாற்சீரோரடியிரண்டுகொண்ட அம்போதரங்கம்-உ.

தடவரை நடைகெழு தாமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை. (க)
படமுடை யரவொடு பகைபடு முடுபதி
தடையற வுடனுறை சடைநெடு முடியினை. (உ)

இவை முச்சீரோரடி அம்போதரங்கம்.

கலையென மலையை வளைத்தனை (க) கலைமறை யிவுளி படைத்தனை.
திரிபுர மெரியநகைத்தனை. (உ) கதிரவனெயிறுபுடைத்தனை (ச)

இவை இருசீரோரடி அம்போதரங்கம்.

விதி சிரத்தினை (க) விடை நடத்தினை. (ஈ)
அகழ் கரத்தினை. உ) பொது நடத்தினை. (ச)

நதி தரித்தினை. (நி) நாள்களாயினை. (எ).
மதி பரித்தினை. (சு) தோள்களாயினை. (அ)

இவைபெயர்த்தும் ஈரடித்தாழிசை-ங.

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதபுநீ யபேதமுநீ. (க)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே. (உ)

ஆராலு மளவிடுதற் கரியவுனை யொருகரத்து
நீராலு மலராலு நெஞ்சுருகப் பணிலாமே (ங)

இதுதனிச்சொல்லெனவாங்கு.

இது பத்தடி நேரிசை ஆசிரியச் சுரிதகம்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுதணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றுனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனமேல். (க)

நேரிசை வெண்பா

வேதநவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியிய மானனிவர் சோமனிவர்—ஆதவனும்
மண்ணுங்கா லும்புனலும் மானுமழ ருனுமிவர்
எண்ணுங்கா லெல்லா மிவர். (உ)

கட்டளைக்கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவின்
அல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மாரனிருக்கவும் யோகம்விளைத்த வந்நாள்
புல்லாதிருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (கூ)

கலித்துறை.

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்காள்
ஆகம வித்தார் மோக முவித்தா ரருணேசர்
கோக னகத்தா ளாக நினைத்தே குழைவீரே. (ச)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

குழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர்
குளிர்வெற் பூடே
மழையடுத்த துளிநனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுறுகித்
தளரு மாலை
பிழையெடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பியாதே. (டு)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பாதவர் குலத்துநெடு மாதவன் மருப்புடைய
வேனமிடு கத்துருவ மாய்
வேதமொழி பெற்றவய னேதிம மெனப்பறவை
வேடமு மெடுத்த திலையோ
ஓதருணை வித்தகரை மூவரி லொருத்தரென
வோதியிடு மற்ப மதியீர்

சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி னேத்த பரமே. (சு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவை யாடினு நதிகளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினும்
குரவ ராயினுங் கனலி னின்றதன்
கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ
அரவ மாடுசெஞ் சடில ரங்கணு
ரமுதர் தாணினைந் தடியர் தம்பொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முக்த ராவரே. (எ)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ் முறைமுறை யன்பொடு
மப்பர்க வுணியர்சொல் சுந்தரர்
முப்பொழு தமெதிர்ப்பு கழ்ந்திடு முதுநூலார்
அத்தர ருணையி னெடுந்திறை
தத்துதி ருநதியின் மென்படை
யச்சம றவுடன னேந்துரை மடநாராய்
ஒத்தம னதொடுபு ணர்ந்தவர்
சற்றுமக லவதிலை யென்றவ
ருற்றது ணையெனவி ருந்தவ ருலம்வேறுய்
எத்தனை கபடநி னைந்தவர்
கைப்பொருள் கருதிநடந்தன
ரெப்படி யிறைவரை நம்புவ தினநாமே. (அ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைதனுடல் புகமொழிவரே

கனகமுக படகவள கரடதட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமதலை யொருமுதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
அனகரபி னயரதுல ரமலரெம தருணைகிரி
யடிகடம தடியவர்களே. (கூ)

தலைவன் விளைவுதல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
ரருணைவ ளம்பதி யன்னரே
படியினெ டுங்கிரி யனையம தங்கொடு
பதறிட டந்திடு மின்னரே
ஒடியு மருங்கென வுணர்கிலர் நின்றினி
யொருவச னஞ்சொல வொண்ணுதே
கடியச ரங்களி னிலைஞரு டன்பல
கலகவி தம்பயில் கண்ணரே. (கo)

அம்மானை-மடக்குத்தாழிசை.

ஈரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றே வம்மானை
அன்னமறி யாரெடுப்ப தையமோவம்மானை. (கக)

பாங்கி தலைவிக்குரைத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார், கலியென் பார்கைம்
மலையென்பார் வழியே தென்பார்

ஏனென்பா ரீலையென் பார்யா
னேந்துமாந் தழைநன் றென்பார்
ஊனென்பார் நிறையுந் தாரா
ரூறையுந்தன் னருணைமானே
காவனென்பார் குழலே வேந்தர்
கருத்தென்னே கருதுங் காலே. (கஉ)

புயவகுப்பு-ஆசிரியவண்ண விருத்தம்

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறைவாயிசைந்தன
களபமகில் குங்குமத் தளருகுடி கொண்டுதிட்
டியபுழுக ணைந்துமெய்ப் பனீர்துளைந்தன
கலைமதிம ழுங்கிநத் தினமிருள டைந்துமுத்
தொளிகருக வெண்சுதைத் திருநீறணிந்தன
கனலிகைய ரிந்துகட்பரி தியைமுனிந்துதக்
கணைமுடித டிந்துமைத் தலையேவழுங்கின. (கஉவ)

இரணியனு ரங்கிழித் தளவரும தங்கொழித்
தெழுநரமடங்கலைத் தடமார்பிடந்தன
இமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
சுவடுபட வின்பமுற் றதிலேகுழைந்தன
இரவிகிர ணங்கொழித் ததிசயமுடன்கிளைத்
தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
இதழியர் விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
குரவுலரி சண்பகத் தொடையானிறைந்தன. (கஉஏ)

தரியலர்பு ரங்கெடச் சுரர்நரர்ப யங்கெடத்
தமனியநெடுஞ்சிலைச் சிலைகாணிறைந்தன
தனுவலத நஞ்செயற் கமர்பொருசரந்தரச்
சரதமென வந்துமற் பொருபோர்புரிந்தன

சலசமலர் மண்டபச் சதுமுக வயன்றிருத்
தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகுதவல தந்தனற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன. ()

அருணகிர ணங்களிற் பவமணுகு ருங்கிநச்
சரவமினிர் கங்கனப் பணியான்மலிந்தன
அனவரத மும்பலத் தினிடை மிடைந்தொழிற்
கபிநயவி தங்கள்பெற் றழகோடிருந்தன
அருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
கரசிணெடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
அரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
தருணையதி ருங்கழற் பெருமான்புயங்களே. (கக)

தலைவனைவேண்டல்.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ்விதழி யேமால்
பூண்டகயற்கண்ணியுஞ்செல் விதழியேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமேயெங்கண்
மின்னிறமும் பொன்னிறமே புயம்பெருமல்
அயர்ந்திவள்வாடத்தகுமோ வருட்கண்பாரீ
ரருணகிரிப் பெரியீரே யமல ரேநல்
வயந்தவிழா வழகரே ரினைக்கமுத்தி
வரந்தருவா ரேமலைமேன் மருந்த னீரே. (கச)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலைமேன் மருந்த ரருணேசரன்று வலைவீசி நின்றவலையே
அலைமேனிறைந்துவருமீனருந்தியருகேயிடங்கொள்குருகே

மூலமேன் முயங்குதலை நாளிலுன்பர் மொழிசூண் மறந்தபிழையோ
தலைமேல்வரைந்தபடியோ விருந்ததமியேன்வருந்துதகவே.

தலைவியைப் புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தகனமுழுவலின்மதனு முனிபவ்சடையிலணிபலதலையினர்
அகனலடியொடுறையு மிறையவ்ரருணைவளநகரரிவையார்
நிகரு்நதட வமுதநிறைகுட நிலவு முகபடம் விலகினுல்.
கனவமரு நரு மிகல்கொடு கலக மிடுவ ரிவ்வுலகிலே.()

இதுவுமது.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலககண் டகனைப் வருசலந் தரனு
ருடறடிந் திடுவார், கடல்விடங் கொளுவார்
குல்வசங் கரனு ரருணையங் கிரிசூழ்
குளிர்புனந் தனிலே, கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சகியே, வடிவமுஞ் சகியே
மகரமென் குழையே, வருணமென் குழையே
முலையுமந் தரமே, யிடையு மந்தரமே
மொழியுமா, சுகமே, விழியுமா சுகமே. (கள)

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமே, சுகமே யிரும்வர் துபுனஞ்
சூழ்கின் றவுமைத் தினழித் தினையுட்
புகமே யவிடா துகடிந் திடுமெம்
பொல்லா மையுமின் றுபொருத் திடுமின்
மகமே ருநெடுஞ் சிலையா ளரணை
மலையா ரருணை புரிமால் வரைமேல்

அகமே செலுமா றுதுணிந் திதன்விட் பாற்
டகறுண் பமுமன் பர்வரிற் சொலுமே (கஅ)

இதுவுமது-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லா ரணத்திற்கறிவரியாச் சோணசலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி காட்டா தொழிதல் கண்டாயே
சொல்லா வும்புஞ் சமர்க்களத்திற் குனியாவில்லுங்கொண்டுகிற்கும்
புல்லா டவனே யெமக்குறுதி புகன்று ரெங்கேயகன்றாரே. (கக)

பிரிவுவிலக்கல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசை யுமக்குள தாயிடின்
பாரூற வென்பொரு பாவையாப் பாடியபாவலர் போலவே
நீரும்ரு ந்தமிழ் செப்பிடுநீர்மைய திந்திவ ணேகுவீர்,
மேருவெ டுஞ்சிலை யுத்தனூர் வீறரு ணைப்புரி வெற்பரோ. (உ0)

காலம் மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன் போர்க்காயும் பிறைக்குங் காலம்,
வெங்கனலே போற்காயம், பிறைக்குங் காலம்,
சற்றுமிரு காமென்னே சங்கணியாக் காலம்,
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்,
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதும்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டிறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்,
பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (உக)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலிற் றுலங்கு ககத்தாலுங் கையிற் பொலிகூர் ககத்தாலும்
சீலத் தாக்க ணுரங்கொண்டீர் திசைமா முகனைச் சிரங்கொண்டீர்

மேலைப்புரத்தைநகைத்தெரித்தீர், வில்வேள்புரத்தைப்பகைத்தெறித்
சூலப்படையேன் மழுப்படையேன் சுமந்தீ ரருணை யமர்ந்தீரே.[தீர்,

மாலையிரத்தல்மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே, யன்பர்க ளன்பினில் வாழ்வீரே,
சுமர்ந்தொளிற் சூலமெடுப்பீரே, தோளணி மாலைகொடுப்பீரேல்,
இமந்தரு வெண்மதி காயாதே, யிருகணை டும்புனல் பாயாதே
கமழ்ந்தகு ழற்கொடி வாடாதே, கஙகுலு மிப்படி நீடாதே. (உங்)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வாணெடு தீகாலு லாநுமி யாவையு
நீரூங் காலமாய் விடுநாள்
கோடாழி மால்பி தாமக னூரன கோடிவீழ்தலி
கோடூர பாரமீ றுறவே,
சூடாத மாலை சூடுவர், தோளோடு தோளை வீசுவர்
சோணைச லேசர்சோ பனமா
ஆடாத வாட லாடுவர், பாடாத பாடல்பாடுவ
ராராத வோகை கூறுவரே. (ஙச)

புண்ணகங்கண்டிரங்கல் கலித்துறை.

கூத்தாடுமருணேசர்வரையன்பொருளன்புகொண்டுன்னையும்
நீத்தார்கொனிழலாருயிலையாகிநின்றுய்நெடுங்காலமே
பார்த்தாலுமயலேகினேனித்தாய்சலித்தாய்பசுந்தென்றலால்
பூத்தாய்பொன்னிரமாகவென்னகமேயன்னபுண்ணகமே. ()

இரங்கல்-மடக்கு.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காகமெ டுத்தவ ரம்பானர் காலுமறைக்குவ ரம்பானர்
தோகையி டத்தவர், சேணூராய் சோணகி ரிப்பதி வாணூராய்
மாதமெ டுத்தவி ளங்காவே, மன்னவ ரெண்ணம்வி ளங்காவே,
கோகனகத்திமிருந்தேனே கொண்கரைவிட்டி மிருந்தேனே. (உசு)

ஊசல்-படக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடு ஊசல்
இளமுலைப்பொற் சிலம்பாட வாடு ஊசல்
மருவுகலை மருங்கசைய வாடு ஊசல்
வரிவளைக்கை மருங்கசைய வாடு ஊசல்
அருமறைக ளளவிடுதற் கரிதாமைய
ரருணகிரி பரமர்புக ழுடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடு ஊசல்
புயமதனன் கயலுலவ வாடு ஊசல். (உஎ)

பாங்கி சொல்லுதல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசலு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவர்
ரொண்டர ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவார்
ஆசில்பு னற்குடைவா ரம்மணி பந்துகழங்
காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரே
சசர்வி டைக்கொடியாற் பூசைசெ யற்கெளியா
ரேரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணே
விசுதி ணைப்புனமே யாவரெனத்தெளியேம்
வேலர்ம னத்திடையே மாலவி லாத்தவரே. (உஅ)

மடக்கு-கலிவிருத்தம்.

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாரும்
கோலமன்னு கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரும்
மாலவில்வேள் கலத்தாரு மதத்தமதா கலத்தாரும்
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை கலத்தாரே. (உக)

தலைவியைப்புகழ்தல்.

அருணமெளி தனிலுமொளி ரருமலைம ருந்தாய
வமலரதி ருங்கழலினர்
மருவலர் விருந்துநதி பெருகருணை யம்பதியின்
மருவியம டந்தையிடையாம்
ஒருகொடியி லொன்றுகழு தொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுபிறைதான்
இருசிலையி ரண்டுகணை யிருபணியி ரண்டுகுழை
யிருமூலையி ரண்டுமலையே. (கo)

எழுதரிதென்றல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையர்ச னத்தர்மலை மயிலாச னத்தரெழு
மலையா நிலத்து வருவார்
அலையாச னத்தரொடு மதுர்தாச னத்தர்தொழு
மருணாச லத்தர் வரையீர்
முனையாணை கட்டியிடை வெளிதேர்ந் றுத்திமதி
முகமாய் மைத்தரு குலாம்
இலைவேல்ப ரப்பியினி தெரிழுதோளமைப்பினினி
யெழுதேனி ருப்பு மனமே. (கக)

இரக்கல்-சிலேடை-கட்டளைக் கலித்துறை.

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறும் கோலத்தைக்கண்டிருந்தும்
ஆலால மூண்டவ ரண்ணா மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ஙனேயொரு வன்கண்ணரே. ()

நேரிசை வெண்பா.

கண்ணருக்கும் போதருக்குங் காண்புரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கு நன்முயற் தெரிந்ததே—விண்ணருக்காப்
போற்றுவா ரண்ணர் புரமெரித்தா ரென்பிறவி
மாற்றுவா ரண்ணு மலை. (கூகூ)

இரங்கல்-கலிவிருத்தம்.

அண்ணு மலையத் தரடற் கிரிமேல்
எண்ணு மலையத் தவரெய் திலரால்
கண்ணு மலையத் தணைநீர் கலுழும்
விண்ணு மலையத் தரும்வெண் மதியே. (கூச)

பாங்கன் தணிவு.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மதுவானி றைந்தகுழன் மள்வார்நெ ருங்கருணை
மலைமேன்ம ருந்தர் வரையில்,
முதுநீரில் வந்தவவ ரடையாள மென்றிறைவர்
முதலேமொ ழிந்த படியே
இதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகள
மிதுமேக மன்ற ளகமே
அதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத
லிது கோப மன்றதரமே. (கூஞ)

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணவெற்பினரயனிருக்கமவுரிபிழைக்கவுமாகவே
திருமிடற்றிருரு கருமைவைத்தவர், திருநடிக்கயறேடியே
கருதுகெட்டிடலுசைவறத்துயில், கபடநித்திரைநாரைகாள்
இருகணித்திரையிலையெனச்சொலியிரைவர்பக்கலிலேகுமே

பாங்கிதலைவிக்குரைத்தல்-கட்டளைக்கலித்துறை.

ஏகார் புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பரென்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியும்
நாகா திபருங் தொழுமரு ணைசல நாட்டிலளந்
தோகா யுணங்கணே யாய்வர்க் கேது சொல்லத்தக்கதே.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க, மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க, மேலை
நற்கயிலை மலையிருக்க, நினைத்தோர்க் கெல்லா
மயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்.
பொற்கையினு லுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்துதவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லாம்
ஏற்குலவு புகழருணை யீசனு ரே
யினிதளிக்கும் பதவிதனக் கெண்செய் வீரே (௫அ)

சித்து—எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுதஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்
தாரத்தைப் பொன்னுக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னுகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனு கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித்தோமே. (௫ஆ)

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணைச னூர்க்கின்
பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய்தீர

ஓதுகடை மருந்தளித்த சித்த ரேம்யா
மொருபிடிசோ றல்லதுகூ முண்டோ வப்பா
மாதவர்தந் திருவாணை கரிக ளெல்லா
மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
ஏதமற நாகமொளித் தராவாச் செய்யோ
மிரும்பையும்பொன் னகவுரைத் திசைவிப் போமே.

தலைவியைப் புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ருணையங் கிரியி லிரத முந்திவிடு வலவனே
பதியடைந்து மறு கினில்வ சந்தனதி படையெழுந்ததுபகருவேன்
புதியகொம்புசில வலையிரண்டருகு பொழியும்வெம்பகழிபோ ரரு
உதய தந்தமத களிறு டன்றதலி புபய தண்வெரு கின்றதே. (சக)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வரைக்கனக சாப சோண கிரிப்புனித காலகால,
மதிக்குநெடு மாயர் போலவே
தரைக்குளினி யாரி யாவ ரவர்க்கு முனி வாம னீடு
தழ்சிகரி யாக னீதியோ
விரைக்கமல வோடையாவர் புரத்தைமுனி பாண மாவர்
விரித்தகொடி யாவரீ தலால்
இரக்கு மணிதோறு மேறி நடத்துமெரு தாவர்மேவி
யிடத்திலுறை தேவி யாவரே. (சஉ)

கட்டளைக்கலித்துறை.

ஆனிட பக்கொடி சோணை சலனென்று முன்பர்மலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றும்
காணிட வேடன்முன் னானிட வுண்டமுகண்டமொருரு
மானிட மானவனைத் தேவர் செய்வதென வந்தணையே. ()

களி-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தணையிருக்கு மறைதுதிக்கு மருணைநாதன்,
சரணமலர் புகழ்களியேஞ் சக்ர பூசை,
விணையிருக்கு முவர்க்கெளிதா வரிதா னேயோ
விதிவசத்தால் விவரமற்ற விதஞ்சொல் வேனே
பணையிருக்க நெடியகஞ்சா விருக்கவீணை
பச்சையா லிலதுயின்ரூன் பணையன் றேளி
யணையிருக்கப் பணிதுயின்ரூன் மதுவாந் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னனே. (சச)

களி-நேரிசை வெண்பா.

ஆனர் கொடியா ரருணைபுரிக், களியியம்
வானுட ரேணு மதியற்றூர்-மேனளில்
சும்மாகஞ் சாவிலேயே தூளிடத்துத் தின்ரூலும்
தம்மாகஞ் சாவிலேயே தான். (சநி)

பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவர்
காமுகரை யாண்டுகொளார், சிவநூல் கேட்பர்
கருத்தின்மா றெரிசனமே காட்டாநிற்பர்
ஆமையர வணிதொடையார் விடையார் வாழு
மருணகிரி வளநாட்டி லகங்க டோறும்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்,
திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றனரே. (சசு)

இதுவுமது-மடக்குக் கட்டளைக்கலிப்பா.

தில்லைமன் றுணடம்புரிபாத னார்
தேவராயர் திருவருணைக்குளே

முல்லைமல்லிகை சண்பகம்பிச்சியார்
மொய்த்தவர்க்குமுன் மோகனப்பிச்சியார்
நல்லமேனியும் பொற்றிருவேடமே
நாடியிட்டதும் பொற்றிருவேடமே
இல்லைபாயினு மிவ்விடையையமே
யேற்கவந்தது மிவ்விடையையமே. (சஎ)

கார்கண்டு பாகஞ்ஞெ சொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங்காட் டியமறை யார்விடை யாள ருருணை வெற்பில்
புயங்காட்டியமணித் தோர்வல வாமுன்பு போனகொண்டல்
சயங்காட்டிக்கோபமுஞ்சாபமுங்காட்டித்தடித்திடித்துப்
பயங்காட்டி ஞாலஞ்சு மேதனி யேநின்ற பைங்கொடியே.

நேரிசைவெண்பா.

பைங்கட் புலிக்குப் பரிபவத்தைக் காட்டிநர
சிங்கத் தினையடர்த்துச் சீறியே-வெங்கைப்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்த்த தருணைக்கே
தழைக்குஞ் சரபமொன்று தான். (சகூ)

குறம் பதினென்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒன்று மூன்று நாமுரைக்க வந்து கேளு மரிவைமீ
ருதய் மானசுளகுநெல்லு மொற்றை பட்டதாதலால்
கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினர்
கண்ட மட்டி லேக றுப்பர் கைக்க பால ரவரையும்
சென்று நாடி லருணைமீது காண லாகு நாம முந்
தேவ ராயரவர லாது தெய்வம் வேறு கண்டிலேம்
நின்று வாடு மிவ்டஞசை யிடர்த்த விர்ப்ப ராதலா
னீறு கொண்டு மூன்றி ரேகைநெற்றி மீதிலெழுதுமே

இரங்கல்-இதுவுமது.

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனே
நீர ணிந்த வரவி ருக்க நெடிய தென்ற ன்முடிகுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை கலியுமோ
விரவு கங்கு னுமது கண்கள் வெயிலின் முன்பு நிற்குமோ
கற்றை யான குழலி யெந்த வுதவி கொண்டு பகைவெலும்
கருணை கூர்தெ னருண மேவு கலியுகத்து மெய்யரே
செற்ற லார்கள் புரமெ ரித்த புழுக ணிப்ர தாபரே
தேவ ராய ரேசு கந்த தினவ சந்த ராயரே. (ஙக)

கார்காலம்.

அருணசிற்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திணைப்போது தானே நினைத்தா லுமேலோர்
சிறப்பான பேறீ குவோர்
வனத்தாடு சோணை சலத்தூடு தீரா
மயிற்பேடை காளோடைகாள்
விணைப்பாவி யாமென் விழிப்பாயு நீரான்
மிகுத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சரற்கால மேகாலமே. (ஙஉ)

இளவேனில் - சேரிசை அகவற்பா.

காலையு மாலையுங் கைம்மலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோன்
இமைக்குபுன் னுலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன்

பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
அழகுற நடிக்கத் திருநடம் புரிவோன்,
வினைவலி யறுக்கு மெய்த்தவ வேடன்,
மனவலிப் பிணிக்கு மான்மதநாதன்,
பேரு மூறுபத் தாரு யிரம்பொன்
மாரித் தியாக வசந்தவி நோதன்,
அண்ணு மலைய னதிருங் கழலன்,
கண்ணு ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
இருத்திய தருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவலிப் பல்லவக் கனவு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லுடக்கிப்
பொறிகிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்துள்
இசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீ ரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்
இன்னமும் வந்திலன் கேள்வர்
புன்னைபுங் கருங்குழ லுண்ண மென்னடையே. (திருஉ)

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அன்னியமா சடையாரும், பின்னியமா சடையாரு
முடிமாற நடித்தாரு, முடிமாற னடித்தாரும்,
உன்னுமற மொழிந்தாரும், பின்னுமற மொழிந்தாரு
மூகைத்திடமா னேற்றாரு, மிகைத்திடமா னேற்றாரும்
எனனகத்தா மூரியாரும், கொன்னகத்தா மூரியாரு
மெருக்கிதழி மணத்தாரு, முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாரும், சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே.

சம்பிரதம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவைபொ ருக்கெழுவுங் ககனம்வ டுப்படவும்
பரிதிவ டக்கெழுவு நிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
மெளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ
அரவமுணிப் பணியா னலகி ரிப்பெருமா
னருணகிரிக்கிணை யா வுவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே. (நிநி)

கருணைச்சிறப்பு நேரிசைவெண்பா.

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே—வள்ளல்
அருணை சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணை சலமாங் கடல். (நிசு)

பஞ்சு அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற்
கடைதொறு நீபாட
அங்கை யாலிரு செவிபுதைத் தேத்துவோ
மருச்சுனன் றிருநாமம்;
எங்கை மார்செவி பொறுக்குநின் னிசையெனு
மிடிக்குரன், மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகொள், பாணனே
மயிலெனப் புகழ்வாயே. (நிஎ)

தலைவியைப் புகழ்தல்.

புடைசெறிந் தளிபாடு மிதழியந் தொடைமார்பர்
புலிபதஞ் சலி நாடுவார்

மடையிளங் கயற்றவு முருணையங் கிரிமீது
மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருகையின் றிரதாரு
நயனமிந் திரனீலமே
இடையுமிந் திரசால துதலுமிந் திரசாப
மிதழுமிந் திரகோபமே. (நிஅ)

உருவெளி கலிவிருத்தம்.

இந்திர கோபமா மிதழி பாகனர்
செந்தமி ழருணைநந் தேருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியும்
மந்தர மேருவும் வளைந்து கொண்டவே. (நிக)

தலைவியையியத்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொண்டலணி கண்டர்நிறை கங்கையணி செஞ்சடையர்
கொம்பரொரு பங்கி லுறைவார்
அண்டபகி ரண்டமுள வங்கியென நின்றவதி
ருங்கழலர் தங்கருணையீர்
கண்டுளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் மூகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தள க
மஞ்சுகுடி கொண்ட வுடைவே. (கூ0)

கோசிசை வெண்பா.

அடுத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோர்
இடத்திலே காரி யிருக்கும்--தடக்கையிலே
ஏந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனர்
போந்து புரமெரித்த போது. (கூக)

கார்காலம்-கலித்துறை

போதற்கு மரிதான வருணைச லத்தீசர் பொன்மேருவாய்,
ஏதப்ப டும்பாவி மனமேபி ரிந்தா ரிதெண்ணுர்கொலோ
ஓதத்தி னீரோடு கனலுண்டுபுயன்மீளவுமிழ்தன்மைபோல்
காதற்குண் மடவார்மெய் பொன்பூசு மின்வீசுகார்காலமே.

தலைவியைவேண்டல்-கொச்சகக்கலிப்பா.

கார்வந்தா லன்னகறைக் கண்டனுர் செங்கதிரோன்
தேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னுட்டில்
ஆர்வந்தா லுந்தனியா தன்னமன்னீ ராலுலும்
நீர்வந்தா லாசை நெருப்புவியுங் காணுமே. (சுரூ)

பனிக்காலம்-கலித்துறை.

காணம்ப ரந்தோலி னுடையாளருணேசர் கைலாசமேல்
தூணங்க ணிகர்தோள் நுறைகின்ற நகளூடுசொரியாததோ
பூணங்கை வளைசிந்தமடவார்ம னத்தேறுபுகைபோலவேள்
பாணங்களுதிர்கின்றதுகள்போலவுறைகால்பனிக்காலமே.

நேரிசை வெண்பா.

பண்ணிறைந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலும்
எண்ணிறைந்த வேத ரிறைந்தாலுங் - கண்ணற்
கமைத்தவெலா மாண்டாலு முண்ணு மலையார்க்
கிமைப் பளவுங் காலமிலை. (சுரு)

தலைவனேவேண்டல்.

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து நாடி
யிடுமிரு நெடுங்கண் மாதரார்
இலசரிய கொங்கைமீது பழநருழு வந்து பாலின்
விழுவதென வந்து சோர்கிலீர்

நாடகம் திருவருணைக்கலம்பகம்.

மலகரி குறிஞ்சி தேசி வைரவி சுரும்பு பாடும்
வயலருணை மங்கை பாகரே
பலமலர் கதம்பதூளி பிருகமத சுகந்தம் வீசும்
பரிமள வசந்த ராசரே. (சுசு)

மதங்கு.

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வசிகரம் வயங்கு நீறு முபிநய புசங்க ராச
வலயமு மணிந்த தோளினர்
அசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
ரருணையின் வளங்கள் பாடியே
இசைபெற வரங்கி னூடு பரிவுகொண் மதங்கியார்த
மிலகிவளர் கொங்கையாணையே
திசைபெற விருந்த யானை யிறகிட முனிந்து போர்செய்
திறலிப மனந்த மானவே. (சுள)

இதுவுமது - மடக்குக் கட்டளைக்கலிப்பா.

நதியைச்சூ டிருங்கழுதனர்
நம்பனரு ணபுரிவீ திமேல்
சதியிற்பாடி நடிக்குமதங்கியார்
தந்தவாசை தரிக்குமதங்கியார்
வதனத்தாற்சசி மண்டலமாறுமே
வந்திருந்தவிம் மண்டலமாறுமே
கதியிற்கொண்டது முந்தக்காரணமே
கண்டபோக்கிலை யுந்தக்காரணமே. (சுஅ)

குறம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணமணி முலைக்கிரிமேற் செங்கை வைத்தா
யாகையா லருணகிரி யன்பன் மூதூர்

வருணமுலை கண்ணுரப் பார்த்தா யுன்றன்
மகிழ்நனுங் கண் ணுரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றணைச்சேர்வன் முருகன்போலத்
தநயரையும் பெறுவையிவை தப்பு மாயின்
திருநிறைவண் டார்குழலாய் குறமும் பாடேன்
சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டிலேனே. (சுகூ)

மறம்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வரைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்குந் தூதா
தாண்டவமா டும்பரனு ருணை நாட்டிற்
றருமறப்பெண் டணைவேண்டிச் சமரிற் போந்து
மாண்டவரே றியகோணல் வளைக ணுங்கள்
வருங்கல்வழி வாயினடி மாங்கடாமே. (எ0)

மடக்கு-கலிவிருத்தம்.

மறைக்கவனப் பரியாரும் வரைக்கவனப் பரியாரும்
எறித்தரிரும் பிறையாரு மெவரும்விரும் பிறையாரும்
பொறுத்தசின விடையாறும் பொருந்துசின விடையாறும்
அறத்தவளம் பதியாரு ருணைவளம் பதியாரே. (எக)

கலித்துறை.

ஆரணி துங்க ணரணி பங்க ணருணேசன்
தாரணி யஞ்சுங் காரண நஞ்சந் தரியாமேல்
வாரண ரெங்கே சாரண ரெங்கே மலர்மேவும்
பூரண ரெங்கே நாரண ரெங்கே போவாரே. (எஉ)

தழை-கட்டளைக்கலிப்பா

போந்தபோதக நல்லரியாடையார்
போர்வையாளர் புகழ்ரணைக்குளே

சந்தசுத நறுந்தழையயனே
யெங்கண்மாத ரெடுத்துமகிழ்ச்சியாய்
மோந்தபோது துவண்டது, மெய்யிலே
மொய்த்தபோது புலர்ந்தது, கண்ணினீர்
பாய்ந்தபோது நனைந்தது மீளவும்
பார்த்தபோது பசந்துமலர்ந்ததே. (எஉ)

இரங்கல் மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலரித ழித்தொடையிரின் மதியணி வித்தகனூர்
மலைமக ளற்புதனூர், வயலரு ணைப்பதிசூழ்
குலவுழி டக்கழியே பலவுழி டக்கழியே
குறவையி னக்கயலே யுறவுமெ னக்கயலே,
சலமிகு முறபலமே, புளர்வது முற்பலமே
சருவும னத்திடரே, தழுவு மனத்திடரே
இலகெரி சற்பணியே யிவருரை சற்பணியே
யினியப னித்திரையே, யினியிலை நித்திரையே. (எசு)

சுவடுகண்டிரங்கல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நித்த னம்பனரு ணைசலத் திருவை,
நின்று தேடியுழ னெஞ்சமே
இத்தடஞ்சுரமு டங்க வேயிதல
தில்லை வேறுமர மிதனிடை
அத்தி நின்றவிட முவ்வி டஞ்சிலைகொ
ளரசுநின்றவிட முவ்விடம்,
எய்த்து ளஞ்சியிள வஞ்சி நின்றவிட
மிவ்வி டஞ்சுவடு மேவுமே (எடு)

மடல்விலக்கு-கலிவிருத்தம்

ஏறுடைய யண்ணலா ரேழை பாகனார்
ஆரணி சென்னியா ரருணை வெற்பரே
கூறொரு பெண்ணையே கூடவேண்டுவார்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. (எசு)

தவம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாய்ந்தநல மருந்தருந்தி யரிய யோக
வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கினாலும்
காய்ந்தவிருப் பூழியிலே தவஞ்செய் தாலுங்
காயம்வருந் திடுவதல்லாற் கதிவேறுண்டோ,
ஆய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி
யகமசிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
ஏய்ந்தருணை சலத்தைவலங் கொண்டா ரன்றே
விமைக்குமுன்னே கைலைமலை யிடங்கொண்டாரே. ()

மாலையிரத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கியதிங்களெழுந்தாலெங்கண்மின்வெங்கதிரென்பாள்,
கலங்கின ளாயினு முன்னுள் கட்கம லங்குவி யாவே
துலங்கிய வெங்கதிர் தானே சோணகி ரிப்பெரு மானே
அலங்கலை யென்றுகொ டுப்பா யன்றது வெண்மதியாமே.

நேரிசைவெண்பா.

ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா முரைக்கண்ணார்
சாற்றுங்காற் கண்ணரவர் தந்தையார்—கீற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடுவதிங் கெப்படியோ சேர்ந்து. (எசு)

கட்டளைக்கலித்துறை.

சேணூர் திருவுடைச் செல்வரைக் காணிற் சிறப்புச்செய்து
பேணு தவருமுண் டோபுவி மீதிற் பெருத்தெழுந்து
சோணைசலவடி வாய்வெளி யாய்நின்ற சோதிதனைக் [றே.
காணுதகண்ணனைச் சொல்வர்செந் தாமரைக்கண்ணனென்

தவம்-நேரிசைவெண்பா.

என்றுமதிக் கண்ணு நிறைவரரு ணைபுரியில்
நின்றுதவம் புரியாய் நெஞ்சமே—பொன்றிரளான்
மாதரையா னயிழைசூழ் மாதரையா னீதுவண்டு
மாதரையா னமையென் சொல்வாய். (அக)

இடைச்சியார்

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாடி னமக்கிரண்டு பசுவேயுண்டு
சுமந்திடுபாற் கலசமுழத் துணையா மீதும்
அல்லாம லிடையின்மிக விளைத்துப் போனீ
ராயிருந்து மிடைமதியோ, வுகந்தை தானே
புல்லாரென் பணிதொடையா ரருணை நாட்டிற்
பொதுவர்குல மங்கையரே, புவிமேற் கண்டோம்
எல்லாருந் தனித்தனியே டெடுத்தக் காலு
மிரண்டுமுறை யாமலுகன் றேகுவீரே. (அஉ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

வீரணை நல்கி மகமூறு செய்த விடைக்கொடியார்
காரணிகண்ட ரருணைசலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறுமிடையின மானுக்கு முண்டகம்போல்
ஈரடி மெல்லினம் வல்லினம் மாகு மிருதனமே. (அங)

தலைவி பிளமை யுணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தடவுக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர் சடிலநாதன்
அடவுக நெடுஞ்சிலையா னசுரர்புர மெரித்தபிரா னருணை நாட்டில்,
திடவுக மனையவரே தனஞ்சிறிதுங் காணுக சிறியார் தம்மைக்
கடவுக நீர்வினவிப் பிணைதேடி முறிதனையேன் கைக்கொண் டீரே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கையடைந்த மழுமானுஞ் சுழுமானு முழைமானுங் கயலுமானும்
மையடைந்த விழிமானு முடனுக வருணேசர் வருகுவாரே
மெய்யடைந்தநிறங்கருகிவீழிகளும்பஞ்சடைந்துவரமிடற்றினாடே
ஐயடைந்துபடர்ந்துவரயமனடர்ந்து தொடர்ந்துவருமன் றுதானே.

தலைவன் சொல்லல்-நேரிசைவெண்பா.

அண்ணு மலையா ருருணையனை யீரும்மைக்
கண்ணுலஞ் செய்தான் கமலத்தோ—ளெண்ணு
திணைக்கோலஞ் செய்தமுலை யேந்திழையீ ரென்னை
மணைக்கோலஞ் செய்தான் மதன். (அக)

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடில ஆசிரியவிருத்தம்.

மழலைமொழி யிசையாலுங் கொடும்பார்வை யதனாலு மயக்கமாகிச்
சுழலும்விட வரவமெலாம் படமெடுத்து முன்னுடத்தோன் றினீரே
அழலுருவ மணிகரத்த ருருணகிரி வளநாட்டி லளிவந்தீரும் [ரே
குழலொருசற் றுண்டாயினெப்படியோவாட்டிவீர்கொற்றியா

இதுவுமது-கொச்சகக்கலிப்பா.

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்,
வாரிறுகு கொங்கை மலைசுமக்குங் கொற்றீரே,
பேரிருள்போய் நாமப் பிறைநிலகு கண்டொளிக்கக்
கூரியகண் ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரே. (அஅ)

வஞ்சித்துறை.

பாணுர் மொழிநிறை, சோணு சலரடி
பேணு தவணுறு, மாணு நரகமே. (அக)

வஞ்சி விருத்தம்.

நரகவாதையில் வன்பிறர், தரணி மீதொரு கொன்பெறர்
சுரருலோகமு மின்புறர், அருணை நாயகரன்பரர். (கூ0)

வேற்றெழி வெண்டுறை.

அருணையதிருங் கழலாறணுசெஞ் சடையாளரரிவைபாகர்
கருணைநெடுங் கடலான்பெருமானுர்தா டொழுதார்க்கினையாடின்
மரணமிலா ஷ்மையவர்தம் வாணுலக மன்றே
பொரிணிறையுநாண்மறையோர் புகலுமத்தாட்பூவே.(கூக)

இரங்கல்-கலித்துறை.

பூவுண்ட விடையாள ருருணை சலத்தீசர், பொன்மேருவாய்,
பாவுண்ட புகழாளர் பிரியேனெனச்சொன்ன பருவத்திலே
காவுண்டுகுயிலுண்டு மயிலுண்டு கிளியுண்டு கனிதூவுதே
மாவுண்டு குருகுண்டு திருகுண்ட மனனுண்டு மறவாமலே.

வெறிவிலக்கு-கலிவிருத்தம்.

வாங்குவில் லோர்நுதல் வயங்கு மாதரீர்
ஈங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கினுல்
ஓங்குடு வணிந்தவ ருருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே. (கூங)

தலைவியைப்புகழ்தல்-கட்டளைக்கலித்துறை.

அள்ளற் கடல்விட நீங்காதகண்ட ருருணைவெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையுமொப்பாதுதற் பேதைகல்லாள்
வள்ளற்குழைபொருகண்ணுக்குத்தோற்றம்புமவ்வாரியுங்
கள்ளக்கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே. (கூச)

வலைச்சியார்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேனியிட மகலாத வருணகிரி வளநாட்டிற்
றிருக்க மேடாறும்
மாவிரத முனிவரெலா மயல்கூறக் கயல்கூறும்
வலைச்சி யாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து வருவோரைக்
கண்டோங் கண்டோர்
ஆவியெலாம் பிடித்திழுக்குமைம்பாலவொருவரைக்கண்
டறிந்தி லோமே. (கூடு)

வலைசியார்-நேரிசை வெண்பா.

மேலா றணிசடையார் வீறருணை வீதியிலே
மாலாக வந்த வலைச்சியரே—காலா
மிருவா லுங்காட்டும் யான்பிடிக்கக் காதல்
ஒருவா லுந்தீரு மோ. (கூசு)

செவிலிநற்றாயைத்தேற்றல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருவ ராலுமணு காத நாளிலே
வுயிரி னைவொரு கேள்வ னைசையால்
மருவி னாலுமென தாகு நாளையே
வழிக டோறுமினி நாடி மீளவே
கருணை நீதிமன் னேபு மாதுடன்
கடல்க ளேழுமலை யேழு மேழுமா
வருணர் சூழுலக மேழு மேழுமா
வருண நாதர்சர பாவ தாரமே. (கூஎ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாரிலங்கு மறைமுடிவி னடித்தருளு மருணைசர்
தமது நாட்டில்

காரியர்மேன் மனமகிழு முளியினங்கா ளொருவார்த்தை
நவிலக் கேளீர்
ஏரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க நீரிருக்கு
மிடங்க டோறும்
வேரிமலர்த் தேனிருக்க வீவர்கூழை விரும்பிவந்தேன்
விழுகின் றீரே. (கூஅ)

தலைவி யவயவ வருமை சொல்லல்.
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானு ரருணகிரி
யிரைவர் நாட்டிற்
ருமரைமண்டபத்துறையுமடந்தையிடை யெழுதவென்றுற்
றலைவ னுரே
மாமுயர்கொம் பினிலேறி விசும்பலரைப் பறித்துமுனம்
வடிவி லாதேதான்
ஆமைமயிர்க் கயிறு கொடு தொடுத்தணிந்த புதுமையினு
மருமையாமே. (கூசு)

தலைவி கையுறை யேற்றமை சொல்லல்.
கட்டளைக்கலிப்பா.

ஆர்வலர்க்கழி யாவரநல்குவா
ரத்தனூரு ணுபுரிவெற்பரே
பார்வியப்புற நீர் தருமாமணி
பட்டபாடு பகர்ந்திடலாகுமோ
கார்குழற்கு முடிமணியாயிரு
கண்கண்மீதுறு கண்மணியாய்முலை
சேர்தலுற்ற பொழுதிரு குன்றினுஞ்
சென்றுலாவுக் தினமணியானதே. (கஂஂ)

திருவருணைக்கலம்பகம் முற்றிற்று.

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாலயம்

சிவஞானபாலயதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்.

சிவப்பிரகாசசுவாமிகளருளிச்செய்த

சோணைசலமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

சதுரனெழிற் சோண சைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனைன் றேத்துங் குழைகழற்கால் யானைதிறை
கொண்டவனே யென்னுளத்தே கொண்டு.

நூல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா வன்றியென் கவியுநின்றனக்காம், பண்ணுலா மிருவசிசை கொணின்செ வியிற் பாணிபா னெலியுமேற் றிலையோ, விண்ணுலா முடியின் மேருவின் வடபால் வெயிலொரு புடையுற வொரு பாற், றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண சைல னே கைலாச யகனே. (க)

துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந்துயர்ந்திடாதடை ந்துகாண்மன்று, முவப்புட னிலைத்து மரிக்குவோர் பதியு மொக்குமோ நினைக்குநின் னகரைப், பவக்கடல் கடந்து முத்தியுங் கரையிற் படர்ப்பவர் திகைப்பறநோக்கித், தவக்கலடத்த வுயிர்ந்தெழுஞ் சோண சைலனே கைலாச யகனே. (உ)

நீங்கருந் துயர்செய் வளிமுதன் முன்றனிலையுளேனவை
துரந்திடுமுன், வாங்கினின் றனிவீட்டுறைகுவான் விரும்பி
வந்தன னின்குறிப் பறியே, னுங்குறைமதியேதாங்கியென்
றுலக மறைகுறை யறநிறை மதியுந், தாங்கியமுடியோடோ
ங்கிய சோண சைலனே கைலாநா யகனே (சு)

கனிமலி துவர்வாய்க் கோதையர்க் குருகுங் கன்மனக்
கொடியனுக் கென்னீ, துனிமலி பிறவி தவிர்த்தனை யென
நிற் சுனிபவரிலையெனக் கிரங்காய், பணிமலி கதிர்வந் துறநி
லையாடி பயின்றபீ டிகையென வுதயத், தனிமலி யிருப்ப
வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலாநா யகனே. (சூ)

சுடரிலை நெடுவேற் கருங்கணூர்க் குறுகித் துயர்ந்துநின்
றலமருமகநின், னடகவில் சரணபங்கயநினைந்துநைந்துநை
ந்துருகுநா ளுளதோ, மடலவிழ் மலைமாட் டெனினெனவ
ருகுமதியுறக் கார்த்திகை விளக்குத், தடமுடி யிலங்க வள
ர்ந்தெழுஞ் சோண சைலனே கைலாநா யகனே. (எ)

அருக்கவி வாத வூரனே முதலோரன்பிலே மென்றது
வேண்டி, பிரங்குதல் பொய்ம்மை யன்பிலெனையாளிய
ம்பலே மெய்யெனக்கருளாய், கருங்கட முமிழுமீர்ங்கவுட்
பனைக்கைக் கரிபுரிகஞ்சுகங் கடப்பத், தரங்கமுண் டெழு
காா முகில்பயில் சோண சைலனே கைலாநா யகனே. (அ)

புரத்துறுமவுணக் குழாமும்வண்டிசைகூர் பூங்கணை ம
தனுமுன்பெறுகின், சிரிததவெண் ணகையு துதல்விழிநோ
க்குஞ் சிறியனேனிருண்மலம்பெறுமோ, கருத்தினுங்கருத
வரியதுண் ணியனென் கடனற வுலகெலாங் காண்பான்,
றரித்ததிதூல வடிவுறுஞ்சோண சைலனேகைலாநாயகனே.

ஆர்தலெழுதிரைகள்சுருண்டெறிகடனஞ்சமுதுசெய்
பெரும்புகழ்த் தனிமை, கீர்த்திட வுளங்கொண் டவலனே

ன்றனின் றிருவடிக்கன்பனுக்கிலேயே கார்த்திகைவிளக்கு மணிமுடி சுமந்து கண்டவ ரகத்திருளனைத்துஞ் சாய்த்து நின்றெழுந்துவிளங்குறுஞ்சோணசைலனேகைலாயகனே

தொடையுடைத் திரடோணமன்புரத்துடலந் தொலைக் குமனகத்துட றெலைத்துத், தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத் தமியனேற் கருளுநா ளுளதோ, புடையினிற் கரிக் கோடிளம்பிறை புரையப் பொங்குசோ தியங்கொடி விரித்த, சடையெனப் படர்ந்து கிடக்தொளிர் சோண சைல னே கைலா யகனே. (கூ)

கண்புன லுளிப்ப வழற்படு மிழுதிற் கரைந்துரு நெஞ்சி நின்றனையே, பெண்பயி லுருவ மொடுநினைந்தெனது பெண் மயலகற்றுநாளுளதோ, வண்புனல் வேந்த ரார்கலிக் குட த்து மணிமுகிற் கலயத்தின் முகந்து தண்புன லாட்ட வா டுறுஞ் சோணசைலனே கைலாயகனே (கo)

வேலைபாய் துகில்சூழ் மலர்தலையுலகின் மெய்யினைப் பொ ய்யெனு மவர்க்கே, யேலவந் தருள்வ தன்றிமெய் யினைமெ ய் யெனுமெனக் கருள்புரிந் திடாயோ, காலநன்குணர்ந்து சினகரம் புகுந்து காணரிதெனுதலகனைத்துஞ், சாலநின்று ழியே கண்டிடுஞ் சோண சைலனே கைலாயகனே. (கக)

மயலினு லழுந்தும் பிறவியா மளற்றை வளர்தரு நின்பெ ருங்கருணை, வெயிலினு லுலர்த்தியெனதுளக்கமலம்விரிக்கு மொண பரிதிநீ யலையோ, பயிலுமா லயமோர் சைலமோர் சைலம்புகைப்புல முருக்குகார் முகமோர், சைலமாதுலனு மெனக்கொளுஞ் சோண சைலனே கைலாயகனே (கஉ)

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால் புந்தியஞ்சினக ரத்திருத்தி, நலம்புரி புனிதர் பேரவை தமியே னணுகுவா னருளுநாளுளதோ, வலம்புரிமணிதர்கடலென வொலித்து

வளைவுற நடுவண்மந் தரம்போற், றலம்புரி தவத்தி னின்
ரெளிர் சோண சைலனே கைலைநா யகனே. (கஉ)

நீரினி லெழுமொக் குளினழி யுடம்புநிலையென நிலைக்கு
மாநந்த, வாரிதிபடிய வறிந்திடா துழலு மடமையேனுய்ய
காளுளதோ, வேரியல்பதமுன் றேடுமக்கேழ லின்றுநாடிய
நிளைத்திடற்போற்,சாரலினேனமருப்புழுஞ் சோணசைல
னே கைலைநா யகனே. (கச)

கருத்திடைநினது கருணைமாமேனிகண்டெழுத்தைந்து
நாவியம்பச், சிரத்தினி லமைத்த சரத்தொடு நினையான்
றினம்வலம் புரியுமா றருளாய் வரத்திருமுடியின் மதிதிரு
முடியின் வணிந்துகந் தரத்தினி லிருள்கந், தரத்தினி லிரு
த்தி விளங்குறுஞ் சோணசைலனே கைலைநா யகனே. கரு)

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனெனவுணர்ந்துநா டொறுமா, ரூரனு ரவையி னிகழ்ந்தசொற் றுதியினுவக்குநின் பதந்தொழ வருளா, யேருலா மண்டச்சுவர்ம
தின்மிசைப்பா லிலங்குறு மண்ட கோளகையாச், சாருமா
லயத்தி லிலிங்கமாஞ் சோண சைலனே கைலைநா யகனே.

இந்திரியங்கரண மூடலம் வேரழக்கியிருண்மல்ப்படலமு
ங்கீறிக் கந்தமுமலரு மெனநிலை யென்னிற் காண்பறக் கா
ணுநா ளுளதோ, வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற
மலிபசை தவிர்ப்பவெண் ணிறந்த, தந்தியும் புலியும் வளர்
ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கள)

முழங்குவண் டினங்கள்விருந்துணுமலங்கன்மொய்குழ
ன்மகளிர்தம்மயலாற், புழுங்கு மென்றுணின் றிருவடிநிழ
லிற் புகவிடித் தளிக்குநாளுளதோ, வழங்குவெண்டிரையா
றவிர்சடைகரப்ப மணிமுடி நின்றிழிந்திடல்போற்,றழங்கு
வெள்ளருவியிழிந்தொளிர்சோணசைலனேகைலைநாயகனே

குன்றுதோறுடுங் குமரனேயெனவுங் கொடுஞ்சிலை மதர வேளெனவும், புன்றொழின் மணிதர்ப் புகழ்ந்துபாழ்கிறை க்கும் புலமைதீர்த்தெனக்கருள் புரியா, யென்றொருகினந் தோட்குட்குழைந்தனமென்றுரு துராடொறுமகமேருந்தன் றலைதாழ்ப்பவளர்ந்தெழுஞ்சோணசைலனேகைலாயகனே

வெண்டிறுநீறுபூணியுமாதவர்க்குவிருந்துசெய்துரும்பெ றுமிடியுங், கொண்டகல விரதத் திலைக்கும்பாக் கையுமிக் கொடியனேற் கருளுநா ளுளதோ, வண்டுழுங்குவளைமலர்த்தடஞ் சூழ்பின் மற்றைவா னவர்க்குத் தன்றிச், சண்டியுமகிழ்ந்து கௌமலர் சோண சைலனே கைலாயகனே.

வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலையுண் சிரலினிற் கின்றான், மூந்திநீ யெனையா னந்தவா ரிதியின் மூழ்குற விடுத்தருள் புரியாய், நந்துளான் மலையெயென்று சாதிப்ப நனைமலர் வேங்கையு மசோகுஞ் சந்துமேன் முளைப்பச் செய்துகொள் சோண சைலனே கைலாயகனே. ()

பூமழை யமரர் பொழியமா தவர்கட் புனன்மறுகிடைப் பொடி யடக்கத், தூமொழி மனைநீ தூதுபோம் பயனில் சொற்பதர்புடைத்திலைக்கின்றேன், யாமுணர்மிகுபேருருவமாய் வரினு மிருவரு முணர்த்திடி னன்றித், தாமுணர் கிலரென் றெழுந்துயர் சோணசைலனே கைலாயகனே.

கழைமொழிக்கொடியோர்க் கேவல்செய் துடலங்கமருகுமிழ்கின்மங் குறுமல், விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம் விழைகுநர்க்கேவற்செய்திலனே மழைமதக்களிறல் யானைமத்தகம்பாய் வள்ளுகிரோடுசெல்லரிமா, தழைசிறைச்சிம்புள்கொண்டெழுஞ்சோணசைலனேகைலாயகனே.

கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங் கணைபுரைம தாரிக்கருங்கட், டார்தருகுவவுக்கொங்கைதுண்மருங்குற்

றையலார் மையலென் றெழிவேன், சீர்தருமணியி னணிந்
தன வெனக்கட் செவியுமொண் கேடிலின் மருப்புஞ், சார்
தருமூல்க விளக்கெனுஞ்சோணசைலனே கைலைநாயகனே.

நந்துகைத் தலதது நாரணற் சயற்கு நவமணிக் கரகநீ
ரிருந்து, மைந்துறக் குறித்து மாட்டியங் காண்பான் மதித்
திடாதுனெதிர்ந் திலரே, யைந்துகைத்தனிக்கோட்டொ
ருபெருங் களிறு மறுமுகம் படைத்த கேசரியுந், தந்தெ
மைப்புரக்குங்கருணைசூழ்சோணசைலனேகைலைநாயகனே

விணையரும்புகலிக் கிறைமணப் பந்தர்விருந்திலுக் குதவி
லேன் மூக்கிற், றினையிரந் திடுவான் வந்தனன்பதநீ யுத
வியன் றுயரொழித் தருளா, யினியபைந்தமிழின் பொதிய
மால் வரைபோ லிசைக்குரு காதிமமலையின், றினையையின்
றீஞ்சொற் குறுகுறுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண் பேதைய
ர்ப் புகழ்ந்தவந் திரிலேன், பண்ணுறுந் தொடர்பிற் பித்த
வெண்கிணீபயன்றலறிந்து நிற்புகழேன். கண்ணுறுங்கவி
ன்கூரவயவங்கரந்துங் கதிர்கணூருயிரங்கோடித்,தண்ணிற
ங்கரவா துயர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்கு லெர்ளிமணிப்
பாம்புதீண்டுதலான், மயங்குவேன் றனக்குன் பவமருந்து
தவிமயக்கமென்றெழித்தருள்புரிவாய், பூயங்குமாபுகழ்ப்
பூம்புகலியந் தணர்க்கு புத்துவெண் பந்தரீந் தகல்வான்,
றயங்குமீன்முத்துப் பந்தர்வாழ்சோண சைலனேகைலைநா
யகனே. (உஅ)

மெய்த்தவ ரடிக்குற்றேவலின் றிறத்தும்விளங்குமாகம
வுணர்ச்சியினும்,புத்தவர்கொடுநிற்பரவு பூசையினும் பொ
ழுதுபோக் கெனக்கருள் புரிவாய்,முத்தமுமாவமணிகளு

மெறிந்துமுதிர்திணைப் புனத்தெயின் மடவார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோணசைலனே கைலாநாயகனே (உக)

பாயும்வெண் டிரைப்பே ராழிசூழுலகிற் பழமொழியொ ழியமெய் யடியா, ராயுமென் மலரோர் மலையள வணியவம ர்ந்தநின் கோலம்யான் மறவேன், றாயவெண் மதியிற்கள ங்கமென்றுரைப்பச் சூழ்பசுங் கொடிபயி லுறுவச், சாலை சென்றுறநின் றிலங்குஞ் சோணசைலனே கைலாநாயகனே.

நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு நளினமென் ம லர்க்கரத் தெறிபூம், படையொடுதுரந்து வந்துமென் விட யப் பகைப்புலி தனையெறிந் திலையே, யடிநடு நிழல்சென் றெழுகட லடைய வகல்பெரும் புறத்துவா ரிதியிற்,றடமு டிநிழல்சென் றுறவளர்சோண சைலனே கைலாநாயகனே.

யாவுமா முமையுண் ணுமுலை முலைப்பா லீந்துபாடச்செ யாயெனினு. மேவுமா துயர்செய் சூலநோயெ னினும் விடு த்துநிற் பாடுமா றருளா, யோவுமா னலது தொல்லுருக் கொளின்வேறொன் றெடுத் திடுமெனநினைந்து, தாவுமாளின மெண் ணிகழ்ந்தசூழ் சோண சைலனே கைலாநாயகனே.

விருப்பொடு வெறுப்பு மகன்று பேரின்ப வெள்ளத்து ளழுந்துநின் னடியார், திருப்பதமிறைஞ்சியவர்க்குவேளா ண்மை செய்பெருஞ் செல்வமே யருளாய், பொருப்புக டோறும்வீழ் பொங்குவெள் ளருவிபோன்றரி விலக்கிடை யறுமற், றரிப்பருங் கருணைபொழிதருஞ் சோணசைலனே கைலாநாயகனே. நுந

பொங்குறு கவினுங்கற்பும் வாய்ந்திலங்கு புண்ணியமட ந்தையும் பொருளு, மிங்குநன் குதவியங்குவான், கதியினி ருத்துநிற் புலவரென் புகழார், துங்கவெங் குறவர் புன த்திடை பரண்கா றுணித்துநட்டாரமீமிசையா, தங்கவெண் மருப்புப் பரப்புறுஞ் சோண சைலனே கைலாநாயகனே.

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப் புகழ்ந்தி பிரம்படிக் கொதுங்கிச், சூழ்ந்திடுமரர் நெருங்கு சங்கி யிற் றெண்டனேன்வரவருள்புரியாய்,வாய்ந்திடுமகக்கண்டு ருகுதாய்முலைப்பால்வழிந்தொழுகுதலெனவடியார். தாழ்ந் தெழுவருவியொழுகுறுஞ் சோணசைலனேகைலாயகனே

நேர்ந்திடு மொருசெங் கோல்கொடு கொடுங்கோ னிமிர் ந்திடவிலங்கைசென் றடைந்தோன், கூர்ந்தவன்பொடுநின் றிறைஞ்சுபுர வழுத்துங்குரைகழ லிரக்கவஞ் சுவல்யான், சேர்ந்திடு மலைமான் பெருமலை யுவமை சிறுமலைகளுக் குத வாமற், சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோணசைல னே கைலாயகனே. (நக)

தெருமரும் பிறவிதமையகன் றிடாத தேவரைத்தேவ ரென் றெண்ணி, யருமருந் தனைய நினையடை யாத வறிவி லார் பவப்பிணி யறுமோ, கரிமருங் கணைந்த தெனமுழை வாயிற்கார்வர விரைந்தெழுந் துகள்கே, சரிமறைந்திருந் நாணுறுஞ் சோண சைலனே கைலாயகனே. (நஎ)

ஆண்டுகம் பலசென் றிடவிருந் திடினு மன்றியோரிமை ப்பினினுடல், மாண்டுகு மெனினு நன்றுநின்கமல மலரடி க்கன்பரா யிருப்பிற், பூண்டயங் கயில்வேற் குதலையந்தீஞ் சொற் புதல்வன்மே லிவர்செய லெனமார்த், தாண்டவன் வந்திவர விளங்குறுஞ் சோண சைலனே கைலாயகனே.

விரைவிடையிவரு நினைப்பிறவாமை வேண்டுநர் வேண்டு கமதுரம், பெருகுறு தமிழ்ச்சொன்மலர்னைக்கணியும்பிற வியே வேண்டுவன்றமியே, னிருசுடர் களுமேல் கீழ்வரை பொருந்த விடையுறன் மணிக்குடக்காவைத், தரையிடை யிருத்தி நிற்றனே சோணசைலனே கைலாயகனே. (நஅ)

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க் குளத்திட மெலாமளித் தடியார், கண்மணிக் கனமயவிருந்துசெய்தரு

ணீ கணமிருப்பதற்கிடம்புரியேன், வெண்மணிக்கழைமுன் கரியநெற்றிதழீவேங்கைபொன் சொரியமாசுணங்க,டண்ம ணிப்பைகளவிழ்த்திடுஞ் சோணசைலனே கைலாசநாயகனே.

அருங்கலம் புனைய மகளிரோ ரிருவரணிமனம் புணர்த் திவாரணமுந், துரங்கமும் புலவர்க்குதவு நின்றனையேதுதி த்திடா துழன்றனன் வறிதே, மருங்குநின் றழகாலத்திதா ங்குவபோய் மறைமலர்ப் பெருஞ்சுனை யொடுபூந் தரங்கநி ன்றிலங்க விளங்குறுஞ் சோணசைலனே கைலாசநாயகனே

ஏணிறு மமரர் கடைகடலளித்த விருளொடு மணிமிடற் றடியே ணைவ விருளுங் கலந்திடிற் கருமையழகுமிக் கில ங்குறுங் கண்டாய், மாணெழில் வராக முழுப்புழை யகந் தன் மணியொளிப் பிழம்பெழல்சிறுதீத், தாணுவின் முரு க னெழுதனேர் சோண சைலனே கைலாசநாயகனே (

மின்னவிற் சடிலக் கற்றையு மருள்கூர் விழிகளுந் திரு முகத் தழகுங், கன்னவிற்றிடரோ ணன்குமீரடியுங்கண்டு கண் களிக்குநாளுளதோ,வின்னிசையொலிகேட்டுருகுதல் கடுப்ப விழிதர வருவிகிம்புருடர், தன்னிக ரிசைகூர் சார லஞ் சோணசைலனே கைலாசநாயகனே. (சாரு)

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு மடியவர்ப்பெ றினெழுந்திளங்கன், றுள்ளிநின் றுருகு மன்னையின் மன நெக் குருகுபு சென்றிறைஞ் சிலனே, யெள்ளிவெம்புவி யெண்கரிதிருமேனி யேறுதற் றகாதெனவெகுண்டு, வள்ளி வந்தருவி யிழிதனேர் சோண சைலனே கைலாசநாயகனே.

இழையெனத் தளர்சிற் றிடையுணு முலையா ளெனக்கு வண் புகலிவேந் தயின்ற, கழுமணிப பசும்பொற் குலவுபா ற்கிண்ணங் கழுவுநீர் வார்ப்பதற் குரையாய், குழையிடை க்கதிர்மா மணிவிளக்கேற்றி முசுக்கலை பிணைவொடு மசோ

கத், தடையிடைத் தழுவி யுறங்குறுஞ் சோண சைலனே கைலாச யகனே. (சுரி)

விஞவழி யுடலிற் கமைந்துறு முணவே வேண்டினர் விஞகொடு புணரா, நஞமலர் புஞைந்நின் றிருவடி யடைவா ஞடொறும் வேண்டில ருலகர். கஞயிருள்கரந்த விடமறிந் துணப்போங் காட்சியிற் புனக்கிளித் தொகுதி, தஞயெறி மணிகண் முழைபுகுஞ்சோண சைலனே கைலாச யகனே.

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறுப்பவு முடி மிசை யிருத்தும். பூங்கழ லடிபேண் றலைமிசை யிருத்தப் புகலினு மென்கொனீ யிரங்கா. யோங்குறு மண்டகோள கை யளவி முயர்ந்துபோர் மழவிடைமுதுகிற், றூங்குபுட க்கவிருந்திடுஞ் சோண சைலனே கைலாச யகனே. (சள)

சரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு மிக்தி யப் பகைவெல். வீரமு மருளி யெனது வெம்பிறவி விலக்கி யாட் கொள்ளுநா ளுளதோ, வாரமுமகிலுந் தடிந்துசெம் மணிக ளரித்தெறிந் தெறுழ்வலிக் குறவர், சாரலினிறங்கு விதைக்குறுஞ் சோண சைலனே கைலாசயகனே. (சஅ)

தெ கைமிகு மமார் முனிவர்பரவித் தொழுதகை யொ டுவிரைகமழ்பூம், புகைமிகு மணிமண் டபத்திடை நெருங் சுப் புழுகுநீ யணிதல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதிமா மஞ்சேர் குளிர்மதி விழுங்கவாய்வைத்த, தகை மிகுமூரற் றிரளோசேர் சோண சைலனே கைலாச யகனே.

தினம்படு முளங்கொன் றவரவை யெனையுஞ் சேர்ப்பது தகுமுனக் கிசைவண், டினம்படு மலரி னகவித மொடுபுல் லிதழுமொன் றுதலுல குடைத்தே, மனம்படு மடிமையுள ன்சிலை யெறிக்கு மனங்குழைந் துமையவள் களபத்,தனம் படவடிவங் குழைந்திடுஞ்சோணசைலனேகைலாசயகனே.

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன்மணிப்பணிபெ
ருநம் புவியாட்சி, யாம்பரி சலவென் றுன்பத மருவினன்றி
யென் கவிகளென்கவிகள், காம்பரி முரண்மும்மதகரிவளை
த்த கைபிடமோதலாற்கதிர்த்தேர்த, தாம்பரி துணுக்கெ
ன்றீர்த்திடுஞ் சோணசைலனே கைலாச யகனே. (நிக)

துன்னுறு துயரப் பிறவிவெங்கொடுநோய்தொலைப்பினு
ந்தொலைத்திடா துறினு, நின்னடிமலரை யன்றியான் மறந்
துநினைப்பேனெனிறச்சும்வானவரை, மன்னளிபருதவுடை
யிருன் மதுவும்வாரண மதமும் வெள்ளருவி, தன்னெடுமி
கலி யொழுகுறுஞ் சோணசைலனே கைலாச யகனே. ()

நீரினு ழலான் வருங்கொடும் பிணியானிருதரா லகைக
யால்விலங்காற், சோரரால் வருந்து மவரெலா நினது தூய
நாமம் புகன்றிடுவார், சீருலா மணியா லரிபர வுதலாற் றி
சைவுறநீள்கையா லெழின்மை சார்தலா லுமையாள் விழி
நிகர் சோணை சைலனே கைலாச யகனே. (நிக)

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிரமு லைமுகட்டணி
பெறமலராள், பகல்விளக்கென்ன வொளிகெடவருமம்பொ
ற் பாவையர்க் கிரங்கிடாதருளா, யகவிளக்கென்னவகறிரி
நெய்தீ யாக்குவோ ரின்றியே யெழுந்த, சுகவிளக்கென்ன
விளங்குறுஞ் சோணசைலனே கைலாச யகனே (நிச)

நீலியோ டுனாநா டொறுமருச்சித்து நின்றெழில்புரிந்தி
டவுடற்குக் கூலியோதனமென் றளிப்பவர்க் கன்றீக்கூற்
றினைக் கடக்குமா றெளிதோ, மாலியோ சனையின் வணங்
குறுங்கையே மலைநிவேத்திடக் குவித்த, சாலியோ தனமெ
ன நிடத்திகழ்சோணை சைலனே கைலாச யகனே. (நிந)

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து துயர்ப்பிணி
யெனுமலை மலைப்பக், கூற்றெனுமுதலை விழுங்குமுன் னின

து குரைகழற்கரைபுகவிடுப்பா, யேற்றிடும் விளக்கின் வே றுபட்டகத்தி னிருளெலாந்தன்பெயரொருகாற்,சாற்றினு மொழிக்கும்விளக்கெனுஞ்சோணசைலனே கைலாயகனே

கந்தரமிருந்து படகுநீ ரயின்றுங்கரநிலத் தமைத்திருப் பதமு, மந்தரமிமிர்த்து நின்னிலையரியா ரும்பவமொழியு மோ வுரையா, யிந்திரன் வனத்து மல்லிகைமலரினிண்டை சாத்திய தெனநிதைந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோணசைலனே கைலாயகனே. (நிஎ)

கூம்புறுகரமூ மலர்ந்திடு முகமுங்கொண்டுநின் றனவ லம் புரிவோர், மேம்படு சரண மலர்ப்பொடி மேனி மேற்ப டிற் பவம்பொடிபடுமே, பூம்பொழிற் புகலிக்கிறைவனுனி லஞ்சேர்ப்புண்ணியத் தலங்களினடைந்து, தாம்புனே பதி கந் தொறும்புகழ் சோணசைலனேகைலாயகனே.(நிஅ)

கானமே மருவும் விலக்கினுங் கடையேன் கற்பவை கற் றிலேன் விடய,ஞானமே யுடையே னறிஞரைக் காணி ணிலே னுய்யுநாளுளதோ, வானமேயளவு நெடுங்கிரிமலய வாதமோ துறுபவர்கட்குத், தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலாயகனே. (நிக)

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியி னைக் கவளமுண் கென்னுங், கழைசுளி நெடுநல் யானையின் முனிந்து கடக்குமென் பவமொழிக் திடுமோ, மழைமுகில் வந்து தவழ்ந்துவிண்படரு மலிதரு புகையென வெழுந்து தழலுரு வுண்மை விளக்குறுஞ் சோண சைலனே கைலாயகனே. (சுo)

வாத்தியமுழங்கச் சிவிகையுங்கரியு வாறியூர்ந் தலவிவா ழ்ந்தவரு,மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற்றேவ லே வாழ்வென வறிந்தேன், பாத்திய மணிகள் கொண்டி

மழைத் திலங்கும் பாரவா சிகைமணி மேகஞ், சாத்தியதென
னில் வளைந்துறுஞ்சோண சைலனே கைலாச யகனே. ()

குலத்தினிற்பிறந்து மலகினூல்கற்றுங்குணத்தினிற் சிற
ந்துநல்விரத, பலத்தினிற் பவர்ந்து நின்னடி யவர்க்குப் பரி
விலார் கதியிலாதவரே, கலத்தினிற்பொலிந்த விமயமீன்
றெடுத்த கன்னிறுண்ணிடைமிசைக் களபா, சலத்தினிற்
குறுதி கொடுத்திடுஞ் சோணசைலனே கைலாச யகனே

மூடகவிருளோடுன்னேயின் றுண்ணுமுலையாசாலகற்றுவ
லென்சூடருமொழியா லடைந்தனன்றமியேன் சூள்வழுவா
துநீயருளாய், வீடுறுங் கவரிகிழ்விழ வுறகால் மிசையனம்
பன்றிதா மாறித், தாடலுதருவவடைதனேர் சோணசைல
னே கைலாச யகனே. (கூஉ)

ஐயதுண் மருங்குண் மாதர்மேல் வைத்த வரதாவுன் பா
தாம்புயத்து, மெய்யுறுறுமென் கலவையின் விருட்பு வெ
ண்டிரு நீற்றிலும்வருமோ, கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங்
கிள்ளைக் குழுக்கடோரணமெனவெழுந்து, தையலர் கடிய
ப்பறந்துறுஞ் சோண சைலனே கைலாச யகனே. (ஈச)

கனலினூடமைத்த விழுதென வுருகக்கற்றதன் றுள்ள
மென்கரங்கள், புனலுமாம்மலருங் கொடுனினப் பூசைபுரி
ந்தில வென்செய்கோ வுரையாய், சினவுகோய் மருந்துவே
றுகொண்டிருக்குஞ்சிலம்புக ணுனவட்கொள்வோர், சநந
நோய்மருந்தாளுந்திடுஞ்சோணசைலனேகைலாசயகனே

ஊழுறு மணிப்பொற் கோயில்போய்வாவ லுறக்கொடு
த் தாங்குநிற் புணர்த்தாப், பாழுறு மகம்பே ரவர்க்குடி யி
ருப்பப் பண்ணுமென் கண்ணுகண் ணுவையோ, வீழுறு
மெயினர் கிழங்ககழ் குழியும்வேழம் வீழ்குழிகளுநிரம்பத்
தாழுறுமருவிபொன்சொரிசோணசைலனேகைலாசயகனே

பைம்மறைப் படுத்தி யுள்ளறி யாமற் பணிகுறுக் துகில் புனை மடவார். மெய்ம்மிசைக்கருந்தோல்கண்டுவந் தழுதும் வினையினேனுய்யுநா ளுளதோ, செய்மலர்ப் பதம்பர தலங் கடந் திடவான் றிருமுடி கடப்பினு மூவர், தம்மிற் செப் பினடங்குறுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (சுஎ)

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ்செல்லலுங்கடி யின் பிணிப்பு, நெக்குறவறிவுகலங்குசாக் காடுநினைந்தாறு முளம்பதைக் கின்மேன், மொய்க்குறு முகில்கண் டகரிகு யென்னு முழக்கமு மரகரவென்னுக், தக்கவர் முழக்கமரி திரெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுஅ)

மரணமு மபிறவித்துயரு நீங்குறநூல்வாய்ச்சிலம்பிக்கரு ள்புரிந்த, கருணியென்றுனவர் தடைந்தனனினிநின் னருத் தினை யின்னதென்றறியேன், முரணியம்பரூஉ க்ககைதல் மினசயெடுப்பமூழைக்கரும்பாம்பெனமணித்தேர்த் தரணி யுள்வெருவியகன்றிடுஞ் சோணசைலனே கைலைநா யகனே

அங்கையின்வைத்தகூர்ங்கனன்மழுவாலருவினைக்காடற வெறிந்து, மங்கலில்பத்தி வித்திட வடியேன் மனத்தினைத் திருத்துநாளுளதோ,பொங்குறுசெக்கர்கருவிசும்புறவேள் புரத்தெரிகதுவிடநோக்கித்,தங்குதலொப்பநின்றிடுஞ்சோ ணசைலனே கைலைநா யகனே. (அo)

சுருக்குமைம்புலனும் விரிக்குமூதறிவுந் துன்னுநல்வினை மூர்த்தகன்றே, யிருகும்வெங்கயவரினமுமென்றருளியெ ன்னை நின்னடிமைசெய்தருள்வாய் முருக்குமங்கதமாமணி யுமிழ்ந் தகன்றமுழைதழற்றென வுளம்வெருவித், தருக்கு மொண்புலிசென்றுறமருட்சோணசைலனேகைலைநாயகனே

அந்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மலைன்மணி மதங்கி, சுந்தரி யுமையுண்ணுமுலை யெனநின்றுனவியைவா

முத்தமாறருளாய், வந்தரி சுருதி மருங்கினிற் பாட வயங் குதும் புருவுதாரதனுந், தந்திரியியைசாழ் பாடுதுஞ் சோ ணசைலனே கைலாயகனே. (எஉ)

நீக்குறு மயலு நிலைத்தபே ரறிவு நின்றிருவடிமலர்க்க ன்பு, காக்குறு மனமுமுடைய மெய்த்தொண்டர் கணத்தி னுளனேவிடுத்தருளாய், தேக்குறுமிராலிற் கன்னல்காட் டுவபோற் றென்னல்வந் தசைதொறு மெல்லத், தாக்குறு காந்த டுடுப்பலர் சோணசைலனே கைலாயகனே (எங)

பவமிலே மினியா மென்றிருமாந்து பயமற விருந்திடப் பத்தி, நவமிலே மடியே மென்செய்வா னிருந்து நாளினே வறிதொழிக்கின்றே, மவமிலே மிமையா விழியினுற் காண் கை யால்வலங் கொளவடி நிலந்தோய், தவமிலே மெனவா ன் சுரர்தொழுஞ் சோணசைலனே கைலாயகனே.(எச)

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே கைகளிற் றொழு பவே செவிகள், பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே பதினே வலம்புரி வனவே, யெண்குபுற்றிடப்பவெழுமணி கரவா விருந்துசென் றிருள்கவர்வனபோற், றண்கதிர்க்கற் றை கான்றிடுஞ்சோண சைலனே கைலாய கனே (எடு)

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று நேரிழை யவர் விழைந் திடுவோர், குணந்திரி தளிரின் மடியவும் கண்டு கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன், மணந்திகழ் மகளிர் சிலம்பொடு மைந்தர் வார்கழறுவக்கிடவலம்போய்த், தணந்திடுமையத்தறிந்துநாண்சோணசைலனேகைலாயகனே.

மாந்தளிர் கவற்று மணிச்சிலம்படிகள் வடுவெகிர்பொருவு ம்வா னெடுங்கண், காந்தளினிமைக்குமங்கையென்றவலக் கன்னியர்ப் புகழ்வினை யறுமோ, பூந்திரை சுருட்டுங் கடல்

கடை குநரொண் பொறியர வின்றிமாதவர்க்குச், சாந்துய
ரகற்று மருந்தருள் சோணசைலனே கைலாநா யகனே. ( )

சிந்தனை கலங்கி யிணைவிழி யிரண்டுசெவிகளுஞ் செவிடு
பட்டைம்மே, லுந்திட வுயிர்போம் பொழுதுனை வடிவ
முளங்கொளும் பரிசெனக் கருளாய், மந்தரசைலந் தருஷி
டங் களத்து வைத்திடத் தினிலிமசைலந், தந்திடமுமதை
வைத்திடுஞ் சோண சைலனே கைலாநா யகனே. (எஅ)

நயங்கொளு மலரா னின்றிரு வடியை நாடொரு மூயிரு
ணுங்கூற்றம், பயங்கொள வகலா தருச்சனை புரிந்து பரக
தியடையுநா ளுளதோ, வயங்கொளும் விடயப் பெரும்ப
கை கடந்து வானநாடாண்டிள மதிப்போர், சயங்கொளவ
டைதற் காணமாஞ் சோண சைலனே கைலை நாயகனே. ( )

பிரம்பொரு கரங்கொண் டடிப்பநந் தீசர் பெருங்கல்வீ
ழ்பாசியி னிமைபோர், சிரம்பொர வொதுங்கி நெருங்குநி
ன் னவையிற் றீயனே னணையுநா ளுளதோ, வரம்பொர
வகன்ற விலங்கிலெடுத்தவ லமர்த்தகட்கிரிமகளிணக்குஞ்,
சரம்பொர விருந்து விலங்குறுஞ் சோணசைலனே கைலை
நாயகனே. (அ0)

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க் கதியிடைப் புக
விடுத் திடினும், பாமர னிவனென் றிருளினுப்பி னினுநின்
பதமல ரன்றிவே றுளதோ, வாமரை பொருந்து முலகுள
குவட்டு மலைமகள்போ லாதுமுலையா, டாமரைபொருந்
து மானுள்வாழ் சோண சைலனே கைலாநா யகனே.(அக)

தொடுக்குமா கமங்க ளெலாஞ் சொலிந் தெழுத்துந் தி
ணிந்தநெஞ் சிருக்கையாற் பகையைப், படக்கைதானிரு
ந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமா மறலியை வெருவேன்,

மடக்குவார் கலாப மயிறுயி லெழுந்து மருமலர் வேங்கை மீதகவத், தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ்சோண சைல னே கைலாச யகனே. (அ2)

நிந்தியா துடல முழுதுநீ றணிய நேசியாதமலவைந் தெ ழுத்துஞ், சிந்தியா தழலு மெனைக்கொடுங் கூற்றென் செ ய்யுமோ வறிந்திலேன் றமியேன், வந்தியாவரவ மன்றிடை க்கண்ட மலர்சிலம் படியைமண் ணுணிபோய்ச், சந்தியா தயர வொளித்திடுஞ் சோணசைலனே கைலாச யகனே ()

மங்கையர்பாரக் கொங்கையங்குவட்டு மாதர்விழிக் கட லினுமளகக், கங்குலி னூடுஞ்சென்ற வெண்மனதைக் கதி யிடை நடத்துமா றெளிதோ, செங்கதிர் காலைமாலையுந் த ங்கச் சிலம்புள வெனக்கடும்பகலிற், றங்குறநீடி நின்றிடுஞ் சோண சைலனே கைலாச யகனே. (அச)

கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமேலணிந் து வெண்ணீற்றுப், புண்டரக் குறிசேர்ந்ததலொடு நினையா ன் பூசனைபுரியுமாறருளாய், மூண்டகச் செழும்பூ வெனவி ளக்கெரியு முடிமிசை முத்துமேற்கட்டித், தண்டிரைக்கங் கை யாறுசேர் சோண சைலனே கைலாச யகனே. (அந)

நாவினாற் தெழுத்து மந்திர மலாத நவிற்றுவோர் தமை யுநீ யிருப்பப், பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும் பாமரர் தமையுமென் றெழிவேன், கோவினம்புரப்பக்குன் றமன்றெடுத்த குன்றபம் பாடகக் குன்றந், தாவினஞ்சூ லியென் றெடுத்திடுஞ் சோண சைலனே கைலாச யகனே. ()

திங்களுங் கதிரு மிலங்கியமானுந் திகழ்பெரும்பூதமோ ரைந்துங், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டுக ண்களிச்சுரா ளுளதோ, பொங்குகுங்கிலியக் கலயவாசழ

லிற் புகையெனச் சரோருக வல்லி, தங்குவண் டெழுபூம் பொய்கைசூழ் சோண சைலனே கைலாயகனே. (அ)

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள் பூதங்களெ னவிலாதடங்க, வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி யருவினைக் குறும்பற வெறியாய், செறிமுலைக் கரியுஞ் சிற் றிடை யரியுஞ் சேரமா தமைதினங்கட்டுந், தறியெனக்க வின்பெற் றிலங்குறுஞ் சோணசைலனே கைலாயகனே.

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து புண்ணி யர்க் கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பி னடைந்த செம் மணிபோ லெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கடலு ளடங்கும் வெற்பன்றி மலைதரு மருட்பெருங்கடலை, தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோணசைலனே கைலாயகனே. (அ)

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய நெடியவ னெஞ்சகன்றி டாத, தேங்கிய சோதி மன்றுளா டுவவென் சிந்தையுண்ட டப்பின் பதங்க, ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர் வீழ்ந் தழுமளி புரிரியின் மருங்குத், தாங்கியவாலவட்டநேர்சோ ணசைலனே கைலாயகனே. (கூ)

எழுபசும் புல்லும் புனலுமெவ்விடத்து மிருந்திட நினை த்தவ்விடத்தே, விழைவொடு வந்து தோன்று நீயிருப்ப வினின்மா னுடர்பிறந் தழல்வார், மொழிதருகருணை மலை யெனும்பெயரொன் மொழியொரீஇ வேற்றுமைத்தொகை யைத், தழுவற நின்று வளர்ந்திடுஞ் சோண சைலனே கை லாயகனே. (கூ)

வேணவா வகன்றுநின் றிருவடியின் மெய்ம்மை யன்ப டைந்து பொய்ப் பிறவி, நாணுவா ரினங்கண் டுறும்படி

தூய ஞானநாட்டம் பெறவருளாய், சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச் சிலம்புகள் சிறுதுரும் பாகத், தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோணசைலனே கைலாநாயகனே.

நின்னைய நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்கு நெஞ்சகமு, நின்னையே துதிக்குநாவு மென்றருளி நின்றிரு வடியின்வைத் தருள்வாய், தன்னையே நினைர்க்குச் சகமெலாங் காட்டுந் தாணியோ டிகலிமேவினர்க்குத், தன்னையே காட்டு மலையெனுஞ் சோண சைலனே கைலாநாயகனே. ()

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும் விளங்கொளி மார்பும்வா னுலக, மன்வணங் குறுநின் பதாம்புயமலரு மணங்குடி யிருக்குநா ளுளதோ, பொன்வனம் புரியுங் காக மொன் றினைப்பொற் பொருப்பென வடைபொரு ளினைத்துந், தன வணம்புரியும்பொருப்பெனுஞ் சோண சைலனே கைலாநாயகனே. (கூச)

குருமணி மகுடம் புனைந்துல காளுங் கொற்றவ ராதலி னென்கட், கருமணி யெனுநின் றெண்டார் குற்றேவல் கருதியாட் பட்டிட லினிதே, பெருமணி விசும்பி னுச்சியினெழுந்த பிள்ளையங் கதிரென வரவந், தருமணியொளிவெண் மதியுறுஞ் சோண சைலனே கைலாநாயகனே. (கூஞ)

* சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த திறலுமுப் புரஞ்சுடு விறலு, மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட வடலுமேத் தினர்க்கிட ருளதோ, வும்பர்மா மதியி லங்கையி லிருந்த வுழைகுதித் திருப்பவா ரழல்வான், றம்பமாயெழுந்து நின்றிடுஞ்சோண சைலனே கைலாநாயகனே. (கூசு)

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனிநின் னடியரிற் கூட்டுகவுலகி, னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றனது

நற்கள மிகழ்பவ ருளரோ, வஞ்சமைங் கரன் கொண் டிள வலோ டிகலி வலங்கொள்வா தின்னும் வந்துறினுந், தஞ்ச மென்றிடாது நின்றிடுஞ்சோணசைலனேகைலாச யகனே.

அணிந்திடு கலனுஞ்சாந்து மொண்டுகிலுமரிவையர் போ கமும் பெறுவான், றுணிந்திடு மனமென்றுணைப்பொருளா கத் துணியுமோ வறிந்திலேன் றமியேன், பணிந்திடு மயன் மால்பெருமைக ளணைத்தும்பறவை கொண் டெழுதலாய் முடிந்து, தணிந்திடாநிமிர்ந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலாச யகனே. (கூஅ)

பூவுறுதடமு மதியுறுவிசும்பும்பூணுறுமுறுப்புநின் றுல காள், கோவுறு நகரு மென்னவென் மனநின்குரைகழன்ம ருவுநா ளுளதோ, வோவுறுமனஞசெய்பவர் கொள மரந்தா ங்கோங்கல்கணைவுன் னினர்க்குத், தாவுறுமுயர் வீடளி தருள் சோண சைலனே கைலாச யகனே. (கூகூ)

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப், பேரணி கலமென் புதல்வருங் கதியும் பெறத் துதிப் பவர்க்கருள் பவனீ, நேரணி கதியை மறந்தவர்க ண்டு நிணைந்துற மிக்கபே ரருளாற், ரூரணிமுழுதுந்தான் றிடுஞ் சோண சைலனே கைலாச யகனே. (கஂ0)

சிறப்புப்பாயிரம்.

ஏணருஞ் சோண சயிலனுக்கெஞ் ஞான்றும்
பூணுர மாலை புனைந்தணிந்தான்—மாணுப்
பவப்புணரி நீந்தியிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சையன்முன் றோர்ந்து.

சோணசைலமாலை முற்றிற்று.

சிவமயம்.

நமசிவாயசுவாமிகள்

அருணசலசுரர்பேரில்

அருளிச்செய்த

சாரப்பிரபந்தம்.

காப்பு.

எக்கணக்கிற் கெட்டாத வின்பக் கடலளிக்கு
மூக்கணக்க னீன்றெடுத்த முன்னவன்ற—னிக்கணத்திற்
சந்தமிகுஞ் சாரப் பிரபந்தந் தான்சொல்லக்
கந்தமலர்ப் பாதமே காப்பு.

ஆசிரியவிருத்தம்.

அரகரா திருவண்ண மலைதேவ னேசர்ணர்பிளாய் வந்தித் தவன், அடிகளரு ளுருவாஞ் சிவானந்த தேசிகற் கடிமை யா நமசிவாயன், மருவியே நமதிடம் பரிவுடன் விசனீ வந்தகாரிய மேதுகாண், மாதேவ னேயுமது பேரிலன் பா யுத்தமிழ் மாலைபா டிக்கொணர்ந்தேன், பெருமையா யெது வேண்டி நம்மீதி லதனீர் பேசியே கொண்டுவந்தீர், பிஞ் ஞகா சம்சார சாகரத் தினில்வைத்த பிரபஞ்ச வாழ்க்கை தனிலே, மரபென்று மகவென்று மனைவி யென்றும் பெரிய வாதனையினல்விசனமாய், வறுமையதுதீரவும் வதுவையது செய்யவும் வந்தன னுமைநாடியே. (க)

எனைநாடி வந்ததா லியாமென்ன செய்குவோ மெமக் கொருவர்செய்வதன்றி,எங்கையிலியாதுள துனக்கொன்று சொல்கிறேமெமக்கடிமையானபடியால்,உனைநாடுமன்பர்க ளுத்தமர்களல்லவர்க ளுதவிசெய்கின்ற பேர்கள், உலகத் திலே நல்ல தர்மிஷ்டி யனேவோர்க ளுண்டுகா ணீயுமவர்

மேல், தனியினியகவிசெய்து செல்வையா லுன்றனக் குத விதப்பாதுசெய்வார், தற்பரா நல்லது நீர்சொன்ன வாக் கெனது சாண்வயிறு தனைவளர்க்க, வீணாடு முலகத்தி னரைவந் தனைசெய்து வேண்டவே கைகாட்டினீர், வீண ல்லவோ வெனது வெண்ணமது நிறைவேற வேண்டியது செயல்வேண்டுமே. (உ)

அலட்டவேண்டாம் புலவரே யெம்மையுள்ளபடி யாய்ந் தறிய விவைகேளுநீ, அன்னையுந் தந்தையு மில்லாத தனிய னனம்மைவிடு மருவினிமைய, மலைக்காவலன்மகள் பெண் டெனக்கவள்தந்தமைந்திருவர் களின்மூத்த, மைந்தனுக் கின்னமோ கலியாண மிலைபெரு வயிற்றினி னிளவலுக்கு, நலக்காமலிந்திரன் கண்ணிகாதானமாய் நயப்புடன்செய்து வித்தான், நாணறக்குறமா தினைத்திருடி பலபேர் நகைக்க வேகூடவைத்தான், தலைக்கோ முழுக்கெண்ணெ யில்லாம ல் மயிரெலாஞ் சடைபிடித் ததுபொருமல், தண்ணீருமதி யமு மெந்நேரமுஞ்சுமை தான்வைத்தனம்புலவரே. (ஊ)

உடுக்கின்றவஸ்திரங் கானகத்தினின்மேவு முழுவையின் றோலதாகும், உடர்குளிர் பொருமலேபுகர்முகத்தானையை யுரித்துமேல்போர்த்தினேன்காண், தொடுக்கின்றபூவணஞ் சர்ப்பங்களதுவன்றி தொங்கலோ தலைகள்சரமாஞ், சொந் தமொருகாசுக்கு மவகாசமில்லைகாண் தொகையாயுனக்கு தைத்தோம், நடக்கின்றசெய்திதா னென்னென்றுசொல்லு வோ நால்வரோ டொப்பிலைகாண், நாணவேகாளியுட னடி யோர்முகாலுமோ நான்றவாதக்காலதால், எடுக்கின்ற மா டொன்று மாணென்று கையினிலிதன்றி வேறில்லையாலும், இலகுமழுவேந்திணைகால்வரிதையறிவார்களின் னுமோ கே ள்புலவரே. (எ)

கொட்டுடன் கூடையுங் கொண்டுதான்பிட்டிடுங் கூலிக்
குமண்சுமந்தோங், கூசாமலேதலையில் விறகெடுத்தோ மன்
றிகொலைவேடனெச்சிலுண்டோங் தட்டுதலைபோடு கொண்
டில்லங்கடோறுமே தனியாபிரந் துண்டனம், சாண்வயிறு
தனைவளர்க் கப்பாடுபட்டதால் சலிப்புடன்விடத்தை யுண்
டோங், கட்டழகியுமையவள் கழுத்திற்றடத்தனள் காயம
துகிலெபெற்றனங், கருதுமென்னிர்வாக மிப்படியிருக்க நீர்
காசுக்குவாதாடுதீர், சிட்டர்தொழு மீசனின் பெருமையறி
யாமலுன் றிருச்சமுக முன்வருவனே, திகழுநின்பெருமை
யைநீயறிந்ததுமென்ன செப்புவேன்கேளீசனே. (நி)

மேலான வம்பொன் மக மேருகிரியுந் தவளவெள்ளிமலை
யுன்றன்வீடு, விரும்புமுன்சம்பந்த மிமயகிரியும்பொன்னுர்
மின்னுடைமையாயணிந்த, வாலானவரவின் சிரோமணிக்கி
ந்தநல் வையகம்விலையொக்குமோ, மருவுமுன்மனிதான்
முப்பத்திரண்டறம் வளர்த்திடுமுலோகசனனி, சூலாகியவ
ள்பெற்றமூத்தவன் பேர்சொன்னுற் றுன்பங்கள் விட்டோ
டுமே, தூயமின்வல்லைப மணுளனு மிளையவன் சுரர்குடிக
ணிலெகொள்ளவே, மாலானவசுரரைவதைத்ததா லிந்திரன்
மகளைவதுவைப்புரிந்தான், வள்ளியைச் சிறையெடுத்தான
வன்மகிமையை வாயினுற்பேசவெளிதோ. (சு)

பிரமனைத் தலையறுத் தங்கரத்தேந்தியே பிர்மத்தி வந்த
தென்றே, பேரிட்டிரந்துநீர் வேடமது காட்டினீர்பேருல
மதுவெண்ணவே, பரவையிற் கடுவிடமுண்டரமரருய்யப்ப
கிர்ந்தமிர்தமேயளித்தீர், பலவெலும்புஞ்சிரமு மாலையாயுற்
றதும்பார்க்கிலுன் வெற்றியலவோ, வரிபுலியி னுடையுஞ்
செஞ்சடாதாரமும் யோகபாவனை யல்லவோ, வோங்கிவரு
காளியுடன் வாதாடினீரவளுறுவலி யடங்கவேதான், இரு

மைபெறுசதுர்வேத மதிரூபமாகவேயிடபமாயேறினீர்கா,
ணீசனேயெனிந்த வேழ்மைபாய்ப்பேசுறீ ரேனென்றன்க்
காகவே. (எ)

பரதவிக்கின்றநரை பிட்டுவாணிச்சிதன்பத்திக்கு மண்சு
மந்தீர், பாணனுக்காகவே விறகெடுத்தீர்தலையில் பரிவுடன்
கண்ணப்பனர், அருமையாய்ருசிபார்த் துகந்திட்ட மாமிச
மகமகிழ்ந் தொத்துகொண்டீர். ஒருவருக் கொப்பில்லை நா
மென்பதெவர்க்கு முன்றனுக்கொப்பாவரோ, திருவிளையா
ட்டதா யாடுறீரிதுவெலாந் தேவரீரிதமகிதமாய்ச். சிறுமை
யும்பெருமையு முனதோசொல்வாயெங்கள் திவ்வியசிவசா
ம்பமூர்த்தி, அருணமலை யெண்ணு லறிந்ததை யுரைத்தன
னப்பனேயிப்பவுன்ற, னருளினு லென்றனக்கு வகையா யி
னிமேலு மனுகூலமதுசெய்வீரே. (அ)

அகிலகாரணனுநீயெள்ளுக்கு ளெண்ணெணய்ப்போலனேக
வுயிருக்குணர்வுநீ, யசமுநீபுரமுநீ யாதிருவிரூபநீ யகண்ட
பரிபூரணனுநீ, யிகமுநீ பரமுநீ வநசராசரமுநீ யின்பமுறு
சாயுச்சியநீ ஏதுநீசதுர்வேதமுடிவுநீவடிவுநீ யிமையகிரியு
தவுதரள, நகைவதனிபா னீ யமரருக்கரிதாகி நம்பினவரு
க்கெளியனீ, நன்குகிற்சபைதனில் கலகலெனநடனமிடுநா
யகச்சொரூபனீ, திகழுமெண் சித்திநீ முத்திதாவல்ல நீ
திவ்யஞானக் கடவுணீ, திருவுளமகிழ்ந்து நல்லடியவர்க்க
ருள்செயுந் திருவண்ணுமலைத்தேவனே. கூ

வந்திடும்புலவரே யிரும்மும்மன்றனது மனபாவகம்பார்
த்தனம், மருவுனம்பெருமையையெடுத்துரைத்தீர்ந்தவாய்
மையான் மிகமகிழ்ந்தோம், உந்தன்வாற்சல்லியமு மார்க்
கமும்பெருமையு முண்மைதருபுலமையெல்லாம், உலகத்தி
ல்மூடரறி வார்களோ வென்றுதா னுன்னியெம் பால்வந்த

னை, அந்தவறுமைக்குநாஞ் செய்யவே வேண்டுநீ ராய்ந்தறி யுமாகமத்தி, லவனவன்பத்திக்கு முண்மைக்குமுயர்கதி யளிப்பமென்றுரைசெய்வதால், சொந்தமாயுன்றனுக்கெந்த விதமாகிலுங் கொண்டுபடுமன்பர்முன்பாய்த், தூயநற்பொருடனைத் தருவிக்கிறேமிகச் சுதந்தர மகிழ்ந்துகொள்ளே.

ஆரென்றுகேட்பையா லாயிரவர்தங்களி லச்சரப் பாக்கவைசிய, ரவர்நமக்கன்புளோ ரறுநூறு தலைகட்டி லனைவருங்கூடுவார்கள், சீர்கொண்டகும்பலிற் கண்டுநீர் நமதுபேர் செப்பியேயினவல்செய்தால், செம்மையாய் மனதுசந்தோஷமாயுன்றற்குசெல்லுமென்றதுதருவார்காண், பாரென்ன புலவரே யல்லாதுதேவரீர் பயில்வதுக்கென்சொல்லுமேவன் பலர்களும் மொருசித்தமாகி சந்தோஷமாய்ப் பார்ப்பரோ வென்சொல்வரோ, சார்கின்றவேற்கென்ன திருமுகந்தருகி றேஞ் சதிருடன் கொண்டுபோய்நீ, சமுகத்தில் வைப்பையேல் பார்த்தவுடனேதருவர் சந்தேகமில்லையிதுவே. (கக)

பதினாறு காதவழி சென்று சிலரைப்பற்றி பரிவோடுமுமதிடத்தே, பாக்கியம்பெறுதற்குவந்தனனென்றுரை பகர்வதையறிந்தேனுகில், இதினுலுமென்றனுக் கனுமானமாகியே யிதயக் திடங்கொளாமல், எண்ணுதே யென்செய்வேனென்தையாமீசனே யிதற்குநீர்சொல்லுமையா, விதியாகநீ கலைகள்கற்றறிந்தாலுமுன் விவேகத்தையென்சொல்லுவேன்; விளங்குநந்திருமுகத்தினிணேடுமுன்னையும் விழியினுற் கண்டபோதே, மதியாதமூடரும் பொருளாசை லுத்தரும் மதியதும் விளங்கிநல்ல, மார்க்கா யொருமித்தனக்குதவி செய்வார்கள் மனமகிழ்ந்தினிது கொள்ளே. (கஉ)

ஸ்ரீமதுதேவதேவன் கைலைநாயகன் ஜீவாத்மபரிபூரணன், திகழுற்ற வுலகினிற் கொருகர்த்தனகிய திருவணுமலையீசனுர், சாமவேதங்கண்முதல் பாராயணஞ் செயுஞ் சட்டநா

தையர்வடிவாய், தரணிதனில்வந்துநா மடிமையதுகொண் டமிகுதயவுள்ள வடியார்களும், நாமமிடுகின்றநம் மைத்து னற்கடிமையாய் நாடோறும்வாழுகின்ற நன்மையடியார்க ளும்யாவருங்காணவே நயந்துதா னுண்மையதுவாய், யாமி குதிபத்தரு ளன்புள்ளத்தரென் றகமகிழ்வு கொண்டுங்க ளுக், கன்புடன் மடலிற் சங்கரைய ரெழுதிய வருட்டிரு முகங்காணிதே. (கக)

சிரஞ்சீவி பூவைசிய நாட்டாமை செய்யுஞ் சிரோமணிச பாபதிக்கும், தேர்ந்தசிவகணபதிக்கும்புகல்தயாளஞ்சீர் த்திருமரப்பனுக்கும், தருஞ்சொ லருணைசலச் செல்வனுக் கும்புகழ்ச் சரவணபவன்றனக்கும், தகைமைசிவசங்கரநம ச்சிவாயன்முருகனுக்கு முயர்தனவைசியருள், வருஞ்செய லுணர்ந்தசக் கிரவர்த்திசெட்டிகொக் கப்பசெட்டிக்கும் வ ணிக, மன்னுசின்னஞசெட்டி யுங்கறுப்பாசெட்டி மாரிசெட் டிக்கும் வளவைப், பெரும்புகழ் படைத்தகோவைசியருளி ராமசாமிப்பிள்ளை பெரியகிர்ஷ்ணபிள்ளை, முதலாயினோர்க் கும்பாக்கியசம்பத்து மேன்மேலுமினிபெருகவே. (கச)

இப்போது வெந்தமக் கடிமையாகிய புலவனெழினமசி வாயனென்போ, னெனதடிவணங்கிநற் றமிழ்மாலை பாடிவ ந்தேதியாகங் கேட்டதா, லப்போதுவுங்களுக் காசீர்வதித் துநாமன்பு திருமுகமெழுதினே, மாதலாலாங்கவன் மகிழ வேநீங்கடா மாடையாபரணநிதிச, லெப்போதும்வாழ்த்த வேயீந்திடுங்கீர்த்திபெற் றெண்ணில்கா லங்களடியார்க், கினிதாகவந்தனே வழிபாடுசெய்வதா லெமதுபத மடைகுவீ ரால், தப்பாதுவிகபர சவுக்கிய மனைத்தையு மடைந்துசா யுச்சியத்திற், றருக்கியின்பச்சா கரத்தினி லூழ்ந்தியே சார் வதாய்வாழ்குவீரே. (கரு)

சாரப்பிரபந்தம் முற்றிற்று

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும்

இயற்பெயருள்ள

திருச்சிற்றம்பலநாவலரவர்கள்

அருளிச்செய்த

அண்ணுமலைச்சதகம்.

விநாயகர் காப்பு.

அண்டமனைத் தும்பரவு மண்ணு மலைச்சதக
மொண்டமிழாற் பேதையே னுதவே—தொண்டர்பணிந்
தெண்ண வரந்தருகல் யானைதிறைக் கொண்டருண்முக்
கண்ண வரந்தந்தாள் காப்பு.

நூற்பெயர்.

மண்ணுதிரு வண்ணு மலைச்சதக மென்றும்பேர்
பின்னுமொரு நாமம் பேசுவாம்—இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்கும் துதிப்பதா மே.

கடவுள் வாழ்த்து

கார்கொண்ட திருமேனிசெந்தாமரைக்கண்ணன் கமலாலயத்
தென்கணன் காணரிய பேரொளிச்சுடராகி யண்டக் கடாக மூடுரு
விநின்ற, வோர்கொண்டதிருவுரு மருவுருவமாகியுலகெங்கும் வி
யாபியாகி-யெல்லாவுருக்கடொறுமுயிராகி யவ்வுயிர்க்கின்பவானந்
தமாகிப், பார்கொண்ட ஞலருக் குமமாகி யழியாத பரசத்தியிடமு
மாகிப்பஞ்சகிர்த்தியமுப்புரிந்தருள்சுரந்தெழும்பரசிவமகாலிங்கமே
யார்கொண்டமலைவளச்சிங்கபுரி யரசுசெய்தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமலைக்குரியவண்ணுமலைத்தேவனே.

திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை.

கருணு கரக்குக முனிக்காகவேமுனங் கைலாயகிரியின்முருக
ன்-கைவேல்விடுக்கவந் தான்றலாலேதிருக்கையில்வே லூராகுமெ
ய்ப், பொருணயனுரவ தரித்தலமளவையார் புகலுவெண்பாவினு
க்காப்-பொங்குபா னெய்வந்த பெண்ணேநதி சூழ்தலம் பொன்மாரி
பொழியுந்தலம்,வருமா வருட்பெரியநாயகியும்வீரட்டமாதேவர்வா
ழுந்தலம் மாதவக்குகமுனி மகந்தனிற்றெய்வீக மன்னனவதாரத்த
லம், அருணசலக்கிருஷ்ணதாண்டவவசந்தவா ணுதகைவசந்தாய
ர்அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமூலக்குரியவண்ணுமலேதவனே.

அபிஷேகவிதி கூறியது.

சுத்தசல மபிடேக நல்லெண்ணெ யரிசிமாத்தூண்மஞ்சணெல்
லிமுள்ளி-தூபஞ்சகௌவியமோடாவினெய்பாற்றயிர் சுவையானப
ஞ்சாமிர்தம்-உத்தபல மாக்கதலிமாதுளையுமெலுமிச்சையோங்குதம
ரத்தைகார்த்தை-யொண்கனிச் சூளகுளஞ் சித்தேன் றிரட்டுபாலுய
ர்கருப் பஞ்சாறுடன், மெத்தமிளநீரன்னம் வில்வநீர் தபனநீர்மிளி
ர்பொன்னி ரத்நோதகம்-மென்பசுங் கற்பூரந்புனுகுசந்தனம்விள
ங்குதாராபிடேகம், அத்தநிற்கித்தசையவபிஷேகமேபுரிந்தருள்பெ
றுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமூலக்குரியவண்ணு
மலைத்தேவனே. (கூ)

அருள்பெறுமா றெங்ஙனென விரங்கல்.

நருமல ரெடுத்தூப்பூஜை புரிவோமெனிற் றண்மலர்தனே
ருந்தச்-சமையந் தெரிந்துமுகையவிழ்கின்றபோதுவீழ்தனிவண்டு
ஞலெச்சில்லாம், வீரிபுனலெடுத்தனக்காட்டுவோ மென்னிலோமே
யுமண்கோமை-மீனத்தைஞண்டிருந்துலவலாலந்த நீர் மிகுதி
யுந்தானெச்சிலாந்தெரிமறையிருக்காதி மூவர்தேவாரங்க டிருவாச
கத்துதிகளுச்-செய்வமெனி லோதுதிகள்செய்நாக்கு ளெச்சிலென்

செய்தனக் காளாவனே, அருள்பரதேசிகக் குகைநமசிவாயர்திரு வருள்பெறு வசந்தராயர்-அண்ணு வினிற்றுதிசெ யுண்ணுமுலைக்கு ரிய வண்ணுமலைத்தேவனே. (சு)

திருவண்ணுமலைத் தீர்த்தத்தொகைவகை கூறியது.

இந்திரன்தீர்த்தமா டக்கினித்தீர்த்தயா மைமதீர்த்த நிருதிதீர்த்தமியல் வருணதீர்த்தமுயர்வாயுதீர்த்தம்வடக்கெழிலாங்கும்பேர தீர்த்தம், நந்தலறு மீசானி யன்றீர்த்தமிறைவியுண் ணுமுலைத்தீர்த் தமரிய-நரசிங்கதீர்த்த மாணிக்கவாசகத்தீர்த்தநாடரும் பிரமதீர்த்த, மூந்துசிவ தீர்த்தமரிமைந்துசக்கரதீர்த்தமெய்ப்பெருங்கட்கதீர்த்த-மூந்நூற்றின்மேலுமறுபதுதீர்த்தமேவுதலமொழியின்னருணசலம், ஐந்துயூகத்தலத்தொருதலமிதென்பர்கா ணருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரியவண்ணுமலைத்தேவனே.

மூவர்பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடங்கூறியது.

காவிரியின் வடகரையி லறுபத்துமூன்றுபதிகாண்டறுந்தென் கரையினிற்-கருதுமொருநூறுமிருபத்தேழெனும்பதிக்கணிக்கிலீழத்திரண்டு, கோவியற்பாண்டி பதிநான்கு மலைநாடொன்றுகொங்கிலேழ்நடுநாட்டினிற்-கூறுமிருபத்திரண்டாந்தொண்டைநாட்டிற் குறிக்கிலொண்ணூன்குதலமாம், பூவிரவு துளுவத்திலொன்றுவட திசையைந்து புகலிருநூறு மெழுபான்-மிணருமேநாலுதல மூவர்பாடிய தலம்புண்ணியத்தல மென்பார்காண், ஆவிதொழு நின்றுணவளித்திடும்பரம னேயருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற் றுதிசெயுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (சூ)

மாசந்தோறு மபிடேக வகைகூறியது.

வருடாதிசித்திரைத் திங்கள்பூரணைநாண்மருக்கொழுந்தபிடே கமாம்-வைகாசிசந்தனம் தரணியில்பலாப்பழமுமாங்கனியுங்கதலிக் கனி, கருதாடிசர்க்கரைநலர்வணியிலதிரசங்காணும்புரட்டாசியிற்-

காய்ச்சியதிரட்டுபா லேப்பக்கண்ணமாங்கார்த்திகைத் தீபார்ச்சனை, திருமார்கழிக்குநெய் தைத்தேன்குடங்கிருதஞ் சேர்ந்தகம்பளமீன்ம தித் தீர்த்தயிர்ப்பரமனுக்காட்டல்விதி பூரணத்திதோறுமரசபூசை, யரிதாயறிந்தனக் கபிஷேகமதுபுரிந் தருள்பெறுவசந்தராயர்-அண் ணுவினிற்றுதிசெயுண் ணுமூலக்குரிய வண்ணுமலைத்தேவனே. (எ)

விபூதிதரிக்கும் விதி.

நித்தலும்வைதீக ராதிமறை யோர்கட்கு நீர்கொடு குழைத்து நீற்றை-நெற்றியிற் பன்னிரண்டங்குலத் தளவதா நேராய்த்தரித்த னெறியாஞ், சித்திரமிழைத்த சிங்கா னத்தரசுபுரி செங்கைவேல ரசருக்குத் திருநீற்றையொன்பதங்குலநீளமாறுதற்சேர்த்தணிதலே விதியதாஞ், சுத்தவைசியருக்குநாலிரண்டங்குலஞ் சூத்திரற்கேழங் குலந்-தோகையர்தமக்கு நாலங்குளத்தளவெனச் சொன்னதே மகு டாகமம், அத்தனேவாங்குலந்திரிசூலவடிவணித லருள்பெறுவசந்த ராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமூலக்குரிய வண்ணுமலைத் தேவனே. ()

பிராமணர்கள் கருமாதி விதிகூறியது.

வேதமதுதானுதன்மற்றொருவருக்கோதிவித்தருன் யாகஞ் செயல்-விதியோடுமற்றொருவ ருக்குரல் யாகஞ்செய்வித்தலோடீத லேற்றல், ஓதுமிவைசட்கருமமாகவன்னியமொன்றுரைத்த காருக பத்தியம் - ஒன்றுசுடர்தெகூணக்கினியொன்றதிவைமூன்றுமூறழூ ந்திரேதாக்கினி, தேகமுமுயிரல்பிரமசாரிக்கிரகத்தன்கிளர்ந்தவான பிரத்தன் - கேடில்சந்தியாசியிவையாச்சிரமநான்கதாங்கித வேதங்க ணுன்காம், ஆதிவருணர்க்கெனவியாசமுனிசெய்தவிதியருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற் றுதிசெயுண்ணுமூலக்குரிய வண்ணு மலைத்தேவனே. (கூ)

அர்க்கியங்கொடுக்குங் காலபலன் கூறியது.

இரவிலோரையைத்துகடிகையதுஷக்காலமேத்துவான் மீனி னங்க-ளெங்கும்விளங்குமக்காலையிலருக்கிய மிறைத்திடுதல் பூரண

பலன், மருவுமிருபானேழு கன்னவருஜ்ஜேதயம்வானிலகுதாரகை யெலா - மழுங்கியு மழுங்காதிருக்கவர்க்கியமீதன் மத்திபப்பலனுகு மாம், உரைசெயிருபானெட்டி லின்னுதய மூடுவொளி யொழிந்தரு க்கியமதம்மா-மூதயமேலர்க்கியம் வந்திமைதனபல னுரைக்குமறை யோர்க்கென்பர்காண், அருணகிரி நாதர்புக ழயிலவன்ருதையே ய ருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமூலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (ம)

அஷ்டவிவாகங்களில் பிராமணர்க் கிவையென்பதும்
பிராமணர் நித்திய கருமவிதியுங் கூறியது.

கருதுபிரமந்தேவதம் பிரசாபத்தியங்காணமகிழாரூடமாங்-கந் திருவமசுரமூமிராக்கதம்பைசாசகலியாணமோரெட்டினிற்,பரவுமு தனுகும் பொருந்துமரனினிகருப் பாதனமாதியான பதினுறுமா ச்சிரம நாட்குசட்கரும்மும் பழகுமுத்தழலும்வேள்வி, யிரவியுதிமா முன்னுஷக்கால நீராடியேன்ற நிரிசந்திகால-மிருகையாலர்க்கியம் பூசையெளபாசண மியம்புகாயத்ரி சபம், அரியநால்வேதாத்தியன மறையோர்செய்கையருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமூலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (கக)

இருபத்தொரு யாகத்தின்பெயர் கூறியது.

ஓதரியவக்கினிஷ்டோம மத்யாக்கினிட்டோமமக்கிரகாயணி. யுத்தியஞ்சோடசி வாசபேயம்மாக்கினி யோத்திரஞ் சதுர்மாசியக், தீதிலாவத்தோரியா மமதிராத்திரஞ்செப்புமக்கினியதேயக்-தெரிசபூ ரணமாச நிரூடபசுபந்தஞ்சிராவணி சவுத்ராவணி, மேதகையசத்தரி சிரார்த்தமோடட்டகை வினங்குமாக்ராயணமுடன்-மேவுவார் வண மாசு வயசுமிருபத்தொன்றும்வேதருவில்யாகங்களாம், ஆதிவேள்வி யில்வந்தவமிசநரசிங்கவே ளருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற் றுதிசெ யுண்ணுமூலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (கஉ)

அரசாளவேண்டுந் தன்மை கூறியது.

மலையரண்காடரண்மதிலரணுரேரரண் மருவுமிந்நான்கரணமும் மந்திரிகடளகர்த்தர் குடிபடையுமுடையராய் வலியசதுரங்கசேனை,

நிலையுடையராயெளியரெளிதினிற்கண்டுகொளகோரிடுங்கருணையுள
ராய்-நிலமுழுங்குடிகள்பா லாறிலொருகடமையின்னிதிகொண்டுத
னதுநாட்டிற், கலகமிடுவோர்களைக்கொலைகளவிலைர்களைக்கன
ட்டமிருக்கங்களைக்-கண்டித்து மனுநூலறிந்து செங்கோலின் முறை
காத்திடுதலரசாட்சிகாண், அலைபுனற்பாண்டிநா டாண்ட சொக்கே
சனேயருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலை
க்குரிய வண்ணுமலைத்தேவனே. (கஉ)

அரசர்கட்குறுதி சுற்றங் கூறல்.

மந்திரியர்கருமாதி காரர்கடைகாப்போர்கண் மருவுநகர்மாக்க
ள்சுற்ற-மலைபடைத்தலைவரோடிவுளியேறிமைறவர்மதயானைவீரரெ
ண்மர், சந்ததமு மரசருக் குறுதுணைவ ராமியல்பு தவறுத வந்தணு
ளர்-சாந்தமுறுபாளரொடு மடைத்தொழிலர்நோய்தனையறிந்தவி
ழ்தமீயும், புந்தியின்மருத்துவர்களுருசிமித்திகப்புலவரிவரைவர்க
ளுமெப்-போதுமரசர்க்குறுதியாகின்ற சுற்றமிதுபுகலுமனுநீதிகண்
டாய், அந்திசந்தியுமுச்சிவந்தனம்பூசைபுரியருள்பெறுவசந்தராயர்-
அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரியவண்ணுமலைத்தேவனே

திருமுனைப்பாடி நாட்டுப்பிரமாணங் கூறியது

மன்னியல்பசும்பரவி யேறியொரு கணமதில் வலம்வரும்புவி
யைநீயே-மாமுடிகவித்தான்க வென்றுமூவேந்தரும் வாய்மலர்ந்தரு
ளவாங்கே, மின்னுருகுணக்குக் கடற்கரைவரைக்குமிகு மேவுமலர்
சோலைதெற்கு விளங்குதிருவாத்துறை வதிட்டகுடி வெள்ளாறுமே
ற்றிசைக் கொல்லிமலையாந், தென்னியல்வடக்குப்புனற் றருங்கடி
யாறு செப்புமிந்நான் கெல்லையுட்-டிருமுனைப்பாடிநா டுதுசதுர்மு
டிபெற்ற தெய்வீகமன்னனுண்ட, அந்திலையில்சிங்கபுரி நன்னிலத்த
ரசுபுரி யருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற் றுதிசெ யுண்ணுமு
லைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (கடு)

தெய்வீகராஜன் மங்களங் கூறியது.

பணிவெள்ளிசெம்பொனப ரஞ்சிமணிமரகதப்பச்சைசிகழ்வை
ரியம்-பவளமாணிக்கமேதகங் கோமளம் பனிமுத்து புஷ்பரா

கம், மணியுந்துமாபரணமாலையும்பன்னிருவகைத்தெய்வமலர்மாலை யும்-மார்பத்தணிந்துமாமுடிசூடியிலகுபசுவான்புரவியூர்ந்துவேள்வி நணியுள்ளெழுந்துவந்துயர்திருமுனைப்பாடிநாடாந் திருக்கோவலூர், நல்லசிங்காசனத் தெய்வீகராசனுநரசிங்கமுனையர்வாழ்க, அணி வெள்ளிகோத்ரகுலதீபமெனவந்தகீர்த்தி யருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரிய வண்ணுமுலைத்தேவனே.

தெய்வீகராசன் சதுர்முடிசிறப்புக் கூறியது.

பன்னிரண்டலர் மாலைபுனைகின்றதிண்புய பராக்ரமத்தெய்வீக ப்படையெடுத்தமர்புரியவேண்டாமெனச்சொலிப்பாராஞ்மவேந்தர் நீரண, மன்னரோர்மூவரும்மல்லயுத்தம்மேற்றுமல்லாடலுக்கிளைத் மு-மற்போர்புரிந்திடற்கிவனெருவ னரசிங்கமாவீரனெனவியந்து, தென்னனுஞ்சோழனுஞ்சேரனுந்தமுடிசெல்வமுடியென்று சூட் டத்-திருமுடியுடன்றேறுமொருமுடிச்சதுர்முடித் தெய்வீகுல த்துதித்த, அன்னவெனமதிவளருநி புணகெம்பீரதுரையருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரிய வண்ணுமு லைத்தேவனே. (கஎ)

தெய்வீகராசன் பன்னிரண்டுமாலைவகை கூறியது.

கொம்பலர்பசும்பொனேர் கொன்றைபுனைமாதளை கூவிளங்கு மிழ்சண்பகங் குலவுபாரிமளவருளமலர் துளவுகமலமலர்கோங்குசெங் குவளைவாகை, தும்பையார்வேம்பு பன்னிருமாலைகொண்டபுய சுந் தரவிலாசமார்பன்-துயசதுர்முடிமகுடசேகரன்மும்மன்னர்சொந்த சம்பந்தமுடையோன், கம்பமதமுத்தலைக்காரண்டனைச் சயங்கண்ட வேல்கொண்டதிறலோன்-காசினியைனழுநூறுவயதாண்டதெய்வி கக்காவலன் மகிமைகண்டாய், அப்புயமலர்ந்தமுக கெம்பீராசர்புக ழருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரிய வண்ணுமுலைத்தேவனே. (கஅ)

மலையரையன் தெய்வீகனுகியவதரித்தமை கூறியது.

கரையில்புகழ்கைலையிற்சிவனுமையுமருவுமக்காலைமலையரைய னோர்நாட் - கடவுளுக்கறிவியா தேபுகப்பரமனக் காதன்மாதுலனை

நோக்கித், தரையின்மானிடரைச் சனிப்பையென்றுரைசெயத் தாழ்ந்தவன்சோர்ந்துநிற்குந்-தருணத்திலுமையெழுந்துன் மாமலர்ப்பிற விசார்வலேனென்றிரைஞ்சி, யுரைசெயச்சாபந்தவிர்க்க வேண்டுவ தாலிவ்வுலகத்திலனேகயற்றி-லுதியாமல்வேள்வியி லுதித்தவனியா ன்கவென்றே திடக்குகமுனிமகத், தரையனென வந்தசெய்விக குலோத்துங்கதுரை யருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (கக)

தெய்விகராசன் மனைவிகள்பெயர் கூறியது.

சேரன்பயந்தபதுமாவதியெனும்பெயர்த்தெரிவையும் பாண்டி யன்மகட்-டினமால்பொருந்துகாஞ்சனமாலையென்னு மொருதேவி யுஞ்சோழனீன்ற, பேரன்புகொண்ட சன்பகமாலையென்கின்ற பே தையுமணம்புரிந்த-பெண்ணேயாற்றங்கரைக்கொவ றெய்வீகனருள் பெருமானிலங்குகாவ, லூரன்றுதித்திருண்தொண்டத் தொகைக்கு ள்ளுமாபதி யுருக்கலந்தே-யுற்றவறுபத்துமூவரி லொருவரா'கின்ற வோங்கு நரசிங்கமுனையர், ஆனவம்மிசகுலகு பேரனிகர் செல்வது ரையருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமலைக் குரிய வண்ணுமலைத்தேவனே. (உ0)

சத்தபுரி ராஜகுமாரிகளைத் தெய்விகராசன் மணஞ்செய்தமை கூறியது.

காசிராசன்மக ளனப்பிரபைதன்னையுங்காஞ்சிபேரிகதனீன்ற-கமலாவதிப்பெண்ணையயோத்தியிற்சிசுருமன்கன்னியாங்கனகையினை யும், மாசறுமவந்தியாபுரிவிசாலக்கண்மஞ்சரிதருள்கலாவதியினை-ம ன்னுந்துவாரகைச சந்தரவருமன்றருமடந்தையுற்பலமாலையுந், தே சுவடமதுரையம்போகவிசையாவருவர்செல்வி கமலக்கண்ணியைச் செவ்வபுரிமாயையமா சேனன்பயந்தமதிசேர்ந்தவுற்பலநயனியை, ஆ சையொடுவேட்டதெய் விகருலோத்துங்கதுரை யருள்பெறு வசந்த ராயர் அண்ணுவினிற் றுதிசெ யுண்ணுமலைக் குரிய வண்ணுமலைத் தேவனே. (உக)

அங்கவைசங்கவைகலியாணங்கூறியது.

சிங்களமெனுந்தேய முழுதாளு மன்னன்சிறந்தபேர் பாரிசாள
ன்-செய்தவப்பயனுற்பிறந்தநற்குணமான சிறுவியங்கவைசங்கவை,
மங்கையர்களிருவரை வளர்த்தெடுத்தெவையார் மாமுகக்கணபதி
கையான்-மணவோலையெழுதி மும்மன்னரைக்கோவலூர்வரவழை
த்தருளிடற்குத், தங்கியபனந்துண்டமரமாகியே பழந்தாதிப்பெண்
ணெய்பாரூன்வரப்பாடியப்பெண்களேத்தெய்விகத் தலைவன்மண
ம்புரியவே, அங்குதவுமெளவைதொழு மைங்கரன்றந்தையேயருள்
பெறுவசந்தராயர் அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரியவண்
ணுமலைத்தேவனே. (உ)

மெய்ப்பொருணுயனுர் சரிதைகூறியது.

செப்பருந்தெய்வீக மன்னவன் றென்னவன் செல்விகாஞ்சன்
மாலையைத் - திருமணஞ்செய்தவளே மருவிப்பயந்த தொறு சிறுவர்
மெய்ப்பொருணுயனுர்க், கொம்பறு பசும்புரவியூர்ந்து முன்வட்டம்
வந்துற்றநகெதொன்னி-லொத்த விந்திரதிசையி னத்தங்களெல்லா
முவந்தரசுபுரிகுவாயென், றிப்பெருங்கோவலின்மணிமுடிதரித்திட
விருந்தமெய்ப்பொருணுயனுர்-ஈன்றசந்ததியெலா நத்தமன்னவரெ
ன்றிருந்திடுங் குடிகள்கண்டாய், அப்பெரியமெய்ப்பொருளி னற்கு
லம்விளங்கவந் தருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற் றுதிசெ யு
ண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (ஊ)

நரசிங்கமுனையர் சரிதைகூறியது.

வந்துலகில்புகழ்கொண்டதெய்வீகமன்னனெழின்மலையமான்
றந்தபதுமா - வதிமாதினைப் புணர்ந்தரிதாய்ப் பயந்தொரு மைந்த
னரசிங்கமுனையற், கிந்தநகொடனுந் திருமுனைப்பாடி நாட்டெல்
லைக்குண்மலைமன்னனு-யிருவெண்முடிசூட்டி வைத்தபடியாலதற்
கேயந்தரசிங்கமுனையர், சந்ததியில்வந்தவர்கள்மலையமன்னென்று
பெயர் சாற்றகெடிமேற்றிசையெலாந் - தங்கியபெருங்குடிக ளாய்நி

றைந்துழுதுபயிர்தானிடுஞ்செல்வர்கண்டாய், அந்தரசிங்கமுனைய
ரையர்பேரன்புகெறி யருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதி
செ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உச)

குலசேகரநாயனுர் சரிதை கூறியது.

சோழன்பயந்தசண் பகமாலைவதுவையிற்றேய்ந்துதெய்வீகனீ
ன்ற-தோன்றல்குலசேகரன் சுருதியை யுணர்ந்தன்ன தூயமுனைப்
பாடிநாட்டில்,வாழுமூன்றினிலொன்றுதன்பங்கிலாசித்து வடநாடு
போய்வந்துதன் - மனைவியையிடித்தேகுடன்றையின்குடபான்மணி
ச்சோழன் மாளிகைக்கண், ணுழினெதியாற்றுதிமூப்பியைச் சேர்ந்
தகிலுரித்தவர்கண்மூப்பனுரென்-றுலகெலாஞ்சொல்லவுஞ்சுருதிம
ன்னென்றுபெயருண்டாயிருப்பர்கண்டாய், ஆழ்தருபெருஞ்சுனைக
ள்சூழ்தருஞ்சிம்மபுரியருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ
யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உடு)

மிருகண்டமுனிவனுற் காரண்டவனந் தரித்தமை கூறியது.

கற்கோடை யிறைசைநகர் நந்தவனத்திற் கனத்த மிருகண்டு
முனிவன்-கடவுளைப்பூசிக்க மலர்கொண்டுவாவெனக் கடிதிலொரு
பிரமசாரி, விற்கோட்டுமலர்கொயச் செல்காலைவஞ்சனை விபாவரிய
ரக்கிமாதர் - வீளையாடலைக்கண்டு தாழ்த்துவரவம்முனி வெகுண்ட
சுரனுவாயெனச்,சொற்கேட்டவ்வசுரனுய்ப்பிறையூர்மலைச்சாரலோ
ன்றுகாண்டனுமுனங்-துண்டித்தவாகைவேல் கொள்புயத்தெய்வீக
த்தோன்றல்புகழ்சொல்லவெளிதோ,அற்கூட்டமணிகண்டகாதாவி
னேதனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணு
முலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உசு)

வேளாளர் பெருமைகூறியது

தேவாலயந்தொறுந்திருவிழாப்பூசையுஞ்செப்பரியபிரமாலயத்
தெய்வமறையோர்செய்யு நித்தநைமித்தமுந்திரிசந்தியாகங்களும்,பூ

வாளுமண்ணர்சது ரங்கபலமுதலான பொக்கசமிகுஞ் செல்வமும்-பொன்வெள்ளிதனதா னியம்பலசரக்கிஞற் பொருளாக்கும்வணிகர் தொழிலுங், கோவாதிசோடசமகாதானதருமமுங்குவலயத்தினவர் சுகமும், கோளாறுகொண்டுழும்வேளாளருழுபடைக்கோலதன்பெருமையன்றே, ஆவாற்கறந்தபாலபிடகனேயனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உஎ)

வைசியர்பெருமை கூறியது.

செம்பொனைக்கல்லினிலுரைத்தாணிவைத்துத், தெளிந்ததன்மாற்றுரைப்பர்-திரளுடைமையடகுவைத் தாலுலகண்டுமேற்செட்டாகநிதிகொடுப்பர், பம்புவரத்தப் பரீட்சைதிகண்டடாற்பார்த்துலையப்பணிப்பர்-படியுந்தராசுமுண்ணடிநிலைநிதானம்படைத்தானிலைமையுடையார், கம்பவருவர்த்தகமுகாந்திரங்கோடிபொன்னம்புவார்வரவுசெலவு - காடோறுகாவலார்காணயமிலார்க்கணுவுகல்கார்கள்வைசியர்கள்கண்டா, யம்புவியில்வணிகர்பாற்செம்பொன்வளர்ந்திடுமருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உஅ)

நான்குவருணர்க்கருதொழில்கூறு.

வேதம்படித்தலொருவர்க் கோதிவித்திடுதல் வேள்வி செயல்செய்வித்திடல்-வேண்டுவதிரத்தலொரு வர்க்கீதலாறுதொழில் வேதியர்க்கானவிதியாம், ஓதருன்வேள்விசெயலீதலிவ்வுலகெலாமோம்பல் படைபயிறல்பொருத-லோராறுமரசர்தொழி லோதவியாகஞ் செய்யலோங்குபொருளீட்டலீதல், கோதனைக்காத்தலே ருழல்வைசியராறுதொழில் குயிலுவத்தொழிலேருழல்-கோகாத்தல்காருகவினத்தொழிற் பொருளீட்டல்குணமாகவீதலென்றும், ஆதிசூத்திரர் தொழிற் பகரிலீதாறுகா ணருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (உக)

சூத்திரமுஞ்சாத்திரமு மவ்வாறெனக்கூறியது.

செப்புமாபஸ்தம்ப சூத்திரமிசைந்திடுந் தியாயியான சூத்திரம்-திறமானசத்தியா ஷாடசூத்திரமறைதெரிந்திட்டபோதாயனம், ஒப்பிலாக்காத்தியாயன மாசிலாயென மிதோராறுசூத்திரங்க-ளோதருவியாகரணசத்தசாத்திரமொன் றுயர்ந்தசோதிடசாத்திரந்,தப்பறும் பரதசாத்திரமொன்றுரைப்பருந் தர்க்கசாத்திரமிதொன்று-சாற்றும் வேதாந்தசாத் திரமந்த்ரசாத்திரந் தருசாத்திரங்களாரும், அப்புலிங்கத்துருவமாகின்ற வண்ணலேயருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலத்தேவனே. (க0)

நிலையுள்ள புகழாளரைக் கூறியது.

பாலனஞ்செய்துளோ ராலயமமைத்துளோ பகர்கோபுரங்கட்டினோர்-பத்திமணி மண்டபந் தேர்விமானம்பொன் பதித்தவாகனமமைத்தோர், சாலையனசதந்திரம் விக்கிரகரூபஞ்சமைத்துளோரன்னதானந்-தடமேரியக்கார நிலமாணியங்கோட்டை தண்சாலையுண்டாக்கினோர், வேலையாயோயாதளித்தவர்கள்பொய்சொலாவிரதியர்கள் கவிவாணரான்-மேலாங்கவித்தொங்கல்பெற்றுளோரிவர்களேயீயாதபுகழ்படைத்தோர், ஆலிலத்துயிலுமாலறியாதபரமனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலத்தேவனே. (க)

சைவமுறை கூறியது

சந்தமலரோனுமாலறியாதபரமசிவந்தானே யனுதியாகுஞ்-சகலரும்பணிசிவா லயமேயனுதியாஞ்சைவமடமாகுமதுதான், எந்தைசிவலிங்கவுருவைத் தீண்டியர்ச்சித்திறைஞ்சிவாழ் மறையோர்கடம்-மில்லமேயுயராதி சைவமடமாமென் றிசைக்கு முயராகமங்கள், சிந்தையன்பாகியே மறவாது சந்ததஞ்சிவ சம்ஸ்காராதிகள்-செய்யுமறைவேதியர்க ளில்லமேகோகனகைதிகள்மகாசைவமடமாம், ஐந்துகதியாந்தவச் சந்தரச்சைவனே யருள்பெறு வசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலத்தேவனே. (கஉ)

பதிஞறுபேற்றின்வகைகூறியது

நதிவளந்தருபூமிவிளைகின்ற நெல்லாதிநவதானியப் பெறுமை யுநற்குணத் தொடுசொன்ன சொற்படிநடந்தவரு நன்மனையுநன்ம க்களும், மதிவளர்ந்தருகின்ற குறைவிலாக் கல்வியுடன் மனமிக்க ஞானவறிவும் வளர்கினைற விளைமையொடு மறுவிலாவழகும்மகிழ்ச்சி தருநோயின்மையும், விதிவளர்ந்தருகின்ற வாணுளு மெய்த்திடமு மெய்த்துணிவுமிக்கபுகழும் வெற்றியுடனல்லூழு மறுசுவைநுகர்ச்சி யும் மேலாய் நிறைந்த தனமும், அதிவளந் தருமிதைப் பேறுபதிஞ றென்பரருள் பெறுவசந்தராயர் அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமு லைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (கூங)

பெண்கொள்ளுமுன்றகூறியது.

தன்னுடைய கோத்திரமலாத நற்கோத்திரத் தகையளாய்ப் பொய்மையிலளாய்த் தவறிலாதாண் பெண்சகோதரத் தவளாய்தரு ங்குலத்திழி வில்லளா, யிந்நிலமிகழ்ந்தபழி யுடையமரபில்லளாயே ந்து விண்மீன்பறவையா றெழில்வரைப்பாந்தன்பெய ரில்லளாய்ப் புருடனுக்கினேய ளாய்மென் மொழியளாய்ப், பின்னுமுனி வில்ல ளாய்நன்னயகுணத்தளாய்ப் பெருமிதம் பிணியில்லளாய்ப், பெரும கிழகத்தளாய்ப்பேசு மிப்பெற்றியுள பேதையைமணஞ்செய்திடில், அன்னேயிலு மிக்கபே ரன்புடையளாமென்ப ரருள்பெறு வசந்தரா யர் அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக் குரிய வண்ணுமலைத் தேவனே. (கூச)

பெண்ணிலக்கணங்கூறியது.

பம்பைச்சுருட்டைமயி ரில்லாமனு னிமயிர்பகுவாய்ப் பிளப்பி லாமற் பற்றுசடையில்லாது கட்டைமயிரோடு செம்பட்ட மயிரில் லாமலுங், கொம்புபோற் பிறமயிர்குறுகி வரவில்லாது கொத்தாக மயிரிலாதுகோண லாய்மேன்மயிர் புடைகொண்டிலாதுவரிகொடு வெள்ளேமயிரிலாது, செம்பிறையி னைற்றிமேற் பாம்பின்படச்சுழி கள்சேராமலந் நெற்றியுஞ், செவியுமிருகண்களுங் குறுகாமன் மூக்

கொன்று திகழ்நீளமில்லாமலும், அம்பழுதிலாவிதேபெண்ணிலக்க ணமென்பரருள்பெறு வசந்தராயர் அண்ணுவினிற்றுதிசெ யுண்ணு முலேக்குரிய வண்ணுமலேத்தேவனே. (நடு)

புருஷலக்ஷணங்கூறியது.

நெற்றியிடை யோரைந்து கீற்றுய் மடிப்புறையி னிறைகின்ற வாயுளுண்டாம் நிரையாகநா லுவரைதோன்றிலென்பதுவயதுநிலே யான வாழ்வு முண்டாம் மற்றுமுக்கீற்று யிருக்கிலபூபான் வருட மட்டினு மகிழ்ச்சியுண்டாம் மருவுமிருவரை தோன்றிலாயுளம்பா னேகவரைதோன்றி லாயுண்மூப்பான், ஒற்றையஞ்சுழி வலம்புரி யாய் நடுத்தலேயி லொருமையுடனே யிருந்தாலுலக முழுதாளுவா னெற்றியில்வலம்புரிச் சுழியொன்றிருக்கிலிறையரம், அற்றுறைத்தெ ழுசோதிநயனப்ரகாசனே யருள்பெறுவசந்தராயர் அண்ணுவினிற் றுதிசெ யுண்ணுமுலேக்குரிய வண்ணுமலேத்தேவனே. (நசு)

இ - து.

விழிதோள்கதுப்புமூக் கிருமுழந்தாளேந்துமிகநீண்டிருக்கவே ண்டும் விரன்மயிர்நகந்தோ னெருங்குபல் லிவையைந்து மெதுவா யிருக்கவேண்டும், ஒழியாதுநீரணியு நெற்றியிருதோண் மார்புமொ ண்புறங்கைகள் வயிறுமோதருங் கைம்மூலமாறிட முயர்ந்தேயிருக் கவேண்டுஞ்-செழியுமுள்ளங்கைகே முதடுமுள்ளங்காற் நிறக்குமுண் ணுக்குநாக்கு, சேருங்கடைக்கணுங்கூறுமிடனேழுஞ்சி வந்தீதயி ருக்கவேண்டும் அழிவிலாநூல்சொலும்புருடலட்சணமென்பரருள் பெறுவசந்தராயர் அண்ணுவினிற்றுதிசெயுண்ணுமுலேக்குரிய வண் ணுமலேத்தேவனே. (நஎ)

இ - து.

இடைமார்புநெற்றியும் மூன்றும்விசாலமா யியல்பாயிருக்கவே ண்டுமிருமுழங்காற்கீழு மாண்குரிகிரீவமிவ் விடமிகக் குறுகவேண் டுஞ், தடையிலாதுத்தியுஞ் சந்துதாள்வாய்மிகத்தாழ்ந்தேயிருக்கவே ண்டுந்தங்குகான்மேன்மையா யங்கைமிகவன்மையாய்த்தானங்கிரு

க்கவேண்டுங், கொடைதருஞ் செங்கையிற் சங்குசக்கரரேகை கோ தண்டமகரரேகை, குலிசமாலிகைரேகை நளினசாமரரேகை கோ ணைதிருக்கவேண்டும், அடையுமிப்புருடலக்ஷணமுடைய ராசராமரு ள்பெறுவசந்தராயர் அண்ணுவினிற் றுதிசெ யுண்ணுமுலேக்குரியவ ண்ணுமலேத் தேவனே. (கஅ)

விபூதியிடுங்காலங்கூறியது.

சாமகண்டா சோண சலா. (கஉ)

மாயாம லம்புணர்ந்து மாதவமாஞ் சைவநெறித்
தோயாம லம்புவியிற் சோர்கின்றேன்—ரூயாகி
வேண்டவா வின்படியே மெய்ஞ்ஞானப் பால்கொடுப்
தாண்டவா சோண சலா. (கங)

துன்பக் கடல்வீழ்ந்த தொண்டனேன் றன்னைநீ
யின்பக் கடலாட்ட வெண்ணினை—லன்பர்
கடுப்பாரோ வைவாரோ கம்மியிவ னென்று
தடுப்பாரோ சோண சலா. (கச)

தெய்வமுண்டென்றோர்வேளை தெய்வமின்றென்றோர்வேளை
மைவளருந் தட்டமன மிருந்தா—லுய்வதெவன்
ஈசனென் றுனார்ந் தீண்டவா வாண்டாணீ
தாசனென சோண சலா. (கஞ)

எத்தனைதான் கற்றென்ன வெத்தனைதான் கேட்டென்ன
வத்தனையு மற்றோர்க் கறைந்தென்ன—சித்தந்
தராசனுக்கல்லாலுண் ரூளுண்டோ மேருச்
சராசனு சோண சலா. (கசு)

அன்புவளர் தொண்டருள மாலயமா வெப்பொழுதுந்
தென்புவளர் தேவியுடன் சேர்ந்துவளர்—நின்புகழைப்
பாடுவேன் பந்தனீப் பாசத்தை வேரறவே
சாடுவேன் சோண சலா. (கஎ)

கருநிறத்த காகங் கனகமலை சார்ந்தாற்
றிருநிறத்த வாகுஞ் செயல்போ—லிருநிறத்த
வாகாரநா னுனைச்சார்ந் தன்பனுவேன் கருணை
சாகரா சோண சலா. (கஅ)

வன்பா தகஞ்செய்யும் வஞ்சர்தமைச் சேராம
னின்பா தகஞ்சு நினைந்துவா—ழன்பா
நிதானந்தா மந்தாகினிக் குவந்தா யெந்தாய்
சதானந்தா சோண சலா. (ககூ)

மான்செய்த கண்ணியொடும் வாலவடி வேலனெடும்
வான்செய்த காட்சி வழங்கென்றல்—யான்செய்த
கன்மமா வந்துமுகங் காட்டகிலா யீதுனக்குத்
தன்மமா சோண சலா (உ0)

வெய்யபிறப் பினுமுயர் வித்தாகு மாசையென
வுய்யநல்லோர் சொற்றகெறி யோராமன்—மையலிலே
யாழ்கின்றே னின்சீரரு ளெள்ளளவு மின்றித்
தாழ்கின்றேன் சோண சலா. (உக)

மூற்று விளஞ்சேய்க்கு மூண்டநோய்க் காமருந்து
பெற்று ளருந்துகின்ற பெற்றிபோற்—சிற்றம்
பலத்துவந்த மன்பதைக் காப்பார நடஞ்செய்தித்
தலத்துவந்த சோண சலா. (உஉ)

ஆட்டுகின்று யாடுகின்று யாடலையுங் காண்கின்றுய்
கூட்டுகின்றுய் கூடுகின்றுய் கொள்கைபல—நாட்டுகின்றுய்
ஞாலமெலா மிவ்வகையே நானறியே னின்னுடைய
சாலமெலாஞ் சோண சலா. (உங)

என்னைப்போ லேழையிலை யெவ்வெவ் வுலகத்து
நின்னைப்போல் வள்ளலிலை நிச்சயமே—பின்னையே

யென்றொழிலே யாசித்த வில்லையெனு தீவதுநின்
றன்றொழிலே சோணு சலா. (உச)

நறும்பூ வுடன்சேர்ந்த நாருமண மெய்து
பிறும்பூ தன்றைய வெளியேன்—பெறும்பே
றதுவே தாணுக வடியருடன் சேர்வேன்
சதுவேதா சோணு சலா. (உந)

பத்தருக்குஞ்சித்தருக்கும் பண்ணவர்க்குவிண்ணவர்க்கு
முத்தருக்கு மற்றவர்க்கு மூவரெனுங்—கத்தருக்கு
நற்றுரையாய் வாழ்கின்றாய் நாயேற்கு நாயகனூர்
சற்றுரையாய் சோணு சலா. (உசு)

வணங்காத் தலையும் வழுத்தாத நாவு
பிணங்கா மனமு மெனக்கே—யணங்கா
மிகுதியா வின்னம் விளம்புவதே னந்தோ
தகுதியா சோணு சலா. (உள)

என்னேநீ ராடப்போ மெண்ணமறந் தொருவன்
பின்னேசே றுடுகின்ற பெற்றிபோற்—கொன்னேவெங்
கன்மத்தைச் செய்து கழிக்கின்றே னல்லநா
சன்மத்தை சோணு சலா. (உஅ)

அண்ணு மலையென்று மண்டமெலாம் பெற்றெடுத்த
வுண்ணு முலையென்று முள்ளத்தே—யெண்ணுத
நாளில்லை நாயேற்கு னற்றாள லாதடையுந்
தாளில்லை சோணு சலா. (உக)

இலவுதனைக் காத்தே யிருக்குங் கிளிபோற்
குலவுகுடும் பத்தையே கோரி—விலகிலேன்.
மாதுரியா னந்தசுகம் வாய்க்குமோ வேழைக்குச்
சாதுரியா சோணு சலா. (ஈ0)

நாட்டைவிட்டுக் காட்டையுற்று நற்கனிதே மோர்சிறுவன்
வேட்டையிற்றப்புங்கொடிய வேங்கைகண்டு—தோட்டை
யரண்புகுந்தே யுய்ந்தனென யானுய்ய நின்பூஞ்
சரண்புகுந்தேன் சோண சலா. (க)

வானே முதலட்ட மாமூர்த்தி யாவிளங்கும்
கோனே நினதுபதங் கூடாமல்—யானே
தனித்தேனே விங்குத் தளரலிதற் கென்றே
சனித்தேனே சோண சலா. (உ)

தேவாரந் தன்னைச் சிரத்தையா நாயடியே
னுவாரப் பாடி நயந்துவிழிக்—கோவாரக்
கன்னிகரு மூள்ளங் களித்துருகும் வாழ்வருளாய்
தன்னிகருஞ் சோண சலா. (ங)

ஞாயிறுதிங்க ணயனஞ் செவ்வா யுமமெய்
மேயபுத னின்மெய் வியாழமுறை—வாய
தனியாமோர் வெற்பு தழைவெள்ளி யேற்குச்
சனியாமோ சோண சலா. (ச)

பெண்ணைசை யாதியாப் பேசுகின்ற மூவாசை
யெண்ணைசை வையகத்தி லேற்காதோ—அண்ணை
மலையானே கொண்டவர்யார் மற்றுசை தம்மிற்
றலையானே சோண சலா. (ஞ)

ஓர்தனிரு தாண்மூமல மோவுறவே நாற்காணஞ்
சேர்தரவஞ் சக்கரமுஞ் சிந்தித்தா—ரூர்பொழுது
மேழுவே தத்திசையி னேத்தருளெட் டங்கமுறத்
தாழுவேன் சோண சலா. (ட)

காலத்தே சென்றுசிவ கங்கையிலே நீராடிப்
பாலத்தே நீற்றைப் பரிந்தணிந்து—மூலமா

மந்திரமே யோதினினை மன்னிவலஞ் செய்வதுய்யுந்
தந்திரமே சோணை சலா. (நஎ)

நின்னைச் சதமா நினைக்குஞ் சிறியேற்கும்
பின்னை வறுமைப் பிணியுண்டோ—பொன்னைச்
சதாசிவ வென்றழைக்குந் தோகை புணர்சாம்ப
சதாசிவா சோணை சலா. (நஅ)

உடல்பொரு ளோடாவி யுனக்கே யளித்தேன்
கடலுல கங்காண வெண்ணிக்காவா—தடலுடனே
யிங்கடத்தை நீபுரிந்தா லேவர்பாற் கூறுவனெண்
சங்கடத்தைச் சோணை சலா. (நக)

தன்னிகரில் சோண சயிலனே யென்றன்பாச்
சொன்னிகழ் பாமாலையன்று சூட்டினருக்—கிந்நிலத்தின்
முன்மானன் றெட்டறிய முண்டகத்தா ளன்றியுண்டோ
சன்மானஞ் சோணை சலா. (அ0)

வாக்கின் வருகவென்றுல் வாய்நோமே தாழ்ந்தோணத்
தூக்கின் மலர்க்கை துவளுமோ—நோக்கின்
வலிக்குமோ நின்கடைக்கண் வள்ளலுக்கு முள்ளஞ்
சலிக்குமோ சோணை சலா. (அக)

நன்னெஞ் சுடனுன்ற ணண்மலர்த் தாள்பூசியே
னென்னெஞ் சுகல்லா யிருப்பதா—னின்னெஞ்சுங்
கல்லாபார் மேலென்னைக் காவாதென் காரணமோ
சல்லாபா சோணை சலா. (அஉ)

தஞ்சமென நின்கமலத் தாளடைந்து ஞானிருக்க
வஞ்சகம னென்பால் வருவானே—நஞ்சமிக்க
பொங்கரா வேணிப் புனிதமார்க் கண்டனையாள்
சங்கரா சோணை சலா. (அங)

கரங்குவித்து மெய்சிலிர்த்துக் கண்ணீ ருதிர்த்துச்
சிரங்குனித்துத் தெண்டனிட்டுந் தேம்பி—யிரங்குனர்க்கு
வந்திடுவாய் கேட்டவரந் தருவாய் காயேற்கென்
தந்திடுவாய் சோணை சலா. (சச)

ஒருவ ளெருத்தியுட னேகைபெறக் கூடும்
பருவம் பனித்துளிபோற் பாய்ந்து—கருவுற்
றுருவஞ்சார்ந் தற்பவித் திங்கோடி யுழலாதாள்
சருவஞ்சா சோணை சலா. (சரு)

வன்பிறவி நோய்க்கு மருந்தா விருந்தடியார்
துன்பிறவி ழிக்குநினைச் சூழ்ந்தவருக்—கென்பிறசீர்
சிற்பரா வம்பலத்திற் றெய்வநடஞ் செய்தருளுந்
தற்பரா சோணை சலா. (சசு)

ஒருரென் றில்லாம லோடெடுத்துப் பிச்சைக்கா
வூரூராச் சுற்றியுழல் கின்றாய்—பேரூரி
லேற்றுவா யென்றுன்னை யெப்படியா னம்புவது
சாற்றுவாய் சோணை சலா. (சஎ)

அன்பார வுன்ற னடிக்கமலம் பூசித்த
லென்பார மென்னை யிரட்சித்த—னுன்பாரங்
காரணை தீதா கருணைகரா மழுமான்
தரரணை சோணை சலா. (சஅ)

பந்தக்கா லென்னப் பருத்தவுடல் சுமப்பே
னந்தக்கா லன்வெகுண்டெ ஞவிகொள—வந்தக்கா
லஞ்சலிப்பே னீவந் தருளாயே லென்செய்வேன்
சஞ்சலிப்பேன் சோணை சலா. (சகூ)

ஒருமணத்தை நீக்கி யுயர்நாவ லூரர்க்
கிருமணத்தைச் செய்தாண்ட தென்னீ—வருமணத்தோ

மாட்சியோ வென்பாரேல் மங்கையுமை கங்கையிவர்
சாட்சியோ சோணை சலா. (நூ0)

ஞாதுரு மெய்ஞ்ஞான நவிலரிய நேயமென
வோதுறுமம்மூப்பொருளினுண்மைதனைப்—பேதுறுவேன்
றோர்வேனை தேர்ந்துன் றிருவாளர் தஞ்சபையிற்
சார்வேனை சோணை சலா. (நூக)

ஞாலமிட லோடருந்து நாரணனே யாதியரிக்
காலமிடர் தீர்த்தெம்மைக் காத்தியென—வோலமிட
நஞ்சமுண்டா வுன்னினிட நாயேற் குலகிலொரு
தஞ்சமுண்டா சோணை சலா (நூஉ)

அபய கரமு மருள்சேர் முகமு
முபய பதமு முமையா—ளிபமுகன்சேய்
நண்ணவா மால்விடைமே லுயேன் சரணுனக்கே
தண்ணவா சோணை சலா. (நூங)

அன்பே திரியா வருளே நெய்யாகமிக
நன்போக மகலா நாணுரு—முன்பேமெய்ஞ்
ஞானமாந் தீபமிட்டு நண்பொடுவாழ் வாழ்வருள்சீர்ந்
தானமாஞ் சோணை சலா. (நூச)

மணமென்று கூறியதோர் வாயாலே மற்றும்
பிணமென்று கூறுகின்றார் பின்பு—குணமென்ற
வெம்மதி யேனுனது மெய்யினெமெய் யென்றறிவுஞ்
சம்மதியேன் சோணை சலா. (நூஙு)

மாசகன்ற வாதவூர் வள்ளல் வழங்குமணி
வாசகமே மாமறைக்கு மாண்பென்றே—பேசுவே
னங்கையா னீயெழுது மன்பே பெருஞ்சான்றுஞ்
சங்கையா சோணை சலா. (நூசு)

இரந்தும் பரிந்தே யிடுவென்னு நீதி
கரந்துவிடா திருக்கக் கச்சூர்ப்—பொருந்தி
யுணவா தரித்துநம்பி யுண்ண வளித்தாய்சீர்
தணவாத சோணை சலா. (நுஎ)

பாலெயளித் தாய்காழிப் பாலனு ரின்புறவே
சூலெயளித் தாயப்பர் தூன்புறவே—யேலவிவை
நன்மையோ வாயுண்முறை காமத்தினுல் விளைந்த
தன்மையோ சோணை சலா. (நுஅ)

கற்பனெயெ லாங்கடந்த காரணை தீதசுக
தற்பரனே நின்னுள் சரண்புகுந்தே—னற்பனெனைக்
கொள்ளாதே குற்றங் குரியாதே யன்னியமாத்
தள்ளாதே சோணை சலா. (நுகூ)

பூசேன் விபூதிதனைப் பூணேன் சிவமணியைப்
பேசேன் பஞ்சாக்கரத்தைப் பேதமையை—வீசேன்
வலவனே போற்றினிவேன் வாழ்வேனே வேணிச்
சலவனே சோணை சலா. (சுஂ)

அளவை கடந்த வருளொளியே நின்பே
ருளவை யணுவு முணரேன்—களவகன்றோர்
தந்திதியே மெஞ்ஞான தாண்டவா வானந்த
சந்திதியே சோணை சலா. (சுஙு)

தொண்டர்களு மாதவருந் தூயசிவ காமியுநல்
லண்டர்களுங் காணமன்று ளாடுகின்றப்—பண்டிருவர்
காணேமே யென்று கருதுங் கமலப்பூந்
தாணேமே சோணை சலா. (சுஉ)

ஆணிலே பெண்ணிலே யல்லா வுயிர்களிலே
வீணிலே யென்போல் விழைபவர்யார்—வேணி

வியாளனே பொல்லா வினையேனைக் காப்பாய்
தயாளனே சோண சலா. (௬௬)

தொல்லை வறுமையினுற் சோர்ந்தாலு மென்மேனி
யில்லையெனும் லோபிகளை யாசியேன்—றில்லையிலே
வெம்பசிவா தைக்கழுஞ்சேய் வேண்டும்பா லாழிதந்த
சாம்பசிவா சோண சலா. (௬௭)

கருணைபுரிந் தென்னீநீ காத்தியே லென்னே
யருணை யடைந்துண்டோ வன்பாத்—தருணமல
ரிண்டையுண்டோ தொண்டுண்டோ வெண்ணுண் டென்ற
ன்பர்செய்யுஞ், சண்டை யுண்டோ சோண சலா. (௬௮)

திட்டுண்டு வெண்ணெய்த திருடியுண்டு மாதராற்
கட்டுண் டடியுண்டான் கண்ணனே—பிட்டுண்டு
வாழ்வெவர்க்கு நல்கவே மாறனடி யுண்டாய்நீ
தாழ்வெவர்க்குச் சோண சலா (௬௯)

தாயுமில தந்தையில தானறிய ஞனுய்நீ
சேயுமில சேய்களுக்குத் தேர்ந்திதனை—யாயுங்கால்
வர்க்கமில முன்பின் மரபிலநீ வந்துவென்னத்
தர்க்கமில சோண சலா. (௭௦)

நண்ணியவெற் போவெள்ளி நற்சிலையும் பொற்சிலையாம்
புண்ணியமா தேவியன்ன பூரணியே—யுண்மையிவை
நம்புமே னன்றுபத்தூர் நாடியிரந் துண்டகதை
சம்புவே சோண சலா. (௭௧)

வினைவான் மலிந்திடு நெல்வேலி யுனக்குண்டவ்
வினையான் குடிமாற னின்பா—முனையதனை
வாரிவருங் காலை மறுக்காயோ மாய்விடைமேற்
சாரிவருஞ் சோண சலா. (௭௨)

அண்ணு மலையாரு யப்பரீ தாயுமையு
மூண்ணு மூலையாரு ளுண்மைசொல—வொண்ணுதா
மிக்கதோ நல்லோர் வியந்துதுதி செய்யத்
தக்கதோ சோணு சலா. (எ0)

சூதாடப் பொய்பேசத் தூயோரை நிந்திக்க
வாதாட வஞ்சிக்க வல்லவன்யான்—வேதாவின்
மூதகமோ நின்முடி திக்கறியே னென்னுடைய
சாதகமோ சோணு சலா. (எக)

குகைநமசி வாயர் குருநமசி வாயர்
தகையுறு வெண்பா மாலைசாத்திப்—புகழடைந்தா
ரேத்துகின்றே னுள்ளபடி யில்லையவர் போலச்
சாத்துகின்றேன் சோணு சலா. (எஉ)

நந்தவ னம்புக்கு நறுமா மலரெடுத்துச்
சுந்தரப்பன் மாலைதொடுத் தணிந்தே—யெந்தை
யருணேசா வென்பாரை யாபத்திற் காக்குந்
தருணேசா சோணு சலா. (எங)

மூயலகன்மேல் வைக்கா முளரித் தாளிந்த
மயலகன்மேல் வைத்து மகிழ்வா—வியல்சேர்
பரதமே செய்க பலனுனக்கு முண்டு
சரதமே சோணு சலா. (எச)

பூவடிவம் வெற்பரையன் புத்திரிக்குத் தீண்டரிய
தீவடிவ நின்றனக்கேற் சீர்க்கச்சி—மாவடிக்கீழ்த்
தந்தேதகம் வாடாமற் றுன்வளைத்தா ணீயிளைத்தாய்
சந்தேதகஞ் சோணு சலா. (எநி)

நன்மார்க்க நன்மார்க்க நண்ணுஞ் சரியையுறு
மூன்மார்க்க மேனு முயலாத—வென்மார்க்கந்

துன்மார்க்க மாதலினுற் சூழ்வதெங்கே மேலான
சன்மார்க்கஞ் சோணை சலா. (எசு)

பல்லாயிரந் தரமாப் பாலன் குறையெல்லாஞ்
சொல்லா திருக்கவிலை சொல்லியுமென்—பொல்லாத
புத்தியின்றே டத்தாற் பொருத்தமின்றே வாண்டருளச்
சத்தியின்றே சோணை சலா. (எள)

ஆடரங்கா வன்பர்மன மானந்தக் கூத்துகந்தாய்
கோடரங்கா ணென்றன் கொடியமன—நீடரங்க
மண்டிப்பாய் வேக மடங்கவெங்கு மோடுவதைத்
தண்டிப்பாய் சோணை சலா. (எஅ)

மழைகுளிர் வெங்காற் றுருமுவல் லிடிதீவெய்யில்
குழைபசிநோய் கள்ளர் கொடுசேரல்—விழைகூற்றீ
ங்குவா ராதுவலஞ் செய்வாரை நீயிருந்து
தாங்குவாய் சோணை சலா. (எக)

பூமாலை கையும் புனன்மாலை நேத்திரமும்
பாமாலை நாவும் பரிந்தணியுந்—தாமே
நெடுமாலைத் தேடவைத்த நீயெனைச் சேர்பார்கூய்த்
தடுமாலைச் சோணை சலா. (அ0)

மூற்காசி மன்னன் முகத்தைக் குரங்காக்கிப்
பிற்காசி தந்தவருள் பெய்தனையே—யெற்காசி
யப்படியேன் றண்டித் தருள்புரியா யந்தோயான்
றப்படியேன் சோணை சலா. (அக)

தென்பாகத் தேவியுடன் சேர்ந்துசிறுத் தொண்டரிட்ட
வன்பாங் கறியை யருந்தற்கே—யின்பாப்போய்ச்
சோளா வென்றழையுஞ் சேயையெனத் தத்தளித்த
தாளாளா சோணை சலா. (அஉ)

ஆக்குவாய் காப்பாய் யழிப்பாய் மறைப்பாய்பின்
ணேக்குவா யாவு கொடிப்போதே—தாக்கு
மிமியேற்கு நேரந்தா னெத்தனேயோ கற்பந்
தமியேற்குச் சோணை சலா. (அங)

தாயிலாச் சேய்போற் றவிக்கின்றே னென்றுரைத்தா
லாயிலா ஞனென் றறைவையென—வாயிலா
வூமனே யொத்தியா னென்றுமுரை யேனிதழித்
தாமனே சோணை சலா. (அச)

அனங்காணை னஞ்சுண்டா னம்மை வினையாற்
புனையுடம்பும் பாதியாய்ப் போனன்—றினமுந்தா
னேமாந்த மானிடனென் றெள்ளாம லேத்துவதென்
றுமாந்தர் சோணை சலா (அஞ)

சங்கரியத் தங்கொளலாற் சக்கரமான் மன்னுதலால்
வெங்கரி பயந்தவணன் மேவலா—லிங்கரிது
நிற்குருவே யென்னுருவ நீமுழுதுங் கொண்டிறைவாய்
சற்குருவே சோணை சலா. (அசு)

மோன முடிவே மொழியவரு மானந்த
ஞானவடிவே நின்னல முழுதுந்—தீன
னியம்புமே னெவ்வா றினியவருள் செய்யாய்
சயம்புவே சோணை சலா. (அள)

முத்தே மணியே முழுவயிரப் பொற்றாணே
சித்தே யெமதுகுல தெய்வமே—சுத்தகுண
மேருவே நற்கருணை மேகமே வந்தடைந்தேன்
குருவே சோணை சலா. (அஎ)

சோதிக் கலாமா தொழும்பனேன் றன்னேமிக்க
வாதிக் கலாமா மணியரவம்—பாதிக்

காலாமதிகஞ் சேரவைத்த காரணநின் ரூட்குச்
சாலமதிகஞ்சோணை சலா. (அக)

அண்டாண்ட கோடி யருளா லளித்தடிமை
கொண்டாண்ட சோதிக் குருமணிநீ—கண்டாய்
சுழுகனே யாகவெனைத் தொண்டுகொள் வாயன்பர்
சமூகனே சோணை சலா. (கo)

திருவல ஙிட்டித் திருமெழுக்கு மிட்டு
மருவுதிருக் கோலமிட்டு வாழ்த்திப்—பெருகுதளி
கும்பத்தே கத்துடனே கைகூப்பிச் சூழ்வதுநற்
சம்பத்தே சோணை சலா. (கக)

உருவா யருவா யுருவருவாய் நின்ற
வொருவா வுபதேச மோதக்—குருவாய்
வரவேண்டு மூன்றன் மலர்ச்சரணத் தன்பு
தரவேண்டுஞ் சோணை சலா. (கஉ)

ஆரூரு மம்பலமு மானந்த கானமெனும்
பேரூருங் கட்டமெனப் பேணுகிலேன்—சீரூர
நித்தியமே நின்னூர் நிணைக்கின்றேன் முத்திபெறச்
சத்தியமே சோணை சலா. (கங)

பாரறியா விண்ணறியா பாதாளந் தானறியா
யாரருன்றறிவர் னருஞ்சீர்த்தி—யோரணுவும்
யானறியாத் தண்மையதே யெம்பெருமா னின்னமுநீ
தானறியாய் சோணை சலா. (கச)

கார்த்திகைக்குக்கார்த்திகைநாட் காட்சிபெறகாட்டுகின்ற
சீர்த்திவளர் மெய்ஞ்ஞான தீபத்தை—யேத்தி
மதுரநேயத் தமிழால் வாழ்த்த வரந்தாராய்
சதுரனே சோணை சலா. (கஞ)

வானே முதலட்ட மாமூர்த்தியா யமர்ந்தா
யேனே வுலகுய்ய வெண்ணியோ—வானே
றதிபதியே ஞான வருணிதியே சீலச்
சதிபதியே சோண சலா. (கூசு)

சம்புவே யென்றுனது தானினைக்க வொட்டாம
லெம்புலத்தார் கூடி யலைக்கின்ற—வெம்பிறவி
வெந்தோட நீங்கு விபவமருள் வாய்மிகவுஞ்
சந்தோடஞ் சோண சலா. (கூள)

சோதனே செய்யாதே சுயவடிவா வந்தென்னை
யாதரிப்பாய் காட்டி லருச்சுனனின்—பாதமலர்
காடினுன் வேடுவனு நண்ணினுய் வில்லாலே
சாடினுன் சோண சலா. (கூஅ)

வெள்ளையா வின்னும் விளம்புதென் மென்கன்னிதேர்
கிள்ளைமொழி போலிதனை கேட்டருள்க—பிள்ளைநான்
மாதாநீதொண்டனுன் வன்பதியே யேழைநான்
தாதாநீ சோண சலா. (கூசூ)

அருணசலா வென்றே யன்புடனே போற்றி
யிருணச மெய்த்தீப மிட்டோ—பெறுவாழ்வைச்
சிந்தையே செய்தளவு தேர்ந்துரைக்க வொண்ணுதென்
றந்தையே சோண சலா. (கoo)

சோணசலவெண்பா-முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புராணிகர் சோணசலமுதலியார்

இயற்றிய

சோணசலசதுகம்.

சோணாங்க ராகச் சொரிமும் மதச்சிறுக
ணானமுகன் முதைசோ ணசலத்துத்—தேனைச்
சகம்பொதிந்த பார்வதிக்குத் தக்கிணனே யென்புல்
லகம்பொதிந்து பெற்றே னருள். (க)

சோதிவடி வாயிருவர் தேடத் துலங்குமுக்க
ணாதிவடி வார்சடையி னர்கங்கை—பாதிச்
சசியணிந்தார் சோண சலமதனைச் சற்று
லசியமின்றிச் சேர்வா மிது. (உ)

சேராத நெஞ்சினிடைச் சோண சலத்தார்க
ணாராத காத லமைவா னேன்—பாழாழி
சந்திரனுஞ் சூரியனுந் தங்கிலவின் டானமுழு
லந்தகனென் முன்சே ராஞல். (ங)

சோகந் துடைத்தருள்வாய் சூர்ப்பனகச் சிறு
ணாகந் தனையுரித்த நம்பனே—மேகமொடு
சந்திரன் சூழ்சோண சலவாம பாற்றைய
லந்திவண்ணத் தையா வருள். (ச)

சோமன்றலைக் கணிந்த சோணசல வனரு
ணாமந்தனை யென்வாய் நல்குவாய்—காமன்
சரமுன்மேற பூப்போலச் சார்ந்திடினு நம்மே
லரமெனச் சாராமை யருள். (ஞ)

சோறுண்டிட வுடுத்தல் தூங்க லிவைகளின்க
ணுறுதலுண் டோநஞ்சோ ணைசலா—நீறு
சயமாக மேனி தனிலெனது நெஞ்சா
லயமாக வென்று மிரு. (கூ)

சோலைநெறி யாரூரோ சோணைமலை யோவிசையெண்
ணிலையிசைப் பார்வாயோ நம்பாட்டோ—மாலைச்
சயமழித்த காசியோ சார்தில்லை யோவா
லயமென்று நீசா ரிடம். (எ)

சோதித்தென் னின்ன றுடைகா ரெனவியங்க
ணைதிக்குஞ் சோணமலை நாதனே—வாதித்த
சங்கசத்தார் நெஞ்சின்மடந் தாஞெழித்தாய் வேதன்மா
லங்கத்தா யந்திவ னத்தா. (அ)

சோகித் திருப்போரூர் துய்யசிவன் ரூட்கிருக
ணைகித் துயர மகற்றுமல்—யோகத்தார்
சங்கத்துச் சோண சலமதனி லேகாம
லங்கிக்குச் சென்றலோவா ராய். (கூ)

சோபிக்கு ஞானவுருச் சோண சலத்தார்தா
ணைபிக் கமலற்கு நாடரிதே—பாவிச்
சனங்கட்குக் காணுமோ சத்திவிளக் காற்பா
லனங்கொண்டு காணுங்கண் ணன்பு. (கo)

சோண சலசதகம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புராணிகர் சோணசலமுதலியார்

இயற்றிய

திருவருணைக்கலிவெண்பா.

கார்பூத்த மாலுங் கருமாவாய்க் காணரிய
பார்பூத்த சீரடியும் பங்கயத்தோ-னேர்பூத்த (க)

அண்ணவடி வாயு மறியா முடியுமன்பர்
நண்மனங்கொள் சோண நகத்தனே-சின்மயமாம் (உ)

உண்ணு முலையம்மை யோர்பாகங் கொண்டுதிரு
வண்ணு மலைவிளங்கு மைம்முகனே-விண்ணவர்கள் (ங)

தந்தியக்க நீங்கமத தந்தி யுரிவைபோர்த்
தந்திவண்ண நீத்தருளத் தந்திட்ட சுந்தரனே. (ச)

நஞ்சைதனி யாதீர நஞ்சைவளை சோணமலை
நஞ்சையணி கண்டத்து நம்பனே-யைஞ்சபையாஞ் (ஞ)

செம்பம் பலநெல்லை சித்ரசபை குற்றாலம்
பம்புமணி யம்பலமா லங்காடு-உம்பர்தில்லை (ஞ)

பொன்னம் பலங்கூடல் புக்கவெள்ளி யம்பலங்கள்
னின்னடஞ்செ சோணமலை யீசனே-வன்னமலி (எ)

தேவன் றுரைச்சந் திரசேக ராலயந்தெற்
காவண்கயிலை யதுவடக்காத் தேவர்புகழ் (அ)

சோமநா தம்மேற்குச் சொல்பீமே சங்கிழக்கே
யாமத்தி னின்ற வருணையாய்-காமர் (கூ)

வடக்குத் திகளமுகை வாணிற் றுறக்கஞ் [கழ்
சுடர்ப்பொன் னிலங்கை தெற்காத் தொல்லோர்-நடத்துபு

பொன்னிலங்கண் மூன்றும்விற் போல விளங்கநடு
நன்னிலங்கொள் சீரருணை நாதனே-தொன்மை (கக)

அவந்தி துவாரகைமேற் காக்காஞ்சி கீழாஞ்
சிவன்சீர் மாயாமதுரை தெற்காய்ப்-பவந்தீருங் (கஉ)

காசி யயோத்திவடக் காகநடு நின்றமரர்
பூசிக்குஞ் சோணப் பொருபனே-ஆசற்ற (கங)

கங்கை யமுனை கவுதமியே நன்மதைசீர்
மங்காச் சரசு வதிவடக்காய் ஐங்கரத்தோன் (கச)

கொட்டியகா வேரி குமரிதெற்காய்ப் பாய்நடு
வுட்டிகழு சோணகிரி யோங்கொளியே சிட்டர்புகழ் (கஞ)

மண்ணிலிங்கங் காஞ்சி மழையிலிங்க மாகைக்கா
விண்ணிலிங்கந் தில்லை வியன்மூதூர் திண்ணர்சார் (கசு)

வாயுலிங்கக் காளத்தி மற்றிவைக்கு மத்தியாந்
தேயுலிங்க சோணகிரிச் சிற்பரனே-காய (கள)

பிறக்கமுத்தி நல்கு மெழிற்காசி வந்து
பிறக்கமுத்தி நல்குதிரு வாரூர்-அறத்தார் (கஅ)

றணைப்பார்க்க முத்தி தருதில்லை யிவைசூழ்கு
ணிணைக்கமுத்தி நல்கருணை நின்றாய்-அணைத்தானுய் (கக)

கற்பரல்கள் பஞ்சாய்க் கனமழையோ பூவலராய்
வெற்புநினு ராகி விளங்கினவே-பொற்பொலியும் (உ0)

அந்திவண்ணத் தாகி னமல மலர்ப்பாதம்
புந்திமிசைக் கொண்ட பொழுதத்தே-கந்தமலி (உசு)

வள்ளவா யாரல்லி வாயவளே யாரவொளி
வெள்ள விளையுள்வயல வேலிவளே யுள்ளு (உஉ)

ரழல்வரையா ராழிவா யாலயில்வா யுள்ளா
ருழியுலவா யொல்லே யருள்வாய்-விழிநிறைந்த (உங)

கஞ்சக் கழலிணைகள் கையாற் றுதித்துனது
தஞ்சத் தடைந்தேன் தயைதருவாய் விஞ்சொளிய (உச)

சந்திரனுஞ் சூரியனுந் தாமிருவிற் கால்போல
அந்தவில்லம் பாய்மலமே லார்தீபம்-இந்துகதிர் (உஞ)

மத்திநிற் குந்தீயாகி மாலயனுண் ணீயாகு
மித்திருநாள் கண்டார்க் கிடருண்டோ-வித்தகமார் (உசு)

கல்வி மறந்தழியுங் காயநிலையாது
செல்வ நிலையாது தேருங்காற்-றெல்லே (உஎ)

வினையோ வனுபவித்தாற் றீருமென் வீடா
தினையேத்திப் பெற்றவரு ளுண்மை-கனைசிலம்பா (உஅ)

யாரணங்க ளோலிட் டறியா தகிலசக
காரண கத்தாகின் கழலிணைக்கே-சாரன்பாற் (உசு)

பாடநாப் பெற்றேன்கண் பார்க்கப்பெற் றேனின்னே
நாடமனம் பெற்றே னடுக்கமில்லைத்-தேடரிய (கூ0)

பாதார விந்தம் பணியப்பெற் றேன்றமியேற்
காதார நீயே யருள். (கூக)

திருச்சிற்றம்பலம்.

திருவருணைக் கலிவெண்பா

மூற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலார்

தி ரு வா யி ம ல ர் ந் த ரு ளி ய

திருவண்ணுமலை திருவருட்பதிகம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வளங்கிளர்சடையும் விளங்கியவிதழி மாலையுமாலையன் வழுத்துங்
குளங்கிளர்நுதலுங் களங்கிளர்மணியுங் குலவுதிண்புயமம்புயத்தின்
றளங்கிளர்பதமு மிளங்கதிர்வடிவுந் தழைக்க நீயிருத்தல்கண்டுவந்த
லுளங்கிளரமுதே துளங்குநெஞ்சகனே னுற்றருணையிற்பெறவருளே (உ)

அன்பர்தம்மனத்தே யின்பமுற்றவைக ளளித்தவர் களித்திடப்
புரியும். பொன்பொலி மேனிக் கருணையங்கடலே பொய்யனேன்
பொய்ம்மைகண்டின்னுந், துன்பமுற்றலையச் செய்திடேலருணைத்
தொன்னகரிடத்தன கெழில்கண், டென்புளமுருகத் துதித்திடல்
வேண்டு மிவ்வரமெனக்கிவ ணருளே. (ஊ)

பூத்திடுமவனுங் காத்திடுபவனும் புள்விளங் குருக்கொடுநேடி
யேத்திடுமுடியுங் கூத்திடுமடியு மின்னமுங் காண்கில ரென்றுங்
கோத்திடுமடியர் மாலையினளவிற் குலவினே யென்று நல்லோர்கள்
சாற்றிடுமதுகேட் டுவந்தனனிது சந்நிதியுறவெனக் கருளே. (எ)

அருள்பழுத்தோங்கு மானந்தத்தருவே யற்புதவமலநித்தியமே
தெருள்பழுத்தோங்குஞ்சித்தர்தம்மரீமைச்செல்வமேயருணையந்தே
வே, யிருள்பழுத்தோங்குநெஞ்சினே னெனினுமென்பிழைபொறுத்
தருண்கோயிற், பொருள்பழுத்தோங்குஞ்சந்நிதிமுன்னர்ப்போந்து
னைப்போற்றுமா றருளே. (ஏ)

மறையும்மறையின் வாய்ம்மையுமாகி மன்னிய வள்ளலே மலர்
மே, லிறையுமாதவனு மிறையுமின்னவனென் றெய்திடா விறைவ
னேயடியேன், பொறையுநன்னிறையுமறிவுஞ்செறிவும் பொருந்தி
டாப்பொய்யனே னெனினு, மறையுநற்புகழ்சேரருணையைவிழைந்
தே னங்கெனை யடைகுவித்தருளே. (ஐ)

தேவேவர் தேடுஞ் செல்வமே சிவமே திருவருளுபுரித் தேவே, யேவேரிதழிக் கண்ணியெங்கோவே யெந்தையே யெம்பெருமானே, பாவேவார்க்களிக்கும்பரம்பரப்பொருளே பாவியேன்பொய்யெலாம்பொறுத்து, நாவேவார்புகழுநின் றிருக்கோயி னண்ணுமாயெனக்கிவ ணருளே. (கூ)

உலகுய்ர்தொறுநின் றாட்டுவிட்டாட்டே மொருவனேயுத்தமனேநின், னிலகுமுக்கண்ணுங் காளகண்டமு மெய்பிலங்கு வெண்ணீற்றணியெழிலுங், திலகவொண்ணுதலுண்ணுமுலையுமையாள்சேரிடப்பாலுங்கண் டடியேன், கலகவைம்புலன்செய்துயரமுமற்றைக்கலக்கமு நீக்குமாவருளே. (எ)

அருட்பெருங்கடலே யானந்தநறவே யடிநடுவந்தமுங் கடந்த, தெருட்பெறுமலையிற் றிருவண்ணுமலையிற் றிகழ்நயஞ்சோதியேசிவனே, மருட்பெருங்கடலின் மயங்குகின்றேனென் மயக்கெலாமொழிந்துவன்பிறவி, விருட்பெருங்கடல்விட் டேறநின்கோயிற் கெளியனேன் வரவரமருளே. (அ)

கருணையங்கடலே கண்கண்மூன் றுடைய கடவுளே கமலன்மாலறியா, வருணையெங்கோவே பரசிவானந்த வமுதமே யற்புதநிலையே, யிருநிலம்புகழ ஈதெனையெடுத்தாண்ட வின்பமே யன்பர்தம்மண்பே, பொருணலம் பெறநின் சந்நிதிக்கெளியேன் போந்துனைப் போற்றுமாறருளே. (கூ)

ஏது செய்திடினும் பொறுத்தருள் புரியு மென்னுயிர்க் கொருபெருந்துணையே, தீதுசெய்மனத்தார் தம்முடன் தேராச் செயலெனக்களித்த வென்றேவே, வாதுசெய் புலனுல்வருந்தல் செய்கின்றேன் வருந்துறுவண்ணமெற்கருளித், தாதுசெய்பவனேத்தருணையங்கோயிற் சந்நிதிக்கியான்வரவருளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பதிகம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணைசலீசர்பதிகம்.

காப்பு வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாம்பதிகங் கூறுதற்குத் தொந்திக்
கணபதியைக் கைதொழுதக் கால்.

நினைவாகிமூல நிலையாகிநேச நிசரூபமான வடிவே
மனமாய்கைமூடியறிவேகலங்கி மனமும்மயங்கிவெகுவாய்
யினமோடிருந்துவவதிக்குலைந்து வெமதூதரோடிவருமுன்
மனவேகமாக வருணைசலீசர் வரவேணுமென்றனருகே.(க)

கயிலாயமேரு அதிலாறுவீடு கரைகண்டதில்லை யொருவர்
வெயிலானசோதி விளையாடும்வீடு வெளிமாய்கை யேதுமறியேன்
பயிலானகொம்பிற்பசுங்காயுமாகிபழமாயுதிர்ந்துவிழுமுன்
மனவேகமாக அருணைசலீசர்வரவேணுமென்றனருகே. உ)

கதியோடுதும்பை முடிமீதணிந்து நலமான வெள்ளை விடைமேல்
பவியாயிருந்து வுமைபாதிகொண்ட பரனேயுன் ஞமமறவேன்
விதினுதனேவ வெமதூதர்வந்து வெகுவாதைசெய்து விடுமுன்
மதியேபுனைந்த வருணைசலீசர் வரவேணுமென்ற னருகே. (ங)

உற்றாருமில்லை யுறவில்லையாரு முறைசொல்லி யிப்பவரவே
பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானேயுன் ஞமமறவேன்
கற்றாருமேற்ற வடியாரிருந்து கனியாயமர்ந்த கனியே
மற்றாருமில்லை யருணைசலீசர் வரவேணுமென்ற னருகே. (உ)

கொங்கைக்குரும்பைமுண்மாதராசை கொடிதானமோகமதனுற்
சங்கற்பமொன்று மறியாமல்வீணே தடுமாறியாவிடுமுன்
திங்கட்கொழுந்துமுடிமீதணிந்தசிவனேயுன்னைமறவேன்
மங்கைக்கிரங்கு மருணைசலீசர் வரவேணுமென்ற னருகே.

உருவானகாய மதிலாறுவீடு வுதிரங்கலந்த தேகம்
கருவாகிநின்று புவிமீதில்வந்து கபடேடுமொன்று மறியேன்
குருவாகிநின்ற சிவஞானசோதி குருவேநின் னைமறவேன்
மருவீசுசோலை யருணைசலீசர் வரவேணுமென்றனருகே. ()

பணியாதகோயி லணியாதநீறு பசியாதசோறு தருவாய்
துணியானவாசி சிவஞானமோன சுகமேயெனக்கருளுவாய்
தனியாதகோபமுடலோடிருந்து சலியாதமாய்கைவெளியே
மணியாடு நாதமருணைசலீசர் வரவேணு மென்றனருகே. ()

சூதாகிநின்ற சிவசூத்திரங்கள் சுருளுவாயமர்ந்த சுழியே
பாதாதிகேச முடலோடிருந்து படிகானிலாடு நடனம்
வேதாவுமாட மதியாடமூவர் விளையாடிநின்ற வெளியே
வாதாடிநின்று வருணைசலீசர் வரவேணுமென்றனருகே. ()

அடிமூலவட்ட மதிலாறுதிட்ட வதின்மே லிருந்தபரனே
துடியானசத்தி சிவரூபவல்லி சுகமானவேத வடிவே
அடியார்களுள்ளத் தெளிவாய்விளங்கு மரனேநின் னைமறவேன்
வடிவானசோதி அருணைசலீசர் வரவேணுமென்ற னருகே.

உரைதங்கிநின்ற வுயிரெங்குமாதி யுலகெங்குமேகவடிவாய்
கரைகண்டதில்லை வெருகோடிகாலங் கலிகாலமாய்கையதனுல்[ன்
இரைதேடியாசைபசியான் மெலிந்துயிர்கண்டியங்கிவிழுமு
வரைதங்கிநின்றவருணைசலீசர்வரவேணுமென்றனருகே. ()

அருணைசலீசர்பதிகம்முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை

அருணாசலேஸ்வரர்பதிகம்.

காப்பு வெண்பா.

ஆதியயன்மாலடிமுடியைக் காண்பரிய
சோதிவரை யாகிநின்ற தூயவொளிர்—பாதிமதி
கற்றைச் சடைக்கணிந்த கண்ணுதலைப் போற்றவெங்க
ளொற்றைக்கொம் பன்றுணைத்தா ளுண்டு.

ஆசிரியவிருத்தம்.

ஓதுமலை தூல்லிய விபூதிமலை கைலய னுறைந்தமலை ம
ந்திரமலை - உத்தமெய்ஞ் ஞானியர் தபோதனர்கள் சூழு
மலையோங்குமலை யழியாமலை சோதிமலை யிருகண் களிக்கு
மலைமெய்யடியர் தொழுதுருகு சோணமலையே-துங்கபத்தி
ரியமுனை கலைவாணி தீர்த்தமலி சுனையருகி லொளிர்மா
மலை, வேதமலை சித்திர விநோதமலையென்னன்னையர்வேண்
டுமலை காண்டமலையே-வினைதீர்க்கவந்தமலை கனகாபிஷேக
மலைவீறுமலை யேறுமலையே, ஆதிமலைமீதுறை யநாதியேயென்
னையா ளருணாசலக்கடவுளே-அரகரமகேசனேபரமகுரு
வீசனே யணியருணமலை வாசனே. (க)

காளத்தி நாதராய்க் கழுகாசலத்தராய்க் காசிதனில்
விசுவேசராய்-கச்சியே கம்பராய் வேலூர் வயித்தியராய்க்
கமலமலர் தன்னிலுறைபுத் தேளுக்குமாலுக்குமெட்டாத
சோதியாய்த் திருவொற்றியூர்த் தியாகராய்த் - தென்மது
றையிற்சொக்கராய்க் காழிதன்னிற்றிருத் தோணியப்பர்

தாமாய், நாளச் சரோருகத் தடமேவுதென்றில்லை நடராச ராய்விரிஞ்சை-நகர்வழித் துணைலிங்கராய்த் திருச்செங்கா ட்டு நம்பராயடியார்களை, ஆளக்கடைக்க ணருள்செயவிள ங்கிய வெங்க ளருணைசலக்கடவுளே-அரகர மகேசனேபர மகுரு வீசனே யணியணு மலைவாசனே. (உ)

பாணிச் செழுஞ்சடைப் பரமனேயுலகிலுறு பத்தர் கோடிகளேற்றிடும் பாதபங் கேருகா சங்கர சதாசிவா பா லநேத்ரா சாம்பவா, பூணிற் பொலிந்தமா தேவிபங்கா சர் ப்ப பூஷண நீலகண்டா - பூதநாதாதற்ப ராசிற்ப ராசிற்ப ராசர்வபூரண சதுராரண, சேணிற்பொலித்த பண்ணவர்க ணெடுமாலயன் சிந்தனைசெய் தேவதேவா - திகழ்சிகர மே ருகோதண்டாவகண்டா சிதம்பராகருணாகரா,ஆணிப்பொ னேகாயினேன் றன்னை யாளுவா யருணைசலக் கடவுளே- அரகரமகேசனே பரமகுருவீசனே யணியணுமலைவாசனே

சூலமொடு மான்மழு கபாலமுங் கைக்கொண்டதுங் கமிகு சிவசங்கரா - சுற்றிவந் துன்கோயில் பத்தியுடனே தொழுதுசொல்லுமென் றெல்லையைக்கேள், வாலிபந்தன் னிலே யொருநலமு மெய்திடா வறுமைவந் தெனைவருத்த வண்புவியி லொருசாண்வயிற்றினை வளர்க்கவுளம்வாடினே ன்றேடிவந்தேன், சாலபஞ்சினைத் தெனைக் கைவிடினு நா யினேன் சாமியுனை விடுவதில்லை - தள்ளாமலுன்பாதபதும நிதிதந்திடத் தயைசெய்வ துன்பாரமே, ஆலவிட மருவு மணி நீலகண்டத்தனே யருணைசலக் கடவுளே - அரகரம கேசனே பரமகுரு வீசனே யணியணுமலை வாசனே. (ஊ)

தேவர்துதி தேவராய் வாழ்விக்கு மீசராய் செகதலக் கர்த்தவ்யமாய்த் - தெய்வீக மாமுனித வைபோக ராயனே சிந்தைநொந் தினிதுவாடி மாவுலகில் கொலைகளவுகட்காம

மாதியவகுத்தவைம் பாதகங்கள்ம - னத்தச்சமில்லாதியற் றினேனை வுண்ணை வந்தித்திடாத குறையோ, கூவென்றசத் தமுன் செவிகொண்டு கேளாத கொடுமைதானென்னைய னேகுழவியழு குரல்கேட்ட தாய்போல வந்தெனது குறைதவிர்த் தாளையனே, ஆவிக்குநீதுணை யலாதுவேறில்லை யென் னருணாசலக் கடவுளே - அரகர மகேசனே பரமகுருவீசனே யணியண்ணாமலை வாசனே. (நி)

மாணிக்கரப்பர்சுந் தரர்புகழ சம்பந்தர் மாதவத்தோர்தமக்கும் - வரமே யளித்தசிவபோகவண்ணமுலைவல்லிதனிடப் பாகனே, காணிகைகொண்டட்ட திசையுளோர் நசையொடு கனிந்துபூ சனைபுரிந்து - கவினுற்றவிருகரஞ்சிரமிசைகுவித்தேத்து கர்த்தனே கையரசே, வீணுக்குதித்துவாழ் நாள்கழித்துப் புவியில் மெலிவிசாரக் கடலினில் வீழ்ந்தலைந் திடுமென தரும்பவ மகற்றுத விதமென்னமோ வையனை, ஆணித்தசத்துவெண்முத்தமேயத்தனேயருணாசலக்கடவுளே - அரகர மகேசனே பரமகுருவீசனேயணியண்ணாமலை வாசனே. (சு)

நீயெனது தெய்வமென் றுன்கோயில்வலம்வந்து நேயமொடுகொண்டாடிநன் - நினைவோடு பணிபவர்க் கழிவிலாப்பதவியுட நிறைசெல்வமுங் கனதையும், தேயுசும் மிக்கவுண்டாயுளும் நூறுண்டுதன்புண்டு வன்புமுண்டு - தியானிக்க நினைவமுண் டிகையுண் டுயர்கல்வி தெளிவுண்டு ஞானமுண்டு, வாயுண்டு கவிசொலக் கேட்கவுஞ் செவியுண்டு வாழ்வுண்டு தாழ்வில்லையே - வல்லாண்மையுண்டு மிகு நல்லோர் நிணக்கமது மாறுது தாழ்வுறாது, ஆயிராரோக்யமும் பெருகவருள் வாவிசூ ழருணாசலக் கடவுளே-அரகர மகேசனே பரமகுரு வீசனே யணியண்ணாமலைவாசனே. (எ)

காலுடன் கைகளு நடுக்குற் றிடாமுனங் கழறுநாக்
குளறுமுன்னங்-கண்கள்பஞ் சடையுமுன் றுன்பம்வந் தெ
ய்துமுன் காலன்வந் தணுகாமுனம், தோலுஞ் சுருக்கித்தி
ரைந்துகரை யொடுமூப்பு தோன்றுமுன் னிருமன் முத
லாம்-தொல்வினை வராமுனம் பல்வரிசை வீழுமுன் றொனி
யிட்டி மனிவிமக்கள், மாலுற் றழாமுனம் பாலன்றனக்கு
முன் வந்தெனைக் காப்ப தரிதோ-மாணத் தயர்ந்திடுந் தரு
ணத்தி லுன்றன் மலர்ப்பத முவந்தருளுவாய், ஆலத்தை
யமுதுசெயுமமலனேயாதியே யருணாசலக்கடவுளே-அரக
ரமகேசனே பரமகுரு வீசனே யணியணுமலை வாசனே. ()

வீணையிவ்வவணியி லுதித்துவந்தழனேர் விசாரத்தினு
லெனதுளம் வெந்துமிக நொந்துன்னை வந்தடுத்தேனென்
னவிதமான பாதகங்கள், நாணுதுசெய்தகொடி யேனெனு
மென்பிழையை நம்பனே நீபொறுத்து நலமெலாந்தந்துன்
னடிக்கமல மலர்தன்னை நாடவெனை யடிமை கொள்வாய்,
சேணுடர்போற்று மறைவாசங்கரா மஹாதேவா த்ரிலோக
நாத-சித்தர்கின் னரருரக ரசகரவெனச்சொலிச் சேவிக்கு
மறைநாயகா, ஆணுப்பெண்ணு யலியதானவென்னையனே
யருணாசலக்கடவுளே-அரகரமகேசனே பரமகுரு வீசனே
யணியணுமலை வாசனே. (கூ)

இந்திரன் றீர்த்தமுட னக்கினித்தீர்த்தமும்யமதரும
தீர்த்தமுதலாய்-இயனிருதிதீர்த்தமும்வருணதீர்த் தமுமக்
கியமென்னும் வாயுவு தீர்த்தமும், விந்தைக் குபேரதீர்த்
தமும்மலமேவுமீ சானதீர்த்தமு முவந்த - மிளிர்முலைப் பா
ல்தீர்த்த ளிதமிழ் பயந்தமுனி வேண்டுமுயர் தீர்த்தமிக
வே, சந்தாச்சாச்சுவதி தீர்த்தமு மிலக்குமித் தாய்தீர்த்த
முங் கௌதமர் - தன்றீர்த்தமுஞ்சக் கரத்தீர்த்தமுங்தி த

கைதீர்த்தமும் பிரமமாம். அந்தமலிதீர்த்தங்கள் விந்தைபு
டை சூழ்துல வருணைசலக் கடவுளே-அரகரமகேசனேபர
மகுரு வீசனே யணியருணமலை வாசனே. (கo)

கூட்டமிகு மடியார்கள் கூட்டுறவிலா மடமை கொண்
டமுழுமூடன் வித்யா குருசீடனுய்க் கல்வி கல்லாத மூட
னுன் கூறுசரிதந் தன்னையே. கேட்டதறி யயனுனது நாட்
டமறியே நன்மை கிளர்பாதகான்கு மறியேன் - கெந்தாட்
சதைக்கு விளங்கொண்டு பூசனைசெய் கிரியையறி யாதமூ
டன். பாட்டு மறியேன் வினைகளோட்ட வறியேன் கவிப்
பத்துமிலை யர்த்தமுடனே-பகரவறி யேனுனைப் பரவவறி
யேன் செய்த பாவமேதோ வறிகிலேன், ஆட்டிவைத்தேம
ன்கை காட்டிக்கொடா தருள்செய் யருணைசலக் கடவுளே
அரகரமகேசனே பரமகுருவீசனே யணியருணமலைவாசனே.

அருணைசலேஸ்வரர்பதிகம்

முற்றிற்று.

சிவமயம்.

உண்ணாமுலையம்மன்பதிகம்.

காப்பு-வெண்பா.

அண்ணா மலைநாத ராரிந்திடப்பக்கத் தமர்ந்த
உண்ணா முலைப்பதிக மேவுமைக்க—ணண்ணனை
அந்திநிறத் தானீன்ற வண்ணலெனு மைந்துகரத்
தந்திமுகன் றாளே சரண்.

சந்தவிருத்தம்.

திருவாருங் கூடுதனி லாறுவீடு தினமேயிருந்துமுடிவிற், பெ
ருவீடுதன்னில் மணல்வீடுகட்டிப் பேயேன் பிழைக்க வசமோ, எரி
கா டெனச்சொல் சுடுகாடு போமுன் னெளியேன்முன் வந்தருளு
வாய், மருவார்ந்தவுண்ணாமுலைநாமதேவிவரவேணுமென்றனருகே.

விலைமாதர் தங்கள் நிலையே மெய்யென்று விரிவான வுலகந்த
னில், அலைவாய்த் துரும்புபோலே யுழன்றவடியேனையாளுவார்
கலைதேடிக் காணுதொளிரு மப்ரசித்திக் கனத்தோர்கள் புகழுமண்
ணு, மலைமேவு முண்ணாமுலை நாமதேவி வரவேணுமென்றனருகே.

சீர்கொண்ட வகிலந் தனில்வாழு மாந்தர் செய்கோடி தப்பி
தத்தை, ஏர்கொண்ட வன்றன் வாளா லறுத்து முரட்சிக்கு மூலகம்
மைம்மீ, ஆர்கண்டு நின்சீடருரை செப்பவல்ல வுனதரட்சகியேலோ,
வார்கொண்ட வுண்ணாமுலை நாமதேவி வரவேணு மென்றனருகே.

பிறைபோன்ற நெற்றிப் பறையம் பணத்திப் பரிபாலனத்தி
புகழ்சேர், நிறையோடுகின்ற திருவேணின்சீரை நிலையோடு செப்ப
வளரார், குறைவாழ்வை நீக்கி பதமீந்து ரட்சி கொடிபோலிடைப்
பெணமுதே, மறைதேடுமுண்ணாமுலைநாமதேவி வரவேணுமென்ற
னருகே. (சு)

சென்னிக் குளிர்ந்தைப் புனலைத் தரித்த சிவன்வாம பாகமதனில், மின்னே ரெனச்சொன் மிகவேயிருக்கு மெல்லியற்கணுமையே, என்னைப்போ லேழை யகிலத்தி லில்லை யீடேறவைத் தாளுவாய், மன்னிக்குமுண்ணுமுலைநாமதேவிவரவேணுமென்றனருகே.

பந்தார் குழற்கி பணிசேர் முகத்தி பதுமாசனத்திமாயி, நத்தார் கழுத்தி நாராயணத்த ளனைப்பதத்தின்னிசேர், சித்தாகுலத்தை வந்தா தரித்து சீர்பெற்றிடச் சிறுவன்முன், வந்தாள்தவுண்ணுமுலைநாமதேவி வரவேண்டு மென்ற னருகே. (சு)

கொடிபோன் றிடைச்சி குறமாது மாயி குணமான பூஷணத்தோன், றிடியேறு போன்ற மிடியால் மெலிந்த யேழைக் கிரங்கு சத்தி, நடையா லனத்தை மெலியச் செய்விக்கு நாராயணன்சகோதரி, வடிவார்ந்தவுண்ணு முலைநாமதேவிவரவேணுமென்றனருகே.

சற்றுகி லுன்ற னுளமே யிரங்க யினிதாமசங்க ளேனோ, சித்தாந்த ரூபி திவ்யப் பிரதாபி திருவார்ந்த தில்லையதனில், எத்தால் விளைந்த கதைபோ லிருக்குதென்னன் மழையிப்பூமியில், வற்றுத வுண்ணு முலைநாமதேவி வரவேண்டு மென்றனருகே. (அ)

விரிவானபூமி தனில் வாழுமாந்தர் வெகு தப்பிதங்கள் செயினும், அரிதானஞானமது கொண்டபேரை யணுகிப்புரந்தாளுவாய் பெருவாழ் வளித்து பிரியத்தொடென்னை பிரியாதிருக்க விப்போ, வருசெல்வியுண்ணு முலைநாமதேவி வரவேணுமென்றனருகே. (கூ)

கதியிந்தவேளை மதியே யிலாத தமியேனை ரட்சிப்பதற், கெதியாரு மில்லை யுனையன்றிவேறு கெளமாரி வீரியிந்தப், பதிகத்தை நின்றன சரணத்தி லொன்றை பரிவற்றுவைகு மெனையாள், மதி சத்தியுண்ணு முலைநாமதேவி வரவேண்டு மென்ற னருகே. (கo)

உண்ணுமுலையம்மன் பதிகம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

மகாவித்வான்

சின்னகவுண்டரவர்கள் இயற்றிய

உண்ணாழுலையம்மன்சதகம்.

காப்பு நேரிசைவெண்பா.

உண்ணாழுலைமாய னுங்குதங்கைச் சங்கரிமே
லுண்ணாழுலைச்சதக மோதுதற்குக்—கண்மூன்று
வேழமுகத்தாணை வேழமுகத்தாணை
வேழமுகத்தாணை வேண்டு.

அவையடக்கம்.

பார்மிசையி னுவலர்மு னுனுமொரு புன்சொலைப்பகர்
வதென் சமதையெனி லோ, பாதலத்தனிலாதி சேடனுயர
ண்டம் பணமுடிதனிற்சுமந்த, சீர்நிகரியானுமண் டஞ்சும
ப்பேனெனச் சிற்றெறும்புகளு முட்டை, சிதைந்தவொட்
டைச்சுமந்தது போலவென் கவித்திறமையாமிதுவலாமல்,
கூர்மையொடு தான்பெற்ற பிள்ளைசிறுவய தினிற்குளறுகிற
மழலைமொழியைக் குற்றமென்றேகற்ற பெரியோர்களிகழ்
வரோ குலவுவாலாம்பிகைபெயர், சார்வாகவித னுள்ளிருக்
கையாலியாவருஞ்சரியென்றுகைக்கொள்ளுவார், தக்கபெ
ரியோர்களும் மிக்கசிறுபிழையையும் தான்பொறுத் தருள்
செய்வரே.

நூல்.

உலகமிசைமேவிய சராசரத்தெழுவகையி லுண்டான
பேதமதனி, லுள்ளுயிரதாய்நின்று விளையாடியுங் கருணை
யோங்கு பிரணவவருவமா, யிகுகிரியட்சர சடாட்சரீபீ
சாட்சரத்தினியபஞ்சாட்சரத்தோ, டேற்குமைம்பதினுட
னேரட்சரந் தன்னிலுமியல்பஞ்சகிர்த்திய முதலாய்,பல

லவிதங்களாய்நின்றபொருணீயென்று பழமறைகண்முறை யிடுதலால், பகரவினிவேறுமொருதெய்வமுண்டோசொலு மம் பரப்பிர்மஞானவடிவே தலேவியருளோங்கார ஸ்ரீங்கார வல்லி சிவசத்தியேமுத்திமுதலே, தருமேவுமருணகிரியீச ர்பாலுறையுலகு தாயுணமுலையம்மையே. (க)

பிராமணரியல்பு.

கதிரோனுதிக்குமு னெழுந்து ஸ்நானஞ்செய்துகாய த்திரிசெபதபமெலாங், கருதிவழுவாமலேமுடித்தபின் றிரி சந்தி காலருக்கியங்கொடுத்து, அதிகபுகழ்சேர்சுருதி நூல் கற்கவும்வேள்வி யாகங்கள்செய்விக்கவும், அறிவுடன் பல சாத்திரம்பிரசங்கிக்கவு மவனிமிசையெவர்களுக்கும், விதி வழியறிந்து சாதகமெடுத் தோதவும் மிக்கதவ மேன்மைய தனல், வேதியர்தமைத்தெய்வ மென்றுகலியுகமதில்விளம் புவர்கள் யாவருந்தான், சதுர்மறையிலெட்டாத திருநயன வல்லியே சாம்பவிகன்னியரசீ, தருமேவு மருணகிரி யீசர் பாலுறையுலகு தாயுணமுலையம்மையே. (உ)

அரசரியல்பு.

ஆளுகையினுலகிற் பிறக்குஞ் சமாசார மன்றுடகம் விசாரித், ததற்குமேலெத்தனஞ்சொல்லுமதியுக்தியாயமை ச்சனைருவனியுநேமித், தேளிதப்பயலொன்னலார்முடி துணித்தவனியெங்குமொருகுடையுளாக்கி, யிதமுறுஞ்சேவ கர்க் கவரவர்தராதரத் தேற்றசம்பளமுமீய்ந்தே, நாளினுக் குக்குடிக ளுழுதபூமிக்குநிகுஞாயமுடனேதெண்டியும் நா லெட்டறத்தையுஞ் சீலமுடனேசெய்துகல்லசற்குணமிசை ந்து, தாளினிற்பணிபவர்க் காறுதலேசொல்வதுந் தாணியா ண்மன்னர் முறைமை, தருமேவுமருணகிரி யீசர்பாலுறை யுலகு தாயுணமுலையம்மையே. (ங)

மேழிச்சிறப்பு.

செகதலந்தனிலரசர் மனுநீதிமுறைமையும் செய்யவே
தியர்தர்மமும், சித்தவொரு மைத்தவமு முத்திநிலையும்புக
ழ் சிறந்ததேவதைமகிமையும், சுகவனிதை மேலின்ப மயல்
கொள்வதும்பெரிருட்சுருதியொடு பலகாவியம் சொல்கல்
வியுங்கருணையில்லறமுந் திவ்விபசுந்தரவிலாசவெழிலும்,
அகமகிழ்ந்திடுசெல்வ மும்பரிவுதாரமு மதிகுலமேன்மை
வளமும், அடையலரைவெல்வதுங் கீர்த்திப்பிரதாபமு ம
ஞ்செழுத்துணர்வு நிலையும், சகலமும்புவிமிசையில் வேளா
ளர் மேழியின்றனதுடையபெருமையலவோ, தருமேவுமரு
ணகிரி யீசர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே. (சு)

நல்வழிப்போதனை.

அதிகாலமேமகா கணபதிதனைப்பணிந் தகல்வதைமற
க்கவேண்டா, மதிகமயல்கொண்டு நற்கற்புடைய வனிதை
மே லாசையதுவைக்கவேண்டாம், துதிபெறுதாய்தந்தை
குருவுடன் பெரியோர்கள் சொல்லதனை யிகழவேண்டாம்,
சோர்வுற்ற கொலைகளவு பொய்யுடன் கந்தையுஞ் சொப்ப
னத்திலு வேண்டாம், நிதிமமவாதையாலே பரதேசியர்க்
கன்னமது நேராதிருக்கவேண்டாம், நீணிலந்தனையாளுமர
சரைவணங்காமனேருடன்பகைக்கவேண்டாம்,சதியதுவரா
மலிப்படிமனிதருக்கியல்புசாற்றினேந்தருமநெறிதான்தரு
மேவுமருணகிரியீசர்பாலுறையுலகுதாயுணுமுலையம்மையே

மனிதர்நிற்றெய்வமென்பவர்.

அந்தணர்க்கனதான மீய்வதும்வேள்வியாகங்களே மு
டிப்பிப்பதும், அரும்பொருளளித்தீசராலயஞ் செய்வித்து
மதினந்தனம் படைத்தும், செந்தமிழ்க் கவிஞர்பா டுந்தமி
ழ்க்கேட்டுமிச்சகமெலாங் கீர்த்திபெற்றும், சிவனேமறவா

தஞ்செழுத்திருதயத்தினிற் றியானித்துவருமுறைமையும், பந்துஜனமொடுபுவியி லியார்க்குமொரு தீங்கு குறைபண் ணுதிருக்கையாலும், பரிவுடன்புவிமிசையி லெவர்க்குநல்ல வனெனும் பதிவிரதநிலைமையாலும், சந்ததமுமிப்படிப் புகழ்பெற்றமனிதரைத் தான்தெய்வமென்று.சொலலாம்,தரு மேவுமருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணுமுலையம்மையே

பகிவேளையினில்லாதவை.

மதுரகவராசமொழுகு கல்வியும் விச்சித்ர வசனமுங்க னபெருமையும், மங்கையர்கண்மேலதிக விரகசல்லாபமும் வண்மையுந்தன்மைநயமும், சதிருடன்பணியணிந் திடுநாக ரீகமும் தனயர்மேல் வருபிரியமும், தங்குபுகழ்மானமுமிங் கிதமுயற்சியும் தாடாண்மையோங்குதவமும், நிதிமிசைய வர்க்களவி லாசையும்புகழுற்ற நேமமும் சூல்வளமையும், நிசமாகவிதயமொரு வழிபடுதலுந்திறமைநேர்ந்தபுயபலச மர்த்தும், சதிருடன் பசிவந்தபோதிலிவ் வகையெலாம்சற் றுநில்லாதுகண்டாய், தருமேவுமருணகிரியீசர்பாலுறையு லகுதாயுண்ணுமுலையம்மையே. (எ)

பயனற்றவை.

குருவுரைக்காதவுப தேசமும்பரிமளங் கொண்டிருக் காதமலருங், கூறியகணவனில்லாததொரு விதவையுங் குஞ்சாமி லாததளமும். தருவெடுத்துற்பன முறைக்காத மந்திரியும் தனயரில்லாச்செல்வமும், சமயகாலங்களுக் கு தவாதபந்துவும் தனமிலாதவரிளமையும்,நெறிமுறைமையி ல்லாத வேந்தனுங்கபடத்தை நேமிப்பர் விசுவாசமும், நே ருடன்பயிர்விளைவுதாராதபூமியும்நின்புகழ்சொலாதபேரு ம்சரிவாப்புவிமிசையிருந்தென்னகாரியஞ்சாரிசமதேதுமு ளதோ, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண் ணுமுலையம்மையே. அ)

இல்லையென்பவை.

ஆனபல்நூலெலாங் கற்றவரிலத்தலையி லயனெழுத்த றிவதில்லை, அந்திபகலுந்தனைப் பணிவோர்க்கு வினையில்லை யாசைக்குரோசமில்லை, மானமதுபோனபின் வருவதில்லைக் கவிசொல் வாணருக்குப்பகையில்லை, மாதர்மனதளவறிவ தி லையுயிருடன்கவரி மானகப்படுவதில்லை, யீனமுடனேபொ ருளி லாசைவைப்பவர்களுக் கினியபுகழ் வருவதில்லை, யெ ண்ணருங்கனதனம் பெற்றுலுமறையவர்க ளேற்காதிருப்ப தில்லை, தானமதுமுப்பத் திரண்டறம்வளர்த்திட்ட சாம்ப வியருள்சத்தியே, தருமேவுமருணகிரியீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (சூ)

இன்னர்க்கிதுமுன்னிற்கும்.

சுத்தரணவீரருக்குக்கோபமுந்திடும்சோரற்குப்பொ ய்முந்திடும், தோதகக்கள்ளிக்கு ளிழியினீர்முந்திடுஞ்சொ ற்புரட்டோதுமடைய லுத்தருக்ககடவிக டங்களதுமுந்தி டு மியோகிகட் கறிவுமுந்தும், ஓங்குகவிவாணருக் குக்கல் விமுந்திடு முன்பதத்தினை யெளுலும், சித்தமதில் வைப்பா ர்க்கு மெய்ஞ்ஞானமுந்திடுந் தியாகிக்குக்கைமுந்திடும், தி னமுமாயத்துறையி லனியாயமுந்திடுஞ் சேய்க்கழுகையே முந்திடும், சத்திகவுரிமாரிசிவ சாம்பவிமனோன்மணி சர்வ சீவாத்மவுருவே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (கo)

ஒன்றிலொன்றடக்கம்.

துடிமிகமுழங்குபல வாத்தியமெலாநாக சுரமதிற்குள் ளடக்கம் சுகமிகுங்காமுகர்கண் மயல்கொண்ட வேளையிற் றோகையர்க்குள்ளடக்கம், படியினவலோத்திட்ட சப்தசா கரமெலாம் பண்புதமிழ் முனியடக்கம், பாரிடந்தனிலுற்ற

வுடுவனேத்துஞ்செய்ய பருதிமதியாலடக்கம், அடையலர்க
ண்முடியிடறு வீரராயினுமரச ராக்கினேக்குள்ளடக்கம், ஆ
தியடியாருமறி யாததிரிலோசனனு மன்பரிதயத்தடக்கம்,
தடமுறுங் கருணைவிழி யம்பிகாமலேயுதவு தற்பரீ இயடி
யர்பாகா, தருமேவுமருணேகிரியீசர்பா லுறையுலகுதாயுணு
முலேயம்மையே. (கக)

தாசிகளியல்பு.

காரொத்த குழலினேச் சீவிப்பகுந்ததிற் கமழ்மலரினே
ப்புனேந்து, கலேதுதலிலிற்கனகதிலதமிட்டுக்கயற்கண்ணில
ஞ்சனவரைந்து, வாருற்றகுங்குமக் கொங்கையிற்பரிமளவ
சந்தபாளிதஞ் சவ்வாது, வாடைகடிமிர்ந்துபட் டாடைசி
ற்றிடையீ துவகையுடன்கொய்துடுத்துச், சீரொடுசிந்தூ
க்காடொருபுறந்தனந் தெர்வதொயிலாய் மறைத்துச் சில
ம்பொலிபுலம்பிட நடந்திகழ் திறந்தினிய சிறுநகைசெய்தி
ளைஞர்வாழும், சார்பினிற் சென்றுவிழி வலேவீசிமயல்தருவ
ர் தாசிகணடத்தையிதுவாம், தருமேவு மருணேகிரியீசர்பா
லுறையுலகு தாயுணுமுலேயம்மையே. கஉ)

இதுவுமது.

பொதுமடந்தையர்வீடு சதுர்பரவுகச்சேரிபுல்குமனே
யங்காடியாம், புந்தியதுவஞ்சகத்தொம்பையவளங்கம்பொ
ருந்துவாடாகைமட்டமாம், நிதிதருங்கொங்கைவினேயாடுப
ந்தாமல்குனேர்ந்தவர்து வைக்குமுரலாம், நிதமுமவளிதழ்
தணீர்ப் பந்தலினில் வந்தவர்கணீர்பருகு கலசவாயாம்,
விதமுடன் றழுவுகைக் கினேதேரின் வடமாகு மிக்கநகை
வேம்புரசமாம், வேதைதருவார்களவ ராசையது பாஷாண
மேதினியி லிப்படியெலாஞ், சதிகண்டிருந்து மவண்மயல்
வலேயிலலேவதேன்சற்றறிவிலாதபோர்கள், தருமேவுமருணே
கிரி மீசர்பா லுறையுலகு தாயுணுமுலேயம்மையே (கங)

இதற்கு இதுநலமென்பவை.

சுற்றறிவிலாதபரமூடர்களிடத்தினிற் கருதுவிசுவாச மதினுங், கல்விநெறியறிகின்ற பெரியோர்கள்சிந்தையிற்கா ண்குபகைமிகநல்லதாம்,உற்றசொற்களோதிடும்புசொலும ணவியருடன்கூடி வாழ்வதினிலும், ஓங்குகையிலோடுகொ ண்டுலகெலாஞ்சென்றிரந்துண்பத்துமிகநல்லதாம்,பற்றலரி டத்திலடிபோற்றியே சீவனம்பண்ணிப் பிழைப்பதினிலும், பங்கமுறுசடலத்தொழித்துயர்விடுப்பதும்பார்மிசையிலே நன்மையாம், சற்றுநின் கிருபையுண் டானவர்கணியமித்த சங்கதியெலாநன்மையாம், தருமேவுமருணகிரி யீசர்பா லுறையுலகு தாயுணாமுலையம்மையே. (கச)

மனிதரிற்சுணங்கர்

காசொன்றுமீயாத லுத்தனும்புகழுற்றகல்வியறியாம டையனும்,கருதுமனியாளையொருவர்க்கீய்ந்துதான்றினங் காலட்சியஞ்செய்பவனும்,நேசமுடனன்பிலா மங்கையரை வலுமையொடு நித்திரையிற்போகிப்பனும், நிலையிலாப்பொ ய்சொலுங்கசடனுடைசனுநிந்தையுற்றிடுசோரனும்,தூசமு க்குடனனிவ தொடுமேனி சற்றுஞ்சுசீகரமிலாக் காலையும், தற்சனம்பலவிதவிளைப்பனும்புவியினிற்சொற்கெளித்தாய் த்திரிவனும், தாசசிவயோகியை யிகழ்ந்தவனு மிவரெலாந் தரணியிற்சுணங்கனெனலாம், தருமேவுமருணகிரியீசர்பா லுறையுலகு தாயுணாமுலையம்மையே. (கரு)

தீமையென்பவைகள்.

தேவரீரல்லாது வேறுகதியிலையெனத் தெண்டனிடுவா ர்கண்மீது, சிந்தையிற்கபடம்வைத் தனுதின மவர்க்கிடறு செய்வதுகொடுந்தீமையாம்,பாவலரிடத்தினிற்செந்தமிழ்க் கேட்டுநற் பசுவுநல்காமலேபின், பாகட்டுமென்றுவீணுய்ந

ட்பித்தும் பவமறு கொடுத்தீமையாம், காவலரிடத்தரு கிருந்தமுதருத்தியுட்கவடிளவறிந்தபின்பு,கருதுமெஞ்ராளி யைச்சேர்ந்து சமர்புரிவதுங் கடியதேதார் கொடுந்தீயதாம், தாவுபரிமளகந்த குங்குமபயோதரத்தரிவையே வித்துமுத லே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகுதாயுணுமுலை யம்மையே. (கசு)

பெருமையென்பவை.

மக்களொடுபதிணுமறிவிலர் பிறந்தென்னவரிசையொ டுபெருமையல்ல மன்னுகல்வித்தொழில்விவேகசற்குணனு மொரு மகவுபெறுவது பெருமையாம் மிக்கதனதான்யசம் பத்துகளேகமுமிருப்பதுபெருமையல்ல,மேதினியிலேம் பவர்க் கீய்ந்துபுகழெங்கும் விளக்குவதுவெகுபெருமையா ம், பக்குவமுறுஞ்சமரி னின்றுவீண் பாஷைபதுபகருவது பெருமையல்ல, பற்றலர்கண்மகுடமுடி யற்றிடப்பொருது வதுபராக்கிரமம் வெகுபொருமையாம், தக்கபுகழ்மெய்ஞ் ஞானவல்லியேயருமறைத் தலைவியேயோங்காரியே,தருமே வுமருணகிரியீசர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே.

கபடசன்னியாசிகள்.

நெற்றியிற் நூளிதவிபூதிருத்திராக்கமும்நேசமுறுசு டைமுடியுடன், நிசமான காவிகாம்பரவும்மணிந்தேதமிகநே மமும்பலவிரதமும் கற்றுணர்ந்தவரனைய சாஸ்திரப்பிரசங் கமும்கையினிற்செபமணிதனை, கண்மூடியெண்ணுவதுமெ ய்பொழுதுமரனையேகருதுவதுபோன்மொழிவதும்,நற்றவ ம்புரிகின்ற யோகீசர்வாதைமுறைகான்கோடிசெய்வமென் பார், நாலாறுகைக்கொண்டவ் வேக ராத்திரியிலே நன்று யொளிந்துவிடுவார்,சற்பனைசெய்திந்தவகைவேடம்புனைந்த கூடுதான்வளர்ப்பார்கள் வெகுபேர்தருமேவுமருணகிரியீச ர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே. (கஅ)

நன்மையிற்றீமை.

தேடரியதருமத்தை நாடினுமவர்க்குமொருதீமைகள் வராதிராது சிறந்தவின்பத்தளவு துன்பமுங்கூடவே சேர்ந்தேவராதிராது, கூடுநிதியெனினூற்றி லொன்றினிற்கழிவுடன்குத்துகளிராதிராது, கோகநகமேவிய தடாகத்திலுங் கொட்டி கூடிநில்லாதிராது, நாடிரவிமதியுமொரு கணமாயினும்மரவினன்மறைபடாதிராது, நற்கருப்புக்கட்டியாயினுங்கண்மண்ணுநாடாமலேயிராது, தாடகைசம்மாரமால் துணைவியகருணைவிழித்தையலேசெய்யபுகழார்.தருமேவு மருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணாழிலையம்மையே. ()

சிறுமையிற்சிறுமை.

ஆசைதருவேசியொடு நேசமதுவாயினு மதுவுமொரு சிறுமையல்ல.வன்புடன்காசுதாராமலேஜாடையாயகலுவது வெகுசிறுமையாம்பாசமுறுவறுமையானெஞ்சுடன்மெலிந்துமலைபவதுமொருசிறுமையல்ல, பாக்கியமிருந்துமீலை யென்றுபாசாங்குமொழிபகருவதுவெகுசிறுமையாம், நீசர்துரையாயினுல்வரிடங்கைகட்டிநிற்பதுஞ்சிறுமையல்ல,நிதமுமனையாடமக்கேவலுன்புரிகுவது நிந்தையுற்றிடுசிறுமையாம், சாசுவதமாய்ச்சிரஞ்சீவி மார்க்கண்டனைத்தாபரித்தெமனைவென்ற, தருமேவு மருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணாழிலையம்மையே. (௨0)

இன்றியமையாமை.

பாவலர்க்குனதுசெய லல்லாதுசற்றுமவர் பைந்தமிழ் முடிப்பதில்லை, பகாதியவிந்திரன் செய்கையில்லாமலிப்பாரின்மழைபொழிவதில்லை, யேவல்புரிகண்ணுளர்தொழிலையல்லாமலெயத்தொழிலுமாவதில்லை, யேரம்பர்தனைமுந்திநினையாதகருமங்களேதொன்றுமாவதில்லை, மாவிருதர் பஞ்ச

வர் முகுந்தனருளல்லாமல் வன்சமரில் வெண்றதில்லை,வன லட்சுமிகிருபை யில்லாம லியாவர்க்குமகிழ் செல்வம்வருவ தில்லை, தாவுமல்லிகைமுல்லை யிருவாட்சிசண்பகந்தண்கோ டி படர்ந்தபஞ்ச, தருமேவுமருணகிரி யீசர்பா லுறையுலகு தாயுணுமுலையம்மையே. (உக)

கன்மத்தால்வருபவை.

கற்பித்தவித்தையை மறந்தசடனுவதுங் கயமுன்செ ய்தகர்மம்கல்வியறி யாதவர்க் குப்பாரியாவதுங் கருதுபெ ண்செய்த கர்மம், நிற்புத்தி யாலேபேர்ய் பொய்ச் சாட்சி சொல்வதுந்தெளிந்துசெய்திட்டகர்மம், சிவமாலைமதபேத மொடுதூச ணிப்பதுங் தீராதகர்மமாகும், கற்புற்ற மனைவி விபசாரியா வதுமந்த காயகன்செய்தகர்மம், களசக்கிரவர் த்தியடி கைத்தொழில்புரிந்ததும் கவிலவொண்ணுதகர்மம், சற்பூரணிபார பரிகரக பாலியே சாம்பவீ சிவகாமியே,தரு மேவு மருணகிரி யீசர்பா லுறையுலகு தாயுணு முலையம் மையே. (உஉ)

தனத்தாற் றுக்கமென்பவை.

தனமதை வருத்தமாய்த்தேடவும்வியாகுலஞ்சார்ந்தி டு மந்திதியையொருவர், தான்கடன்கேட்கக் கொடுக்கவும் வியாகுலந்தந்தபின்சொன்னகெடுவில், தினநடந்ததை மெ ல்லவாங்கவும் வியாகுலந்தெண்டியே கைக்கொண்டினிச், சீரல்ல வுசொம்மலாகுமென்றெண்ணியேசெப்பமாய்ச்சொ ப்பிலி ட்டு,மனை தனிற்கல்லிப்புதைக்கவும் வியாகுலம்வைத் தபொருளுக்குமோசம், வாசாதிராப்பகல்காக்கவும்வியாகு லம்வலுவரசர்சோரர்பூமி,தன திலாவனலிவையிலொருமோ சம்வந்திடிற்சாகும்வரை வியாகுலந்தான்,தருமேவுமருணை கிரி யீசர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே. (உங.)

இன்னார்க்கின்னதிட்டமென்பவை.

படிமிசைமிலரசுபுரி மன்னருக் கதிகபொன் பாலிப்பர் மீதிலிஷ்டம், பரமசிவனுக்குரிய தவமுயலுமெய்ஞ்ஞான பத்தர்களிடத்திலிஷ்டம், வடிதமிழுணர்ந்தகவி ஞோர்களுக் கீகைபுரிமாந்தர்களிடத்திலிஷ்டம், மயலதிகமுற்றவிபசாரிக்குவாலிபவசீகரர்தம் மீதிலிஷ்டம் அடிமைவானரவெள்ள மெழுபத்திரண்டில் ராமையனுக்கனுமானிஷ்டம், அந்திபகலுந்தீனக்கருதித்துதித்தசேலயடியனுக் கிஷ்டமம்மா சடைதிகழ்வினேதபரிபூரணிதயாதிவ்வியசாம்பவீ யேழைபாகா, தருமேவுமருணகிரி யீசர்பா அறையுலகு தாயுணாமுலையம்மையே. (உ சு)

உலகம்பலவிதம்.

காசினியின் மானிடர்க் கயன்விதிப்படியாலே கன்மவினைவந்தபோது, கணிகாரர்தமதிடமுறைக்கவுமுறைப்பாடு கண்டுதீர்த்திடுவனென்பார், வீசுபுகழ்சோசியரிடத்துரைத்தாலவனுமிக நவக்கிரகாதிகள், விரோதித் திருக்கின்ற துபசாந்தி செய்திடவு வேண்டுமென்றே யுரைப்பார், நேசமுறுதெய்வ மாடுவர்களைக் கேட்கிலுண்ணீதியுயர் வீட்டிலுள்ள, நேரானதெய்வமது சீராடுதென்பார்கணிசவைத்தியர்கைகளைப்பார்த்து, தாசைவைத்திது தொந்தரோகமென்பார் விதியின்சங்கதியை யாருமுறையார், தருமேவுமருணகிரியீசர் பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (உஞ)

இதற்கிதுநலமென்பவை.

அட்டதிக்கொன்னலரை வெட்டிச்செயங்கொண்டவ்வரசாட்சிசெய்வதிலும், அரனடியராயஞ்செழுத்தெண்ணிமெய்ஞ்ஞானமறிவதுமிகச்சிலாக்கியம், வட்டமிட்டுக் கிரமயிற்குழகன்வடகிரியைவலமாகவந்தநினலும, மதகரிமுகக்

கடவுள்சிவனேவலம்வந்து கனிவாகின துவெகுசிலாக்கியம், துட்டவுனே தொலையவுலகத்தி னுளதலமெலாஞ் சுற்றியே தொழுவதினினும் சுந்தரமுய ருருணகிரியிற் றிருக்கார்த்தி கைச் சோதிகாண்பதுசிலாக்கியம், சட்டமுடனெவ்வுயிர்க் குயிரானபார்வதீ சமயமுதலான பொருளே, தருமேவுமரு ணகிரி யீசர்பா லுறையுலகு தாயுணாமுலையம்மையே.(உசு)

இன்னருக்கின்னர் விரோதமென்பவை.

சொற்புத்திகேளா தமைந்தர்தன் றந்தைக்குச்சொல்ல ரிய சத்திராதி, தொலையாதகடன்வைத் திறந்தபின் றந்தை யுஞ் சுதனுக்குச்சத்திராதி, உற்பித்தசிசுவேற தாமளவுமா தாவி னுயிருக்குச்சத்திராதி, யுட்புகுந்தரசர்பாற் கோட் சொல்லுவோர் தமக்கூரெலாஞ்சத்திராதி,சர்ப்பத்தினுக்கு மண்மீதினிற்கையினிற் றடிகொள்வர் சத்திராதி, தன்மனை வி கொடுமைசொலி லெனறுமவள்சல்லியந்தணியாதசத்தி ராதிசற்றுமிவைபிசகிலாப் புனிமிசையி லிவர்களுச்சத்துரு வெனச்சொல்லலாம். தருமேவு மருணகிரி யீசர்பா லுறை யுலகு தாயுணாமுலையம்மையே. (உள)

பலனற்றவை.

கோத்திரமுயர்ந்தென்ன சாத்திரமிலாதவன்குலவீன ஞகுமலவோ, கொடிய வாபத்திலுதவாததெய்வம் மம்மிக் குளவியின் சமதையலவோ, மாத்திரையிருந்தென்ன தாது நிலையறியாதவைத்திய ஜூமூடனலவோ, மாடமாளிகையலங் காரித்துமாதரில்மனையிடம்பாழுதலவோ, ஆத்தினிடைசெ ன்றதிர் றீர்த்தமாடாவிடி லரும்பாவிதானுமலவோ, அரிய பஞ்சாட்சரத் துபதேசமில்லாத வசடனும் பிரேதமலவோ தாதகிமியதாவெனத்திருவுடனவம்பலத் தானவர்கள் புகழ் நின்ற, தருமேவுமருணகிரி யீசர்பா லுறையுலகு தாயுணா முலையம்மையே. (உஅ)

அற்பர்களியல்பு.

புல்லறிவுளோர்தமக் கதிகாரம் வந்திடிற் புகழறத்தி
னை விரும்பார், புண்யவதி விரதைமேன் மயல்கொள்ளுவா
ர்களிப் புடனுதாசனம் விள்ளுவார், அல்லுபகலுங்கொடி
யகோணினைத் தெவர்களையுமகடவிகடஞ்செய்குவார், அ
ன்புடன் பெரியோர்களுக்கிடறு புரிகுவாரதிகருவங்களு
டனே, நல்லுருவினிற்சாய்ந் தெனக்குநிகரிலையென்று நட்
டணைகள் பேசிமெல்ல, நகைசெய்து மீசைமேற் கைபோடு
வார்தன் னடத்தையைப் பார்த்தபின்பு, சல்லியப்படுவர்க்
குநின்கிருபைதங்குமோ தங்காது சற்றுமவர்பால், தருமீம
வமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே.

உலுத்தர்உதவார்.

காட்டின்மரமாயினும் நிழலுதவுமறிவிலாக்கழுதையு
ம்பொதிசுமக்கும், கதிரிச்சுணங்கனுங் கள்ளனையகற்றிடுங்
கைத்தருமம்புதவியதிகம், ஈட்டுறும்வாறுகோல் சுத்தமது
செய்திடும் வேலிபயிரைக்காத்திடும், மிதியடியுமுள்வெய்ய
லுக்குதவிசெய்திடும் வீழ்பழயசுவருபறைவாம், நாட்டுவ
தின்மலசலா திகண்மருந்துக்காகும் நட்பிலாலுத்தரியார்க்
கும். நல்குபகாரமிலையாகையாலே முன்னனவின் றதற்
கிணையாவரோ, தாட்டிணையலாதியான்வேறுகதியறிகிலேன்
றருமஞானக்கொழுந்தே, தருமீமவமருணகிரி யீசர்பாலு
றையுலகு தாயுணுமுலையம்மையே. (௩௦)

நல்லோரியல்பு.

நல்லசற்குணர்தமக் கதிகாரம்வந்திடினுசாவினிற்பொ
ய்யுரைக்கார், நம்பினோர்தமையாதரிப்பரெல்லோருக்கும்ந
ல்வசனமே பகருவார், சொல்லிய தருமத்தையே செய்கு
வாரொருவர் செகத்தினுக்காசைவையார், தூயபிறர்மனவி

யைத் தாயெனச்சிந்தையிற்சொர்ப்பனத்திலுமெண்ணுவார், அல்லலெளியன்வலிய ஞாரேனுமவர்வழக்கநியாயமதுவுரைக்கார், அரன்றிருப்பமலரையெப்பொழுது மிருதயத்தகலாமல்வைத்துநினையுங், தல்லிபார்ப்பதியெனத்துதிசெய்வராகையால் சாயுச்சியமீய்வதரிதோ, தருமேவுமருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணாமுலையம்மையே. (நக,

சின்ன மனிதர்.

அன்புடன்வாங்கின கடன்கொடாமனிதனுமபசத்தியமுளமனிதனும், அன்னையொடு தந்தைசொல்லிதழ்கின்றமனிதனு மபயமென்றஞ்சிமிகவே, நன்மைபெறவந்தோர்க்குவீண்சொல்லு மனிதனும் நயகுணமிலா மனிதனும், நாடோறம் வேட்டகந் தனிதுண்ணு மனிதனும் நல்லோரையிகழ்மனிதனும், இன்பமனையாளே வேசிக்கடிமைசெய்யவிட்டிதயமகிழ்வுறுமனிதனும், ஈனர்களிடத்திலுறவானவீண்மனிதனுமிவர்களெல்லோருமெளிதாய்த், தன்பெருமையில்லாதசின்னமானிடரெனச்சாற்றுமேயுலகுமுழுதுந்தருமேவுமருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணாமுலையம்மையே.

இணைசொலிற்பயனில்லாதவை.

அருங்கானின் மிருகத்தைமானென்று மென்னபெண்ணானமானினையாகுமோ, ஆமணக்கன்வீரையைமுத்தென்றுமென்னதிகழாணிமுத்தினையாகுமோ,வருங்காமனைப்புலவர் வேளென்று மென்சுப்ப மண்யவேட்கினையாகுமோ, வள்ளலிருபத்தொருவரென்றென்னவடகையிலவள்ளலுக்கினையாகுமோ, திறமிலாலோபரைக் கர்னனென் றென்னவவர் தியாகமப்படியீவரோ, தெய்வமெத்தனைபணிந்தாலுமின்பதசேர்வைசெய்வதற்கினையாகுமோ,தரைமிசையிலிவர்களுக்கினைசொலிற்பயனில்லைதற்பரானந்தவொளியே,தருமேவுமருணகிரியீசர்பாலுறையுலகுதாயுண்ணாமுலையம்மையே

பழவினைப்பயன்.

பொன்னுலகையாளிந்திர னகலியா லாயிரம்பொருது விழியுருவதானுன், புகழரிச்சந்திரன் விசுவாமித்திரமுனி யினற் புலையனுக்கடிமையானுன், முன்னநளனைச் சனியனு னவர்தொடுத்தவர் முயன்றென்ன பாடுபட்டார் முருந்தர் ஜானகியுடன் பதினன்குவருடமும்மொய்வனந்தனிலுறை ந்தார், பன்னரியசேடனுங் குன்மவலியாலுடல்பதைத்தக மெலிந்துமுன்றுன், பகருமுன் பெரியோர்கள் விதியாலலைந் திட்ட பண்டுகதை கேட்டிருந்தும், தன்னைமுன்வினைவிடா தென்றிராமல் மனிதர்தான்விசனமடைவதேதோ, தருமே வுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுணுமுலையம்மையே.

தியாகிகள்.

சீருலவு கர்னனும் புகழ்பெற்ற குமுணனும் திருசீத ரநந்தியும்செயவெண்ணை நல்லூரி னிற்சடைய னும்பரிவு சேர்ந்தசீதக்காதியும், காரணயகாதலைச்சேந்திகாத்தானை ழிற் கதிக்குநல்காமனும்பின்கணிசமுறு கச்சியப்பனுமதிக பெரியனுங்கதிருண்டங்காளத்தியும், ஏருலவுசோமனுமிவ ரெலாம் புவிமிசையி லினியதமி ழுக்கிரங்கி, யிரவலர்க்கோ யாமலீந்தே தியாகியென் றெண்ணருங் கீர்த்திபெற்றார், சார்புகுணமில்லாத லுத்தருக் கவர்களைச் சரியெனப்பாட லாமோ, தருமேவு மருணகிரி யீசர்பாலுறையுலகு தாயு ணுமுலையம்மையே. (கூடி)

பாவவழி.

அந்தணர்க ளுடைமையைத் தெண்டம்பிடித்தீவது புண்யமலபாவமாம், அன்னசத் திரமதின் முகநோக்கியன் னமிடுவதுபுண்யமலபாவமாம், மூன்றுசம நிற்றலில் வீழ்வ சமாகவே மொழிவதது வெகுபாவமாம், றேவியைப் பரிக ணமுக்கொல்வதுனைச்சௌரியா மலபாவமாம்,முன்னவன்

சந்ததிக ளுடனுண்ண வேயச்ச முறுவதுந்தான்சுத்த மல பாவமாம், தனதான்ய வர்க்கமதி லாபவிலவிற்பதுஞ்சம் பாத்திய மலபாவமாம், சந்ததமு மிவ்வகை நடத்தையிற் பாவங்கடானணுகல் கலிமகிமையே, தருமேவு மருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுணு முலையம்மையே. (நசு)

புண்ணியத்தாலாமென்பவை.

சூலவீனர் சிவனடிய ராகிலவ ரைப்பணிதல் கொஞ்ச மலவேபுண்யமாம், கொடியபகை யாளருக் காபத்தி லுதவு வது கோழைமதியலபுண்யமாம், தலையைத்துணிக்கவெளி மம்புதப்புவது தாட்டீக மலபுண்யம், சகலசௌபாக்கிய முடனேவாழ்ந்திருப்பதுந் தன்றிறமையலபுண்யமாம், நிலை யாய்பெருங்காற்றில் வீழ்ந்தவன்றப்புவதுநீந்து வலியபுண் யம், நெடியவாருதியெய்தி மீள்வதும் மீகாமனிலமையல் வெகுபுண்ணியம், சலதரமடர்தைபூங் குழலியேபுவியினிற் றங்குபுண்யங்களிதுவாம், தருமேவுமருணகிரி யீசர்பாலு றையுலகுதாயுணு முலையம்மையே. (நஎ)

பயனற்றவர்.

கண்ணிருந்துங்கண்ணி லாதவர்களாரெனிற்கல்விகல் லாதபேராம், காலிருந்துமுடவ ராரெனிற்சிவதலங் கருதி மிகியாதபேராம், மண்ணுடன்பொன்னிருந்தன்னமீயாதவ ர்கள் வாயுள்ளபெரியநாயாம், வாயிருந்தும்முனது திருநா மமொருதினம் வழுத்தவறியாரருமையாம், பண்ணிருந்தும் பாடவல்லமையிருந்து முணைப்பாடாதவன்புலையனும், பரி வாகவிருகை யிருந்துங்குவித்துணைப் பணியாதவருமூடரா ம், தண்மையுளவிம்மனிதர்புவியிற்பிறப்பதிலுற்றுனென்ன பலனுசொலும், தருமேவுமருணகிரியீசர்பாலுறையுலகு தாயுணுமுலை யம்மையே. (நஅ)

வைசியரியல்பு.

சீரிலாமடையரோ டிணங்கிலார்வியாபாரஞ்சிந்தையா
ய்வந்தபேர்க்குச், சித்தமொப்பிப்பத்ரமெழுதிப்பசும்பொ
னேச் செயலாகவே யுதவுவார், ஆர்வமுடனே கணக்காசார
மதனிலேயரைவீசமுந்திரியெலாம், ஆராய்ந்துபார்த்தெழு
தி நிலுவைதண்டிப்பொன்னே யருமையாய்ச் சேர்ப்பர்பின்
னும், கூர்மையொடுவேளையா வேளையுமதிற் கரங்கொண்ட
மட்டும்பொருளினைக், கொள்ளுபதினுயிரமிலக்கமாயினுமெ
னங் கோணுதுசெலவழிப்பார், தாரணிதனிற்பிரபலஞ்சிற
ந்திடுவைசியர்தங்கடனியற்கையிதுவாம், தருமேவுமருணை
கிரி யீசர்பாலுறையுலகு தாயுணமுலையம்மையே. (சுக)

உலகவழக்கம்.

வரிசைப்பிடாரிக்குப் பொங்கல்வையாமலே மழைபெ
ய்யவில்லையென்பார், வந்தகொடுநோயறிந்தவுழுத மீயாமலி
ம் மனிதனுயிறந்ததென்பார், சரிவரச் செய்தொழின்முய
ற்சியில்லாமலே தான்குடி யிளைத்ததென்பார், தன்றிறமை
யாலேமுன்சொன்னபடிதப்பாதுசபதமுமுடித்தனென்பா
ர்,ஒருவனவனெதிராளி போனபின்பதிகனகமோகம்வந்து
ற்றதென்பார், உபாத்தியார் திறமில்லையாகையாலே மகற்
குயர்கல்வியில்லையென்பார், சரியிவையெலாமீசர் செய்கை
யென்றறியாமற் றரணியின்மயங்குவார்கள், தருமேவுமரு
மன்னும்யமு னையிற்சங்கமாய் மருவிச்சிறு விதியாமக
ளென்னப்பொலி கென்றேவிய தெவர்க்கும்மரு டரவல்லவோ
அன்னத்தவன் பணிபையனே யருணாசலா வருணாசலா. (நிங)

விண்ணாளுமிந் திரனக்கினி விறலந்தக னிருதர்க்கிறை
தண்ணார்வரு ணன்வாயுவே தனதன்னுட னீசானனும்
உண்ணாடிழை கியதீர்த்தமின் றென்றேயெம திடர்தீர்த்திட
அண்ணாமலை யெனநீடிய வருணாசலா வருணாசலா. (நிச)

பூசிக்கநன் மலருண்டிதீம் புனலுண்டுநன் னெறிதேர்குவான்
வாசிக்கவா கமமுண்டுநின் மலர்நோக்கமு முண்டாகுமே
னேசித்தெளி யேனுய்குவே னீரேழுகெண் மணிபூண்டுளத்
தாசற்றவர் தொழுமையனே யருணாசலா வருணாசலா. (நிஙி)

திருவாசக மொன்றுண்டுநற் றேவாரமு முண்டாங்கவை
கருவாய்வழி வாராநெறி காட்டும்மெனச் சான்றோர்சொலத்
தெளிளாதுவீ ணேயையவோ தெருநாயினுங் கடையாயினேன்
அருமாதவர் துதியோய்விலா வருணாசலா வருணாசலா. (நிசு)

பல்லார்விடப் பணியாமுனே பரிந்தேதொழ வருளீந்ததும்
பொல்லாவிட முண்டண்டரைப் புரந்தாள்வது மோர்ந்தும்முனைக்

கல்லார்களைச் சேராதெறி கடையேற்ருள் செயவேண்டுமால்
அல்லார்சுட லையிலாடிய வருணைசலா வருணைசலா. (நிஎ)

தேவாதிதே வாவென்கிலேன் சிவலோகநா தாவென்கிலேன்
காவாயரனே யென்கிலேன் காபாலிவந்தா னென்கிலேன்
சேவாணதூர் வாயென்கிலேன் சிறியேனத ஞலோவையா
ஆவாவென வருள்செய்கிலே யருணைசலா வருணைசலா. (நிஅ)

கன்னுகுபே ராவிந்திரா காமாமுக சோமாபுவி
மன்னுவென வேபொய்யரை வாழ்த்திக்கவி சொல்லாமனம்
குன்னுரருள் பெறுமன்பர்தா ளுளம்வைத்துவாழ்த் தறகல்குவாய்
அந்நாவலூ ராளிக்கரு ளருணைசலா வருணைசலா. (நிக)

பச்சென்னிற மொருபாலுரப் பைம்பொன்னிற மொருபாலுற
வெச்சென்றதீ நிறமேவிமேல் வெண்ணீறுபூத் திடநின்றநீ
நச்சுண்டிருண் டிடுகண்டமு ணவுற்றவம் பூதங்களுக்
கச்சென்னநிற் பதுகாட்டவோ வருணைசலா வருணைசலா. (சுo)

பன்னுகணை துயின்மாசனே பரிவோடுகொத் தருள்செய்குவ
னென்னுச்சில நெடித்தோதுவ தீதுண்மையே யிமையோர்வரை
தன்னுற்கடைத் திடவந்தநஞ் சங்கண்டல ரஞ்சித்தொழும்
அந்நாள்புர வாவண்ணமென் னருணைசலா வருணைசலா. (சுக)

காமத்தொடு கொலைசூதுபொய் களவுக்கிடந் தந்தென்மனம்
பூமத்தமென் பணிகின்றநீ பொருந்தற்கிடந் தாராமையால்
ஈமத்தெரி நரகம்மெனக் கிடமாகுமென் றெணிகின்னரு
ளாமெய்த்துணை யேநம்பினே னருணைசலா வருணைசலா. (சுஉ)

உனக்குள்ளடி யேன்மேலிய முனையோர்கிலா மையினிவ்வுடல்
எனக்கென்னவீர் தனைமுன்னிரு ளென்னுடுசேர்ந்தந்தோவெனை
நினைக்குப்புறம் பாய்நிற்கவே நீபெற்றதா லென்செய்குவேன்
அனக்கன்னிநேர் தருமாதர்சூ ழருணைசலா வருணைசலா. (சுஎ)

பாசக்கிடம் பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு
மாசற்றமா மறைபேசுமம் மாயைப்பசு வாமென்னுளே
தேசிற்பொலி பதியாருநீ திகழ்கின்றதற் புதமல்லவோ
ஆசைக்குமே னிமிர்சோதியே யருணைசலா வருணைசலா. (சுச)

யான்செய்தனர் பிறர்செய்தன ரெனதியானெனு மஞ்ஞானமே
யூன்செய்பிற வியைநல்குமெண் ணுணர்ந்தேளின தருளாலினி
வான்செய்பத விகள்யாவினு மயங்காநெறி தந்தாளுவாய்
ஆன்செய்நெடுங் கொடியாளனே யருணைசலா வருணைசலா. (சுடு)

வெய்யோனுத யஞ்செய்திடில் ருரவும்மிரு ளொழிவாதல்போற்
பொய்யான தில் குருவந்திடப் பொய்ப்போதநீங் கிடுமென்னவே
மெய்யானநூ லுரைசெய்யவும் வீணேதிரிந் தழல்வார்சிலர்
ஐயாவவ ருய்வார்கொலோ வருணைசலா வருணைசலா. (சுக)

பரையுண்னிரு விழிமூடுகைப் பதுமத்தனி விகற்பத்திலும்
வருநங்கைபத் தினின்மூன்றயன் மாலிந்திர னுக்கீந்துமற்
றொருநான்குமூன்றையும்வேணியி லொளித்துப்புவனங்காத்தநின்
அருமைச்செய லறிவாரெவ ரருணைசலா வருணைசலா. (சுஎ)

வடவார்மய ரூஞ்சூர்புறம் வருகின்றபல் பிணியோர்புறந்
திடமாம்வறு மையுமோர்புறந் தீராததீப் பகியோர்புறங்
கடனுன்கும்வன் பேயோர்புறங் கழிவானமாங் குரங்கோர்புறம்
அடலான்மெவிந் தனையண்டினே னருணைசலா வருணைசலா. (சுஅ)

தாய்மார்களுஞ் சலித்தார்வரு சமனுருமோ சலித்தார்மலம்
வாய்வேதனுஞ் சலித்தானழன் மலிகும்பிரிஞ் சலித்திட்டதாற்
சேய்நானினிச் செயும்வண்ணமென் செப்பாய்பல கலேவேதமும்
ஆய்மேலவர் தொழுமையனே யருணைசலா வருணைசலா. (சுக)

மனையாண்மனம் வெறுப்பாகவு மாதாமனம் வெறுப்பாகவுங்
கனிவானபெண் டுகள்பிள்ளைகள் கசந்தேமனம் வெறுப்பாகவுஞ்

சனியாமிரு மலுமீளையுஞ் சார்ந்தேழையே னலியாவ ணை
அனையாமென வந்தாளுவா யருணைசலா வருணைசலா. (எ0)

காட்டுக்குளேதவஞ்செய்குவார் கன லுக்குள்ளேதவஞ்செய்குவார்
நாட்டுக்குளே யறஞ்செய்குவார் நதியாயினும் போய்மூள்குவார்
பாட்டுக்குநால் வர்களெய்திய பரிசிற்பய னடைவாக்களோ
ஆட்டிற்பொலி தீக்கண்ணனே யருணைசலா வருணைசலா. (எக)

பறவைக்கர சாணைந்தவெம் பணிவந்துபோற் றப்பூண்டீ
மறமுற்றுமா தவரேவிட வருபாம்பணிந் திடவில்லையோ [னேமுன்
றிறமுற்றுவண் பிலனென்றெனைச் செயிர்த்தாட்கொளாவகையென்
அறவர்க்கரு டருமையனே யருணைசலா வருணைசலா. (எஉ)

எரிகின்றதீப் போற்சீறியே யியமன்வரு மேற்பேதையேன்
பரிகின்றமார்க் கண்டேயர்போற் பணிக்துன்பதம் போற்றுந்திறந்
தெரிகின்றிலே னதனுலினே சிறியேனையாண் டருள்வெம்பலி
யரிகின்றசென் னியிலேற்றிடு மருணைசலா வருணைசலா. (எங)

தம்மாலறி வனயாவையுக் தாமல்லவென் பதுமைந்தனே
சும்மாவிருந் திடுமோவெனச் சொல்லித்தெரி விப்பான்மலர்க்
கைம்மான்முத லியயாவையுங் கரந்தோர்குரு வாய்வந்தனை
அம்மாவன தருளென்னையோ வருணைசலா வருணைசலா. (எச)

காலாழ்களர் படுமாயின்வெங் கரிதன்னையு நரிகொல்வது
போலாசையாம் படுசேற்றினிற் புலையேன்விழுந் தழல்கின்றதாற்
பாலாமிரு வினைவெல்லுநின் பதமெய்ஞனந் தொழுவேனையா
ஆலாலமுண் டருணைதனே யருணைசலா வருணைசலா. (எடி)

பொருளீட்டவு மதனுனவப் பொத்தற்சடந் தனையோம்பவு
மருளீட்டுமோ தர்களாசையின் மயங்கித்திரி தரவுங்கொலோ
தெருளீட்டுமித் தனுவீந்தனை தேவாதிதே வாவென்னையே
அருளீட்டுமென் பர்கள்போற்றிய வருணைசலா வருணைசலா. (எசு)

பொய்யானதே குடிகொண்டது புழுவானதோ வெளிகின்றது
சையோகமே விழைகின்றது சவமாகிமேல் விழுகின்றது
மெய்யானதிங் கிதைநாயினேன் வீணேசுமந் தழல்கின்றிலேன்
ஐயாவுன தருள்வேண்டினே னருணாசலா வருணாசலா. (எஎ)

இந்நாள்வரை யிலுமுண்டசோ றெல்லாமன விடவெண்ணிலோ
பொன்னுமலை தானேருமோ புலையோனின முனலேபெரி
தென்னுவழல் வேனுதலா லியமன்வர வேயுன்னுவான்
அந்நாளின்மு னீவந்தரு ளருணாசலா வருணாசலா. (எஅ)

பறக்குஞ்சிறை மறையன்னமும் படிகீண்டகோட் டொருபன்றியுங்
கறக்கின்றவான் பாலாட்டியே கனிவாயருச் சித்தீன்றவன்
இறக்கும்படி செயுமன்பர்தா மெய்தும்பய னுணராற்கொலோ
அறக்குஞ்சியஞ் சடையானனே யருணாசலா வருணாசலா. (எசு)

தாய்தந்தைநீ குருதெய்வநீ தமியேனுயி ரதுநீயெனு
வாய்தந்தன மொழிவேனலான் மனமாண்டகின் னடியாரொடுக்
தோய்தந்துவல் வினைநீங்கவுந் துலையாத்தனன் னிலைகூடவும்
ஆய்தந்திலே னுய்வேன்சொலோ வருணாசலா வருணாசலா. (அ0)

மார்த்தாண்டனின் மலையுச்சிமேன் மறியாதுநா டொறுமேகுதல்
பார்த்தாங்கவன் வெருவும்படி பணித்தோர்புறஞ் செலவைத்தநீ
வேர்த்தாவென வுனேமேவுமென் வினையோர்புறஞ்செலவைத்திலை
ஆர்த்தார்முடிக் கணியண்ணலே வருணாசலா யருணாசலா. (அக)

தென்னித்தெளி தருமன்பர்பாற் சேர்ந்தேயரு ளீவாய்படர்
மூள்வெக்குவே விகள்போதென் முறையல்லவென் பதுபோலெனை
யெள்ளித்திரு வுருளீந்திலை யெனினேழையே னென்செய்குவேன்
அள்ளிப்புனல் முடிமேற்கொளு மருணாசலா வருணாசலா. (அஉ)

தேன்பட்டசொல் லியராசையிற் றிகழாலெவாய்க் கரும்பென்னவே
நான்பட்டுநொந் தனன்மேலுமோ நமனுர்வரி லென்செய்குவேன்

காண்பட்டபூங் குழல்பாகனின் கழல்சூடியாட் கொளவேண்டுமால்
ஆண்பட்டநீள் கொடியண்ணலே யருணாசலா வருணாசலா. (அக)

பதியாகுநின் பதமாமலர் பணியாதபே யருநின்புகழ்
துதியாதமூ டருமாலயஞ் சூழ்வந்திடாப் புலபாளரும்
கதியாதகா ணுவரையையோ காலன்கதை யடிபட்டுணைந்
ததியாகுலமடைவாரலா லருணாசலா வருணாசலா. (அச)

மாயோனையுந் தொழுகின்றிலான் மலரோனையுந் தொழுகின்றில
ஞயேனினே யேபோற்றுவே னல்காயரு ளெனிலாங்கவர்
ஏயேயென நகைசெய்வரே யெனநாணிநாண் மெலிகின்றனன்
ஆயேயென வடியார்க்கழ ளருணாசலா வருணாசலா. (அடி)

பொருப்புச்சிலே யாயுண்னருட் போதந்தலைப் படுமென்பர்க
ணெருப்புக்கும்வா யுலினுக்குநீ ணீருக்குமஞ் சார்மேலுமோ
மருப்புக்கடா மறலிக்குமே மனமாய்வுரு ரெனவோர்ந்துநின்
அருட்புக்குயான் விழைகின்றன னருணாசலா வருணாசலா (அசு)

வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன் னடியார்பதம்
நேசிப்பதுன் னடியார்பத நிகேகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பத மருணாசலா வருணாசலா (அஎ)

பொன்னுக்குளே யொளியென்னவும் பூவுக்குளே மணமென்னவும்
என்னுக்குளே நீமவுவ தெளியேனுணர் தருமாறுசெய்
துன்னுக்குளேயான்மேவவு மொருநீயருள் செயவேண்டுமால்
அன்னக்கொடி யோன்போற்றிடு மருணாசலா வருணாசலா. (அஅ)

வேலிக்குமுள்ளிடவெண்ணிலார்வெரிகொண்பேயர்களாகியோர்
காலுக்குமுள் ளிடல்போலுனைக் கடையேன்மறந் திதுகாறுமே
மாலுற்றமெய் யதுபோற்றியுன் மலர்த்தாடொழு மாரூர்ந்திலன்
ஆலிக்குமுள் ளத்தோர்க்கரு ளருணாசலா வருணாசலா. (அக)

கட்டித்தொழா தவனென்ற ருணல்காரஞ் தோர்வ,ரெனிற் !
ரூட்டுக்கலா லெறிந்தோர்க்குமுன் ரூலேபாதவின் பந்தந்தது
கட்டுக்கதை யென்றேசிலர் கழறிக்கொள்வா ரேயம்மொழி
யட்டிச்சூடு மென்காதினை யருணைச்லா வருணைசலா. (கூO)

கையாற்பெறு பயனின்மலர்க் கழலர்ச்சனை யதுசெய்தலே
மெய்யாற்பெறு பயன்மெய்யரீ மேவாலய மதுசூழ்தலே
பொய்யானதில் வாயாற்பயன் போற்றித்துதி செயலிங்கிவை
ஐயாவெளி யேற்கெய்துமோ வருணைசலா வருணைசலா. (கூக)

மலமூன்றுடை யாருக்கருள் வடிவங்கொடு வந்தாங்கவர்
சலமூன்றிரு வினையொப்பிலே தற்போதவா தனைநீங்கியே
நலமூன்றுற வருள்செய்யுநீ நாயேற்கருள் செய்வாய்கொலோ
அலமூன்றுதோ ளவனேடிய வருணைசலா வருணைசலா. (கூஉ)

பாசாடவிக் குள்ளேம்புலப் பகைவேடருக் குறவாதலாற்
காசாகையான் கொண்டற்பசதங் கடைவாயிரூ றுங்காத்திது
பூசாபல ரெனவென்றுளே புலம்பித்திரிந் தழல்கின்றிலேன்
ஆசாரமா ரூதார்க்கரு ளருணைசலா வருணைசலா. (கூஉ)

புலையானதோர் தொழில்செய்யினும் பொய்யானதோர்மொழிபேசி
கொலையாகியசெயல்செய்பினுங்கொடிதாங்களவதுசெய்யினு (னுங்
மலையாதுகின் னருள்சேர்வரேல் வறியேனவ ரடிசேர்வனுல்
அலையாறுசூடிய வண்ணலே யருணைசலா வருணைசலா. (கூச)

படைப்பாணுநீ யுலகியாவையும் பரிவாயளித் திடுவாணுநீ
துடைப்பாணுநீ பொய்பொய்யெனத் தோற்ரூவகை மறைப்பாணுநீ
கடைப்பாலனுக் கிரகஞ்செயுங் கண்ணுளனு நீயாயயன்
அடைப்பாற்றுயில் வோனுயதென் னருணைசலா வருணைசலா. (கூரி)

பாடார்கவி பரியாருனைப் பனிமாமலர்க் கொடுபூசியார்
தேடாரடி யார்தம்மையுந் தினமுண்டதே யுண்டையையோ

மாடாமெனத் திரிவாரவர் மனம்வெந்துகும் பியில்வீழ்வரே
ஆடாதபே யுடலுடிய வருணைசலா வருணைசலா. (கக)
போகாதுவா யுவையுள்ளுளே பூரித்துநே ரிற்பாக்கியே
சாகாமனத் தவராகின் சார்புற்றிட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள் செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமா லருணைசலா வருணைசலா. (கஎ)
மாலாலொரு கற்பத்தனின் மழைமேகமாய் வரவாங்கதன்
மேலாயினை பின்னும்மொரு விடையாய்வர வேயூர்ந்தனை
பாலாமொழி மாதாய்வரப் பரிவாலிடப் பாலீய்ந்தனை
ஆலாலமுண் ணும்பித்தனீ யருணைசலா வருணைசலா. (கஅ)
பாய்வானதி நீர்பாய்ச்சினும் படரெட்டடியின் கனிசைப்பரு
காய்வானமி ராதாற்பல நான்கொண்டிருக் கிக்கட்டினு
மாய்வாவிவன் மனநேருரு வகையாங்கவை போலாதலோர்க்
தாய்வார்க்கரு ளுனையண்டினே னருணைசலா வருணைசலா. (கஙு)
கொம்பாரிடை வண்டார்விழிக் கொங்கார்முலைச் சிங்காரிக
டம்பான்மனஞ் சென்றேயழி சண்டாளனே யென்றுள்ளையோ
செம்பாகினேர் மொழிபங்கனே சிந்தித்தவர்க் குயர்வீடருள்
அம்பார்சடை கம்பாவொளி ரருணைசலா வருணைசலா. (க00)
படியாருமன் னவர்வாழவும் படிவோடுமன் னுயிர்வாழவும்
முடியாமறை தான்வாழவும் முதலானசை வம்வாழவுங்
கடியாரெனித் தமிழ்வாழவுங் கவிவாணர்யா வரும்வாழவும்
அடியார்கள்வா ழவரன்கரு ளருணைசலா வருணைசலா. (க0க)

அருணைசலசதகம்

மூற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணசல அக்ஷரமாலை.

விநாயக வணக்கம்.

வெண்பா.

மூன்றறிவுந்தோன்றறிவாமுப்பொருட்கு முற்பொருளாஞ்
சான்றறிவாம் பூரண சதாசிவத்திற்—றோன்றும்
அருணசலவக் கரமாலை யோதக்
கருணை சுரசுமுகன் காப்பு.

நூல்.

இணைக்குறட்டாழிசை.

நிட்களாங்கம்.

லாலிசந்தம்.

அக்கரமணித்தியக்கும் ஆதிக்க
மிக்கவகரத்திறுதி
சொக்கசிவசோதியறிவா யெங்குநிறை
செக்கரொளியருணசலா. (க)

ஆரணநல்லாகமகலை மீதினமர்
பூரணமெய்ஞ்ஞானவொளியே
பாரணவுமன்பருளமாம் பத்மவணை
சீரணவுமருணசலா. (உ)

இச்சையெழின்மேனியாகி யெவ்வெவரி
னிச்சையறவெய்துசோதி
பச்சையொருபாதிமேய பாதிமலர்
செச்சையொளிரருணசலா. (ங)

சறுநடுவாதியில்லா வீடில்சுகப்
பேறுதவுபோர்வில்சோதி
கூறிலொருகூறதாகுங் கூர்த்தமதி
நீறுபுனையருணைசலா. (ச)

உண்மையறிவானந்தமா மோவிலருள்
பெண்மையகலாதமேனி
அண்மியெவணுள்ளுமேலு மாடல்புரி
திண்மையெறியருணைசலா. (ஞ)

ஊழியுலவாதசோதி யோர்மூன்று
பாழனிலவாதசோதி
ஆழியருளானசோதி யற்புதநல்
வாழிமிருமருணைசலா. (ஞ)

எட்டுகுணமெட்டுவடிவா யெட்டெட்டு
வொட்டுகலேயெட்டுமுடிவாய்
பட்டுமவையெட்டவரிதாய்ப் பாசமறு
சிட்டர்புகழருணைசலா. (எ)

ஏகவொளியாகிநின்ற யெண்ணிலக
னேகவெளியாவெதிர்ந்தும்
ஏகவெளியென்றுகண்டா லாங்குசிவ
யோகவெளியருணைசலா. (அ)

ஐந்துகலையைந்துபரையா யைந்துபொரு
ளைந்துகிறமைந்துதொழிலா
யைந்துபொறியைம்புலனு யாங்கரிய
விந்தைபெறுமருணைசலா. (கூ)

ஒன்றேடிரண்டதென்ன தோங்குமொளி
யன்றேடதாமதென்ன

நின்றோர்களுள்ள மலர்மே னித்தநட
நின்றுமருணைசலா. (கo)

ஓசையொளியூறுகந்த மாதிசுவை
யாசையகலாதகன்ற
பூசைபுரிவார்கடம்மைத் தன்னுளுற
வாசைபுரியருணைசலா. (கக)

ஓளவியமவித்தவருளோ டார்வமிகு
செவ்வியமெய்ஞ் ஞானவொளியே
எவ்வியருளுமென்றுமணுகா வேகரவி
திவ்வியநல்லருணைசலா. (கஉ)

அஃகேனமிருமைமருவித் தன்னிலையை
அஃகாதுகாட்டுமரபே
எஃகார்மெய்ய நிவையொன்றி யெந்நாளும்
அஃகாதெழுருணைசலா. (கங)

சகளாங்கம்.

கட்டுமறையாகமாதி யாவுமள
விட்டுமுணராதசோதி
மட்டுமலர்பொய்கைகாழி பிள்ளைவிரல்
சுட்டினளவருணைசலா. (கச)

ஊப்போலிருந்தினமெலாங் காசற்ற
மெய்ப்போதமருவுதொண்டைச்
செப்பாதுசெய்துகாட்டுந் திருவாமூர்
வைப்போதுமருணைசலா. (கஞ)

சத்தாதிதத்துவந்தோர் முத்தர்களும்
பித்தாகிநிற்பவஞ்சீர்க்
கொத்தாருநாவலூரன்கூர்ந்து
பித்தாவெனருணைசலா. (கசு)

ஞமலியெனத்தனையிகழ்ந்து நின்னைநினை
கமலவயல்வாதவூரன்
மும்மலமறமொய்க்குருந்தின் நீழலமர்
விமலகுருவருணைசலா. (கள)

டம்பமுதலாவசூயா தியெறி
வம்பிலமிழாததாயார்
உம்பரகலாதமைத்தா யும்பர்வளர்
செம்பொளெளியருணைசலா. (கஅ)

இணங்கிளவனத்தனக்கோங் கேந்திய
துணங்கிடையணங்கலர்ந்து
மணங்கமழ்தலின்றிருந்தாற் கண்டுனை
வணங்கலெவனருணைசலா. (கசு)

தங்களைத்தாமதித்து வாங்கிருவர்
பொங்கமர்புரிந்தவந்நா
ளங்கமெரியங்கியாகி யனையரக
மங்கவெழுமருணைசலா. (உ0)

நந்தமதிகொன்றை தும்பைநாறியக
ரந்தைவனிநாகநல்லா
ரந்தமில்குரண்டவாலு மாவலொட
ணிந்தமுடியருணைசலா. (உக)

பற்றிவிரிமலரைங்கணை பைங்கழையி
னெற்றிவிடுமணிமாரன
வெற்றிபெறவெகுளாதெழும் வீரவெரி
நெற்றிவிழியருணைசலா. (உஉ)

மண்ணுபுவிமூன்றிலுழலும் வஞ்சவினை
பொன்னுமுதன்மூன்றுபுரிசை

தன்னையொருவாதொருங்கே சாம்பர்புரி
புன்னகையினருணைசலா. (உங)

யட்சபதியெந்தைதின்பா னீங்காத
பட்சமதிதோழனன்றே
பிட்சைபதியென்னசெவியி லக்குமணி
கட்செவியெனருணைசலா. (உச)

அரவணையனுதிதேவ ராவியது
கரவணையவெய்துமாலம்
வரவணையவாங்கியுண்ட கண்டவெழி
லிரவணையுமருணைசலா. உஞ)

இலவங்கனிகாத்திரங் கேழைசுக
முலவுஞ்சுகம்மதென்றும்
பலவங்கனிசுகமிதென்றும்மருளே
நிலவங்கையருணைசலா. (உசு)

வஞ்சகமிஞ்சிடாது கஞ்சன்முத
லெஞ்சமரஞ்சஞாளும்
துஞ்சுமவரங்கமாலை மார்பினணி
விஞ்சுமொளியருணைசலா. (உஎ)

அழகுதிகழிருடிமாதர் கற்புவளை
கழலவரைதுகில்கள்கண்டப்
பொழுதவரழலதோம்பி யேவுசின
வுழுவையுரியருணைசலா. (உஅ)

இளமைகழியாதசெல்வ மெய்தவொரு
வளமைமுனிபாலனுர்தம்
வுளமையுறவந்தகாலனுயிர்தங்கு
முளரிபதவருணைசலா. (உகூ)

அறவடிவமானவிடைமே லன்பாருள்
பெறவடிவமாகிவருநீ
மறவடிவமானமுயன்மே னடனமிடு
திறவடிவெனருணைசலா. (கூ0)

அனகமணிகனகவெளியே யன்பின்மிகு
பனகமுனியொடுபாற்கடல்
தனகயிகமகிழவுண்டான் முதைதொழு
கனகவடியருணைசலா. (கூக)

சகள நிட்களாங்கம்.

கற்முருமறியாதலங் கல்லாது
பெற்முரு மதிவள்ள லுக்
குற்முபுரிந்துகோலக் காவிலொளிர்
பொற்முளமருணைசலா. (கூஉ)

கான்முதழனீற்றினரையே களஞ்சமுகி
டோன்முதடமோடுதென்றற்
போன்முகுளிர்செய்யவப்ப மூர்த்தியினை
யேன்முகொளுமருணைசலா. (கூங)

கிண்ணமுலைவண்ணவொயிலாள் கீதமதி
பண்ணமுனிதன்னின்மொழியாள்
பெண்ணினலமுண்ணிவெண்ணு மாரூர
ணண்ணவருளருணைசலா. (கூச)

கீடவருவோடநாடிக் கீதமது
போடுகுழவிக்குநேரே
தோமறவாத வூர்ற் காடல்பல
கூடல்விளையருணைசலா. (கூஞ)

குருலிங்கசங்கமங்கட் கன்புறுவர்
திருவங்கம்லிங்கமென்முல்

சருவங்கடந்தநிற்கே திருவொன்று
வுருவெங்கேயருணசலா.

குருஸ்வரூபம்.

கூடனெடுமாறனரை மூடுமம
னீடுமிருள்காடுவாட
நீடுமருணீறதாகி நேரதற
வாடுமொளியருணசலா (கஎ)

கெடிலநதியதிகைபதியாற் கன்புபுரி
துடிகொளிடைதிலதவதியார்
வடிவையடைந்துரைகல்லரசை யாண்டவருள்
பொடிவடிவமருணசலா. (கஅ)

கேட்டவுடனப்பர்நாம மெப்பொருளுங்
தீட்டுமதியப்பூதியார்
வாட்டமறவாகீசரை வந்தொன்றி
யாட்டகுரு வருணசலா. (கக)

கைம்மாறுகருதாச்சிவ ஞானமழை
பெய்ம்மாதுதன்னேயேவி
பொய்ம்மாறப்புகலியரசை யாண்டகுரு
மெய்ம்மார்க்கவருணசலா. (க0)

கொங்கைமுகிழ்ப்பால்சுரப்ப கூர்ஞான
செங்கதிருத்தவன்றே
மங்கையர்க்கரசி பாண்டிமாதேவிக்
கங்கைகொளிருமருணசலா. (கக)

கோளருகவீனவிருளைக் கொள்ளைகொள
மூளுமருண்ஞான வொளியே
நாளுமதிஞானநற்கு ளச்சிறையை
யாளுமதியருணசலா. (கஉ)

கௌவினிமையாழ்மூரியம் பதிகநறை
செவ்விதினருந்துசெவியான்
திவ்யநெறிபாணனுரை யாண்டவிசை
தெய்வகுருவருணைசலா. (சங)

சுந்தரநிறைந்த வொளியே சுந்தரர்சு
தந்திரமிலாதவெளியே
வந்தரநெறிக்கணிற்பா லுலையளி
தந்திரகலருணைசலா. (சச)

சாத்திரமாதாந்தவுண்மை சம்பந்தர்
காத்திரமடைந்துணர்த்தி
சீர்த்திகணநாதர்தம்மையாண்டபர
மார்த்தகுருவருணைசலா. (சரு)

சின்மயானந்தமூலஞ் சீர்நந்தி
நன்மையானங்குணர்த்தி
தன்மையானந்தமூலன் றனையாண்ட
வின்மையானருணைசலா (சசு)

சீறராப்புனையும்வேணி சோமாசி
மாறனுர்க்கருளமேனி
நீற்றுரச்சுந்தரனுவாய் நீடருட்
பெற்றுவருணைசலா. (சஎ)

சுழலைப்பெருச்சுரும்பர் சோலைபெரு
மிழலைக்குறும்பனுரை
மழலைச்சொற்பரவைகேள்வன் வாய்ந்தபத
நிழலைச்செவருணைசலா. (சஅ)

சிவலிங்கஸ்வரூபம்.

சூக்கமுணர்தில்லைவாழ் மந்தணர்கள்
பூக்கண்முதல்கொண்டுநாளும்

ஊக்கமுள பூசைகொண்டாங் காடல்புரி
சூக்கவடி வருணாசலா. (சகக)

செப்போதிளங்கொங்கையே யோர்பாலி
ருப்பாயமேனிதன்னீ
முப்போதுதீண்டாருந் தீண்டுமழல்
வெற்பாகுமருணாசலா. (நிo)

சேமவருளுள்ளசீலக் கண்ணப்பர்
நேமமறிவானினங்தே
சோமரவிசோதிவிழியே சோரிசொரி
காமர்வடி வருணாசலா. (நிக)

சைவமுணர்சண்டேசனர் தாதையடி
கொய்தமதுபாதகமெனு
தெய்வதருளீசனடியார்க் கேயிறைமை
செய்தவருளருணாசலா. (நிஉ)

சொக்கவெளிறூபூசுஞ் சோதிசிவ
அக்கமணிமாலைபூணும்
மிக்கசிவநேசனெஞ்சார் திருநீல
நச்சர்பணியருணாசலா. (நிஙு)

சோராச்சிவானுபூதி தோன்றியுளம்
கோரார்தெரிந்தார்புத்தர்
சோராதெறிந்தகல்லே தூமலரி
னேராக்கொளருணாசலா. (நிச)

கோயில்.

சௌனகாகமுனிவருஞ் சாற்றறிய
மௌனவானிலவாயிலார்
கௌனவானிலூசலார் புரிகோபி
ளிவணவாவருணாசலா. (நிஞ)

தத்தைமொழிபத்மவதியாளீன்றவன
ரத்தவிழியுற்றவளவன்
பத்திவழிகாவலடியிற் பூசைபுரி
சுத்தமுதலருணைசலா. (நிசு)

தாளில்பொருள்கோவையோதித் தமிழ்மன்னர்
மூவர்தருபொருள்கொடன்பின்
ஆவலொடுகாரியடிகள் செய்கோயில்
மேவிவளரருணைசலா. (நிள)

கு ள ம்.

திண்டிறற்றண்டியடிகள் செய்பொய்கை
கண்டழுக்காறுகொண்ட
மிண்டுகெஞ்சமணர்வெருவ தண்டிக்குக்
கண்டருலருணைசலா. (நிஅ)

அ பி டே க ம்.

தீயபுரிகோள்வலிந்து சேணெடிது
காயபகியான்மெலிந்த
தூயசீர்புகழ்த்துணைசெய் அபிடேக
நேயநீரருணைசலா. (நிகூ)

துரியவெளிபோவஞலி யென்றவொரு
பெரியகுலகந்தரை
யெரியிலவணுவித்தங் கேன்றபெருங்
கரியவெளியருணைசலா (கூ0)

பு ட் ப ம்.

தூம்பணிகையென்னவண்டேன் றுளிதுள்ளித்
தேம்பணிசெய்மாலைசெய்து
பாம்பணிகள்பாறவணியா மூருகவடி
தாம்பணிசெயருணைசலா. (கூக)

தூபம்.

தெங்குதிரள்சோலைகடவூர் திகழையர்
மங்கிலியமாறிக்கொணர்
குங்குலியதூபமுரல்பு திருமேனி
யங்கனிமிரருணைசலா. (சஉ)

தீபம்.

தேசுருவமானநிற்கே திருவொற்றி
வாசர்தனவணிகருதிரம்
பேசுதிருவகலிலூற்றித் தீபமிட
வீசுமொளியருணைசலா. (சுருஉ)

தையலோபாகங்கின்னே வாதபுரி
ஐயர்நீருறுதீயெனும்
மெய்யவாசகம்விளக்கு நமிநந்தி
ஐயர்தொண்டருணைசலா. (சுசு)

தொண்டைவாய்க்கெண்டைவிழியா ளோர்பாதி
பிண்டவான்மதியினுனே
தொண்டவாமண்டலானே புற்றீபம்
கொண்டைவானருணைசலா. (சுருந)

நெய்வேத்தியம்.

தோடமதுதற்கொலையெனு மறையாதி
பாடவதுசெய்ததாயர்க்
கீடவணிலாதிலங்கு மின்பவொரு
வீடருளுமருணைசலா. (சுருசு)

தெளவைமகவாதிசுற்றஞ் சிவசொத்தை
வௌவுமபராதநீப்பான்
வௌவியவராவிவாட்கி கோட்புலியென்
செவ்வடிகளருணைசலா. (சுருள)

தோத்திரம்.

நல்லோசைருத்ரபாரா யணமதீன
யல்லோடுபகலுமாரு
தெல்லோருமகிழவோதும் பாசுபதி
நல்லோனையருணைசலா. (சுஅ)

நாடவர்கண்மகிழுமைந்தன் முடிசூடி
பீடுபெறவரசுநல்கி
பாடறலமரரீசெய்தா ரையடிகள்
காடவர்கோனருணைசலா. (சுசு)

நித்தியவநித்தியந்தேர் வதுவுற்ற
சத்தியநற்சேரர்பெருமான்
பத்திபெறுமாலைதமிழுக் கருடந்த
வுத்தமாவருணைசலா. (எ0)

இ ை ச.

நீதானெனுதெவுயிரும போதமயந்
தானுய்த்தனித்துநிற்ப
வானதவேணுதுவாரைந்தெழுத்
தானுயரருணைசலா. (எக)

சிவாக்கினி.

நண்ணியமெய்ஞ்ஞானவிழி யாலேக்கரிய
தண்ணியசிவானலம்வளர்
புண்ணியசிறப்புலியார்பரற் போகமருள்
தண்ணியநலருணைசலா. (எஉ)

நான்முறையறிந்தசில னேர்மும்மை
யான்மதுரையாண்டகோலன்

தேன்மொழியராசையமிழா மூர்த்திபடி
யான்மருவுமருணசலா. (எங)
நெற்றிவிழியுற்றபெருமான் குஞ்சிபத
தத்தைமுடிவைத்துடியாய்
மற்றுலகளித்தபெருமான் கூற்றுவரென்
நற்றவர்கொளருணசலா (எச)
நேர்பெறநீலாவுசோதி நீள்வாரி
யோர்பெறமுதற்படித்த
பேர்பெறுவபொன்மீனிற்கீந் ததிபத்தர்
சீர்பெறுவ ரருணசலா. (எஞ)

வயிராக்கியம்.

நைந்துருகுசிந்தையவனு மேயர்குடி
வந்தவதரித்தநேயன்
நொந்துமனமாழ்கபெண்பாற் றாதுசெல்
லந்தமது வருணசலா. (எசு)
நொச்சியறுகுச்சிபுனைவாபெச்சவிடை
கச்சுமுலைமச்சவிழியாள்
கைச்சிதைசெருத்துணையனுர் தம்மைமிக
மெச்சியருளருணசலா. (எஎ)
நோன்பெனல்கொலாமையன்றேவதுசெய்த
வுன்படையெறிபத்தனுர்
வான்படமராதியோர்கள் வாழ்த்துபதந்
தான்பெறநல்கருணசலா. (எஅ)
பங்கயன்சிரமரிந்தாய் அதுகண்டோ
விங்கொருபெண்மூக்கரிந்தார்
தெங்குகார்திகழுமாரூர்ச் சீர்கழற்
சிங்கர்சாணருணசலா. (எகூ)

சங்கமஸ்வரூபம்.

மாடறமடந்தைபசுமெய்த் தீண்டாது
வீடறவடாத்துமொருவர்
காடறியக்கூடவருநின் வேடவித
ஆடலதெலருணாசலா. (அ0)

பிறர்மனைபுகாமையதனின் மிக்கதொரு
லறமதிலையென்றதாரே
மதமறுகுயற்பகைமனை கைப்பற்று
மறவராருணாசலா. (அக)

பீடைகொடுவாடுமிளையான் குடிமாறன்
வீடுநடுயாமமடையா
நீடுபசியென்றுமுளைநெல் லமுதுண்ட
வாடலதெனருணாசலா. (அஉ)

புன்புலியதென்றுமறியார் புனிதமுறு
நன்புலியபெற்றமறியார்
மன்பொலியும்மெய்ப்பொருளை வந்திட்ட
தென்பொலிவெமருணாசலா. (அங)

பூண்டசிவவேடர்த்தொழாச் சுந்தரனு
மாண்டசிவனும்புரிகெனக்
காண்டல்புரிமிண்டனரை யன்பினெடு
மாண்டதெவனருணாசலா. (அச)

பெண்டினெடுபிள்ளையாதி பிறவுமுள
பண்டமெவையும்பறித்தாய்
துண்டமுறுகோவணவுடைக் கமர்நீதித்
தொண்டரிடமருணாசலா. (அடு)

பேதவிதமறியாதநல் லேனுதி
நாதர்தமையாளவெளிவந்

தேதமுறுமேதிலவர்போ லெதிர்நின்ற
போதமதெனருணைசலா. (அசு)

பையராவையொழுத்தீர் மாவிரத
சைவவேடந்தரித்தீர்
தையலம்பாலறுத்தீர்கஞ்சாற
மெய்யர்பாலருணைசலா. (அள)

பொன்றுத்திருக்குறிப்பே பொருளென்று
நின்றுதாஞ்செய்வண்ணர்க்
கன்றுதாஞ்செயங்கை மலர்பாறை
யின்றேறுமருணைசலா. (அஅ)

போய்த்தலைஇயாடனந்து கைலைமலை
மேய்ப்பரமேசநிற்சண்
டாய்புகழ்பாடுமம்மைக் கொளிமங்கு
பேய்வடிவே னருணைசலா. (அசு)

பௌவமலியுலகினுள்ளது ஆடல்வினை
திவ்யநகரங்கடோறும்
எவ்வமறவெய்துமூர்க்கர் சூதாட
லொவ்வுமது வருணைசலா. (கூ0)

மனமொத்ததந்தைதாயா கறிசெய்து
பினமற்றமாவையூட்ட
அனமொத்தவமுதுசெய்ய வாவுற்ற
தெனமேத்த வருணைசலா. (கூக)

மாற்றலர்தலைக்குவைக்கு ளொன்றுசடை
தோற்றெருதலைக்கணுற்று
போற்றெரிபுகுந்துநிற்சேர் புகழ்சோழ
ராற்றலென வருணைசலா. (கூஉ)

மித்தையுலகத்தைமதியா மிளிர்சைவ
மூத்தனரசிங்கமுனிமன்
சுத்தரிகழ்பொய்த்தவர்க்கே யிருபங்க
னித்தலெவனருணைசலா. (கூஙு)

மீனவிழிபங்கனடியா ரடிபூசை
மானமறவாற்றமனிவி
யீனமுறுகைதறித்தார் கலிக்கம்பர்
ஞானமதெனருணைசலா. (கூச)

மூத்தியருளீசனடியார் தம்மையிகழ்
புத்தியுறுசேர்துனிகா
கத்திகொடரிவரிஞ்சை நகர்வாழுஞ்
சத்தியடியருணைசலா. (கூஞ)

மூட்டமர்முனைகடந்து முனையற்று
வாட்டமுறவந்தவரசர்
வாட்டமறவாங்கிபகைதீர் முனையடுவர்
நீட்டுபுகழருணைசலா. (கூசு)

மெச்சுபண்டாரமிவரே யாயென்று
வைச்சநெற்கவருவார்க்கே
மிக்கபொன்னீய்ந்தீரி டங்கழியர்
னெச்சமன்னருணைசலா. (கூள)

மேதினியிலாடைபலநெய் தாதரவி
னீதல்புரிநேசவடிகள்
பாதமலர்பரவுமவரை மெய்ஞ்ஞான
போதமுறுமருணைசலா. (கூஅ)

மைத்தமணிகண்டனடியே மறவாது
பத்தராய்ப்பணிவருடனும்

நித்தமன்பொடுபாடுவா ரொடுநின்று
நிர்த்தமிடுமருணாசலா. (கூக)

மொழிமனமிறந்தவொளிபாற் சித்தத்தை
யொழிவறவமர்த்திநின்றூர்
அழிவிறிருவாரூர்ப்பிறந் தாரோடு
மொழிவறநிலருணாசலா. (க00)

மோகவிருளேகவெளிகால் வெண்ணீறு
ஆகமுழுதாகவணிவார்
ஏகசிவமேபாகமுறுவா ரப்பாற்சி
வோகமெமதருணாசலா. (க0க)

மௌனமகடணமருவுவா ரிசைஞானி
தவமகடணமருவுவார்
நவசிவசிவாதுபவராஞ் சடையடிகள்
சிவமுறுவரருணாசலா. (க0உ)

வந்துணமனத்தில்வைத்தா ளாலால
சுந்தரணவயற்றிலுற்றுள்
சந்தரணமுகத்திலொத்தா ளிசைஞானி
செந்தளிர்மெய்யருணாசலா. (க0ங)

வாக்குலகெலாமென்றுசீ ரம்பலவர்
தூக்கியருளப்பெரியசீர்
தேக்கியபுராணமறைவார் செங்குன்றை
பாக்கியமெமருணாசலா. (க0ச)

விண்டவர்கள்கண்டதிலையாம்விளிர்ஞானங்
கண்டவர்கள்விண்டதிலையாம்
அண்டவெளியுள்ளுநிலையாம் பாதமலர்
புண்டரிகமருணாசலா. (க0ஞ)

வீடுவிடவீடுவெருமென் றருமறைகள்
பாடமுகமதுபலகொடு
நாடவொருதரநினைத்தா ஞசமில
வீடருள்வையருணசலா. (கஅசு)

உற்றதையுரைக்கினுடனே யுடனின்றும்
அற்றதுறுமென்றவுரைநேர்
பற்றறுசுருபசுகராய் வந்தென்னி
னுற்றதருளருணசலா. (கஉஎ)

ஊர்பிறவிதெவ்வமொழிய வோமாதி
தேர்புரவிகவசமருள்வான்
நேர்பரவணமலைத்தே வெழின்மேனி
யார்பெறுவரருணசலா. (கஅஅ)

வெண்ணெயம்பதியுதித்தார் மெய்கண்ட
கண்ணெயெங்குந்தரித்தார்
மண்ணெயுமோசையும்போ லத்துவித
வண்ணமென்றருணசலா. (கஅசு)

வேணுபுராஞானவள்ளல் வேறுபுரி
ஆணவமறுதவ்வையும்
பேணிருவாணமருளுங் காருண்ய
மாணுருவரருணசலா. (கஉஅ)

வையமொடுவானமுதலா மற்றுளவுந்
தெய்வமெனல் சைவநெறியென்
றையமறவோதிப்புகலூர்ச் சிவலிங்க
மெய்யுறவரருணசலா. (கஉஉ)

ஓண்டலைக்கூருமரவ மொளிர்திங்கள்
வெண்டலை இயாலையணிவோய

அண்டரேற்றரூரனே யானமிசை
கொண்டருணை யருணைசலா. (ககஉ)

ஓங்காரவுட்பொருள் வைத்தேதறிப்
பாங்காகின்னே டொன்றினர்
நீங்காதநெறிவாசகர் நின்னருளி
னங்காணுமருணைசலா. (ககங)

ஔதார்யவருளும்வாழி யானந்த
ஔதார்யவடியர்வாழி
ஔதார்யவருணைவாழி சந்ததமும்
ஔதார்யவருணைசலா. (ககச)

அருணைசல அக்ஷரமாலை
முற்றிற்று.

சிவமயம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

மகாவித்வசிரோமணி

கா. தியாகராஜப்பிள்ளையவர்களியற்றிய

அண்ணுமலையார் வண்ணம்.

எழுதரிதென்றல்.

தனத்தான தனனதன தனத்தான தனனதன
தனத்தான தனனதன தந்த தனனா
தனனதன தானதான தனனா.

சிலைக்காம னுடலெரிய விழித்தாடல் புரிபரமர்
செருக்கோல நமனுயிரை யுண்ட சரணர்
மலர்ப்பாவை வருசகல கலைப்பாவை தொழுபசிய
மலைப்பாவை கவுரியொரு பங்கி லுறைவார்
சினத்தாலு மிகவுமெதிர் விழித்தாலு முனிவினெடு
சிரித்தாலு மழல்வடிவு கொண்ட பரனர்—
அரவு குடியேறு நீடுகுழையார்

திருக்கோயிற் றிருவதிகை திருச்சேய்ஞ றிருமக
றிருத்தோணி திருவரதை வஞ்சி பனையூர்
திருச்சேறை தருமபுர மறைக்காடு திருமயிலை
திருக்கோவ றிலாகர மன்பில் கடலூர்
திருக்காறை பொதியமலை சுழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி யிடைமருது தஞ்சை வழுவூர்—
சுழியல் பனைவாயில் கூடலுறைவார்

புலித்தோலி னுடையழகர் பலிக்கேகு நடையழகர்
பொடிப்பூசு நுதலழகர் செங்கை பழுவார்

நெருப்பாறு வரும்வழியின் மயிர்ப்பால மெனுமனதி
நினைப்பார்கள் வினைகளையு மெங்கள் பரனார்
புயத்தோடு நெடியவரை யெடுத்தானை வெகுளியொடு
புடைத்தானை யுரியையணி கொண்ட திறலாக்
குமுதமலர் மாலை சூடுவிடையார்.

புகைப்போல வேழுபடன் முகிற்கூட மிடறிவிழு
பொழிற்கூடு வளர்கமுகு நின்ற நிலையே
குருத்தோடு மிடறெறிய முடத்தாழை விரியவெதிர்
குதித்தோடி வருகயல்க ணின்று வயல்சூழ்
புகழ்ச்சோண கிரியிறைவர் விடைப்பாக ரமரர்விழி
புதைத்தேபி னிருகைதொழு மயங்கி வடிவார்—
தடவரை யெனுவி போலுமயிலார்.

மலைப்பார மெனவளரு தனப்பார மெழுதிடினும்
வளத்தோடு பெறுகுணமி ரண்டும் வருமோ
விருப்பான கரியகுழ லிருட்போல வெழுதிடினு
மிகுத்தேறு வரியளிமூ ரன்று வருமோ
மதர்ப்பான வினைவிழிகள் வடுப்போல வெழுதிடினு
மடப்பார்வை யிருகுழைக டந்து வருமோ—
குழையெழுதி னுசலாடி வருமோ.

மலர்த்தாளை வனசமலர் தனைப்போல வெழுதிடினு
மலர்ப்பாத லனமென நடந்து வருமோ
வுறுப்பான திலகமுதல் விதுப்போல வெழுதிடினு
முவப்பான குறுவியர் வரும்பி வருமோ
வணிக்கோல மிடறுகமு கினைப்போல வெழுதிடினு
மரப்பாவை யுருகுமிசை யின்பம் வருமோ—
விரலெழுதின் வீண பேசவருமோ.

இலைப்பாதி யிழையுமென நுசுப்பாக வெழுதிடினு
மிதைப்போல வொசிவொடுத ளர்ந்துவருமே
வனப்பேறு திகிரியென மணித்தோள்க ளெழுதிடினு
மயிர்க்கால்கள் புளகித மெறிந்து வருமோ
யிதழ்க்கோவை யதணமிகு சிவப்பாக வெழுதிடினு
மிளைப்பான பொழுதமுது விந்து தருமோ—
உதிரெழுதின் மீதுலாவி வருமோ.

எழுத்தோடு முறுவன்முலை நகைக்காக வெழுதிடினு
மெதிர்த்தாடு புலவிநகை யிங்கு வருமோ
மதிப்பான வடலையொரு கொடிப்போல வெழுதிடினு
மயிற்சாய லொரு சிறிது தங்கிவருமோ
எடுத்தாடு படமெனவல் குலைப்பேணி யெழுதிடினும்
இதத்தோடு மமுதருகி கொண்டு வருமோ—
கிழியெழுதி னேதுலாபமு ரையீர். (க)

ஆர்வமொழியுரை.

கருட னுடை மற்ச மாமை கமல மோட மூற்கரங்
காட்டி லோட மூன்றி ராமர் காற டக்கி யோடவே
மருளிவந்த சிங்க மோட வாமன் வெள்ளை பாறவே
வஞ்ச மான கண்ண னுடை மார னீறச் சேனனு
மிருளி னுடை முண்டகந்த னேங்கி யோட வென்றவர்க்
கீறி லாது சீவன் வைத்த வேந்தல் யாவன் வேதமே
யருளு மந்த முதல்வன்யாவ னருணை கண்டு வாழ்மினே
வார நாதி மூலமென்ப தறிகி லாத மாக்களே.

சிவமயம்.

திருக்குருகூர்

ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவண்ணுமலைப் பதிகங்கள்.

அருணசீர் விருத்தம்.

திருவருட் சகாயம்.

இருட்டிசெய் தொழிலாலே டெ செங்கண்மால் சினமுந்தீர்க்கும்
பொருட்டினு லழலார்மேனிப் பொருப்பென வகண்டமுட்டிக்
கிருட்டினே ருருவங்கொண்டு கீழ்ப்புகுங் கண்ணர்க்கன்பாய்
அருட்டினைத் தீர்த்துள்ளோங்கு மணியணு மலையுளானே. (க)

துலங்குதன் னடியருள்ளந் துரிசரச் செயும்பல் தீர்த்தம்
இலங்கிடு மழகுமிக்கோ ரிருக்குநற் குகையுமன்னோர்
நலங்களும் ஞானயோக நாட்டமு நிறைந்துளோங்கும்
அங்கல்செய் தருளுஞ்சோதி யணியணு மலையுளானே. ()

தவமுளோர்க்கருள்வேதண்டச் சம்புநின்னிடத்தில்மேவப்
பலமிலாப் பருவதக்கோன் பக்கல்வந் துதித்தபின்னர்
கவரிசே ரறக்கன்றன்னைக் காலிதித் தடங்கச்செய்தும்
அவனியோர்க் கருள்செய்தோங்குமணியணுமலையுளானே.

திங்கள்செஞ் சடையுமோர்பாற் றிருமுடி துலங்கக் கையிற்
கங்கண மிலங்கக்காலிற் கவின்சிலம் பலம்பவன்பர்
சங்கரா வெனநின்றேத்தத் தாயெனக் கிருபைநல்கி
அங்கமொன் றுனசோதி யணியணு மலையுளானே. (ச)

பச்சிலை பூக்கள் கொய்த பாலக னிருவர்தேகம்
நச்சுவாய்த் தூருவாசர் நல்கிய சாபம்பெற்று
வச்சிராங் கதனல்முன்போல் வானுல கேற்றிவைத்தும்
அச்சுதன் பணியுஞ்சோதி யணியணா மலையுளானே. (நி)

இல்லாமை யென்றுசொல்லா தியாவர்க்கு மின்பநல்கும்
வல்லாள வரசர்க்குற்ற வருத்தமுந் தீர்த்துமுன்னள்
கல்லாலு ளிருந்தமன்பர் கருத்தைவிட் டியாதின்பாலும்
அல்லாதுள் ளோங்குஞ்சோதி யணியணா மலையுளானே. (ஏ)

புளகனென் நசுரன்செய்த புண்ணிய மொன்றுல்மிக்க
குளகண்மா லயனுங்காணக் கூடினன் கயிலைதன்னில்
பளகேர் மேனியாயோர் பாதியும் பச்சையாகி
அளகுநாட் சோதியான வணியணா மலையுளானே. (ஐ)

கரதல மலர்கொண்டுந்தன் கழல்தொழு மரசன்முன்னள்
சுரதநன் மங்கைமேவச் சூழ்வினைப் பயனும் நண்ணப்
பிரதத்தன் முகம்வேறுக்கிப் பின்புநன் னிலையிற்சேர்த்த
அரகர வருணமேவு மணியணா மலையுளானே. (ஒ)

தேன்கமழ் வாழை புன்னை சீனினி சிறப்புற்றோங்கும்
வான்கலி யாதிபுல்வாய் வனங்களெண் டிசையுமார்ப்ப
மான்றட வியுமிக்கோங்கு மலரயன் மனந்திகைப்ப
ஆன்றழ லாகுமேனி யணியணா மலையுளானே. (கூ)

மணங்கமழ் மலர்கொண்டேத்தும் வானவர்க் கரசேயோரென்
குணங்களுக் குரியகோவே கொழுங்கணற் குன்றேமுன்னம்
பிணங்கிய பிரமனோர் பெண்ணும்வந் தடையவந்நாள்
அணங்குதீர்த் தருள்செய்தோங்கு மணியணா மலையுளானே. (கூ)

திருவருட்சகாயம்.

கலிநிலைத்துறை

திருவருட்சகாயம்.

சீதனப்புனலும் மதியுஞ்சென்னி சேர்த்தவாவெண்
போதத்தொளியாகு மண்ணுமலைப் புண்ணியாகண்
னீதத்துடன்வாழ் பதினெண்கணம் நின்றுபோற்றும்
பாதத்தினிலென் றலையும்வரப் பண்ணுவாயே. (க)

தேனார்மொழியாரு முண்ணாமுலைச் செல்வியோர்பால்
ஆனையழல்போலு மண்ணுமலை யய்யனேயான்
ஊனகவுன்ற னடிக்கேவரச் சார்புமில்லேன்
மானகமரைக் கிசைந்தோங்கிய வள்ளலேயோ. (உ)

தண்ணார்மதி போலுமுண்ணாமுலைத் தாயுமோர்பால்
அண்ணாமலை யாவடியேற்கு மருள்செய்கண்டாய்
எண்ணாதடியே னலைந்தேனினி யேனுமிங்ஙன்
பண்ணாலுனைப் பாடிநின்றூடப் பனித்துளாயே. (ங)

தேடுமயன் மாலறியாத் திருப்பதத்திற்
பாடும்படி யாகவென்றன்னுட் பதித்தநின்சீர்
கூடும்படிக்கு மருள்செய்யக் குலவிமன்று
ளாடும்படி யானதயாபர வண்ணலேயோ. (ச)

உண்ணும்பொழு தேயுளத்தோங்கிய வுத்தமயான்
மன்னும்படி யாக்குமண்ணாமலை வாதனைவான்
மின்னும்படி யாம்பிறைவைத்தொரு மெல்லியார்தம்
பொன்னும்பதம் வைத்திடவுஞ்சிரம் பொறுத்தீதையோ. (ஞ)

மானத்துடன் மாலயன்போரில் மயங்குகின்ற
வானத்தவர் விஞ்சையராதி மகிழ்ந்துளோங்க
ஞானக்கன லாகுமண்ணாமலை நாதனேமா
லேனத்துரு வாயெடுத்தேத்த விரங்குவோனே. (ட)

அன்னப்பறவை யுருக்கொண்டவ் வகண்டமுட்டி
உன்னப்பெரு வேதனமுள்ள முடைத்துளோங்கி
என்னப்ப முடியறிந்தேனென் றியம்பவந்நாள்
இன்னப்படச் செய்யுமண்ணுமலைத் தேவனேயோ. (எ)

மாற்றுங்கரணங்க ளெலாங்கடந் தோங்கிமன்றுள்
போற்றும்படி யாயடியேற்கருள் புண்ணியாயான்
சாற்றுந்தமிழ்ப் பாவும்நின்ருளிற் றரித்து ளன்பாய்
ஆற்றும்படி வருகவண்ணுமலை யாதிதீயே. (அ)

வாமந்தனில்வாழு முண்ணுமலை மங்கையோர்பால்
தாமங்கமழு மலர்க்கொன்றைச் சடையுளாநின்
நாமம்புகழ்ந் தேத்துமண்ணுமலை நாதனேமேல்
தூமம்மணு வேணுமிலாதருட் சோதியானே. (கூ)

படியாரித யம்பதியாது பணிந்துளோங்கும்
அடியார்நடு வைத்தவண்ணுமலை யப்பனேவெண்
பொடியாமத ணுலட்டசித்தி பொருத்திடாயேல்
முடியாதினி யேனுநின்றனருள் மொழிந்திடாயே. (கo)

திருவருட்சகாயம்.

எழுசீர் விருத்தம்.

திருவருட்சகாயம்.

உவப்புறுமாதிப்பெரும்பதக்கனியே
யுள்ளம்வாழுமுதமேயென்கோ
தவப்பெருந்தகை யோர்க்கருட்பதமளிக்குஞ்
சாமியேசாமியேயென்கோ

நவப்பெருங்கருணை நல்கிடக்கிடைத்த
ஞானபோதனமுதலென்கோ
தவப்பெருநிலையர்க்கருள் புரிகின்ற
சோணமாசைலநின் றனையே. (க)

நிறைவிலாவமுதக்குழம்பெனுங்கடலே
நிமலவுண்ணிலையனேயென்கோ
குறைவெலாந்தவிர்க்குங்குணமுகிலென்கோ
குளிர்ந்தவெண்டிங்களேயென்கோ
சிறையெலாங்கடத்திக்திருவடிக்காளாய்ச்
செய்திடுஞ்சித்தனேயென்கோ
துறையெலாங்கடந்தோர்க்கருள்புரிகின்ற
சோணமாசைலநின் றனையே. (உ)

அன்றுதொட்டடியேனகம்வளரமுதே
யண்டவாவாண்டவாவென்கோ
மன்றுளின்றேங்கும்வாதனேயென்கோ
மன்னுமாருயிர்க்கரசென்கோ
நன்றருட்டயையிற்நாளினிலெனக்கும்
நல்கியநண்பனேயென்கோ
தொன்றுதொட்டுள்ளோர்க்கருள்புரிகின்ற
சோணமாசைலநின் றனையே. (ங)

கணிகர்கலைமாமதியமதனிற்
கனல்படக்கலந்தசீரென்கோ
இணையிலாதெழுந்தவின்னமுதத்தனி
விலகியசோதியேயென்கோ
பணியெனப்பருத்தேன் செய்பவமெல்லாம்
பரிகரித்திடுமருந்தென்கோ

துணைபெறுமடியார்க்கருள்புரிகின்ற
சோணமாசைலநின்றனையே. (சு)

எடுத்தநற்பதத்துளொழித்திடுகாதத்
தியற்கையிலுறுஞ்சுகமென்கோ
கெடுத்ததத்துவரின்மயக்கினைத்தவிர்க்க
விளம்பிய பானுவேயென்கோ
அடுத்தடுத்தெனக்குளறிவினைவிளக்கு
மருட்பிரகாசமேயென்கோ
தொடுத்தகல்லன்பர்தமிழினுக்கிரங்குஞ்
சோணமாசைலநின்றனையே. (நி)

மோக்கமேவிரும்புமுனிவர்கட்கருள்செய்
மூக்கணமுக்கணவென்கோ
கோக்களுக்கிரங்கிக்குணமதையருளுங்
கொற்றவாகுறைவகற்றென்கோ
ஏக்கமேயுடையயேற்கின்னருள்புரியு
மெந்தையே யெந்தையேயென்கோ
தூக்கமேயகற்றுஞ்சுத்தர்கட்கருளுஞ்
சோணமாசைலநின்றனையே. (சு)

ஓய்வுறுதடியையுண்ணுவோர்க்கெளிதா
மூண்மையேயுண்மையேயென்கோ
தேய்வுறுதன்பர்க்கிரங்கிநன்னிலமேற்
சிற்சுகமருள்பவாவென்கோ
மாய்வுறுரகத்தினுணர்விடைத்ததும்பும்
வடிவமேவடிவமேயென்கோ
தோய்வுறுதெனையுந்தொழுதிடப்பணிந்த
சோணமாசைலநின்றனையே (எ)

பதியெலாங்கடந்தபரம்பரவெளியிற்
பரவியசோதியேயென்கோ
சதியெலாந்தவிர்த்துத்தன்மையேயருளுஞ்
சம்புவேசம்புவேயென்கோ
கதியெலாங்கடந்துங்கருணையிற்கனியுங்
கண்ணியர்க்குறுசுகமென்கோ
துதியெலாம்பெறுமெய்ச்சுத்தர்கட்கருளுஞ்
சோணமாசைலநின்றனையே. (அ)

வாக்குமனத்துமதியினும்வயங்கி
மலப்பிணியகற்றுமன்னென்கோ
நோக்கும்போதுதித்ததுண்ணறிவென்கோ
நூல்வழிபட்டிடாதருளைப்
போக்குறும்போர்க்குட்பொருந்திடாதென்கோ
பூரணவத்துவாயுளத்திற்
றூக்குபொற்பாதந்துலங்கவெற்கருளுஞ்
சோணமாசைலநின்றனையே. (கூ)

அலைவிலாதடியர்க்கரியநற்பதமே
யற்புதக்கூத்தனேயென்கோ
உலைவிலாக்கனியேயொழுகியரசமே
யுலர்ந்திடாச்சோதியேயென்கோ
மலைவிலாரகத்தேதங்கிடைத்திடும்ஞான
மாணிக்கமலையதேயென்கோ
தொலைவிலாதெளியேற்கருண்மிகப்புரியுஞ்
சோணமாசைலநின்றனையே. (கo)

திருவருட்சதகம்

திருவருள் வியப்பு.

எண்சீர் விருத்தம்.

திருவருட்சகாயம்.

வஞ்சமிகவுடையேன் யான்மறந்திடுனுவலிய
வந்தருளியடியர்நடுவாழ்ந்திடவென்றென்றும்
அஞ்சேலென்றெமதகத்திலமர்ந்தபரஞ்சுடரே
அண்டங்களீன்றதையந்தன்னகத்தினிடையடக்கும்
பஞ்சடிசெங்கமலமலர்ப்பார்வதியோடோர்பால்
படிகநிறமாயமர்ந்தபதியேயிங்கடியேன்
நெஞ்சிலுறும்படிமுடித்திங்கெஞ்சனுருவாழ்வி
னிலத்திடையுங்கூடிவருலீலையதுஞ்செய்வாயே. (க)

சாலமிகவுடையான்யான்தவறிடினும்வலியச்
சார்ந்தருளியடியர்நடுத்தவிசினில்வைத்திந்த
ஞாலமதிலஞ்சேலென்றகத்திடையுமமர்ந்த
நாயகனேயகிலமெலாநகத்தினிடையடக்குஞ்
சீலமிகுந்திரிபுரசுந்தரியாளோடோர்பாற்
சேர்ந்தவவிச்சுறியேன்றன்சித்தமதுபோலுன்
கோலமதையும்முலகிலடியென்கட்காட்டிக்
கொலைத்தொழிலிலிவ்வுலகங்கூடாதிங்கருளே. (உ)

கல்லாதேனுளங்குளிரக்கனியாதேனெனினுங்
கருணைசெய்திங்கடியருடன்களிப்புடனேயமர்த்தும்
வல்லாளஞானமணிமன்றினில்வாழரசே
வையங்களீன்றதையுந்தன்வயிற்றினிடையடக்கி
எல்லாமாமருட்டலிவிக்கிணங்குபரம்பொருளே
ஏழைமனக்குறிப்பறிந்திங்கெழுந்தருளைப்புரிந்து
கொல்லாமையுலகிற்குடிகொண்டிங்கோங்கும்
குணமதனிலெந்நாளுங்கூடவருள்புரியே. (ங)

மயக்கமுறும்வஞ்சகர்க்குள்மதிப்பறியாப்பெரியேன்
மட்டிலும்வந்தருணிலையைமனத்திடையுங்காட்டித்

தியங்கமுறேலெனக்கிருபைசெய்தருளுஞ்சிவமே
திருவடித்தூட்கடையிலைலாஞ்செய்தருளுமுதல்வி
யக்கமணிவன்றிடத்துமாநடஞ்செய்விமலர்
விருப்பமெலாமருள்பவ வெண்விருப்பமதின்படியும்
செயற்குரியோயிவ்வுலகோர்தீத்தொழிலாங்கொலையைத்
திருவருளாக்கினையதனற்றீர்த்தருளுவாயே. (சு)
நெடியபகைக்கோர்முதலாநெஞ்சமுநைந்தென்பால்
நிமிடமதற்குள்ளருளினிலையிதெனக்காட்டி
அடிபணியும்பேறெனக்கிங்கன்புடனேகொடுத்த
வரசேயிவ்வண்டபிண்டமனைத்தையுந்தன்னடிக்கீழ்
பொடியதனுலேபடைத்தபூங்குழலாளோடெப்
புவனமுறுமடியர்கள்பாற்புதுமைசெயும்புனிதா
கொடியதொழுலாங்கொலையிக்குவலயத்தோரியற்றுக்
குணமருளியடியன்மனக்குறையகற்றுவாயே. (நி)
தருமபினிலுஞ்சிறியேனேர்பொருளெனவந்தருளிச்
சொலற்கறியாகிலையிதெனச்சொல்லடியார்பாற்
பெரும்புகழாய்வாழவைத்தபெருமாயிவ்வண்டப்
பிழம்பையெலாங்கொண்டமுதற்பெருந்தகையாளுடனே
விரும்மடியார்க்கமுதமிகவருள்வெள்விடையோய்
விண்ணிலுமிம்மண்ணிலும்யான்வேண்டுவரமான
தொருங்குபெறக்கருணைசெய்தெவ்வுயிர்க்கொலையுமாற்றி
உண்மைகெறியிற்படியவுவந்தருளுவாயே. (சூ)
பார்த்தாலுந்தோடமுறும்பவமுடையேனெனையும்
பண்புபெறநன்குணர்த்திப்பழவடியாரோடுஞ்
சேர்த்தியென்னுளகத்தேயமர்ந்தருளும்ஞானத்
தெளிவேயெங்கிலங்களிலுந்தேடவரிதான
சோத்தமுறுஞ்செங்கமலப்பதமுடையாளோற்பாற்
சேர்த்தவிச்சிறியேன்றன்சித்தமதுபோல்

ஆர்த்தருறுமிவ்வுலகிலுயிர்க்கொலையைமாற்றி
அனுதினமும்போற்றிசெய்தேனருள்புரிகுவாயே. (எ)
கற்றதெலாங்கற்பனையாய்க்கண்டிருந்தவெனையுங்
கழலதற்கேதொண்டுசெயக்காட்டியடியார்பால்
அற்புதமாயமர்த்துகின்றவரசேயாருயிர்க்கு
ளடங்காதவருட்டலைவிக்கருகினில்வாழ்பவயான்
பொற்பதுமைபோலிருந்திங்கருட்பெருக்கிற்றிளைக்கப்
புலம்புகின்றேன்றனக்கிரக்கும்புகழேயிவ்வுலகோர்
பற்பலவாமுயிர்க்கொலையும்பதியாதுன்னடிக்கே
பாமாலைசூடுமருட்பயனருளுவாயே. (அ)
புல்லனெனப்பேரெடுத்தேதார்புல்லதனிற்சிறியேன்
புந்திமகிழ்ந்திடவருளாம்புதுமையையுங்காட்டி
வல்லவர்கட்கின்புறவேவைத்தமணவாளன்
மனவாக்கிறையுணராமங்கையர்தம்முடனே
நல்லவர்கட்கின்புறவெந்நாளுமருள்புரியும்
நளினமலர்ப்பாதாவிந்நாலெனுமுலகு
பல்லவருங்கொலைபுரியாப்பயனருளியடிக்கீழ்
பத்திசெயும்படிக்கருளைப்பகரவருவாயே. (கூ)
நான்பிரமமென்றுரைக்குநன்மையிலோர்க்குள்ளே
நடுவாகலிருந்தவென்பாலடியுமிவ்வுலகில்
ஏன்மயங்கேல்மகனேயென்றருணிலையைக்காட்டி
இன்பமுறக்கூட்டிவைக்குமிறையேயிங்கெழில்சேர்
வானிடத்தார்வையகத்தார்வாழ்த்திடுபைங்கிளியாம்.
மலைமகளாரோடொருபால்மருவிடும்புண்ணியனே
ஊன்புசியாமாந்தர்கட்கே வுயர்ந்தபதியளிக்கும்
உடையோயன்னவர்களுக்குமுறுதிபெறப்புரியே. (கo)

திருவண்ணமலைப்பதிகங்கள் முற்றிற்று.

உ

சிவமயம்.

அண்ணுமலை பஞ்சரத்னம்.

சீர்கொண்ட செம்பொற் சிலம்பொலி யலம்பிடும் செ
ஞ்சரண கஞ்சங்களும், சித்ரமிகு புலிவதளி ஞடையும்நீற்
றணிசிறந்திலங் கிடுமேனியும், கார்கொண்ட விடமுண்ட
கண்டமும் மான்மழுக் கருதுகர முகவஸ்தமும், கங்கை
யொடு திங்களுந் தங்குமுயர் வேணியும் கனகருழை தொ
ங்குசெவியும், தேர்கொண்ட அன்பருக்கருள் கருணைவிழி
கள் சிறந்தவதனமுமிலங்கத், தெரிசன மெனக்கனுதினம்
கொடுத்தெண்ணியவை சித்தியாம்படிமுடித்தாள், ஆர்கொ
ண்டபுயல்பரவு சோலையொடு கழனிக ளமைந்துதிரு வோ
ங்குநகராம், அண்ணுமலைக்கதிப உண்ணுமுலைத்தலைவ அண்
ணுமலைத்தேவனே. (க)

அஞ்சமிசை வருமயனு மம்புயக்கண்ணனு மமரர்பல
ரும்பரவிடும், ஐயனேசூலதர கையனே துய்யநீற் றணிவிள
ங்கிடு மெய்யனே, வஞ்சமிகு நெஞ்சர்பாற் சென்றுமிகெ
ஞ்சியே வாடியோடித்திரிந்தே, வாணுளைவீணுக்கி யுள்ளங்
கரைந்திடும் வாழ்க்கையெற் கருளாமலுன், செஞ்சரணகஞ்
சம திறைஞ்சுநய மிஞ்சவருள் தேக்கியே காத்தருளுவாய்,
செப்பரியவேதமுடி வினனட மிடும் பாத தேசிக விநோத
வமலா, அஞ்சமெனுமென்னடைவஞ்சியர்கள்கொஞ்சிவள
ரணிமாட மிகவிலங்கும், அண்ணுமலைக்கதிப உண்ணுமுலை
த்தலைவ அண்ணுமலைத்தேவனே. (உ)

வடிவமிகு மங்கையர்கள் மென்மலர்க் குழலிலும்வள
ர்பிடியை நிகர்குடையிலும், மாயமிகு பொடியணிப் பூச்சி
லுங் கைவீசுவரிசைமிகு உரிமைதனிலும் துடியெனும் இ
டையிலும்வன்னமிகு உடையிலும் துப்புவா யிதழ்மொழி

யிலும், சொல்லரிய அம்பைநேர் விழியிலுஞ் செப்பெனத் தோன்றுமிரு தனமதனிலுல கடியவீ டவரவின் படநிகர் நிதம்பவிலும் செழுமைமிக் கதலிநிகர் துடையிலும் வடிவிலுஞ்சிக்கியே கர்மாங்கடத்தனே வாடிடாமல், அடியனு மைபோற்றுநல் வாழ்வெனக் கருளியே அஞ்சலென் றுதரிப்பாய், அண்ணுமலைக் கதிப உண்ணுமுலைத்தலைவ அண்ணுமலைத் தேவனே. (நட)

சம்பந்த ரப்பர் சுந்தரர் வாதவூரரொடு தண்டமிழ் வல்லபுலவர், தங்கள்துதி யேற்றவர் கருத்தை நிறை வேற்றியே தற்காத்ததுவுமன்றி, உம்பருடனடியவர்கள் போற்றக் கிரங்கியவ ருள்ள மிகுமகிழ் சிறக்க, உற்றவல் லீடர்களைந் தரியசுக பதவியை உதவிமுன் னளவிலையோ, நம்பிந்தசிறி யவன் முறைகேழ்க்க வில்லையோ காதனே வாமமோ இன் நாள்காறு மேயுற்ற துன்பமோ பெரிதுமா நாயகா அன்பு வைத்தே, அம்புவியில் பேரின்ப வாழ்வினையுதவியே அண்ணலே ஆதரிப்பாய், அண்ணுமலைக்கதிப உண்ணு முலைத்தலைவ அண்ணுமலைத் தேவனே. (ச)

அருமை மிகு நின திருச் சரணமெக் காலமு மகலாதுளே யிருத்தி அனபெனும் புனலாட்டி இன்சொலா மலர் சாற்றி அரியதமிழாற் போற்றியும், கருணை சற்றேனுமில் லாமலிவ் வடிமையைக் கலங்கவிடு வதுநீதியோ, கடைய னென் முன்சொற் கிரங்கியே மங்கள சுகானந்தவாழ் வுதவுவாய், தருணமிது வேபரம சுந்தரி மனுளவா சதானந்த சுகுணதீபா, சலனபவ மலரஹித தாரகசொரூபா ஸ்ரீசச்சி தானந்தபரமே, அருணகிர ணஜ்ஜோத்தீ யம்புயப்பாத னே அடியவர்க் கருள்நாதமா, அண்ணு மலைக்கதிப உண்ணுமுலைத் தலைவ அண்ணு மலைத்தேவனே. (நு)

அண்ணுமலை பஞ்சரத்னம் முற்றிற்று

சிவமயம்.

உருத்திர சங்கிதைத் தோத்திரம்.

கருவுரு விணுமுள கவலைகள் களைவா
னருவினை யொடுமத னதுமுத லரிவா
னிருமல னிணையடி நிழலினை யடைவான்
பரிவொடு கரிமுக னடியினை பணிவாம். (க)

கருணைசல னிமையோர்தொழு கயிலாசல னியலாம்
வருணைசல மறைஞானிசஃன் முகன்வாரண வதனத்
தருணைசல னெனுமூவரைச் சமைத்தா னெனவைத்தடுத்தா
னருணைசல னமருந்திருக் கோயிலெம தறிவே. (உ)

பெருந்தாரணி தனில்வந்தினிப் பிறவாம் வினைப் பிணியும்
பொருந்தாதுபுக் கிருந்தேசிவ புரஞ்சிற்புரி புகுவா
மருந்தாருயிர் மலநோய்க்கொளி ரருணைசலன் மயமா
மருந்தாமுலை யடிநாடொறும் பணியாமுடி யணிவாம். (ங)

துங்கமான கயிலைமலையனே
துலங்கு செஞ்சடைச் சூடுமலையனே
மங்கையாளுமை யாண்மண வாளனே
மாலயன்சிரங் கொய்யந்த வாளனே
வெங்கை யானை யுரித்த விடலையே
விரும்பி னர்தமை யாண்டவிடலையே
யெங்கள் பாச மறக்கர மாவையே
யீடழித்துரித் தாய்கர மாவையே. (ச)

மெய்யில் வெண்பொடி பூசும்விரதனே
விண்ணு ளார்மயத் தான விரதனே
கையி லம்பென வாய்த்தவன் கண்ணனே
கசியு மன்ப ரகமலர்க் கண்ணனே

பைதல் வெண்பிறை பாம்பணி வேணியே
பத்தர் மேற்படர் தற்குள வேணியே
மைய லென்றனை மாற்றிய வாக்கியே
மயிலின் மண்ணின ரேத்துரு வாக்கியே. (நி)

படியிற் றிவியிற் பயிலேனே பரமற் றவரைப் பரவேனே
கடலைக் கடலிற் படியேனே கமனக் குறுகித் துடியேனே
யுடலைச் சிறையிற் புரியாதா ருணர்விற் புரிவிற் றெளிர்வோனே
யடிமைவத் தெனதுச யிரிஞளா யருணச் சயிலத் தமர்வோனே.(சு)
இயலிற்பொருளொத்துயிர்வாழ்வாயெனமத்திருளிற்றுயில்வேனை
னையர்வற் றறிவுற் றிடவேயின் னடிமைவத் தெனதுச் சிரிஞளாய்
கயிலைச் சயிலத் தமர்வானே கனகக் கிரியிற் பயில்வானே
யயனச் சுதனுக் கருள்வானே யருணச் சயிலத் தமர்வானே. (எ)

ஒருவனிரு வருமிகல கடுவே யுணர்வரியவன லுருவி ஞெளிர்
வோன்,பெருவியவர் தொழலு மருள் புரிவோன்மிடலுடையவிகல
வரை விடவே, தருணமதி சடைமுடியி னணிவோன் சகலரையும
கலரையுமகலா, னருணகிரி யமலனவனடியாமறிவினுற நினைவமி
ருளறவே. (அ)

தினகரனு மதிதவள மதியுந் திருநயன மென வனலுமுடையோன்
கனகமன சடைமுடியி லணிவோன் கமழிதழிம தியிளெறு நதிநீர்
மனநினைய நிலவருண மலையான் மலவயிரி தனதடியை மறவா
ரனகனிரு மலனவனே டகலா தமருமுமை யடிமுடியி ணணிவாம்.

வரமறை யோதிய வாயனே வானில நீரல வாயவனே
பிரமனை யாக்கிய பீடினனே போரனட்டவம் பீடினனே
யரவினையிற்றெறுமாட்டினனே யணக்குமையாளுறுமாட்டினனே
கருவினைகாய்ந்திடுங்கண்ணினனே கருதடியார்தமக்கண்ணினனே.

போதகத் தீருரி மூடினனே பொழிவீழி யாளொடு மூடினனே
மாதவ ருக்கற மோதினனே வளரொளி பல்லற மோதினனே
யாதியு மந்தமு மில்லவனே யடிய ரடைந்தம ரில்லவனே
பேதமவர்க்கிறப் பேணினனே பிறரறி யாவணப்பேணினனே.(கக)

கருவைத்துரிசைக் களையாயெங் களைவைக்கருணைக் கடலானே
பரிவுற் றுனைக்கண் ணினைமூடிப் பழிபற் றியவம் பிகைபார்மே
லெரியுற் றறலுற் றெழிலாகத் திடருற் றிடவொப் பரியாளென்
றரிவைக் கதுலக் கருள்வோனே யருணச் சயிலத்தமர்வோனே.()

பகலற் றிரவற் றுன்பாதப் பரவப் பதம்வைத் தெனையாளாய்
சகலர்க் கவரொத் தவர்பாசந் தனைவிட்டெழியுந் தகைவானே
விகலர்க் கவருக் கழல்வானே வீரையத் துகளைத் தனியேதா
னகலர்க் கெதிழிற் றருள்வானே யருணச்சயிலத்தமர்வானே.(கஙு)

கனக வெற்பினுங் கயிலை வெற்பினுங்
கழுகு வெற் பினும் பிரியாதா
னனக னற்புத னருண வெற்பின
னலரி னெத்தன் னடிபாடு
மனித ருக்குமுன் மலம ரித்திலங்
குணர்வி னுற்றெழும் பணுபூதி
தனைய ளிப்பவன் சகள நிட்களன்
சரண நித்தலும் பணுவாமே. (கச)

அருவ னிட்கள னமலா னித்திய
னசல னற்பும் லுமையாள்வான்
கருவி னுட்படு மெமைய ளிப்பது
மெனம னத்தினுங் கருதாதா
ரிருவ ருக்குமொள் ளெரிய னெத்திகழ்ந்
திசுலிரித் தவர்க்கினியானை

மொருவ னெப்பில னவனிடத்துறு
முமை மலர்ப்பத முணுவோமே. (கடு)

முனிவினைத் திறத்தினு முதிரவுற் றுடற்கணை
யினியெமக் கொழுப்பரா ரெனமனத் திளைப்பிர்கா
னனுசயத் தையற்றுநீ ரருணவெற் பகத்துனீர்
தனியளிப்ப னெப்பிலா தவனுடற்ற டுப்பனே. (கசு)

கருவினைக் கழிக்கலாங் கரியகட் டழிக்கலா
மொருமையுற் றிருக்கலா மொளிருநிட் களத்துநீ
ரிருவருக்கு மெட்டொணு வெரிமயக்க னத்தினு
மருணவெற் பகத்துனீ ரயர்வினைத் தடுத்துமே. (கள)

வெய்யவன் காலினை வீட்டினனே வீறுளமாறில் வீட்டினனே, தையலர் முன்னர வாட்டினனே தசமுகன் ரோள்பலவாட்டினனே, பைதலெனென்றிடர்பாற்றினனேபடர்சடை மேனிரப் பாற்றினனே, நையலென் றென்னுள நாட்டினனே ஞானமண்ணுமலை நாட்டினனே. (கஅ)

எழுது புகழுடையா ரெழிலருண கிரியார்
புழுகுமகிழ் பெருமான் புனிதவடி புகழ்வோ
மொழுகுமல ரவவா யுடலினினி யுதியோ
மழகியவிண் ணடைவோ மமலனடி யடைவோம். ()

கருதுவதன் முனமே கருதினவு முறுமே
யிருமையினு மினிதா மிருபலமு மெளிதே
யருணகிரி யரனே டமருமுமை யடியே
யொருமையுற வுளமா தரவுமுற வுணுவோம். உ0)

உருத்திர சங்கிதைத் தோத்திரம்
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீர்பாத வகுப்பு

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதான தானதன

உத்தியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
வுதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசேர்தி வீசுவதும்
உடலுமுட லுமிருநில பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மனுபவன சிவயோக சாதனையில்
ஓழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடுங்யதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலியார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வுளபடியை யுணருமவ ரனுபூதி யானதுவும்
உறவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய
வுருவுடைய மலினபவ சலராசி யேறவிடும்
றுபுனையு மறிமுகமு மூயரமர் மணிமுடியி
லுறைவதுவு முறைவிலது மடியேன் மனைதாமும். ()

இதழிவெகு முகசன நதியறுகு தறுகணர
விமகிரண தருணவடு பதிசேர்ச டாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
விமையமயி றழுவுமொரு திருமார்பி லாடுவதும்

இமையவர்க ணைகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத வுரகர்பதி யபிஷேக மாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
விளையதளர் நடைபழகி விளையாடல் கூறுவதும்
இனியகனி கடலிபய றெடியல்பொரி யழுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபாச மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
வெழுபுவியை யொருநொடியில் வலமாகவோடுவதும்
ளறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலிமறை யிரவுபக லிரைதேர்க டாடவியில்
எயினநிடு மிதணதனி விளகுதிண கிளிகடிய
வினிதபயில் சிறுமிவளர் புனமீ துலாவுவதும் ()
முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி னுதவுவது நினையுமவை
முடியவரு வருமடியர் பகைகோடி சாடுவதும்
மொருமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுசீல தீவரமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத
முனிவர்கரு தரியதவ முயல்வார் தபோபலமும்
முருகசர வணமகளி சறுவர்முலை நுகருமறு
முகசுமர சரணமென வருள்பாடி யாடிமிக
மொழிமுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென வறைகூவி யாளுவதும்
முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைபுழு
துலகரிய மழகூமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வணநிபுண மதுபமுக ரிதமவன
முகுளபரி மளநிகில கவிமாலை சூடுவதும். ()

மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொரு விசையாதி மூலமென
வருகருணை வரதனிக லிரணியனை துதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை
வலியசிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய
வளருமுகி னிருதனிரு பதுவாகு பூதரமும்
மகுடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின்
மருகனிசி சரர்தளமும் வருதார காசுரனும்
மடியமலை னளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
வசனிபயி ரவிகவுரி யுமையாள் திரிசூலதரி
வனசைமது பதியமலை விசையைநிரி புரைபுனிதை
வனதையபி நவையனதை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனனு பவனபய னுபயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மணகாறு சீறடியே. (க)

சீர்பாதவகுப்பு முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கடைக்கணியல் வகுப்பு.

தன தன தனந்த தத்த
தன தன தனந்த தத்த
தன தன தனந்த தத்த
தானனு.

அலைகடல் வளைந்துடுத்த வெழுபுவி புரந்திருக்கு
மரசென நிதந்தரிக்க வாழலாம்
அளகைய ரசன்ற னக்கு மமரரா சன்ற னக்கு
மரசென வறஞ்செலுத்தி யாளலாம்
அடைபெறுவ தென்றுபுத்தி யதிமதுர செந்தமிக்கு
மருள்பெற நினைந்துசுத்தி யாகலாம்
அகிரவரு மென்றுமுட்ட வலகில்வினை சண்டைநிற்க
வட்டலெதிர் புரிந்துவெற்றி யாகலாம்
இலகிய நலஞ்செய்புட்ப கமுமுட னிறம்வெளுத்த
விபவர கெனும்பொருப்பு மேறலாம்
இருவர வர்நின்றிடத்து மெவரெவ ரிந்திடத்து
மொருவனிவ னென்றுணர்ச்சி கூடலாம்
எமபடர் தொடர்தழைக்கி லவருட னெதிர்ந்துளுட்க
விடியென முழங்கிவெற்றி பேசலாம்
இலையொழியவும்பலிப்பதகலவிடுமுங்கள்வித்தை
யினையினி விடும்பெருத்த பாருளீர்
முலையிடை கிடந்திளைப்ப மொகுமொகெனவண்டிரைப்ப
முகையவிழ் கடம்படித்த தாரினன்
முதலிபெரி யம்பலத்துள் வரையால மண்ட பத்துண்
முனிவர்தொழ வன்றுநிர்த்த மாடினன்
மூனெறாறு முழங்கியொற்றி முகிலென விரங்கவெற்றி
முறைநெறி பறந்துவிட்ட கோழியான்
முதியவுண ரன்றுபட்ட முதியகுடர் நன்றுசுற்று
முதுகுழுமு பந்தரிட்ட வேலினன்
மலைமருவ பைம்புனத்தி வளருமிரு குன்றமொத்தி
வலிகுடிபு குந்திருக்கு மார்பினன்
மழலைகள் யிளமபிமொய்த்த வறுவர்முலையுண்டுமுற்றும்
வடிவுடன் வளர்ந்திருக்கும் வாழ்வினன்

மலையிறை மடந்தைபெற்ற வொருமதலை யென்றுதித்து
மலையிடிய வுந்துணித்த தோளிஞன்
மயிலையு மவன்றிருக்கை யயிலையு மவன்கடைக்க
ணியலையு நினைந்திருக்க வாருமே. (க)

கடைக்கணியல்வகுப்பு
மூற்றிற்று.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

வேல்வகுப்பு.

தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன
தனத்தன தான.

பருத்தமுலை சிறுத்தவிடை வெருத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்கு நிகராகும்
பணைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்
பதத்திடுநி களத்துமுனை தெறிக்கவர மாகும்
பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை யிடித்துவழி காணும்
பசித்தவகை முசித்தழுது முறைப்படுத லொழித்தவுண
ரூரத்துதிர நினைத்தசைகள் புசிக்கவரு னேரும்
சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குரர் தமக்குமுறு மிடுக்கண்வினை சாடும்

சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழிக்குமதி யொளிப்பவகல்
யடக்குதழ லொளிப்பவொளி சொளிப்பிரபை வீசும்
துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுத லறக்களையு மெனக்கோர்துணை யாகும்
சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மரத்தைநிகர் காணும். ()

தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிற கழற்குரிக ராகும்
தலத்திலுள கணத்தொகுதி களிப்பிலுண் வழைப்பதென
மலக்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும்
தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிகு
புறத்துமரு கடுத்திரவு பகற்றுணைய தாகு ம்.
சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில் விருப்பமொடு சூடும்.

திரைக்கடலை யுடைத்துநிற புனற்கடிது
முடைப்படைய வடைத்துதிர நிறைத்துவிளை யாடும்
திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற விசைத்ததிர வோடும்
சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகுகுரைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும்
திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலி விருத்ததென
துளத்திலுறை கருத்தன்மயி னடத்துகுகன் வேலே.(க)

வேல்வகுப்பு முற்றிற்று.

மயில்வகுப்பு.

தானதன தந்தன
தானதன தந்தன
தானதன தந்தன
தந்த தனனா.

ஆதவனு மம்புலியு மாசுற விழுங்கியுமி
ழாலமருவும் பணி யிரண்டு மழுதே
ஆறுமுக னேந்துமுக ஞானமுக னெங்கடவு
ளாமென மொழிந்தகல வென்று விடுமே
ஆர்கலிக டைந்தமுது வானவ ரருந்தவரு
ளாதிபக வன்றுயில னந்தன் மணிசேர்
ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி
யாகமுழு துங்குலைய வந்த றையுமே
வேதமுழு தும்புகலி ராமனெரு தம்பிமிசை
வீடணன ருந்தமையன் மைந்த னிகலா
வீசுமர வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன்
மேலிடியெ னும்படிமு முங்கி விழுமே
மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநச
மேவுசர ணங்கொடுல கெங்கு முழுமே
வேலியென வெண்டிசையில் வாழுமுர கந்தளர
வேயழ லெனுஞ்சின முடன்படருமே
போதினி லிருந்தகலை மாதினை மணர்ந்தவுயர்
போதனை பிரந்துமலர் கொண்டுமுறையே
பூசனை புரிந்துகொடி யாகிமகி ழொன்றுதுகிர்
போன்முடி விளங்கவரு மஞ்ச மடுமே
பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
பூரண கணங்களொடு வந்து தொழுவே

போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர்
போயினமே னும்படியெ திர்ந்து விழுமே
கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில்
கோலவுட லங்கருகி வெந்து விழவே
கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள்
கூடிமன மஞ்சிவளை சென்று புகமே
கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு
கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே
கோலமுறு செந்தினர் மேவுகும ரன்சரண
கோகனக மன்பொடுவ ணங்குமயிலே. (க)

மயில்வகுப்பு முற்றிற்று.

சிவமயம்.

வேல்வாங்குவகுப்பு.

தன தன்ன தந்தன தன தன தந்தன
தந்தன தானுந்தன தானுந்தன.

திடவிய நெஞ்சுடை யடிய ரிடும்பை
டும்படி தீயாங்குறை போயாழ்ந் தது
செயசெய வென்றிசை பாவிய வெங்கெள்கொ
டுங்கலி தேசாந்தா மே சாய்ந்தது
செயலுறை நஞ்சுறழ் மயருறு நெஞ்சினர்
வஞ்சகர் தீமான்கதர் தா மேங்கினர்
சிகரத ரங்கித மகரெ நுங்குபெ
ருங்கட றீமுண்டுதன் வாய்மாண்டது
தெரியலர் சென்றடை திசைகளி லெண்கரி
சிம்பெழ மாருங்கிரி நூறுந் துளை

சிகரமெ டுங்கிரி குகைகடி றந்துதி
கந்தமும் லோகாந்தமு நீர்தேங்கின
சிறையு ளழுந்திய குறைக ளொழிந்துசெ
யங்கொடு தேவேந்திரர் சேணுண்டனர்
திரிபுவ னங்களு மொருபய மின்றிவ
ளங்கெழு சீர்பூண்டற நேர் பூண்டனன். ()
விடவச னஞ்சில பறையும்வி ரிஞ்சன்வி
லங்கது கால்பூண்டுதன் மேறீர்ந்தனன்
விகசித சுந்தர விதரண வைந்தரு
வெந்தெழில் வீமான் பொழில் பூவாய்ந்தது
விழைவுத ரும்பத சசிதன் விளங்கிய
மங்கள நூல்வாங்கு கிலாள் வாழ்ந்தனள்
வெருவியொ துங்கிமை யவரெவ ருஞ்சிறை
வென்றித மேலாம்படியே மீண்டனர்
விழியொரி ரண்டொரு பதுசத நின்றெரி
கண்டகன் மேல்வாங்கினை கால் சாய்ந்தது
வெளிமுழு துந்திசை மூழுதும் விழுங்கியே
ழுங்கன ஞர்மாண்டற வேர் மாய்ந்தது
விபுதர் பயங்கெட நிருதர்த ளங்கெட
விண்கெடு மேடாம்படி பாடோங்கின
மிடைகுறள் வெங்கொடி கழுகுப ருந்துவி
முன்காலத்திருந்த மறையவர்கள் மன்னர்களாற் புரக்கப்பெற்று, வேள்வி கருமத்திலன்றிப் பிறிதோர் கருமத்திற் கருத்தைச் செலுத்தாது வாழ்ந்தனர். அக்காலங்களில் திங்கண் மும்மாரி தவறுது பெய்தது. இதுகாலை, பிரமஞானத்தின் பொருட்டு அக்கினி காரியஞ் செய்யவேண்டிய பிராமணர்கள் தாங்களே கடவுளென இறுமாந்து, மிலேச்ச நடையுடை பாவனைகளை அவலம்பித் தொழுகுவது சாலவு மிரங்கத்தக்கதே.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் சிதம்பரத் தலத்திற்கு எழுந்தருளியக்கால், ஆண்டு வதிந்த அந்தணர் பெருமக்கள் அக்கினி காரியஞ் செய்ததையும், அவ்வக்கினியில் பெருமான் திருநடம்புரிவதையுங் கண்டு,

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்று வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்று நின்றுரைப் பற்று பாவமே.

பறப்பைப் படித்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றுழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையறீர் வாரே. எனவும்,

செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்ட ஞரைக் காணலா நறவ நாறு
மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற் றம்ப லத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடு மாறே.

ஏறனு ரேறு தம்பா வினநிலா வெளிக்குஞ் சென்னி
ஆறனு ராறு சூடி யாயிழை யாளோர் பாக
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசி நின்று நீண்டெரி யாடு மாறே.

சடையனூர் சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ் சென்னி
யுடையனு ருடைதலையி லுண்பதும் பிச்சை யேற்றுக்
கடிகொள்பூந் தில்லை தன்னுட் டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
அடிகழ லார்க்க நின்று கனலெரி யாடு மாறே.

எனவும் ஓதியிருத்தலைக் காண்க.

அக்கினி வடிவினராகிய சிவபெருமான் சராசரங்களே
றும் நிக்கமற நிறைந்திருக்கின்றனர். சூக்குமபூதமாகிய ஆகா

யம் தூலபூதங்களாகிய மண் புனல் தீ காற்று என்னும் மிவைக ளிலூடுருவிப் பாய்ந்து, நீக்கமின்றி நிறைந்தும், அவைகளைக் கடந்தும் நிற்பதுபோலச் சிவமும் உலகு உயிர்களில் நீக்க மறக்கலந்தும், அவைகளைக் கடந்தும் ஒளிர்கின்றது. சிவம் எங்கு மிருப்பினும் பெத்தான்மாக்களுக்குப் புலனாகாது; அவைகளுக்குக் காடாகவும் மலையாகவும் கடலாகவுந் தோன் றும்; சிவன் முத்தர்கட்குக் கடலாகவும் மலையாகவும் காடாக வும் பிறவாகவுந் தோன்றாது; யாவுஞ் சிவமயமாகத் தோன் றும். இவ்வுண்மை விரித்துரைக்கில் எடுத்த விடயத்தை விடு த்து மற்றொன்றுரைத்தலின் பாற்படும். அங்கிங்கெனாதபடி எங்குஞ் சிவம் பிரகாசிக்கு முண்மை,

திருவாசகம்.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தால்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே. எனவும்,

திருமந்திரம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை

பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

எனவும் வருஉம் ஆன்றோர் வாக்குகளான் வலியுறுத்தப்படுதல் காண்க.

உலகுயிர்களில் அத்துவிதமாகக் கலந்தொளிருஞ் சிவசோதியைச் சிவர்கள் அறிவாற்கண் டின்புறுவது எங்ஙனமெனிற் கூறுதும். காயத்தையே கோயிலாகவும், கடிமனத்தையே தகழியாகவும், நேய உணர்வையே நெய்யாகவும், உயிரையே திரியாகவுங் கொண்டு ஞானமென்னுந் தீபத்தையேற்றின் ஆணவ மகலும், சிவம் பிரகாசிக்கும்.

தேவாரம்.

உடம்பெனு மனைய கத்து ளுள்ளமே தகழி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

திருமந்திரம்.

ஒருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடும் வாச லிருவிரற் கீழே
உருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றூனே.

எண்ணு யிரத்தாண்டு யோக மிருக்கினும்
கண்ணு ரமுதனைக் கண்டறிவா ரில்லை
உண்ணுடி யுள்ளே யொளிபெற நோக்கில்
கண்ணுடி போலக் கலந்திருந் தானே.

இலைக்கின்ற நெஞ்சத் திருட்டறை யுள்ளே
மூலைக்கின்ற மண்டல மூன்றினு மொன்றித்
துலைப்பெரும் பாசத் துருவிடு மாகில்
இலைப்பின்றி மார்கழி யேற்றம தாமே.

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத வறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

இன்னுஞ் சிவஞான முனிவரனுர் "ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக்கொண்டு, தன்னுடம்பி னகத்தே இதயம் நாபி புருவநடு என்னு மூன்றினையும் முறையே பூசைத்தானம் ஓமத் தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு,புறம்பே ஞான பூசை செய்யும்படி இதயகமலத்திற் சிவனை அவ்வஞ்செழுத் தான் அமைந்த திருமேனியிற், கொல்லாமை ஐம்பொறியட க்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என் னும் அட்டபுட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெ ய்து, குண்டலித்தானமாகிய நாபியில்,ஞானவனலை யெழுப்பி, அதன்கண் அத்திருவைந் தெழுத்தானை விந்துத் தானத்

தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமஞ்செய்து விந்துத் தானமாகிய புருவ நடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப் பொருளும், துவம்பதப் பொருளும், அசிபதப் பொருளு மாம் முறைமையின், அவ்வஞ்செழுத்தாற் சிவோகம் பா வனைசெய்யின், அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன் றும் முதல்வனுக்குச் சேடசேடிய பாவத்தால் ஆகற்பாலதா கிய அடிமையாமென்க. * * * * *

கோலநட்டுக் கயிற்றினுற் சுற்றிக் கடையவே காட்டத்தினி ன்றுந் தோன்றும் அங்கிபோல் அம்முதல்வன் ஆண்டித் தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கிநிற்கும் " எனக்கூறி யிரு த்தலைக் காண்க.

சிவஞானசித்தியார்.

அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசும்
அரனுருவ மஞ்செழுத்தா லமைத்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
அணைவரிய கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போற்றேன்று மான்மாவி லானே.

இங்ஙனஞ் சிவராஜயோகத்தாற் சிவசோதியைக் கண்ட சிவஞானச் செல்வர்களே பிறவா நெறியைப் பெற்றவராவர். அவர்கள் என்பைப் பெண்ணுக்கல் முதலிய செயற்கருஞ்செ

யல்களைச் செய்யும் பேராற்ற லெய்துவர். காழிப்பெருமான் ஞானக்கினியாகிய சிவபரஞ்சுடரை உள்ளத்திற் கண்டு சிவ மயமாக விளங்கி யிருந்தமையா லன்றே கொடியவர்களாகிய சமணர்களிட்ட பூதாக்கினியின் வேகத்தைக்கெடுத்து, அத னைத் தம்மாணைவழி நிறுத்தி,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐயனே யஞ்ச லென்றருள் செய்யினைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே."

என்னுந் திருச்செய்யுளை யோதிப் பாண்டியன் மேலே வினர். பின்னருஞ் சுவாமிகள் "கல்லார்ப் பெருமணம் வேண் டாம்" என்னுந் திருப்பதிகத்தை யோதினபோது நல்லூர்ப் பெருமணச் சிவாலய முற்றிலும் ஞான அனல் பரந்து எரிந் தது. மலபரிபாகமுற்றிருந்த ஆன்மாக்கள் பல அவ்வெரியில் இரண்டறக் கலந்தன. இதன் விரிவை:—

பெரியபுராணம்-திருஞானசம்பந்தமூர்த்தி
சுவாமிகள் புராணம்.

காதன்மெய்ப் பதிக நல்லூர்ப் பெருமண மெடுத்துக் கண்டோ
தீதறு பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு [ர்
நாதனே நல்லூர் மேவும் பெருமண நம்ப னேயுன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ தென்று பாட.

தேவர்கள் தேவர் தாமுந் திருவருள் புரிந்து நீயும்
பூவையன் னுரு மிங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்

யாவரு மென்பாற் சோதி யிதனுள்வந் தெய்து மென்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி.

கோயிலுட் படமே லோங்குங் கொள்கையாற் பெருகுஞ்சோ
வாயிலை வகுத்துக் காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர் [தி
மாயின வொளியா னீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞால முய்ய வழியினே யருளிச் செய்வார்.

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொலாமென்
றனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங் கேட்க வருள்செய்தும் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக வென்ன.

சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்
ஏர்கெழுவு சிவபாத விருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர் மற்றனையோ ரணைந்துளோர்
பார்நிலவு கோசூழப் பன்னிகளோ டுடன்புக்கார்.

அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்றோர்கள்
மணிமுத்த மரலுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினார்

ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவருங்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின்.

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்

நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனுறைவர்.
பிள்ளையா ரெழுந்தருளிப் புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளரீ டியசோதிக் குறிநிலையவ் வழிகரப்ப
வள்ளலார் தம்பழைய மணக்கோயி லேன்றுதனுந்
தெள்ளரீ ருலகத்துப் பேறில்லார் தெருமந்தார்.

எனவருஉந் திருவிருத்தங்களா னுணர்க.

இனிச் சிவசோதியை யோகவழியாற் காண வியலாத மக்கள் சரியைத் திருத்தொண்டைச் செய்யக் கடவரெனச் சிவாகமங்கள் பணிக்கின்றன. சரியைத் திருத்தொண்டுகளா வன:—திருவலகிடல், திருமெழுக்கிடல், திருமாலை சாத்தல், திருவிளக்கிடல், திருப்புகழ் பேசல், அடியாரை வழிபடல் முதலியன.

சிவஞானசித்தியார்.

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர்.

இச்சரியைத் திருத்தொண்டுகளுட் சிறந்து விளங்குவது திருவிளக்குத் திருத்தொண்டேயாகும். அது சிவபரஞ்

சுடருக்குச் செய்யவேண்டிய * பதினாறுவகை உபசாரங்களுள் ஒன்றாயிருப்பது; சிவத்தின்சொரூப உண்மையை விளக்குவது; பதிஞானத்தின் பண்பைத் தெரிப்பது.

சிவவழி பாட்டிற்கு ஆகமங்கூறியுள்ள தொண்டுகளும் உபசாரங்களும் அளவில்லனவாகும். அவைகளை முறைப்படி செய்ய வியாலாதவர் தீபத்திருத்தொண் டொன்றைக் கைக் கொள்வதே சாலுமெனச் சிவபிரானே உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந் தருள்ளார். விளக்கு ஞானக்குறியை யறிவுறுத்துவ தாகலான் அஃது எல்லா உபசாரப் பயன்களையு மூடையதா யிருக்கிறது. திருநாவுக்கரசு சுவாமிகளும் தீபத் தொண்டை,

விளக்கினர் பெற்ற வின்பம் மெழுக்கினற் பதிற்றி யாகும்
தளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில்கீ தஞ்சொன்னார்க் கடிகடா மருளு மாறே.

என்னுந் தேவாரத்திற் சிறப்பித் தோதியுள்ளார்கள்.

இத்தகைச் சிறப்புடைய தீபத்திருத் தொண்டைச் செய்து வீடுபேற்றை யெய்தினவரெண்ணிலர். அறுபான் மும்மை நாயன்மார்களுள் நமிநந்தியடிகளும், கலியநாயனரும் கணம்புல்லநாயனரும் திருவிளக்குத் திருத்தொண்டையே செய்து முத்தி பெற்றார்கள்.

---

* ஆவாசனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதானம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், செபசமர்ப்பனை, ஆராத்திரிமை என்பன.

நமிநந்தியடிகணாயனார் சோழநாட்டிலே, ஏமப்பேறு என்னும் ஊரிலே, பிராமணகுலத்திலே திருவவதாரஞ் செய்தருளினவர். அவர் சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர். அவர் நாடோறும் திருவாரூருக்குச்சென்று சுவாமி தரிசனஞ்செய்து வருவர். வருநாளி லொருநாள் திருவாரூர்ப்பெருமானைப் பணிந்து திருமுன்றிலையடைந்து, அருகேயுள்ள அரனெறியென்னுந் திருக்கோயிலினுள்ளே நுழைந்து, சிவபெருமானை வணங்கிப்பல திருத்தொண்டுகள் செய்து, அங்கே திருவிளக்குத் திருத்தொண்டு செய்ய விரும்பினர். அப்பொழுது மாலைக் காலமா யிருந்தபடியால் சமீபத்திலிருந்த ஒருவீட்டில் நுழைந்து தீபத்திற்கு நெய் கேட்டனர். அவ்வீட்டிலிருந்தவர்கள் சமணர்களா யிருந்தமையால், அவர்கள் "கையிலே கனலுடைய கட்வுளுக்கு விளக்கு மிகையாம்; எங்களிடம் நெய்யில்லை; நீரை முகந்து தீபமேற்றும்" என்றார்கள். அவ்வுரையைச் செவியுற்ற நமிநந்தியடிகள் மனம்பொராய்த்திருக்கோயிலை யடைந்து, சிவபெருமானை வணங்கிக் கவலை கொண்டு நின்றார். அப்பொழுது "நமிநந்தி! உன் கவலையை யொழி; அருகேயுள்ள குளத்துச் சலத்தை முகந்து கொணர்ந்து விளக்கிடு" என்றோர் அசரீரி யெழுந்தது. அதுகேட்ட நாயனார் பெருமான் இன்பக்கடலி லாழ்ந்து, உடனே குளத்தையடைந்து, நீரை முகந்து கொண்டுவந்து, தகழியிலேவார்த்து விளக்கேற்றினர். அது மிக ஒளிவிட்டுச் சுடர்க்கொழுந்தென எரிந்தது. எரியவே அன்பர் பெருமான் ஆனந்தபரவசராய் ஆலயமுழுவதும் தண்ணீர் விளக்கிட்டனர். இத்திருத்தொண்டைப்பன்னுள் செய்து சிவனடி சேர்ந்தார்.

திருத்தொண்டர் திருவந்தாதி.

வேத மறிக்கரத் தாரூ ரரற்கு விளக்கு நெய்யைத்
தீது செறியமண் சையரட் டாவிடத் தெண்புனலால்
ஏத முருக வருகென் றன்று விளக்கெரித்தா
ஞை னெழிலேமப் பேறூ ரதிப னமிநந்தியே.

திருத்தொண்டர் புராணசாரம்.

நண்ணுபுகழ் மறையோர்வா ழேமப் பேறூர்
நமிநந்தி யடிகடிரு விளக்கு நல்க
வெண்ணெய மணர்கள்விலக்க நீரா லாரூர்
இலங்குமர னெறியாருக் கேற்று நாளிற்
கண்ணமணர் கெடக்கண்பெற் றடிசள் வாழக்
காவலனு னிபந்தங்கள் கட்டு வித்தே
அண்ணலருள் கண்டாரூ ரமர்ந்து தொண்டர்க்
காணியெனு மரசினரு ளடைந்து ளாரே.

கலியநாயனர் தொண்டை நாட்டிலே, திருவொற்றியூரி லே, சக்கரப்பாடித் தெருவிலே, செக்கார்குலத்திலே, திரு வவதாரஞ்செய்தவர். அப்பெரியார் திருவொற்றியூர்ச் சிவால யத்திலே இரவும் பகலும் உள்ளும் புறம்பும் திருவிளக்கிடுந் திருத்தொண்டை யேற்றவர். அவரது அன்பின் திறத்தை யுட், திருத்தொண்டி னுறுதியையும் உலகத்தார்க்கு வெளி யிடவேண்டிச் சிவபிரான் அவ்வடியவர்க்கு வறுமை மீக்கூ ரச்செய்தனர். நாயனர் வறுமையாஞ் சிறுமையிலாழ்ந்தும் தாஞ்செய்துவருந் திருத்தொண்டிற் சிறிதும் திரும்பினு ரில்லை. தம்பாலுள்ள செல்வ வளமெலாஞ் சுருங்க அன்பர்

பெருமான் தம்மரபினரிடம் எண்ணெய்வாங்கி விற்றுக்கொடு த்து, அவர்களீயுங்கூலியினால் தந்திருத்தொண்டை நடாத்தி வந்தனர். சிலநாட்கழித்து மரபின்ர் எண்ணெய்கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். நாயனார் சிறிதும் மனந்தளராதவராய்ச் செக்காட்டு மிடங்களிற்சென்று எண்ணெய்யெடுத்தும், எரு தோட்டியும் பெறும் ஊதியத்தைக் கொண்டு திருவிளக்கே ற்றி வந்தனர். பின்னர்த் தொழிலாளர்கள் பெருகினமையால் நாயனார்க்குத் தொழில்கிடைப்பதே அருமையாய் விட்டது. "அந்தோ திருத்தொண்டு முட்டுப்பட்டதே" என்று மனந் தளர்ந்து, மனைவியை விற்றுயினும் திருத்தொண்டைச் செய் யவேண்டும் என்று துணிவுகொண்டு மனைவியை ஊரெங்கும் விலைகூறினர். கற்புக்கரசியாரை வாங்க ஒருவரும் முந்தினு ரில்லை. அதுகண்ட நாயனார் ஆலய மடைந்து வழக்கம்போல அகல்களைப் பரப்பித் திரியிட்டு எண்ணெய்க்குப் பதிலாகத் தமது உதிரத்தை நிரப்பத் தங்கழுத்தை யரியலுற்றார். உற் றதும் அவர்தம் முள்ளத்து அன்புருவாய் வீற்றிருந்தருளுஞ் சிவபெருமான் இடபவாகனரூடராய் எதிர்தோன்றி, அரிவா ளைப்பற்றினர். உடனே அடியார் தங்கழுத்திலே பொருந்திய ஊறு நீங்கப்பெற்றுப் பரமனை வணங்கிப் புகழ்ந்து இன்பத் தழுந்தினர். சிவபெருமான் கலியநாயனார்க்குத் தமதுதிருவடி வாழ்வைக் கொடுத்தருளினர்.

திருத்தொண்டர் திருவந்தாதி.

கம்பக் கரிக்குஞ் சிலந்திக்கு நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலனுய்க்

கும்பத் தயிலம்விம் முஞ்செக் குழன்றுங்கொள் கூலியினுல்
நம்பற் கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே.

திருத்தொண்டர் புராணசாரம்.

தடமதில்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ்
சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்
படர்புகழார் கலியனூர் நலியுங் கூற்றைப்
பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோர்
உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவுநேரா
துயர்மனிவி யைக்கொள்வா ருளரு மின்றி
மிடறுதிர மகனிறைய வரிய நாதன்
வியன்கைகொடு பிடிப் பவருண் மேவிஞரே.

வடவெள்ளாற்றின் தென்கரையிலே யுள்ள இருக்கு வேளூரிலே ஒரு சிவனடியா ரிருந்தார். அவர் சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர். அவர் தாம் பெற்ற செல்வத்தினுலாய பயன் திருக்கோயிலில் திருவிளக்கெரித் தலே யாமெனக்கொண்டு, அத்திருத்தொண்டை மேற்கொ ண் டொழுகுவராயினர். ஒழுகிவருநாளிற் சிவபிரான் திருவ ருளால் நாயனருக்கு வறுமை வந்தெய்திற்று அது காரண மாக அப்பெரியார் சிதம்பரத்தையடைந்து தமக்குள்ளபொரு ள்களை விற்றுத் திருவிளக்குத் திருத்தொண்டைவழாது நடத்தி வந்தனர். பொருளெல்லாம் ஒழிந்தன. ஒழியவே தொண்டிற் சிறந்த நாயனர் கணம் புற்களையறுத்து விற்று அதனும் கிடைத்த பொருளைக்கொண்டு திருவிளக்கேற்றி வந்தனர். இக்காரணத்தாலிவர் கணம்புல்லரென அழைக்கப் பெற்றனர்

ஒருநாள் கணம்புல் விலைப்படவில்லை. அன்று அடியவர் பெருமான் அப்புற்களையே திரியாக்கி விளக்கெரித்தனர். வழக்கம்போல விளக்கெரிக்கப்புல் போதாமையால் தமது திருமுடியை மடித்து எரித்தார். எரித்ததும் அவர் அன்பினிலுறிய சிவபெருமான் அவருக்குத் திருவடி நீழலையுதவினர்.

திருத்தொண்டர் திருவந்தாதி.

நன்னக ராய விருக்குவே ளூர்தனி னல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லைபுகுந்து புலீச்சரத்து
மன்னவராய வரற்குநற் புலலால் விளக்கெரித்தான்
கன்னவி லேழுலெந்தை தந்தைவிரா ணெங்கணம் புல்லனே.

திருத்தொண்டர் புராண சாரம்.

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழும்
இருக்குவே ளூரதிப ரெழிலார் சென்னிக்
கலிநிலவா ரடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்
கருதுபுலீச் சரத்தரற்குக் காதற்றீப
நிலைதரத்தா மிடமிடிய லொருநாட் புல்லால்
நீடுவிளக் கிடவதுவு நேராதாகத்
தலைமயிரி னெரிகொளுவு மளவினுதன்
தாவாத வாழ்வருளுந் தன்மையாரே.

இன்னும் திருவிளக்குத் திருத்தொண்டாலன்றே மாவலியென்பான் உலகமெல்லாம் ஒருகுடைக் கீழாளுஞ் சக்கரவர்த்திப் பெருவாழ்வைப் பெற்றான். அவன் முற்பிறப்பில் எலியாயிருந்தவன். அவன் எலியாயிருந்த காலத்து ஓரிரவு ஒரு சிவாலயத்திலே யிடப்பெற்றிருந்த ஒரு விளக்குத்தகழி

யிலுள்ள நெய்யை யுண்ணச் சென்றனன். சென்றபோது மங்கியெரிந்த தீபச்சுடர் எலியின் முகத்தைச் சுட்டது. சுடவே அது தன் உடலையுதறியோடியது. அவ்வேகத்தால் வர்த்தி நீண்டு மங்கியிருந்த சுடர் ஒங்கி யெரிந்தது. சோதிசொரூபராகிய சிவபெருமான் தம்மாலயத்தில் மங்கியிருந்த தீபத்தைப்பிரகாசிக்கச் செய்தமைக்கு எலிவடிவு கொண்டிருந்த அவ்வான்மாவை மறுபிறப்பில் மானுடப்பிறவியிற் செலுத்தித் தேவர்களும் முனிவர்களும் பணிகேட்டு ஏவல்செய்யும் பெரும்பேற்றைப் பெறச் செய்தனர். அஃறிணைப் பொருளாகிய எலி அபுத்தி பூர்வகமாகச்செய்த தீபத்திருத்தொண்டாற் சக்கரவர்த்திப் பெருவாழ்வைப் பெற்றதெனின், உயர்திணைப்பாற் பட்டமக்கள் கூட்டத்தார் புத்தி பூர்வகமாகத் திருவிளக்குத் திருத்தொண்டை மெய்யன்புடன் செய்வார்களாயின் எப்பேறு பெறுவரென்பதை யியம்பவும் வேண்டுமோ? மாவலியின் திருத்தொண்டைக் குறித்துத் திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ்வேதத்தில்.

நிறைமறைக் காடு தன்னி னீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவா னுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னீரே.

என்று சிறப்பித்துள்ளமை பெரிதுங் கவனிக்கற்பாற்று.

தீபமாட்சி முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தீபவிதி.

சிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்களில், சிவாலயங்களிலே யிடப்படுந் தீபங்களினிலக்கணங்களும் விதிகளும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றை யீண்டுரைப்பாம்.

தீபமிடுவோர் சமயவிசேட நிருவாணதீட்சை பெற்றவராய், சாத்திர ஆராய்ச்சியுடையவராய், கொல்லாமை, களவாடாமை, கள்ளாமை, பிறர்மனை விழையாமை, பொய்யாமை முதலிய நல்லொழுக்கவழியில் நிற்பவராய், சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவராய், பரோபகாரசிந்தை யுடையவராய் இருத்தல் வேண்டும். தூர்த்தர், சிவாலயப் பொருளை யிச்சிப்போர், அடியார்களை யெள்ளுவோர், திருப்பணிக்குக் கூலிவிரும்புவோர், புகழ்விழைவோர், அவாவுடையோர் முதலியோர் ஆலயங்களில் திருவிளக்கிடுவாராயின் ஊருச்சுப்பாழ்விளையும்; மழைவளஞ் சுருங்கும்; கொள்ளைமிகும்; மன்னர்க்குத் தீமை நேரும்.

பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்யப்பெற்ற தகழிகளை வைத்தல் உத்தமம்;செம்பு இரும்பு இவைகளாற்செய்யப்பட்டதகழிகளை யுபயோகித்தல்மத்திமம்;மண்தகழி அதமம்.

பொன் வெள்ளித் தகழிகளில் தீபமிடுவோர் சாயுச்சிய பதவி பெறுவர். செம்பு பித்தளை இரும்புத் தகழிகளிற் தீபமேற்றுவோர் சாரூப்யமடைவர். மட்டகழி விளக்கெரிப்

மேலார் சாமீப பதவியிற்சேர்வர். ஆலயத்திலிடப் பெற்றுள்ள தீபத்தைத் தரிசிப்போர் சாலோகத்திலிருப்பர். ஒன்றுஞ் செய்யாது வாளாகாலங்கழிப்போர் யமவாதனைக் குட்படுவர்.

குற்றமில்லாத பசு நெய்கொண்டு திருவிளக்கிடுவது உத்தமம். அப்பசு அங்கவீனமுள்ளதா யிருத்தல்கூடாது. அதனைப் பிறபசுக்களோடு கலவாதபடியும், எச்சிற்புல் இலை முதலியவற்றை உண்ணுதபடியுங் காத்துவரல் வேண்டும். அப்பசுவின்பாலை மனிதர்கள் அருந்தல் பாவம். கன்றுகுடித்து எஞ்சியிருப்பதைச் சிவாலயத்திற்கே உபயோகித்துக் கொள்ளல் வேண்டும். குருட்டுப் பசுநெய் நன்மை பயவாது.

ஆமணக் கெண்ணெயினாலும், எள்ளெண்ணெயினாலுந் திருவிளக் கெரிக்கலாம். சிவாலயத்திற்கு எண்ணெயுதவும் ஆமணக்கும் எள்ளும் விளையும் நிலங்களைச் சிவமாகப் போற்றல் வேண்டும். அங்கே குற்றமிழைப்போர் மறுபிறப்பில் பன்றியாகப் பிறந்து வருந்துவர்.

தாமரை நூற்றிரியும் பருத்திநூற்றிரியுஞ் சிறந்தவை, பிறநூல் முய்ப்பவை.

இக்காலத்திற் சில ஆலயங்களிலே ஆகமவிருத்தமான காரியங்கள் பல நிகழ்கின்றன மின்சாரவிளக்குகளும், மண்ணெண்ணெய் தீவர்த்திகளும், பிற விளக்குகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அவையாவும் ஆகமங்களிலுள்ள தத்துவநுட்பங்களை விளக்குவனவல்ல. ஆலயங்களில் ஆகமவிருத்தமான தீபங்களிடுவோரும், இடுவிப்போரும், அவைகளைக் கண்டுங் கண்டித் தொழிக்காது வாளா காலங்கழிக்குங் கல்விமான்களும் எரிவாய் நிரையமடைவரென்பது திண்ணம்.

தீபவிதி முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

கார்த்திகை விரதம்.

அறுமுகக்கடவுள் ஆறுகுழந்தை வடிவமாகச் சரவணப் பொய்கையில் அருளாடல் புரிந்தகாலத்தில், அப்பெரு மானுக்குக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வந்தனர், சிவபெருமான் உமாதேவியாருடன் சரவணப் பொய்கைக் கெழுந்தருளி, உமையம்மையாரைத் திருநோக்கஞ் செய்து "பார்வதி! இப்பொய்கையில் விளையாடும் உனது ஆறு குழந் தைகளையு மெடுத்துக் கொண்டுவா" என்ன, அம்மையார் அவ்வாறு திருவுருவங்களையுஞ் சேர்த்தெடுத்துச் சிவபெரு மானுக்குந் தமக்கு மிடையில் வீற்றிருக்கச் செய்தனர். அது போழ்து கார்த்திகைப் பெண்கள் அறுவருஞ் சிவபெருமா னைப் பணிந்து நின்றார்கள். பெருமான் அவர்கள்மீது கருணை பாலித்து "நீங்கள் எமது மைந்தனுகிய முருகனுக்குப் பாலூ ட்டி வந்தீர்கள். அதுபற்றி உங்கள் புத்திரன் என்னும் பொ ருள்படக் கார்த்திகேயனென்னும் பெயர் இவனுக்கு வழங்கு வதாக. உங்களுக்குரிய கார்த்திகைநாளில் இக்கந்தனைப்போ ற்றி வழிபடுகின்றவர்கட்கு அழியாப்பேரின்பவாழ்வைக்கொ டுத்தருளுவோம்." என்றருள் செய்தார்.

கந்தபுராணம் - சரவணப்படலம்,

"கந்தன்றனைநீர்போற்றியகடனுலிவனுங்கண்
மைந்தனெனும்பெயராகுகமகிழ்வாலெவரேனு
நுந்தம்பகலிடையின்னவனென்றுள்வழிபடுவோர்
தந்தங்குறைமுடித்தேபரந்தீனல்குவமென்றான்."

அன்றுதொட்டுக் கார்த்திகைநாள், தேவர்களாலும் முனிவர்களாலும் மனிதர்களாலுங் கொண்டாடப்பெற்று வருகிறது. அடிமுடிதேடிய அரிக்கும் அயனுக்குங் கடவுள் திருவுருக்காட்சி கொடுத்த தினமுங் கார்த்திகையே யாகும். இக் கார்த்திகை விரதத்தை யனுட்டித்து முத்திபெற்றவர் அளவிலர்.

முன்னொருகாலத்து, நாரதமகாமுனிவர் சப்தரிஷிகளுக்குள் தாமே தலைமை பெற்றிருத்தல் வேண்டும் என்னும் எண்ணமுடையவராய் விநாயகக் கடவுளைப் பூசித்தனர். களிற்றுமுகக்கடவுள் நாரதர்முன்னரெழுந்தருளி "நீ வேண்டும் வரம் யாது" என்று கேட்டருளினர். நாரதர் பிரணவப் பொருளை வணங்கி "சுவாமி! எழு முனிவர்களில் யானே முதல்வனாக விரும்புகிறேன். அதற்கு அனுட்டிக்க வேண்டிய விரதம் இன்னதென அடியேனுக்குப் புலப்படவில்லை. திருவருள்செய்யவேண்டும்" என்று வேண்டி நின்றார். கணபதி "நாரத! கார்த்திகைவிரதத்தைப் பன்னீராண்டு அனுட்டித்து வருவாயாக" என்று திருவாய்மலர்ந்து மறைந்தனர். ஆதுகேட்ட நாரதர் மண்ணுலகத்துள்ள ஒரு தலத்தையடைந்து, கார்த்திகை விரதத்தை அனுட்டித்து வருவாராயினர். அவர் அனுட்டித்தமுறையை யீண்டுச் சுருங்க உரைப்பாம்.

நாரதமுனிவர் பரணிநாளி லொருபொழுது உணவுகொள்வர்; அடுத்த கார்த்திகைநாள் வைகறையெழுந்து கங்கை நீராடி, வெள்ளையுடுத்தி, உள்ளங்கை நீருண்டு, செவ்வேள் திருப்புகழ்களை யோதுவர்; இரவில் தருப்பாசன மமர்ந்து

ஆறெழுத்தை யுச்சரித்திருப்பர்; மறுநாள் உதோகணி காலையில் தருப்பாசனத்தினின்று மெழுந்து பூசைமுடித்து, அன்றுபகலுறங்கின் நூறு அந்தணர்களைக்கொன்ற பாவம் வினையுமெனக் கருதித் துயிலாது மற்ற முனிவர்களோடு சிவபுராண படன பாராயணஞ்செய்து வருவர். இங்ஙனம் பன்னிரண்டாண்டு கார்த்திகை நோன்பை மேற்கொண்டொழுகிச் சண்முகனருளால் சப்தரிஷிகளில் தலைமைபெற்றவராயினர். இதுவே கார்த்திகை யனுட்டான முறையென்க.

இன்னும் ஒரு வேதியன் கார்த்திகைநாளை வழிபட்டமையான் மறுபிறப்பில் சக்கரவர்த்தி வாழ்வைப் பெற்றான். மற்றுமோர் அந்தணனும் கார்த்திகையை யனுட்டித்துத் திரிசங்கு சக்கரவர்த்தியாகத் தோன்றினன். ஒரு வேடனும் ஒரு வேதியனுங் கார்த்திகையைக் கொண்டாடி முறையே அந்திமான் சந்திமான் என்னும் வேந்தர்களாகப் பிறந்து கந்தலோகத்தை யடைந்தனர்.

கந்தபுராணம் - கந்தவிரதப்படலம்.

"வாரிசமலர்மேல்வந்தானான்முகன்மதலையான
நாரதமுனிவனென்போனலத்தகுவிரதமாற்றி
யோரெழுமுனிவர்தம்மிலுயர்ந்திடுபதமுமேலாஞ்
சீரொடுசிறப்புமெய்தச்சிந்தனைசெய்தானன்றே.

நூற்பகடேள்விசான்றதுண்ணியவுணர்வின்மிக்கோன்
பார்ப்பதியுதவுமுன்னேன்பதமுறைபணிந்துபோற்றி
யேற்புறுமுனிவரானவெழுவகையோரில்யானே
மேற்படவிரதமொன்றைவிளம்புதிமேலோயென்றான்.

முன்னவனதணைக்கேளாமுழுதருள்புரிந்துநோக்கி
யன்னதுபெறுதிதிண்ணமாறுமாமுகத்துரும்பி [பைப்
பொன்னடிவழிபாடாற்றிப்பொருவில்கார்த்திகைநாணேன்
பன்னிருவருடங்காறும்பரிவுடன்புரிதியென்றான்.

நாரதன்வினவியீதுநான்புரிந்திடுவனென்னப்
பாருலகதனில்வந்துபரணிநாள்பாரணத்தி [னில்
லோர்பொழுதுணவுகொண்டேயொப்பில்கார்த்திகைநாடன்
வீரவேற்றட்கையண்ணல்விரதத்தையியற்றலுற்றான்.

தூசொடுகயத்தின்மூழ்கித்துய்யவெண்கலைகள்சுற்றி
யாசறுநியமமுற்றியான்றமைபுலத்தணுகித்
தேசிகன்றனதுபாதஞ்சென்னிமேற்கொண்டுசெவ்வேள்
பூசனைபுரிந்திட்டன்னான்புராணமும்வினவினனால்.

கடிப்புனலள்ளித்தன்னேர்கைகவித்துண்டுமுக்காற்
படுத்திடுதருப்பையென்னும்பாயலிற்சயனஞ்செய்து
மடக்கொடிமாதர்தம்மைமறலியாமதித்துவள்ள
லடித்துணையுன்னிக்கங்குலவதியுமுறங்காதுற்றான்.

அந்தநாள்செல்லப்பின்னருரோகணியடைந்தகாலைச்
சந்தியாநியமமெல்லாஞ்சடக்கெனமுடித்துக்கொண்டு
கந்தவேள்செம்பொற்றண்டைக்கான்முறைவழிபட்டேத்தி
வந்தமாதவர்களோடும்பாரணமகிழ்ந்துசெய்தான்.

பாரணம்விதியிற்செய்தோன்பகற்பொழுதுறங்குமாயி
ரணமறையோர்தம்மிலம்பதிற்றிருவர்தம்மைக்
காரணமின்றிக்கொன்றகடும்பழியெய்துமென்னு
நாரதன்மாயம்வல்லோனிமைத்திலனயனஞ்சற்றும்.

விழியொடுமிமை கூடாமேவெய்யவன்குடபால்வீழுட
பொழுதளவிருந்துமம்மைப்புதுநலஞ்செயலும்போற்றி
யழிவறுவிரதமிவ்வாறிருவருடமாற்றி
யெழுவகைமுனிவோருக்குமேற்றமாம்பதத்தைப்பெற்றான்.

இந்தநல்விரதந்தன்னையிண்டொருமறையோனேற்று
முந்தியமனுவேயாகிமுழுதுலகதனையாண்டா
னந்தணனொருவன்பின்னுமவ்விரதத்தைப்போற்றிச்
சிந்தையினினைந்தாங்செய்துத்திரிசங்குவாகியுற்றான்.

ஈங்கொருமன்னன்வேடனிருவருமோம்புவண்மை
தாங்கியவந்திமானேசந்திமானென்றுபேராய்
வீங்குநீருடுத்தபாரைமேலோட்புரந்தாரென்ப
வாங்கவர்பின்னுண்முத்தியடைவதுதிண்ணமம்மா."

கார்த்திகைவிரதம்

முற்றிற்று.

சிவமயம்.

கார்த்திகைத் தீபப் பெருமை.

தேவாரம்.

வளக்கைமடநல்லார்மாமயிலேவண்மறுகில்
துளக்கில்கபாலீச்சரத்தான்றிருல்கார்த்திகைநாள்
தளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணுதே தீபாதியோபூம்பாவாய்.

ஈண்டுக் கார்த்திகைத் தீபமென்றது திருவண்ணுமலையி லே கார்த்திகைமாதந்தோறும் இடப்படுந் தீபத்தை யென்க. அத்தீபங் கார்த்திகை விளக்கீடெனவும், சர்வாலய தீபமென வும், ஞானதீபமென வும், சிவதீசாதி யெனவும், பரஞ்சுடரெ னவும் வழங்கப்பெறும்.

விஷ்ணுவும் பிரமனுந் தாங்களே கடவுளெனத் தருக் கித் கலாம்விளைத்துப் பெரும்போர்புரிந்து இடர்ப்படுவாராயி னர். அதுகாலைச் சிவபெருமான் இருவர்தம் அகங்காரத்தை அழித்து ஆட்கொள்ள அவர்களிடையில் அழற்சோதி மலை யாக நின்றனர். அம்மலையினுல் உலகமெல்லாஞ் சிவந்த நிற மாக விளங்கினமையான், அது அருணசலம் சோணகிரி முத லிய பெயர்களைப் பெற்றது. (அருணம், சோணம்-சிவப்பு; அசலம், கிரி-மலை.) சிவபிரான் மலையுருவத்தை அரியும் அய னும் முறையே பன்றியாகவும் அன்னமாகவுந் தேடத்தொட ங்கினர். பல்லூழிகாலந் தேடியும் அடிமுடிகாணப் பெறுது

வருந்தித் தருக்கொழித்துச் சிவபிரானைத் தோத்திரஞ்செய்தனர். அடியார்கள் வேண்டியவற்றை வேண்டியாங் களிக்கும் தடங்கருணைப் பெருங்கடலாகிய சங்கரனுர் இலிங்கோற்பவகாலமாகிய மகாநிசியிலே ஒருமுகூர்த்தகாலம் இலிங்கோற்பவமூர்த்தியாய் அவ்விருவருக்குங் காட்சி கொடுத்தருளி "அன்பர்களே! இதுபோன்றதோர்சோதி கார்த்திகைத்திங்களிலுங் காட்டுவேம். அச்சோதியைக் காண்போர் பிறவிப்பெருங்கடலெனுதில் நீந்தி எம்மடி புகுவர்" என்று திருவாய் மலர்ந்தருளினர். இத் திருவாக்கின்படியே ஒவ்வோராண்டுங் கார்த்திகைக் கார்த்திகையில் திருவண்ணுமலையில் தீபமேற்றித் திருவிழாக் கொண்டாடப்பெற்று வருகிறது.

முழுமுதற் பரம்பொருளாகிய முக்கண்மூர்த்தி திருமாலுக்கும் நான்முகனுக்கு மிடையிற் பேரொளிப்பிழம்பாய் நின்றருளிய மகாநிசிக்காலம் மாசிமாதம் திருவோணநட்சத்திரங் கிருட்டிணபக்கம் சதுர்த்தசிதிதி சோமவாரமாகவிருப்ப, தீபவிழாமாசியில் கடைபெறுது கார்த்திகையில் கடைபெறுவதற்குக் காரண மென்னையெனிற் கூறுதும். சிவபெருமான் முதன்முதல் சோதியுருவாகத் தோன்றியது மாசிச் சிவநிசிக்காலமேயாம். பின்னர் இலிங்கோற்பவ மூர்த்தியாகத் தரிசனந் தந்தருளியது மகாநிசிக்காலமாகிய இராத்திரி இருபத்திற்றேழு நாழிகைக்குள்ளாம். அக்கால அளவைத் தேவகணிதத்தின்படி கணக்கிடின் அது மண்ணுலகோர் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரமாக முடியும். அக்காரணம் பற்றியேஇவ்வுலகோர் தீபவிழாவினைக்கார்த்திகைமதியிற்கொண்டாடுகிறார்கள். இதுவே தேவர்களுக்கு மகாநிசிக்காலமென்க.

உலகன்னையாராகிய உமாதேவியாரும் கார்த்திகைத் தீப விழாவை தாமே கொண்டாடி யின்புற நிருத்தின்றார்கள். வரன் என்னு காமத்தையுடைய சித்தனெருவனிருந்தான். அவன் ஒரு முனிவர்சாபத்தால் மகிடாசுரனுகப் பிறந்தான். அவன் பார்வதி தேவியாராற் கொல்லப் பெற்றபோது அவனது கழுத்திலிருந்த இலிங்கம் அம்மையார் கரத்தில் ஒட்டிக் கொண்டது. அதுநிமித்தம் அம்பிகை அண்ணுமலையிற் நின்ற அச்சூலபாணியைப் பூசித்தனர். பூசிக்கவே கரத்திலொட்டியிருந்த சிவலிங்கம்நீங்கியது. தேவியார் பெருமகிழ்வெய்திக் கார்த்திகையில் தமது நாயகருக்குத் திருவிழாவெடுத்தி எங்களுக்குத் தீபாலங்காரஞ்செய்து வேண்டிய வரங்களைப் பெற்றனரெனப்புராணங்கூறுகிறது. கார்த்திகைத் தீபவிழாவைக் கொண்டாடி இஷ்டசித்திகளைப்பெற்ற முனிவர்களையுந் தேவர்களையுமெண்ணிட இயலாது. "மலையிலிட்ட விளக்கு" "குன்றிலிட்ட தீபம்" எனவழங்கிவருமுலகப் பழமொழிகளே திருவண்ணுமலைக் கார்த்திகைத் தீபத்தின் தொன்மையையும் பெருமையையும் இனிது விளக்கும். "ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்து மக்கட் பாடாண்டிணைக் குரியதுமரபி னதுவிதுவெப்பே பாரேம்நி" என்னுந் தொடக்கத்துச் சூத்திரத்திலுள் "வேலிலேஞ்சிய விளக்குநிலையும்" என்னும் விளக்கு நிலைத்துணையை விளக்கப்போந்த உரையாசிரியர் உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினியர் "இது கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக் கீழுமேலும் வலமுமிடமும் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்துவிட்டெழுந்ததென்று அறிவோராக்கங் கூறப்படுவதாம்" என்றுரை

தித்துள்ளதைக் காண்க. சமணநூலாகிய சீவக சிந்தாமணியும்,

"தார்ப்பொலிதருமதத்தன்றக்கவாறுரைப்பக்குன்றிற்
கார்த்திகைவிளக்கிட்டன்னகடிகமழ்குவளைப்பைந்தார்
போர்த்ததன்னகலமெல்லாம்பொள்ளெனவியர்த்துப்பொங்கி
ரீர்க்கடன்மகரப்பேழ்வாய்மதனன்மற்றிதனைசொன்னான்."

என்று கார்த்திகைத் தீபத்தைச் சிறப்பித்திருக்கிறது. பழய தமிழ்நூல்களினுங் கார்த்திகை பலவாறு சிறப்பிக்கப் பெற்றுளது. இரண்டொன்றை யீண்டுக் காட்டுவாம்.

கார் நாற்பது.

கலமிகு கார்த்திகை காட்டவ ரிட்ட
தலைநாள் விளக்கிற் றகை யுடையவாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
னதொடு வந்த மழை.

களவழி நாற்பது.

ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா தெரிக்தோடித்
தாகவி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைக் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொ டித்தானைப் பொருநன்னீர் நாடன்
ஆர்த்த மரட்ட களத்து.

இக்கார்த்திகை, மாதந்தோறும் வருங்கார்த்திகைபோன்றதன்று. அதன் பெயரே அம்மாதத்திற்கும் வழங்குவது உய்த்து நோக்கத்தக்கது, கார்த்திகைத் தீபத்தைத் தரிசிக்க வேண்டுவது மக்கள் கடமையுள் ஒன்றும். அருணசல மூர்த்தியைத் தியானஞ்செய்து கொண்டு வாகனம் வண்டியேறுமல் கால் நடையாகத் திருவண்ணாமலைக்குச் செல்லல் வேண்டும். அத்திருமலையைக் கண்ணுற்றதும் மும்முறை அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்யவேண்டும். திருவண்ணாமலை முற்றிலுஞ் சிவரூபமாகலான் ஆண்டு எத்திறத் தீங்குங் குற்றமு மிழைத்தலாகாது. பரணியில் ஒருவேளை யுண்டி கொண்டு சிவசிந்தையி னிருக்கவேண்டும். கார்த்திகைநாள் வைகறை யெழு

ந்து காலைக் கடன்களை முடித்துத் தீர்த்தமாடி உணவின்றித் திருமலையை வலம் வரவேண்டும். வலம் வருங்கால் இடையிடையே யுள்ள தீர்த்தங்களில் மூழ்குதலை மறக்கலாகாது. திருவண்ணுமலைக்குரிய தமிழ் வேதப்பாசுரங்களை யோதிக் கொண்டே வலம் வருவாராக. மலையடிக்கணுள்ள அணியண்ணுமலையை முறைப்படி வழிபடுவாராக. அணியண்ணுமலையைத் தரிசியாது செல்வோர் திருவண்ணுமலையைத் தரிசித்தும் தரிசியாதவராவர். அவர்கட்கும் வீட்டிலிருந்து வீணே காலங் கழிப்போர்க்குஞ் சிறிதும் வேற்றுமை யில்லை. மலையைத்தத்தம் ஆற்றலுக்கியைந்தவாறு பலமுறை வலஞ்செய்வது நலம். மாலையில் மலை யுச்சியில் சிவசோதிவடிவாக ஒளிருந் தீபத்தைத் தரிசிக்கவேண்டும். தரிசனஞ் செய்த பின்னர் உள்ளங்கை ஜலமருந்தித் துயிலாது இராமுழுவதும் அருணைசல மான்மியத்தை யோதலுங் கேட்டலுமுத்தமம். உணவுகொண் டிறங்குவது மத்திமம். மறுநாள் உரோகணி காலையிலெழுந்து வழக்கப்படி கடன்களை முடித்து அடியார்களுக்கு அன்னமிட்டுத் தாமும் அன்னங் கொள்ளல் வேண்டும்.

திருவண்ணுமலைக்குச் செல்ல இயலாதவர் தம் வீட்டிற் கருகே யுள்ள சிவாலயங்களில் விதிப்படி கார்த்திகையை யனுட்டிப்பாராக. அன்று வீடுகடோறும் விளக்குகளை கிரப்பல் வேண்டும். அவை யாவுஞ் சிவவடிவே யாகும்.

தேவாரம்.

ஓசை யொலியெலா மானாய் நீயே உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே, வாச மலரெலா மானாய் நீயே மலையான் மருகனாய் நின்றாய் நீயே, பேசப் பெரிது மினியாய் நீயே பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே, தேச விளக்கெலா மானாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி.

கார்த்திகைத் தீபத்திற்குத் தகழி நெய் வர்த்தி முதலிய ஈந்தோர் சிவலோகபதவி யடைவர்.

கார்த்திகைத் தீபப் பெருமை முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வி பூ தி.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

"மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே."

"ஆற்றலடல்விடையேறும் ஆலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே."

சிவபெருமானே முழுமுதற் கடவுளெனக்கொண்டு வழி படுஞ் சைவசித்தாந்திகள் ஆவசியகமாகத் தரிக்கவேண்டிய சிவசின்னங்கள் விபூதி உருத்திராக்ஷங்களேயாம்.

எவள் திருமங்கலியமுதலிய அடையாளங்களைத் தரித்தற்குக் கூசுகின்றாளோ அவள் விலைமகளெனப்படுவள். அது போல எவன் விபூதி உருத்திராக்கங்களைத் தரிக்கக் கூசுகின்றானே அவன் அசைவனெனப்படுவன். இவ்வைதிக பூஷணங்களை மெய்யுடன் தரிப்போர், பேய், பூதம், டாகினி, கரடி, புலி, சிங்கம் முதலிய கொடிய மிருகங்களானும், பிரமகத்தி, கோகத்தி, சிசுகத்தி, ஸ்திரீகத்தி

முதலிய பாவங்களாணும், பல நோய்களாணும் கட்டுண்டுழலாது, இருவினைகளையும் வென்று, பதிஞானம்பெற்று முத்தியடைவர் என்று வேதாகம உபநிடதமிருதி புராணேதிகாசங்கள் கோஷிக்கின்றன. சிவசின்னங்களை நிந்திக்குங் கீழ்மக்கள் அதிபாதகராய், எரிவாய் நிரயத்திற்காளாகுவர் என்பதூஉஞ் சாஸ்திரச் சம்மதம்.

வி=மேலான, பூதி=ஐஸ்வரியம் எனவே, திருநீறு, தன்னை அன்புடன் அணிபவர்கட்கு எவற்றினுஞ் சிறந்த, செல்வமாகிய முத்தியின்பத்தைத்தருதலால் **வீபூதி** எனவும், பாவங்களை யெல்லாம் பொடிபடுத்தலால் நீறு, **பற்பம்** எனவும், அறியாமை யழியும்படி சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலால் **பசிதம்** எனவும், ஆன்மாக்கள் மலமகற்றலால் **க்ஷாரம்** எனவும், உயிர்களை பிறவித் துன்பத்தினின்று நீக்கி இரக்ஷித்தலால் **இரக்ஷை** எனவும் பெயர் பெறும்.

திருநீறு வைதிகவிபூதி, சைவவிபூதி என இருவகைப்படும். இவற்றுள் முன்னையது வேதவிதிப்படி செய்யப்படும். யாகங்களில் உண்டாவது. பின்னையது இருவினையொப்பு மலபரிபாகமுற்ற சிவசத்திநிபாதர்க்குரித்தாய் ஆகம விதிப்படி தீக்ஷைசெய்யப்பட்ட கனலி உண்டாவது வைதிகவிபூதி. புராதனி, சத்தியோசாதை என இருபகுப்பினையுடைத்து. புராதனி பிரமதேவர் ஓமகுண்டத்திலும், சத்தியோசாதை அந்தணர் யாகங்களிலும் உண்டாவன. இவ்விரண்டும் புத்தியை மாத்திரம் தரும். சைவவிபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நான்குபகுப்பினையுடைத்து. இந்நான்கும் புத்தியையன்றி முத்தியையு மளிக்கும்.

கற்பவிபூதி:—பங்குனிமாதத்திலே, அஷ்டமி, பௌர்ணமை, சதுர்த்தசியென்னுந்திதிகளிலே, பிணிமூப்புமுதலிய

குற்றமில்லாத பசுவினிடஞ்சென்று, ஒரு பிடி புல் அதற்குத் தந்து, பின் அப்பசு கோமயமிடும்போது, பூமியில் விழுமுன் ஓம்சத்தியோசாதாயநம: என்னுமந்திரத்தையுச்சரித்து, அச்சாணத்தை தாமரையிலையிலேற்று, பால், தயிர், நெய், கோசலம்சேர்த்த கவ்வியத்தை அதன்மேல் ஓம்வாமதேவாயநம: என்றுசொல்லி வார்த்து, ஓம் அகோராயநம: என்று பிசைந்து உண்டைபண்ணி, ஓம்தற்புருடாயநம: என்றுச்சரித்து, விரித்த சம்பாநெற்பதரின்மேல் வைத்து, ஓமாக்கினியிலுமேலும், நித்தியாக்கினியிலுமேலுந்தகித்து, ஓம் ஈசாநாயநம: என்றுச்சரித்து,—கருநிறவிபூதி நோய் விலக்குமாகலானும், செந்நிறவிபூதி புகழைக்கெடுக்குமாகலானும், புகைநிறவிபூதி ஆயுளைக்குறைக்குமாகலானும், பொன்னிறவிபூதி சம்பத்தையழிக்குமாகலானும் அவற்றை நீக்கி - வெண்ணிற விபூதியை மாத்திரமெடுக்கவேண்டும். இது கற்ப விபூதி.

அநுகற்பவிபூதி:—சித்திரைமாதத்திலே ஆநிரையிற்சென்று, உலர்ந்த கோமயங்களைப் பொரிக்கி உரலிலிட்டு இடித்து, ஓம் வாமதேவாயநம: என்றுச்சரித்து அதிலே கோசலத்தைவார்த்து, ஓம்அகோராயநம: என்றுச்சரித்துப் பிசைந்து உருட்டி, ஓம் தற்புருடாயநம: என்று விரித்த பதரின்மேல் வைத்து, அக்கினியிலுல் தகனஞ்செய்து ஓம்ஈசாநாயநம: என்று எடுத்த திருநீறேயாம்.

உபகற்பவிபூதி:—கானத்தில் மரத்தோடுமரம் இணைந்து தானேயுண்டாகிய அக்கினியிலுல் வெந்துவிளைந்த சாம்பரையாவது, செங்கற்சூளை சாம்பரையாவதுகொணர்ந்து ஓம்வாமதேவாயநம: என பஞ்சகவ்வியம் வார்த்து, கலந்து, ஓம் அகோராயநம: என்று பிசைந்து உண்டைசெய்து, ஓம்தற்புருடாயநம: என்று பரப்பிய பதரின்மேல்வைத்து, தகனம்பண்ணி, ஓம் ஈசாநாயநம: என்று எடுக்கும் பற்பம்.

மேற்கூறிய திருநீறு அகப்படாதவிடத்து இடிவிழுந்தவிடத் திலுண்டாகிய திருநீற்றையும், மலியினுச்சியினும், பூமியி னும்விளைந்த திருநீற்றையுமெடுத்து ஓம் நிஷிர்த்திகலாயைநம: ஓம் பிரதிஷ்டைகலாயைநம: ஓம் வித்தியாகலாயைநம: ஓம் சாந்திகலாயைநம: ஓம் சந்தியாதீதகலாயைநம: ஓம்சிவாயநம: என்னும் மந்திரங்களாற் சுத்திசெய்துதரிக்கவேண்டும். அது அகற்பவிபூதி.

அவ்வாறு எடுத்த விபூதிகளைப் புதுவஸ்திரத்தினுலே வடித்து, புதுப்பாண்டத்தினுள்ளேயிட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய வாசனைமலர்களை எடுத்து அதனுள்ளேபோட்டு, புதுவஸ்திரத்தினுல் அதன் வாயைக் கட்டி வைத்துக் கொள்ளல் வேண்டும். அணிந்துக்கொள்ள சிறிது பாகமெடுத்து, பன்னிரண்டங்குல நீளமும், எட்டங் குல அகலமுமுள்ள பட்டுப்பையிலேனும், வில்வக்குடுக்கை யிலேனும், சுரக்குடுக்கையிலேனும், சம்புடத்திலேனும்வைத் துக்கொள்க. பிரமசாரியும், சந்நியாசியும் மான்தோல், புலித் தோல் என்னு மிவைகளாற் செய்யப்பட்ட பைகளில் வைத்துத் தரிக்கவேண்டும். குடுக்கைகளினன்றிப் பிறவற்றி லுள்ள விபூதியைக் கவிழ்ப்போர் ரௌரவம், கும்பிபாதம் முதலிய நிரயத்திற்காளாகுவர்.

விபூதி தாரணம் உத்தூளனம், திரிபுண்டரம் என இரு வகைப்படும். அவற்றுள் உத்தூளனம் என்பது பரவப்பூசல், பிராமணர் சர்வாங்கங்களினும், அரசர்முகம் நீங்க ஏனைய விடங்களினும், வைசியர்நெற்றி மார்பு என்னுமிடங்களினும், வேளாளர் நெற்றியினும் உத்தூளனஞ் செய்தல் விதியாம். சந்நியாசி எப்போதும் வடக்குமுகநோக்கியே உத்தூளனஞ் செய்தல்வேண்டும். திரிபுண்டரமாவது மூக்குறியாகத் தரித் தல். சிவதீக்ஷை பெற்றவர்கள் சந்தியாகாலமூன்றினுஞ் சலத்

திற்குழைத்தும், மற்றைக் காலங்களிற் சலத்திற் குழையாமலும், தீக்ஷையில்லாதவர்கள் உச்சிக்காலத்திற்குப் பின் சலத்திற் குழையாமலும் தரிக்கவேண்டும். விலக்கிய காலங்களில் நீர் சேர்த்துத் தரிப்பாராயின் அந்த நீர் மதுவையொக்கும். நெற்றியில் இரண்டு கடைப்புருவ வெல்லீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குலநீளமும், மற்றைய சிரம், கொப்பூழ், முழந்தாள்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், * விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னுந் தானங்களில் ஒவ்வொரங்குல நீளமும் பொருந்த வளையாமலும், ஒன்றை யொன்று தீண்டாமலும், இடைவெளி ஒவ்வொரு அங்குல அளவினதாகத் தரித்தல் வேண்டும். இவ்வெல்லையிற் கூடின் தவங்கெடும், குறையின் ஆயுள்குன்றும்.

சந்தியாகாலங்களிலும், ஸ்நானஞ் செய்தவுடனும், மல சல மோசனஞ்செய்து சௌசம்பண்ணி ஆசமனம்செய்த பின்னும், பூசைக்கு முன்னும் பின்னும், தீக்ஷையில்லாதவர் தீண்டியபோதும், போசனத்துக்கு முன்னும்பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், பூனை, கொக்கு, நாய், காகியன தீண்டியபோதும், பிதுர்க்கிரியையினும், சோமத்தினும் அவசியம் விபூதி தரிக்கவேண்டும், எவர் நற்கருமஞ்செயினும் அது நிஷ்பலமாமாலாமுகம் சுடுகாட்டிற்குச்சமமாகும். அவரை யகல்க.

வலக்கையின் நடுவிரல் மூன்றினுலும், விரல், நடுவிரல், ஆழிவிரல் என்னும் மூன்

* விலாப்புறம் இரண்டையும் சேர்த்துக் கொள்வதும், முழங்கைகளையும், மணிக்கட்டினிரண்டு தானங்கொள்வது மூண்டு.

விபூதியை யெடுத்து தரையிற் சிந்தாமலும், வாயைத் திறவாமலும், தலையை யசைக்காமலும், பிறருடன் பேசாமலும், நகையாமலும், தலையைக்கவிழாமலும், கண்ணுடிபாராமலும், வடக்குமுகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு அணியவேண்டும். எத்தனை விபூதியணுக்கள் நம்திற் சிந்துகின்றனவோ அத்தனைவருடம் நரகத்தில் வருந்துவர். நிலத்திலே ஒருகால் விபூதிசிந்துமாயின் அதனையெடுத்து விட்டு அவ்விடத்தில் சலத்தால் மெழுகவேண்டும். ஒருவிரலேனும், ஒருகையிலேனும் தரிக்கலாகாது.

ஆசாரியராயினும், சிவனடியாராயினும் விபூதிகொடுப்பின், அவர்களை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும் வணங்கி, எழுந்துகைகூப்பி, இரண்டுகைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு, முன்போலமீட்டும் வணங்கல் முறைமை. குதிரை, சிவிகை, ஆசனம், திண்ணை இவற்றினின்றும் வாங்குதலும், விபூதிகொடுப்போர் கீழ்நிற்க, தான் மேலிருந்து வாங்குவதும் முறையன்றும்.

விபூதியை நமஸ்கரிக்கும்போதும், எடுக்கும்போதும் வைக்கும்போதும் உச்சரிக்கவேண்டிய மந்திரங்களைச் சற்குருவினால் அறிந்துகொள்க.

விதிப்படியும், அன்புடனும் அணியாதவர்களை "நரகப்புழுக்களைத்தன்ன நீராடப்போயென்ன" என்று திருவள்ளுவநாயனாரும். அக்கருத்தையுணராச் சிலமூடர்களும், கிறிஸ்தவர்களும் உண்மைச் சைவர்களைப் பரிகாசமாயாடுகின்றனர். பட்டினத்தடிகளார்க்கு ஒருயோசனமில்லையென்பது கருத்தாயின்,

"திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டு
மணி யஞ்செழுத்தோதவுங் கற்பியுமே"

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உருத்திராக்கம்.

சைவசமயநெறி.

"உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளுங்
கண்டி விசிட்டமெனக் காண்."

"பூணுதே கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காணுதே காணு மரன்."

பிரமோத்தரகாண்டம்.

"ஆய மாமணி யாயிரம் புனைந்திடி லவரை
மாய னன்முகன் புரந்தரன் வானவர் முதலோர்
பாயு மால்விடைப் பரனெனப் பணிகுவ ரென்றுற்
றாய மாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்லீர்."

அநாதி மலமுத்தராய், ஆதிமத்தியாந்த சமானாதிக நாம ரூப குண ரகிதராய், சர்வஜ்ஞ சர்வகர்த்தத்துவ சர்வாநுக்கிரக அதிபரமாப்த பதியாய் விளங்கா நின்ற சிவபெருமானை வழிபடுஞ் சைவசமயிகள் ஆவசியகமாக அணியத் தகுவன விபூதி உருத்திராக்ஷங்களே யாம். இவையிற்றை மெய்யன்புடன் அணிபவர் இம்மை மறுமைப் பயன்களை யெளிதிற் பெறு, இறுதியில் முத்திப்பே றெய்துவர்.

விஷ்ணுமுதலிய தேவர்கள் திரிபுரத் தசுரர்களாற் றங்கட்கற்ற வின்னலைச் சிவபெருமான்பால் விண்ணப்பஞ் செ[illegible] சாயுச்[illegible] முன்னு. தம்முன்று திருவிழிகளி

என்றும், சமணைக்கழுவேற்றுநீற்றை" என்றும், "உரைக்கைக்கு நல்ல திருவெழுத்தைந்துண்டுரைப் படியே செருச்செத்தரிக்கதிருநீறுமுண்டு" என்றுங்கூறியருளினதற்குக்கு விரிக்கிற்பெருகும்.) விபூதிதாரணஞ்செய்தன்றே இந்திராதி தேவர்களும் பெரும்பதவிபெற்றனர். சிவசின்னங்களைக் கண்டாலும், தீண்டினாலும், அணிந்தாலும் சகல பாவங்களும் அதிவிரைவிலகலும், சிவபெருமான் மகிமையை யெவ்வாறு அளவிடக்கூடாதோ அதுபோல, சிவசின்னங்களின் மாட்சிமையையும் அளவிடக்கூடாதென்றறிக. இன்னும் விரிக்கிற் பெருகு மாகலால் இத்துடன் நிறுத்துகின்றும். சுபம்! சுபம்!!

விபூதி முற்றிற்று.

டும் மலர்த்திக் கொண்டிருப்ப, அவைகளி னின்றும் பொழி ந்த நீரிற்றோன்றிய மணியே உருத்திராக்கமாம்.

உருத்திர + அக்கம் என்னுஞ் சொற்கள் உருத்திராக்க மெனத்தீர்க்க சந்தியாய்ப் புணர்ந்தன. உருத்திராக்கம் என் பது சிவபெருமானது திருக்கண் எனப்பொருள் படும். இவ் வைதிகபூடணம் தன்னியணிந்த அடியவர்கள் மும்மலங்களை ர் நீருக்கி முத்திப்பேற்றையுதவி சங்கரர் திருக்கண்போல னங்களின் **அக்கம்** எனவும், குற்றங்களையுந் துன்பங்களை ங்கண்டிக்கின்றமையான் **கண்டி, கண்டிகை** எனவும், சிவ பெருமான் திருநேத்திரங்களி னின்றும் பொழிந்த முத்துப் போன்ற நீர்வடிவாய் நிற்றலின் **கண்மணி** யெனவும் பெயர் பெற்றது.

வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன் னிறமணி, கருநிறமணி யென உருத்திராக்கம் ஐந்துவிதப் படும். அவை யொவ்வொன்றும் ஒருமுகமணிமுதற் பதினாறு முகமணி வரையும் உண்டு. தேய்ந்த உருத்திராக்கம், முக முதலியன விளக்கமில்லாத உருத்திராக்கம், பிஞ்சு உருத்தி ராக்கம், செய்கை உருத்திராக்கம் ஆகிய இவைகளை விலக்கி ர்ல்லிலக்கண முடைய உருத்திராக்கங்களையே வாங்குதல் வேண்டும். இக்காலத்துள்ள சில போலிப்பண்டாரங்கள் செ ப்கையா லொருமுக மணிபோற் செய்துகொண்டு "யநன்காசி யிலிருந்து கொணர்ந்தேன், இராமேஸ்வரத்திலிருந்து கொ ண்டுவந்தே" னெனப் பலரை மயக்கி பணம் பறிக்கின்றார்கள் அன்பர்களே ! இக்காலத்திலொருமுகமணி கிடைப்பது அரு மையினு மருமையே. ஒரு முகமணி யொருவனுக்குக் கிடை க்குமாயின் அவன் வணங்காமுடி மன்னனாய் வாழ்ந்து சிவ சாயுச்சிய மடைவன். ஒருமுகமணி வாங்க வேண்டுமாயின்,

அம்மணியைக் கீழேவைத்து அதன்மேல் பலவித ருத்திராக்கங்களே மேலே குவிக்கின், கீழ்வைத்தமணி மேலுள்ள மணிகளையெல்லாம் துருவிச் சென்று மேலேநிற்கும். இவ்வாறு சோதித்து வாங்குக.

குடுமிக்கு ஒருமுக மணியொன்றும், தலைக்கு இருபத்தொரு மணி பதின்மூன்றும், சிரோ வூர்த்துவத்திற்குப் பதினொரு முகமணி முப்பத்தாறும், செவிகட்கு ஐந்து ஏழு, பத்து முக மணிகளி லியாதாவது ஒவ்வொன்றும், கழுத்திற்கு எட்டு முகமணி முப்பத்திரண்டும், வயிற்றிற்கு நான்கு முக மணி ஐம்பதும், ஒவ்வோர் புயங்களுக்கும் பதின்மூன்று முக மணி பதினாறும், ஒவ்வொரு மணிக்கட்டுகளுக்கும் ஒன்பது முகமணி பன்னிரண்டும், உபவீதத்திற்குப் பதினொன்று முக மணி நூற்றெட்டும், மார்பிற்கு எத்தமுக மணியாவது ஐம்பத்துநான்கும் தரிக்கவேண்டும். இங்ஙனம் மந்திரபூர்வகமாக அணிவோர் பிரமகத்தி, கோகத்தி, ஸ்திரிகத்தி, சிசுகத்தி ஆகிய இப்பாவங்களும், புணரத் தகாதவர்களைப் புணர்ந்த பாவமும், புசிக்கலாகாதனவற்றைப் புசித்த பாவமும், துலாபுருடதானம், இரணிய கருப்பதானம், திலபதும தானம் முதலிய தானங்கள் வாங்கிய பாவமும்; பிறர் அன்னத்தைக் கவர்ந்த பாவமும், பேய், டாகினி, பூதம், சர்ப்பம், கரடி, புலி, சிங்கம் முதலியகொடிய வுயிர்களால் நேரிடும் துன்பங்களும், மனவி தாய் தந்தை மக்கள் முதலியோரைக் கொன்ற பாவமும், மற்றநீக்குதற்கரிய மாபாவங்களும் பரிதிமுற்பட்ட பனிப்படலம்போ னீங்கப்பெற்று, உலகவியமும், அழகும், திடசரீரமும், தீர்க்காயுளும், சத்துரு சயமும், புத்திரராதி நற்பேறும், சிவஞான விருத்தியும் அடைந்து, பிரம விட்டு ணுக்கள் போக வின்பங்களே யெளிதி னுகர்ந்து, அத்துவித முத்தி யெய்துவர்.

சிவமந்திர செபம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், தேவாரத் திருமுறைப் பாராயணம், சிவபுராண படனம், தீர்த்தமாடல், சிராத்தஞ் செய்தல், விரத மனுட்டித்தல் முதலிய இவையிற்றைச் செய்யும் போது ஆவசியகமாக உருத்திராக்க மணிதல் வேண்டும். சயனிக்குங் காலத்தும், மலசல மோசனத்தும், புணர்ச்சியினும், சனனசௌசம், மரண சௌசம் ஆகிய இக்காலங்களில் கண்டிகை புனைதற் கூடாது. சிகையினும், செவிகளினும், உபவீதத்தினும் எப்போதுந் தரிக்கலாம். அக்கமணி பிற்பட்டு வடியுஞ் சலம் கங்காசலத்துக்குச் சமமாகலால் ஸ்நானஞ் செய்யும்பொழுதும் உருத்திராக்க மணிந்திருக்க வேண்டும்.

செபமாலைக்கு உருத்திராக்க மணிகொண்டு செபிப்பதே உத்தமம். முத்தியை விரும்பிச் செபிப்போர் பிங்கலை நாடி நிகழுங்காலத்தும், புத்தியை விரும்புவோர் சந்திரநாடி நிகழுங் காலத்தும், புத்தி முத்தி யிரண்டையும் விரும்புவோர் பிரமநாடி நிகழுங்காலத்தும், பிறர் காணவண்ணம் பரிவட்டத்தால் மூடிக்கொண்டு செபிக்கக் கடவர். கிழக்கு நோக்கிச்செபிக்கின் உலகவசியமும், தென்கிழக்காகச்செபிக்கின் வியாதியும், தெற்குநோக்கிச்செபிக்கின் அபிசாரவிர்த்தியும், தென்மேற்குத் திசைநோக்கிச்செபிக்கின் துவேஷமும், மேற்கு நோக்கிச் செபித்தால் தனலாபமும், வடமேற்கு திசையாகச்செபித்தால் ஆகருடணமும், வடக்கு முக்நோக்கிச் செபித்தால் சாந்தியும், வடகிழக்கு முகமாயிருந்து செபிக்கின் சிவசாயுச்சிய முத்தியும் உண்டாம்.

உருத்திராக்க மாலை கிடையாவிடின் புத்திரதீப மாலை சங்கு மணிமாலை, பவளமணிமாலை, முத்துமணிமாலை, படிக மணிமாலை, தாமரைமணிமாலை, துளசிமணிமாலை, பொன்மணி

துண்ணுமொருவன் அவபத்தியங்களைத்தள்ளிபத்தியங்கொள்ளுயின் அவனை வயித்தியன்கண்டு "நீ உண்ணும் மருந்தினுற் பயன்யாது" என்றக்கால் அம்மருந்தை யுண்பதாற் பிரயோசனமில்லையென்பது கருத்தாமோ? அன்றே! அதுபோல எம்மான்மீர்களும் கண்டிகை நீறுபுனைந்து கொலைபாதி பாவங்களைப் புரியும் வண்டர்களை நோக்கி நீர் "கண்டிகைப் பூண்டிலென்" "நீற்றைப் புனைந்தென்" என்றக்கால் அவையிற்றையணிவதாற்பிரயோசனமில்லை என்பதுகருத்தாமோ? எம் அருளாளர்கள் சிவசின்னங்களைப் பற்றி திருவாய்மலர்ந்துள்ளவைகளை யீண்டெடுத்து வரையப் புகின் விரியுமாகலால் இத்துடன் நிறுத்துகின்றும்.

உருத்திராக்கம் முற்றிற்று.